ஸ்ரீமத் சுப்ரமண்ய பிள்ளை

O-[illegible] KHIR:
NO3.3.
7677

123-3-1904

ஸ்ரீமத் கம்பராமாயணம்
உரைனம்

In Three volumes.

Vol (3) End.

Pages from 653 To 916

(3) End



№69. இலட்சுமணர் விபீஷணருக்குப்பட்டாபிஷேகஞ்செய்தல். ஆஞ்சனேயர் இராவணனிறந்ததை சீதைக்குணர்த்தல்.

(ஸ்ரீராமர் விபீஷணரால் சீதையையழைப்பிக்க அவ்வள்வந்து பணிதல்.)

76771

O-IFKA:6:g N03.3



மற்றையோர்க்கும் வரன்முறையால்வகுத், தாற்றதிக்கொடுத் துன்குறுநீருகுத்
தெற்றையோர்க்கு மிவனலதில்லெனு, வெற்றிவீரன் குரைகழன்மேவினன்.

இப்படி பிராணனைவிட்ட மண்டோதரியினுடைய கற்பினிலைமையைக் கண்டு தேவதாஸ்திரீகளும், மற்ற பூலோக நாகலோகத்தாஸ்திரீகளும், இரிஷி பத்தினிமார்களுமாகிய எல்லா பதிவிரதாஸ்திரீகளும் கொண்டாடினார்கள். மண்டோதரியும் இறந்துபோனபின் விபீஷணாழ்வானானவர் வேதவிதிப்படி பிரேதசடங்குகளைச்செய்து,சந்தனம்அகில்இக்கட்டைகளையடுக்கி அதன்மேல் தன் அண்ணனை ஏற்றி, மற்றக்கடன்களையும் செய்துமுடித்து, மயனுடைய புத்திரிகா ரத்தினமாகிய மண்டோதரியையும் தன்தமையனோடு சட்டைகளின்மேலேற்றித் தீயால் தகனமாக்கி, குடங்களிலிருந்து நீரைக்கொட்டுவதிலும் அதிகமாய் இரண்டுகண்களினின்று நீர்சொரிந் தழுது, கும்பகருணன்-இந்திரஜித்து - கும்பன் - நிகும்பன் - இவான் முதலானவர்களுக்கு நீர்க்கடன் முதலியவைகளைச் செய்து, எல்லோர்க்கும் இவனை யல்லாமல் வேறே சரணாகதியில்லையென் றுணர்ந்து ஸ்ரீகோதண்டதீக்ஷா குருவினுடைய சீர்பாதங்களை வந்துவணங்கினார். இப்படி தம்முடைய சரணாரவிந்தங்களை வந்து வணங்கிய ஸ்ரீவிபீஷணாழ்வானை ஸ்ரீசக்கரவர்த்தித் திருக்குமாரர் கடாக்ஷித்து, அப்பா சற்குணசீலனே! ஏன்துக்கிக்கிறாய்? மரணமென்பது யாவருக்கும் இயற்கையாய் அமைந்திருப்பதுதானே: இஃதென்ன நீ அறியாததோ? என்று பலபல தேறுதல்சொல்லி அவருடைய துன்பப்பாசத்தை நீக்கிவிட்டார்.

இராவணன்வதைப்படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

முப்பத்தாறவது,

## மீட்சிப்படலம்.

இப்படலத்தில் ஸ்ரீராமரிலக்ஷ்மணரால் விபீஷணருக்கு இலங்காதிபத்தியத்திற்குரிய முடிசூட்டுவித்து இராவண னிறந்த சேதியைச் சீதைக்குணர்த்தும்படி ஆஞ்சனேயரைவிடுக்க, உடனேயவ ரசோகவனஞ்சென்றறிவிக்கவும்பிராட்டியார்ஆற்றற்கரியவானந்தத்தால்தன்னைமறந்துதெளிந்து, காவலரக்கியரைக்கொல்ல வெண்ணியவவர்க்கறிவுறுத்தித் தடுக்க, அப்பால் ஸ்ரீராமர் சீதையையலங்கரித் தழைத்துவரும்படி விபீஷணரையேவவும் அவளவ்வாறே வந்துவணங்கித் துதித்துநிற்க, அக்கால் ஸ்ரீராமர் தம்மைத்துதித்துநிற்குஞ் சீதையைச் சிலதோஷங் கூறிக் கடியவும் அவளிலக்குமணரால் அக்கினிமூட்டுவித் ததிற்பாய, அவ்வக்கினிதேவன் அச்சீதையைக் கையேந்திநின்று ஸ்ரீராமர்பால் விடுத்து வந்திக்கவும் அவரவளைநிர்த்தோஷியென் றுணர்ந்து அங்கீகரிக்க,அக்கால் தேவர்கள்வேண்டுகோளால் பிரமதேவனுருத்திரமூர்த்தியும் ஸ்ரீராமர்பால்வந்து அவரதுயதார்த்தநிலையையும் சீதையின்கற்புத்திறத்தையு

முணர்த்திச்சென்ற அவ்வுருத்திரபசுவானவை லால்விண்டுலோகத்திலிருந்த தசரதசக்கரவர்த்திவந்து ஸ்ரீராமலக்ஷ்மணர்களையும் சீதையையுந் தேற்றிச் சென்றபின் இந்திராதிதேவர்கள் காகுஸ்தர்கோரிய வரந்தந்து விரைவிலயோத்திக்கெழுந்தருளச்செய்துசெல்ல, அம்மாத்திரத்தில் ஸ்ரீராமர் விபீஷணர் கொணர்ந்த புஷ்பகவிமானத்தில் இலக்குமணரோடு சீதாசமேதராய் அவ்விபீஷண சுக்கிரீவாதி பரிசனங்கள் சூழவெழுந்தருளி கிஷ்கிந்தையைச் சமீபித்தபோது பிராட்டியார் வேண்டுகோளால் வானரப்பெண்களையும் வருவித்தேற்றி அப்பால்நடக்க, அக்கால் புட்பகவிமானம் சித்திரகூடபருவதத்தருகே போகையில் ஸ்ரீராமர் தமதுபரிசனங்களோடதினின்றுமிறங்கிப் பரத்வாசமுனிவருடைய ஆச்சிரமத்தமர்ந்து தமதுவரவைப் பரதராஜனுக்கறிவிக்கும்படி ஆஞ்சனேயரைவிடுக்க, அச்சமயம் பரதரானவர் பதினன்குவருடஞ் சென்றும் பரந்தாமன் வாராமையால் அக்கினியில்விழ்ந் திறப்பதாகச் சத்துருக்னரோடு சமவாதஞ்செய்திருக்கையில் அஃதுணர்ந்த கௌசலாதேவி வந்து கையமர்த்திப் பலநீதிகூற, அவரது கேளாதுமறுத்து விரையுங்கால் ஆஞ்சனேய ரெதிர்ப்பட்டு ஸ்ரீராமர்வரவைக் கூறிநிறுத்தி அவர்களையாழியையளிக்கவும் அவரதுகண்டு ஆனந்தபரவசராகிச் சுவாமியைச் சென்றுகாண விருப்பியதும், அஃதுணர்ந்த சத்துருக்னரேவலாற்குழுமிய பலபரிசனங்களோடு பரதரானவர் வெளிப்பட்டு ஆஞ்சனேயரால் ஸ்ரீராமரது வனவாசச்சிறப்பையும் இராவணாதிஇராக்கதர்களையொழித்த பராக்கிரமச்செயலையு மோதக்கேட்டு நடந்து பாரத்துவாச ராச்சிரமத்தைச் சமீபித்ததும், அக்கால் ஸ்ரீராமர் அந்தபோதனர்செய்த விருந்தைத்தமது பரிசனத்தோடுண்டு தம்மைக் காணவந்த குசப்பெருமானை ஆசரித்து அன்றிரவுநீங்கிச் சூரியோதயமான பின் யாவரோடும் புஷ்பகவிமானத்திலேறி அயோத்திநோக்கிச் செல்லுகையில் ஆஞ்சனேயரால் அவரது வரவைக்காட்டப் பரதர்கண்டு சேவித்ததும், உடனே யவ்வாஞ்சனேயர் விமானத்திற்பாய்ந்து ஸ்ரீரகுநந்தனருக்குப் பரதாதிய பரிசனங்களின் வரவைக்காட்ட அவரவர்களையு மவ்விமானத்தேற்றி அயோத்தியாபுரியைச்சார்ந்த நந்திக்கிராமத்திற் சேர்ந்ததுஞ் சொல்லப்படுகின்றது.

## ஸ்ரீராமர் விபீஷணருக்கு முடிசூட்டும்படி இளையபெருமாளுக் காக்கியாபித்தல்.

கவி.

வருந்தனீதி மறைநெறியாவையும், பொருந்துகேள்விப் புலமையிற்றேறியெறு
அருந்தவப்பய னுலடைந்தார்க்கறைந், திருந்தவத்தினை யோற்கிறியப்பினன்.

சோதியான்மகன் வாயுவின்றோன்றன்மற், றேதில்வானர வீரரொடேகிநீ
ஆதிநாயக னாக்கியநான்முறை, நீதியானை நெடுமுடிசூட்டுவாய்.

அப்பால் தான் முன்னேசெய்த அருந்தவத்தின் பயனால் தம்மைச்சரணமடைந்து உஜ்ஜீவித்த விபீஷணாழ்வானை ஸ்ரீராமர்பார்த்து, ஓ மநுநீதிமுதலிய தருமசாஸ்திர விதிகளை யறிந்திருக்கிற புத்திமானே! நீ வருத்தப்படாதே: என்று திருவாய்மலர்ந்தருளி ஸ்ரீலட்சுமணப்பெருமானைப் பார்த்து, என்னப்பனே! சுக்கிரீவமகாராசன் - அநுமான் - மற்றவானர வீரர்கள் - இவர்களோடு நீ சென்று, வேதத்திற்சொல்லியபடி நீதிமானாகிய விபீஷணனுக்கு



முடிசூட்டக் கடவாயென்று ஆக்கியாபித்து மற்றவர்களுக்கும் விடைகொடுத்தருளினார். அப்போதங்கு நின்ற சமஸ்ததேவர்களும் - மற்றத் திக்குப்பாலர்களும் - தங்கள் தங்களுக்கேற்ற செய்கைகளைச் செய்யும் உட்களிப்போடுசென்று, சமுத்திர தீர்த்தத்தையும் - கங்கை - யமுனை - கோதாவரி - நருமதை - காவேரி - முதலிய தீர்த்தங்களையும் - திவ்வியரத்தினமயமாகிய சொர்னகிரீடத்தையும் - பெருமையாகிய வச்சிரமணிகளிழைத்த சிங்காசனத்தையும் - மற்றும் வேண்டியவைகளையும் விரைவாகக் கொண்டுவந்தனர்கள். மூலதாமரையிற்பிறந்த பிரமனானவன் பட்டாபிஷேகமண்டபம் கட்டவேண்டியவற்பாடுகளைச் சொல்ல, அச்சொல்லின்வழியே தெய்வத்தச்சனானவன் பிறைச்சந்திரனையும் கங்கையும் சடாபாரத்தில்தரித்தருளிய கயிலாசபதியோடு மற்றத்தேவர்கள் யாவரும் அதிசயித்துப் புகழ்ந்துகொண்டாடும்படி நானாவித ஒளிகளைவீசுகின்ற நவமணிமயமாகிய மண்டபமொன்று சிருட்டித்தனன்.

## இலட்சுமணர் விபீஷணரைச் சிங்காசனத்திலிருத்தி முடிசூட்டேல்.

கவி.

மெய்கொள்வேத விதிமுறைவிண்ணுளோர், தெய்வநீள்புன லாட நிருத்திட
அய்யனாணையி னாலிளங்கோளரி, கய்யினான்மகு டங்கவித்தானரோ.

உடனே சுவர்க்கலோக வாசிகளாகிய தேவர்கள் தெய்வீகம்பெற்று விளங்குகின்ற கங்கைமுதலாகிய நவநதிதீர்த்தங்களைக் கொண்டுவந்து நித்தியமாகிய சத்தியவத்துவைப் பத்தியோடுணர்த்தும் வேதவிதிப்படி அபிடேகஞ்செய்வித்து மங்களாகரமாகிய வலங்காரஞ்செய்து சிங்காசனத்தின் மேலேற்ற ஸ்ரீகாகுத்தவம்சோத்பவராகிய இராமமூர்த்தியின் கட்டளையினால் இலட்சுமணப்பெருமான் தமதுகரத்தால் திருமுடியைச்சூட்டினார். அப்போது தர்மதேவதை நடனஞ்செய்தது. முப்பத்துமுக்கோடி தேவர்களும் கற்பகமலர்களைக் கொய்துகொய்து தூவினார்கள். சித்தர் சாரணர் முதலானவர்கள் தங்களுக்கு வேறேமலர்கள் கிடையாமல், திரிமூர்த்திகளோடும் - முனிவர்களோடும் - பரமவைதிகமார்க்கப் பிராமணர்களோடும் - ஆசீர்வசன மென்னு மலர்களைத் தூவினார்கள்.

அப்பால் பட்டாபிஷேகனாகிய அரக்கர்குலாதிபனானவர் ஸ்ரீராகவபிரானைத் தரிசிக்கவேண்டுமென்கிற பேராவலையுடையவராகி இலட்சுமணருடைய பாதாம்புயங்களை வணங்கி, ஓ மேருமலையுங்கண்டு நாணுகின்ற தோள்களையுடைய இராமாநுஜரே! இயான் சர்வலோக சரணியராகிய ஸ்ரீராமபிரானைச்சேவித்து வருமளவும் நீர் இந்தலங்காநகரத்திலிருந்து இங்குள்ளவரைக் காவல்செய்திருமென்று அவரிடத்திலே விடைபெற்றுக்கொண்டு, சுக்கிரீவமகாராஜன் அங்கதன் முதலானவர்கள் சூழ்ந்துவரச்சென்று ஸ்ரீராமச்சந்திரருடைய திருவடிகளை வணங்கினார். உடனே சுவாமியானவர் தம்மைச் சரணமடைந்த விபீஷணாழ்வானை வாரியெடுத்தணைத்து, ஓ அவைதிகமார்க்காநுசாரிகளாகிய இராக்ஷசர்களைப்போலல்லாமல் பரமவைதிகமார்க்கத்திற் பிசகாம

லொழுகுகின்ற சிரஞ்சீவியாகிய சுகுணசீலனே ! இயாகாதிகளால் தேவர்களைத் திருப்திசெய்து, நீதியிலும் தருமத்திலும் தவறாமல்நடந்து, திரிலோகவாசிகளும் வந்து வணங்கும்படி இம்மைமறுமைப் பயன்களைத் தருவதாக அரசு செய்யக் கடவாயென்று மற்றும் பலபல நீதிகளைக்கூறி, உன்னைச் சேர்ந்தவர்களோடு மிகுந்தகீர்த்தியையடைந்து வாழக்கடவாயென்றும் சொல்லினர்.

### ஸ்ரீராமபிரான் ஆஞ்சநேயரைச் சீதாதேவிபாற்சென்று நடந்த யுத்தவைபவங்களைச் சொல்லென்றனுப்பல்.

கவி.

இப்புறத்தின வெய்துறுசாலையில், அப்புறத்தனை யுன்னியனுமனைத்
துப்புறச்செய்ய வாய்மணித்தோகைபால், செப்புதிப்படி போயெனச்செப்பினன்.

இப்படிசொல்லி முடிந்தபின் மேலே நடக்கவேண்டியதை ஆலோசித்துச் சிறிய திருவடிகளைப்பார்த்து, அநுமானே! நீ பவளம்போன்ற வாயையுமயில்போலும் சாயலையுமுடைய சானகியினிடத்தே சென்று, இங்கு நடந்த செய்திகள்யாவற்றையும் சொல்லென்றனுப்பினர்.

உடனே சர்வசுவாமியினுடைய கட்டளையின்படி சிறிய திருவடிகளானவர் அழகிய அசோகவனத்தைச் சேர்ந்து, நீரில்லாமல் வாடிக்கிடக்கின்ற ஒரு பூங்கொம்புக்குத் தளிர்க்கும்படி வார்க்கின்ற நீரைப்போல ஸ்ரீராமபிரானுடைய வீரப்பிரதாபச் செய்கையைக்கொண்டு பிராட்டியாருக்கெதிரேநின்று, ஸ்ரீரகு குலதிலகருடைய சகஸ்திர திருநாமங்களையும் பலபலமுறை வாயாரப்பாடிக் குதித்துக்குதித்துச் சாரிகைதிரிந்து ஆநந்தத் தாண்டவஞ்செய்து, களிப்பின்மிகுதியால் நடுங்குகின்ற அழகிய இரண்டுதிருக்கரங்களையும் உச்சியின்மேற் கூப்பிநின்று சொல்லுகிறார்:—

### ஸ்ரீராமபிரானுத்தரவாற் சென்ற ஆஞ்சனேயர் சீதாதேவியைவணங்கிச் சோபனமுரைத்தல்.

கவி.

ஏழை சோபன மேந்திழை சோபனம், வாழி சோபன மங்கல சோபனம்,
ஆழி யான வரக்கனை யாரியச், சூழி யானை துகைத்தது சோபனம்.

ஓ சர்வக்ஞயராயிருந்தும் ஒன்றுமறியாதவர் போல இந்த வனத்திலிருப்பவரே ! மங்களம் உண்டாகுக. இந்திராணி சரசுவதிமுதலிய உத்தம ஸ்திரீஜனங்கள் யாவரும் சிரசின்மேல்வைத்துக் கொள்ளத்தக்க திவ்வியாபரணம் போன்றவரே ! மங்களம் உண்டாகுக. உம்முடைய இல்வாழ்க்கைக்கு மங்களம் உண்டாகுக. சக்கரதாரனாகிய மத்தகஜமானது தேவரீர்பக்கலில் அபசாரப்பட்ட தசமுகனாகிய முண்மரத்தைத் தும்சப்படுத்திய விஜயத்துக்கு மங்களம் உண்டாகுக. ஓ என்தாயே ! ஓ சௌவாத்துமதயாபரையே ! அந்தப் பாபிஷ்டனுடைய தலைகள் பர்வதராசிகளைப் போலப் பூமிப்புழுதியில் உருண்டுகிடக்கின்றன. இரத்தினாபரணங்களைத்தரித்த புஜசமூகங்கள்சமுத்திரத்தின்



அலைகளைப்போலத் தரையிற்கிடக்கின்றன. பருத்ததேகமானது சமுத்திரத்தைப்போலக் கிடக்கிறது. மஹாபரிசுத்தராகிய விபீஷணாழ்வானானவர் சுவாமியைநோக்கி, ஸ்ரீ தசரதாத்மஜரே! தேவரீர் இன்னும் பிராட்டியாரை வரவழையாமலிருப்பது தேவரீருக்குப் பிழையாகமுடியும். அன்றியும்யாவருமதிக்கத்தக்க புகழுமல்லவென்று சொன்னாரென்று சொல்லினர்.

இப்படி ஆஞ்சநேயர் சொல்லிக்கொண்டு வரும்போது தம்மையடைந்தவர்களுடைய இருவினைகளை யொழித்து நித்தியானந்தத்தைத் தருகின்ற சீதாபிராட்டியார் தினந்தினம் ஒவ்வொருகலையாக வளராமல் எல்லாக்கலைகளும் ஒரேதினத்திற்சேர்ந்து சந்திரன் வளர்ந்தாற்போலச் சர்வாவயவங்களும் பூரித்தார். இம்மட்டுமோ? செவ்வாம்பல்போன்ற திருவாயும் திருமுகமண்டலமு மலர்ந்து தோன்றவும், நுட்பமாகிய இடையானது வருந்தும்படி தாம்கொண்ட காதலுக்கு இரண்டுபங்கதிகமாக ஸ்தனபாரங்கள் பூரித்துத்தோன்றவும், இராகுவாற் பிடிக்கப்பட்டு மறுபடியுங்கக்கிய சந்திரனைப்போலவும் காணப்பட்டார். ஆஞ்சநேயர் ஸ்ரீராமநாதருடைய செய்திகளைச் சொல்லிக்கொண்டு வரும்போது சர்வலோகேசுவரியாகிய பிராட்டியாருக்கு முன்னே ஓங்கிப் பூரித்தது மனமோ? மனத்திலுண்டாகிய பெருங்களிப்போ? அழகிய வளையலணிந்த தோளோ? அல்லது ஸ்தனபாரமோ? ஏதோவோ இன்னதென்று அறிந்துசொல்ல எம்மால் முடியாது. இப்படி பூரித்ததல்லாமல் திருமுகத்தில் புருவங்கள் நெரிந்தன. ஸ்தனங்கள் வெயர்வைக்குமிழிகளை அரும்பின. நினைப்பதொன்றும் சொல்வதொன்றுமாகி ஆனந்தபரவசப் பட்டவளாய் அஞ்சனை இளஞ்சிங்கத்தைப் பார்த்து, இன்னதைச் சொல்லலாமென்கிற நினைவில்லாமல் உன்மத்தமடைந்தவர்களைப்போலச் சும்மாகிடந்து யான் யாதுசொல்லப்போகிறேனென் றிருந்தாள். அந்த நிலைமையைக்கண்ட ஆஞ்சனேயர் அவரைத்தொழுதெழுந்து, ஓ சகந்மாதாவே! தேவரீருடைய இருதயத்திலுண்டாகிய களிப்பின் மிகுதியாலோ? அல்லது என்னுடைய தூதுபொய்யென்றோ? நீர் ஒன்றும் பேசாமலிருப்பதென்றார். அதுகேட்டருளிய எம்முடைய தாயானவள் அவரை யுற்றுப்பார்த்து, என்னப்பனே ஆஞ்சனேயா! உன்னுடைய வார்த்தையாகிய அமிர்தத்தைப் பானஞ்செய்தபின் என்னுள்ளத்தில் கரைபுரண்டெழுந்தோங்கிய சந்தோஷப் பிரவாகத்தினாலே பரவசப்பட்டு எதைச்சொல்லுவோமென்று ஆலோசித்து ஒன்றுந்தோன்றாமற் சும்மாவிருக்கின்றேனே யல்லாமல், நீ சொன்னசமாசாரமாகிய மகாபாக்கியமானது எனக்குண்டாகிய பைத்தியத்தைப் போக்கமாட்டாமல் மேலுமேலும் பைத்தியத்தைத் தருமோ?

அப்பா அஞ்சனைச்சிங்கமே! முன்னே தூதுவந்தபோது இந்தச் சிறையிலிருந்து யானே நீக்குகிறேனென்று சொன்னநீ, அப்படியே இப்போது சிறையில் நின்று நீங்க சந்தோஷச் செய்தியையும் சொன்னாய். அப்படிப்பட்ட உபகாரியாகிய உனக்கு என்னபிரதியுபகாரஞ் செய்யப்போகிறேனென்

பதை யோசித்து யோசித்து, உன்னோடு பேசவுமாட்டாமற் சும்மா விருந்துவிட்டேன். ஓ என் ஐயனாகிய அநுமானே! இந்தத் திரிபுவனங்களையு நீ செய்த நன்றிக்குப் பிரதிநன்றியாகத் தந்தபோதிலும் சரிப்படுமோ? நீசெய்த உபகாரமழியாது அம்மூன்றுலகமு மழிந்துபோகுமே பிறகு எந்தஉபகாரஞ் செய்வதென்று நினைத்துக்கொண்டே யிருந்தேன். ஓ என்புத்திரதீபமே! உன்னை என்தலையால் வணங்கவுங் கூடுமென்று எண்ணுகிறேன். இப்படி யிருப்பதினால் யாதொருபகாரமும் செய்யச் சக்தியற்றநான் உனக்கு என்னசெய்யலாமென்று எண்ணி யிருந்தேனே யல்லாமற் பேச மறந்துவிட்டவளல்லேன். ஓ சாணைபிடித்த இரத்தினத்திற்குச் சமானமானஸ்ரீராமதூதனே! உன்பக்கலில் நான்செய்யவேண்டியது யாது அதைச்சொல்லக்கடவீயென்று கேட்டார். உடனேவாயுபுத்திரரானவர், ஓ எம்முடைய இறைவியே! நீர் எனக்குத் தயைசெய்கின்றவரம் வேறொன்றுமில்லை. உம்முடையமனம் களிக்கின்ற அநந்த கலியாண குணநிதியாகிய ஸ்ரீரகுகுல நாயகரிடத்தில் உம்மையான் கொண்டுபோய்ச் சேர்க்கும்படி நீர் கிருபைசெய்வதுதான் நான் பெற்றுக்கொள்ளும் பெருவரமாகும். என்றுசொல்லிப் பின்னுஞ் சொல்லுகின்றார்.

## ஆஞ்சனேயர் காவலரக்கியரைக் கொல்லும்படி வரங்கேட்க பிராட்டியார் வேண்டாமென்று மறுத்தல்.

கவி.

எனவுரைத்துத் திரிசடையாளெம்மோய், மனையினிற்சுடர் மாமுகமாட்சியா
டனையொழித்திவ் வரக்கியர்தங்களை, வினையினிற்சுட வேண்டுவன்யானென்றான்.

இதுவுமல்லாமல் இரத்தினத்தைப்போலக் களங்கமற விளங்குகிற திருமுகத்தையுடைய திரிசடையென்னும் என் தாயையொழித்து, இந்த ராக்ஷசஸ்திரீகளையெல்லாம் என்னுடைய கையறையாற் கொல்லும்படி வேண்டுகிறேன். தயைசெய்வீராகில் இதுவும் ஒருவரந்தான்.

ஸ்ரீ ஆஞ்சனேயரிப்படி கேட்டுக்கொள்ளுதலும் இதைக்கேட்ட தேகவலியையுடைய இராக்ஷசஸ்திரீகளெல்லாம் சீதாதேவியைப்பார்த்து, ஓ எங்களுடைய தாயே! உம்முடைய பாதாரவிந்தமே எங்களுக்கு அடைக்கலம்; அடைக்கலம்; என்று திருவடித் தாமரைகளைப்பற்றி விழுந்தார்கள். அப்போது தாயாரானவர் அரக்கர்மாதர்களைநோக்கி, அஞ்சாதேயுங்கள்: அஞ்சாதேயுங்கள்: என்று அபயப்பிரதானந்தந்து ஆஞ்சநேயருடைய முகத்தைப் பார்த்து, ஓ திரிகரணத்தாலும் பரிசுத்தவானே! அந்தப் பாபிஷ்டன் கட்டளையின்படி இவர்கள் செய்தார்களே யல்லாமல் இவர்களுடைய சுயபுத்தியால் என்னதீமைசெய்தார்கள்? எல்லாத்தீவினைகளையும் வசிப்பதற்கு இருப்பிடமாகிய துஷ்டஸ்திரீகளா யிருந்தபோதிலும் இவர்களை மனங்கலங்கும்படி செய்யாதே. இவ்வரத்தை எனக்கு நீ கொடுக்கவேண்டும். என்று பிராட்டியார் சொன்னபோது திருவடிகளானவர் சீதாபிராட்டியாருக்குத் தண்டன்



சமர்ப்பித்து, எம்பெருமானுடைய தேவியாரது திருவுளப் பாங்கின்படியே நடந்துகொள்ளக்கடவேனென்று நின்றுகொண்டிருந்தனர்.

## ஸ்ரீராமர் சீதாதேவியை அலங்கரித்தழைத்து வரும்படி விபீஷணரையேவ அவர் சீதாபிராட்டியாரிடஞ் சென்று சொல்ல பிராட்டியார் சுவாமியைவந்து வணங்கல்.

கவி.

என்னுங்காலை யிருளும்வெயிலுக்கார்
மின்னுங்காலை வியற்கையவீடணன்
உன்னுங்காலைக் கொணர்தியென்றேதவப்
பொன்னின்காற்றளிர் சூடினன்போந்தனான்.

வேண்டிற்றுமுடிந்தன்றே வேதியர்வேதனின்னைக்
காண்டற்குவிரும்புகின்றா னும்பருக்காணவந்தார்
பூண்டகக்கோலம்வல்லே புனைந்தனைவருத்தம்போக்கி
ஈண்டுக்கொண்டனையென்று னெழுந்தருளிறைவியென்றான்.

இங்கே இப்படியிருக்க - இயாவரினும் பெரியோராகிய ஸ்ரீராமபத்திரர் ஸ்ரீ விபீஷணாழ்வானை நோக்கி, ஓ இலங்காநகரராஜனே! எமதுதேவியை வைபவத்தோடு அதிசீக்கிரத்தில் அழைத்துவாவென்று அருளிச்செய்தார். அம்மாத்திரத்தில் இருளைப்போல மேனியும் — சூரியனைப்போல முடியும் - மேகத்தில் தோன்றுகின்ற மின்னலைப்போல பீதாம்பரமும் ஆபரணங்களும் விளங்குகின்ற ஸ்ரீ விபீஷணாழ்வானவர் விரைந்துசென்று, ஸ்ரீ சானகிப்பிராட்டியாருடைய திருவடித்தாமரைகளுக்குத்தண்டன்சமர்ப்பித்து,ஓ எல்லோர்க்குந்தாயே! அந்தணர்கள் அருந்தெய்வமாகிய ஸ்ரீராகவபிரானானவர் தம்முடைய திருவுளத்தில் உத்தேசங்கொண்ட காரியமெல்லா முடிந்து விட்டன. இனியும்மைக்காணும்படி விரும்புகின்றார். நீங்களிருவரு மெழுந்தருளியிருக்கும் திருக்கோலத்தைக்கண்டு சேவிக்கும்படி பிரமன்முதலிய தேவர்கள்யாவரும் வந்திருக்கின்றார்கள். ஆதலால் தேவரீருக்குச் சீக்கிரத்தில் அலங்காரஞ் செய்வித்து உம்முடைய வருத்தத்தை ஆற்றுவித்து என்னிடத்தில் அழைத்துவாவென்றார். ஓ எம்முடைய இறைவியே! எழுந்தருள்வீராகவென்றார்.

இப்படி விபீஷணாழ்வான் சொன்ன சொற்களைக்கேட்ட பிராட்டியாரானவர் சற்றுநிதானித்து ஓ இராக்ஷசகுலவீரனே! யானிவ் விலங்காநகரத்துக்குளிருக்கும் தன்மை இப்படிப் பட்டதென்று அங்குவந்திருக்கும் தேவர்களும் - முனிவர்களும் - கற்புடைய மங்கையர்களும் — கண்டுணரும்படி, இதுவேபிரகாரம் யான்வருவேனேயானால் அது எனக்குப் பெருமையுடைய தாயிருக்கும். அப்படியல்லாமல் யான் அலங்காரஞ் செய்துகொண்டு வருவேனேயாகில் பெருமையல்லவென் றருளிச்செய்தார். அதுகேட்ட ராட்சசகுலராஜன் பிராட்டியாரைநோக்கி, ஓ எம்முடையதாயே! தேவரீர் அலங்காரஞ்

செய்துகொண்டு எழுந்தருள வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்தது யானே சொல்லியதல்ல, நீலரத்தினமலைபோன்ற திருத்தோள்களை யுடைய ஸ்ரீரகுகுலோத்தமருடைய அருளிப்பாடாகுமென்று சொன்னார். ஆனால்அப்படியே அலங்காரஞ்செய்து கொள்ளக்கடவேனென்று சம்மதித்தார்.

உடனே தேவர்களுடைய உத்தரவினால் சுவர்க்கலோகத்தி லிருந்து திலோத்தமை முதலிய தேவதாஸ்திரீகள் தாயாரை அலங்காரஞ் செய்யும்படி வந்து சேர்ந்தார்கள். அந்தத்திலோத்தமையும்—மேநகையும் - அரம்பையும் - ஊர்வசியும் - மற்றதேவஸ்திரீகளும் - வாசனையூட்டிய தைலமுதலிய திருமஞ்சனதிரவியங்களைச் சுமந்துகொண்டு வந்து நெருங்கினின்று, பெண்ணிலக்கணம் விளையுங்காணியும் - கற்புடைய மங்கையர்க்கு ஆபரணமும் - அழகென்னும் பொன்னின் மதிப்பையறியும் உரையாணியும் - திருப்பாற்கடலில் அமுதத்தோடு அவதரித்த அன்னமும் — அறங்களை வளர்க்கும்தாயும் - உயர்ந்த வேதமார்க்கத்தைத் திருத்தும்படி அவதாரஞ்செய்த செல்வியுமாகிய ஸ்ரீசீதாபிராட்டியாருடைய சடையாய்த்திரண்டுள்ள கூந்தலைச் சிக்குநீக்கி வாரி, சர்க்கரைப்பாகைவென்று அமுதத்தைப்போலப் பெருகுகின்ற சொற்களையுடைய பவளம்போன்றவாயில் முத்துக்களின் வரிசையையொத்த தந்தவரிசையைவிளக்கி, வாசனைத்தைலத்தைச் சிரசிலிட்டுத்தேய்த்தும, வினமாயுள்ள திவ்வியரத்தினத்தைச் சாணைபிடிப்பவர்போல வேதகீதங்களை யெடுத்துப்பாடி வேதமுறைமையின்படித் திருமஞ்சனஞ் செய்து, திருமேனியை மெல்லியசீலையால் ஈரமில்லாமல் துவட்டி, கருவிளை மலரைப்போலச் சித்திரத்தொழிலமைந்த பட்டுவஸ்திரத்தை உடுத்தி, அதன்மேல் மேகலாபரணத்தைப் பூட்டி, அழகிய பவளக்கொடிக்குப் பாலினுரையை அப்பினாற்போலத் திருவுருவமுழுமையும் கலவைச்சந்தனம் பூசி, குங்குமச் சந்தனத்தை ஸ்தனபாரங்களின் மேல் அப்பி, சந்திரனுடைய தேவியானவள் தன்மார்பில் தரித்துக்கொள்ளு முத்துவடத்தையும் - இந்திராணியானவள் தானலங்கரித்துக்கொள்ளும் இரத்தினாபரணங்களோடு மற்ற ஆபரணங்களையும் - தக்கபடி அணிந்து, இயற்கையாய்ச் சிவந்துள்ள அதரத்துக்குச் செஞ்சாயந்தீற்றி, பிராட்டியாருடைய திருவழகைக்கண்டு பிறருடைய கண்ணெச்சில் கழியும்படி வேதமந்திரங்களைச் சொல்லி ஆலத்திநீர்சுற்றி மண்பொட்டிட்டு நின்றார்கள்.

இவ்வண்ணம் சீதாபிராட்டியை அலங்காரஞ் செய்வித்து தேவவிமானத்தின் மீதேற்றி தேவமாதர்கள் சூழ்ந்துவரும்படியாகப் பிராட்டியாரை யழைத்துக்கொண்டு தேவநாயகனாகிய ஸ்ரீராமபிரான் பக்கத்தில் விபீஷணாழ்வார்சென்றனர் இவ்வண்ணம் வருங்காலையில் தேவர்கள் இரிஷிகள் தேவமாதர்கள் ரிஷிமாதர்கள் இன்னும் அவ்வத்தெய்விக வுலகத்துள்ள சகலரும் சூழ்ந்துவருப்போது வழிநெருக்கத்தால் இராட்சசவீரர்கள் சன்னிதிவிட்டுநடக்கும்படிப் பிரம்பினால் ஓங்கியடித்தகாலையில் ஓர் பேரிரைச்சலுண்டாயிற்று.



அந்தச்சத்தத்தைக்கேட்ட பிரானனவர் கோபக்குறியுடையோராய் இச்சத்தம் பிறந்த காரணம்யாதென அங்குள்ள முனிவர்களைக்கேட்க அவர்கள்வழியில் நடந்தசங்கதிகளைக் கூற அதைக்கேட்கவே பகவானானவர் தம்மிடமடைந்த விபீஷணரைப்பார்த்துச் சொல்கிறார்.

ஆ! வேதசாஸ்திரங்களைக் கற்றுணர்ந்த விபீஷணா! சாதுசற்ஜனர்களாகிய தேவர் முதலானவர்களை அதட்டித்துரத்தி அவர்கள் பக்கலில் ஏன் அபசாரப்பட்டு நீதியல்லாததைச் செய்கிறாய்? அவர்களெம்மைக் காணவேண்டுமென்பது மாத்திரமேயல்ல; உயுத்தகளத்தைக் காணவேண்டு மென்னும் ஆசையாலும் வந்து நெருங்குகின்றார்கள். அப்படிப்பட்ட திக்குப்பாலர்களையும், தேவர்களையும், கடிந்து துரத்தும்படி யாருனக்குச்சொன்னார். மழுவாயுதத்தைத்தாங்கிய சிவமூர்த்தி — உபேந்திரனாகிய விஷ்ணுமூர்த்தி, கமலயோனியாகிய பிரமமூர்த்தி - இவர்களும், இவர்களுடைய பத்தினிமார்களாகிய பார்வதிதேவி — இலட்சுமிதேவி, சரஸ்வதிதேவி - இவர்களோடின்னும்; உலகத்திலுள்ளவர்களுக்கு ஒருகாரியமு நடப்பதுண்டோ? அளவிடற்கரிய தேவர்கள் தங்களுடைய உருவத்தை மறைத்துக்கொண்டு சேர்ந்து படுகளத்தின் பெருமையைப் பார்க்கவந்திருப்பார்களே: அவர்களை அதட்டித் துரத்துவார்களுமுண்டோ? அந்தத் தேவர்களே அப்படி உன்னால் துரத்தப்படுவார்களானால் மற்றவர்கள் என்னபாடுபட்டிருக்கமாட்டார்கள்? ஓ இராக்ஷசகுல வீரசிகாமணியே! சாதுஜனங்களைத் தடைசெய்தோட்டுவது உனக்கு அடுத்ததன்றென்று அருளிச்செய்தனர்.

இப்படி வேதநாயகன் திருவுளங்கன்றி அருளிச் செய்ததைக்கேட்ட பரிசுத்தகுணவானாகிய விபீஷணாழ்வானவர் அதிதுக்காக்கிரந்தராயிருந்தார். இப்பால் அருந்ததிக்குத் திலகம்போன்ற சானகிபிராட்டியார் கழுகும் பருந்தும் - பேயும் - பசிப்பிணிதீர்ந்து களிக்கும்படி இராக்ஷசர்களுடைய உடல்களை சின்னபின்னப்படுத்திய வீரகோதண்டச் செல்வனுடைய திருமேனியின் கட்டழகினலங்காரத்தை விமானத்திலிருந்தபடி பேரவாவோடு கண்டு சேவித்துத் திருவுளமுங் கண்களும் களிக்கப்பார்த்து, அப்போது தமக்குளடங்காத பெருங்களிப்பால் என்னுடைய கற்பினொழுக்கத்தை யாவருமறியச்செய்து என்நாயகனுடைய வீரத்தன்மையைப் பகிரங்கப்படுத்தி என்குலத்தினுடைய பெருமையை நிலைபெறச்செய்து இந்தவுலகத்தில் வியர்த்தமாய் நான் பிராணத்தியாகஞ் செய்துகொள்ளாதபடி உயிர்பிழைத் திருக்கவுஞ்செய்த அநுமானுக்கு நான்சொன்ன சிரஞ்சீவித்துவத்தை என்னுடைய கற்பானது நிலைபெறச்செய்யுமேயல்லாமற் செய்யாமற்போகாதன்றே?

கவி.

எச்சிலென்னுடலுயி ரேகிற்றேயினி
நச்சிலையென்பதோர் நவையிலாவெனதிர்
பச்சிலைவண்ணனும் பவளவாயுமாய்க்
கைச்சிலையேந்தினின் றதனைக்கண்ணுற்றாள்.

இராக்ஷசர்களுடைய ஊரில் தங்கியிருந்த குற்றமுடைய வெனக்கு அடையவேண்டுவது இனிவேறே என்னவிருக்கிறதென்றெண்ணித்தமக்கெதிரே பச்சிலைபோன்ற திருமேனியும் பவளம்போன்ற வாயுமுடையவராய்த் திருக்கரத்தில் ஸ்ரீகோதண்டத்தைத் தாங்கிக்கொண்டிருந்த ஸ்ரீரகுநாயகரைப் பின்னும் கண்களாற் கண்டு, உயிரையிழந்த உடலானது அந்த உயிரைக்கண்டடையுந் தன்மைபோலத் தம்முடைய திருமுகமண்டலத்தை நாயகருக்குக் காட்டும்படி தேவஸ்திரீகள் சூழ்ந்துவர எழுந்தருளிவந்த விமானத்தைவிட்டுப்பூமியிலிறங்கி, இராமசுவாமியினுடைய பாதங்களுக்குத் தண்டன்சமர்ப்பித்துநின்றார். அப்போது கற்பென்கின்ற தருமத்துக்கு அரசியும், பிரமேந்திராதிகளுடைய தேவிமார்களது கழுத்திற்குத் திருவென்னும் ஆபரணமாயெழுந்தருளியிருந்து இரக்ஷிப்பவரும், எல்லா அழகுகளுக்கும் அழகுகொடுப்பவரும், மகா கீர்த்திவாழ்வதற்கு இருப்பிடமானவரும், தம்மிடத்திலேயே அன்புவைத்த எல்லாவுயிர்களையும் இரக்ஷித்தருளுகின்ற தர்மஸ்வரூபியுமாகிய ஸ்ரீ ஜனகமகாராஜனுடைய அருந்தவப்புத்திரிகாரத்தினத்தை ஸ்ரீ புருஷோத்தமராகிய ஸ்ரீராகவபிரானானவர் திருக்கண்களால் கடாக்ஷித்தருளினார்.

## ஸ்ரீராமர் சீதையின் கற்புத்திறத்தைக்காட்டவெண்ணிச் சினத்தல்.

கவி.

சுணங்குறுதுணைமுலை முன்பிற்றாங்கிய
அணங்குறுநெடுங்கணீ ராறுவார்வுற
வணங்கியமயிலினைக் கற்பின்வாழ்வினைப்
பணங்கினாரவென வெழுந்துபார்ப்புறு.

இப்படி கடாக்ஷித்த ஸ்ரீ தசரதாத்மஜரானவர் தம்மைக் காணப்பெற்ற பாக்கியத்தாலுண்டாகிய ஆநந்தத்தால் இரண்டு நேத்திரங்களினின்றும் தாரைதாரையாய் ஸ்தனபாரங்களின்மேல் நீர்சொரியும்படி வணக்கஞ்செய்த கற்பின்வாழ்வாகிய சகன்மாதாவை சர்ப்பத்தைப்போலச் சீறிப்பார்த்து, ஓ ஜானகி! அவைதிக மார்க்காநுசாரியாகிய இராக்ஷசனுடைய நகரத்தில் நீ யிதுபரியந்தம் வாசஞ்செய்துகொண்டிருந்தாய். அங்கிருந்துகொண்டு அறுசுவையுண்டிகளைச் சிறிதும் கவலையென்பதே இல்லாமல் உண்டுகொண்டிருந்தாய். இப்படியெல்லா நடந்தபடியால் உன்னுடைய கற்பினிலைமை கெட்டுப்போனதன்றோ? அப்படி கெட்டுப்போயும் இன்னமுயிரோடு பிழைத்திருக்கிறாய். இந்தப்பிரகாரம் பல்குற்றங்களைச் செய்திருந்தும் சிறிதுமச்சமில்லாமல் திரும்பிவந்தது என்னகாரணம்? உன்னை நான் இச்சிப்பேனென்று நினைத்தோ? கடலைத்தூர்த்து அணைகட்டி அதன்வழியாக இலங்காநகரத்துக்குள்ளே பிரவேசித்து இராக்ஷசப்பூண்டறும்படி எம்பகைவனாகிய இராவணனைக் கொலை செய்தது, ஓ மைதிலி! உன்னைச் சிறையிலிருந்து மீட்பிக்கும்படியென்று நினைத்துக்கொண்டாயோ? அந்தநினைப்புக் கொள்ளாதே: உன்னாலே எனக்கு நேரிட்ட அவமானத்தைப் போக்கிக்கொள்ள வேண்டுமென்று செய்தேன்.



என்னிடத்திற் கிஞ்சித்துமன்பில்லாத ஓ ஜனகராசன்பெண்ணே! இராக்ஷசர்களுக்கு அமிர்தத்தைப் பார்க்கிலும் ருசிக்கின்ற மாமிசத்தையும், மதுவையும், போதுமானமட்டும் இதுபரியந்தம் உண்டாயே: சிலநாளாவது உன்னோடு உறவாடிக்கொண்டிருந்த எங்களுக்கு அந்த மதுமாமிசவிருந்து செய்விக்கலாமென்று விரும்பி வந்தாயோ? அப்படி விருந்துசெய்ய அழைத்துக்கொண்டு போவதாயிருந்தால், ஏன் நாணத்தோடு தலைகுனிந்துகொண்டு கண்ணீர்சொரிகிறாய்? உயர்ந்த ஆபரணங்களிற்பதித்த இரத்தினத்தினது ஒளியைப்போல உத்தமப்பெண்ணுக்குரிய நற்குண நற்செய்கைகள் உன்னிடத்திலில்லை. நீ நல்ல இராஜவமிசத்திலே பிறந்தவளல்ல. ஆகையால் உன்னிடத்தில் அவை கிடைக்கமாட்டா. ஒரு புழுவைப்போலப் பூமியினுற்பத்தியானாய். அதற்குத் தக்கபடி துர்க்குண துர்ச்செய்கைகளைக் காட்டினாய். ஆ! சீதா! சூரியகுலமானது அச்சம் — மடம் - நாணம் — பயிர்ப்பு - என்னும் பெண்ணுக்குரிய குணங்களும், இழிகுணமில்லாமையும், குற்றமில்லாத குடிப்பிறப்பும், கற்பென்கின்ற திடமும், நல்லொழுக்கமும், புருஷனே தெய்வமெனக்கொள்ளும் நிச்சய ஞானமும், கீர்த்தியும், பொய்சொல்லாமையுமாகிய குணங்கள் குறைவின்றிநிறைந்த ஸ்திரீகளையுடைத்தாயிருக்கிறதென்னு மகாகீர்த்தியை அடைந்திருந்தது. ஒரு பெண்ணாகிய நீ அந்தச்சூரியவமிசத்தோடு சம்பந்தப்பட்டபடியால் ஈகையென்பதில்லாத அரசனுடைய கீர்த்தியைப்போல அந்த வமிசத்தின் கீர்த்திமுழுமையு நாசமாய்விட்டதன்றோ?

ஆ! சானகி! குலஸ்திரிகளாயுள்ளவர்கள் நாயகனை நீங்கியிருக்கிறகாலத்தில் பஞ்சேந்திரியங்களையும் அடக்கி, நல்லொழுக்கத்தையே உறுதியாகக்கொண்டு, தலைமயிரைச் சிக்கறவாரிமுடியாமற் சடையாகச் செய்வித்து, கற்பென்னும் ஒரு பெருந்தவத்தைச் செய்துகொண்டிருப்பார்கள். அந்தப்பெருந்தவத்துக்கு ஒரு பழிநேரிடுவதாயிருந்தால் தங்கள் பிராணனைவிட்டொழிந்து, அப்பழியைவாராமல் தடுத்துவிடுவார்கள். இந்த நற்குணங்களில் ஒன்றையாவது நான்உன்னிடத்திற் காணவில்லையே: நான் இனி உனக்கென்ன சொல்வது? உன்னுடைய நடக்கையானது என்னுடைய நெஞ்சைப் பிளக்கின்றதே; நீ நடந்தநடத்தை குலத்துக்குத் தக்கதல்லவென்று உனக்குத் தெரிந்திருப்பதினால்உனக்கிஷ்டமானமார்க்கமே நீ செல்லக்கடவாயென்று சொன்னார். இப்படிமெய்ஞ்ஞானச்செல்வமுடைய யோகிகளின்இருதயத்தில் வசிப்பவராகிய ஸ்ரீரகுராமரானவர் ஸ்ரீ சீதாபிராட்டியாருடைய கற்பினிலைமையை யாவருங்கண்டுணரும்படி செய்யவேண்டுமென்னும் கருத்தால் நிர்த்தாக்ஷிணியமாகச் சொன்னதைக் கேட்டுக்கொண்டிருந்த பிரமன்முதலிய தேவர்களும், முனிவர்களும், அவர்களுடைய மனைவிமார்களும், இராக்ஷசர்களெல்லோரும், வானரர்களும், மற்றயாவர்களும்வாயைத்திறந்துகதறி அழுதார்கள்.

இப்பாலிவ் விருவர்களும் கருணையாலும் இச்சையாலும் கொண்ட மானுஷாவதாரத்துக்கேற்கச் சகல வைதிகாதி ஒழுக்கங்களை நடந்துகாட்டுகின்ற

வர்களாகையால், சர்வசுவாமியானவரைக் காணுமல் நெஞ்சம் புண்பட்டிருந்த சானகிபிராட்டியாருக்கு அவர்சொன்னசொல் புண்ணிற் கோலிட்டாற்போல அதிகதுக்கத்தை உண்டாக்கியது. அதனுல் தம்முடைய இரண்டுவிசால நேத்திரங்களில் நின்று பிரத்தக்கண்ணீ ரொழுகும்படியாய்ப் பூமியை நோக்கிக்கொண்டு தம்மைமுழுது மறந்துபோய் பெருமூச்சு விடுகின்றவராகி, பாலைவனத்திலிருந்து சூரியகிரண வெப்பத்தால் தகிக்கப்பட்டு நீருண்ணுமாசையால் வருந்தி மரணவஸ்தை யடைந்தமானனது நல்ல நீர் நிறைந்த தடாகத்தைக்கண்டு அதன் சமீபத்திற்போய் உண்ணக்கூடாத சிலதடையை யடைந்தாற்போலத் தாம் குரூரர்கள்வசிக்கின்ற இலங்காநகரத்துக்குள் அதிகஷ்டத்தோடு வாசஞ்செய்துகொண் டிருந்து ஸ்ரீ சுவாமியைக் காணவேண்டுமென்கிற பேராசையோடு வந்தவிடத்தில் அவருடைய நிர்த்தாக்ஷிணியமாகிய சொற்களைக்கேட்டு அதிதுக்கத்தை யுடையவராய்த் தம்முடைய நேத்திரங்களிலிருந்து பெருகாநின்ற நீரானது உலகத்திற் பெருகியோடும்படிப் புலம்பி, இதுபரியந்தம் யாதொருநியொழுக்கமு மில்லாமலிருந்து அடைந்த பேறு இந்த மகானுபாவருடைய திருமேனியைக் காணுதலும் இவருடைய திருவடிகளுக்குத் தண்டன் சமர்ப்பித்தலுமாம். இந்த அரியபேறு பெற்றதல்லாமல் நான்செய்துவந்த கற்பின்தவமு நல்லபயனையே தந்தது. என்று தமக்குள்ளே தீர்மானித்துக்கொண்டு ஸ்ரீ சர்வ சுவாமியைப் பார்த்துச் சொல்லுகிறார்.

### இராமசுவாமி சினந்து சிலசில வார்த்தையைச் சுடச்சுடக் கூறியதைக்கேட்ட சீதாபிராட்டியார் வருந்திச் சுவாமியைப் பார்த்துச் சொல்லுதல்.

கவி.

மாருதிவந்தெனைக் கண்டவெள்ளனீ, சாருதியீண்டெனச் சமையச்சொல்லினுன்
யாரினுமேன்மையா னிசைத்ததில்லையோ, சோருமென்னிலையுவன் றாதுமல்லனே.

எல்லோரினும் உயர்ந்த பரம்பரனே! இந்த அநுமானும் ஸ்ரீ விபீஷணுழ்வானும் என்னிடத்தில் வந்து ஸ்ரீரகுநாயகரானவர் உம்மைவரும்படி ஆக்கியாபித்தாரென்று சொல்லி அழைத்து வந்தார்கள். இயானிதுவரையும் அநுபவஞ் செய்துகொண்டிருந்த என்னுடைய துக்கநிலையைத் தேவரீர்பக்கலில் ஸ்ரீ ஆஞ்சநேயர் சொன்னது மில்லையோ? அவர்சொல்லாமற் போவாரேயாகில் அவரைத்தூதுவரென்று சொல்லவுங்கூடுமோ? இத்தனைகாலமாக நான் பிரயாசத்தோடு செய்துவந்தது இப்படிப்பட்ட தவமும் – நன்மையும் - கற்புமென்று நீர் அறியாமையால், அவைவியர்த்தமாய்ப் போயினவன்றோ? ஐயோ! எல்லோருக்கும் கண்போல விளங்குகின்ற ஸ்ரீ புருஷோத்தமரான சிரேஷ்டரே!. என்னைத்தாம் நிக்கிரகித்தால், உலகத்திலுள்ளவர்கள் மின்னைக் கற்புடையளென்று சொல்லுவார்களோ? சொல்லப்போகிறதில்லை. நான் தாமரையிலெழுந்தருளிய பிரமதேவராலும் பேதிக்கப்படாத மனநிச்சயத்தை யுடையவளா யிருந்தும், இவருக்கஃ தில்லாதவளானேன். இனியித்த



உத்தமருடைய திருவுளத்திற் கொண்ட சமுசயத்தை நீக்க யாரால்முடியும்? பொதுவாய்நிற்கின்ற தருமதேவதையும் இவரைப்போலவே அறியாமற்போகுமோ? இயாதோ தெரிந்திலேன்.

கவி.

பங்கயத்தொருவனும் விடையின்பாகனுஞ், சங்குசைத்தாங்கிய தருமமூர்த்தியும்
அங்கையினெல்லிபோ லனைத்துநோக்கினு, மங்கையர்மனநிலை யுணரவல்லரோ.

பிரஹ்மாவும் சிவபிரானும் தருமமூர்த்தியாகிய விஷ்ணுவும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல எல்லாவற்றையும் தாமேயறிந்துகொள்பவர்களா யிருப்பினும், மங்கையருடைய மனத்தினது நிலைமை இன்னதென்று அறிந்துகொள்ளமுடியுமோ? முடியாது: ஆகையாலினி அன்னியர் நம்பும்படியோ? என்னுடைய குற்றமற்ற கற்பினைச் சொல்லிக் காட்டுவேன்? என்று தமக்குள்ளே யோசித்துக்கொண்டு, ஓ வேதநாயகனே! நீர்விரும்பாத இந்தத் தேகத்தை விடுவதைப்பார்க்கிலும் சிறந்தகாரிய மொன்றுமில்லை. இதுவே உம்முடைய கட்டளையும், என்கடமையுமாகும்.

### சீதாபிராட்டியார் தேகத்தை நீக்குவேனென்று இளையபெருமாளைத் தீமூட்டச் சொல்ல வவர்மூட்டுதல்.

கவி.

இளையவன்றனை யழைத் திடுதீயென, விளையொலிமுன்கையாள் வாயிற்கூறினள்
உணர்வுறுமனத்தவ னுலகம்பாவுக்கும், கிளைகணைத்தொழுவவன் கண்ணிற்கூறினன்.

என்று சொல்லிவிட்டு இளையபெருமாளைக் கடாட்சித்து, ஓ சுமித்திராதேவியாருடைய புத்திரதீபமே! சீக்கிரத்தில் தீயைமூட்டக் கடவீரென்று ஆக்கியாபித்தனர். உடனே ஸ்ரீராமாநுஜரானவர் எல்லாவுயிர்களுக்கும் ஆதரவா யெழுந்தருளியிராநின்ற ஸ்ரீராமசுவாமியைத் தண்டன் சமர்ப்பித்து நின்றனர். அவரும் அப்படியே செய்யக்கடவாயென்று கண்காட்டினர். சுவாமியினுடைய அபிமதத்தைப் பெற்றுக்கொண்ட ஸ்ரீலட்சுமணரானவர் தமதுயிர்நீங்கித் தள்ளாடும்படி மிகுந்த துன்பமுடையவராகி, கண்களினின்று நீர்தாரைதாரையா யொழுகச்சென்று சாஸ்திரவிதிப்படி தீயைமூட்டினர்.

உடனே செந்தாமரைமலரில் வசிப்பவராகியும் தெய்வங்களுக்குத் தாயாயுமானபிராட்டியார் அந்தத் தீக்குச்சமீபத்திற்போய் நெருங்கினர். அம்மாத்திரத்தில் அதைக்கண்டு சகிக்கமாட்டாமல் சதுர்வேதங்களும், நித்தியமாகிய தருமதேவதையும் ஓலமிட்டன.

இப்படி சமஸ்தசீவர்களும் தம்மைக்கண்டு மனோதுக்கர்களாயிருக்க ஸ்ரீசானகிபிராட்டியார் இலக்குமணரால் மூட்டிய தீயைச்சுற்றி அருகில் நின்று, ஓ அக்கினிபகவானே! திரிகரணங்களுக்கு மொருகாரணத்தினலாவது யாதாமொருகுற்றத்தை அடைந்திருப்பேனேயானல் நீ அதிகோபத்தையுடையவனாய் என்னைச்சுட்டுச் சாம்பராக்கக் கடவாயென்று சொல்லி, ஸ்ரீ

புருஷோத்தமராகிய ஸ்ரீரகுநாயகரை நோக்கி நின்றவிடத்திலேதானே இருந்து மனப்பூர்வகமான தண்டன்சமர்ப்பித்தனள்.

## சீதாபிராட்டியார் அக்கினியை வலம்வந்து குதிக்க அக்கினிதேவன் கையேந்திவந்து ஸ்ரீராமர்பால் விடுத்தல்.

கவி.

நீந்தரும்புன்விழை நிவந்ததாமரை, யய்ந்ததன்கோயிலே யெய்துவாளெனப்
பாய்ந்தனள்பாய்தலும் பாலின்பஞ்செனத், தீய்ந்ததவ்வெரியவள் கற்பின்றீயினால்.

சீதாபிராட்டியார், நீந்துதற்கரிய நீரினிடத்து மேலெழுந்து வளர்ந்துமலர்ந்துள்ள தனதாலயமாகிய தாமரைமலரிலே யெழுந்தருளுவதுபோல அந்தீயினது நடுவே குதித்தனள். அப்படிக் குதித்தவுடனே அவளுடைய தெய்வத்தன்மையுள்ள கற்பாகிய நெருப்பினால் அந்தநெருப்புத் தகிக்கப்பட்டது. உடனே தீயின்கடவுளானவர் தம்மிலேகுதித்த சர்வசகன்மாதாவைத் தமது கரங்களினாலேசுமந்தெழுந்து, ஓ தீனபந்து! ஓ தேவதேவோத்தமா! ஸ்ரீ காகுஸ்தகுலநாயகா! என்னுடைய தேகமுழுமையும் எரிகின்றதேயென்று கதறி, சமஸ்தபிராணிகளையு மீரக்ஷிக்கின்ற பிராட்டியாரை இருகரங்களினாலேந்திக்கொண்டு மற்றிரண்டுகைகளையுங் குவித்துக்கும்பிட்டுக்கொண்டு, வேதாந்தத்தின் முடிவில் பிரதிபாதிக்கப்பட்ட பரவஸ்துவாயுள்ள ஸ்ரீராகவபிரானுடைய திருவடிகளுக்குச் சமீபத்திலேவந்துநின்றார். ஸ்ரீசீதாபிராட்டியாரோ? முன்னே சுவாமியுடனே ஊடிக்கொண்டதினா லுண்டாகிய வேர்வையானது சற்றுமுலரவில்லை. அளகபாரத்திலும்—திருக்கழுத்திலும் கைகளிலும் தரித்திருந்த பூமாலைகளெல்லாம், நீரில்தோய்த் தெடுத்தாற்போல விளங்கின. திசைகலங்கசமஸ்தாத்துமாக்களும் தங்கள்தங்கள் நிலையில்நின்றன. அருந்ததிமுதலிய கற்புடைய ஸ்திரீகள்யாவரும் நாணமும், ஒழுக்கமும், இல்லாதவர்களாய் அந்தரமார்க்கத்தில் நின்று ஆநந்தக் கூத்தாடினார்கள். அக்கா லக்கினிபகவான் ஸ்ரீராமபிரானை நோக்கி, என் ஐயனே! உம்முடைய தேவியாரது தெய்வத்தன்மையுள்ள கற்புத்தீயினால் ஒன்றும் ஆலோசியாமல் என்னுடைய பலத்தை க்ஷீணிக்கச்செய்தீர். சுத்தமான யாகாக்கினி ஸ்வரூபராகிய தேவரீர் என்னை யென்னகோபத்தினால் இப்படிச் சுட்டெரித்தீர்? என்று பல்விதமாய் முறையிட்டார்.

இப்படி முறையிட்டுக்கொண்டிருந்த அக்கினிபகவானை ஸ்ரீராமநாதரானவர் நோக்கி, நீர் யார்? அக்கினியிலிருந்தும் தோன்றிவந்து என்னிடத்தில் நீர்பேசுவதென்ன? இந்தத் தீயொழுக்கமுடைய ஒருத்தியைச் சுட்டெரிக்காமல் ஏன் சும்மாவிட்டீர்? இயார்சொல்லைக் கேட்டுக்கொண்டு இப்படிச்செய்தீர்? இவற்றையெல்லாம் சொல்லக்கடவீரென்று கேட்டருளினார். அதுகேட்ட செந்தீக்கடவுள் ஸ்ரீதரனைவணங்கி, ஓ பரமாத்துமாவாகியஸ்ரீராமச்சந்திரரே! நானே அக்கினிதேவன். இந்த உலகமாதாவினுடைய கற்பென்கிற அதிதீக்ஷணியமாகிய தீயானது என்னைச்சுட, அதைப்பொறுக்கமாட்டாமையால் உம்மைச் சரணமடைந்தேன். பிராட்டியார்எனதுசுவாலையில்மூழ்கியெழுக்

No. 70. ஸ்ரீராமர் கண்டு, தீப்பாய்ந்த சீதையை, அக்கினிதேவன் கையேந்திவிடுக்க, பிரமதேவனுமவரைச் சன்மானிப்பித்தல்.



உயுத்தகாண்டம். சீதாதேவி தீப்பாய்வது.

தனைத்தாம் நேரேபார்த்தும், யாவருக்கும் சாக்ஷிபூதனாய் நிற்கின்றநீர் ஏன் சமுசயப்படுகிறீர்? ஓ ஸ்ரீகோதண்ட தீக்ஷாகுருவே! குலஸ்திரீகளை விவாகம் செய்வதும், அவர்களில்லறத்தினின்றும் விலகுவார்களேயானால் சத்திய பூர்வகமாய்க் கேட்பதும், மற்ற பலபொருள்களிடத்தில் சந்தேகந்தோன்றினால் அந்தச் சந்தேகத்தை நிவர்த்திசெய்து கொள்வதும், ஆகியவிவையெல்லாம் என்னிடத்திலேதான் செய்துகொள்ள வேண்டும். இது நான்சொல்வதன்று. நித்தியமாயும் அபௌருஷேயமாயுமிருக்கின்ற வேதங்களே சொல்லுகின்றன.

ஐயோ! இவள்திருவுளத்தில் சீற்றங்கொண்டு சபிப்பாளேயானால், மூலதாமரையிலெழுந்தருளிய பிரஜாபதியாகிய பிரம்மதேவரும் இறந்துபோவதல்லாமல் உயிர்பிழைத் திருப்பாரோ? என்று இன்னமும்பலபல விதமாக எடுத்துச் சொல்லித் துதித்தனர். அசத்தியமாகிய பொருள்களையெல்லாம் சுட்டெரித்துச் சாம்பராய்ச் செய்யத்தக்க அக்கினிபகவானானவர் இப்படிச் சொல்லிமுடித்தபின், தேவசமூஹங்களு மற்றத்திரிலோகத்தவர்களும் குதித்துக் குதித்து நின்று நடனஞ்செய்ய மங்கையர்க்கரசியாகிய பிராட்டியாரை ஸ்ரீபகவான்பக்கலில் விடுத்தனர்.

அக்கினிபகவான் கரத்தேந்திக் கொண்டுவந்து தன்பால்விடுத்த சீதாபிராட்டியை ஸ்ரீராமபிரான் அங்கீகரித்தல்.

கவி.

அழிப்பிலசான்றநீ யுலகுக்காதலால்
இழிப்பிலசொல்லினீ யிவளையாதுமோர்
பழிப்பிலளென்றனை பழியுமின்றினிக்
கழிப்பிலளென்றனன் கருணையுள்ளத்தான்.

இப்படி அக்கினிபகவானானவர் சொல்லியதைக் கேட்டருளிய கருணைசலதியாகிய ஸ்ரீராகவபிரானானவர் அவரையுபசரித்து, ஓ பாவகனே! சர்வலோகங்களுக்கும் அழிவில்லாத சாக்ஷியாயிருக்கின்ற நீர் இந்தச்சானகியினிடத்தில் இழிந்தகுணங்களில்லை, சிறிதுநிந்தையும் கிடையாது, என்று சொல்லுவதினால் இனிப் பழிப்பில்லாதவளே: இனியாயினும் அங்கீகரிப்பவளாவாள் என்று அருளிச்செய்தனர்.

ஸ்ரீராமர்பால் பிரமதேவனும் உருத்திரமூர்த்தியும்வந்து அவரதுயதார்த்தநிலையை யுணர்த்திச் சீதையைச் சன்மானித்தல்.

கவி.

உணர்த்துவாயுண்மை யொழிகின்றுகாலம் வந்துளதால்
புணர்த்துமாயையிற் பொதுவுறநின்றவை புணரா
இணர்த்துழாய்த்தொங்க லிராமநீகென் றிமையவரிசைப்பத்
தணப்பிறமரைச் சதுமுகனுரைசெயச் சமைந்தான்.

அதுசமயத்தில் இந்திராதி தேவர்கள் சதுர்முகராகிய பிரமதேவரைப் பார்த்து, தேவரீர் மூலப்பிரகிருதியின் காரியமாய் எல்லாச் சீவர்களுக்கும்

பொதுவாய் நின்று அவைகளை மயக்குகின்ற மாயையானது சிறிதும் அணுகாமல் உண்மை அறிவு ஆனந்தமே திருவுருவமாகவுடைய ஸ்ரீராமபத்திரருக்கு அவருடைய யதார்த்தநிலையில் நீர் அறிந்தவற்றுள்ளே சிறிதை எடுத்துச் சொல்லும். அவரோ தம்முடைய யதார்த்தஸ்திதியை அறியாதவர்போலக் காணப்படுகிறார். என்று சொல்லவும் பிரமதேவரானவர் ஸ்ரீராமசுவாமிக்கெதிரேவந்துநின்று அவரதுண்மையை வெளிப்படுத்தத் தலைப்பட்டார்.

ஓ எங்களுடைய துக்கநிவாரணார்த்தமாகத் திருவவதாரஞ்செய்த வரபாலன மூர்த்தியாகிய ஸ்ரீராமப்பிரபுவே! அடியேன் சொல்வதைக் கேட்டருள்வீராக. பழமையாகிய சூரியவமிசஸ்தர்களிற் பிறந்த ஒருமனிதனாக உம்மை நினைத்துக்கொள்ளாதேயும். சராசரப்பொருள்களெல்லாமும், உம்முடைய சங்கல்பலேசமாத்திரத்தால் தோன்றி உம்முடைய கருணையால் காக்கப்பட்டு நிற்கின்றன. ஆகையால் இந்தச்சமஸ்த பொருள்களும் உம்மையல்லாமல் இல்லை. நீரோ அந்நியமாய் நினைத்தருள வேண்டாம்.

தோற்றமும் - ஒடுக்கமும் - அளவுமில்லாம லிருக்கிற தம்முடைய பெருமை பிறரால் அறியப்படாமல் தாமே அறியத்தக்க வேதசிரசுக்கள், காரியவஸ்துக்களாகிய எங்களுக்குமேல் ஒரு பரமாத்துமா உண்டென்று சொல்லும். அந்தப் பரமாத்துமாயாரெனில்? எங்களிடத்தில் கருணையுள்ள நீர்தானென்று சொல்லுகின்றனவே யல்லாமல், இங்கேவந்திருக்கிற பிரமேந்திராதிகளாகிய எங்களிலொருவரையும் சொல்லவில்லையே: பிரமனாகிய எனக்கும், இந்திரனுக்கும், பலபிரமரிஷிகளுக்கும், மற்றசிவராதிக ளெல்லார்க்கும், நீரே முதற்கடவுளென்று உண்மையறிந்து திடச்சித்தர்களாய்த் தேவதாந்தரங்களைப் பஜியாமல் உம்மையே உபாசிப்பவர்கள் நிவர்த்திசெய்யக்கூடாத இருவினைகளாகிய பாசத்தளையை நீங்கி முத்தியுலகத்தை அடைவார்கள். யான் முதலாகிய எல்லாச்சேதனர்களும் தாய் – தந்தை – மனையாள் – புத்திராதிய மகாமாயையென்னும் பேராசையாகிய கடலில் அழுந்தி, சுவாமியாகிய உமக்குச் சொத்தென்கிற உண்மைஞான மில்லாமையால் அந்தச்சனன சமுத்திரத்திலேயே கிடந்து துக்கங்களாகிய மகரமச்சங்களால் கவ்வப்பட்டு நடுங்குவோம். தேவரீருடைய நிர்ஹேதுக்கிருபையால் சிலசேதனர்கள் உம்மையே சுவாமியென்றும் - உமக்குத்தாங்கள் சேஷபூதர்களென்றும் – உண்மைஞானம் பிறந்து, பிறவித் துன்பங்களையொழித்து முத்தியுலகத்துக்கு வித்தைப்போலாவார்கள்.

சம்பத்தின் ராசியாகிய பெருஞ்செல்வத்தினாலே கர்வித்துக்கிடக்கிற இந்திராதிதேவர்கள் கொண்ட கர்வமானது அடங்கும்படி. அசுரர்களும் – அரக்கர்களும் குரூரமாக யுத்தஞ்செய்து அவர்களையடித்துத் துரத்தவே, அவர்கள்வந்து உம்மைச்சரணாகதியென்று அடைகிறார்கள். அதன்பொருட்டு வசிக்கத்தகுதியல்லாத மானுஷிய கர்ப்பத்தினின்றும் அவதரித்து அந்தக்கொடியவர்களை நாசஞ்செய்து அந்தத் தேவர்களைக்காக்கின்றீர். இப்படிச்செய்வது



உமக்குக்கடனேயல்லாமல்மற்றொருவருக்குக்கடமையாகுமா? மூன்றெழுத்துக்கூடி ஓரெழுத்தாய்நின்ற பிரணவத்தினுடைய உண்மைப்பொருளை யறிந்தவர்கள், உம்மையுள்ளபடி அறிந்தவர்களாவார்கள். தேவரீரைப் பிரணவத்தின் வாச்சியமாக வறிந்த அந்தப்புருஷர்களே இருவகை வினைகளையும் வெறுத்து ஒழிப்பவர்கள். அந்தப் பிரணவப்பொருளை அறிவதுவே உண்மைஞானமென்று உணராதவர்கள் மிகுந்த கியானிகளா யிருந்தபோதிலும், பிரணவப்பொருளாகிய நீர் உண்டோ இல்லையோ என்று சந்தேகங்கொண்டு யுகமுடிவுவரையும் பிறக்கிறதும்இறக்கிறதுமாகி உழன்றுகொண்டிருப்பார்களேயன்றி உச்சீவிக்கமாட்டார்கள். ஓ சர்வசுவாமி! தேவரீருடையநிலையிப்படிப்பட்டதாக இருக்கிறது: அதைக்காட்டாமல் ஒளித்துநின்று எங்களை மயக்குகிறீர். ஆனாலும் உம்முடைய திருமார்பி லெழுந்தருளியிருந்து, எங்களையும் எங்களுக்கிருப்பிடமாகிய அண்டங்களையும் பெற்று, கிரகஸ்தாச்சிரமத்தை ஓங்கிவளரும்படி அனுஷ்டித்தருளிய எங்கள்தாயாகிய சானகிப்பிராட்டியாரை வியர்த்தமாகக் கோபஞ் செய்யாதேயு மென்றுபிரமதேவர் சொல்லி முடித்தனர்.

இந்தப்பிரகாரம் சமஸ்த அண்டசராசரங்களைச் சிருட்டித்த சதுர்முகனானவர் துதிசெய்தானவுடனே இடபவாகனத்தையுடைய உமாநாயகராகிய உருத்திரமூர்த்தியானவர் இராமனைக் கடாக்ஷித்து, ஸ்ரீ ராமச்சந்திரா! நீர் உம்முடைய பெருமையை ஒன்றும் அறியீர்போலும். சமஸ்த அண்டங்களுக்கும் தாயாகிய இந்தச் சீதாபிராட்டியென்னும் கற்புடைய மங்கையர்க்கரசியானவள் பழையபடியே உம்முடைய திருமார்பைவந்து சேர்ந்தாள். நீரிந்தப் பிராட்டியை நிக்கிரகிப்பது தகுதியல்ல. இப்பிராட்டி கற்பினின்றும் தவறுவாளாகில் இந்தச் சமஸ்தபுவன சராசரங்களும்அழிந்துபோகாமல் இன்னமும் நிலைத்திருக்குமோ? அப்போதே அழிந்துபோய்விடும். ஆகையால் இந்தச் சாக்ஷாது இலக்குமியைநீர் இப்படி நிந்திப்பது மறந்துவிடத் தக்கதென்று சொல்லினர்.

### உருத்திரமூர்த்தியின் கட்டளையால் வைகுந்தத்திலிருந்த தசரதச்சக்கரவர்த்தி ஸ்ரீராமமூர்த்தியர்க்குப் பிரத்தியக்ஷமாகி அவர்களைத் தேற்றிச் செல்லுதல்.

கவி.

பின்னுநோக்கினன் பெருந்தகைமுன்புதற் பிரிந்த
இன்னலாலுயிர் துறந்திருந் துறக்கத்து விருந்த
மன்னனாங்குவற் சென்றுநீகண்டனை வணங்க
முன்னைவான்றுயர் நீக்குதிமொய்ம்பினோ யென்றான்.

ஆதியான்பணி யருள்பெற்றவரசருக் கரசன்
காதல்மைந்தனைக் காணியவுவந்ததோர் கருத்தால்
பூதலத்திடைப் புக்கனன்புகுதலும் பொருவில்
வேதவேத்தனு மவன்மலர்த்தாண்மிசை வீழ்ந்தான்

தம்மை நோக்கித் தவஞ்செய்தவர்களுக்கு வேண்டிய இஷ்டகாமியங்களைத் தயைசெய்கின்ற பரமசிவனானவர் பின்னும் ஆலோசனைசெய்து, ஆனந்த கலியாணகுண நிலயமாகிய ஸ்ரீராகவபிரானைப்பிரிந்த துன்பத்தால் தேகவியோக மடைந்து பாலனகர்த்தாவாகிய ஸ்ரீமகாவிஷ்ணுவின் உலகத்தையடைந்த தசரதசக்கரவர்த்திக்குப் பிரசன்னமாகி, ஓ மகா புண்ணியசீலனாகிய சக்

கரவர்த்தியே! நீ பூலோகத்துக்குப்போய் உன்னுடைய குமாரனாகிய ஸ்ரீராமச்சந்திரனைக்கண்டு உன்னுடைய மனோதுக்கத்தை மாற்றிக்கொள்ளுகவென்று சொல்லினர். ஸ்ரீசங்கரபகவானுடைய வாக்கின்படி சக்கரவர்த்தியானவர் தமக்குப் பிராணபதமாயிருந்த இராகவபிரானைக் காணவேண்டுமென்கிற கருத்தால் பூலோகத்துக்கு வந்து, சர்வசுவாமிக்கெதிரே நின்றனர். உடனே வேதபுருஷனாகவும் அவ்வேதங்களால் அறியப்பட்ட பரவஸ்துவாகவும் இராநின்ற ஸ்ரீசானகிரமணனானவர் சக்கரவர்த்தியினுடைய பாதங்களில் தமது திருமுடிதோயும்படித் தண்டன் சமர்ப்பித்த திருக்குமாரரை சக்கரவர்த்தியானவர் வாரியெடுத்து, பர்வதம்போல விசாலமாகிய தமது மார்பிலழுந்தும்படி இறுக அணைத்து, தம்முடைய கண்களிலொழுகாநின்ற ஆநந்தபாஷ்பத்தால் திருமஞ்சனமாட்டி, இப்போதுதான் நாம் வாழ்ந்தோமென்கிற களிப்பு அதிகரித்தவராய் முன்னே தாமடைந்திருந்த துக்கங்கள் யாவற்றையும் அங்குள்ளயாவரும் கேட்கும்படி சொல்லிப் பிரலாபிக்கத் தொடங்கினார்.

ஓ என்னப்பனே! அக்காலத்திலே கேகயநாட்டரசனுடைய புத்திரியாகிய கைகேசியானவள் என்னிடத்திற்பெற்ற வரமென்கிற கூரிய வேலாயுதமானது, என்தேகத்தை நீக்கும்படி செய்ததுமல்லாமல் இன்றுவரையும் என்னெஞ்சினிடத்திலேயே நின்று உபத்திரவத்தை விளைத்துக்கொண்டிருந்தது. இப்போது உன்னையான் ஆலிங்கனம் செய்தபின், திவ்வியாபரணங்களைத் தரித்துப் பரிமளமணக்கின்ற உன்திருமார்பாகிய காந்தக்கல்லானது அந்தவரமென்கிறவேலைக் கிரகித்துவிட்டது. ஓ அழகுபொருந்தியபெரிய திருந்தோள்களையுடைய ஸ்ரீரகுநாயகா! நல்லகுணங்களையுடைய சுபுத்திரர்களைப்பெற்று அதிசமிருத்தியாதியையடைந்தபுருஷர்களும், என்னுடைய கால்களில்நின்றுமெழுகின்ற துகளுக்கும் சமானமாகாரென்னும்படியான மகாகீர்த்தியை எனக்குண்டாக்கினாய். இருவினைகளிலிருந்து நீங்கினவர்களுக்கும் பெறக்கூடாத ஸ்ரீவிஷ்ணுலோகத்தையும் சத்கீர்த்தியையும் பெற்று யாவர்களினும் உயர்ந்திருக்கிறேன்! சூரியவமிசகுல திலகனே! ஓ ஜானகிரமணா! முன்பு நான் வணங்கிக்கொண்டிருந்த தேவர்களும் முனிவர்களும் பலமுறைபார்த்து எனக்குக் கைகளைக்குவித்துத் தண்டனிடுதலை உன்னுடைய செந்தாமரை மலர்போன்ற கண்களாற்பார். ஸ்ரீசர்வேசுரனுடைய திருவுந்திமலரில் அவதரித்த பிரமனோடு நானும் சமானமென்னும்படி அந்தச்சதுர்முகனோடு சத்தியவுலகத்தில் ஒரே ஆசனத்தில் இருக்கும்படியாயும் என்னைச்செய்தாய். என்று சொல்லித்தம்முடைய புத்திரராகிய அந்த ஸ்ரீராமநாதரை எடுத்தெடுத்துமார்பில் இறுகத்தழுவிப் பின்பு ஸ்ரீ சீதாபிராட்டியார் பக்கலிற் சென்றார்.

உடனே பிராட்டியாரும் ஸ்ரீ சக்கரவர்த்தியாருடைய பாதங்களில் நமஸ்காரஞ்செய்தனர். நமஸ்காரஞ்செய்த பிராட்டியாரை யாவரும் சொல்லமுடியாத புகழையுடைய தசரதரானவர் அதிககருணையோடு அணைத்து நின்று, ஓ மங்கையர்க்கரசியே! ஸ்ரீராகவபிரான் உன்னை அக்கினியிற் பிரவேசிக்கும்



படிச் சொன்னது உன்னுடைய அழிவில்லாத கற்பினிலைமையை உலகத்தாருடைய இருதயத்தில் எட்டுவிக்கும்படியே யல்லாமல் வேறன்று. அதை உன்னுள்ளத்தில் மற்றொன்றாக நினைக்கவேண்டாம். ஸ்ரீ பகவத்பக்தியிலினர்களாகிய பாபிஷ்டதுராத்துமாக்கள் உன்விஷயத்திற் சங்கைகொண்டிருப்பார்களேயானால், அவர்களுமிப்போது அந்தச் சந்தேகத்தை நீக்கி உன்னிடத்தில் நிச்சயமாகிய நம்பிக்கையடைந்து உஜ்ஜீவிப்பார்களன்றோ? இது சத்தியமே: கங்கைநாடாகிய கோசலநாட்டின் இராஜசிகாமணியின்மேற்சிற்றங்கொள்ளாதே: பொன்னைத் தீயிற்போட்டெடுத்தல் அப்பொன்னினுடைய வாஸ்தவத்தை அறியும்படியல்லவோ? அப்படியென்றே இதை நினைப்பது தகுதியாகும். பிரமேந்திராதி தேவர்களும் முனிவர்களும் கூடியிருக்கிற இந்தமகாசபையில் நீ கற்புடைய மங்கையர்களுக்கு அரசியென்று தெரிவிப்பதற்காகவே உன்னை அக்கினியில் முழுகச்சொன்னது. இதுசமயம் தப்பிப்போனால் இந்த மகாசபையைக்கூட்டி உன்னுடைய கற்பினிலைமையைக் காட்டுதல் அருமையென்றுணர்ந்து நினைத்து இந்தப் புருஷோத்தமன் இப்படிக்குச் செய்தானாக்குமென்று பிராட்டியாரைத் தேற்றினார்.

பின்பு ஸ்ரீராமாநுஜர் பக்கலிற்போய் உள்ளத்திலுள்ள அன்பானது காட்டும்படியாகத் தம்மைத் தாமேதழுவுவதுபோலத் தம்முடையமார்பில் அவருன்றும்படித்தழுவி, தம்முடைய கண்களிலிருந்து இடைவிடா தொழுகாநின்ற நீரானது திருமஞ்சனஞ் செய்கின்ற தீர்த்தம்போல இளையபெருமாளுடைய சடாமகுடத்திற் பாய்ந்திழியும்படியாக உச்சிமோந்து, அப்பனே! இலக்ஷ்மணா! என்னுடைய சனனவியாதியையும் ஸ்ரீ ரகுநாயகன் ஆரண்ணியத்துக்குத் தனியாய்ப் போகின்றானென்று என்னெஞ்சிற்கொண்ட துன்பப்பிணியையும் நீக்கினையே: ஓ சுமித்திராதேவி இளஞ்சிங்கமே! திரிமூர்த்திகளுடன் தேவலோகவாசிகளெல்லாரும் நீ இந்திரனுடைய பகைவனாகிய இந்திரசித்தை வெம்போரில்வென்ற மகாகீர்த்தியையே பேசுகிறார்கள். என் ஐயனே! இந்த உலகத்துக்கு நேரிட்ட துக்கமாகிய விரோதத்தை நிவர்த்திக்கச்செய்து, தருமத்தை நிலைபெறச்செய்தாயேயென்று பலவாறு சொல்லினர்.

இந்தப்பிரகாரம் இலக்குமணரோடு பேசிய சக்கரவர்த்தியானவர் மீட்டும் ஸ்ரீ சானகிரமணரிடத்துச் சென்று, ஓ என்பிராணபதமாகிய இராமா! உனக்குவேண்டியதொன்றைக் கேட்பாயாகவென்று சொல்லினர். அப்போது ஸ்ரீராமபத்திரரானவர் அவரைநமஸ்கரித்து, என்பிதாவே! நீர் என்னிடத்தில் வைத்தஆசையாகிய குறைநிசயத்தால் பொல்லாதவளென்று வெறுத்துவிட்ட என்தெய்வமும், உம்முடைய புத்திரனாகிய பரதாழ்வானும், எனக்குத்தாயும் தம்பியுமாகும்படியான வரங்களைத் தயைசெய்யக்கடவீரென்று கேட்டருளினார்.

அக்கால் தசரதசக்கரவர்த்தியானவர் ஸ்ரீராமனைத்தழுவி, இயாவருக்கும் வரத்தைத் தயைசெய்கின்ற ஸ்ரீரகுவம்சதிலகனே! நீகேட்டுக்கொண்ட இரண்டிலே பரதன் உனக்குத்தம்பியேயாகக் கடவன். உனக்கு யான்கொடுத்த திருமுடியை அபகரித்துக்கொண்டு இந்த விரதவேஷத்தை உனக்குக்கொடுத்த பாவிமேல் எனக்குண்டாகிய கோபமானது சத்தியமாய் நீங்கவில்லை. என்று ஸ்ரீராமபிரானைத் தழுவிநின்ற கைகளும் தளர்ந்துதொங்கும்படியாக அதிகதுக்கத்தோடு சொன்னார். அது கேட்டருளிய ஸ்ரீராமபிரானவர் தசரதசக்கரவர்த்தியாரைப்பார்த்து, எம்பிதாவே! நிலையில்லாத தேகபோஷணார்த்தத்துக்கு உபயோகமாயிருக்கின்ற இராஜ்யாதிகாரத்தை யான்விரும்பும் விருப்பமானது பெருங்குற்றங்களுக்கெல்லா மூலமென்பதை யான் அறிந்துகொள்ளாமற்போனதே குற்றமல்லாமல், என்னை வளர்த்தெடுத்த தெய்வமாகிய தாயானவள் கருணையால் என்விஷயத்தில் அந்த ராச்சியாதிகாரத்தைத் தடுத்துவிட்டது குற்றமோவென்று சொல்லினர். அப்படியே யாகுகவென்று தசரதரும் சம்மதித்து முன்பு கைகேசிமேற் கொண்டிருந்த கோபம் ஆறினர்.

அப்போதிராவணனுக்குப் பிரமனாதியர் தயைசெய்துகொடுத்திருந்த வரங்களெல்லா வற்றையு மழித்து வெற்றிகொண்ட ஸ்ரீராகவபிரானவர் கேட்டுக்கொண்டபடி சக்கரவர்த்தியார் சம்மதித்ததைக் கண்ட தேவர்கள்யாவரும் ஒருவரையொருவர் பார்த்து, ஆ! ஆ! கேட்டீர்களா? நாம் பெற்றுக்கொண்ட வரம் ஈடேறும்படி நம்முடைய இறைவனைக் காட்டுக்கனுப்பிய மகோபகாரியாகிய கைகேசியானவள், இந்தச் சக்கரவர்த்தியாரிடத்திற் பெற்றுக்கொண்ட வரங்களும் இரண்டு. அவ்விரண்டு வரங்களின்படி நடந்துகொண்ட எம்பெருமானுக்கு இன்றிவர்கொடுத்த வரங்களும் இரண்டென்று மனவிரக்கத்தோடு பேசிக்கொண்டார்கள். திரிலோகத்தார்களும் சிறந்ததாகக் கொண்டாடுகின்ற சத்தியத்தின்பொருட்டு உயிரைக்கொடுத்து மிகுந்த கீர்த்தியையடைந்த தசரத சக்கரவர்த்தியானவர் இப்படி இரண்டுவரங்களைத் தந்து, சகன்மோகனாகார ஸ்வரூபராகிய ஸ்ரீராமபிரானையும் - ஸ்ரீ இளையபெருமாளையும் - ஸ்ரீ சீதாபிராட்டியாரையும் - விட்டுப்பிரிந்து விமானத்தின்மீதேறி வைகுந்தம்போயினர்.

### இந்திராதிதேவர்கள் சுவாமியைப்பிரார்த்தித்து வேண்டியவரந்தருகிறோமென அப்படியே கோடுமென்று சுவாமிகேட்டல்;

கவி.

கோட்டுவார்சிலைக் குரிசிலையமரர்தங் குழாங்கள்
மீட்டுநோக்குறு வீரநீவேண்டுவ வரங்கள்
கேட்டியாலென வரக்கர்கள்களைப்பருஞ் செருவில்
வீட்டமாண்டனே குரங்கெலாமெழுகென விளம்ப.

இப்பால், வளைந்தநீண்டவில்லை யுடைய ஸ்ரீராமபிரானை இந்திராதிதேவர்கள்பார்த்து எங்களாலாகவேண்டிய வரங்களேதாவதிருக்கின் பெற்றுக்கொள்



ளுமென்று கேட்டார்கள். அப்போது ஸ்ரீராமபிரானவர், ஓ தேவர்களே இராக்ஷசவீரர்களால் யுத்தத்தில்மடிந்துபோன வானரர்களெல்லாம் உயிர்பிழைத் தெழுந்திருக்கவும், அவர்கள் எந்தெந்தவனங்களிலும் - பர்வதங்களிலும் - இவைபோன்ற இடங்களிலும்போய் வசிக்கின்றார்களோ? அந்தவிடங்களிலெல்லா மதுரமானகாய்களும் - கனிகளும் - கிழங்குகளும் - தேனும் - உண்ணத்தக்க நீரும் புஷ்கரமாயிருக்கவும், வரத்தை யருங்களென்று கேட்டருளினர். அதுகேட்ட யாவருக்கு முதல்வராகிய சதுர்முகக்கடவுளும் - இந்திரனும் - மற்றத் தேவர்களும் - முனிவர்களும் - ஸ்ரீராமனைப்பார்த்து, ஓ துன்பத்தையேவிளைக்கின்ற சனனநோய்க்கு மருந்தாவனாய் விளங்குகின்ற ஸ்ரீராமபத்திரனே! உம்முடைய கருணாவிசேஷணியத்தால், அப்படியே ஆகக்கடவதென்று ஒவ்வொருவருந் தனித்தனியே சொல்லிக் கண்களுமனமுங் குளிர்ந்தார்கள்.

அப்போது பாபாத்துமாவாகிய இராவணனோடு செய்த முதற்போர்முதல் அவனோடுசெய்த கடைப்போர்வரையு மாண்டுபோன வானரங்களில் ஆஞ்சநேயர்கொண்டுவந்த சஞ்சீவியாற் பிழைத்தவைபோக மற்றவையெல்லாம் உயிர்த்தெழுந்து, சிந்தையும் விழிகளுங் களிக்கும்படியாக நடந்த யுத்தங்களையெல்லா நினைத்தும் - படகளத்தைப் பார்த்தும் - அத்தியந்தப் பிரீதியோடு ஓடிவந்து தாமரைமலர்போன்ற நேத்திரங்களையுடைய ஸ்ரீரகுநாயகருக்குத் தண்டன்சமர்ப்பித்தன. இராவணன் - கும்பகருணன் - இந்திரஜித்து - அதிகாயன் - கும்பன் - நிகும்பன் - மகராக்கண்ணன் - பிசாசன் - தூமாக்ஷன் - வச்சிரதந்தன் - முதலிய ராக்ஷசவீரர்களால் மடிந்துபோய் இப்போது உயிர்பெற்றெழுந்த அந்த வானரங்களெல்லாம் அங்கே சந்தோஷ ஆரவாரஞ்செய்துகொண்டிருந்தன. பிரமன்முதலிய தேவர்களெல்லாம் ஸ்ரீராமநாதனை நோக்கி, தேவரீர் சுக்கிலபட்சத்து அஷ்டமியில் சுவேலாசலத்தை வந்தடைந்து, இலங்காநகரத்தை வானரசைனியங்களால் முற்றுகைபோட்டு, அரக்கர்கள்யாவரையும் கொலைசெய்து, அமரபட்சத்துப் பஞ்சமிதிதியில் இராக்ஷசகுலநாயகனாகிய இராவணனையும் உயிர்மாய்த்து, இனியிந்த அண்டத்தில் வஞ்சகர்களில்லையென்னும்படியாகக் கொலைத்தொழில்செய்தீர். ஓ தாமரைமலர்போன்ற கைகளையுடைய எம்பெருமானே! தாயார்சொல்லியபடி பதினா வருஷமும் இன்றோடுமுடிகின்றது, இன்றைத்தினமே அயோத்திக் கெழுந்தருளி ஸ்ரீ பரதாழ்வானுக்குத் தரிசனையாகாவிட்டால் அந்த ஸ்ரீமான் தீயைமூட்டி அதிற்குதித்துப் பிராணத்தியாகஞ் செய்துகொள்ளுவார். ஆதலால், அப்படிஅயோத்தியில் நடவாதபடி தேவரீர் சீக்கிரமாய் எழுந்தருளவேண்டுமென்று சொல்லிவிட்டுப் போயினார்கள்.

உடனே சுவாமியானவர் விபீஷணாழ்வான் முதலானவர்களைப் பார்த்துச்சொல்லுகிறார். ஓ மித்திரர்களே! என்தாயானவர் எனக்குக் கட்டளையிட்ட வருஷங்கள் பதினான்கும் இன்றோடு சரிபட்டுப்போகிறது. இன்றையத்

தின நான் அயோத்தியைப்போய்ச் சேராமற்போவேனேயானால், என் தம்பி பரதாழ்வான் எரியில்விழுந்து பிராணனை மாய்த்துக்கொள்ளுவான். அதுகொண்டு என்குலமுற்று நாசமாய்விடும். அப்படிநேரிட வொட்டாமல் இங்கேயிருந்து இத்தத்தினமே அயோத்திக்குப் போகத்தக்க வாகனம் ஒன்றுண்டோவென்று கேட்டருளினார். சுவாமிசொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்த ஸ்ரீவிபீஷணாழ்வானனவர் அவரைப்பணிந்தெழுந்து, சுவாமி! யக்ஷராஜனாகிய குபேரனுக்குப் பிரமதேவராற் கொடுக்கப்பட்ட மகா புஷ்பகவிமானமொன்றுண்டு. அது மிகவும்பரிசுத்தமுடையது. அதன்மீது இந்தவானரசேனையெல்லாம் யாவுமேறினும் ஒருபுறத்தில் அடங்கிப்போமேயல்லாமல், அதற்கு ஒருசுமையாகமாட்டா. இராவணன் எப்போதாவது ஒருகாலத்தில் இலங்கையிலுள்ள ராக்ஷசர்களையெல்லாம் ஏற்றிக்கொண்டுபோய் உலாவுவான். ஆதலால் அவ்வளவு பெரிதென்று சொல்லினர். அப்படிப்பட்டதானால் அதைக் கொண்டுவாவென்று சுவாமியானவர் கட்டளையிட்டனர்.

விபீஷணர்கொணர்ந்த புஷ்பகவிமானத்தின்மீது ஸ்ரீராமபிரான் சீதாலக்ஷ்மண சகிதரா யெழுந்தருளல்.

கவி.

அண்டகோடிக ளனைத்தமொத் தாயிரமருக்கர்
விண்டதாமென விசும்பிடைத்திசையெலாம் விளங்கக்
கண்டையாயிர கோடிகளொலிப்புறக் கதுலக்
கொண்டணைந்தன னெடியினிரைக்கர்தங் கோமான்.

அண்டகோடிக ளொன்றாய்த்திரண்டு ஒருருவமாயினதுபோன்ற பெரிய உருவமுடையதாயும், ஆயிரஞ் சூரியர்கள் ஏககாலத்தில் உதயஞ்செய்தாற்போன்ற ஒளியையுடையதாயும், அநேகமணிகள் கணீர்கணீரென்று சப்திப்பதாயுமுள்ள அந்தப் புஷ்பகவிமானத்தைச் சர்வசுவாமியினுடைய கட்டளையின்படி. விபீஷணாழ்வானனவர் அதிவேகமாய்க் கொண்டுவந்தார். அந்தப் புஷ்பகவிமானம் பூமியில்வந் திறங்கியதைக் கண்ட ஸ்ரீராகவபிரானனவர் திருவுளமகிழ்ந்து, நம்முடைய எண்ணம் முடிந்தமென்று அதன்மேலெழுந்தருளினார். உடனே தேவர்கள் யாவரும் அவர்மேல் புஷ்பங்களை வாரியிறைத்துப் பல்லாண்டு கூறினார்கள். கற்புக்குத் தன்னைப்போன்றவரில்லாத ஸ்ரீசானகிபிராட்டியாரைத் திரிசடையென்னும் கருணைவதியானவள் தண்டன்சமர்ப்பித்து, ஓ ஜகத்காரணி! அடியாளும் தேவரீரோடு அயோத்திக்கு வருகிறேனென்று சொல்லினள். அதுகேட்ட ஸ்ரீ சீதாபிராட்டியானவர் — அம்மா திரிசடையே நீ யாதொரு துன்பமுமில்லாமல் இலங்காநகரத்துக்கு ஒருதெய்வத்தைப்போலிருக்கக்கடவாயென்று ஆக்கியாபித்து ஸ்ரீராமபிரான் பக்கலில்வந்து சேர்ந்தார். மணம்வீசுகின்ற மாலையைத்தரித்த இராமாநுஜரும் விமானத்தின்மேலெழுந்தருளினார்.

அப்போது சமஸ்த அண்டங்களையும் உண்ட ஸ்ரீசர்வேசுரனுடைய திருவுதரத்தைப்போல விளங்குவதாயும், வாயுவினது வேகமும் பின்னிடும்படி



மனோவேகத்தையொத்த வேகத்தையுடையதாயும் ஆகாயத்தின்கண் விளங்குகின்ற விமானத்தின்மேலெழுந்தருளியிராநின்ற ஸ்ரீராமநாதரானவர் ஸ்ரீவிபீஷணாழ்வானை நோக்கி, ஓ பூவினிதழ்களால் தொடுத்த மாலையைத்தரித்தவனே! நீ மகாபுண்ணியன்-சத்தியன் உனக்குயாதொருகுறையு முண்டாகாது, நீ எந்நாளுஞ் சிரஞ்சீவியாக நீதிதவறாது இலங்காபுரியை அரசாட்சி செய்யென்று அருளிச்செய்தனர். பின்புமனோவாக்குக் கெட்டாத கீர்த்தியையுடைய இராமபத்திரரானவர் சுக்கிரீவமகாராஜனைப் பார்த்து, ஓ சூரியபுத்திரனாகிய மகாராஜனே! உன்னுடைய புஜபலத்தாலே பத்துத்தலைகளையுடைய இராவணனைச் சங்கரித்தேன். அவன்முதலிய இராட்சசர்களுடைய யுத்தத்தில் உன்னுடைய சேனைகள்யாவு மிகுதியுஞ்சிரமப்பட்டு இளைப்படைந்தன. இனிமேல் நீ உன்னுடைய சேனைகளோடு கிட்கிந்தைக்குப்போய்ச் சேர்ந்து வாழக்கடவாய். என்றுசொல்லி அங்கதப்பெருமானையும், சாம்பவந்தனையும், பநசனையும், வெற்றியைத் தாந்தக்க போரில்வல்ல நீலன் முதலாகிய சேனாநாயகர்களையும், வாயுபுத்திரராகிய ஸ்ரீ ஆஞ்சநேயரையும் கடாக்ஷித்து, நீங்களும் சுக்கிரீவ மகாராஜனுடனே போங்களென்று திருவாய்மலர்ந்தருளினர்.

ஐயனானவர் இந்த வசனத்தைச் சொன்னமாத்திரத்தில் ஸ்ரீ விபீஷணாழ்வான்முதலிய யாவரு மனந்திடுக்கிட்டு, உடலுமுயிரு நிலைகலங்கும்படி விழிகளில் நீர் தாரைதாரையாக ஒழுக ஸ்ரீராகவபிரானுடைய செந்தாமரை மலர்போன்ற திருவடிகளை அவரவர்களும் தங்கள் தங்கள் தலைகளிற் சூட்டிக்கொண்டு, எம்பெருமானே! உம்மைவிட்டு நீங்குவோமேயானால் நாங்கள் பிழைப்பதில்லை. தேவரீரோடு பெரியமதில்சூழ்ந்த திருவயோத்திக்கு வந்திருந்து, பசும்பொன்னாற் செய்யப்பட்டு முத்துமாலைகள் தொங்குகின்ற இரத்தினமயகிரீடத்தைத் தரித்துக்கொள்ளும் பட்டாபிஷேக திவ்விய மகோற்சவத்தையும் — அங்குநடக்கும் வைபவங்களையும் - சிங்காதனத்தின்மேல் தேவரீரெழுந்தருளியிருக்கும் அழகையும் — உஜ்ஜீவிக்கும்படி கண்ணாற் சேவிக்குமளவும் தேவரீரைப் பிரியாதிருக்கும்படி தயைசெய்வீரென்று மிகுதியும் பணிவாகக் கேட்டுக் கொண்டார்கள்.

ஸ்ரீராமபிரான் விபீஷணாதியர் வேண்டுகோளால் யாவரையும் புஷ்பகவிமானத்தி லேற்றிக்கொள்ளுதல்.

கவி.

அன்பினுலவர் மொழிந்தவாசகங்களு மவர்கள்
துன்பமெய்திய நடுக்கமுநோக்கினீர் துளங்கல்—
முன்புகாணினைத் திருந்தபசிநோம் முயற்சி
பின்புகாணுமா றுரைத்ததென் றுரைத்தனன் பெரியோன்.

இப்படி விபீஷணாழ்வான் சுக்கிரீவமகாராஜா முதலானவர்கள் அதிகப்ரீதியோடு கேட்டுக்கொண்ட விண்ணப்பத்தையும் — அவர்கள் பிரிவென்னுந் துன்பத்தா லடைகின்ற நடுக்கத்தையும் — ஸ்ரீஜகந்நாதரானவர் கடாக்ஷித்து,

நீங்கள் துன்பப்படவேண்டாம். நீங்கள் சொன்னபடியே உங்களை அயோத்திக்கு அழைத்துக்கொண்டுபோக முன்னமே நான் நினைத்ததுண்டு. ஆனால் உங்களுடைய உள்ளக்கருத்தை அறியும்படியாக அது சொன்னதேயல்லாமல் வேறல்லவென்று சொல்லியருளினர். அப்படி சொல்லியருளிய ஸ்ரீராமசுவாமியினுடைய மொழியைக்கேட்டவுடனே ஸ்ரீசுக்கிரீவ மகாராஜனும் — விபீஷணாழ்வானும்—சிறிய திருவடி நளாதி-மற்றவானரத்தலைவர்களும்—சேனைகளும்—சகலசகத்காரணனாகிய ஸ்ரீசக்கரவர்த்தித் திருக்குமாரருடைய சீர்பாதங்களை வணங்கி, தேகத்தோடு முத்தியடைந்தவர்களைப்போல ஆச்சரிய பூதர்களாய் நின்றார்கள். நின்ற அவர்கள் யாவரையும் புஷ்பகவிமானத்தின்மே லேறும்படி சுவாமி ஆக்கியாபிக்கவே, அதிகவிரைவாக சுக்கிரீவன் முதலானவர்களும் — வானரப் படைகளும் — விபீஷணரும் — அவருடைய சேனைகளும்— அந்தவிமானத்தின்மீதேறி ஒருபுறத்தில் இருந்தார்கள். இவர்களேயல்லாமல் பதினாலுலோகங்களும் அவற்றிலுள்ள சராசரங்கள் யாவும் ஏறினபோதிலு மேலுமேலும் வெற்றிட மிகவுமிருக்கத்தக்க அவ்வளவுபெருமையுள்ள விமானத்தினுடைய இயல்பை யோகீசுவரர்களாலே சொல்லவேண்டியதேயல்லாமல், இந்தப்பூமியின்கண் சொல்ல வல்லவர்கள் யாருண்டு?

இப்படியந்தப் புஷ்பக விமானத்தின்மேல் எழுபதுவெள்ளச் சேனைகளும் - சூரியபுத்திரனும் - இலங்காதிபதியும் — அவருடையசேனையும் சூழ்ந்திட்டார்ந்திருக்க, மத்தியில் ஸ்ரீராமாநுஜர் ஒருபக்கத்திலும் ஸ்ரீ சீதாபிராட்டியார் ஒருபக்கத்திலுமிருக்க, இவ்விருவருக்கு நடுவே ஸ்ரீராகவபிரான் எழுந்தருளினர். அந்தப் புட்பகவிமானமானது அப்பிராகிருத பரமபதத்தைப் போலத் தோன்றியது. ஹேயகுணங்களு முதலுநடுவு முடிவுமில்லாமலு நான்கு வேதங்களுக்கு மெட்டாமலுமிருக்கிற ஸ்ரீ பரஞ்சுடரைப்போல ஸ்ரீராகவபிரான் அந்த விமானத்தில் விளங்கினர், ஸ்ரீராமபத்திரருடைய அநுமதியினால் சூரியபுத்திரனாகிய சுக்கிரீவமகாராஜனும், இலங்காநகராதிபதியாகிய ஸ்ரீவிபீஷணாழ்வானும், வெற்றியே பூணத்தக்க இருவகைச்சேனைகளும், ஆஞ்சநேயர் சாம்பவர்முதலிய படைத்தலைவர்களு மனிதவுருவங்கொண்டார்கள்.

### யாவரும் புஷ்பகவிமானரூடராய் வடதிசை நோக்கி வரும்போது அவ்வவ்விடங்களைக் குறிப்பிட்டு ஸ்ரீராமபிரான் சீதாபிராட்டிக்குக் கூறல்.

கவி.

குடதிசைமறைந்தபின்னர்க் குணதிசையுதயஞ்செய்வான்
வடதிசையயனமுன்னி வருவதேதகப்பமானம்
தடையொருசிறிதின்றித் தாவினான்படரும்வேலை
படையமைவிழியாட்கையனினையனபகரலுற்றான்.

மேற்றிசையிலே அஸ்தமித்தபின்பு கிழக்குத்திசையிலே உதயஞ் செய்கின்ற சூரியன் தக்ஷிணாயன நீங்கி உத்தராயணத்துக்காக வடபாரிசத்தில் வருவதுபோல யாதொருதடையுமில்லாமல் புஷ்பகவிமானமானது ஆகாயமார்க்



கத்தில் தாவிவரும்போது, ஸ்ரீராமநாதர் வாள்போலு நீண்டு கூர்மைபெற்று விளங்குகின்ற கண்களையுடைய பிராட்டியாருக்கு அவ்விடங்களைக் குறிக்கப்பட்டு சிலவார்த்தைகளைச் சொல்லத்தொடங்கினர்.

ஸ்ரீ சானகிபிராட்டியாருக்குச் சொல்லத் தொடங்கிய பகவானனவர் இப்புட்பக விமானமானது இலங்காநகரத்தை வலஞ்செய்து போகவேண்டுமென்று எண்ணங்கொண்டனர். இப்படி எண்ணங் கொள்ளுவதற்கு முன்னமே அப்புட்பகவிமானம் வலப்பிரதக்ஷணமாகஇலங்காநகரத்தினதுகிழக்கோபுரவாயிலிற்கு வந்தது. அப்போது சுவாமியார் அதிசயித்து ஸ்ரீசானகிபிராட்டியாரைப்பார்த்துச் சொல்லுகின்றார். ஹேசீதா! இங்கேதான் பிரகஸ்தனென்னு மிராக்ஷசப் படைத்தலைவன், நீலனென்னும் வானரப்படைத்தலைவனால் உயிர்மாய்ந்தான். சுபாரிசனென்பவன் மாண்டதும் இவ்விடமேயாம். அப்பால் மேற்றிசைவாயிலில் வந்தவிடத்து, இவ்விடத்தில் ராவணனனவன் சுக்கிரீவனால் தன் கிரீடத்திலிழைக்கப்பட்ட சிரோரத்தினங்களை யிழந்து என்னாற் கொலையுண்டானென்று சொல்லிக்கொண்டு வந்த ஸ்ரீராமச்சந்திர ராஜனவர் சேதுவைச் சமீபித்து, ஹேஜானகி! உன்னைப்பிரிந்து பலநாள் கழிந்தபிற்பாடு நான்சுக்கிரீவனோடு சிநேகஞ்செய்து உன்னைத் தேடும்படி அநுமானை அனுப்ப; அநுமான் உன்னைக்கண்டுவந்து தெரிவித்தபின் வானரசிரேஷ்டர்கள் கட்டியது இந்தச்சேதுவாகும். இந்தத் திருவணையினுடைய மகாத்துமியத்தைச் சொல்லப் பிரமாவினாலு முடியாது. இதன்பெருமையை எவ்வளவென்று சொல்லுவேன். ஹே மைதிலீ! பெற்ற தாய்தந்தையர்களுக்கும்—குருவுக்கும் - பெருங்குற்றத்தைச் செய்து, சுற்றத்தாரையு மழித்த பாதகர்களும் வந்து தரிசிப்பார்களேயானால் உடனே தேவர்களாவார்கள். இந்திரன் மலைகளைச் சிறகரிந்தகாலத்தில் ஓடிவந்தொளித்த மைநாக பர்வதமும், பார்த்தவர்களுடைய பாபங்களை ஒழிக்கின்ற கெந்தமாதன பர்வதமும், இங்கேயிருக்கின்றனபார். அவ்விரண்டு மலைகளும் இந்தச் சேதுவினுடைய சம்பந்தத்தால் பரிசுத்தம் அடைகின்றன.

நதிகளிலே சிறந்த கங்கை - யமுனை — கோதாவிரி - காளிந்தி - முதலிய நதிகள் யாவற்றிலு மூழ்கினாலல்லாமல் பாபங்கள் நீங்கமாட்டா. இந்தச் சேது அப்படியல்ல, தரிசனஞ்செய்த மாத்திரத்திலே எல்லாப் பாபங்களையு மொழித்துவிடும். பசுவையும்—ஆசாரியரையும்-முனிவர்களையும்—ஸ்திரீகளின் கூட்டத்தையும்-குழந்தைகளையும்-ஏதோ ஒருபயத்தால் அஞ்சிவந்து அடைக்கலம் புகுந்தவரையும்கொலைசெய்த மகாபாதகர்கள்வந்துஇச்சேதுவினிடம்வந்துஸ்நானஞ் செய்வார்களேயானால், அவர்கள் தங்கள்பாதகங்களையெல்லாந் தொலைத்து தேவர்கள் வணங்குகின்ற தேவர்களாகி விடுவார்கள். என்றுகூறி வந்த ஸ்ரீ சர்வசுவாமியானவர் அங்கு மரக்கலங்கள் தோணிகள் முதலானவைகள் உலாவவேண்டுமென்று திருவுளத்தி லெண்ணித் தமது திருக்கையிலுள்ள வீரகோதண்டத்தினது குதைநுனியால் கீறிவிட்டு, ஹே ஜனகமகா

ராஜ புத்திரியே! பஞ்சமா பாதகங்களைச் செய்தவர்களாயினும் இந்தத் திருவணைக்குச் சமீபத்தில் வருவார்களேயானால், இருபத்தொரு சனனமும் துக்கவியாதி யில்லாதவர்களாய் தேவர்கள் விரும்புகின்ற சங்கநிதி பதுமநிதிகளைப்போலச் சிரேஷ்டர்களாவார்கள். செந்தாமரைமலரில் வசிக்கின்ற ஸீதா! இந்தச் சேதுவைப்போலத் தான் ஆகவில்லையே யென்கிற துக்கத்தால் கங்கையானவள் உருத்திரபகவானுடைய நெற்றிக்கண்ணின் நெருப்புச்சூட்டையும் சகித்துக்கொண்டு அவருடைய சடைக்காட்டிலிருந்து தவஞ்செய்கின்றாளென்போமானால், இந்தத் திருவணையினுடைய மான்மியத்தை எப்படிச் சொல்லக்கூடும்?

என்று ஸ்ரீராமபிரானவர் சேதுவின் பெருமையாவுஞ் சொல்லிவிட்டு, ஹே வனிதாரத்தினமே! இங்கேதான் சமுத்திரராஜன் என்னுடைய பாணதீக்ஷ்ணியத்தைப் பொறுக்கமாட்டாமல் என்னைவந்து சரணம் புகுந்தான். இது அகஸ்தியர் வாசம்பண்ணும் பொதியமலை. இதுசேஷமலை. இப்படியென்று ஒவ்வோரிடங்களையும் அவ்வவ் விடங்களிலுள்ள விசேடங்களையுஞ் சொல்லிக்கொண்டு போம்போது சீதாபிராட்டியானவளவரை நோக்கி, சுவாமி! தேவரீருடைய தாசனாகிய அநுமானை எவ்விடத்திற் கண்டதென்று கேட்டனள். அதற்கு சுவாமியானவர் பிராட்டியாரைப் பார்த்து, ஹே வனிதா! இதோதோன்றுகின்ற கிட்கிந்தையென்னு மலையிற்றான் அந்த உத்தமனைக்கண்டது. சமுத்திரங்களை யெல்லாம் ஓரேபாய்ச்சலிற் பாயவல்ல வாலியென்னு மகாவீரனை அவன்செய்த அகிர்த்தியத்துக்குத் தண்டனையாகக் கொல்வித்து, தருமநூல்களைக் கற்றுணர்ந்து அதன்வழியே நடக்கின்ற மேலோர்களைப்போலு நல்லொழுக்கத்தையுடைய சூரியபுத்திரனாகிய சுக்கிரீவமகாராஜன் பட்டத்தைப்பெற்று வாழ்கின்ற இடமும் இதுதானென்று சொல்லியருளினர்.

### சீதாபிராட்டியார் வேண்டுகோளால் கிட்கிந்தையிலுள்ள வானரஸ்திரீகளையும் விமானத்தின்மீதேற்றிச் செல்லுதல்.

கவி.

கிட்கிந்தையிதுவேலைய கேட்டியாலெனதுபெண்மை
மட்குந்தாரையவெள்ள மகளிரின்றிவானோர்
உட்கும்போர்ச்சேனைசூழ வொருத்திபோயயோத்தியெய்தின்
கட்கொந்தார்குழலினரை யேற்றுதல்கடன்மைத்தென்றாள்.

இவ்வண்ணம் பிரான்சொல்லக்கேட்ட பிராட்டியானவர் சுவாமி அடியாளுக்கொரு விண்ணப்பமுளது. அதைத் தாம் அங்கீகரிக்கவேண்டியது. அஃதியாதெனின், சுவாமி! தேவர்களும் அஞ்சத்தக்க சேனைகள் சூழ்ந்துவர யானொருபெண் யாதொரு பெண்கள்கூட்ட மில்லாமல் அயோத்தியாநகரத்துக்கு வருவேனேயானால், என்னுடைய பெண்மையான்று பெருமைப்படாது. ஆதலால், இந்தக் கிட்கிந்தையிலிருந்து சிலஸ்திரீகளை எனக்குஉசாத்துணையாக



ஏற்றுதல் யுக்தமாகுமென்று சொன்னாள். அந்தச்சொல்லை ஸ்ரீராமபிரான் சுக்கிரீவருக்குச் சொல்லினர். அந்தமகாராஜாவானவர் சிறிய திருவடிகளைப்பார்த்து, நீர் சீக்கிரமாகப்போய் கிட்கிந்தையிலுள்ளஸ்திரீகளை இராஜதரிசனத்துக்குப்போகு முறைமை எப்படியோ? அந்த முறைமைப்படி கொண்டுவாருமென்று சொல்லினர். உடனே ஆஞ்சனேயரும் விமானத்தைவிட்டிழிந்து சென்று அங்குள்ள ஸ்திரீஜனங்களை அம்முறைமையாகக் கொண்டுவந்தார். அந்த வானரப்பெண்கள் யாவரும் விமானத்தின்மேலேறி, தங்களரசனாகிய சுக்கிரீவமகாராஜனையும் - ஸ்ரீசானகிபிராட்டியாரையும் - ஸ்ரீராமப்பிரபுவையும் - நமஸ்காரஞ்செய்து நின்றவர்களாகித் தாம் கிட்கிந்தையிலிருந்து கொண்டுவந்த சுமங்கலத்துக்குரிய பொருள்களைப் பிராட்டியார் பக்கலில்வைத்து முறையாக வணங்கிச் சமீபத்தில் உட்கார்ந்தார்கள். ஸ்ரீ சீதாபிராட்டியாரும் இனி யாதொருகுறைவு மில்லையென்று திருவுள மகிழ்ந்தனர். உடனே புட்பகவிமான மனோவேகமாகச் சென்றது.

அப்படிச் செல்லும்போது ஸ்ரீராகவபிரான் ஸ்ரீசீதாபிராட்டியைப் பார்த்து, ஹே சீதா! நமக்கெதிரே தோன்றுகிற நதியானது கோதாவிரி, அதற்குப் பக்கத்தில் தோன்றுகிற பர்வதத்திலேதான் நாமிருவரும் ஒருவரையொருவர் பிரிந்துதுன்பங்களையனுபவித்தது. ஓதேனுண்ணும்படி வண்டுகள்மொய்த்தொலிக்கின்ற மலர்மாலைசொருகிய கூந்தலையுடைய சானகி! பெருமையாகிய விரதங்களை யநுசரித்து உபாசனைசெய்பவர்களும், இயாகங்களைச் செய்பவர்களு மெக்காலமு மிடைவிடாதுவசிக்கின்ற தண்டகாரண்ணியமோ அதோ தோன்றுகிறது. இதோ தேவர்களிற் சிரேஷ்டனாகிய இந்திரனும் வணங்கத்தக்க சித்திரகூடம். இது பரத்துவாசரிஷியானவர் வாசம்பண்ணுகிற இடமென்று சொன்னார்.

### பாரத்துவாசமுனிவர் ஸ்ரீராமமூர்த்தியின்வருகைதெரிந்தெதிர்கொண்டழைத்துத் தமது பன்னகசாலைக் கழைத்தேகல்.

கவி.

மின்னைநோக்கிய வீரனீதியம்பிடும் வேலை
தன்னைநேரிலா முனிவரனுணர்ந்துதன் னகத்தின்
என்னையாளுடை நாயகனெய்தின னென்னாத்
துன்னுமாதவர் சூழ்தரவெதிர்கொள்வான் றொடர்ந்தார்.

மின்னல்போலும் தேககாந்தியையுடைய ஸ்ரீசானகிபிராட்டியாரை நோக்கி இராமநாதரானவர் இப்படிச் சொல்லிக்கொண்டு வரும்போது பரத்துவாச முனிசிரேஷ்டரானவர் ஸ்ரீராகவபிரான் வருகின்றாரென்றறிந்து; தன்னுடன் அநேகமுனிவர் கூட்டங்கள் சூழ்ந்துவரும்படியாக தன்தரியதவகோலத்தோடு எதிரேவருகின்றனர். அப்படியவர் வருவதையறிந்த பிரானனவர் புட்பகவிமானமானது பூமியில் தாழும்படி நினைத்தனர். நினைத்தமாத்திரத்தில் சுவர்க்கலோகமானது பூமியில்வந் திறங்கியதுபோலப் புட்பகவிமானமானது பூமியில்வந்து தங்கியது. உடனே என்னைஆளாக உடைய சுவாமியானவர்

விமானத்தைவிட்டிறங்கி விரைந்துசென்று, பரமவைதிகஸ்தராகிய பரத்துவாசமுனிவருடைய பாதங்களுக்குத் தண்டன்சமர்ப்பித்தனர். இப்படி தண்டன்சமர்ப்பித்த தாமரைக்கண்ணராகிய ஸ்ரீராகவபிரானை அம்முனிவர் வாரியெடுத்தணைத்து உச்சிமோந்து, சடைமுடியிலுள்ள தூசுகள் நீங்கும்படி ஆநந்தக்கண்ணீர் சொரிந்தனர். உடனே கறுத்த அளகபாரத்தையுடைய ஸ்ரீசானகிபிராட்டியாரும், ஸ்ரீராமாநுஜரும் தண்டன்சமர்ப்பித்துச் சமீபத்தில் நெருங்கினமாத்திரத்தில், அருமைபாகிய தவசிரேஷ்டரானவர் ஆசிர்வசனங்களைச்சொல்லிச் சந்தோஷகரமாகி யுண்ணுதற்குரிய அமுதத்தை எதிர்வரக் கண்டாற்போல அவர்களைக்கண்டு மனங்குதூகலித்து ஆனந்தக்கண்ணீர் பெருக்கினர்.

அதன்பின்பு சுக்கிரீவ மகாராஜனும் – விபீஷணாழ்வாரும் – ஆஞ்சநேயரும் - சாம்பவரும் - மற்றவானரர்களும் - தம்மை வணங்குந்தோறும் ஆசிர்வதித்து, ஞானநாயகனைப் பிராட்டியாரோடு முனிவர்கூட்டங்கள்சூழ்ந்து வேதகோஷஞ்செய்துவரத் தம்முடைய ஆச்சிரமத்துக்குள்ளே அழைத்துச் சென்று, சூரியவமிசகுல திலகராகிய ஸ்ரீராமபத்திரர்முதலிய யாவருக்கும் செய்யவேண்டிய மரியாதைகள் யாவுஞ்செய்து ஆநந்தக்கண்ணீர் பெருக சுவாமியினுடைய திவ்விய மங்களகரவடிவழகைச் சேவித்துப் பலமுறைபுகழ்ந்து ஸ்ரீராமா இன்றைக்குமாத்திரம் தாம் இச்சேனைகளோ டிருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டனர். பிறகு வேதங்களின் பரமார்த்தத்தை நன்குணர்ந்த பரத்துவாசரானவர் ஸ்ரீரகுநாயகரைப் பார்த்து மேலுஞ்சொல்லுகிறார்.

ஓ எங்கள்குலதெய்வமே ! ஸ்ரீஜானகிரமணா! உண்மையை யுடைய தேவர்களது துன்பத்தைவீரகோதண்டத்தை வளைத்தொழித்துச் சர்வலோகங்களையுங்காக்கின்ற செந்தாமரைமலர்போன்ற கண்களையும், மரகதரத்தினம்போன்ற திருமேனியையுமுடைய தினபந்துவே! ஸ்ரீபரதாழ்வானுடைய நிலையைச் சற்றுச்சொல்லுகிறேன் கேட்டருள வேண்டும். ஸ்ரீதசரதாத்மஜனே ! நீ தென்றிசையைச் சென்றபின் உன்னுடைய பிரிவால் ஸ்ரீ பரதாழ்வான் தேகம் வெயர்த்தும், துன்பக்கண்ணீர் சொரிந்தும், நல்வினைதீவினைகளோடு ஸ்ரீபகவத் தாசர்களுக்குச்செய்யும் வைதிககைங்கரியத்தையும் வெறுத்தும், சித்தப்பிரமையடைந்தும், மறந்தொருவேளை உலகத்தைப் பார்ப்பதாயிருந்தால் தென்றிசையை யல்லாமல் மற்ற திசைகளைப்பாராமலும், பயமும் துக்கமும் ஓருருவுகொண்ட தென்னும்படியாய்த் தோன்றியும் இருக்கிறான்.

இம்மட்டுத்தானோ? இந்திரியங்களை நிக்கிரகித்து கனிகாய்களை ஆகாரமாகப்புசித்தும், காடுகளிற்சென்று குதிரைகளுக்காகக் கொண்டுவந்த புல்லைப்பரப்பி அதன்மேற் படுத்தும், அயோத்திமா நகரத்துக்குள் பிரவேசியாமல் நந்திக்கிராமத்தில் வாசஞ்செய்துகொண்டு உன்னுடைய திருநாமத்தை மறவாமல் இரவும் பகலும் வாயாற்சொல்லிக்கொண்டு மிருக்கிறான். என்னப்பனே ஸ்ரீராமபத்திரா! இராக்ஷசகுலநாயகனுடைய இருபது நீலகுலாசலங்களையொத்த தோள்களையும், பத்துச் சூரியர்களையொத்த முடிகளணிந்த தலைகளையும், துண்டித்துத்தள்ளிய வீரநாயகா! இதுவரையு நாங்கள் உன்னைப்பிரிந்ததுமுண்டோ? உன்னுடைய பராக்கிரமாதிசய லீலைகளையும், உன் பக்தகோடிகளுடைய இருப்பையும், ஸர்வஞானதிருஷ்டியால் அறிந்துகொண் டிருக்கிறோம். அம்மாத்திரமேயல்லாமல் உன்னை எங்களுடைய இருதயகமலத்தில் சாக்ஷாத்கரித்துக்கொண்டு நித்தியானந்த அநுபவஞ்செய்துகொண்டிருக்கிற நாங்கள் உன்னை எவ்விதத்தில் பிரிந்தவர்களாவோம்? ஆதலால் உன்னை நாங்கள் எப்போதும் பிரிந்தவர்களல்லோமென்று கூறினர்.



அந்தப் பாரத்துவாச முனிவரைத் தம்முடைய அவதாரத்துக்குத் தக்கபடி நடிக்கின்ற இராகவபிரானானவர் மகாசந்தோஷத்தோடும் பார்த்து, ஸ்ரீசங்கரபகவானும் நான்முகக்கடவுளுமே புகழ்தற்குத்தகுந்த மாதவசிரேஷ்டரே! உம்மைவணங்கி உம்முடைய கிருபைக்குப் பாத்திரவானாகி உயர்ந்தேன். அதுகாரணத்தால் எனக்குச் சமானமான புருஷன் நானேயல்லாமல் ஒருவருமில்லையென்று சொல்லினர். பின்பு ஸ்ரீபாரத்துவாச முனிவரானவர் ஸ்ரீராமபத்திரரைக் கருணையாகப்பார்த்து, ஸ்ரீராமநாதா! உனக்கு என்னவரம் என்னாற்பெற்றுக்கொள்ள வேண்டுமோ அந்தவரத்தை என்னைக் கேட்பாயாகவென்றார். அதுகேட்டருளிய ஸ்ரீராமசுவாமியானவர் அவரைத் தொழுதெழுந்து, இந்தவானரர்கள் தாங்கள் இஷ்டப்பட்டுச் சென்றகாடுகளி லெல்லா மழைகாலத்திற் செழித்து உண்டாகுவதுபோலக் காய்கனிகளும் - கிழங்குகளும் – தேனும் - மதுரமாகிய நீரு நிறைந்திருக்கவும், அவர்கள் சுகசீவிகளாயிருக்கவும் வரத்தைத் தயைசெய்ய வேண்டுமென்று கேட்டருளினார். அந்த முனிவரும் அப்படியே ஆகக்கடவதென்று ஆசீர்வதித்தனர்.

### பாரத்துவாசமாமுனிவர் ஸ்ரீராமனதியர்க்கு விருந்து செய்தல்.

கவி.

அருந்தவனனையநின் றொட்டினிகவெஞ்சேனைக்கெல்லாம்
விருந்தினி யமைப்பேனென்று விளங்குமுத்தீயினுப்பண்
புரந்தொரு குதியையீந்து புறப்படுமளவிற்போகம்
திருந்தியவானாடு சேரவந்திறுத்ததன்றே.

பிறகு பாரத்துவாசமுனிவர் ஸ்ரீராமபிரானைப் பார்த்து, எங்கள் ஐயனே ஸ்ரீரகுராமா! உனக்கும் உன்னுடைய சேனைகளுக்கும் விருந்துசெய்கிறேனென்று கூறி, ஆகவனீயம் - தட்சணாக்கினியம் – காருகபத்தியம் என்னு மூன்றுதீயா லமைத்த யாகத்தில் வேதமந்திரங்களைச் சொல்லி அவிர்ப்பாகஞ் சொரிந்தார். இப்படி ஆகுதிசெய்த மாத்திரத்தில் யாதொரு குறைவுமில்லாமல் சுவர்க்க லோகத்திலுள்ள எல்லாவளப்பங்களும் ஒருமிக்கவந்து அங்கே இறங்கின. ஸ்ரீராகவபிரான் அரசர்முதல் அடியார்கள் வரைக்கும் ஒரு பேதமுமில்லாமல் அபரிமிதமாக அந்த வளப்பங்களை அநுபவிக்கக்கண்டு, பிற்பாடு தாம் அறுசுவையுள்ள உண்டியை அமுதுசெய்யப் போகும்போது அநுமானை அழைத்துச் சொல்லுகின்றனர்.

## ஸ்ரீராமபிரான் அயோத்திக்குச் சென்று பரதாழ்வானுக்குத் தமது க்ஷேமத்தை அறிவித்துவரக்கடவாயென் றுக்கியாபித்து மோதிரந்தந் தனுப்புதல்.

கவி.

இன்று நம்பதி வருது முன்மாருதி யீண்டச்
சென்று நீதிண்மை செப்பியத்தீயவித் திளையோன்
நின்றசீர்மையு நினைவுநீதேர்ந்தெம்பி னேர்தல்
நன்றெனுமவன் மோதிரங்கைக்கொடு நடந்தான்.

ஓ அநுமானே! நாம் அயோத்திக்கு வருவதற்கு முன்பாக நீ சென்று ஸ்ரீ பரதாழ்வானைக்கண்டு எம்முடைய க்ஷேமத்தைத் தெரிவித்து, அந்தப்பரதன் தான்விழுந்திறக்கும்படித் தீமூட்டி யிருப்பான். அதை அவித்துவிட்டு அவனுடைய எண்ணத்தையும் அவனிருப்பையு நீ அறிந்துகொண்டு எம்மிடம்வந்து சேரவேண்டுமென்று சொல்லித் தமதுவிரலாழியையுங் கொடுத்தனுப்பினர். உடனே அஞ்சனாதேவி புத்திரர் தம்முடைய பிதாவினுடைய வேகமும் - இராமசுவாமியினது பாணவேகமும் - மனோவேகமும் பின்னிடும்படிச்சென்று, கங்கையின் கரையிலுள்ள குகப்பெருமானுக்கு ஸ்ரீ ராமபத்திரருடைய வருகையையும் அவரெழுந்தருளி யிருக்கும் ஆச்சிரமத்தையும் தெரிவித்து ஆகாயமார்க்கமாகச் சென்றார். அநந்தகலியாணகுணநிலயராகிய ஸ்ரீராகவபிரான் தெற்குத்திக்கை நோக்கிச்சென்ற செய்திகள் யாவற்றையும் சொன்னோம். எம்பெருமானானவர் அக்காலத்தில் நான்பதினான்குவருஷ மானவுடன் அயோத்தியாநகரத்துக்குத் திரும்பி வருகிறேனென்று சொன்னதை விசுவசித்திருந்த ஸ்ரீ பரதாழ்வானுடைய நிலைமை இனி யெடுத்துச் சொல்லுவோம்.

## நந்திக்கிராமத்திலுள்ள பரதாழ்வானது நிலைமையின்னதெனல்.

கவி.

நந்தியின்பதி யின்றலைநாடொறும், சந்தியின்றி நிரந்தரந்தம்முனோன்
பந்தியங்கழற் பாதமருச்சியா, இந்தியங்களை வென்றிருந்தானரோ.

ஸ்ரீ சர்வேசுரனாகிய ஸ்ரீராகவபிரான் ஆரண்ணியத்துக் கெழுந்தருளும்போது சித்திரகூடத் தன்னைவந்து கண்டுபோன ஸ்ரீ பரதாழ்வானானவர் தமக்கு அந்தச் சுவாமியானவர் அருளிய திருப்பாதுகையை நந்திக்கிராமத்தில் சிங்காதனத்தின்மேல் எழுந்தருளச் செய்தும், பின்பு ஸ்ரீசத்துருக்காழ்வானை நோக்கி, ஹே சத்துருக்னா! நீ ஒரு வேலாளியைப்போலிருந்துகொண்டு அயோத்தியா நகரத்திலுள்ள அந்தணர் முதலியவருணத்தார் துன்பப்படாதவண்ணம் காத்திருவென்று ஆக்கியாபித்து, தாம் அங்கே ஒருவரோடும் வார்த்தையாடாமல் இந்திரியங்களை நிக்கிரகித்துவிட்டு வேறொரு தெய்வசிந்தனையிலாது தமது தமையனாருடைய திருப்பாதுகைகளைத் தியானித்து அர்ச்சனை செய்து கொண்டும், பிரிவென்கிற துக்கத்தினால் உடல்மெலிந்து எலும்புருவாய்நின்று அவரைப்பார்ப்போர் அன்பென்பது ஒருருவங்கொண்டதுபோலத் தோன்றுகின்றாரென்னும்படியாகக் காணப்பட்டும், ஸ்ரீ சுவாமியானவர் ஆரணியத்துக்குச் சென்றதை நினைக்கும்போதெல்லாம் கண்களில் நீர்பெருகிக்கொண்டும், காய்கனிகிழங்குகளை யல்லாமல் மற்றொன்றையும் புசியாமலும், ஸ்ரீராமபிரான் நம்மையாட்கொள்ளும்படி வருகிறதிசை இதுவன்றோ வென்று தென்றிசையையே நோக்கிக்கொண்டு உயிர்போவதும்வருவதுமாகிய மகாதுக்கத்தை அநுபவித்தும், என்னுயிர்க்கும் உயிராகிய ஸ்ரீரகுநாயகன் திருமுடிசூட்டியபி னல்லாமல் என்துன்ப மொழியமாட்டாதென்று தமக்குள் நினைத்துக்கொண்டு மிருந்தனர்.



இப்படிப்பட்ட துக்காக்கிராந்தரா யிருக்கின்ற ஸ்ரீ பரதாழ்வானானவர் ஒருநாள் திருப்பாதுகைகளை அர்ச்சிக்குங்காலத்தில் ஸ்ரீராமபத்திரரானவர் அயோத்திக்குத் திரும்பிவருகிறேனென்று சொல்லிய திருவாக்கை நினைத்து, அந்தநாள் என்றைக்கோவென்று சோதிஷசாஸ்திரிகளை வரவழைத்துக் கேட்டபோது அவர்களும் இன்றைக்குத்தானென்று சொன்னார்கள். அந்தச் சொல்லைக் கேட்டமாத்திரத்தில் ஸ்ரீரகுநாயகர் திரும்பிவருகிறேனென்ற சொல்லை நினைத்துக்கொண்டு, கொலையுண்டவர்களைப்போலச் சுவாசம் அடங்கிப் பூமியில் வீழ்ந்து மறுபடியும் எழுந்து செந்தாமரைமலரைவென்ற கண்களில் தாரைதாரையாக நீர்சொரிந்து, உடலினின்றும் பிராணன் போவதும் வருவதுமாய் ஊஞ்சலாட அதிகமரணாவஸ்தை யடைந்து அங்கிருந்த முனிவர் முதலானவர்களைப் பார்த்து, ஓ முனிவர்களே! பொய்சொல்ல வறியாத எங்களருந்தெய்வமாகிய ஸ்ரீராமநாதர் எனக்குச் சொல்லிவிட்டுப்போன நாட்கெடுவையும் - நான்படுகிற துன்பத்தையும் - எங்கள் தாயாகிய கௌசலா தேவியினுடைய அன்பையும் சகித்துக்கொண்டு வனத்திலேயே வாசஞ்செய்யமாட்டார். இயான்செய்த பாபகர்மபலனால் ஏதோ ஒருபகை அவ்விடத்திலும் சம்பவித்திருக்கும் அதனால்தான்வரவில்லையென்று தேம்பித்தேம்பி யழுவார்.

ஆ! ஆ! எங்களுடைய சிரசிகாமணியாகிய ஸ்ரீ கோதண்டபாணிக்கெதிரே திரிமூர்த்திகளாயினும், சுவர்க்க மத்திய பாதாளங்களிலுள்ள எவர்களாயினும், ஆயுதமெடுத்து வந்து பிராணபீதியில்லாமல் நிற்பார்களோ? அவ்வளவு சத்திமான்களல்லர்களே என்று தாம்கொண்ட சந்தேகத்தை நிவர்த்திப்பார். நமது தம்பியாகிய பரதனென்பவன் இராச்சியாதிகாரத்தில் இப்போது இச்சையுடையவனா யிருப்பான். அப்படி இச்சையிருக்கிற பட்சத்தில் அந்தராச்சியபட்டாபிஷேகத்தை அவனேஅடையட்டும். நமக்குவேண்டியதில்லை. இந்தக் காட்டிலிருந்துகொண்டு தவஞ்செய்வதே நல்ல உத்தமபலனென்று தமக்குள் ஆலோசித்துக்கொண்டு வனத்திலேயே இருந்துவிட்டாரோவென்று மூர்ச்சையடைவார். நான் பிராணனை மாய்த்துக்கொள்வதினால் இங்குள்ள குடும்பத்தார் யாவரும் உயிரைமாய்த்துக் கொள்ளுவார்கள். அப்படி என்குடும்பத்தை நான் கொலைசெய்பவனானும் ஆகக்கடவேன்.

அந்த ஸ்ரீராகவபிரானானவர் வனத்திலேயே வாசஞ்செய்தாலும் செய்யட்டும். அல்லது அயோத்தியாபுரிக்கு வந்து அரசுசெய்தாலும் செய்யட்டும். எங்களாண்டவர் வருவார் வருவாரென்று நினைத்து இந்தத்துக்கத்தில் வருந்தமாட்டேன். என்னுயிரோடு என்துக்கத்தைப் போக்கடிப்பேனென்றார்.

இப்படிப் பலபலவிதமாகச் சொல்லிய ஸ்ரீபரதாழ்வானானவர் ஸ்ரீசத்துருக்கனை என்னிடம் வரச்சொல்லுங்களென்று தூதரை அனுப்பினார். அந்தத் தூதர்கள்போய்ச் சொன்னமாத்திரத்தில் ஸ்ரீசத்துருக்காழ்வானானவர் விரைந்துவந்து தமது தமையனாருடையசீர்பாதங்களை வணங்கினார். அன்புடன்வணங்கிய திருத்தம்பியாரைப் பரதரானவர் கண்ணீரொழுகி வடிகின்ற தமது மார்பி லிறுகத்தழுவி, ஓ என்னையனே சத்துருக்கா! இப்போது நான் உன்னிடத்திற் கேட்டுக்கொள்ளும் வரமோ ஒருகுற்றமுமில்லாதது. ஆகையால் நீயும் சம்மதித்துக் கொடுக்கவேண்டியதே: அந்தவரம் என்னவென்று கேட்பாயாகில், நம்முடைய தெய்வநாயகனாகிய ஸ்ரீராகவப் பெருமானானவர் முன்னே தாம் திருவாய் மலர்ந்தருளிச்சொல்லிப் போனநாள் இன்றோடுமுடிவாகும். இத்தினத்தில்எழுந்தருளாமையால் இனித்தீயைமூட்டி அதிற்குதித்து இறந்துவிடுகிறேன். அயோத்தியா நகரத்திலுள்ளவர்கள் வருந்தாதபடி நீ இராஜ்யபட்டாபிஷேகனாகி அரசுசெய்யக்கடவாய். இதுதான் வேறொன்றுமல்ல. இதைத் தடுக்காதேயென்று கேட்டுக்கொண்டார். ஸ்ரீ பரதாழ்வானானவர் இந்தச்சொல்லைச் சொன்னமாத்திரத்தில் ஸ்ரீ சத்துருக்னப்பெருமான் தமதுகைகளால் இரண்டுகாதுகளையு மூடிக்கொண்டு திடுக்கிட்டு, கண்களு மனமு நடுநடுங்கி, விஷத்தையுண்டவரைப்போல அதிவேதனைப்பட்டுச் சோர்ந்துவிழுந்து புலம்பிக்கதறிப் பெருமூச்செறிந்து, மறுபடியுமெழுந்து மனங்கொதித்துப்பரதாழ்வானைப் பார்த்துச்சொல்லுகிறார்.

கவி.

கானுளிலமகனைக் கைவிட்டுப்போவானைக் காத்தும்பின்பு
போனானுமொருதம்பி போனவர்கள்வருமவதி போயிற்றென்று
வானுதவுயிர்விடவென் றமைவானுமொருதம்பி யயலேநானு
தியானுமிவ்வரசாள்வெ னென்னேயிவ்வரசாட்சி யினிதேயம்மா.

இராகவபிரானெழுந்தருள வில்லையென்று கவலைகொண்ட என்னையனே! அடியேன் தேவரீர் விஷயத்தில் என்ன அபசாரப்பட்டேன்? ஒருதம்பியானவர் திருவயோத்தியா புரியென்னும் பூமகளைக் கைவிட்டுக் காட்டையாளும்படியாகச் சென்ற தன் தமையனாருக்கு வேண்டிய கைங்கரியத்தைக் குறைவின்றிச் செய்யப்போனார். காட்டிற்குச் சென்ற தமையனானவர் இன்னநாளில் வருகிறேனென்று சொல்லிப்போன தவணை தப்பிப்போச்சென்று ஒரு தம்பியானவர் தம்முடைய உயிரைமாய்த்துக் கொள்ள யத்தனப்படுகிறார். இவற்றையெல்லாமெண்ணி நான்றுகொண்டு பிராணனை விடாமல் நான்தானோ அயோத்தியாபுரியை அரசாள விருக்கின்றேன்? ஆ! ஆ! என்னு



டைய யோக்கியதை நன்றாயிருக்கின்றது: இதென்ன ஆச்சரியம்? என்னையனே! ஸ்ரீராகவரானவர் காட்டுக் கெழுந்தருளிய பின்பரதமகாராஜர் நகரத்துக்குள் பிரவேசித்து வாழ்ந்துகொண் டிருந்தாரென்று உலகத்தார்சொல்லவொட்டாமல் நீர் அயோத்திக்குப் புறம்பிலேயே யிருந்து இந்த அரியதவத்தைச் செய்துகொண்டிருந்தீர். உமக்குப்பின் பிறந்தவனாய் இந்தச் சத்துருக்கனென்கிற ஒரு அடியானிருந்த போதிலும் இப்படிப்பட்ட சொல்லைச் சொல்லலாமோ? தேவரீர் தீயிற்குதித்துப் பிராணனை மாய்த்துக்கொண்ட பிறகு நான் உயிரோடிருந்தேனாகில் அதுவும், அங்கால் ஒருகுடையின்கீழ் இந்தப் பூமண்டலங்களை ஆளுவேனாகில் அதுவும், ஒன்றுக்கொன்று சமானமானதே யல்லாமல் வேறன்றேயென்றுசொன்னார்.

இப்படிச்சொல்லி முறையிட்ட ஸ்ரீசத்துருக்காழ்வானைப் பரதாழ்வானானவர் நோக்கி, ஆதம்பி! சத்துருக்னா! நம்முடைய பெருமானானவர் இதுபரியந்தம் வாராமல் தாமசித்திருக்கிறார். இங்கேநாமும் அப்படியே சர்வசித்தமா யிருக்கிறோம். நாமிறந்து விட்டால் இந்தப்பூமி அரசனில்லாமல் அலைந்துபோமல்லவா? அதையந்தக் காருண்ணிய மூர்த்தியார் கேள்விப்பட்டு ஆரண்ணியத்திலேயே இருக்கமாட்டார். உடனே வந்து இவ்வரசாட்சியை ஏற்றுக்கொள்ளுவார். அவரிப்போதுசெய்கிற மாறுபாடு நிலைபெறாது. ஆகையால், என்னப்பனே! சீக்கிரமாகச் சென்று அக்கினியை மூட்டக்கடவாயென்று ஆக்ஞாபித்தார்.

## பரதாழ்வான் அக்கினியிற்பிரவேசிப்பேனென்பதை யறிந்த கௌசல்யா தேவியாரங்குவந்து வருந்துதல்.

கவி.

அப்பொழுதினிவ்வுரைசென் றயோத்தியினினிசைத்தலுமே யரியையீன்ற
ஒப்பெழுதவொண்ணாத கற்புடையாள்வயிறுபுடைத் தலமந்தேங்கி
இப்பொழுதேயுலகிறக்கும் யாக்கையினைமுடித்தொழிந்தான் மகனேயென்று
வெப்பெழுதிணலன்ன மெலிவுடையாள்கடிதோடி விலக்கவந்தாள்.

அப்போதிந்தச் செய்தியை அங்குள்ளவர்கள் அயோத்தியா நகரத்திற் சொன்னவுடனே ஸ்ரீபரதாமனைப்பெற்ற கற்பிற் சமானமில்லாத ஸ்ரீகௌசல்யாதேவியார் வயிற்றிலேமோதி அடித்துக்கொண்டு புத்திரப்பிரமை யடைந்தழுது, ஐயோ! என்மகனே! நீ இறப்பாயேயானால் உடனேயிந்த அயோத்தியிலுள்ள ஜனங்கள்யாவரும் இறந்துபோவதற்குச் சந்தேகமில்லையே; என்று துக்கமேஉருக்கொண்டு நடந்ததுபோலவிரைந்தோடி ஸ்ரீ பரதாழ்வானை விலக்கும்படிசென்றார். மற்ற மந்திரிமார்களும், சேனாநாயகர்களும், பிராமணர்களும், எல்லாஸ்திரீகளும், அந்நகரத்திலுள்ள யாவரும், கைகளைத் தங்கள்தலைமேல்வைத்து வாய்விட்டுக்கதறிக்கொண்டு சூழ்ந்துசென்றார்கள்.

அங்கே இந்திரன் முதலாகிய தேவர்களும் – அவர்களுடைய தேவிமார்களும் - முனிவர்களும்-ஸ்ரீபரதாழ்வானுடையஇருப்பைநோக்கிஸ்துதிசெய்ய,

விரைந்துசென்று ஸ்ரீகௌசல்யாதேவியானவர் தம்முடைய கூந்தலானது அவிழ்ந்தலையவும் - தேகந்தடுமாறவும் - கண்கள் நீர் சொரியவும் திடுக்கிட்டு, உருத்திர பூமியில் சித்தப்படுத்தியிருக்கிற நெருப்பில் விழப்போகின்ற தமது திருக்குமாரனைப் போகக்கூடாதென்று தடுத்து நடுவிற்போய் நின்றார். அப்படிநின்ற திருத்தாயாருடைய சரண கமலங்களுக்கு ஸ்ரீ பரதாழ்வானானவர் தண்டன் சமர்ப்பித்தனர். தண்டன்சமர்ப்பித்த குமாரனை ஸ்ரீகௌசல்யாதேவியானவர் வாரியெடுத்து, உறுதியாக வணைத்துப்பிடித்துக் கொண்டு சொல்லுகிறார். அப்பா பரதா! சக்கரவர்த்தியார் நம்மைவிட்டுப் பிரிந்து மரணத்தை யடைந்ததும், ஜேஷ்டபுத்திரனாகிய ஸ்ரீராமன் நாம்படுகிற துன்பமொன்றையுங் கவனியாமல் காட்டுக்குச்சென்றதும், முன்னே நாம்செய்த தீவினைப்பயனாகும். பதினான்குவருஷம் கழிந்தபின் வருகிறேனென்று சொல்லிப்போய் அந்த ஸ்ரீராகவன் இன்னம் வராமலிருப்பதும், நாம்செய்த பாபகர்மபலந்தான். நீ அதை நினைத்துக்கொண்டு இப்படிச்செய்யத் தலைப்பட்டாய். நீ தீயிற்குதிக்க நினைப்பாயேயானால் இந்தக்கோசலதேச முழுமையுமுள்ள அரசர்களும், சதுரங்கசேனைகளும், அக்கினிப் பிரவேசஞ்செய்வார்கள். நானும் சுமித்திராதேவியும், அந்தக்கைகேசியல்ல. நாங்களும்நெருப்பில் மூழ்குவோம். இவ்வளவிலே போகுமோ? தருமதேவதையும் தீயிற்குதித்து மாய்ந்துவிடும். உலகங்களும் தங்கள் நிலைகுலைந்து போகும்.

ஓ என்னருங் குழந்தையே! என் அப்பா! ஸ்ரீபரதா! மநுஸ்மிருதியிற் சொல்லப்பட்ட சத்கருமங்கள் யாவும் உன்னுடைய ஒழுக்கமேயென்று நாங்கள் நினைத்திருக்கிறோம். உன்னுடைய அருமையைச் சிறிது நீ அறிந்துகொள்ளவில்லை. உன்னுடைய பெருங்கீர்த்தியானது ஊழிகாலமழிந்துபோயினும் அழியுமோ? அநேக ஸ்ரீராமர்களானபோதிலும் உன்னுடைய கருணையை யோசித்துப் பார்த்தால் உனக்குச் சமானமாவார்களோ? இவ்வுலகஞ்செய்த புண்ணியமாகிய உன்னுடைய உயிர்போகுமேயானால் தேவர்களாயினும் இந்த மனுஷர்களாயினும் உயிரோடிருப்பார்களோ? அந்த ஸ்ரீராமபத்திரன் இன்றைக்கு வராமற்போனால் நாளையாவது வருவான். உனக்குச் சொன்னசொல்லைத் தவறிப்போவானென்று நினைக்கவேண்டாம். நாளைக்கும் வராமல் தப்பிப்போவானேயானால் நாமெல்லோரு மரணமடைவது திண்ணந்தான். தருமசொரூபி நீயேயல்லாமல் வேறில்லை யென்னும்படியா யிருக்கின்ற ஸ்ரீபரதா! ஒப்பற்றபரதன் இறந்துபோனானென்று துக்கித்து நெடுநாள்வாழ விருக்கிற உயிர்கள்யாவும் இறக்கும்படிசெய்யப் போகிறாயோ? அப்படிச் செய்யாதே: இறத்தலும் - சிலர் விட்டுப்பிரிதலும் — ஒன்றின்மேற் கொண்ட மோகத்தினாலே பிறத்தலும் - சேதனர்களுக்குக் கடமையென்றுணர்ந்து, இந்த லோகபந்தத்தினின்று நீங்குதல் - அல்லது யானெனதென்னும் இருவகைப்பற்றையும் துறத்தல் — இவைதான் ஒரு புருஷனுக்குத் திடமென்று சொல்லப்படுவதென்று சொன்னார்.



இந்தப்பிரகாரம் நீதிகளை யெடுத்துச்சொன்ன ஸ்ரீ கௌசல்யாதேவியைப் பார்த்து ஸ்ரீ பரதாழ்வானானவர் சொல்லுகிறார். அம்மா என் தெய்வமே! புத்திரனானவன் சொல்லைத் தடுத்துவிட்டானென்று என்மேலு நிஷ்டூரங்கொள்ளாதேயும். இயான் முன்னே செய்துகொண்ட சபதம் தவறுவேனேயானால், நம்முடைய சூரியவமிசத்தாருடைய நல்லொழுக்கத்துக்குக் குற்றநேரிடுமல்லவா? அப்படி நம்முடைய குலதர்மமானது அழியும்படியாக என்பிராணனை விரும்பி வாழமாட்டேன். முன்னேயான் செய்துகொண்ட சபதத்தையே செய்துமுடிப்பேன். தாம் சொன்னசொல் தப்பிப்போகாமல் யதார்த்தத்துக்குத் தம்முடைய உயிரைக்கொடுத்து ஸ்ரீ விஷ்ணுலோகத்தை யடைந்த சக்கரவர்த்தியாருக்கு நானும் புத்திரன்தானே: அப்படியிருக்க நான்சொன்னசொல்லைத் தவறிப்போகலாமோ? மூத்தோர்சொன்ன சொல்லின்படித் தாம்சங்கற்பித்துக்கொண்டது பிசகாமல் நடப்பது ஸ்ரீகாகுஸ்தராகிய ஸ்ரீராமபிரானுக்கு மாத்திரந்தானா கடமை? மற்றப் புத்திரர்கள் அப்படிநடப்பது நீதியல்லவோ? ஸ்ரீ சக்கரவர்த்தியாருடைய ஜேஷ்டபாரியாகிய என்தாயே! தாயினுடைய சொல்லின்படி நடத்தலும், பிதாவினுடைய வாக்கின்படி நிறைவேற்றலும், தாய்மார்தம்பிமார்களிடத்து வைக்கவேண்டிய அன்பைப் பற்றில்லாமல் ஒழித்தலும், சர்வசுவாமியாகிய ஸ்ரீராமபிரானுக்கேகடமை. நானோ அப்படியொன்றும் செய்யவில்லை. நான் இன்னதுசெய்வேனென்று ஆதியிற் சொல்லிக்கொண்ட சொல்லை இந்தத்தீயில்விழுந்து மாண்டு காட்டுவேனேயானால் ஒருகுற்றமும் இல்லாதவனாவேன்.

## பரதாழ்வான் கௌசல்யாதேவியின் கருத்திற்கிசையாது அக்கினியிற் பிரவேசிப்பதே கடமையென்று அக்கினியைப்பூசைசெய்யும்போது, வந்தார் வந்தார் ஸ்ரீராமரென்று சொல்லிக்கொண்டு ஆஞ்சநேயர் அங்கு வந்து பரதாழ்வானைத்தடுத்து கணையாழியைத்தந்து மகிழ்வித்தல்.

கவி.

*என்றுதீயினை யெய்தியிரைத்தெழுந், தொன்றுபூச விடுமுலகோரொடு*
*நின்றுபூசனை செய்கின்றநேசற்குக், குன்றுபோனெடு மாருதிகூடினான்.*

*அய்யன்வந்தன னாரியன்வந்தனன், மெய்யின்மெய்யனை னின்னுயிர்வீடினல்*
*உய்யுமேயவ னென்றுரைத்துட்புகாக், கையினாலெரி யைக்கரியாக்கினான்.*

என்று சொல்லிவிட்டு மூட்டியிருக்கிற நெருப்புக்குச் சமீபத்திற்போய், அயோத்தியாபுரி ஜனங்களு மற்றவர்களும் கோவென்று முறையிட்டழுது கொண்டு பின்தொடரத் தாமந்த அக்கினிக்கெதிரே நின்று, ஸ்ரீராமருடைய திருவடிகளைத் தியானித்துப் பூசைசெய்கிற ஸ்ரீ பரதாழ்வானுக் கெதிரே ஸ்ரீ அநுமானானவர் பிராமணப் பிரமசாரியைப் போலவந்து, நம்முடைய ஐயனானவர் இதோவந்தார். இயாவரும் பூசிக்கப்பட்ட ஸ்ரீராகவபிரானானவர் இதோவந்தார். உண்மைக்கும் உண்மையாய்நின்ற உம்முடைய உயிர்நீங்கினால் அந்த ஸ்ரீராமப்பிரபுவானவர் உயிரோடும் இருப்பாரோ? என்று ஓயாமற்

சொல்லிக்கொண்டு வந்து அந்தச் சனநெருக்கங்களுக்குள் பிரவேசித்து, எரிகின்ற நெருப்பைத் தமது கையினால் அவித்துக் கரியாக்கிவிட்டார். இவ்வாறு தீயைக் கரியாக்கிவிட்ட வாயுபுத்திரரானவர் ஸ்ரீ பரதாழ்வானுடைய சீர்பாதங்களை நமஸ்கரித்தெழுந்து வாயைக் கையாற்பொத்தி வணங்கி நின்று, ஸ்ரீ பரதமகாராஜரே! நீர் அங்கீகரிக்கத்தக்கது ஒருசொல்லுண்டு அதைக் கேட்பீராக, முன்னாலே ஸ்ரீராமச்சந்திரரானவர் தாம் வருகிறதாகச் சொல்லிப்போனநாள் முடியவில்லை. இன்னம் நாற்பதுநாழிகையிருக்கிறது, அப்படியில்லாமற்போனால் உமக்கு முன்னேதானே நான் நெருப்பைமூட்டிப் பிராணனை மாய்த்துக் கொள்ளுகிறேன். இன்றிராத்திரியுங் கழிந்து நாளை உதயம்வரையில் அடியேன்சொல்லை நம்பியிரும். என்சொல் தவறிப்போகுமேயானால் நீரும் இந்தச்சனங்களும் பிராணனை மாய்த்துக் கொள்ளுங்கள். நம்முடைய நாயகருக்குப் பரத்துவாசமுனிவர் விருந்துசெய்யும்படி வேண்டிக்கொண்டு அவரையங்கே நிறுத்திவிட்டனர். அல்லாமற்போனால் உம்மிடத்தில் வராமற் காலாதீதமும் செய்வாரோ? இன்னமொன்று அடியேன் சொல்லக்கேளும். நீ யாதொரு குற்றமுமில்லாத பரிசுத்த இருதயத்தையுடைய ஸ்ரீ பரதமகாராஜரே! தேவதேவர்களுக்கு நாயகனாகிய ஸ்ரீராகவபிரானானவர் அதிகிருபையோடு கொடுத்த பெரியவடையாளம் ஒன்றுண்டு, அதை அடியேன் கொண்டுவந்தேன், நீர் அதைப்பாருமென்றுகூறி ஸ்ரீ சுவாமியினுடைய மோதிரத்தைக் காட்டினார்.

கவி.

காட்டியமோதிரங் கண்ணிற்கண்டலும்
ஊட்டியவல்விட முற்றுமுற்றவார்க்
கூட்டியநன்மருந் தொத்ததாமரோ
ஈட்டியவுலகுக்கு மினியவேந்தற்கும்.

ஆஞ்சநேயர்காட்டியமோதிரமானது ஸ்ரீபரதாழ்வானுக்கும், ஸ்ரீசத்துருக்காழ்வானுக்கும், திருவயோத்தியாபுரியிலுள்ளவர்களுக்கும், விஷத்தாற்பிராணன் போகின்ற ஒருவனுக்குப் பிரயோகித்த நல்லமருந்தைப் போலாயிற்று. முன்னாலே அழுதுகொண்டிருந்த வாய்களெல்லாம் சந்தோஷ ஆரவாரஞ்செய்தன. தாரைதாரையாய் நீர்பெருகிக்கொண்டிருந்த கண்களெல்லாம் அந்த நீரைச் சொரிந்தில. பூமியிலே வணங்கி மோதிக்கொண்டிருந்த தலைகளெல்லாம் ஸ்ரீ ஆஞ்சநேயருக்குக் கைகளைக்குவித்துத் தண்டன் சமர்ப்பித்துக்கொண்டு மேலே உயர்ந்தெழுந்தன: ஸ்ரீ பரதாழ்வானானவர் அந்தத் திருவிரலாழியை வாங்கித் தமது திருமுகத்தி லணைத்துக்கொண்டு, இந்த மோதிரத்தைக்கண்டு பூரிப்பதற்கு நம்முடைய பரதமகாராஜருடைய தேகம் போதுமானதோவென்று சொன்னவர்கள் நாணும்படி தேகமிகவும் பூரித்து, ஸ்ரீ பரதரானவர் தம்மை வணங்குகின்ற அஞ்சனாபுத்திரரை வணங்கிக் குதித்துக்குதித்துக் கூத்தாடினார்.



இராகவபிரானானவர் தம்மைப் பிரிந்துபோனதுமுதல் அவருடைய பிரிவின் துன்பத்தையேயல்லாமல் யாதொரு சந்தோஷத்தையும் அனுபவிக்காமையாலே வாயாலூதினாற் பறந்துபோகத்தக்க நிலையிலிருந்த ஸ்ரீ பரதாழ்வானுடைய திருமேனியானது, இவர் நம்முடைய பரதமகாராஜரல்லர் யாரோ அந்நியரென்னும்படி பூரிப்பினால் பருத்தது. அவருடைய இரண்டுதோள்களும் திக்குகளை யளாவும்படி வளர்ந்தன. இப்படிப் பூரித்துநின்ற பரதமகாராஜரானவர் ஸ்ரீராமபத்திரர் தம்மிடத்துவைத்துள்ளகருணையைக்குறித்துச் சற்றுநேரம் அழுவார். ஸ்ரீ காகுஸ்தரானவர் வருவாரென்கிற மகிழ்ச்சியால் சற்றுநேரம்சிரிப்பார். தமக்குச் சுவாமியினுடைய திருவிரலாழியைக் கொண்டுவந்து கொடுத்தலாகிய மகோபகாரஞ்செய்த ஸ்ரீ அநுமானுக்குச் சற்றுநேரம் தண்டன்சமர்ப்பிப்பார். களிப்பு அதிகரிப்பதனால் எழுந்து சற்றுநேரம் துள்ளுவார். ஸ்ரீ சானகிரமணரானவர் சொன்னசொல் தவறினாரென்று வியர்த்தமாய் அபசாரப்பட்டோமேயென்று சற்றுநேரம் பூமியில்விழுந்து புரண்டு அழுவார். ஆ! ஆ! ஸ்ரீராமசுவாமியினுடைய மோதிரம் நமக்குக்கிடைத்ததல்லவாவென்று பூரிப்பார். அவருடைய சொல்தவறாத நிலையைக்குறித்து அச்சப்பட்டு உடல்வெயர்ப்பார். அங்குள்ள கூட்டத்தாரோடு ஸ்ரீராமருடைய கலியாணகுணங்களைப் பாடிக் கைகளைக் கொட்டிக்கொண்டு சற்றுநேரம் ஆனந்தக்கூத்தாடுவார்.

பின்னும் அங்குள்ளவர்களைப் பார்த்து, ஓ பாவிகளே! உங்களுடைய பாவங்களெல்லாம் நசிக்கும்படி ஆநந்ததாண்டவம் செய்வீர்கள்: செய்வீர்கள்: இந்தப் பரத்துவாசருடைய ஆச்சிரமத்தண்டைதான் ஸ்ரீ ராமநாதர் எழுந்தருளியிருக்கின்றார், அங்கே ஓடிச்சேவியுங்கள்: சேவியுங்கள்: ஸ்ரீராமபிரானுடைய மஹாகீர்த்தியைப் பாடுங்கள்: பாடுங்கள்: இப்படிப்பட்ட மகோபகாரஞ்செய்த ஸ்ரீராமதூதருடைய பாதாரவிந்தங்களைத் தலையில் சூடிக்கொள்ளுங்கள்: சூடிக்கொள்ளுங்கள்: என்பார். எம்பெருமானானவர் காட்டுக்கெழுந்தருளும்படி வஞ்சனைசெய்த மாயக்கைகேசியானவள் இனிப் பிராணனைமாய்த்துக்கொள் வாளல்லவாவென்று தமதுதோள்களைக் கொட்டுவார்: ஒருபாதத்தைப் பூமியிலூன்றி நின்று மற்றொருபாதத்தைத் தூக்கிக்கொண்டு, நீலமலை ஆடுவதுபோல மண்டலாகிருதியாக நடனஞ்செய்வார். சுவாமியினுடைய புகழைப்பாடுவார். தமக்கெதிரேயுள்ள பிராமணர்களை நோக்கி, நீங்கள் ஆசாரத்தில்வழுவாமல் நடக்கும்படியாக நல்லகாலநேரிட்டதல்லவாவென்று அவர்களை நமஸ்கரிப்பார். அரசர்களைப் பார்த்து, நீங்களிராஜதர்மங்களிற் பிசகி ஒருவரோடொருவர் கலகப்பட்டு நாசமடையாமல் நீதியோடிராச்சியபாலனஞ்செய்து ஒருவருக்கொருவர் அந்நியோந்நியமாயிருக்கும்படி நல்லகாலம் இப்போது சம்பவித்ததல்லவாவென்று அவர்களைத் தொழுவார். தாதியர்களைப்பார்த்து, கூனியென்னு மகாபாதகியானவள் நம்முடைய பெருமான்பக்கலில் அபசாரப்பட்டுநாமெல்லாம்வருந்தும்

படியாக இவ்வளவு தீமைகளைச் செய்ததுபோல நீங்கள். யாதொருதீமையும் செய்யாமல் உத்தமர்களா யிருக்கிறீர்களல்லவா வென்று அவர்களுக்குத் தண்டனிடுவார். இனி ஸ்ரீராகவபிரான் பட்டாபிஷேகஞ் செய்துகொண்டு சிங்காதனத்தின்மேல் எழுந்தருளியிருக்க, அவருக்குவேண்டிய குற்றேவல்களைச் செய்து யானுஜ்ஜீவிப்பதற் குபயோகமாயிருப்பது இந்தத் தேகமல்லவாவென்று தம்மைத்தாமே குப்பிடுவார். உன்மத்தராய்ச்சற்றுநேரம் உட்கார்ந்திருப்பார். திடுக்கிட்டு எழுந்திருந்து சற்றுநேர நிற்பார். ஸ்ரீராமபிரான் பக்கலிற்கொண்ட பிரீதியானது ஸ்ரீபரதாழ்வானை இப்படியெல்லாம் செய்வதினால், அந்தப் பிரீதியென்பது மயக்கத்தைத் தருகின்ற மதுவிலே பிறந்ததுதானோ? மற்றெதுவோ அறியோம்.

இந்தவிதமாக ஆநந்த பரவசராய்நின்ற ஸ்ரீபரதாழ்வானவர் ஸ்ரீ ஆஞ்சநேயரைப் பார்த்து, ஓ ஸ்ரீராமதூதனே! நீதிரிமூர்த்திகளில் ஒருவனாயிருக்கலாமென்று நினைக்கின்றேன். நீ பிர்மசாரி உருவங்கொண்டு வந்தது வாஸ்தவமன்று. உண்மையாக நீயாரோ அதை எங்களுக்குச் சொல்லவேண்டுமென்றுகேட்க ஆஞ்சநேயர் சொல்லுகிறார். ஸ்ரீ ராமச்சந்திரர் பக்கலில் அதிபக்திமானாயுள்ள ஸ்ரீபரதாழ்வானே! அஞ்சனாதேவியானவள் தான்செய்த அருந்தவத்தின் பலனாக வாயுபகவானுக்கு என்னைப்பெற்றாள். நானோ உம்முடைய தமையனாராகிய ஸ்ரீ ராகவபிரானுக்கு அடிமைத் தொழில்செய்கின்றவனாவன். எனக்கியற்கையான உருவம் ஒருகுரங்கினுடைய வடிவம். அவ்வுருவத்தை மாற்றிக்கொண்டு இங்கேவந்தேன். அடிமைத்தொழில்செய்கின்ற நாயினேனுடைய அற்ப உருவத்தை உம்முடைய தாமரைமலர்போன்ற கண்களாற்பார்த்தருளுமென்று அப்போதுகொண்டபிராமணஉருவத்தைநீக்கிவிட்டு தேவர்களுடைய கண்ணுக்குமெட்டாத தூரத்தில் தமது முடியானது உயரும்படியாக வளர்ந்துநின்றார். இப்படிநின்ற திருவடிகளுடைய உருவத்தைக்கண்ட ஸ்ரீபரதசத்துருக்னர்களும், வசிஷ்டரிஷியும், இது ஆச்சரியப்படத்தக்க உருவமென்று நினைத்தார்கள். அங்குள்ள சேனாவீரர்களெல்லாம் அவருடைய திருமேனியைக்கண்டு பயத்தா லிறக்காமற்போயினும் பிராணபீதியடைந்தார்கள்.

அப்போது ஸ்ரீபரதாழ்வானவர் சிறியதிருவடிகளைப்பார்த்து, ஹே ஆஞ்சநேயா! இங்கேநின்று நாங்கள்சொல்லுகிற சொற்கள் உன்னுடைய குண்டலங்களணிந்த காதுகளில் நுழையமாட்டா. ஆதலாலிந்த அழிவில்லாத உருவத்தைச் சீக்கிரமாகக் குறுகச்செய்வா யென்று வேண்டிக்கொண்டார். உடனே திருவடிகளானவர் தம்முடைய திருவுருவத்தைப் பழையபடி சுருக்கி வணங்கிக்கொண்டு எதிரே நின்றார். அவருக்கு ஸ்ரீபரதாழ்வானவர் அளவற்ற திரவியாபரணங்கள் முதலியவற்றைப் பிரீதியினாற்கொடுத்து, சன்மானித்தார்.



## ஸ்ரீராமசுவாமியை எதிர்கொண்டு போதற்குச் சேனைகளையும் பட்டினத்து ஜனங்களையும் பிரயாணப்படுத்துவாயென பரதாழ்வார் சத்துருக்னருக்கு ஆஞ்ஞாபித்தல்.

கவி.

இளவலையண்ணலுக் கெதிர்கொளென்றநம்
வளமதிலயோத்தியில் வாழுமாக்களைக்
கிளையொடுமேகெனக் கிளத்தியெங்கணும்
அளையொலிமுரசின மறைவிப்பாயென்றான்.

ஸ்ரீசத்துருக்னாழ்வானை நோக்கி, தம்பீ சத்துருக்னா! ஸ்ரீராகவபிரான் பரத்துவாசருடைய ஆச்சிரமத்தில் எழுந்தருளி யிருக்கின்றார். அவரை எதிர்கொண்டு போகும்படி அயோத்தியா நகரத்துள்ள ஜனங்களைப் பிரயாணஞ் செய்யும்படிக்கும், தோரணங்கள் நாட்டி மேலேகொடிச்சீலைகள் கட்டிப் பூரணகலசங்களை வேதிகைகளின் மேல்வைத்து இப்படிப்பட்ட சர்வாலங்காரங்களையுஞ் செய்யும்படிக்கும், இரதகஜதுரகங்களுக்கு அலங்காரம் பண்ணும்படிக்கும், அயோத்தியா நகரத்தின் மதின்முதற்கொண்டு பரத்துவாசர் வசிக்கும் வனம்வரைக்கு முத்துப்பந்தர் போடும்படிக்கும் பறையறைவித்துத் தெரிவிப்பாயென்று உத்திரவுசெய்தார்.

ஸ்ரீ பரதாழ்வானவர் இந்தவண்ணம் உத்திரவு செய்தமாத்திரத்தில் ஸ்ரீ சத்துருக்னாழ்வானவர் அவருடைய திருவடிகளைவணங்கி, குற்றமில்லாத நூற்கேள்விகளையும் அவற்றிற்குத்தக்க ஒழுக்கத்தையுமுடைய சுமந்திரனுக்கு இப்படி நகராலங்காரஞ் செய்விக்கும்படி தெரிவித்தார். அந்தக் கட்டளையைப் பெற்றுக்கொண்டு குதூகலமான சித்தமுடையவராகிய சுமந்திரரென்னு முதன்மந்திரி யானவர் வள்ளுவர்களை அழைப்பித்து, ஸ்ரீராமச்சந்திரர் பரத்துவாசமுனிவராசிரமத்தில் எழுந்தருளி யிருக்கிறார். அவரை எதிர்கொண்டுபோம்படி புரவாசிகளும் சேனைகளும் பிரயாணப்படவும், நகர முழுமையும் அலங்காரஞ் செய்யவும், அயோத்திமாநகர முதற்கொண்டு பரத்துவாசருடைய ஆச்சிரமம் வரையில் முத்துப்பந்தர் போடவும், முரசங்கொட்டித் தெரிவிக்கக் கடவீர்களென்று ஆக்கியாபித்தார். அவருடைய ஆக்கினையின்படி வள்ளுவர்கள் யானைகளின்மேலேறிச்சென்று, சுவர்க்கத்தையும் திக்குகளையுங் கடந்துசென்ற மகாகீர்த்தியையுடைய ஸ்ரீராகவபிரானை யெதிர்கொண்டு போகும்படி நகரஜனங்களும் அரசர்களும் சதுரங்கசேனைகளும் எழக்கடவீர்கள். நகரத்தை அலங்காரம் செய்யக்கடவீர்கள். அயோத்தியாநகர் மதில்முதல் பாரத்துவாசராசிரமம் வரையில்முத்துப்பந்தல் போடக்கடவீர்களென்று பறைசாற்றினார்கள்.

இப்படி வள்ளுவர்கள் கொட்டிய முரசொலியைக் கேட்டமாத்திரத்தில் திருவயோத்தியாபுரியிலுள்ள பிர்ம க்ஷத்திரிய வைசிய சூத்திர சாதுர் வருணத்தார்களும் ஆச்சரியகரமா யிரைந்துகொண்டு, அளவிடக்கூடாத களிப்

பையுடையவர்களாய் விரைவாக அலங்காரஞ்செய்துகொண்டு பிரயாணத்துக்குச் சித்தமானார்கள். தோஷரகிதராகிய ஸ்ரீராமநாதரை எதிர்கொள்ளவேண்டுமெனக் கொட்டிய பேரிகையின் ஓசையானது அந்நகரவாசிகளுக்கு எப்படியிருந்ததென்றால்? நெடுநாள் தரித்திரத்தால் வருத்தப்பட்டுக்கொண்டிருந்த ஏழைகளுக்குத் திரவியக்குவியல் யாதொருமுயற்சியுமில்லாமல் எதிர்ப்பட்டாற்போலவும், முன்னே திருக்கலியாணத்தினிமித்தம் ஸ்ரீ மிதிலாபுரிக்குப் பிரயாணப்படும்படி கொட்டிய முரசொலியைப்போலவும் இருந்தது. முரசொலியைக்கேட்டு அலங்கரித்துக்கொண்டு ஆயத்தமான அறுபதினாயிரம் அக்குரோணி சேனைகளும், இராஜநாயகர்களும், மற்றவர்களும், அவரவர்களுடைய சுபத்தினிமார்களும், தாங்கள் வெகுதினமாக அடையவேண்டுமென்று கோரியிருந்தபொருள் தானேவந்து கிடைத்தாற்போலச் சந்தோஷங்கொண்டாடிக்கொண்டு சென்றார்கள். அப்போது தேவர்களெல்லாம் எங்களுடைய துக்க நிவாரணார்த்தத்துக்குக் காரணபூதர்கள் இவர்களல்லவா வென்று நெருங்கித் தோத்திரஞ்செய்து கும்பிடும்படியாகத் தாய்மார்கள் மூவரும் பொன்னாற்செய்யப்பட்டமணிகளிழைத்த தண்டிகைகளிற்சென்றார்கள்;

### பரதாழ்வார் ஸ்ரீராமபிரானைக்காணும்படி யாவரோடு மெதிர்கொண்டு போதல்.

கவி.

திருவடியிரண்டுமே செம்பொன்மௌலி பா. இருபுறஞ்சாமரை யிரட்டவேழ்கடல்
வெருவருமுழக்கென வேழமார்த்தெழப், பொருவருவெண்குடை நிழற்றப்போயினான்.

தமக்குந் தாமே சமானமானவர்களாகிய, முனிசிரேஷ்டர்களும் பந்துஜனங்களும் சூழ்ந்துவரச் சத்துருக்னரோடு ஸ்ரீ பரதாழ்வானவர் சிறியதிருவடிகளுடைய கையைப்பற்றிக்கொண்டு, ஸ்ரீ ராகவபிரானுடைய திருப்பாதுகைகளைத் தமது சடைமுடியின்மேல் எழுந்தருளச்செய்து, இருபுறத்திலும் சாமரைவீசவும் வெண்பட்டுக்குடைபிடிக்கவும் எழுகடலின் ஓசையைப்போல இரதகஜதுரகங்களின் ஓசை கோஷிக்கவும் சென்றனர். பீதாம்பரதாரியாயும், மணிமகர குண்டலங்களைத் தரித்தவராயும், செந்தாமரை மலர்போன்ற நேத்திரங்களை யுடையவராயும், சங்குசக்கரமுதலிய பஞ்சாயுதபாணியாயும், எனக்குள் எழுந்தருளியிராநின்ற ஸ்ரீகோதண்டதீக்ஷா குருவை எதிர்கொள்ளும்படியாய் ஸ்ரீபரதாழ்வான் செல்லுகின்றார். என்னுடைய கிரணவெப்பத்தால் கற்கள்நிறைந்தவழி தாமரைமலர்போன்ற அவருடைய பாதங்களைச்சுடுமாதலால் நான் மறைந்துவிடுகிறேனென்று போகின்றவரைப்போல சூரியபகவானானவர் அஸ்தமனமானார்.

ஸ்ரீ ஆஞ்சநேயருடைய கையைப்பற்றிச்சென்ற ஸ்ரீபரதாழ்வானவர் பொழுதுபோனவுடனே ஸ்ரீ அநுமானைப்பார்த்து, ஐயா அஞ்சனைசிங்கமே! ஸ்ரீலட்சுமிபதியாகிய ஸ்ரீராமச்சந்திரரானவர் எந்தவிடத்திலிப்போது வசித்துக்கொண்டிருக்கின்றார்? அங்கே தங்கியிருப்பதற்குக் காரணம்யாது? அவற்றையெல்லாம் சாங்கோபாங்கமாகச் சொல்லக்கடவாயென்று கேட்டார். அம்மாத்திரத்தில் ஆஞ்சனேயரானவர் ஸ்ரீபரதாழ்வானுக்குத் தண்டன்சமர்ப்பித்து, சுவாமி! எம்பெருமானானவர் திருவயோத்தியாபுரியில் இருந்ததும், ஒருநாள் விசுவாமித்திரரது வேள்விசாரணமாக வெளிப்பட்டு மிதி



லாநகரத்துக்குச் சென்று திருக்கலியாண மகோச்சவத்தை நிறைவேற்றிக்கொண்டு திருவயோத்தியாபுரிக்குத் திரும்பி எழுந்தருளியதும், அப்பால் மாதாபிதர் வாக்கிய பரிபாலனார்த்தமாக வனவாசஞ்செய்ய வெளிப்பட்டுச்சென்று சித்திரகூடபருவதத்தை யடைந்ததும், தேவரீர் அறிந்திருக்கின்றனவே யல்லாமல் அடியேன் சொல்லவேண்டியதில்லை யன்றோ? பிறகுநடந்த சவிஸ்தாரங்களைச் சொல்லுகின்றேன்.

### அநுமார் பரதாழ்வாருக்கு ஸ்ரீராமபிரான் சித்திரகூடபர்வதத்தை நீங்கினபிறகு இதுவரைக்கும்நடந்த வரலாறுகளை முறையேகூறல்.

கவி.

சித்திரகூடத்தைத் தீர்ந்தபின்சிரம், பத்துடையவனுடன் விளைந்தபண்புந்தான்
இத்தலையடைந்தது மிறுதியாமென, வித்தகத்தூதனும் விரிக்குஞ்சிந்தையான்.

அந்தச் சித்திரகூடத்தை நீங்கிச்சென்றபின் பத்துத்தலைகளையுடைய இராவணனோடு நடந்த யுத்தமும் இந்தப் பாத்துவாசருடைய ஆச்சிரமத்தை அடைந்ததுமே முடிவாகும். என்று ஸ்ரீராமபிரானுடைய திவ்யசரித்திரங்களைவிரித்துச் சொல்லத்தொடங்கினார்.

ஸ்ரீ பரதமகாராஜரே! ஸ்ரீ கோதண்டத்தைக் கையிற்றாங்கிய எம்பெருமானனவர் சித்திரகூடபர்வதத்தை நீங்கிச் சென்றபின்பு விராதனென்னும் ஒருராக்ஷசனைக் கொலைசெய்து, தபோநிதிகள் வாசஞ்செய்கின்ற தண்டகாரணியத்தைச்சேர்ந்தார். அங்கேயிருந்த அருந்தவமுனிவர்யாவரும் ஸ்ரீசர்வேஸ்வரமூர்த்தியின் பக்கலில்வந்து, ஸ்ரீராமப்பிரபுவே! நாங்களிராவணகும்பகருணாதி ராக்ஷசர்களால் எங்கள் தபோபலம் அழிந்துபோனோம். அவர்கள் செய்கிற உபத்திரவத்தால் யாகாதி சத்கருமங்களையும் செய்வதில்லை. என்று முறையிட்டுக்கொள்ளவே ஸ்ரீராமநாதரானவர் கருணைகூர்ந்து, ஓ தண்டகாரணிய வாசிகளே! ஸ்ரீபகவத்பக்தசீலர்களாகிய உங்கள்பக்கலில் அபசாரப்பட்ட அந்த ராக்ஷசர்களையெல்லாம் என்கையிலுள்ள கோதண்டத்தை வளைத்துக் கூர்மையுள்ள அம்புக்கு இரையாக்கி நாசப்படுத்துகிறேன். இது சத்தியமாகும். நீங்களுங்கள் மனத்திலுள்ள கிலேசங்களை ஒழிக்கக் கடவீர்களென்று அவர்களுக்கு அபயப்பிரதானங்கொடுத்து அங்கே பத்துவருஷம் வசித்திருந்தனர்.

அப்போது தண்டகாரண்ணிய முனிவர்கள் யாவரும் நித்தநித்தமும் ஸ்ரீராமபிரானுடைய ஜகன்மோகனாகார திவ்யமங்கள விக்கிரக சௌந்தரியத்தைத் தங்கள்கண்களாரச் சேவித்து விட்டுப்பிரிய மனமில்லாதவர்களாய் மேலே நடக்கவேண்டியதாகிய இராவணாதிகளுடைய வதத்தை யோசித்து, ஸ்ரீராகவபிரானே! நீர் இந்தவனத்துக்குச் சமீபத்திலுள்ள அகஸ்தியருடைய ஆச்சிரமத்துக்குப் போகக் கடவீரென்று ஆக்கியாபிக்க, உடனே அங்கிருந்து புறப்பட்டுச்சென்றார். அகஸ்தியமுனிவரானவர் ஸ்ரீகாகுஸ்தர் எழுந்தரு

ஞவனை முன்னதாகவறிந்து எதிர்கொண்டுவந்து அழைத்துச்சென்று, திவ்வியமாகிய ஒருவில்லையும் - அம்பறாத்தூணியையும் - கவசத்தையும் - வாளாயுதத்தையும் கொடுத்தனர். அவரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு சடாயுவென்னும் கழுகின்குலராஜனைக் கண்டு சானகிபிராட்டியாரோடும் இளையபெருமாளோடுங்கூட சோலைகளடர்ந்த பஞ்சவடியில் வாசஞ்செய்தார்.

அங்கே நம்முடைய ஆண்டவரானவர் சுகமாக எழுந்தருளியிருக்கும்போது இராக்ஷசகுலத்தார் கெடுநாளாகச்செய்துவந்த பாபங்களெல்லாம் ஒன்றாய்த்திரண்டு ஒருருவமாய்நின்ற சூர்ப்பநகையென்பவள்வந்து; ஸ்ரீசானகிபிராட்டியாரைச்சீறிச்சென்றாள். அதுகண்ட இளையபெருமாளானவர்பிராட்டியாருக்குப் பயநிவர்த்திசெய்து, அந்த ராக்ஷசியினுடைய காதுகளையும் - மூக்கையும் - ஸ்தனங்களையும்கொய்து துரத்திவிட்டார், உடனே அவள் ஓடி கரனிடத்திலேசென்று முறையிட்டாள். அது செய்திகேட்ட கரனும் - திரிசிரனும் - தூஷணனும் - மூன்று வடவாக்கினிமூளத்தெழுந்தாற்போல உடன்சேர்ந்து, சேனைகளோடுஅதிவிரைவாகவந்து எதிர்த்தார்கள். நம்மையனானவர் தமதுதிருக்கரத்திலேபிடித்திருந்தஸ்ரீகோதண்டத்தைக்கண்ணுற்றுப்பார்த்தமாத்திரத்தில், அவர்கள்யாவரும் தீப்பொறிபட்ட பஞ்சுக்குவியலையொத்து நாசமாயினார்கள். அம்மூவரும் ஸ்ரீராமபாணத்தால்நாசமானதைக்கண்ட சூர்ப்பநகையானவள் இலங்காநகரத்துக்குப்போய் இராவணனிடத்திற்சொல்லி முறையிட்டுக்கொண்டாள்.

அந்தப் பாபிஷ்டன்வஞ்சகமாகிய மானையொன்றேவி, ஸ்ரீராமலட்சுமணர்கள் பிராட்டியாரைவிட்டுப்பிரியச்செய்து; தான் திரிதண்டத்தைக் கையிற்பிடித்து வைதிகமார்க்கச்சந்நியாசிவேடங்கொண்டுவந்து, நம்முடைய தாயை நிலத்தோடுபேர்த்தெடுத்துக் கொண்டுபோனான். அப்படிபோகும்போது வந்தெதிர்த்த சடாயுவைப் பூமியில்விழும்படி தனக்குச் சிவமூர்த்திகொடுத்த வாளாயுதத்தால் அவருடையசிறகைவெட்டித் தள்ளிவிட்டு, அதிதுக்கத்தோடுவருத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றபிராட்டியாரைக்கொண்டுபோய் அசோகவனத்திற் சிறைவைத்துவிட்டான். மாரீசனென்னு மானைத் துரத்திச்சென்று அம்மானைக்கொலைசெய்து திரும்பிவருகின்ற ஸ்ரீராகவபிரான் வழியிலே இராமானுஜனைக்கண்டுமனக்கிலேசங்கொண்டு அவருடன் அதிவிரைவாய்வந்து, பஞ்சவடியிதீரத்திற்சீதையைக்காணாது தென்றிசைநோக்கிச் சிறுகுடியாற் சென்று குற்றுயிராய்க்கிடக்கின்ற தமது தந்தையாகிய சடாயுராஜனைக் கண்டு சீதையின் வர்த்தமானங்களைக் கேட்டு மிகுதியும் துன்பப்பட்டுஅவருக்குச் செய்யவேண்டிய கடன்களைச் செய்துவிட்டு, தேவியாரைத் தேடிக்கொண்டு தெற்குத்திசையை நோக்கிச்செல்லுகையில் கவந்தனைச்சம்ஹரித்து அவனுக்குச் சாபவிமோசனஞ்செய்து, தம்முடையவரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்த சபரியானவள் செய்தபூசனையையேற்றுக்கொண்டு அவள்சொன்ன அடையாளப்படி கிட்கிந்தைக்கு வந்துசேர்ந்தார்.

இளையபெருமாளோடுவந்த ஸ்ரீராமநாதர் ஸ்ரீசுக்கிரீவமகாராஜனைச்சிநேகித்து,வாலியினாலுண்டாகியதுன்பத்தைநீக்கிஉனக்குமுடிசூட்டுகிறேனென்று



அபயங்கொடுத்து, பின்புமராமரமேழையும் மகாபராக்கிரமசாலியாகிய வாலியினது மார்பையும்ஊடுருவிச்செல்லும்படி பாணப்பிரயோகஞ்செய்து ஸ்ரீசுக்கிரீவமகாராஜருக்குப் பட்டாபிஷேகஞ் செய்தனர். அடுத்துவந்த மாரிக்காலம்ஒழிந்தபிறகு கவயன் - இடபன் - நீலன் - மயிந்தன் - சாம்பன் - சதவலி - பநசன் - அங்கதன் - முதலியவானரசிரேஷ்டர்களும், எழுபதுவெள்ளம்வானரர்களுஞ்சூழும்படி; சுக்கிரீவமகாராஜாவானவர் ஸ்ரீராமசுவாமிபக்கலில்வந்துசேர்ந்தார். ஸ்ரீராமபத்திரருடையஅநுமதிபெற்றுத் தேவியாரைத்தேடும்படி ஒவ்வொருதிக்குக்கும் இரண்டுவெள்ளஞ்சேனைகளை அனுப்பித் தேடும்படி மகாராஜா அனுப்பினார்; தென்றிசையில்இரண்டுவெள்ளஞ் சேனையோடு சென்ற அங்கதப்பெருமானும், சாம்பவரும், என்னை இலங்கைக்குள் பிரவேசிக்கும்படி ஏவினார்கள். நானு மகேந்திரமலையிலிருந்து பாய்ந்து இலங்காநகரத்தைச்சேர்ந்துஸ்ரீசகன்மாதாவைக்கண்டு சேவித்து நான் திரும்பிவந்து ஸ்ரீசர்வசுவாமிக்குச்செய்தி சொன்னமாத்திரத்தில், வானரவெள்ளங்களாகிய யாவர்களோடும் புறப்பட்டு தென்சமுத்திரக்கரையைச் சார்ந்தார்.

அதுசமயத்தில்மெய்ஞ்ஞானத்துக்குமெய்ஞ்ஞானம்போன்றஒழுக்கமுடைய ஸ்ரீவிபீஷணாழ்வானானவர் தனதண்ணனாகிய இராவணனைப்பார்த்து; நீ ஸ்ரீசீதாபிராட்டியாரை விட்டுஸ்ரீராமபிரானைச்சரணாகதி யடைஇல்லாவிட்டால் உன்னுடையசம்பத்தும் ஆயுசுமுடிந்து நாசமடைவாயென்று சொன்னார். அந்தநீதிமொழிகளைக் கேட்டுத் துராத்துமாவாகிய தசக்கிரீவனானவன்மிகுந்தகோபிஷ்டனாய் அவரைச்சீறினான். உடனே சுகுணசீலராகிய விபீஷணாழ்வாரானவர் காருண்ணிய மூர்த்தியாகியதாசரதியைச்சரணம்புகுந்தார். சரணமடைந்த அவருக்கு ஸ்ரீகாகுஸ்தரானவர்அபயப்பிரதானந்தந்து, இலங்காநகரத்துக்கு அரசன்இனி நீதானென்றுவாக்களித்துப் பிற்பாடுவருணனைக்குறித்து உபாசித்தார். வருணபகவானே சற்றுத்தாமசஞ் செய்தான். அதுகண்டு ஸ்ரீராமபிரானுக்கு இரண்டுநேத்திரங்களும் சிவந்தன. உடனே எழுசமுத்திரமும் வருணபகவானுடையவுடலும்வெந்துபோயின. அம்மாத்திரத்தில்சமுத்திரராஜன் அபயமென்றுசொல்ல அவனுக்கு அபயங்கொடுத்தார். உடனே வானரவீரர்கள் மலைகளைக்கொண்டுவந்துசமுத்திரத்தை அணைகட்ட, அதன்வழியாக யாவருஞ்சென்று இலங்கையை முற்றுகைபோட்டுக்கொண்டு ஆரவாரித்தார்கள். அவ்வோசையைக்கேட்டுத்தேவர்களெல்லாம் இராக்ஷச பயந்தீர்ந்தார்கள்.

அப்போது சுவாமியானவர் இலங்காதிபதியின் தம்பியாகியகும்பகருணனுடைய தோள்களையுங்கால்களையுங் கண்டித்து, மற்றராக்ஷசர்களையு நாசப்படுத்தி,வெள்ளிமலையைப் பேர்த்தெடுத்த இராவணனுடைய இருபதுதோள்களையும் - அஷ்டதிக்கஜங்களின் தந்தங்களைமுறித்த மார்பையும் - பத்துத்தலைகளையும் - அம்புகளால் அறுத்துத்தள்ளித் தேவர்களுடைய துன்பத்தை நீக்

கினார். இராமாநுஜரானவர் இந்திரஜித்துவையும்—அவன்தம்பிமார்களையும் - மற்றவர்களையும் — தம்முடைய அம்பினால்துண்டித்து வீழ்த்தினார். தேவர்கள் யாவரும் புஷ்பமாரியைத்தூவி இறந்தராக்ஷசக்கூட்டங்களிற் கவந்தங்கள் கூத்தாடுவதைக் கண்டு சந்தோஷித்தார்கள். தேவர்களும் - முனிவர்களும் - சித்தர்களும் - அவரவர்களுடைய பத்தினிமார்களும் — மற்றதிரிலோகவாசிகளும்—தனித்தனியாக ஸ்ரீராகவபிரானைப் புகழ்ந்து மொய்த்துக்கொள்ள, அப்போதுகாயாம்பூவையொத்ததிருமேனியையுடைய ஸ்ரீஜானகிரமணரானவர் விபீஷணருக்கு நீதிகளைச்சொல்லி இறந்தவர்களுக்குஉத்தரகிரியைகளைச் செய்வித்துஇலட்சுமணனைக்கொண்டு அவருக்குப்பட்டங்கட்டுவித்தார்;

இவையெல்லாநடந்தபின் தம்மிடத்திலெழுந்தருளிய பிராட்டியாரைச் சுவாமியானவர் சீறியருளினார். அதுகண்டஜானகியார் அக்கினியிற்பாய அக்கினிதேவனவளையேந்திவந்து ஸ்ரீதாசரதியைத்தோத்திரஞ்செய்துநிற்க, உடனேபிரமதேவனும்-உருத்திரமூர்த்தியும்—அவருக்குச்சொன்னசொல்லாற்கோபந்தீர்ந்தார். அப்பால்உருத்திரமூர்த்தியின்கட்டளையால், சத்தியத்துக்குப் பிராணனைக்கொடுத்த தசரதச்சக்கரவர்த்தியானவர் விமானத்தின்மேல் அங்கெழுந்தருளினர். ஸ்ரீராகவப்பிரானும், பிராட்டியாரும், இலட்சுமணரும், ஸ்ரீ தசரதச்சக்கரவர்த்தியாருடைய பாதத்தில் வீழ்ந்துசேவித்தார்கள் அப்படிச் சேவித்தவர்களைத் தசரதச்சக்கரவர்த்தியானவர் தனித்தனி ஆலிங்கனஞ் செய்து இரகுபதியைநோக்கி, என்னால் உனக்குவேண்டியவரம் பெற்றுக்கொள்ளுகவென்றார். அதற்கு இராமபிரானானவர் - என்னையனே ! தம்முடைய கருணையால் என்னையெடுத்துவளர்த்ததாயும், அவருடையபுத்திரனும், முன்போலவே எனக்குத்தாயுந் தம்பியுமாகும்படியானவரம் தயைசெய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டனர். சக்கரவர்த்தியாரும் அப்படியே ஆகுகவென்றுவரந்தந்துபோனார். தேவர்கள் உமக்குவேண்டியவரத்தைக் கேளுமென்று கேட்டுக்கொள்ள, அதற்குச்சுவாமி இறந்தவானரர்கள்-உயிர்த்தெழுந்திருக்கவும் - எல்லாவானரர்களும் சென்றவிடங்களி லெல்லாம் உணவுகள் குறைவின்றிக்கிடைத்து சுகசீவிகளாயிருக்கவும் — வரந்தரவேண்டுமென்று கேட்டார். அத்தேவர்களும் உம்முடைய கருணையால் அப்படியே ஆகுகவென்று சொல்லிப் போயினர்கள்.

அப்பால் நமதையனானவர் அதிகவிரைவாய் அயோத்திக்குப் போகவேண்டுமென்கிற குறிப்பைத் தென்னிலங்கை வேந்தராகியஸ்ரீவிபீஷணாழ்வானானவர் அறிந்துகொண்டு புட்பகவிமானத்தைக்கொடுத்தார். அதன்மேல் ஸ்ரீராகவபிரானும்,ஸ்ரீசீதாபிராட்டியாரும்,ஸ்ரீஇலட்சுமணரும்,சுக்ரீவமகாராஜாவும், விபீஷணாழ்வானும், சாம்பவர்முதலிய படைவீரர்களும், இருவகைச் சேனைகளும், ஆரோகணித்துங்கொண்டு பரத்துவாசருடைய ஆச்சிரமத்துக்குவந்து சேர்ந்தார்கள். இப்படிச்சேர்ந்தபின்பு ஸ்ரீ ரகுபதியானவர் உம்மிடத்துள்ள பிரமையாலே என்னை அழைத்து விரலாழியைக்கொடுத்து,



விரைவாகச்சென்று இதைக்காட்டி என் தம்பியாகிய ஸ்ரீ பரதாழ்வானுடைய துன்பத்தை முழுமையுநீக்கி வரக்கடவாயென என்னையனுப்பினாரென்று சாங்கோபாங்கமாகச் சொல்லினர். இவ்வாறு சமுத்திரத்தைத் தாண்டி இராக்ஷசர்களுடைய நகரத்தை எரியூட்டிய வாயுபுத்திரரானவர்சொல்லக்கொண்டுவரக் கேட்டருளிய பரதாழ்வானானவர் கண்ணீர் பெருகிக்கொண்டு, ஓ அனுமானே ! இலங்காநகரத்தில் இராக்ஷசவேட்டை யாடிய நீலமேகம் போன்ற திருமேனியையுடைய ஸ்ரீராமபத்திரர்க்குப் பின்தொடர்ந்து சென்றான் ஒருதம்பி. அவனுடைய சரித்திரங்களைக் கேட்டுக்கொண்டிருப்பவனாகிய நானும் ஒருதம்பியாயிருக்கின்றேன். என்னுடைய அடிமைத்தொழினு மகாகீர்த்தியை யுடையதன்றோ ? என்றுசொல்லிக் கண்ணீரொழுக அழுதுகொண்டு ஆஞ்சநேயருடைய கரத்தை வலக்கரத்தாற்பற்றி, அந்தஇருளிலே கால்நடையாகச் சென்று சூரியோதயத்துக்கு முன்னே கங்கைக்கரையைச் சேர்ந்தார்.

அப்போது கீழ்த்திசைக் காவலாளியாகிய இந்திரனானவன் எம்பெருமான் இராவணவேட்டையாடித் திரும்பி அயோத்தியா நகரத்துக்கு எழுந்தருளிப் பூதேவியும் ஸ்ரீதேவியும் உள்ளங் குதூகலிக்கும்படி தரித்துக்கொள்ளும் பொன்னாற்செய்த கிரீடத்துக்குத் தகுந்த சிகாமணியை எடுத்தாற்போலச் சூரியனுதயஞ்செய்தான். இப்படி சூரியோதயமானவுடன் பரதாழ்வானானவர் காலைக்கடன்களைச் செய்து, ஸ்ரீசக்கரவர்த்தித் திருக்குமாருடைய திருப்பாதுகைகளை அர்ச்சித்து ஆஞ்சநேயரைநோக்கி, ஓபிலவங்கசிரேஷ்டனே! நீசொல்லியசொல் தவறிப்போய்ப்போ விருக்கிறது. நீநவவியாகரண பண்டிதனாகையால் உன்னுடைய வார்த்தைக்கு மறுவார்த்தை சொல்லுவாருமுண்டோ ? இராமநாதரோடுகூட எழுபதுவெள்ளம் வானரசேனைகளும், இராக்ஷசகுல ராஜனுடைய அளவில்லாத ராக்ஷசசேனைகளும், இதோதோன்றுகிற பரத்துவாசருடைய ஆச்சிரமத்தில் வந்திருக்குமேயானால்; அங்கே சமுத்திரகோஷம்போல ஆரவாரமில்லாமலிருக்கவுங் கூடுமோ ? ஓமஹா வீரசிகாமணியே ! எம்பெருமான் எழுந்தருளினாரென்று சொன்னது சத்தியந்தானோ ? நீ சொன்ன பரத்துவாசருடைய சோலை நமக்கு இரண்டுயோசனை தூரத்திலிருக்கிறது. சமுத்திரம்பெருகிப் பொங்கியதையொத் திருக்கத்தக்க எழுபதுவெள்ள வானரசேனைகளும், மற்ற ராக்ஷசவீர சேனைகளும், இந்தச்சோலையில் தங்கியிருப்பது யதார்த்தமேயானால், சிறிதும் ஆரவமில்லாமலிருப்பதுமுண்டோ ? ஆ ! இதென்ன ஆச்சரியம் ? நீ எனக்கு ஆசைகாட்டி அழைத்துவந்தது போதும்: போதும்: எதெப்படியிருந்தபோதிலும் இருக்கட்டும். ஐயா மகானுபாவா ! நீ சொன்ன எங்கள் சூரியகுல திலகனாகவும் என்பிராணபதமாகவுமிருக்கிற ஸ்ரீ சக்கரவர்த்தித் திருக்குமாரர் எங்கேயிருக்கிறாரென்று அதிகதுக்கமும் கோபமுந்தோன்றக் கேட்டருளினார்.

இப்படி பரதாழ்வானானவர் உறுத்திக் கேட்டருளும்போது அநுமானானவர் அவர்க்குத்தண்டன் சமர்ப்பித்துச் சொல்லுகிறார். ஸ்ரீதாரகமந்திர

வாச்சிய திவ்யசரித்திரகுணநுபவ புருஷோத்தமருடையசோதரரே! இயான் சொன்னது பொய்யன்று. இந்தப் பரத்துவாச முனிவரும்-மற்றமுனிவர்களும்-சமஸ்ததேவர்களும்-பரத்தாமருடையபவேண்டுகோளின்படி கொடுத்த வரத்தாற்பெருகிய மதுவையும் காய்கனிகளையு நிரம்ப உண்டு,அதனால் மயங்கிச்செயலழிந்து கோம்பி வாயைத்திறவாம லிருக்கின்றார்கள். அப்படியல்லாவிட்டால் இருவகைச் சேனைகளும் சும்மாவிருப்பவைகளல்லவே; என்னையனே! என்மேற் கோபங்கொள்ளாதேயும். இனியொருகூணத்துக்குள்ளே நம்முடைய பெருமானனவர் புட்பக விமானத்தின்மேல் எழுந்தருளுகின்ற திவ்வியசேவையை, இங்கிருந்தபடியே நீர் பெருகிக்கொண் டிருக்கின்ற நேத்திரங்களாலேயே சேவித்துக் களிக்கப்போகிறீர். என்றின்னும் பலவிதமாகச் சொல்லிக்கொண் டிருந்தனர். இனி பரத்துவாசருடைய ஆச்சிரமத்திலெழுந்தருளி யிருக்கின்ற தாமரைமலர்போன்ற திருக்கண்களையுடைய ஸ்ரீகோதண்டதீட்சா குருவானவர்செய்த செய்கைகளை யெடுத்துச் சொல்லுவோம்.

ஸ்ரீராமபிரான் தம்மைச் சூழ்ந்தவர்களோடு பாரத்துவாசாசிரமத்தில் விருந்துண்டிருக்குங்காலையில், தம்மைக்காணவந்த குகனைச்சன்மானித்தல்.

கவி.

அருந்தவன்சுவைகளாறோ டமுதினிதளிப்பவையன்
கருந்தடங்கண்ணியோடுங் கனைகளுந் துணைவரோடும்
விருந்தினிதருந்தினின்ற வேலையின்வேலைபோலும்
பெருந்தடந்தானையோடெய் திராதர்கோனெய்யர்ந்துவந்தான்.

ஆரிய தவசிரேஷ்டராகிய பரத்துவாசமாமுனிவர் ஷட்ரசான்ன பதார்த்தங்களோடுதர நமதையனாகிய இராமச்சந்திர பகவான், கறுத்துவிசாலம் பெற்ற திருக்கண்களையுடைய ஜானகியோடும், தமதாதரவைப் பெற்றுள்ளயாவரோடும், தேவாமிர்தத்திற் கொப்பாகிய அவ்விருந்துணவை யமுது செய்தெழுந்தருளியிருந்த சமயத்து சமுத்திரத்தை நிகர்த்த பெருஞ்சேனையோடு வேடர் குலாதிபதியாகிய குகப்பெருமான் சுவாமியைக்காணும்படி வந்தனன். அவ்வண்ணம்வந்த குகனுனவன் இராமபத்திர மூர்த்தியைத் தண்டன் சமர்ப்பித்து, அவருடைய திவ்வியமங்களாகர விக்கிரகசௌந்தரியத்தில் தம்முடைய மனமும் - கண்களும் - அழுந்திச் சுழலிடச் சுற்றிச்சுற்றிச் சேவித்து, இப்படிப்பட்ட திவ்வியசேவையை இத்தனைகாலமாகச் சேவியாமல் வியர்த்தமாய்க் காலத்தைப்போக்கி விட்டோமேயென்று மிகுந்த துக்கத்தால் அழுதனன். என்மேல்வைத்த நிர்ஹேதுக்கிருபையால் எம்மை யாட்கொள்ளும்படி. இங்கெழுந்தருளினு ரென்கிற பக்திபரவசத்தால் தட்டமாறிப் பலமுறை தண்டன் சமர்ப்பித்தனன்.

அதுகண்ட இராகவபிரானனவர் பாதாழ்வானை எதிர்க்கு தழுவுவது போலத் தண்டன் சமர்ப்பித்த குகப்பெருமானை வாரியெடுத்துத் தழுவி,

No. 72. பரதர்தாய்மார்மூவரோடுவெளிப்பட்டு அஞ்சனேயரால் ஸ்ரீராமசரித்திரங்களைகேட்டுக்கொண்டுசெல்



உயுத்தகாண்டம். (பரத்துவாசாச்சிரமத்தைச்சமீபித்தல்.)

என்னப்பா குகனே! உன்னுடைய புத்திரர்களும் மனைவியும் க்ஷேமமோவென்று குசலப்பிரசனை செய்தார். அதற்கவன் - சுவாமி! நாயேனுக்குத் தேவரீருடைய கருணை இரட்சகமாயிருக்கும்போது தேவர் வினவிய பொருள்களிரண்டும் அருமையானவைகளல்ல. மெய்ஞ்ஞானச் செல்வராகிய இளையபெருமாளானவர் உம்மைப்பிரியாமற் பின்தொடர்ந்துவந்து செய்தற்குரிய கைங்கரியங்களைச் செய்தனர், அவ்வாறுசெய்யாது அஞ்ஞானமே நிரம்பிய மனத்தையுடையேனுக்கு இந்த அற்பதேகத்தோடு கூடிவாழ்தலொன்றுமே நித்தியசுகமல்லவோ? இப்படிப் பலபலவிதமாகச் சொல்லித் துக்கித்தனர். இவ்வாறு தம்மைத்தாமே இகழ்ந்துகொண்டு துக்கிக்கின்ற குகாழ்வானைப் பக்தவற்சலராகிய ஸ்ரீ சக்கரவர்த்தித் திருக்குமாரர் கடாட்சித்து, அப்பா குகனே! பரதனிருக்கு நிலையினின்று நீ என்ன வேறுபட்டிருப்பது? எல்லாவிதத்திலும் நீ அவனையே ஒத்திருக்கின்றாய். இனித்துன்பப் படவேண்டாம் போய் உட்காரென்று சொல்லினர். உடனே ஸ்ரீ சானகிபிராட்டியாரையும், இராமாநுஜரையும், நமஸ்கரித்து உட்கார்ந்தார்.

ஸ்ரீ ரகுபதியானவர் குகப்பெருமானை முன்னே தமது திருக்கண்களாற் பார்த்து, சுக்கிரீவமகாராஜா முதலிய தோழர்களைப் பின்புபார்த்து, இந்த ஸ்ரீமான் சிறந்த தீர்த்தமாகிய கங்கையினிருகரைக்கு நாதன். தாயைப் பார்க்கினும் எல்லா உயிர்களிடத்திலும் அன்புள்ளவன். வேதமார்க்கத்தில் தவறுதலில்லாத வேடராஜனென்னும் பெயருள்ளவனென்றுசொல்லினர். இப்படி ஸ்ரீ ஜானகிரமணனானவர் சொல்லியருளினபோது சுக்கிரீவ மஹாராஜா முதலானவர்கள் பொருக்கென எழுந்து, ஒவ்வொருவராக குகப்பெருமானைக் காடாலிங்கனஞ்செய்து சிநேகித்தார்கள். இந்தப்பிரகாரநடந்துகொண்டிருக்கையில் சூரியபகவான் ஸ்ரீசக்கரவர்த்தித் திருக்குமாரருடைய ஜகந்மோகனாகார திவ்வியசௌந்தரியத்தை யாவருங்கண்டு சேவிப்பதினால் அவர் திருமேனிக்குக் கண்ணெச்சில் படுமேயென்னும் பிரமையால் உலகமுழுமையும் இருளால் மூடிவிட்டவன்போல அஸ்தமித்தான். இராகவபிரானானவர் சந்தியாவந்தனக் கடமையைச்செய்து, சேனைகள்யாவும் கடல்வளைந்துகொண்டதுபோலச் சூழ்ந்து சயனித்துக்கொள்ள சீதாபிராட்டியாரும் தாமுமாகச் சயனித்துக்கொண்டார். இராமாநுஜரும் குகப்பெருமானும் கையில் வில்லும் அம்புமேந்திக்கொண்டு, சிறிதும் கலங்காமல் இராமுழுமையும் காத்துக்கொண்டு திரிந்தார்கள். சூரியனும் உதயமானான்.

### ஸ்ரீராமபிரான் பரத்துவாசரிடத்தில் விடைபெற்று யாவரோடும் புட்பக விமானத்தின்மீதெழுந்தருளி அயோத்தியைநோக்கிச்செல்லுதல்.

கவி.

கதிரவனுதயகாலைக் கடன்கழித் திளவலோடும்
அதிர்பொலன்கழலினானவ் வருந்தவன்றன்னையேத்தி
விதிதருவிமானமேவி விளங்கிழையோடுங்கொற்றம்
முதிர்தருகருணையோடு முனிமனந்தொடரப்போனான்.

சூரியோதயமாகுநேரத்தில் காலைக்கடனை முடித்து இராமாநுஜரோடு சப்திக்கின்ற வீரக்கழலையணிந்த திருவடிகளையுடைய இராமமூர்த்தி அருந்தவத்தையுடைய பரத்துவாசமுனிவரைப் போற்றிசெய்து, விதிப்படியமைந்த புட்பகவிமானத்தின்மீது பிரகாசிக்கின்ற ஆபரணங்களை யணிந்த பிராட்டியாரோடும் வெற்றியிருந்த கிருபையோடும் இன்னு மற்றியாவரோடும் ககனமார்க்கமாக பரத்துவாசமுனிவருடைய மனம் பின்தொடர அயோத்தியாபுரியை நோக்கிச்சென்றனர். அந்தப்புஷ்பக விமானமானது ஆகாயத்திற் செல்லும்போது இஷ்ட நாயகனைக் கண்டமாத்திரத்தில் காமக்குறிப்புத் தோன்றநின்ற குலமங்கையைப்போ லாகியும், சித்திரம் உயிர்பெற்றாற்போல அலங்காரமுடையதாகியும், இந்திரலோகமும் ஒப்பாகாத இயற்கையழ குடையதாகியும் விளங்காநின்ற திருவயோத்தியாபுரியினது மதிலின்புறமானது தோன்றியது. அப்பால் சற்றுத்தூரம் புஷ்பகவிமானம் சென்றபோது அழகியமதில்களாற் சூழப்பட் டழகுவாய்ந்துள்ள அயோத்தியாநகரந் தோன்றுகிறக், ஞானமே திருமேனியாகவுடைய சானகிரமணனானவர் அதிமேதாவிகளாகிய தோழர்களைப் பார்த்து, இப்படிப்பட்ட அலங்காரத்தை புடையதென்று ஒருவராலும் சொல்லமுடியாத அயோத்தியாநகரந் தோன்றுகிறதென்று சொல்லுதலும் கைகளைக் கூப்பிக்கொண்டு யாவருமெழுந்து வணங்கினார்கள். அப்போது புஷ்பக விமானமானது ஆகாயத்தின்கண் வருவதானலும், அநேகசூரியர்கள் உதயமாயினாற்போல ஆஞ்சநேயர் முன் இராமபிரானுடன் புட்பகவிமானந் தோன்றிற்று.

## ஆஞ்சநேயர் ஸ்ரீராமதரிசனத்தைக் காட்டப்பரதர் காணுதல்.

கவி.

அன்னவேகாண்டியா லலர்ந்ததாமரைக்
கண்ணனும் வானரக் கடலுக்கற்புடைப்
பெண்ணருங்கலமுமின் பின்புதோன்றிய
வண்ணவிற்குமரனும் வருகின்றார்களே.

இவ்வண்ணம் விமானந் தோன்றினமாத்திரத்தில் ஆஞ்சநேயர் பரதாழ்வானைப் பார்த்து, ஓ பரதமஹாராசரே! அன்றலர்ந்த செந்தாமரைமலர்போன்ற திருநேத்திரங்களையுடைய இராமபிரானும், கற்புடையபெண்களுக்கு ஆபரணம்போலச் சிரேஷ்டமாக விளங்குகின்ற ஸ்ரீசானகி பிராட்டியாரும், உமக்குப்பின்னே அவதரித்த ஸ்ரீ லட்சுமணப் பெருமாளும், வானரசேனைகளும், விமானத்தின்மேல் வருகின்றதைப் பார்த்தருள்வீராகவென்று சொன்னார். பதினாலு லோகங்களும் தன்மேலேறிய போதிலும் வெற்றிடமிருக்கத்தக்க பெருமையுடையதா யொளியமைந்த விமானத்தின்மேல் ஊழிமுதல்வனாகிய இராமபத்திரர் தோன்றுகின்றாரென்று ஆஞ்சநேயர் சொன்னபோது, ஸ்ரீராமசுவாமியை எதிர்கொள்ளும்படி வந்தவர்களெல்லாம் ஒளியைவீசுகின்ற மேருமலையின் பெருங்குகையில் விளங்குகின்ற நீருண்ட மேகம்போல விமா

No. 73. ஸ்ரீராமரைக்காணவந்தகுகனைச்சன்மானித்தல்.



ஸ்ரீராமர்அயோத்தியைநோக்கிவருவதைபரதருக்கு ஆஞ்சநேயர் காட்டுதல்.



உயுத்தகாண்டம். பரத்துவாசராச்சிரமத்தைச்சமீபித்தல்.

னத்துக்குள்ளே எழுந்தருளிய இரகுபதியைக் கண்டவுடனே ஆரவாரித்த சந்தோஷ ஆரவாரமானது இராவணன் அரசாண்ட தென்னிலங்கைக்கு அப்புறத்திலும் சென்றது.

அப்போது சத்தியத்தை ஆசரித்து மாமிசதேகத்தை விட்டொழித்து விஷ்ணுலோகத்தை யடைந்த ஸ்ரீ சக்கரவர்த்தியாரது வருகையைக் கண்டாற்போல, காட்டுக்குச்சென்ற தன் பிராணபதமாகிய இராகவபிரானை பரதாழ்வான் கண்களாரக்கண்டனர். தாங்களிழந்துபோன பொருள் கிடைப்பதற்குமுன் வருந்திய துன்பங்களெல்லாம் அப்பொருள் கிடைத்தமாத்திரத்தில் மறந்து ஆனந்திப்பவர்களைப்போல, சுவாமியானவர் காட்டுக்குச்சென்றபின் மிகுந்த துக்கங்களால் வருத்தப்பட்ட பரதாழ்வானானவர் அதிக குதுகலங்கொண்டு, சீதாபதியைக் கும்பிடும்படி ஆஞ்சநேயர்கையைப் பற்றிக்கொண் டிருந்தகையை விட்டுவிட்டு இரண்டுகையையும் சிரமேற்குவித்துக் கொண்டு நின்றனர்.

### ஆஞ்சநேயர் விமானத்திற்பாய்ந்து பரதாழ்வார்வருகையை ஸ்ரீராமபிரானாதியர்க் கறிவித்தல்.

கவி.

அக்கணத்தனுமனு மவணின்றேகியத், திக்குறுமானத்தைச் செவ்வனெய்தியச்
சக்கரத்தண்ணலைத் தாழ்ந்துமுனின்றான், உக்குறுகருணைநீ ரொழுகுமார்பினன்.

இயாவரினும் அதிமேன்பாடுள்ள கீர்த்திமானாகிய பரதாழ்வானானவர் தாம்பற்றியிருந்த கையை விட்டவுடனே அநுமானானவர் அவ்விடத்தினின்றுமேலேயெழுந்து, தமக்கெதிரே வருகின்ற விமானத்தின் மேற்பாய்ந்து ஸ்ரீசக்கரவர்த்தித் திருக்குமாரருடைய சீர்பாதங்களை வணங்கி, பரதாழ்வார்படுகிற ஆற்றாமையை நினைத்துக்கொண்டு கண்களில் நீர் தாரைதாரையாகப் பெருகிக்கொண்டு நின்று, மகாலட்சுமிக்கு நிவாசஸ்தானமாகிய திருமார்பையுடைய எம்பெருமானே! சுவாலையைவீசிக்கொண் டெரிகின்ற பெருநெருப்பில் வீழ்ந்துவிடுவதற்குச் சர்வசித்தமாயிருந்த பரதாழ்வானை நாயேன் அடைந்து தேவரீருடைய வரவைச்சொல்லினேன். சொன்னபின்புதான் அயோத்தியா நகரத்திலுள்ளார் யாவரும் உயிரோ டிருப்பவர்களாயினார்களென்று சொல்லினர். அதுகேட்டருளிய இராயபத்திரர் அவரைக் கிருபையோடும் பார்த்து, அப்பா அஞ்சனைச்சிங்கமே! முன்பு யான்செய்த தீவினைகள் பலவற்றால் அநேக இடுக்கண்கள் ஒன்றின்பின்னொன்றாக வந்துகொண்டே யிருக்கின்றன. இப்போது யான்செய்த சுகிர்தத்தால் நீயொருவன் கிடைத்து அவற்றையொழிக்க ஒழிந்துபோகின்றன. ஓ என்தாயைப்பார்க்கினும் என்னிடத்ததிக அன்புவைத்துள்ளவனே! என்றுசொல்லிக் காடாலிங்கனஞ்செய்து, நீ எனக்குக்கிடைத்தது தவத்தாலென்று எனக்குமாத்திரமா சொல்லிக்கொள்வது? என்பிதாவுக்கும், என்தாய்மார்க்கும், என்தம்பிமார்களுக்கும், எம்மைச்சார்ந்தவர்களுக்கு மாகுமென்று சொன்னார்.

இவ்வாறு ஸ்ரீராமமூர்த்தியானவர் திருவாய்மலர்ந்தருளுகையில், எல்லாருடைய கீர்த்திகளும் தாழும்படியோங்கிய புகழையுடைய ஸ்ரீ பரதாழ்வானானவர் முத்திநெறிக்கு வழித்துணையும் தமக்குத்தாமே சமானமானவருமாகிய ஸ்ரீராமபிரானுடைய திருப்பாதுகைகளைத் தலையின்மேல் தாங்கிக்கொண்டும், இரண்டுகரங்களைக் குவித்துக்கொண்டும், கண்டவர்களுக்குள்ளே இந்தத்தேகத்திலும் உயிருண்டோ வென்றார்க்குக் கண்ணீரொழுக்கலாலும் — அழுதலாலும் — நடத்தலாலும் — உயிருண் டென்னும்படியாக மிகவுமிளைத்த தேகத்தையுடையவராய் விமானத்துக்குச் சமீபத்திலே நெருங்கிவந்தார். அப்படிவந்த பரதாழ்வானுக்குத் தருமதேவதைக்கோர் துணைவனாய் நிற்கின்ற ஆஞ்சநேயரானவர் தண்டன் சமர்ப்பித்துவிட்டு ஜானகிரமணரை நோக்கி, சுவாமி! தேவரீருக்குத் திருத்தம்பியாரும், சிந்தையுமொழியும் செல்லாதநிலைமை யுடையதாகிய பரமபதத்தை யடைவதற்குச் சுலபமார்க்கமாகிய பாரதந்திரியமென்னு மெய்ஞ்ஞானவரத்தை ஆண்டுகொண்டிருந்தவரும், தேவர்பக்கலி லுண்டாகிய நல்லகாலத்தால் வரம்பெற்றதாய் விஷயத்திற் பகைமை பாராட்டுபவருமாகிய பரதாழ்வான் இதோவந்து நிற்கின்றார். தம்முடைய திருக்கண்களால் கடாட்சித்தருளுமென்று வாய்பொத்திக்கொண்டு சொல்லினர்.

### ஸ்ரீராமர் பரதராதியரைக் காணவேண்டுமென் றெண்ணியதையறிந்த புட்பகவிமானம் பூமியிலிழிய, ஸ்ரீராமரும் இளையபெருமாளும் பரதருடன் தாய்மாராதியாவர்களையுங் கண்டுமகிழ்தல்.

கவி.

அவ்வயினயோத்திவைகுஞ் சனமொடுமக்குரோணி
தவ்வவிலாறுபத்தா யிரமொடேர்தாயரோடும்
இவ்வயினடைந்துளோரைக் காண்பனென்றிராமனுன்னச்
செவ்வையினிலத்தைவந்து சேர்ந்ததுவிமானந்தானும்.

ஸ்ரீ அஞ்சனாதேவி புத்திரர்காட்டத் தமதுதிருத்தம்பியாரைக்கண்ட ஸ்ரீ ரகுராமரானவர் ஸ்ரீதசரதசக்கரவர்த்தியாரைக் கண்டாலொத்த சந்தோஷசித்தராகி, தம்மைக்காணவந்த அயோத்தியாநகர ஜனங்களையும் — அறுபதினாயிரம் அக்குரோணி சேனாவீரர்களையும் — தாய்மார் மூவர்களையும் — தம்பிமார்களையும் — முனிவர்களையும் — என்கண்ணாரக் காண்பேனென்று நினைத்தமாத்திரத்தில் புஷ்பகவிமானமானது பூமியிலிறங்கியது. இராகவபிரானெழுந்தருளிய புஷ்பகவிமானம் அவரவர்கள்செய்த நல்வினையால் மண்ணுலகத்திலிருந்து சுவர்க்கலோகத்துக்குக் கொண்டுபோம்படி வந்ததுபோல எல்லாவுயிர்களும் களித்தன. தசரதராமரானவர் கௌசல்யாதேவிமுதலிய தாய்மார்களுக்குப் பசுவின்பக்கலில்வந்த இளங்கன்றுபோலவும், விஷயாந்தரமுதலியவற்றை யொழித்த பிரபன்னர்களுக்கு [illegible]வந்ததுபோலவும், வாலிபர்களுக்குத் தங்கள் கண்களிலாடுகின்ற பாவைபோலவும், பிரிவினோயினாலி



ளைத்த தேகத்தையுடைய பரதசத்துருக்கனர்களுக்கு நல்லுயிர்வந்தது போலவும், பெற்றதாயைக்காணாமையால் மிகவும் வருத்தமுற்று உழன்றுகொண்டிருந்த ஏழ்மையுடையோர்களுக்கெல்லாம் பெற்றதாய்வந்தாற்போலவும், அன்புடைய சத்புருஷர்களுக்கெல்லாம் தேவாமிர்தம்போலவும், மெய்ஞ்ஞானத்தையுடைய உயர்ந்தோர்களுக்கெல்லாம் தம்முடைய யதார்த்தநிலைமையோடு பிரசன்னமாயினது போலவும், மதர்த்த விழிகளையுடைய மங்கையர்களுக்கெல்லாம் களிப்பைத்தருகின்ற தேன்போலவும் ஆனார்.

ஸ்ரீ ஜானகிரமணரே தங்களுக்குப் பிராணனல்லாமல் வேறேயுண்டென்று நினையாத கோசலநாட்டாரும் அயோத்தியா நகரத்தாருமாகிய ஸ்திரீபுமான்கள்யாவரும், இராமநாதர் எதிரேவந்ததைக் கண்டவுடனே சித்திரப்பிரதிமை உயிரடைந்தாற்போல முன்னடைந்திருந்த சித்தப்பிரமை நீங்கி நல்லுணர்ச்சியை அடைந்தார்கள். ஸ்ரீ சக்கரவர்த்தித் திருக்குமாரர் வந்துவிட்டாரென்கிற ஆநந்தத்தால் சுமங்கலஸ்திரீகளும் புருஷர்களும் சுவாமி மேலும் ஒருவருக்கொருவர் தங்கள்மேலும் வாரிவாரித் தூவுகின்ற பரிமளப்பொடிகளும், சந்தனமும், நெய்யும், முத்துக்களும், புஷ்பங்களும், வாசனைத்தைலமும் ஒன்றாகச்சேர்ந்து பெருகி; குதிரைகளினுடைய நுரையோடும் யானைகளினுடைய மதத்தோடும் அவர்களது கண்களிலிருந்து ஒழுகாநின்ற நீரோடும் கலந்து கடலையுங் கடந்தோடியது. இந்தப்பிரகாரம் யாவரும் சந்தோஷங்கொண்டாடி வந்தபோது கருணாசலதியாகிய ராமநாதரைப்பெற்ற கௌசல்யாதேவியாதி தாய்மார்கள்மூவரும், தம்பிமார்களிருவரும், வசிஷ்டமுனி ஒருவரும் போய்ப் புஷ்பகவிமானத்தின்மீ தேறினார்கள். உடனே ராமபிரானானவர் தங்குலத்துக்கு ஆசாரியராகிய வசிஷ்டருடைய பாதங்களை வணங்கினார். வணங்கிய இராகவபிரானை அம்முநிபுங்கவர் ஆசீர்வதித்து, முன்தாம்கொண்டிருந்த துன்பங்கள் நீங்கும்படி இரண்டுகரங்களாலும் தூக்கி யெடுத்துப் பலமுறை தழுவினார்.

பின்பு இராமாநுஜர் அந்த முனிசிரேஷ்டருடைய பாதங்களை வணங்க, அவர் இரகுபதியைத் தழுவியதுபோலவே ஆசீர்வசனம்சொல்லி ஆலிங்கனம்செய்தனர். தாய்மார்கள் மூவரில் கைகேசியினுடைய அடிகளைச் செந்தாமரைமலர்போன்ற திருக்கண்களையுடைய ஸ்ரீ தசரதாத்மஜர் முன்னே நமஸ்கரித்து, பின்னே மற்றஇருவர்களுடைய பாதங்களையு நமஸ்கரித்தார். அம்மூவரும் கண்களில் நீர்பெருகி மிகவும் பிரீதியோடு தழுவினார்கள். ஜனகராஜபுத்திரியார் வசிஷ்டமுனிவரையும், மாமிமார்களையும், வணங்குகின்றார். தனக்கொப்பில்லாத வெற்றியையுடைய இலட்சுமணர் மூன்று தாய்மார்களையும் வணங்கினார். அப்படி வணங்கிய இளையபெருமாளை அத்தாய்மார் மூவரும் எடுத்தணைத்து, ஓ குழந்தாய்! நீதான் இராமனுக்குத் தம்பியென்னும்படி காட்டுக்கு அப்புருஷோத்தமனோடு கூடப்போய்வந்தா யென்றுசொல்லி ஆசீர்வதித்தார்கள்.

## ஸ்ரீராமர் தம்மைவணங்கிநின்ற பரதர் திருக்கோலத்தைக்கண்டு தழுவி ஒருவருக்கொருவர் அன்புகூர இலக்ஷ்மணர் சீதை இவர்கள் பரதரைவணங்கலும் சத்ருக்னர் ஸ்ரீராமனுதியரைவணங்கலும்.

கவி.

சேவடியிரண்டுமன்பி னடியுறையாகச்சேர்த்திப்
பூவடிபணிந்துவீழ்ந்த பரதனைப்பொருமிவிம்மி
நாவிடைபெயர்ப்பதொன்று முணர்ந்திலனின்றநம்பி
ஆவியுமுடலுமொன்றத் தழுவினனழுதுசோர்வான்.

ஆதியில் தாம்கொடுத்தருளிய திருப்பாதுகைக ளிரண்டையும் பரதாழ்வானவர் சுவாமியின்திருவடிக்குக் காணிக்கையாகவைத்துத் தண்டன்சமர்ப்பித்தனர். அப்படித் தண்டன்சமர்ப்பித்த பரதாழ்வானை ரகுராமரானவர் தமது திருப்பவளவாக்கால் ஆசீர்வசனம்சொல்வதொன்றும் அறியாமல் உதடுகள் துடிக்கக்கதறியழுது, உயிருமுடலும் ஒன்றும்படி காடாலிங்கனஞ் செய்து, தமது நேத்திரங்களிலிருந்து பெருகி யொழுகாநின்ற நீரால் இளமைக்கும் அழகுக்கு மாறாக அணிந்திருக்கின்ற சடைமுடியிலுள்ள மாசெல்லா நீங்கும்படியாகக் கழுவி உச்சியைமோந்து, கன்றைக்கண்ட பசுவைப்போலத் தமதுள்ளத்துள்ள அன்பு புறத்திலும் தோன்றும்படி நின்றார்.

அதுசமயத்தில் இரதகஜதுரகபதாதியாகிய நால்வகைச் சேனைகளின் ஆடம்பரமும் மற்றவைபவங்களும் ஸ்ரீ சர்வசுவாமியினுடைய திருப்பாதுகைகளுக்கே நடக்கும்படி செய்துவந்த ஸ்ரீ பரதாழ்வானுடைய திருவடிகளில், இந்திரனை வெற்றிகொண்ட இந்திரஜித்துவைக் கொலைசெய்த இளையபெருமாளானவர் வீழ்ந்து தண்டனிட்டார். தண்டனிட்ட இராமாநுஜரை பரதாழ்வான் எடுத்துத்தழுவினர். அவ்விருவர்களுடைய திருமேனிகளையுங் கண்ட அறிவுடையோர் யாவரும் இராமபத்திரரை விட்டுப் பிரியமாட்டாமல் அவரோடு பின்றொடர்ந்து சென்று காட்டில்வருந்திய திருமேனியோ ? இவ்விரண்டுகள் எதுமிகுதியும் இளைத்து மெலிந்திருப்பதென்று ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டு உள்ளழிந்தார்கள். கடைசியில் ஸ்ரீசத்துருக்கப் பெருமானானவர் தேவதேவநாயகனாகிய இராகவபிரானுடையசீர்பாதங்களிலும், இளையபெருமாளுடைய திருவடிகளிலும், நானாவித நல்லமலர்களைத் தூவிச்சேவித்துக்கொண்டார். அவ்விருவர்களும் எடுத்தணைத்தபின் மகேசுவரியாகிய சானகிபிராட்டியாருடைய திருவடிகளை வணங்கினர்.

அப்பால் இராகவபிரானானவர் பரத சத்துருக்னர்களுக்குத் தம்முடைய உயிர்த்தோழர்களாகிய சுக்கிரீவமகாராஜா முதலானவர்களை இன்னாரின்னார் இப்படிப்பட்டவர்களென்று சொல்லிக்காட்டினர். உடனே ஸ்ரீசுவாமியோடுகூட வந்தவர்கள் அவ்விருவர்களையும் வணங்கினார்கள். பரதாழ்வான் சுக்கிரீவமகாராஜாவையும், அங்கதப் பெருமானையும், குமுதனையும், சாம்பவனரையும், நீலனையும், மற்றும்படைவீரர்களையும், விபீஷணாழ்வா



ளையும், அவரவர்களுக்குத் தக்கவிதமாக மரியாதைகளைச் செய்தார். சுமந்திரனென்னு முதன்மைபெற்ற மந்திரியானவர் மற்ற மந்திரிமார்களோடும் - சேனாநாயகர்களோடும் - பந்துக்களோடும் - மத்தகஜங்கள் போன்ற இராஜகுமாரர்களோடும் - மற்றவர்களோடும் - இரகுநாதருக் கெதிரேவந்து, அருமைத்திருமேனி வாடிவருந்தும்படி காட்டுக் கெழுந்தருளியதை நினைக்குந்தோறும் தோன்றுகிற அழுகையும் – அந்தப்பதினான்கு வருஷங்களையுங் கழித்துவந்து இனிப்பட்டாபிஷேகஞ் செய்துகொள்வாரல்லவாவென்று நினைக்குந்தோறும் தோன்றுகிற மகிழ்ச்சியும், ஒன்றையொன்று அதிகரித்து உயரும்படியாகத் தொழுதெழுந்து கண்ணீர் பெருக்கிக்கொண்டு நிற்க, நம்மையனானவர் அவரைத்தழுவிக் குசலப்பிரசனைகள் செய்து ஆநந்தித்தார். இளையபெருமாளும் அப்படியே க்ஷேமங்களை விசாரித்துச் சந்தோஷித்தார்.

## யாவரும் புட்பகவிமானத்திலாரோகணித்து அயோத்தியாபுரிக்குப் பிரயாணமாக தேவர்கள் மலர்மாரிபொழிந்து ஆசீர்வதித்தல்.

கவி.

ஏறுகசேனையெல்லாம் விமானமீதென்றுதன்போல்
யாறிலாவீரன்கூற வந்துளவனிகவெள்ளம்
ஊறிரும்பரவைவானத் தெழிலியுளொளிக்குமாபோல்
ஏறிமற்றிளையவீர னிணையடிதொழுதன்றே.

அக்கால் சுமந்திரானவர் இராமபத்திரரைச் செவ்வையாயுற்றுப்பார்த்து, இனி யிந்தப்பூமிக்கு யாதொருகுற்றமு மில்லையென்று மற்ற மந்திரிமார்களைப்பார்த்துச் சொன்னார். தம்மோடொத்தவர்களும் தம்மினுயர்ந்தவர்களு மில்லாத இராமநாதரானவர் சேனைகளெல்லாம் விமானத்தின்மேல் ஏறக்கடவனவென்று கட்டளையிட்டனர். சமுத்திரநீரானது மேகத்திலடங்குவதுபோல அந்தச் சேனைகளெல்லாமும் விமானத்தின்மேலேறி இராமலட்சுமணர்களுடைய சீர்பாதங்களை வணங்கின: இவைகளையெல்லாம் அந்தரமார்க்கத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்த தேவர்கள்யாவரும் இந்த விமானத்தை அண்டங்களையெல்லா முண்ட சர்வேசுரனுடைய திருவயிற்றுக்குச் சமானமென்று சொல்லுவோமேயானால் அந்தத்திருவுதரத்தில் பிரமேந்திராதி சமஸ்த சேதனர்களும் அடங்கி யிருந்தார்களே யல்லாமல் தாம் அடங்கியிருந்ததுண்டோ ? இல்லையே: இந்த விமானத்திலே அந்தத் தேவதேவ நாயகனாகிய இராகவபிரான் எழுந்தருளி யிருப்பதால் இதற்கு அந்தத் திருவுதரம் ஒப்பாகமாட்டாது. பகவானுடைய திருவயிறே ஒப்பாகாது போகுமேயானால் சமுத்திர மொன்றைமாத்திரம் தனக்குளடக்கிய அகஸ்தியருடைய கையொன்றோ சமானமாகப் போகிறதென்று சொல்லிக் கற்பகமலர்களைத்தூவித் துதித்தார்கள்.

அப்போது இடிக்கூட்டங்களும் எழுசமுத்திரங்களும் ஒருமித்து ஆரவாரித்தாற்போல முரசங்களும், சங்கங்களும், மற்றவாத்தியங்களும், யானை

குதிரைகளுமொலிக்கின்ற ஓசையும், பிராமணர்களுடைய வேதகீதங்களினோசையுமுயர்ந்தோங்கித் திக்குகளெல்லாம்பரவிச்சத்தித்தவோசை; ஆகாயவீதியில் நின்று சமஸ்ததேவகணங்களும் — சித்தர்களும் — சாரணர்களும் — ஸ்ரீ சக்கரவர்த்தித் திருக்குமாரருக்குக் கூறும் பல்லாண்டொலியினால் அடங்கிப்போகின்றன.

### ஸ்ரீராமருடன் யாவரையுந்தாங்கிய புட்பகவிமானம் அயோத்தியிலிறங்குதல்.

கவி.

ஆனதோரளவையி னமரர்கோனெனும், வானவர்திருநகர் வருவதாமென
மேனிறைவானவர் வீசும்பூவொடும், தானுயர்புட்பக நிலத்தைச்சார்ந்ததால்.

இவ்வளவுகோஷத்தோடு அயோத்தியைநோக்கி ஆகாயத்திற் செல்கின்ற புஷ்பக விமானமானது இந்திரனுக்குக் களிப்புண்டாகும்படி சுவர்க்கலோகத்துக்குச் செல்வதுபோலிருக்கிறதென்று இந்தப் பூமியிலுள்ளோர் யாவரும் பேசிக்கொண்டிருக்கையில், இந்திராதி மற்றத்தேவர்களோடும் சுவர்க்கலோகமே பூலோகத்துக்கு வருவதுபோல அந்தப் புஷ்பகவிமானம் தேவர்கள் தூவுகிற மலர்மாரியோடு அயோத்தியா நகரத்தில்வந்திறங்கியது.

மீட்சிப்படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

முப்பத்தேழாவது,

## திருமுடிசூட்டுப்படலம்.

இப்படலத்தில் ஸ்ரீராமபத்திரரானவர் அயோத்தியாபுரியை யடைந்தபின் யாவரோடும் புஷ்பகவிமானத்தினின்று மிறங்கி நந்திக்கிராமத்தை யடைந்து தாம்கொண்டிருந்த தவவேடத்தினை மாற்றித் தேரேறிச்சென்று அரண்மனைக்குள்ளே பிரவேசிக்க, உடனே பரதாழ்வாருடைய பிரேரபணையால் வசிஷ்டமுனிவர் நிச்சயித்த திவ்யமுகூர்த்த நாளில் ஸ்ரீ ராமபத்திரரானவர் ஸ்ரீசீதாசமேதராய் பிரமதேவரால் நிருமாணிப்பித்த பட்டாபிஷேகமண்டபத் தெழுந்தருளியிருக்க, அக்கால் ஆஞ்சநேயராற் கொணர்ந்த கங்கைமுதலிய தெய்வதீர்த்தங்களால் திருவபிஷேகஞ்செய்யப்பெற்ற ஸ்ரீ சீதாபிராமரானவர் ஸ்ரீ வசிஷ்டபகவானால் திருமுடிசூட்டப்பெற்றுத் தம்பியர் மூவரோடு தரணியைப் பரிபாலித்திருந்தமை சொல்லப் படுகின்றது.

### ஸ்ரீராமர் நந்திக்கிராமத்தையடைந்து தாம்கொண்டிருந்த தவவேடத்தினைமாற்றி அயோத்தியாபுரிக் கெழுந்தருளல்.

கவி.

தழீஇயப்பரதனொடு நந்தியம்பதியைநண்ணி
வம்பலர்சடையுமாற்றி மயிர்வினைமாற்றிமற்றுத்





உயுத்தகாண்டம். திருமுடிசூட்டுபடலம்.

தம்பியரோடுந்தானுந் தண்புனல்படிந்தபின்னர்
உம்பருமுவகைகூர வொப்பனையொப்பச்செய்தார்.

திரிலோகவாசிகளாகிய புருடர்களிற் சிறந்த சிரேஷ்டசீலராகிய சக்கரவர்த்தித் திருக்குமாரரென்னும் இராமசந்திரமூர்த்தியானவர், தமது தம்பியாராகிய பரதாழ்வாரோடும் மற்றவர்களோடுந் திருவயோத்தியாபுரியை விட்டு அதற்குத் தென்மேற்குத் திசையிலுள்ளநந்திக்கிராமத்தையடைந்து, வாசனையுடையதாய்ப் படர்ந்திருக்கின்ற சடைமுடியைமாற்றிக் க்ஷௌரமுஞ் செய்துகொண்டு, எல்லாத்தம்பியரோடுங் குளிர்ச்சிபெற்ற சரயுநதியில் ஸ்நானஞ்செய்து தேவர்களுஞ் சந்தோஷிக்க தமக் குபாசனமூர்த்தியைத்துதித்து திருமண்காப் பிட்டுக்கொண்டு, பீதாம்பரதாரிகளாயும், சர்வாபரண பூஷிதர்களாயும், நந்திகிராமத்தைவிட்டு அயோத்தியா நகரத்தைச்சேர்வதற்கு சதுர்வேதங்களையுமொத்த நான்கு வெள்ளைக்குதிரைகளைக் கட்டிச் சூரியனைப்போல விளங்குகின்ற இரதத்தின்மேல் ஆரோகணித்தருளினார். உடனே அந்தத் திருத்தேரில் மற்றமூவர்களும் ஏறியருளி, அவர்களில் இராமாநுஜர் சுவாமிக்குப் பின்புறத்தினின்று வெண்கொற்றக் குடைபிடித்தார். சத்துருக்காழ்வான் பின்னே நின்று இரண்டு கரங்களிலும் இரண்டு சாமரைகளைப்பற்றி வீசினார். பரதாழ்வானவர் ஆநந்தபரவசராய்க் கண்ணீர் பெருகிக்கொண்டு முட்கோல் பிடித்துத் தேரைநடத்திச் சென்றார்.

ஸ்ரீ புருஷோத்தமராகிய இராகவபிரானெழுந்தருளிய திருத்தேருக்கு இரண்டு பாரிசங்களும் விபீஷணாழ்வானும், சுக்கிரீவமகாராஜாவும், யானையின்மேலேறிப் போற்றிசெய்துகொண்டு சென்றார்கள். அங்கதப்பெருமான் கொடிப்படையின் முன்னே போனார். அதின்பின் ஆதிசேடனையொத்த சிறியதிருவடிகளாகிய ஆஞ்சநேயர் திருத்தேருக்குப் பின்வந்தார். அறுபத்தேழுகோடி யானைகளின்மேல் வானரப்படைவீரர்கள் மானிடவுருக்கொண்டு, நல்ல ஆடையாபரணங்களைத் தரித்துக்கொண்டும், கலவைச்சந்தன முதலிய பூச்சுகளைப் பூசிக்கொண்டும், வெண்பட்டுக்குடை நிழலைச்செய்யவும் போனார்கள். நவகண்டங்களிலுள்ள இராஜபுருஷர்களில் சிலர்யானைகளின்மேலும், சிலர்பசும்பொன் தகடுவேய்ந்த தேர்களிலும், சாமரைகள் பக்கங்களில் வீசவும்-வெண்பட்டுக்குடைகள் பிடிக்கவும் - இரத்தினமய கிரீடங்கள் சிரசுகளில் பிரகாசிக்கவும்ஏறி கைகளைக்குவித்துச் சென்றார்கள். வானரமங்கையர்களெல்லாம் தெய்வஸ்திரீகளைப்போல உருவமாறி நல்ல பட்டுவஸ்திரங்களை யுடுத்தி, திவ்வியாபரண பூஷிதைகளாய் பிடியானைகளின்மேலும் - குதிரைகளின்மேலும் - மற்ற வாகனங்களின்மேலு மேறி விண்மீன் கூட்டங்களைப்போலச் செல்ல; அவர்களுக்கு நடுவே மகேசுவரியாகிய சானகி பிராட்டியார் விமானத்தின்மேல் சந்திரனைப்போலச் சென்றாள்.

ஆகாயவீதியினின்ற எல்லாத்தேவர்களு முனிவர்களும் இராகவபிரானும் ஸ்ரீ சீதாபிராட்டியாரு மெழுந்தருளுகிற திவ்வியசேனையைச் சேவிக்கும்

உள்ளக்களிப்பால் கற்பகமலர்களையும் வேறு சுகந்தமலர்களையும் கைக்கொள்ளாமல் வாரிவாரிச் சொரிதலாலே, இந்தப் பூமண்டலம் அந்தப் பூக்களாலேயே நிறைந்து தரைதோன்றப் படாமையால் அதைக்கண்ட நிறைந்த கல்வியாளர்கள் இப்பூமியைப் பூவென்று அழைத்தார்கள். அன்றுமுதல் இந்தச் சகத்துக்குப் பூவென்று பெயருண்டாயிற்று. இரகுநாதரானவர் காட்டுக்கெழுந்தருளிய பிரிவின்துன்பத்தாலே கோடைகாலத்தில் நீர்ப்பசையில்லாத மேகம்போலப் பதினான்குவருஷம் வரையில் மதநீர்ப்பெருக்காமல் இளைத்துச் சோம்பிக்கிடந்த யானைகளெல்லாம், இப்போது இராகவபிரானானவர் ஆரண்ணியத்தை விட்டுத் திருவயோத்தியாபுரிக் கெழுந்தருளியதை உணர்ந்தும் அவரைச்சேவித்தும் தாம்கொண்ட ஆநந்தமானது உள்ளத்தில் நிறைந்து அடங்காமற் பெருகியதுபோல மூன்றுமதநீரும் ஆறுபோடிக் கடலிற்போய் விழும்படிப் பெருகின. அந்த யானைகளைப்போலவே குதிரைகளெல்லாம், பேசமுடியாத ஊமைகள் ஏதோவொரு தெய்வவருளால் பேசும்படி பெற்றபோது எப்படிப்பேசுவார்களோ அதுபோலவும், இடிகளையேபெய்கின்ற மேகராசிகளைப்போலவும் கனைத்துக்கொண்டு சென்றன.

ஓரறிவுயிர்களாகிய மரங்கள் செடிகள் கொடிகள்யாவும் சர்வசுவாமியானவர் வனத்துக் கெழுந்தருளியதுக்கத்தால் அரும்பெடுத்துப் போதாகி மலராமலிருந்து, இப்போது ராமபத்திரர் அயோத்திக்கெழுந்தருளிய படியால் அந்தந்தப்பருவங்களி லரும்பி உடனே நல்லமணமுள்ள மலர்களையலர்ந்து சுகந்தத்தை வீசியன. ராமபத்திரர் அயோத்தியாபுரியைப் பிரிந்ததுமுதல் அதிக துக்கத்தையுடையவர்களாய்க் கலவியின்பத்தி லிச்சையில்லாமல் வெறுத்திருந்த ஸ்திரீசனங்கள் யாவரும் ரவிகுலசந்திர ரெழுந்தருளினவுடனே மிகுந்த செல்வச்செருக் குடையவர்களுக்கு உடல் முழுமையும்பொன்னிறம்போன்ற பசலைபூத்தது.

## ஸ்ரீராமச்சந்திரர் அயோத்தியாபுரியிலுள்ள அரண்மனையடைதல்.

கவி.

ஆயதோரளவில்செல்வத் தண்ணறுமயோத்திகண்ணித்
தாயரைவணங்கித்தங்க ளிறையொடுமுனியைத்தாழ்ந்து
நாயகக்கோயிலெய்தி நானிலக்கிழத்தியோடும்
சேயொளிக்கமலத்தாளுந் திருநடஞ்செய்யக்கண்டான்.

இவ்வண்ணமாக சகலஸ்தோம பரிவாரங்களோடு இராமச்சந்திரமூர்த்தியானவர் அயோத்திமா நகரத்தைச்சேர்ந்து, தாய்மார் மூவரையுஞ் சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து, பாதகாணிக்கையோடு வசிஷ்டமகாமுனியை வணங்கி, சீதேவியும் பூதேவியும் நடிக்க நவரத்தினங்களினும் நாயகமணிகளிழைத்த அரண்மனையை யடைந்தார்.

ஸ்ரீ ரகுகுலநாயகர் திருமாளிகைக்குள் எழுந்தருளினவுடனே புருஷர்களும்ஸ்திரீகளும்உடுத்தியிருந்தவஸ்திரங்களை அவிழ்த்துவிடவேண்டுமென்னும்



கருத்தில்லாதவர்களாயினும் தாமே அவிழ்ந்துவிடுகிற அந்தவஸ்திரங்களைக்கீழே விழவொட்டாமல் பலமுறைகைகளால் தாங்கிக்கொண்டவர்களாகியும், ஆநந்த பரவசத்தால் தேகம் பூரிப்பதினாலும் — துள்ளித்துள்ளிக் குதிப்பதினாலும் — தங்களையறியாமல் வஸ்திரங்கள் அவிழ்ந்துபோய் மதுபானஞ்செய்துமயக்கத்தாலே திருவாணிகளா யிருப்பவர்களைப் போன்றார்கள். பிராமணர்களுடுத்தியிருந்த வஸ்திரங்களை வேசியர்கள்பறித்து உடுத்திக்கொண்டார்கள். அந்த வேசையர்களுடைய ஆடைகளை அந்தணர்கள் பறித்துத் தரித்துக்கொண்டார்கள். ஒருவருடலோடு ஒருவருடல் நெருங்கிப்படுதலாலே ஸ்ரீசுவாமியினுடைய சேவையைக் காணும்படி சந்தனமுதலிய பூச்சுகளைப்பூசவு நேரமில்லாமல் அதிகவிரைவாய் வந்துவிட்டவர்களுடைய தேகமும், பூசிவந்தவர்களுக்கு இரட்டிப்பாகச் சந்தனமுதலானவை பட்டுப் பரிமளித்தன.

ஸ்ரீ ராமசுவாமியானவ ரிராஜசம்பத்தை நீங்கியிருந்த பதினான்குவருஷமு நல்ல ஆடையும் இரத்தினாபரணங்களும் தரியாமல் துக்கத்தையே அநுபவித்துக் கொண்டிருந்த மங்கையர்கள் யாவரும் இப்போது சர்வாபரணங்களாலும் தங்கள் உடல்மறையும்படியாகத் தரித்துக் கொண்டமையால், அந்தந்த அவயவங்களினிலக்கணந் தோன்றாமல் புருஷர்கள் மயங்கிநின்றார்கள். தேவபுருஷர்களுடைய தேகத்தி லணிந்திருந்த சந்தனம் இராஜபுருஷர்களுடைய தேகத்திலும் இராஜபுருஷர்களுடைய உடலிலணிந்த சந்தனம் தேவபுருஷர்களுடைய உடலிலும் பட்டுப் பரிமளிக்குங்காரணத்தால், தேவதாஸ்திரீகள் நம்முடையநாயகர் பூலோகஸ்திரீயை ஆலிங்கனம் செய்துவந்தாரென்றும் இராஜஸ்திரீகள் நம்முடையகணவர் தேவதாஸ்திரீயைத் தழுவிவந்தாரென்றும் தங்கள் தங்கள் கொழுநர்களோடு ஊடிக்கொண்டார்கள்.

## ஸ்ரீராமர் விபீஷணாதியர்க்கு அவ்வவ்வரண்மனைகளிலுள்ள பெருமைகளைக் காட்டென்று பரதாழ்வானுக்கு ஆக்ஞாபித்தல்.

கவி.

ஆயதோரளவிலையன் பரதனையருளிநோக்கித்
தூயவீடணற்குமற்றைச் சூரியன்மகற்குந்தொல்லை
மேயவானரங்களாய வீரர்க்கும்பிறர்க்குநம்
நாயகக்கோயிலுள்ள நலமெலாந்தெரித்தியென்றான்.

இவ்வாறு அரண்மனையெங்கும் சந்தோஷாரவாரமா யிருக்கும்போது ராமச் சந்திரானவர் பரதாழ்வானைக் கருணையோடு பார்த்து, ஹேபரதா! விபீஷணாழ்வானையும் — சுக்கிரீவ மகாராஜாவையும் — மற்ற வானரப்படைத் தலைவர்களையும் - மற்றவர்களையும் அழைத்துப்போய், நம்முடைய சக்கரவர்த்தியினுடைய மாளிகையிலுள்ள சிறப்புகளெல்லாவற்றையும் காட்டுகவென்று கட்டளையிட்டார். இப்படி கட்டளையிட்ட உடனே பரதாழ்வானவர் சுவாமிக்குத்தண்டன் சமர்ப்பித்து, அவர்கள் யாவரையும் அழைத்துச்சென்று பலதிருமாளிகைகளைக் கடந்துபோய் தேவர்களுக்கு வாசஸ்தலமாய் நவ

ரத்தினங்கள்பிரகாசிக்கின்ற மேருமலைபோலவும் மகாலட்சுமிக்கு நிவாசமாகவும் விளங்குகின்ற தசரத சக்கரவர்த்தியினுடைய அந்தப்புரத்தைக் காட்டினார். அந்தத் திருமாளிகை வச்சிரம் — மாணிக்கம் — நீலம் - மரகதம் - இவை முதலிய இரத்தினங்களால் கட்டப்பட்ட தாகையால் அவர்கள் அம்மணிகளுடைய கிரணகாந்தியால் உயிர்நிலைகுலைந்து, தங்கள் மனமும் மனோதிடமுமழிந்து புத்திமயங்கி, கண்ணிமைகொட்டாமல் அப்படியப்படியே நின்று விட்டார்கள்.

அப்பாலவர்கள் யாவரும் அங்கிருந்துநீங்கி, இரத்தினங்களுக்குள் கௌஸ்துவ மணியைப்போல விளங்குகின்ற ஒருதிருமாளிகையைக் கண்டு இது யாதென்று வினவினார்கள். அவர்களை பரதாழ்வானானவர் பார்த்து, பூர்வத்தில் இக்ஷுவாகுமகாராஜாவானவர் மூலதாமரையில் உற்பவித்த சதுர்முகனை நோக்கித் தவஞ்செய்துபெற்ற சதாகாலமும் இலக்குமிதேவி எழுந்தருளியிருக்கும் திருமாளிகையென்று சொன்னார். அதுகேட்டயாவரும் இதைத்துதிக்க எங்களால்முடியுமோ? முடியாது. என்றுதண்டன் சமர்ப்பித்துவிட்டு அப்பாற் சென்று மற்றோ ரிரத்தினமய மண்டபத்தைச்சேர்ந்து உட்கார்ந்தார்கள். அங்கு உட்கார்ந்துகொண்டு தாங்கள்கண்டுவந்த நானாவித விசித்திரமணிகளாலமைத்த தொழில்களை எண்ணி எண்ணி ஆச்சரியபூதர்களாயிருந்த அவர்களில் சுக்கிரீவமகாராஜாவானவர் பரதாழ்வானை நமஸ்கரித்து, ஓ பரிசுத்தகுணசீலரே! நம்முடைய பெருமானுக்குப் பட்டாபிஷேகஞ்செய்ய நல்லநாள் இன்னநாளென்று இன்னம் குறிக்காம லிருப்பதற்குக் காரணம் என்னவென்று கேட்டார்.

## ஸ்ரீராமசந்திரர் பட்டாபிஷேகத்திற்காக ஆஞ்சநேயர் சகலதீர்த்தமுங்கொண்டு வரச்செல்லுதலும், வசிஷ்டமுனிவரைவரவழைத்துத் திருமுடிசூட்ட நாளிடுதலும்.

கவி.

ஏழ்கடலதனிற்றோய மிருநதிபிறவிற்றோயம்
தாழ்விலாதிவண்வந்தெய்தற் கருமைத்தோர்தன்மைத்தென்ன
ஆழியொன்றுடையோன்றூத னனுமனைக்கடிதினோக்கச்
சூழ்புவியதனையெல்லாங் கடந்தனன்காலின்றோன்றல்.

இப்படி கேட்ட மகாராஜாவை பரதாழ்வானானவர் பார்த்து, ஏழ்கடலினது தீர்த்தமும், கங்கைமுதலிய நதிகளினது தீர்த்தமும், இவ்விடத்தேவந்து சேர்தற்குச் சிலநாள்கழியுமல்லவா? அவைவந்தபின்புதான் ஒரு திவ்வியமுகூர்த்தநாள் நிச்சயித்துக்கொள்ள வேண்டுமென்றார். அதுகேட்ட சுக்கிரீவமகாராஜா சரிதானென் றொப்புக்கொண்டு, நம்முடைய ஆஞ்சநேயரிருக்கச்சே அந்தத் தீர்த்தங்கள் இங்கே வருவது பிரயாசமோவென்று சொல்லி ஆஞ்சநேயரைப் பார்த்தார். அந்த மகானுபாவர் இந்தக்குறிப்பை அறிந்துகொண்டு, அந்தத்தீர்த்தங்கள்யாவுங் கொண்டுவரும்படி பூமியைத்தாண்டி அப்புறத்தே சென்றார்.



ஸ்ரீபரதரானவர் சாரதியை அழைத்து, எம்முடைய குலத்துக்கு ஆசாரியராகிய வசிஷ்டமுனிவரையும் - கணிதநூல்களில் வல்ல மற்றவர்களையும் - இங்கேவரும்படிச் செய்யவேண்டுமென்று சொல்ல, அப்படியே சாரதியானவன் சென்று அவர்களுக்குத் தெரிவிக்க, வசிஷ்டமுனிவரும் கணிதசாஸ்திரிகளும் வந்து மண்டபத்தைச் சேர்ந்தார்கள். வசிஷ்டபகவானைக் கண்டமாத்திரத்தில் யாவரும் எழுந்து தண்டன்சமர்ப்பித்தார்கள். உடனே பரதரானவர் ஒருதிவ்வியாசனத்தைக் காட்டி அதிலெழுந்தருளும்படி கேட்டுக்கொள்ள வசிஷ்டர் அந்த ஆசனத்தின்மே லெழுந்தருளினார். மற்றவர்களும் தங்கள் தங்களுக்குரிய பீடங்களில் உட்கார்ந்தார்கள். ராமபத்திரருடைய மூத்த திருத்தம்பியார் வசிஷ்டமுனிவரை நோக்கி, சுவாமி! பூதேவியும் அஷ்டலட்சுமிகளும் களிக்கும்படி தசரதாத்மஜருக்குத் திருமுடிசூட்டுநாள் எந்தநாளென்று கேட்டார். அம்முனிசிரேஷ்டர் நன்றாய் ஆலோசித்து நாளையென்று சொன்னார்.

## ஸ்ரீராமச்சந்திரர்க்குச்செய்யும் பட்டாபிஷேகத் திருமுகத்தைச் சகலதேசங்கட்கு மனுப்ப யாவருமயோத்தியாபுரியடைதல்.

கவி.

அடுக்கியவுலகமூன்று மாதரத்தூதர்கூவ
இடுக்கொருபேருமின்றி யயோத்திவந்திறுத்ததென்றால்
தொடுக்குறுகவியான்மற்றைத் தமுனியையிறுதிதோன்ற
ஒடுக்குறத்துரைக்குந்தன்மை நான்முகத்தொருவற்குண்டோ.

உடனே யங்குள்ள காரியக்காரர்கள் இந்தப் பூமண்டலத்துக்கு ஏகசக்கராதிபதியா யிருந்த தசரத சக்கரவர்த்தியாருடைய திருக்குமாரருக்குத் திருமுடிசூட்டு நக்ஷத்திரத்தையும் - வாரத்தையும் - இலக்கினத்தையும் குறித்தெழுதி, இந்திரகுருவாகிய பிரகஸ்பதிக்கொப்பாகிய முனிபுங்கவர்களுக்கும் - மற்ற தேசாதிபதிகளுக்கும் - தூதுவர்கள் வசமாகத் திருமுகங்களை அனுப்பினார்கள். அந்தத்தூதர்கள் திருமுகங்களைக் கொண்டு இந்தப்பூலோகமே யல்லாமல் மற்றச் சுவர்க்கபாதலலோகங்களுக்கும் போய்ச் சுவாமியினுடைய பட்டாபிஷேக சுபச்செய்தியைத் தெரிவித்தனர்கள். அந்த மங்களச்செய்தியைக் கேட்டவுடனே திரிலோகவாசிகளும் ராமநாதரானவர் திருமுடிசூடிக்கொண்டு சிங்காதனத்தின்மே லெழுந்தருளியிருக்கும் திவ்வியசேவையைச் சேவிக்கவேண்டுமென்கிற பேரவாவால் தங்கள் சுயதேசத்தில் ஒருவருமில்லாமல் அயோத்திமாநகரத்துக்குள் வந்து சேர்ந்தார்கள். அப்படிவந்து சேர்ந்தவர்களுடைய வைபவத்தையும், முன்னே அயோத்திமா நகரத்திலுள்ள வைபவத்தையும், ஒரு முடிவுதோன்றும்படி சொல்லச் சதுர்முகராகிய பிர்மதேவராலு முடியுமோ? முடியாது. ஆதலால் அந்தவைபவங்களை யெடுத்துவருணிக்காமல் விட்டுவிட்டு மற்றவைகளைச்சொல்லப் புகுந்தானென்று என்னை யிகழ்பவர்களில்லை.

இப்படி எந்த உலகத்தார்களும் வந்து சேர்ந்தபோது வசிஷ்டமுனிவர் இராமபத்திர ரிடத்துக்கு எழுந்தருளினார். அவர்பின்னே பரதாழ்வானும்-சுக்கிரீவமகாராஜாவும் - விபீஷணாழ்வானும் – சாம்பவரும் - அங்கதப்பெருமானும்-மற்றப்படைவீரர்களும்சென்று, அனந்தகலியாணகுண பரிபூரணராயெழுந்தருளி யிராநின்ற ரவிகுல சந்திரருக்குத் தண்டன்சமர்ப்பித்து, சர்வ சுவாமியே! நாளையதினம் தேவர் திருமுடிசூடு நல்லநாள். அதற்காக முதல் நாள் செய்யவேண்டிய தொடக்கத்தைச்செய்ய எழுந்திருமென்று கேட்டுக் கொண்டார்கள். அப்போது சாக்ஷாத் ருத்திரபகவானுக்குச் சமானமாகிய முனிசிரேஷ்டரும் அப்படியே கூறினர். அதுகேட்ட சுவாமியானவர் அக்கிரியைகளைச்செய்ய எழுந்துசென்றனர். பிரமதேவர் வந்திருந்து மயனென்னு நாமமுள்ள தெய்வத்தச்சனை நோக்கிப் பட்டாபிஷேகமண்டபங் கட்டவேண்டிய முறைமைகளைச் சொல்ல, மயனும் அந்தவண்ணமே பொன்னு நவரத்தினங்களுங் கொண்டு ஒருதிவ்யமணி மண்டபத்தை யாதொரு குறைவுமில்லாமல் நிருமாணஞ்செய்தான்.

முன்னே தீர்த்தங்கொண்டு வரும்படி தாவிச்சென்ற அஞ்சனாதேவிபுத்திரர் நான்கு திசைக்கடலினது தீர்த்தங்களையும், சப்த புண்ணியநதிகளினது தீர்த்தங்களையுங் கொண்டு தம்முடைய பிதாவைப்போல அதிக விரைவாய்வந்து சேர்ந்தார். அரசர்கள் பலநூறு யானைகளின்மேல் குடைநிழல்பரவப் பலபல ரத்தினக்குடங்களில் சரயுநதி தீர்த்தத்தைநிரப்பி ஏந்திக்கொண்டு, காளம் சங்கமுதலிய பலவாத்தியங்கள் முழங்கவந்து சேர்ந்தார்கள்.

## இராமபிரான் சீதாபிராட்டியாரோடு பட்டாபிஷேகமண்டபத்தில் சிம்மாத ஞருட[illegible]இருக்க யாவருமபிஷேகஞ்செய்தகங்குளிர வசிஷ்டமகாமுனிவர் சடங்கியற்றல்.

கவி.

மாணிக்கப்பலகைதைத்த வயிரத்தின்கால்கள்சேர்த்தி
ஆணிப்பொன்சுற்றுமுச்சி யழகுறச்சமைத்தபீடம்
ஏணுற்றபளிக்குமாடத் திட்டனரதனின்மீது
சேணுற்றதிரடோள்வீரன் றிருவொடும்பொலிந்தான்மன்னோ.

பளிங்குக்கற்களால் கட்டிய ஒரு சிங்காரமாளிகையில் மாணிக்கப்பலகைதைத்து வச்சிரக்கால்கள் சேர்த்துச்சுற்றிலும் பொன்னாற்சமைத்த பீடத்தின்மேல், ஸ்ரீராமபிரான் ஸ்ரீசானகிபிராட்டியாரோடு எழுந்தருளினார். சுமங்கலஸ்திரீகள் மங்களகீதங்கள் பாடவும், சாஸ்திரவிதிப்படி அந்தணர்கள் வேதகோஷம்செய்யவும், சங்கம் – தாளம் – முழவம் - பேரி – பூரி - இவை முதலிய பலவாத்தியங்கள் ஆரவாரிக்கவும், தேவர்கள் பூமழைசொரியவும் - வசிஷ்டர்முதலிய முனிவர்களும் - பிராமணர்களும் - மிகுந்த புத்திமான்களு நல்லொழுக்க முடையவர்களுமாகிய இராஜபுருஷர்களும் - மந்திரியர்களும் - முறையாக முன்னபிஷேகஞ் செய்தார்கள். சுக்கிரீவமகாராஜா, சாம்பவர்,



அநுமான், விபீஷணாழ்வான், குகப்பெருமான், முதலியயாவரும் முறையாகப் பின்னபிஷேகஞ் செய்தார்கள்.

அநுகாலத்தில் மரகதரத்தின மலையானது செந்தாமரைமலர்கள் பலபூத்துக் கங்காநதியினுடைய அலைகளின் துளிகளால் முழுமையு நனைந்து, இரண்டு பொற்குழைகளைத் தாவிப் பாய்கின்ற வேல்போலும் வடிவமைந்த விசால நேத்திரங்களையுடைய ஒருசொர்ணநிற மயிலோடும் வீற்றிருந்தாற்போல விளங்குகின்ற சாரணகிராமரை முனிவர்கள்முதலிய சாதுசஜ்ஜனங்கள் யாவரும் தங்கள் சனனநோய் நீங்கும்படி கண்களு மனமுங் குளிரச் சேவித்து ஆநந்தித்தார்கள். இந்தத் திருவபிஷேகத்தை வசிஷ்டமுனீந்திரர் பரமவைதிக மார்க்கத்தின்படி மந்திரங்களைச் சொல்லி நடத்தி, சுமந்திரனென்னு முதன்மந்திரியைச் சமீபத்தில் வைத்துக்கொண்டு மற்றச் சடங்குகளையும் இந்திரனுக்கு முடிசூட்டுங்காலத்தில் நடக்கும் கிரியா விசேடங்களைப்போல மிகுதியுஞ் செய்தனர்.

## இராமபிரானுக்கு வசிஷ்டமுனிவர் தமதுகரத்தால் முடிசூட்டுதல்.

கவி.

அரியணையநுமன்றாங்க வங்கதனுடைவாளேந்தப்
பரதன்வெண்குடைகவிக்க விருவருங்கவரிவீச
விரைசெறிகுழலியோங்க வெண்ணெயூர்ச்சடையன்றன்ன
மரபுளோர்கொடுக்கவாங்கி வசிட்டனேபுனைந்தான்மௌலி.

இவையெல்லா நடந்தபின்பு சிங்காசனத்தை மகாநுபாவராகிய அநுமான் சுமக்கவும், உடைவாளை அங்கதப்பெருமான்பற்றி நிற்கவும், பரதாழ்வான் வெண்கொற்றக்குடை பிடிக்கவும், லட்சுமண சத்துருக்னர்கள் இருபுறத்திலு நின்று சாமரைவீசவும், வாசனை வீசும்படியாகிய மலர்மாலையையணிந்த கூந்தலையுடைய சீதாபிராட்டியார் பக்கத்திலெழுந்தருளவும், திருவெண்ணெய்நல்லூர் சடையப்பமுதலியாருடைய மரபினராகிய வேளாளர்கள் மாணிக்க கிரீடத்தை யெடுத்துத்தர அக்கிரீடத்தை வசிஷ்டபகவானானவர் இராமபிரானுக்குச் சூட்டினார். அசுரகுலகுருவாகிய சுக்கிரனும் – தேவகுலகுருவாகிய பிரகஸ்பதியும் - கணிதசாஸ்திரவிதிப்படி குறித்த நல்லமுகூர்த்தத்தில் திரிலோகத்தார்களும் துள்ளித்துள்ளிக் குதித்து ஆனந்திக்க, சதுர்வேதங்களோடும் ஸ்ரீதேவி பூதேவிகளோடும் சர்வேசுரனாகிய ரவிகுலநாயகர் திருமுடிசூடியருளினார்.

அவாப்தசமஸ்தகாமராய்ப் பத்தபராதீனராய் விளங்குகின்ற ஞானமே திருமேனியாகவுடைய இராமபிரானானவர் தம்மிடத்தில் மிகுதியு மன்புடையோர்களுடைய கருத்தின்படி அதிதிருப்தி யுடையவராய்ச் சூடிக்கொண்ட திருமுடியானது அவருடைய சிரசின்மேல் பிரகாசித்துக்கொண் டிருப்பினும், சமஸ்தசேதனர்களு மிகுதியுங்களிக்கின்ற களிப்பை யோசித்துப்பார்த்தால் ஒவ்வொருசேதனனும் தன்தன்முடியினும் அன்றந்தமுடியைத் தரித்துச்

கொண்டு இராச்சியாதிகாரம் பெற்றுக்கொண்டாற்போ லிருந்தது. பலநாள் தவஞ்செய்து தன்னுடைய இயற்கைக்குத்தக்க நாயகராகிய இராமச்சந்திரனையடைந்து இடையேபிரிந்து வருந்திக்கொண்டிருந்த பூதேவியானவள், இப்போது புருஷோத்தமராகிய இராமநாதனை மாந்தளிர்போலச் சிவந்து மிருதுவாகிய கைகளைநீட்டி ஸ்தனங்கள் அவருடைய மார்பிலழுந்தும்படி தழுவத்திருமுடி சூட்டிக்கொண்டு சானகிபிராட்டியோடு இராகவபிரான் பட்டாபிராமரா யெழுந்தருளியிருக்கும் திவ்யசேவையைக்கண்ட வசிஷ்டர்முதலிய பிரம்மரிஷிகளும் - மற்றப் பிராமணசஜ்ஜனர்களும் - ஆநந்தபரவசர்களாகிச் சர்வசுவாமியினுடைய திருவழகுக்குக் கண்ணெச்சில் படுமோவென்கிற பயத்தால் பிராமண ஸ்திரீகளைக்கொண்டு ஆர்த்திநீர்சுற்றி மங்களாசனஞ்செய்து, வேதாங்கத்தாலும் வேதமொழிகளாலும் துதிசெய்தார்கள்.

### இராமபிரான் தம்பிமார்க்கும் வதிஷ்டமுனிவரால் மகுடந்தரிப்பித்து பரதருக்கு இளவரசுதரல்.

கவி.

விரதநூன்முனிவன்சொன்ன விதிமுறைவழாமைநோக்கி
வரதனும்இளைஞர்க்காக்கண் மாமணிமகுடஞ்சூட்டிப்
பரதனைத்தனதுசெங்கோ னடாவுறப்பணித்துநாளுங்
கரைதெரிவிலாதபோகக் களிப்பினுளிருக்குங்காலை.

விரதசீலராகியும் வேதவித்தாயுமுள்ள வசிஷ்டமகாமுனிவர் தமக்குக் கற்பித்த சாஸ்திரவிதிப்படி வேதவாக்கியங்களைக் கருதி, இராமபிரானானவர் இலக்ஷுமணர் பரதர்சத்ருக்னர்களாகிய திருத்தம்பிமார்களுக்குத் தமதுகுலகுருவாகிய வசிஷ்டமாமுனிவர் திருக்கரத்தாலேயே திருமுடிசூட்டுவித்து, பரதராகிய திருத்தம்பியாரை இளவரசாக்கி நீயுலகத்தைக்காப்பாயென்று தமது செங்கோலையவரிடந்தந்து நாள்தோறும் கரைகாணாத பேரின்பமாகிய ஆனந்த சந்தோஷகராகியிருந்தனர். பரதமகாராஜர் இளவரசாகி இராச்சியத்தை அரசுபுரிந்தனர்.

திருமுடிசூட்டுப்படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

முப்பத்தெட்டாவது,

## விடைகொடுத்த படலம்.

இப்படலத்தில் ஸ்ரீராமபிரான் சீதாபிராட்டியாரோடு கொலுவிருத்தலும், பட்டாபிஷேகத்திற்கு வந்த பிராமணர் அரசர்இவர்களுக்கு வெகுமானமீந்தனுப்பலும், சுக்கிரீவர்முதலிய வானரவீரர்களுக்கும் விபீஷணர்க்கும் குகப்பெருமானுக்கும் வெகுமானமீந் தவ்வவர்களையவரவரிருப்பிடம் செலுத்தித்தாம் தமது தம்பியரோடு அரசபுரிதலும் சொல்லப்படுகின்றது.



### ஸ்ரீராமபிரான் சீதாபிராட்டியாரோடு அரசவீற்றிருத்தற் சிறப்பு.

கவி.

பூமகட்கணியதென்னப் பொலிபசும்பூரிசேர்த்தி
மாமணித்தூணிற்செய்த மண்டபமதனினுப்பண்
கோமணிச்சிவிகைமீதே கொண்டலுமின்னும்போலத்
தாமரைக்கிழத்தியோடுந் தயரதராமன்சார்ந்தான்.

விரிகடலுவெட்புத்த மின்னெனவாரம்வீங்க
எரிகதிர்க்கடவுடன்னை யினமணிமகுடமேய்ப்பக்
கருமுகிற்காசுசெந்தா மரைமலர்க்காடுபூத்தோ
ரரியணைப்பொலிந்ததென்னவிருந்தனனயோத்திவேந்தன்.

பூமாதேவிக்கு ஆபரணம்போல் விளங்குகின்ற பசும்பொன்னினாற் சுவரெழுப்பி மாணிக்கத்தாற் செய்த தூண்களினிறுத்திய மண்டபத்தின் மத்தியில் இரத்தினசிங்காதனத்தின்கண் மேகமுமின்னலும்போல தாமரைமலரின்கணெழுந்தருளியமகாலட்சுமியாகிய சீதாபிராட்டியாரோடு தசரதச்சக்கரவர்த்தியின் திருக்குமாரராகிய இராமமூர்த்தியானவர் பரந்துவிசாலித்த சமுத்திரத்தின்மத்தியில் மலர்ந்தமின்னலைப்போல் இரத்தினாபரணங்கள் மார்பில்பிரகாசிக்க, சூரியனைப்போலுஞ் சொலிக்கின்ற கூட்டமாகிய மணிகளாற்செய்த கிரீடம்சிரசில்விளங்க, செந்தாமரைமலர் மிகுதியுமலர்ந்த ஒருமேகராஜாசிங்காதனத்தி லிருந்ததைப்போல எழுந்தருளினார்.

இவ்வண்ணம் சகலவைபவங்களையும் அநுபவித்துக்கொண்டிருக்குங் காலத்தில் மரகதமலையின் பக்கங்களில் வெண்மையாகிய சந்திரிகை பாய்வது போல வேல்போலும் கண்களையுடையமாதர்கள் தாமரைமலர்போன்ற கைகளால் சாமரைகளைப்பற்றி வீசவும், தம்முடைய ஜகன்மோகனாகாரதிவ்வியவடிவழகில் ஈடுபட்டு நாகர்களும் தேவர்களும் பலவாறு துதிக்கவும், சந்திரனைக்கண்டு உள்ளம்கோணும்படி பதினாலு லோகங்களிலும் தன்னுடைய குளிர்ந்த ஒளிவீசிக்கொண்டு பிரதாப லங்கேசுரனை வெற்றிகொண்ட கீர்த்தி மேலோங்கிப் பரவியதுபோல் வெண்கொற்றக் குடைநிழலைச்செய்யவும், கற்புள்ள சுமங்கலி பிராமணஸ்திரீகள் மங்கலகீதங்கள்பாடவும், ஸ்ரீமத்வேதமார்க்கப்பிராமண சனங்கள் ஆசீர்வசனங்களைச் சொல்லவும், தாளம் முழங்கவும், சங்கமுதலான மங்கள வாத்தியங்கள் முழங்கவும், சேல்போலப்பிறழ்கின்ற கருங்கண்களையும் கோவைக் கனிபோன்ற சிவந்தவாயையும் தாமரைமலர் போன்ற முகத்தையுமுடைய சௌந்தரியவதிகளாகிய வேசியாஸ்திரீகள் நடனஞ்செய்யவும், அலைகளையெறிந்துகோஷிக்கின்ற சமுத்திரத்தினோசையும் அடங்கும்படி நானாவாத்தியங்கள் முழங்கும்படியாகவும்ஐம்பத்தாறுதேசாதிபதிகளும் அயோத்தியாநகரத்தினது பர்வதாகாரமாகிய கோபுரவாயிலில் நெருங்கி வந்து பகவானுடைய திவ்விய கீர்த்திகளையெடுத்துப் புகழ்ந்துமுடிகள் ஒவ்வொன்றொன்று தாக்கும்படி வணங்குந்தோறும் சீர்பாதங்களிரண்டும் சிவக்கவும், சுமந்திரர் முதலாகிய மந்திரியார்களும் முனிவர்களும் படைத்தலைவர்களும்

சூழ்ந்து துதிக்கவும், பவளம்போன்ற சிவந்த வாயாற்கற்புடைய மங்கையர்கள் பல்லாண்டு சொல்லவும், சிங்காசனத்தின்மேல் தேவராசனைப்போல இராமச்சந்திரர் அரசுவீற்றிருந்தார்.

நித்தியவிபூதி லீலாவிபூதி நாயகராகிய இராகவப்பெருமான் அரசு வீற்றிருக்கும்போது மயிந்தன் துமிந்தன் கும்பன் அகம்பன் அநுமான் குமுதாக்ஷன் சதவலி குமுதன் ததிமுகன் முதலாகிய அறுபத்தேழுகோடி வானரவீரர்களோடு எழுபது வெள்ளவானர சேனைகளுஞ்சூழ்ந்துவர சூரியபுத்திரராகிய சுக்ரீவ மகாராஜாவும், ராட்சசகுலவீரரோடு விபீஷணாழ்வானும், புள்ளிகளமைந்த புலியினதுவாலை இறுக்கக்கட்டிய அரையும் சுழல்கின்ற செங்கண்ணும் மலைபோல் உருண்டு திரண்ட புயங்களும் உடையவராய்த் தம்முடைய வேடுவச்சேனை சூழ்ந்துவர ஒரு சிங்கம்போல் குகப்பெருமானும் வந்து தண்டன் சமர்ப்பித்துக் கைகளைக் கூப்பிக்கொண்டு நின்றார்கள். இராமசந்திரரும் அவர்களிடத்துத் தமக்குண்டாகிய பேரன்பு மறையாமல் முகத்தில் தோன்றும்படிக் கருணையாகக்கடாக்ஷித்து அவர்களைக்கட்டி ஆலிங்கனஞ் செய்து போலவே அன்போடு இனியவார்த்தையால் தமது திருப்பவள வாய்திறந்து யாதொரு குற்றமில்லாத வெற்றியாளர்களே! இங்கே உட்காருமென்று சொல்லினர். அவர்கள் யாவரும் அப்படியே ஆசனங்களின்மேல் உட்கார்ந்து இமைகொட்டாமல் சுவாமியினுடைய வடிவழகைப் பார்த்துப்பார்த்து ஆனந்தித்துக்கொண்டிருந்தார்கள் ஸ்ரீமத்வேதமார்க்கத்தில் ஒழுகாநின்ற மெய்ஞ்ஞானச்செல்வர்களாகிய முனி சிரேஷ்டர்களும் நான்குவேதங்களையும் ஐயமற ஓதியுணர்ந்த கிரகஸ்தாச்சிரமத்தவர்களும் வேதத்திலும் மநுஸ்மிருதியிலும் சொல்லியபடி நடக்கின்ற உண்மையறிவுடைய வானப்பிரஸ்தாச்சிரமத்தர்களும் குருகுலவாசஞ்செய்து, சாஸ்திரங்களையும் வேதங்களையும் அவற்றைச்சார்ந்த நூல்களையும் சந்தேக விபரீதமில்லாமல் கற்றறிகிற பிரமசாரியாச்சிரமத்தார்களும் பாரம்பரியமாய்ப் பலநூல்கற்றுணர்ந்த வித்வஜ்ஜனர்களும் அயோத்தியாநகரத்துக் கிறைவராகிய ஸ்ரீரகுநாயகரை முறையாகச்சூழ்ந்து தங்கள் தங்களுக்குரிய பீடங்களின்மேல் உட்கார்ந்தார்கள் பிரமேந்திராதி சமஸ்த தேவர்களும் முனிவர்களும் வேண்டிக்கொண்ட பிரார்த்தனையின் பொருட்டுத் திருப்பாற்கடலில் திருவனந்தாழ்வான்மேல் சயனித்து திருக்கண் வளர்வதைவிட்டு சீர்வளப்பமிகுந்த அயோத்தியாநகரத்தில் வந்து அவதரித்த நிர்மல ரூபராகிய காகுஸ்தரை வணங்கித்துதித்துச் சமஸ்த தேசாதிபதிகளும் மற்றவர்களும் தங்களுக்குரிய ஆசனங்களின்மேல் வீற்றிருந்தார்கள்.

### பட்டாபிஷேகத்திற்கு வந்த பிராமணர்களுக்கும் சகலதேசவரசர்களுக்கும் ஸ்ரீராமச்சந்திரர் வெகுமானந்தந்துவிடையீதல்.

கவி.

மறையவர்தங்கட்கெல்லா மணியொடுமுத்தும்பொன்னு
நிறைவளம்பெருகுபூவுங் காபியுநிரைத்துமென்மேல்



குறையிதென்றிரந்தோர்க்கெல்லாங் குறைவறக்கொடுத்துப்பின்னர்
அறைகழலரசர்தம்மை வருகெனவருளவந்தார்.

இந்தப்பிரகாரம் நித்தம்நடந்துகொண்டுவர இரண்டுமாதங்கழிந்தது. தேவர்கள் முதலாகிய சாதுஜனங்களுடைய துக்க நிவாரணார்த்தமாகத் திருவயோத்தியாபுரியி லவதரித்து அவைதிக மார்க்காநுசாரிகளாகிய துஷ்டராட்சசர்களைச் சங்கரித்த ராமபிரானவர், சதுர்வேதிகளாகிய பிராமணர்களுக்கெல்லாம் ரத்தினமும் முத்தும் பொன்னும் விளையத்தக்கபூமியும் பசுவும் தானஞ்செய்தும், எங்களுக்கு இன்னது குறைவு என்றுசொல்லியாசித்தவர்களுக்கெல்லாம் அவர்களுடைய உள்ளக்குறைவு நீங்கும்படிவேண்டியவற்றைத் தானஞ்செய்தும், அவர்களுக்குத் தண்டஞ்சமர்ப்பித்து அவர்களெல்லாரையும் அனுப்பிவிட்டு அரசர்களை வரும்படி உத்திரவுசெய்தனர். அப்படியே அரசர்களும் வந்தார்கள் வந்த அரசர்களைக் கிருபையோடுபார்த்து அவரவர்களுக்குத் தக்கபடி தேசம்-சிவிகை-ரத்தினகிரீடம்-ரத்தினாரம்-முத்தாரமிவைமுதலிய ஆபரணங்கள் - குதிரை-தேர்-யானை - பீதாம்பரம் இவைகளை உள்ளன்போடு கொடுத்து அவர்கள் தங்கள்தங்கள் பதிகளுக்குப் போகும்படி கட்டளையிட்டனர்.

### சுக்ரீவர் ஆஞ்சநேயர்முதலிய வானரவீரர்கட்கும் விபீஷணருக்கும் குகப்பெருமானுக்கும் வெகுமானமீதல்.

கவி.

சம்பரன்றன்னைவென்று தயரதனின்றகாலத்
தும்பர்தம்பெருமானீந்த வொளிமணிக்கடகத்தோடும்
கொம்புடைமலையுந்தேருங் குரகதக்குழுவுந்தூசும்
அப்பரத்தனைத்தாநீத்தா னலரிகாதலனுக்கீந்தான்.

வெளுத்த திருப்பாற்கடலில்யோகநித்திரை செய்வதைவிட்டு அயோத்தியாநகரத்தில் வந்த ஸ்ரீராமச்சந்திரரானவர் சுவர்க்கலோக வாசிகளை நாளுவித இடுக்கண்செய்த சம்பராசுரனைசெயங்கொண்ட தசரதசக்கரவர்த்தியாருக்கு அக்காலத்தில் இந்திரன் மனங்களித்துக் கொடுத்த தெய்வமணிகளிழைத்த கடகத்தையும், யானைகளையும், குதிரைகளையும், தேர்களையும் நல்லசொர்ணாபரணங்களையும் சுக்கிரீவமகாராஜருக்கு வெகுமதியாகக் கொடுத்தார். யாதொரு பழிச்சொல்லுமில்லாத ஜயராமரானவர் அறிவுடையோரால் அங்கதனென்னும்பெயரை அழகுபடும்படி திருத்தும் விதம்போல இட்சுவாகு சக்கரவர்த்திக்குப் பூர்வத்தில் பிரமதேவரானவர்கொடுத்திருந்த வாகுவலயத்தை அங்கதப்பெருமானுக்குக் கொடுத்தார். அப்போது அங்கதப்பெருமான் கொண்ட ஆனந்தத்தை யாரால்அறிந்து சொல்லமுடியும். மேலும் அந்த அங்கதப்பெருமானுக்குப் பெரியவிலைமதிப்புள்ள ரத்தினாரத்தையும் பீதாம்பரத்தையும் குதிரைகளையுங் கஜசிரேஷ்டங்களையும் கொடுத்து உனக்கு நீயேஅல்லாமல் வேறு ஒப்பில்லாதவனே! அப்பா அங்கதா! சூரியகுமாரராகிய சுக்கிரீவமகாராஜனைப் பிரியாமல் அவருடைய அபிமதாநுசாரியாய் நடந்து கொள்ளென்றார்.

நித்தியமாய் வழங்கிக்கொண்டிருக்கின்ற கீர்த்தியையுடைய சக்கரவர்த்தித்திருக்குமாரர் அனுமானைக் கருணையோடு கடாட்சித்து நீசெய்த மகோபகாரத்தை எமக்கு யார்செய்யப் போகிறார்கள் அதற்குப் பிரதியுபகாரமாக யான் செய்யவேண்டியதென்னவிருக்கிறது. எமக்காகக்கொடிய அரக்கர்களோடு போர்செய்த திண்ணியதோள்களையுடையானே! இதோ என்மார்பிலணிந்த வச்சிர மணியாரத்தை அணிந்துகொள்ளென்றார். என்று சொன்னமாத்திரத்தில் ஆஞ்சநேயரானவர் மிகவும் நாணத்தோடு தலைவணங்கி வாயைப்புதைத்து முன்தானையை மடக்கியொதுக்கிக் கொண்டு ஒன்றும்பேசாமல்பயபக்தியோடு நின்ற வாயுபுத்திரரை நன்றாயுற்றுகடாட்சித்து ஸ்ரீசர்வசுவாமியானவர் தம்முடைய திருமார்பிலணிந்திருந்த வச்சிரரத்தினாரத்தையும் மெல்லிய பீதாம்பரத்தையும் யானைகளையும் குதிரைமுதலியனவையும்கொடுத்தனர். சர்வேசுரனுடைய திருமார்பைநீங்கி மிதிலாபுரியில் திருவவதாரஞ்செய்த சானகிபிராட்டியாரை சுவாமியானவர் கடைக்கண்ணால் கடாட்சித்தனர். அக்குறிப்பை அறிந்துகொண்டு பிராட்டியாரும் முன்னே தமக்குச்சரஸ்வதிதேவிசமர்ப்பித்த முத்தாரத்தைத்தமது திருக்கரத்தால் எடுத்துமகாபிரீதியோடு சிறியதிருவடிகளுக்குக் கொடுத்தனர். சமஸ்தஅண்டங்களையுமவற்றிலுள்ள சேதனாசேதனங்களையும் முன்னே தம்முடைய உந்திக்கமலத்தின் வழியேதந்த பரந்தாமராகிய ராமநாதரானவர் விண்மீன்களைவென்று சந்திரனுக்கொப்புள்ளதும் இந்திரன்தரித்துக் கொள்ளத்தக்கதுமாகிய முத்தாரத்தையும் மற்றுஞ்சில ஆபரணங்களையும் யானை குதிரைகளையும் பீதாம்பரத்தையும் சாம்பவந்தருக்கும், சிறந்தநவமணிமாலையையும் முத்துமாலையையும் பொன்னிழையால் நெய்தவஸ்திரத்தையும் ஒப்பில்லாத பொன்னணிகளையும் மற்றும்பலவணிகளையும் யானை குதிரைகளையும் நீலனுக்குக்கொடுத்தார். ஆதிகாலத்திலே சதுர்முகனைச் சிருட்டித்த பகவானாகிய ரகுநாயகர் மத்தகஜங்களையும் சுவேதாசுவங்களையும் அனேகமான பொன்னாபரணங்களையும் மாணிக்க மாலையையும் மேலும்யோக்கியமான பலவஸ்துக்களையும் சதவலியென்னும் படைவீரனுக்கும், விலைமதிக்க அருமையானதும் தனக்குச் சமானமில்லாததுமாகிய ஒளியுள்ள மணியாரத்தையும் பொன்வஸ்திரத்தையும் மதத்தயானை குதிரைகளையும் கேசரி என்னும் படைத்தலைவனுக்குங்கொடுத்தார். கோசலநாட்டு அரசனாகிய ராகவபிரான் ரத்தினாரங்களையும் கனகாம்பரத்தையும் கஜதுரகங்களையும் இப்படிப்பட்ட அளவில்லாத திவ்விய வஸ்துக்களையும் குமுதன் தாரன் பனசன் ஆகிய இவர்களுக்கும், கண்டோர் ஆநந்திக்கும்படி அறுபத்தேழுகோடிப்படைத்தலைவர்களில் அவரவர்களுடைய யோக்கியதைக்குத் தக்கபடி முத்தாரம் மணியாரம் பொன்னணிகள் வஸ்திரங்கள் கஜம் துரகம் முதலியவற்றைக் கொடுத்து இனியவார்த்தைகளைப்பேசி, கடலைப்போல ஓங்கிப்பெருகிய எழுபதுவெள்ளம் வானரவீரர்களைக் கடாக்ஷித்து தம்முடைய கருணையைப் பாலித்தனர்.

வானரர்யாவர்களுக்கும் நடக்கவேண்டிய முறைமையாவும் நடத்தினார். க்ஷீரசாகரத்தில் திருவனந்தாழ்வான்மேல் செய்யும் அறிதுயிலைநீங்கி அயோத்தியில்வந் தவதரித்த எமதய்யனானவர் பின்பு மின்னலினது திரட்சியையொத்த முடியைத்தரித்த சிவந்த நேத்திரங்களையுடைய விபீஷணாழ்வானைத் திரு



வையோடு திருக்கண்மலர்சாத்தி இந்தச் சராசரங்களையெல்லாம் சுமக்கும் பெருவலியுள்ள உனக்கு நீயே ஒப்பில்லாமல் வேறொருவரும் ஒப்பாகார். ஒருவருண்டென்று சொல்லினும் பொன்னை இரும்பு ஒத்ததாயினும் ஒப்பாகமாட்டாரென்று அவருடைய உண்மைநிலையை எடுத்துப் புகழ்ந்து முன்னே தேவர்கள் தமக்குச் சமர்ப்பித்த ரத்தினக்கடகத்தையும் மதயானைகளையும் குதிரைகளையும் ரதங்களையும் மணிகளழுத்திய பொன்னணிகளையும் பொன்னிழையால் நெய்யப்பட்ட வஸ்திரங்களையும் கலவைச் சாந்தையும் செஞ்சந்தனத்தையும் அன்போடு கொடுத்தார். சிருங்கபேரிய மென்னும் நகரத்துக்கு அரசனாகிய குகப்பெருமானைக் கடாக்ஷித்து குற்றமற்ற துணைவராயினோர்க்கு என்ன உபகாரஞ்செய்கிறது என்றுசொல்லி யானைகளையும் குதிரைகளையும் நிதிக்குவியலையும் உயர்ந்தவிலையுள்ள வஸ்திரங்களையும் ரத்தினாபரணங்களையுங்கொடுத்து அவருடைய ஊர்க்குப்போகும்படி விடைகொடுத்தனர்.

## ஸ்ரீராமபிரான் சுக்ரீவர் ஆஞ்சநேயராதி வானரவீரர்கட்கும் விபீஷணர்க்கும் தத்தமிடஞ்சார விடையீதல்.

கவி.

அனுமனைவாலிசேயைச் சாம்பனையருக்கன்றந்த
கனைகழற்காலினோனைக் கருணையங்கடவுணோக்கி
நினைவதற்கரிதுநம்மைப் பிரிவென்றனீவிர்வைப்பும்
எனததுகாவற்கின்றென் னேவலினேகுமென்றான்.

உடனே கருணைசலதியாகிய ராமநாதரானவர்சிறியதிருவடிகளையும்அங்கதப்பெருமானையும்-சாம்பவரையும்-சுக்ரீவமகாராஜாவையும்நோக்கி உங்களைப் பிரிவதும் பிரிவை நினைப்பதற்கும் கூடாமையாயிருக்கிறது. நீங்கள்வசிக்கும் கிட்கிந்தையானது உங்களுடையதல்ல என்னுடையதே அங்குள்ள குடிகள் காப்பாரில்லாமல் வருந்துவார்களேயானால் அக்குற்றம் என்னைச்சாருமல்லவா? ஆகையால், என்னுடைய ஆக்கினையால் கிட்கிந்தைக்குச் சேனைகளோடு போய்ச் சேருங்களென்று உத்தரவுதந்து, விபீஷணாழ்வானையும் நோக்கி வானரேந்திரர்களுக்குச் சொன்னதுபோலவே இன்சொற்கள்சொல்லி விடைகொடுத்தார். சர்வசுவாமியானவர் இப்படி தங்களுக்கு விடைகொடுத்தவுடனே அதிவிவேகிகளும் வேதஞ்சொல்லும் சத்தியமார்க்கத்தில் நடப்பவர்களுமாகிய அவர்கள்யாவரும் சுவாமியைப்பிரிகிறோமென்று சிறிதும் நெஞ்சங்கலங்காமல், குதுகலமாகிய நெஞ்சையுடையவர்களாகிய நம்முடைய சுவாமியானவர் ஏவியதைச்செய்வதே நமக்குக்கடமையென்றுணர்ந்து பரதாழ்வானையும், ராமாநுஜரையும் சத்துருக்கப்பெருமானையும் வசிஷ்டபகவானையும் தாய்மார்கள் மூவரையும் மகேசுவரியாகிய சானகிபிராட்டியாரையும் சர்வேசுரனாகிய ராகவபிரானையும் தனித்தனியாகப் பிரதட்சணஞ்செய்து நமஸ்கரித்து அவரவர்களிடத்தில் செலவு பெற்றுக்கொண்டு பிரயாணப்பட்டுத் திருவயோத்தியா புரியைக் கடந்தனர்கள்.

## குகனாதி சுக்ரீவன் ஆஞ்சநேயர் விபீஷணர்யாவரும் பிரயாணமாகி அவரவர்களை அவரவர்பதியிலுய்த்தி விபீஷணர் இலங்காநகரம் புகுதல்.

கவி.

குகனைத்தன்பதியிலுய்த்துக் குன்றினைவலஞ்செய்தேரோன்
மகனைத்தன்புரத்தில்விட்டு வாளெயிற்றரக்கர்சூழ

ககனத்தின்மிசையேயெய்திக் கனைகடலிலங்கைபுக்கான்
அகனுற்றகாதலண்ணல் லலங்கல்வீடணன்சென்றன்றே.

கங்கைக்கரையின் சிருங்கேரிய நகரத்தில் குகப்பெருமானை இருக்கவிட்டு, அப்புறஞ்சென்று கிஷ்கிந்தா புரியை அடைந்து அங்கே சுக்கிரீவமகாராஜர் அங்கதப்பெருமான் சாம்பவர் பிரியதிருவடிகள் நீலன் பனசன் முதலானவானரவீரர்களை இருத்தி, ககனமார்க்கமாக ராகவபிரானுடைய கருணைக்குப் பாத்திரபூதராகிய விபீஷணாழ்வாருனவர் சமுத்திரஞ்சூழ்ந்த இலங்காநகரமே போய்ச்சேர்ந்தார்.

## ஸ்ரீராமமூர்த்தி அரசுபுரிதல்.

கவி.

அய்யனுமவரைநீங்கி யடிசெறிதானைவரோடும்
வய்யமுழுதுஞ்செங்கோன் மனுநெறிமுறையிற்செல்லச்
செய்யமாமகளுமற்றைச் செகதலமகளுமற்றும்
நய்யுமாறின்றிக்காத்தானுனிலம்பொறைநகமூர்த்தே.

உம்பரோடிம்பர்காறு முலகமோரேழுமேழும்
எம்பெருமானென்றேத்தி யிறைஞ்சிநின்றேவல்செய்யத்
தம்பியரோடுந்தானுந் தருமமுந்தாணிகாத்தான்
அம்பரத்தனந்தர்நீங்கி யயோத்திவந்திறுத்தகாளே.

இவ்வண்ணம் தமது பட்டாபிஷேக மகோற்சவத்தைக் கண்டுகளிக்கவந்த யாவர்களுக்கும்விடையீந்து இப்பூவுலகமுழுது மனுநீதி சாஸ்திரமுறையின்படி செங்கோல்நடாத்தி ஸ்ரீதேவி பூதேவி இவர்கள்வருத்தநீங்க, தேவலோகமும் பூலோகமுமாகிய பதினாலுலோகங்களும் எமதுகர்த்தாவாகிய பரந்தாமனேயென்று ஸ்தௌத்திய பாராயணஞ்செய்து குற்றேவல்களைச்செய்ய, தம்பிமார்களாகிய இலட்சுமணர் பரதர் சத்துருக்னர் இவர்களோடும் தானுந்தருமமுமாக, பாலசமுத்திரத்தில் திருவனந்தாழ்வான்மீது அறிதுயிலிலீங்கி அயோத்திமாநகரத்தி லவதரித்த ஸ்ரீராமமூர்த்தியானவர் இவ்வுலகத்தை அரசாட்சிசெய்தனர்.

கவி.

இராவணன்றன்னைவீட்டி யிராமனாய்வந்துதோன்றித்
தராதலமுழுதுங்காத்துத் தம்பியுந்தானுமாகப்
பராபரமாகிநின்ற பண்பினைப்பகருவார்கள்
நராபதியாகிப்பின்னு நமனையும்வெல்லுவாரே.

விடைகொடுத்தபடலம் - முற்றிற்று.

உயுத்தகாண்டம் - சம்பூரணம்.

ஸ்ரீராமஜெயம்.

கம்பநாட்டாழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

# இப்புத்தகத்துள்ளடங்கிய படலங்களோடு, விஷயங்களின் அட்டவணை.

## ௬-வது உயுத்தகாண்டம்.


| படலமும், விஷயமும். | பக்கம். |
|---|---|
| கடல் காண் படலம் | 1 |
| ஸ்ரீராமபத்திரர் தென்றிசைச் சமுத்திரமடைதல் ... | ,, |
| சமுத்திரவர்ணனை | 3 |
| மந்திரப்படலம். | 5 |
| ஆஞ்சனேயரால் கொளுத்திய இலங்கையை மயன்புதுக்க இராவணன் மந்திராலோசனைச்சபை கூட்டுவித்தல்... | ,, |
| இராவணன் மந்திரிமார்களைப் பார்த்துக்கூறல் ... | 7 |
| பிரகஸ்தனென்னும் சேனாபதி இராவணனுக்குச் சொல்லல் ... | ,, |
| மகோதரன் சொல்லுதல் ... | 8 |
| வச்சிரதந்தன் சொல்லுதல் ... | 9 |
| துன்முகன் சொல்லுதல் ... | 10 |
| மகாபாரிசன் சொல்லுதல் ... | 11 |
| பற்பல மந்திரிகள் பற்பலவாறு கூறுதல் ... | 12 |
| கும்பகர்ணன் அமைச்சராதியரைத் தடுத்துத் தனது கருத்தையுணர்த்தல் ... | ,, |
| இந்திரஜித்து தன் பராக்கிரமங் கூறி இராவணனைத் தேற்றுதல் ... | 14 |
| விபீஷணர் இந்திரஜித்தைக்கடிந்து இராவணனுக்குத்தகவுரைத்தல் ... | 15 |
| இராவணன் விபீஷணரைக்கடிந்து தன்னாற்றல்கூறி யாக்கிரமித்தல் ... | 20 |
| இரணியன்வதைப் படலம். | 24 |
| இரணியகசிபுவினுடைய தபோபலச் சிறப்பும் பராக்கிரம நிலைமையும் ... | ,, |
| இரணியாசுரன் தவஞ்செய்துபெற்ற அழியாவரத்தின்சிறப்பு | 27 |
| பிரகலாதன் சிறப்பு | 28 |
| இரணியாசுரன் தன் மகனாகிய பிரகலாதனுக்கு சண்டமார்க்கனால் வேதாத்தியயனஞ்செய்வித்தல் ... | ,, |
| பிரகலாதன் கருத்தைச் சண்டமார்க்கன் இரணியனுக்குணர்த்தல் ... | 31 |
| இரணியன் பிரகலாதனை யென்னசொன்னாயென்று கேட்க அவன் தான் சொன்னதைச்சொல்லுதல் ... | 32 |
| இரணியன் கோபித்துப் பிரகலாதனுக்குப்பயமுறுத்தி அப்பெயரைச்சொன்ன தனக்காமென்றும் நீயெவ்விதஞ்சொன்னாயென்றுங் கேட்டு தனக்கும் அவ்வரிக்கும் இருக்கும் பகையைக்கூறல் | 34 |
| தன்னையே தெய்வமென்று கொள்ளச்சொன்ன இரணியனுக்குப் பிரகலாதன் சிலவார்த்தைகூறல் ... | 35 |
| ஸ்ரீமந்நாராயணன் பெருமையைப் பிரகலாதன் கூறல் | 37 |
| இரணியாசுரன் மிகவும் கோபித்து பிரகலாதனைக் கொல்லும்படி கொலையாளர்வசமொப்புவித்தலும் அவர்கள்வதை செய்தலும் ... | 38 |
| பிரகலாதனை அக்கினிக் குழியிற் றள்ளல் ... | 39 |
| பிரகலாதனை அஷ்டமாநாகங்களைவிட்டு கடிக்கச்செய்தல் | 40 |

789



படலமும், விஷயமும். பக்கம்.

பிரகலாதனையானையின் காலாலிடறச் செய்தல் ... 41
பிரகலாதனைப் பர்வதத்திற் கட்டிச் சமுத்திரத்திலிட்டழுத்தல் ... 43
பிரகலாதன் ஸ்ரீமந் நாராயணமூர்த்தியைத் துதித்தல்... ,,
இரணியாசுரன் பிரகலாதனைத் தானே கொல்ல முயறல் 46
பிரகலாதன் சுவாமியின் பெருமை கூறல் ... 47
அரியென்பவர் எங்குநிறைந்தவர் இத்தூணினுமிருப்பார் சோதனை செய்துகொள்ளென்று பிரகலாதன் இரணியனுக்குச்சொல்ல அவ்விரணியன் பதிலுரைத்தல் ,,
பிரகலாதன் உறுதிமொழிகூறல் 48
இரணியன் பராக்கிரமத்தோடெதிர்நின்ற தூணைத்தனது கையாலறைய ஸ்ரீமந்நாராயணமூர்த்தி நரசிம்மாவதாரங்கொண்டு அத்தூணிற்றோன்றுதல் ... ,,
நரசிங்கமூர்த்தி அசுரப்படைகளை வதைத்தல் ... 50
நரசிங்கமூர்த்தி இரணியனுடைய மார்பைப் பிளந்து மாய்த்தல் ... 52
பிரமனாதிதேவர்கள் நரசிம்மமூர்த்தியைத் துதித்தல்... 53
பிரமதேவன் தோத்திரஞ் செய்தல் ,,
சுவாமியின் கோபந்தணிய பிரமனாதிதேவர்கள் மகாலட்சுமியைப் பிரார்த்தித்து சுவாமியினிடம் சேர்த்தல் 55
பிரகலாதன் வரங்கேட்டதும் சுவாமி வரமீதலும் ... 56
பிரகலாதனுக்கு சுவாமிதம திருக்கரத்தால் திருமுடிசூட்டுதல் 57

விபீஷணனடைக்கலப் படலம். 58

விபீஷணர் சொல்லியவைகளைக் கேட்ட இராவணன் கோபித்தல் ... ,,
விபீஷணர் தன் கருத்திற்கிணங்காத இராவணனிடத்தினின்றும் பிரிந்து ஆகாசமார்க்கத்திற் சென்று சில வார்த்தைகூறி ஸ்ரீராமபிரானையடைவதே நலமென்று புறப்படல் ... 60
விபீஷணர் தன்னைத் தொடர்ந்த வமைச்சரோடு மந்திராலோசனை செய்து விடியுமட்டு மறைந்திருத்தல் ... 60
ஸ்ரீராமர் கடற்கரையடைந்து அங்கு நிகழுங் காட்சியைக் காணல் ... 62
விபீஷணர் வானரசேனையிற்கலத்தல் 63
விபீஷணரைக்கண்ட வானரவீரர்கள் கோபிக்க, அவ்விபீஷணர் ஸ்ரீராகவசரணமென்று முறையிட்ட சத்தங்கேட்கப்பட ஸ்ரீராமசந்திரன் அங்குள்ளவர்களை வந்தவர்களாரென்று பார்த்துவர ஏவுதல் ... 64
சுவாமியின் உத்தரவுபடிசென்ற மயிந்தனும் துமிந்தனும் விபீஷணரைக்கண்டு நீர் யாரென்று வினவ அவ்விபீஷணரின் பக்கத்திருந்தவரில் ஒருவன் அவர் இன்னாரென்ற வரலாறும் வந்தகாரியமுங் கூறல் ... 65
மயிந்தன் விபீஷணர் கருத்தை ஸ்ரீராமருக்குணர்த்தல் ... 67
ஸ்ரீராமர் விபீஷணரைக் குறித்து தலைவர்களோடாலோசிக்க அவருட் சுக்கிரீவன் தன் கருத்துரைத்தல் ,,
ஜாம்பவந்தன் தன்கருத்துரைத்தல் ... 69
நீலன் தன்கருத்துரைத்தல் ... 70
ஆஞ்சநேயர் தமது கருத்தை அநுபவத்தோடுரைத்து விபீஷணரைச் சன்மானிப்பித்தல் ... 71



படலமும், விஷயமும். பக்கம்.

ஸ்ரீராமர் விபீஷணரையழைக்கச் சுக்கிரீவனுக்குரைத்தல் .... 76
சுக்கிரீவன் ஸ்ரீராமபிரான் கட்டளைப்படி விபீஷணரையழைத்தல் ... ,,
ஸ்ரீராமபிரான் உத்தரவுபடி சுக்கிரீவன் விபீஷணரையழைக்க அவ்விபீஷணர் ஆனந்தங் கொண்டாடல் 77
விபீஷணர் ஸ்ரீராமரைக் கண்டு சேவித்து ஆனந்த பரவசராதல் ... 78
ஸ்ரீராமர் விபீஷணருக்கு இலங்காதிபத்தியமளித்து மகுடஞ்சூட்டுதல் ... 79

இலங்கைகேள்விப் படலம். 82

இரகுநந்தனர் பிராட்டியின் பிரிவுக்காற்றாய் வருந்தச் சுக்கிரீவன் தேற்றுதல் ... ,,
ஸ்ரீராமர்கேட்க விபீஷணர் இராவணனுதவிச் சைனியங்களின் திறமுரைத்தல் .... 85
இராவணனுடைய வல்லமையுரைத்தல் ... 89
இலங்கையிலாஞ்சநேயர் செய்த வீரப்பாடுரைத்தல் ... 90
ஸ்ரீராமர் ஆஞ்சநேயரை உபசரித்தல் ... 91

வருணனை வழிவேண்டு படலம். 92

ஸ்ரீராமர் கடல்கடக்க வழிவிடாத வருணனைக்கோபித்து கடலின்மேற் பாணப்பிரயோகஞ்செய்தல் ... ,,
ஸ்ரீராமர்பிரம்மாஸ்திரந்தொடுக்க வருணன் வந்து துதித்துத் தான் வருவதற்குக் காலநீடித்த காரணங்கூறுதல் 100
வருணன் சுவாமியைத் துதித்தல் 101
வருணதேவன் ஸ்ரீராமபிரானுக்குக் காணிக்கை செலுத்தல் 102
வருணன்மேல் தொடுக்கவிருந்த பிரமாஸ்திரத்தை அவ்வருணன் வேண்டுகோளின்படி சுவாமி நிருகாந்தாரத்திலுள்ள அசுரர்கள்மேற்றொடுத்தல் ... 103
வருணன் சொற்படி ஸ்ரீராமபிரான் சுக்கிரீவனாதியரோடு சேதுபந்தனஞ்செய்ய வாரம்பித்தல் ... 104

சேதுபந்தனப் படலம். 105

சுக்கிரீவன் சேதுபந்தனஞ்செய்ய நளனுக்காக்கியாபித்ததுணர்ந்து சாம்புவர் கட்டளைப்படி வானரசைனியங்கள் செய்யும் விபரீதம் ... 105
அனுமார்முதலான வானரவீரர்கள்செய்த சகாயத்தினால் நளன் சேதுபந்தனஞ்செய்து முடித்தல் ... 110

ஒற்றுக்கேள்விப்படலம். 114

ஸ்ரீராமனாதியர் சேதுவாற் கடலைத்தாண்டி நளனமைத்த பாடிவீடுகளிற் குடியேறியிருத்தல் ... ,,
சூரியாஸ்தமனச் சிறப்பு ... 117
இராவணனேவலால் சுகசாரணரென்னு மொற்றர்கள் வானர வுருவங்கொண்டு வானரசேனைகளில்வந்திருந்ததை விபீஷணர்கண்டு இராமமூர்த்திக்குக்காட்ட அவர் காணல் ... 118
விபீஷணர் மந்திரோச்சாடனஞ்செய்ய சுகசாரணர்கள் வானரவுருவ நீங்கிப் பழைய இராட்சத வுருவங்கொண்டு பயந்து நிற்கிறபோது நீங்கள் வந்தகாரியம் யாதெனச் சுவாமிகேட்டல் 120
வந்தகாரிய மின்னதென்று அச்சுகசாரணர்கள் சொல்லக்கேட்ட இராமசுவாமி இராவணனுக் குணர்த்தும்படி சிலவார்த்தை சொல்லிவிட்டுவிடுதல் ... ,,
இராவணனுடைய மந்திராலோசனையில் மாலியவான் சில

படலமும், விஷயமும். பக்கம்.


வார்த்தைகூற அதற்கிராவணன் கோபித்தல் ... 122
பிரகஸ்தன் இராவணன்புஜபலத்தைக்கூறி மாலியவான் வார்த்தையை மறுத்தல் 124
இராவணன் சுகசாரணர்களாகிய ஒற்றர்கள் வந்தமையை வாயிற்காவலனாலறிந்து அவர்களை வரவழைத்து அவர்களால் ஸ்ரீராமபிரானிடத்து நிகழ்ந்த விஷயங்களையறிதல் ... 124
மகோதரன் சிலவார்த்தைகூறி தன்னை யுத்தத்திற்கனுப்ப வேண்டுதல் ... 126
மாலியவான்மீட்டு மிராமனுதியருற்பலத்திற் கேதுவான தேவரகசியங்கூற இராவணன் தன்பராக்கிரமங்கூறி மறுத்தல் ... 127
இராமனிலங்கைகாண் படலம் 130
ஸ்ரீராமர் சுவேலா பர்வதத்தினுச்சியிலெழுந்தருளியிருந்தசிறப்பு ... ,,
ஸ்ரீராமரிலட்சுமணருக்கு இலங்கையின் சிறப்புகளைக் காண்பித்தல் ... 131
இராவணன் றனைகாண் படலம் 134
இராவணன் இலங்கையினுத்தரவாயிற் கோபுரமேறியிருந்தசிறப்பு ... 135
இராவணன் ஸ்ரீராமபிரானைக் காணல் ... 137
இராவணன் சாரனென்னுமொற்றனால் ஸ்ரீராமமூர்த்தியின் படைவீரரைக் காணல் ,,
சாரனுற்காட்டிய வானரவீரர்களைஇராவணன்கண்கொருலட்சியமின்றெனல் ... 140
மகுடபங்கப் படலம். ,,
ஸ்ரீராமர் இலங்கைக் கோபுரத்தின்மீது நிற்கின்றவர்களின்னாரின்னாரென்றுகாட்டும்படி விபீஷணரைக் கேட்டருள அவர் கூறுதல் ... ,,
சுக்கிரீவமகாராஜன் சுவேலாபர்வதத்தினின்றுங் கிளம்பி இலங்கையி னுத்தரகோபுரத்திற்பாய்ந்துஇராவணன்முன் அட்டகாசஞ்செய்து நிற்றல் ... 141
இராவணனும் சுக்கிரீவமகாராஜனும் இகல்விளைத்தல் ... 142
ஸ்ரீராமர் சுக்கிரீவன் செயலுக்காற்றாராய் வருந்திக்கிலேசித்தல் ... 145
சுக்கிரீவமகாராஜ னிராவணனுடையமகுடரத்தினங்களைக் கொணர்ந்து ஸ்ரீராமருக்குப் பாதகாணிக்கைவைத்தல் ... 146
விபீஷணாழ்வார் சுக்கிரீவமகாராஜனாற்றலையுகந்துபுகழ்தல் ... 148
அணிவகுப்புப் படலம். 150
இராவணன் மகுடபங்கமான வருத்தத்தோடு தனதாண்மையையடைந்து வருத்தமுற்றிருக்க சார்த்தூலனென்னுந்தூதுவனால் ஸ்ரீராமமூர்த்தியினுடையபடையணிவகுப்பின் றிறமுணர்தல் ,,
இராவணனுடைய மந்திராலோசனையி லம்மானுகியகும்பனறிவுறுத்த அவனைக்கடிந்து தானு மணிவகுப்பித்தல் ... 152
அங்கதன்தூதுப் படலம். 155
ஸ்ரீராமரிராவணனுக்குத் தூதுவிடுக்க முயன்றதை இலட்சுமணர்தடுக்க அவரிவரைத் தேற்றுதல் 156
ஸ்ரீராமர் அங்கதனையாய்ந்து இராவணனிடந் தூதாக விடுக்க அவன் செல்லுதல் 158
இராவணன் தன்னெதிர்வந்த அங்கதனைப் பார்த்துநீயா




படலமும், விஷயமும். பக்கம்.


ரென யான் இராமதூதன் உனக்கு சேதிசொல்லவந்தேனென அவ்வங்கதனை அவ்விராவணன் வாலிபுத்திரனென்றுணர்ந்து சன்மானித்தல் ... 160
அங்கதனிராவணனையுமவன்சன்மானத்தையுமிகழ்ந்துதான் வந்தகாரியத்தைக்கூறுதல் 161
இராவணன் தன்னை அங்கதன் இகழ்ந்த இழிவைப் பொறுது கோபித்து நாலுவீரர்களை கொல்லுங்களென்றேவ அவ்வீரர்களை அங்கதன் ஆகாயத்திற் றூக்கிக்கொன்று சில வார்த்தை சொல்லி மீளல் ... 163
அங்கதன் ஸ்ரீராமபிரானிடமடைந்துஇராவணன்கருத்தைக் கூறல் ... 164
முதற்போர் படலம். 165
அங்கதனுத்தரவால் வானரசேனவீரர்கள் இலங்காபுரியினகழியைத் தூர்த்துக் கோட்டையை முற்றுகை செய்துகொள்ளுதல் ... ,,
இராட்சதசேனைகளோடு வானரசேனைகளெதிர்த்துப்போராடிக் குலைந்து சுக்கிரீவராஜனிடம்போயடைதல் 167
சுக்கிரீவமகாராஜனுக்குக் கோபமூண்டு போருக்கெழுந்து வச்சிரமுஷ்டியென்னும் இராட்சசச்சேனவீரனைக்கொல்லுதலும் சிலவானரவீரர்களால் சிலஇராட்சசரிறத்தலும் ... 170
வச்சிரமுஷ்டி முதலிய இராட்சசவீரர்கள் மடிந்தமையைதூதுவராலறிந்த இராவணன் யுத்தசன்னத்தனுய் வருதல் 174
இராவணன் யுத்தசன்னத்தனுய்ப் புறப்பட்டு வந்தானென வானரதூதர்கள் சொல்ல சுவாமியும் யுத்தகோலங்கொள்ளுதல் ... 177
சுக்கிரீவன் இராவணனோடு போராடி மெலிதல் ... 179
ஆஞ்சநேயர் இராவணனுடனே போராடிமெலிதல் ... ,,
இலட்சுமணர் இராவணனோடு போராடி தனது அம்பறாத்தூணியறுதல் ... 181
ஆஞ்சநேயர் இராவணனோடு குத்துச்சண்டை செய்து மெலிதல் ... 183
இராவணன்விட்ட வேலினால் இலட்சுமணர் மூர்ச்சையாதல் ... 189
இராவணனோடு யுத்தத்திற் கெழுந்த ஸ்ரீராமர் ஆஞ்சநேயர் வேண்டுகோளின்படி அவர்தோளி லாரோகணித்துத் தமது கோதண்டத்தை வளைத்துக் குணத்தொனி செய்தல் ... 190
ஸ்ரீராமர் கடும்போர் விளைத்து இராவணனை மெலியச் செய்தல் ... 192
இராவணன் யுத்தவலியிழந்து நிராயுதனாய் நிற்க ஸ்ரீராமபிரானவர் சிலவார்த்தை கூறுதல் ... 195
ஸ்ரீராமர் இராவணனுடன் இன்றையதினம்போய் நாளையதினம் யுத்தத்திற்கு வாவெனல் ... 196
கும்பகருணன் வதைப்படலம். 197
இராவணன் தன்மாளிகைக்கேகல் ... ,,
இராவணன் சேனைகளைச் சேர்த்தழைத்து வரும்படிதூதர்களுக்காக்ஞாபித்தல் 198
இராவணன் தானடைந்த தோல்வியினால் அவமானத்தோடு புட்பசயனத்தில் சோர்ந்துகிடத்தல் ... 199

| படலமும், விஷயமும். | பக்கம். |
|---|---|
| இராவணன் சோகித்துக் கிடப்பதைக்கேட்டமாலியவான் தன்னிடம் வந்து யாதென்றுவினவ யுத்தகளத்தில் ஸ்ரீராம லட்சுமணர்கள் செய்தயுத்தத்தின்பிரபாவத்தையும் தானடைந்த விபத்தையுங்கூறி வருந்தல் | 200 |
| மாலியவான் இராவணனுக்குச் சில அறிவுறுத்தல் | 203 |
| இராவணன்மகோதரன் துற்போதனையால் கும்பகருணனை நித்திரையினின் றெழுப்பியழைத்துவரும்படிசிலவற்றர்களையு மிருகங்களையு மல்லர்களையு மேவுதல் | 204 |
| இராவணனுடைய ஒற்றர்கள் லட்சமல்லர்களோடுசென்று கும்பகருணனை நித்திரையினின் றெழுப்புதல் | 207 |
| கும்பகருணன் நித்திரைதெளிந்தெழுந்துஆகாரமுண்ணல் | 209 |
| கும்பகருணன் தூதுவர்வார்த்தையைக்கேட்டு இராவணன் சமுகம் வருதல் ... | 211 |
| கும்பகருணன்இராவணனுக்குச் சில அறிவுறுத்தல் ... | 213 |
| கும்பகருணன் சொல்லிய நீதிவார்த்தையை இராவணன் மறுத்தல் ... | 214 |
| கும்பகருணன் தமையன்மேல் மனஸ்தாபத்தோடு இராமபிரானிடம் சண்டைசெய்யவெளிப்படல் ... | 215 |
| கும்பகருணனுக்கு இராவணன் படைத்துணைகூட்டல் ... | 216 |
| கும்பகருணன் இரதாரூடனாதல் | 217 |
| கும்பகருணனை ஸ்ரீராமபிரான்கண்டு இவன் யாரென்று சந்தேகித்து விபீஷணரை வினவலும் அவர் இன்னானென்று அவன் வரலாறு கூறலும் ... | ,, |
| ஸ்ரீராமர் சுக்கிரீவன் வேண்டுகோளாற்கும்பகருணனைத் தம்பி வொருவனுக்கிக் கொள்ளச்சம்மதித்து விபீஷணரை யனுப்புதல் | 220 |
| கும்பகருணன் தன்னைவந்தடைந்த விபீஷணரை நீயேன் மறுபடி மீண்டுவந்தாயென வினவல் ... | 221 |
| கும்பகருணனுக்கு விபீஷணர் தாம்வந்த காரியமின்னதென்றுரைத்தல் ... | 223 |
| கும்பகருணன் தன்னையழைக்க வந்த விபீஷணரைச் சன்மானித்துத்தனதுறுதிப்பாடின்னபடியென்று கூறியனுப்புதல் ... | 226 |
| கும்பகருணன் விபீஷணர் சம்மதிக்குடன்படாது அவரை ஸ்ரீராமரிடம் அனுப்பிவிட்டுச் சோர்ந்து நிற்றல் | 229 |
| விபீஷணர் ஸ்ரீராமரிடம் வந்து கும்பகருணன் உடன்படாமையைக் கூறலும் அப்பிரான் விபீஷணரைத் தேற்றலும் ... | ,, |
| இராட்சசவீரர்களும் வானரவீரர்களும் கடும்போர்விளைத்தல் ... | 230 |
| வானரவீரர்களும் இராட்சசவீரர்களும் கடும்போர்விளைக்கக்கண்ட கும்பகருணன் வானர வீரர்களைச் சின்னபின்னஞ்செய்ய அவர்கள் கும்பகர்ண னங்கத்தைப்பங்கஞ்செய் தோடுதல் ... | 231 |
| கும்பகருணனோடு நீலன் போர்விளைத்து மெலிதல் ... | 233 |
| அங்கதன் போராடி மெலிதல் | 234 |
| அநுமார் போராடி மெலிதல் ... | 236 |
| இலட்சுமணருக்கும் கும்பகருணனுக்கும் போர்மூளல் | 238 |





| படலமும், விஷயமும். | பக்கம். |
|---|---|
| இலட்சுமணர் அஞ்சநேயர்மீதாரோகணித்து யுத்தஞ்செய்தல் ... | 242 |
| இலட்சுமணர் கும்பகருண னிரதத்தை யழித்து அவனைப் பாதசாரியாக்கல் ... | 243 |
| கும்பகருணனைச் சுக்கிரீவனெதிர்த்து நிற்க இவர்மேலவன் விட்ட சூலப்படையை அநுமார் முறித்தெறிதல் ... | 245 |
| சுக்கிரீவராஜன் கும்பகருணனோடு மற்போர்புரிந்து மூர்ச்சிக்கவும், இவனவனை இலங்கைக்குக் கொண்டுபோக யத்தனித்தல் ... | 247 |
| ஸ்ரீராமர் கும்பகருணனை இலங்கைக்குப் போகவிடாமற் சரக்கூடிட்டு அவனெற்றியைப்பிளக்க, அக்கொலைவன் மூர்ச்சிக்க சுக்ரீவன் மூக்கையுங் காதையுமறுத்துக்கொண்டு வானரசேனையிற் கலத்தல் ... | 249 |
| கும்பகர்ணன்சேடயமும்வாளுங்கொண்டு போர்விளைக்க ஸ்ரீராமரவற்றைப் பொடிப்படுத்தல் ... | 252 |
| இராவணன்கும்பகருணனுக்குத் துணையாகப் பதினொன்று கோடிசேனைகளை யனுப்ப, ஸ்ரீராமரவற்றைக் கணப்போதில் மாய்த்தல் ... | 255 |
| ஸ்ரீராமர் தனியேநின்ற கும்பகருணனுடைய கருத்தைக் கேட்டறிந்து போர்விளைத்து, அவனிரண்டு தோளையுந்தாளையுந் துணித்தெறிதல் ... | 258 |
| ஸ்ரீராமபிரானைக் கும்பகருணன் விபீஷணரைப் பாதுகாக்கவேண்டுமென்றுவேண்டி, தன் சிரசைக்கண்டித்துச் சமுத்திரத்தில் விழும்படி யிரத்தல் ... | 266 |
| ஸ்ரீராமர்கும்பகருணன்தலையைக் கண்டித்துச் சமுத்திரத்தில் விழச்செய்ய, தூதர்கள் இராவணனிடஞ் சொல்லச்சென்றுரைத்தல் ... | 267 |
| மாயாஜனகப்படலம். | 268 |
| இராவணன் மகோதரனோடு மந்திராலோசனைசெய்து மருத்தனை மாயாஜனகனுக்கிக்கொண்டுவரும்படிசெய்தல் ... | 269 |
| இராவணன் சீதாபிராட்டியாரிடஞ்சென்று குறையிரத்தல் | ,, |
| இராவணனைச் சீதாபிராட்டி ஓர் துரும்பாக மதித்துக்கூறல் | 272 |
| இராவணன்சீதாபிராட்டிக்குஜனகன்போதில்பின்பந்துக்களிங்ஙனம்வந்து மாய்வதைப்பாரென்று பயமுறுத்தல் ... | 274 |
| மகோதரன் பிடித்துவந்த மாயாசனகனைச் சீதாபிராட்டியார் தன்தந்தையென வெண்ணிப் பிரலாபித்தல் | 275 |
| இராவணன் ஜனகனுக்குச்சீதைக்கும் சில ஆதரனைகூறி வேண்ட, அதற்கவனினியாவனகூறிக் கடிதல் ... | 279 |
| இராவணன் மாயாஜனகனுற் சீதைக்கறிவுறுத்த அவளவனைச் சந்தேகித்துச் சினத்தல் ... | 281 |
| இராவணன் கும்பகருணன்மடிந்ததாக வானரவீரர் முழக்கின பேரோசை கேட்டுச் சந்தேகித்திருக்கும்போது தூதுவர்களோடிவந்துகும்பகருணன் மரணத்தை அறிவிக்க வறிந்துபிரலாபித்தல் ... | 284 |
| திரிசடை சீதாபிராட்டியாருக்கு மாயாசனகன் வரலாறுரைத்து மகிழ்வித்தல் ... | 288 |

4195



படலமும், விஷயமும். பக்கம்.

அதிகாயன்வதைப் படலம். 288

இராவணன் கும்பகருணன் மடிவைக்கேட்டேங்கக்கண்ட அதிகாயனென்பவன் கும்பன் நிகும்பன் அகம்பனாதியரோடுசென்று இலட்சுமணர்பால் மயிடனைத் தூதுவிடல் ... ,,

தூதுவந்த மயிடன் இலட்சுமணரோடு தான்வந்த காரியமின்னதென்றெனல் ... 295

ஸ்ரீராமர் விபீஷணரால் அதிகாயன் வல்லமையும் வரலாறுமறிந்து தமது தம்பியோடவரைக் கூட்டியனுப்புதல் 296

இலட்சுமணர் ஸ்ரீராமரிடத்தில் விடைபெற்று விபீஷணருடன் யுத்தகளம் புகுதல் 300

வானரப்படைகளும் இராக்கதப்படைகளும் கலந்து போர்புரிதல் ... ,,

இலட்சுமணர் தமது வானரப்படைகள் இராட்சசப் படைகளால் மெலியக்கண்டு விடுத்த பாணங்கள் அஷ்டதிக்கிலும் பராக்கிரமித்து நிற்றல் ... 302

இலட்சுமணருடன் நாருகன்வந்தெதிர்த்து மடிதல் ... 304

காலன்முதலியவர்கள் இலட்சுமணரோடெதிர்த்து மடிதல் ... 305

இலட்சுமணர் அதிகாயனுடன்வந்த அறுபதினாயிர மதயானைகளை அதமாக்கல் ... 306

இலட்சுமணருடைய பாணங்கட்குத் துணையாக ஆஞ்சநேயரும் யானைப்படைகளைக் கொல்லல் ... 309

தேவாந்தகனும் திரிசிரனும்ஆஞ்சநேயரோடெதிர்த்துமடிதல் ... 311

இலட்சுமணர் தன்னுடன் வந்தெதிர்த்த அதிகாயனுடன் அந்தகன் முதலியோர் தனித்துப் போர்புரிதல் 314

வாயுபகவான் இலட்சுமணரிடத்தில்வந்து பிரமாஸ்திரம் பிரயோகித்தாலிறப்பானென்று கூறிப்போக அவ்வாறே பிரமாஸ்திரம் பிரயோகித்து அதிகாயனைமடித்தல் ... 318

நராந்தகன் அங்கதனுடன் போராடி மடிதல் ... 319

இப்படியே சிலவானரத்தலைவருடன் சிலஇராட்சசவீரர்கள் போராடி மெலிதல் ... 320

இராவணன் அதிகாயன் முதலியவர்கள் மாண்டதைக்கேட்டு வருந்துதல் ... 327

அதிகாயன் தாயாகிய தானியமாலை புலம்பல் ... 328

நாகபாசப் படலம். 330

இராவணனால் அதிகாயனிறந்ததைக் கூறக்கேட்ட இந்திரஜித்து பகைவரைப் பற்றறக்களை வேனென்று சபதஞ்செய்து வெளிப்படல் ... 331

இலட்சுமணர் விபீஷணரால் இந்திரஜித்தனி னாற்றலறிதல் ... 336

அங்கங்கிருந்த வானர சேனைத்தலைவர் இலட்சுமணரிடம் சேர்ந்து இராட்சச வீரர்களுடன் போர்புரிதல் ... 337

இராட்சசச்சேனைகள்மாளக்கண்ட இந்திரஜித்து போருக்கெழுதல் ... 341

இந்திரசித்துடன் சுக்கிரீவன் போர்புரிந்து மெலிதல் ... 342

இந்திரசித்துடன் ஆஞ்சநேயர் போராடி மெலிதல் ... 343

இந்திரசித்துடன் நீலன் போராடிமெலிதல் ... 345

இந்திரசித்துடன் அங்கதன்போராடி மெலிதல் ... 346



படலமும், விஷயமும். பக்கம்.

இலட்சுமணர் இந்திரசித்துவின் முன்னணிப்படையிலிருந்த சேனைகளையுமடித்தல் 347

இந்திரசித்து ரதாரூடனாயும் இலட்சுமணர் ஆஞ்சநேயரின் புஜாரூடராயும் யுத்தஞ்செய்தல் ... 349

இந்திரசித்துவின் வெற்றிக்கொடியையும் மெய்க்கவசத்தையும் இலட்சுமணர் துணித்தல் ... 351

இந்திரசித்து மாறிமாறியேறிய தேர்களை இலட்சுமணர் அழித்தல் ... 352

இந்திரசித்துவுக்கு மறுபடியும் படைத்துணையாகவந்தசேனைகளை இலட்சுமணர்மடித்தல் ... 353

இந்திரசித்துவினால் மூர்ச்சித்த வானரவீரர்கள் தெளிந்து யுத்தத்திற்கு வருதல் ... 355

ஆஞ்சநேயர் இந்திரசித்துவிற்குத்துணையாகவந்த சக்கரரட்சக ரிருவரையும் தோற்கடித்தோட்டுதல் ... 359

சூரியனஸ்தமித்தற் சிறப்பு ... ,,

இந்திரசித்து இலட்சுமணர்மீது நாகாஸ்திரம் பிரயோகித்தற்பொருட்டு ஆகாசத்தில் மாயமாயிருளில் மறைதல் 360

இலட்சுமணர் மேல்வினைவையோசியாது ஆயாசந்தீர்ந்திருத்தல் ... 361

இந்திரசித்து இலட்சுமணர்மீதும் வானரப்படைகளின்மீதும் நாகாஸ்திரப் பிரயோகஞ்செய்ய அவர்கள் பிரமித்துத் திகைத்தல் ... 362

இலட்சுமணர் மூர்ச்சையாதல் 364

இந்திரசித்துமகாசந்தோஷத்துடன் இராவணனைக்கண்டு தனதரண்மனை சேர்தல் ,,

இலட்சுமணர் நாகாஸ்திரத்தாற் கட்டுப்பட்டு மூர்ச்சித்த காலையில் அண்டையிலிருந்த விபீஷணர் திகைத்து என்னுதவவெண்ணி வருந்திப் பிரலாபித்தல் ... 365

அனலனென்னும் விபீஷணர் மந்திரி அவ்விபீஷணரைத் தேற்றி இராமமூர்த்திபால் வந்து இலட்சுமணருக்கு நேர்ந்தஇடுக்கணுரைத்தல் 366

ஸ்ரீராமர் யுத்தகளம் புகுந்து இலட்சுமணரைத்தேடிக்கண்டு மனந்தியங்கி வருந்தலும் விபீஷணர் தேற்றுதலும் ... 367

ஸ்ரீராமபிரான் இந்நாகாஸ்திரத்தின் மகிமை யென்னவென்றுகேட்கவிபீஷணர் அவ்வஸ்திரத்தினது மகிமையைச்சொல்லுதலும் சுவாமி பலபலவெண்ணிச் சொல்லித் துக்கித்தலும் ... 370

இராமசுவாமியினிடத்தில் கருடபகவான் வருதல் ... 371

கருடபகவான் ஸ்தோத்திரம் 373

இலட்சுமணராதியரைப் பிணிப்புண்டிருந்த நாகபாசம் கழலுதல் ... 378

கருடபகவான் மீண்டு வைகுந்தமடைதல் ... 379

ஆஞ்சநேயராதி வானரவீரர்கள் பாசறையில் சந்தோஷ கர்ச்சனையிடுதல் ... 380

இராவணன்வானரவீரர்களினது சந்தோஷ கர்ச்சனையைக் கேட்டு ஆச்சரியப்பட்டு இந்திரசித்துவின் மாளிகையையடைதல் ... 381

இராவணனைக்கண்ட இந்திரசித்து எழுந்திருக்க முடியாமல் இலட்சுமணரால் தனக்கு நேர்ந்தமெலிவைக்கூறல் 383

இராவணனும் இந்திரசித்துவும் வார்த்தையாடும் சமயத்தில்

படலமும், விஷயமும். பக்கம்.

தூதர்கள்வந்து யுத்தகளத்தின் தன்மைகூறல் ... 384
இராவணன் இந்திரசித்துவின்கருத்துணர்ந்து தனதான்மனையடைதல் ... 386

படைத்தலைவர் வதைப்படலம். ,,

இந்திரசித்துவினோடுஞ் சென்றஞ்சனேயருக்குத் தோற்றோடியசக்கரராட்சகரிருவரையும் இராவணன்தண்டிக்கச் சொல்லுதல் ... ,,
தூமராக்ஷமகாபாரிசானைத் தண்டிக்காவண்ணம் மாலியென்பவன் மன்னிப்பித்தல் 387
தூமாட்சனும் மகாபாரிசனும் தங்கள் வீரவல்லமையால் பகைவர்களை அதஞ்செய்வேனென இராவணனோடு சொல்லுதல் ... 389
தூமாட்சன் மகாபாரிசனாகிய இவர்களுக்குத் துணையாக இராவணன் படைகளைக் கூட்டியனுப்புதல் ... 389
தூமாட்சன் மகாபாரிசன்இவர்களோடுவந்த படைத்தலைவர்களை ஸ்ரீராமர் யாரென வினவ விபீஷணர் இன்னாரின்னாரெனச் சொல்லுதல் 390
இராக்கதச்சேனைகளைவானரசேனைகளெதிர்த்துப் போர்விளைத்தல் ... 391
தூமாட்சனாதியர் பத்துவெள்ளஞ்சேனைகளோடும்அஞ்சனேயராதியரை யெதிர்க்க அப்பத்து வெள்ளஞ் சேனைகளும்இராமலட்சுமணர்களால் சூரியோதயத்திற்குமுன் மடிதல் ... 393
தூமாட்சன் அஞ்சனேயரோடு போராடி மாய்தல் ... 395
மகாபாரிசன் அங்கதனோடு போராடி மாய்தல் ... 396
மாலியென்பவன் நீலனோடு போராடி. இலட்சுமணரால் மாய்தல் 397

படலமும், விஷயமும். பக்கம்.

மகரக்கண்ணன் வதைப்படலம். 399

இராவணனேவலால் மகரக்கண்ணன் கரனென்னுந் தன் தந்தையை மாய்த்த ஸ்ரீராமர்மேல் வஞ்சினங்கொண்டு படையெடுத்துவரல் 400
மகரக்கண்ணன் தன்மனதிற்கொண்ட குரூரங்களைச் சொல்லி ஸ்ரீராமரோடு போர்புரிதல் ... 401
ஸ்ரீராமர் மகரக்கண்ணன்செய்த மாயைகளைத் தெரிந்து அவன்சிரத்தைத் தமது பாணத்தால் அறுத்து வீழ்த்தல் ... 404
மகரக்கண்ணனுக்குச் சக்கரராட்சகர்களாகிய குருதிக்கண்ணனையுஞ் சிங்கனையு, நளனும் பனசனுமெதிர்த்து மாய்த்தல் ... 404

பிரமாஸ்திரப்படலம். 406

மகரக்கண்ணன் முதலியோர் இறந்தகமையைச் சாரணர்களாலறிந்த இராவணன்இந்திரசித்தை வரவழைத்தல் ,,
இந்திரசித்துஇராவணனிடத்தில் வந்து சிலவார்த்தைகூறி யுத்தகளத்திற் செல்லல் 407
ஸ்ரீராமலட்சுமணர்கள் இந்திரசித்துவினோடும்வந்த அறுபதுவெள்ளஞ்சேனைகளையு மதமாக்க அதையவன்கண்டு பிரமித்தல் ... 409
அஞ்சனேயர் திருத்தோள்கொட்டி அட்டகாசஞ்செய் தாரவாரித்தல் ... 412
இலட்சுமணர் யுத்தகளம்புகுந்து இந்திரசித்துவைச் சூழ்ந்துநின்ற ஆயிரங்கோடி தேர்வீரர்களை அதமாக்கல் 413
ஸ்ரீராமலட்சுமணர்களை இந்திரசித்துநோக்கி சிலவார்த்தைகூற அதற்குப் பிரதியுத்தரம் இலட்சுமணரீதல் 415



படலமும், விஷயமும். பக்கம்.

இந்திரசித்துவும் இலட்சுமணரும் போர்செய்தல் ... 416
அஸ்தமிக்கும் வேளையில் இந்திரசித்து ஆகாசத்தில் மறையஇலட்சுமணர் இவன்மீது பிரம்மாஸ்திரம் பிரயோகிப்பனென்று ஸ்ரீராமபிரானுடன்சொல்லஅவரதைத் தடுக்க இஃதறிந்த இந்திரசித்து தான் அப்பிரமாஸ்திரம் தொடுக்கும்படி இலங்கையிற்புகுந்துஇராவணனிடம் யோசிக்கவருதல் 418
சூரியனஸ்தமித்த பிறகு வானரசைனியங்கட்கு ஆகாரங்கொண்டு வரும்படி விபீஷணரை ஸ்ரீராமபிரானனுப்புதல் ... 420
ஸ்ரீராமபிரான் இளையபெருமாளுடன் சிலவார்த்தைகூறி பாடிகூடார மடைதல் ... 420
இலங்கையில் இராவணனும் இந்திரசித்துவும் வஞ்சகமான செயல்களை யோசித்தல் 420
இராவணன் ஸ்ரீராம லட்சுமணர்களோடு போர்புரிய நூறுவெள்ளஞ் சேனைகளோடு மகோதரனை யனுப்புதல் 421
அஞ்சனேயர் தண்டாயுதத்தால் அகம்பனையும் அவன்சேனைகளையு நாசமாக்குதல் ... 424
அஞ்சனேயர் அவ்வர்த்தராத்திரியில் ஒருவரையுங் காணாது வருந்தி இலட்சுமணரைத் தேடிக்கொண்டு வழியிலுள்ள காட்சிகளைக் கண்டவரிடஞ்செல்லுதல் 428
இளையபெருமாள் தம்மைக்கண்டாரவாரித்த அஞ்சனேயரைக் கட்டித்தழுவி வானரவீரர்க ளெங்கேயென வினவல் ... 430
இலட்சுமணரை அஞ்சனேயர் பாசுபதாஸ்திரம் பிரயோகித்து இருளைத் துரத்தும்படிவேண்ட அப்படியே பாசுபதாஸ்திரம் பிரயோகித்திருளைவிலக்கின காலையில் சிதறிய வானரவீரர்களெல்லாம் இலட்சுமணரையடைதல் ... 430
இந்திரசித்து மூலயாகஞ்செய்து பிரமாஸ்திரந் தொடுக்கவெண்ணி ஆகாயத்தில் மறைதல் ... 432
மகோதரனிந்திரனுருக்கொண்டு இலட்சுமணராதியரையெதிர்க்க அவர்கள் இஃதென்னவென ஆலோசித்தல் ... 433
ஆகாயத்தில் மறைந்துநின்ற இந்திரசித்து இலட்சுமணராதியர்மீது பிரமாஸ்திரப் பிரயோகஞ்செய்து யாவரையும் மூர்ச்சிப்பித்தல்... ,,
ஸ்ரீராமர் இந்திரசித்துவின் பிரமாஸ்திரத்தால் மூர்ச்சித்துமாண்டுகிடக்கின்ற சுக்கிரீவனாதியரைக் கண்டு வருந்துதல் ... 436
பிரமாஸ்திரத்தாற் கட்டுண்டு மூர்ச்சித்துக்கிடக்கின்ற இலட்சுமணரை ஸ்ரீராமர் காணல் ... 437
ஸ்ரீராமர் இலட்சுமணரை யிறந்ததாக வெண்ணிப் புலம்பி மூர்ச்சையாதல் ... 438
ஸ்ரீராமர் மூர்ச்சையாயினமை கண்ட தேவர்கள் அவரைத் துதிசெய்தல் ... 442
யுத்தகளத்தில் நடந்த விஷயங்களைத் தூதுவர்கள் ராவணனிடஞ் சொல்லுதல்... 444

பிராட்டிகளங்காண் படலம். 445

ஸ்ரீராமலட்சுமணர்களினது நிலைமைத்தன்மையதாயிற்றென்று தூதுவர்களாற் கேட்ட இராவணன்சந்தோஷித்

படலமும், விஷயமும். பக்கம்.
...தச் சீதாபிராட்டியைப் புட்பகவிமானத்தின்மீதேற்றிச்சென்று யுத்தகளத்தைக் காட்டுவிர்களென்று இராட்சசஸ்திரிகளுக்குத் தரவுசெய்தபடி பிராட்டியாரை யுத்தகளத்திற் கழைத்தேகல் ... 445
சீதாபிராட்டியார் யுத்தகளத்தைக்கண்டு விசனித்தல்... 446
சீதாதேவி பிரலாபித்தல் 447
சீதாபிராட்டியாரின் துயரத்தைத் திரிசடை யாற்றுதல் 449
இராட்சசஸ்திரிகள் பிராட்டியைப் புட்பகவிமானத்தின் மீது முன்பிருந்த அசோகவனத்திற் கழைத்தேகல் 451
மருத்துமலைப் படலம். 452
ஸ்ரீராமலட்சுமணுதியர்க்குநேர்ந்தவிபத்தை ஆகாரங்கொண்டுமீண்ட விபீஷணர் காணல் ... ,,
வானரவீரர்களைத் தேடிச்சென்ற விபீஷணுழ்வார் ஆஞ்சனேயரைக்கண்டு களையாற்றல் ... 454
ஆஞ்சனேயரும் விபீஷணரும் சாம்பவந்தரைத்தேடி யவரிடமடைய அவர் ஸ்வாமியின் க்ஷேமசங்கதிகளை வினவ இவர்கள்சொல்லுதல் 455
சாம்பவந்தர் சஞ்சீவிமருந்துள்ள மலையைக் கொண்டுவர அம்மருந்து மிடத்தையுங் குணத்தையும் ஆஞ்சனேயர்க்கு அறிவித்தல் ... 456
ஆஞ்சனேயர் விஸ்வரூபங்கொண்டு சஞ்சீவிமருந்துள்ள மலையைக்கொண்டுவர ஆகாயம் பாய்தற்சிறப்பு 457
ஆஞ்சனேயர் சாம்பவந்தர்கூறிய மார்க்கமாகச் சஞ்சீவிபருவதத்திற்குச் செல்லுதல் 460
ஆஞ்சனேயர் சஞ்சீவிபர்வதத்தை வேரோடு பேர்த்தெடுத்தல் ... 436
சாம்பவந்தரும் விபீஷணரும் ஸ்ரீராமரிடஞ்சென்று திருவடி வருட சுவாமிமூர்ச்சைதெளிந்து தன்மனதிலுள்ள குறைகளைச்சொல்லி வருந்தல் ... ,,
மூர்ச்சித்திருக்கும் இளையபெருமாளாதி வானரவீரர்களை யெழுப்பும்படி ஆஞ்சனேயர் சஞ்சீவிபர்வதங் கொண்டுவரச் சென்றனரவர் வந்தவுடனே யாவருமெழுவரென்று சாம்பவந்தர் சுவாமியின் மனதைத்தேற்றிச் சந்தோஷிப்பித்தல் 466
ஆஞ்சனேயர் சஞ்சீவிபர்வதத்தைக் கொணர்தல் ... 467
ஆஞ்சனேயர்கொண்டுவந்த சஞ்சீவிபர்வதத்தின் வாடைபட்டவுடன் வானரவீரர்களுயிர்த்தெழுதல் ... 468
இலட்சுமண ரெழுந்ததைக்கண்ட ஸ்ரீராமபிரான் சந்தோஷித்துத் தழுவிக்கொள்ளல் ... 469
ஸ்ரீராமபிரான் ஆஞ்சனேயரை வாழ்த்திச் சிரஞ்சீவிப்பட்டமளித்தல் ... 470
சாம்பவந்தர் சொற்படி ஆஞ்சனேயர் சஞ்சீவிமலையை மீட்டும் உத்தர திசையிற் கொண்டேகல் ... ,,
களியாட்டுப் படலம். 471
இராவணனிந்திரசித்துவினுடைய வெற்றியைக்கேட்டு மகிழ்ந்து ஆடல்பாடல்களைச் செய்ய மாயிழையாரோடு களியாடல் செய்திருத்தல் 471
களியாட்டிலுற் சந்தோஷித்திருந்த இராவணன் வானரவீரர்களின் ஆரவாரங்களைக்கேட்டல் ... 473



படலமும், விஷயமும். பக்கம்.
தூதுசென்ற சாரணர் யுத்தகளத்தில் நடந்த சவிஸ்தாரங்களை வ்ண்டிஞருமாய் வந்து இராவணனுக்குச் சொல்ல அவன் மந்திராலோசனைச் சபைக்கு வருதல் ... 474
மாயாசீதைப் படலம். 475
இராவணன் மந்திராலோசனைச் சபைக்கு வந்தகாலையில் மாலியவான் சிலவறிவுறுத்தல் ... 457
மாலியவான்கூறிய புத்திமதிகளை இராவணன் நிக்கிரகித்தபோது இந்திரசித்து சிலவார்த்தைகூறல் ... 477
இந்திரசித்து நிகும்பலையாகம் இடையூறின்றிமுடிய வெண்ணி மாயாசீதையையுண்டாக்கி அநுமான்முன்பு மாய்ப்பேனெனச் செல்லுதல் ... 478
வானரவீரர்கள் இலங்காபுரியைக் கொளுத்தல் ,,
அநுமார் சஞ்சீவி பர்வதத்தை இருப்பிடத்திற் சேர்த்து மீண்டு இலங்கையின் மேலைக்கோட்டைவாசலில் வந்து தர்ச்சித்தல் ... 479
இந்திரசித்து மாயாசீதையைக் கொண்டுவந்து ஆஞ்சனேயர்முன்பு நிறுத்திச் சிலவார்த்தை கூறல் ... 480
அநுமார் இந்திரசித்துவுக்குச் சில நீதிவார்த்தைகூற அதனைக்கேட்ட இந்திரசித்து சில பொய்வசனம் புகன்று மாயாசீதையைவெட்டி நிகும்பலையாகஞ் செய்யச் செல்லுதல் ... ,,
இந்திரசித்து மாயாசீதையைவெட்ட அநுமார் புலம்பல் 482
அநுமார் தெளிந்தெழுந்து நடந்த சங்கதியை ஸ்ரீராமரிடஞ்சென்று சொல்லி மூர்ச்சித்தல் ... 484
சீதையிறந்தாளென்றவார்த்தையைக்கேட்ட ஸ்ரீராமரும் இலட்சுமணரும் திகைத்துப் பூமியிற் சாய்ந்துவிட விபீஷணர் ஆயாசந்தீர்த்தல் ... 485
சீதையிறந்ததாகக்கேட்டு வருந்தும் ஸ்ரீராமரை இலட்சுமணர் தேற்றுதல் ... 486
இந்திரசித்து அயோத்தியில் யாவரையுங் கொல்லப்போனுனென்று ஆஞ்சனேயர்சொல்லக்கேட்ட ஸ்ரீராமர்வருந்தல் ... 188
விபீஷணர் ஸ்ரீராமனுக்குச்சிலதேறுதலைச்சொல்லி வண்டுருவங்கொண்டு சென்று சீதையினிருப்பும் இந்திரசித்து நிகும்பலையாகத்திற்குச்சென்றதுமறிந்து ஸ்ரீராமரிடம்வந் துரைத்தல் 491
விபீஷணர் தாம்போய் கண்டுவந்தவைகளைச் சுவாமிக்குச் சொல்லுதல் ... 492
சீதையிருக்கின்றுளென்ற சுபவார்த்தையைக் கேட்ட ஸ்ரீராமர் சந்தோஷித்த காலையில் நிகும்பலையை யழிக்க இலட்சுமணரைத் தன்னுடன்கூட்டி யனுப்பும்படி விபீஷணர் வேண்டல் ... 493
நிகும்பலைப் படலம். ,,
ஸ்ரீராமபிரான் இலட்சுமணருக்கு அஸ்திராதிகள் கொடுத்து சுக்கிரீவன் முதலியோரைத் துணைகூட்டி யனுப்புதல் ... 494
இலட்சுமணரும் வானரவீரர்களும் இந்திரசித்தினுடைய சேனைகளையும் யாககுண்டத்தையு மழித்தல் 496

படலமும், விஷயமும். பக்கம்.

ஆஞ்சனேயர் இந்திரசித்துவைத் தூஷித்தெதிர்த்தல் ... 501
இந்திரசித்து அநுமாரைத் தூஷித்தெதிர்த்தல் 504
இலட்சுமணர் அநுமானை யூர்ந்துவந்தெதிர்க்கவும் இந்திரசித்து , அவரோடு கடும்போர்விளைத்து மெலிந்து போதல் ... 507
இந்திரசித்து தேவாஸ்திரங்களை விடுத்துப்போர் விளைக்கையில் இலட்சும்ணரவற்றையும் வெற்றிகொள்ளுதல் 512
இந்திரசித்து விபீஷணரைத் தூஷித்தெதிர்த்தல் ... 516
விபீஷணர் இந்திரசித்துவுக்குச் சிலவற்றைக் கூறல் ... 518
இந்திரசித்து விபீஷணர்மீது பாணப்பிரயோகஞ்செய்ய அதை விபீஷணர் கண்டித்தல் ... 520
இந்திரசித்து ஆகாயத்தில்மறைந்து இராவணனிடம் செல்லுதல் ... 521

இந்திரசித்து வதைப்படலம். ,,

இராவணன் தன்பால்வந்த இந்திரசித்துவை நோக்கி நடந்தவாலா றனைத்தையுங் கேட்க இந்திரசித்து சொல்லுதல் ... 522
இந்திரசித்து தன்கருத்தை இராவணனிடம் வெளிப்படுத்த வதைக்கேட்டவிராவணன் சிலவற்றைக் கூறல் ... 523
இந்திரசித்து இராவணனைத்தேற்றிச்சென்று இலட்சுமணரோடு கடும்போர் விளைத்தல் ... 524
இலட்சுமணரும் விபீஷணரும் இந்திரசித்துஇறக்கவேண்டியதைப் பற்றிச் சிலவாலோசித்தல் ... 528
இந்திரசித்துவின் விற்பிடித்தகையை இலட்சுமணர்தறித்துத் தள்ளுதல் ... 530
இலட்சுமணர் இந்திரசித்துவின் தலையைக் கண்டித்துப் பூமியில் விழச்செய்தல் ... 531
அங்கதகுமாரன் இந்திரசித்துவின் றலையைத்தூக்கிக்கொண்டுவர இலட்சுமணர் ஆஞ்சனேயர்மீ தாரோகணித்து ஸ்ரீராமபிரான் சன்னிதியிலெழுந்தருள அவர் சந்தோஷித்தல் ... 532
இந்திரசித்துவின் தலையை ஸ்ரீராமர் பாதத்தில் காணிக்கையாகவைத்துஇலட்சுமணர் வணங்க சுவாமி சந்தோஷித்தல் ... 533

இராவணன்சோகப் படலம். 535

இந்திரசித்துவின் மரணத்தைத்தூதுவர்கள் இராவணனுக் கழிவித்தல் ... ,,
இராவணன் இந்திரசித் திறந்தமைக்குப் புலம்பல் ... 536
இராவணன் இந்திரசித்துவைக் கூவிக்கொண்டழுது யுத்தகளம்புகுதல் ... 539
இராவணன் இந்திரசித்துவின் தலையிழந்த தேகத்தைக்கண்டு வருந்துதல் ... 540
இராவணன் யுத்தகளத்திற் பிரலாபித்தல் ... ,,
இராவணன் இந்திரசித்துவின் உடலை யெடுத்துக்கொண்டு இலங்கையிற் புகுதல் ... 542
இந்திரசித்து இறந்ததற்கு மண்டோதரி புலம்பல் ... 543
இராவணன் சீதாபிராட்டியாரைச்சினந்து வெட்டப்போயினதை மகோதரன் தடைப்படுத்தி நிறுத்துதல் ... 545
இராவணன் கோபந்தணிந்து இந்திரசித்துவின் உடலைத்தயிலத்தோணியில் விட்டு வைப்பித்தல் ... 546

படைக்காட்சிப் படலம். 547

இராவண னுத்தரவின்படி சிலதூதரோடி மூலபலச்சேனையைக் கொணர்ந்து அவனுக்குக் காட்டுதல். ... 547
மூலபுலச்சேனைகட்கு இராமலட்சுமணர்களாதி வானர வீரர்களின் திறத்தை மாலியவான் அறிவித்தல் ... 552
மூலபலச் சேனுபதிகள் இராவணனுடன் சிலபேசி யவனைத் தேற்றுதல் ... 553
மூலபல சேனைகள் யாக்கனே சென்று மனிதர்களையும் வானரர்களையும் செயிப்போமென்று போதல் ... 554

மூலபல வதைப்படலம். 555

இராவணன் மூலபல சேனையோடு உயுத்தகளம் புகுந்து பராக்கிரமித்தல் ... ,,
மூலபல சேனைகளைக் கண்ட தேவர்கள் பயந்து உருத்திரமூர்த்தியி னிடத்தில் அடைக்கலம் புகுதல் ... 558
வானரசேனைகள் மூலபல சேனைகட் கஞ்சியோடல் ... 559
ஸ்ரீராமர் விபீஷணரை நோக்கி இச்சேனைகளின் வரலாற்றைச் சொல்லென்ன வவர் சொல்லுதல் ... 560
மூலபல சேனைகட்குப் பயந்தோடின வானரசேனைகளை யழையென்று சுவாமிசொல்ல அங்கத னழைக்கச் செல்லுதல்
அங்கதகுமாரனழைத்த சேனைகள் பதின்மொழி கூறல் 561
அங்கதகுமாரன் ஜாம்புவந்தரைப்பார்த்து சில வசனங் கூறல் 562
ஜாம்புவந்தர் தன்னைத் தேற்றவந்த அங்கதகுமாரனுக்குப் பதின்மொழி விடுத்தல் ... 563
அங்கதகுமாரனுடைய சொற்களினுல் திருப்பிவரக்கண்ட வானரச்சேனைகளை ஸ்ரீராமபிரான் ஆதரித்திருவெனை இளையபெருமானுக் காக்கியாபித்தல் ... 564
தன்தோளி லாரோகணித்து யுத்தத்திற் கெழுந்தருள வேண்டுமென் றுவேண்டிய அநுமானை இலட்சமணருடன் கூட்டியனுப்புதல் ... 565
ஆயிரவெள்ளமென்னும்படிவந்த மூலபல சேனைகளாகிய இராட்சசர்கள் யாவரையும் ஸ்ரீராமர் தனியே புகுந்து சங்கரித்தல் ... 566
ஸ்ரீராமபிரான் இராட்சசர்களின் கண்ணுக்கு எங்குந் தானுயிருப்பதாகச் சாரிகைவந்து கொல்லுதல் ... 573
ஸ்ரீராமர் சரக்கூடிட்டு இராட்சசர்களைச் சம்மரித்தல் ... 578
வன்னியென்னு மிராட்சசப் படைவீரன் மற்றவிராட்சசர்களைப்பார்த்துச் சிலசொல்ல வவர்களுடன்பட்டு யாவரும் ஒருங்குசேர்ந்து சுவாமியுடன் சண்டைக்கு வந்து மாளல் ... 579
மூலபலசேனைகள் யாவையு மதமாக்கினதைக் கண்டு தேவர்கள் புஷ்பவருஷம் வருஷிக்க ஸ்ரீராமர்தனியேநின்ற சிறப்பு ... 583
ஸ்ரீராமர் மூலபலப்படைகளை நீக்கி இலட்சுமணர் இராவணனோடு போர்புரியு மிடத்திற்குப் போதல் ... 584

வேலேற்றுப் படலம். ,,

இலட்சுமணரை யெதிர்த்து நின்ற இராவணன் மோகனுஸ்திரம் விடுக்க, அதையவர்

படலமும், விஷயமும். பக்கம்.
விபீஷணர் சூழ்ச்சியால் நாராயணாஸ்திரம் விடுத்தத மாக்குதல் ... 585
விபீஷணர் மார்புக்குநேராக இலருவைத்து இராவணனேவியவேலை இளையபெருமாளேற்றுமூர்ச்சித்தல் ... 589
ஆஞ்சநேயர் சஞ்சீவிமருந்தைக்கொணர இலட்சுமணர் மூர்ச்சை தெளிந்தெழுதல் ... 590
இளையபெருமாளாதி யாவரும் தன்பால்வந்து வணங்கக் கண்டஸ்ரீராமபிரான்நடந்த யுத்த வரலாறுகளைக் கேட்க சாம்பவர் கூறுதலும் இளையபெருமாள் ஆயாசந் தீர்ந்திருத்தலும் ... 591

வானரர் களங்காண் படலம். 592
மூலபலசேனையின் மடிவை ஸ்ரீராமராக்ஞைப்படி விபீஷணர்காட்ட சுக்கிரீவனாதியர் காணுதல் ... 592
வானரசைநியங்கள் மீண்டு இராமபிரானிடம் வந்திருத்தல் ... 596
இராவணன் களங்காண் படலம். 597
இலட்சுமணரை வெற்றிகொண்டு இலங்கையிற் சென்ற இராவணன் யாவரோடும் சந்தோஷங்கொண்டாடல் 597
மூலபலசேனையின் மடிவையும் இலட்சுமணாதியர் சந்தோஷத்தையும் தூதர்களோடி வந்து இராவணனுக் கறிவித்தல் ... 598
தூதுவர்களுடைய சொல்லால் இராவணன் கோபுரத்தின் மீதேறி மூலபலப் படுகளத்தைப் பார்த்தல் ... 601
மூலபலப் படுகளத்தைப் பார்த்து இராவணன் மகாகோபத்தோடுகோபுரத்தினின்று இறங்கி தனதரசாட்சி மண்டபம்சேர்தல் ... 602

தேரேறு படலம். 603
இராவணன்போர்க்கோலங்கொள்ளுதற் சிறப்பு ... 603
இராவணனுடைய தெய்விக விரதத்தின் சிறப்பு ... 606
இராவணன் இரதாரூடனாகி யுத்தகளஞ் செல்லல் ... 607
ஸ்ரீராமர்போர்க்கோலங் கொள்ளுதல் ... 608
ஸ்ரீராமபிரானுக்குத் தேவேந்திரனனுப்பிய இரதத்தின் சிறப்பு ... 609
ஸ்ரீராமபிரான் இரதாரூடராகல் 612

இராவணன்வதைப் படலம். 613
ஸ்ரீராமர் இரதமேறியபோது சகல தேவர்களும் ஆகாயத்தினின் றாசிர்வதித்தல் ... 614
இலக்குமணரைநோக்கியெதிர்க்கச்சென்றமகோதரனை ஸ்ரீராமர் மாய்த்தல் ... 616
இராவணன் ஸ்ரீராமருடன் எதிர்த்தகாலையில் அவனுக்குண்டானதுர்ச்சகுனக்காட்சி 617
ஸ்ரீராமமூர்த்தியும் இராவணனும் பராக்கிரமித்து நிற்றல் 618
ஸ்ரீராமமூர்த்திக்கும், இராவணனுக்கும் சமர்மூளுதல் ... 619
இராவணன் தனதிரதத்தோடு ஆகாயமார்க்கஞ் சென்று அங்கிருந்து பாணப்பிரயோகஞ்செய்தல் ... 622
ஸ்ரீராமபிரான் தனதுதேரையும் ஆகாயத்தில் நடத்திய இராவணன்தேரின்முன்னஞ் செலுத்தி யுத்தஞ்செய்தல் ,,
இராகவனும் இராவணனும் சிவாஸ்திர முதலிய அஸ்திரங்களை மாறிமாறிவிடுத்துப்போர்விளைத்தல் ... 625
இராவணன் இராமபிரானின் மேல் மாயாஸ்திரத்தைவிடுத்தல் ... 628



படலமும், விஷயமும். பக்கம்.
ஸ்ரீராமர் ஞானாஸ்திரத்தைப் பிரயோகித்து இராவணன் விட்ட மாயாஸ்திரத்தை அதஞ்செய்தல் ... 630
இராவணன்விட்ட சூலாயுதம் ஸ்ரீராமர்செய்த ஹுங்காரத்தால் பொடியாதல் ... 631
இராவணன் விபீஷணர்கூறிய ராமமூர்த்தியினது மகத்துவத்தை யெண்ணல் ... 632
ஸ்ரீராமர் இராவணனுடைய பத்துத் தலைகளில் தமது பாணத்தால் ஒரு தலையும் ஒரு கையும் கண்டித்தலும் மறுபடி முளைத்தலும் ... 634
ஸ்ரீராமபிரான் இராவணனுடைய தலைகளைக் கண்டிக்க அவை மீண்டு முளைத்தல் ... 636
ஸ்ரீராமபாணங்கள் தைத்தமையால் இராவணன் மூர்ச்சையாதல் ... 637
இராவணன் இரதத்தில் மூர்ச்சித்து விழுந்ததைக் கண்ட சாரதி இலங்கைக்கேக இரதத்தைத் திருப்பிச் செல்லுதல் ... 638
இராவணன் மூர்ச்சை தெளிந்து இரதத்தையேன் திருப்பினை யென்று சாரதியைக் கோபித்தல் ... ,,
இராவணன் தனதிரதத்தைத் திருப்புவித்து ஸ்ரீராமபிரான்மேலத்திரசத்திரங்களைப் பிரயோகஞ் செய்ய அவைகளைச் சுவாமி கண்டித்தல் ... 639
ஸ்ரீராமபிரான் பிரமாஸ்திரத்தைப் பிரயோகித்து இராவணனை வதஞ்செய்தல் ... 641
இராவணனிறக்கக்கண்ட தேவர்களு முனிவர்களு ஸ்ரீராமபிரானைப் புஷ்பமாரி பொழிந்து ஆசீர்வதித்தல் ... 642
ஸ்ரீராமர் தெய்விகத்தேரை இந்திரபுரத்திற் கனுப்பி இராவணனது உயிர்நீங்கிய உடலினுள்ள தழும்புகளை நோக்கிச்சிலவார்த்தைகூற அதற்கு விபீஷணர் பதில்கூறல் ... 643
ஸ்ரீராமபிரான் விபீஷணரைநோக்கி இராவணாதியர்க்கு சமக்கிரியை நடத்துவாயென வாக்கியபரித்தல் ... 646
இறந்துகிடக்கு மிராவணன்மேல் விபீஷணர் விழுந்து பிரலாபித்தல் ... 646
இராவணன்மேல் விழுந்தழுகின்ற விபீஷணரை சாம்புவந்தர் தேற்றுதலும் மண்டோதரிதன்னாயகன் மரணத்தைக்கேட்டு வருந்தி யுத்தகளம் வருதல் ... 649
மண்டோதரி இராவணன்மேல் விழுந்து புலம்பித் தானுமுயிர்விடல் ... 650
இராவணனோடு மரணஞ்செய்த மண்டோதரிக்கும் பந்துவர்க்கத்தினர்க்கும் விபீஷணர் சமக்கிரியை நடத்தி மீண்டு ஸ்ரீராமரைச் சரணடைதல் ... 652

மீட்சிப் படலம். 653
ஸ்ரீராமர் விபீஷணருக்கு முடிசூட்டும்படி இளையபெருமாளுக் காக்கியாபித்தல் ... 654
இலட்சுமணர் விபீஷணரைச் சிங்காசனத்திலிருத்தி முடிசூட்டுதல் ... 655
ஸ்ரீராமபிரான் ஆஞ்சநேயரைச் சீதாதேவிபாற்சென்று நடந்த யுத்தவைபவங்களைச் சொல்லென் றனுப்பல் ... 656
ஸ்ரீராமபிரானுத்தரவாற்சென்ற ஆஞ்சநேயர் சீதாதேவியை வணங்கிச் ஜெயமுரைத்தல் ... ,,

படலமும், விஷயமும். பக்கம்.
ஆஞ்சனேயர் காவலரக்கியரைக் கொல்லும்படி வரங்கேட்க பிராட்டியார் வேண்டாமென்று மறுத்தல் ... 658
ஸ்ரீராமர் சீதாதேவியை அலங்கரித்தழைத்து வரும்படி விபீஷணரையேவ அவர் சீதாபிராட்டியாரிடஞ் சென்று சொல்ல பிராட்டியார் சுவாமியைவந்து வணங்கல் ... 659
ஸ்ரீராமர் சீதையின் கற்புத்திறத்தைக்காட்ட வெண்ணிச் சினத்தல் ... 662
இராமசுவாமி சினந்து சிலவார்த்தையைச்சுடச்சுடக்கூறியதைக்கேட்ட சீதாபிராட்டியார் வருந்திச் சுவாமியைப் பார்த்துச்சொல்லுதல் ... 664
சீதாபிராட்டியார் தேகத்தைநீக்குவேனென்று இளையபெருமானைத் தீமூட்டச் சொல்ல வவர்மூட்டுதல் ... 665
சீதாபிராட்டியார் அக்கினியைவலம்வந்து குதிக்க அக்கினிதேவன் கையேந்திவந்து ஸ்ரீராமர்பால் விடுத்தல் 666
அக்கினிபகவான் காத்தேந்திக்கொண்டுவந்து தன்பால் விடுத்த சீதாபிராட்டியை ஸ்ரீராமபிரான் அங்கீகரித்தல் ... 667
ஸ்ரீராமர்பால் பிரமதேவனும் உருத்திரமூர்த்தியும் வந்து அவரது யதார்த்தநிலையையுணர்த்திச் சீதையைச் சன்மானித்தல் ... ,,
உருத்திரமூர்த்தியின் கட்டளையால் வைகுந்தத்திலிருந்த தசரதச் சக்கரவர்த்தி ஸ்ரீராமனுதியர்க்குப் பிரத்தியட்சமாகி அவர்களைத்தேற்றிச் செல்லுதல் ... 669

படலமும், விஷயமும். பக்கம்.
இந்திராதி தேவர்கள் சுவாமியைப் பிரார்த்திக்க வேண்டியவரத் தருகிறோமென அப்படியே கொடுமென்று சுவாமிகேட்டல் ... 672
விபீஷணர் கொணர்ந்த புஷ்பகவிமானத்தின்மீது ஸ்ரீராமபிரான் சீதாலட்சுமண சகிதரா யெழுந்தருளல் ... 674
ஸ்ரீராமபிரான் விபீஷணுதியர் வேண்டுகோளால் யாவரையும் புஷ்பகவிமானத்திலேற்றிக் கொள்ளுதல் ... 675
யாவரும் புஷ்பகவிமானருடராய் வடதிசைநோக்கி வரும்போது அவ்வவ்விடங்களைக்குறிப்பிட்டு ஸ்ரீராமபிரான் சீதாபிராட்டிக்குக் கூறல் ... 676
சீதாபிராட்டியார் வேண்டுகோளால் கிட்கிந்தையிலுள்ள வானரஸ்திரீகளையும் விமானத்தின்மீ தேற்றிச் செல்லுதல் ... 678
பாரத்துவாசமாமுனிவர் ஸ்ரீராமமூர்த்தியின் வருகைதெரிந்தெதிர் கொண்டழைத்து தமது பன்னகசாலைக்கழைத்தேகல் ... 679
பாரத்துவாசமாமுனிவர் ஸ்ரீராமனுதியர்க்கு விருந்துசெய்தல் ... 681
ஸ்ரீராமபிரான் அயோத்திக்குச் சென்று பரதாழ்வானுக்குத்தமது க்ஷேமத்தை அறிவித்து வரக்கடவாயென்றுக்கியாபிதது மேர்திரந்தனுப்புதல் ... 682
நந்திக்கிராமத்திலுள்ள பரதாழ்வானது நிலைமை யின்னதெனல் ... ,,
பரதாழ்வான் அக்கினியிற் பிரவேசிப்பே னென்பனதய



படலமும், விஷயமும். பக்கம்.
றிந்து கௌசல்யாதேவியாரங்குவந்து வருந்துதல் ... 685
பரதாழ்வான் கௌசல்யாதேவியின் கருத்திற்கிசையாது அக்கினியிற் பிரவேசிப்பதே கடமையென்று அக்கினியைப் பூசைசெய்யும்போது வந்தார் வந்தார் ஸ்ரீராமரென்று சொல்லிக்கொண்டு அஞ்சநேயர் அங்குவந்து பரதாழ்வானைத் தடுத்து கணையாழியைத் தந்து மகிழ்வித்தல் ... 687
ஸ்ரீராமசுவாமியை யெதிர்கொண்டு போதற்குச் சேனைகளையும் பட்டினத்துச் சனங்களையும் பிரயாணப்படுத்துவாயென பரதாழ்வார் சத்துருக்கனருக்கு ஆஞ்ஞாபித்தல் ... 691
பரதாழ்வார் ஸ்ரீராமபிரானைக் காணும்படி யாவரோடுமெதிர்கொண்டு போதல் 692
அநுமார் பரதாழ்வாருக்கு ஸ்ரீராமபிரான் சித்திரகூடபருவதத்தை நீங்கினபிறகு இதுவரைக்கு நடந்த வரலாறுகளை முறையேகூறல் 693
ஸ்ரீராமபிரான் தம்மைச்சூழ்ந்தவர்களோடு பாரத்துவாசராசிரமத்தில் விருந்துண்டிருக்குங் காலையில், தம்மைக்காணவந்த குகனைச் சன்மானித்தல் ... 698
ஸ்ரீராமபிரான் பாரத்துவாசரிடத்தில் விடைபெற்று யாவரோடும் புட்பகவிமானத்தின்மீதெழுந்தருளி அயோத்தியை நோக்கிச் செல்லுதல் ... 699
ஆஞ்சநேயர் ஸ்ரீராம தரிசனத்தைக் காட்டப் பரதர் காணுதல் ... 700

படலமும், விஷயமும். பக்கம்.
ஆஞ்சநேயர் விமானத்திற்பாய்ந்து பரதாழ்வார் வருகையை ஸ்ரீராமபிரானுதியர்க்கறிவித்தல் ... 701
ஸ்ரீராமர் பரதராஜதியரைக் காணவேண்டுமென் றெண்ணியதையறிந்த புட்பகவிமானம் பூமியிலிழிய, ஸ்ரீராமரும் இளையபெருமானும் பரதருடன் தாய்மாராதி யாவர்களையுங் கண்டு மகிழ்தல் ... 702
ஸ்ரீராமர் தம்மை வணங்கின்ற பரதர் திருக்கோலத்தைக் கண்டுதழுவிஒருவருக்கொருவர் அன்புகூர இலட்சுமணர் சீதை இவர்கள் பரதரை வணங்கலும் சத்துருக்னர் ஸ்ரீராமனுதியரை வணங்கலும் ... 704
யாவரும் புட்பக விமானத்திலாரோகணித்து அயோத்தியாபுரிக்குப் பிரயாணமாக தேவர்கள் மலர்மாரிபொழிந்து ஆசீர்வதித்தல் 705
ஸ்ரீராமருடன் யாவரையுந்தாங்கிய புட்பகவிமானம் அயோத்தியி லிரங்குதல் 706
திருமுடிசூட்டுப் படலம். ,,
ஸ்ரீராமர் நந்திகிராமத்தை யடைந்து தாம் கொண்டிருந்த தவவேடத்தினைமாற்றி அயோத்தியாபுரிக் கெழுந்தருளல் ... ,,
ஸ்ரீராமசந்திரர் அயோத்தியாபுரியிலுள்ள அரண்மனையடைதல் ... 708
ஸ்ரீராமர் விபீஷணுதியர்க்கு அவ்வவ் வரண்மனைகளிலுள்ளபெருமைகளைக்காட்டென்று பரதாழ்வானுக்கு ஆக்கியாபித்தல் ... 709
ஸ்ரீராமசந்திரர் பட்டாபிஷேகத்திற்காக ஆஞ்சநேயர் சக

படலமும், விஷயமும். பக்கம்.

ல்தீர்த்தமுங்கொண்டுவரச் செல்லுதலும், வசிஷ்டமுனிவரை வரவழைத்துத் திருமுடிசூட்ட நாளிடுதலும் ... 710
ஸ்ரீராமச்சந்திரர்க்குச் செய்யும் பட்டாபிஷேகத் திருமுகத்தைச் சகலதேசங்கட்கு மனுப்ப யாவருமயோத்தியாபுரியடைதல் ... 711
இராமபிரான் சீதாபிராட்டியாரோடு பட்டாபிஷேக மண்டபத்தில் சிம்மாதனரூடராயிருக்க யாவருமபிஷேகஞ்செய் தகக்குளிர வசிஷ்டமகாமுனிவர் சடங்கியற்றல் ... 712
இராமபிரானுக்கு வசிஷ்டமுனிவர் தமது கரத்தால் முடிசூட்டுதல் ... 713
இராமபிரான் தம்பிமார்க்கும் வசிஷ்டமுனிவரால் மகுடந்தரிப்பித்து பரதருக்கு இளவரசுதரல் ... 714

படலமும், விஷயமும். பக்கம்.

விடைகொடுத்த படலம். ,,
ஸ்ரீராமபிரான் சீதாபிராட்டியாரோடு அரசுவீற்றிருந்த சிறப்பு 715
பட்டாபிஷேகத்திற்குவந்த பிராமணர்களுக்கும் சகலதேசவரசர்களுக்கும் ஸ்ரீராமச்சந்திரர் வெகுமானத்தந்து விடையீதல் ... 716
சுக்ரீவன் அஞ்சநேயர் முதலிய வானரவீரர்கட்கும் விபீஷணர்க்கும் குகப்பெருமானுக்கும் வெகுமானமீதல் ... 717
ஸ்ரீராமபிரான் சுக்கிரீவர் அஞ்சநேயராதி வானரவீரர்கட்கும் விபீஷணர்க்கும் தத்தமிடஞ்சாரவிடையீதல் 719
குகனாதி சுக்கிரீவன் அஞ்சநேயர் விபீஷணர் யாவரும் பிரயாணமாகி அவரவர்களை அவரவர் பதியினிறுத்தி விபீஷணர் இலங்காநகரம் புகுதல் ... ,,
ஸ்ரீராமமூர்த்தி அரசுபுரிதல் 720

## எ - வது உத்தரகாண்டம்.

திருவோலக்கப் படலம். 721
ஸ்ரீராமபிரான் அயோத்தியாபுரியில் சிங்காதனரூடராகக் கொலுவீற்றிருந்த சிறப்பு ... 722
ஸ்ரீராமச்சந்திர தரிசனங் காணவந்த மகாரிஷிகளை சுவாமி க்ஷேமலாபம் விசாரித்தல் ,,
மகாரிஷிகள் சுவாமியைப் புகழ்தல் ... 723
புலத்தியப்படலம். 725
இராவணாதியர் பிறப்பாதிவரலாறுகளைச் சுவாமிகேட்க அகஸ்தியர் பூர்வசரித்திரஞ்சொல்ல வாரம்பித்தல் 725
புலத்தியப் பிரமரிஷியாற் றோன்றிய விச்சிரவாவுக்கு வச்சிரவண்ணன் பிறந்த வரலாறுரைத்தல் ... 726
வச்சிரவண்ணனென்னும் குபேரன் பிரமனைநோக்கித் தவஞ்செய்து வரம்பெறுதல் 729
குபேரனுக்குத் தன் தந்தையாகிய விச்சிரவாவென்பவர் இலங்காபுரியைக்காட்ட அதிலிருந்தரசுபுரிதல் ... 730



படலமும், விஷயமும். பக்கம்.

அரக்கர்பிறப்புப்படலம். 731
ஸ்ரீராமச்சந்திரர் இராட்சசர்களின் பிறப்பாதி வரலாறுகளைக்கேட்க அகஸ்தியமகாமுனிவர் முறைபடக்கூறுதல் ... ,,
மாலியவான் சுமாலி மாலியென்னு மூவிராட்சசர்களுற்பத்தி 735
மாலியவான் சுமாலி மாலி இவர்கள் மூவரும் பிரமதேவனிடத்தில் வரம்பெறுதல் ,,
மாலியவானாதி மூவரும் விசுவகர்மனை யழைத்து பட்டணமொன்று நிருமித்துத்தரவேண்டுமெனல் ... 736
விசுவகர்மன் பூர்வமுண்டான இலங்கையின் பெருமையைச் சொல்லி அதுதானுங்களுக்கிடமென்று அதில் மாலியவானாதி மூவர்களையுங் குடியேற்றுதல் ... ,,
மாலியவானாதி மூவர்க்கும் விவாகம் நடந்தேறுதல் ... 738
மாலியவானாதி மூவரும் தேவலோகங்களிலுள்ளவர்களை வதைத்துத் தீமைசெய்யவவர்கள் வருந்தல் ... 739
தோத்திரப் படலம் 704
தேவர்கள் கைலாசத்தை யடைந்து மாலியவானாதி அரக்கர்செய்யும் கொடுமையை பரமசிவனைப் போற்றிசெய்து முறையிடல் ... ,,
சிவபெருமான்தம்மைவேண்டிய தேவர்களை நோக்கி நாம் இராட்சசர்களைக் கொல்லத்தக்கதன்று மகாவிஷ்ணுவினிடத்திற் சென்று சொன்னால் அவர்கொல்லுவாரென உரைத்த அவ்வண்ணம் தேவர்கள் பாற்சமுத்திரமடைதல் ... 7 1
தேவேந்திரனாதி தேவர்கள் மகாவிஷ்ணுவைப் போற்றல் 742

படலமும், விஷயமும். பக்கம்.

மகாவிஷ்ணுவானவர் யோகநித்திரைநீங்கி இந்திரனாதிதேவர்களை நோக்கி வந்தகாரியம் யாதென அவர்கள் கூறுதல் ... 742
மகாவிஷ்ணுவானவர் தேவர்கள் முறையிட்டுக்கொண்டதற்கு அருள்வாக்குரைத்தல் ... 743
இலங்கையழித்த படலம். ,,
தேவர்கள் பாற்சமுத்திர மடைந்து மகாவிஷ்ணுவினிடத்தில் முறையிட வவருளிச்செய்ததைத் தூதுவர்களால் மாலியவானாதி மூவருமறிந்து தேவர்கள்மீது படையெடுத்தல் ... 744
இராட்சசப்படைகள் தேவலோகத்தில் வரக்கண்ட தேவேந்திரன் ஸ்ரீமகாவிஷ்ணுவுக்குத் தெரிவிக்க ஸ்ரீமகாவிஷ்ணுவானவர் கருடவாகனரூடராய்ப் போர்க்கோலங் கொண்டுயுத்தகளம் வருதல் ... 745
போருக்கெழுந்த சுமாலி மகாவிஷ்ணுவின் பாணத்தைத் துமூர்ச்சையாய்ச்சாய மாலியென்பவன்யுத்தத்திற்கு வந்திறத்தல் ... 746
மாலியவானும் சுமாலியும் மகாவிஷ்ணுவின் போருக்காற்றாது தோற்று பாதாளம்புகுந்தொளித்தல் ... 749
இராவணன்பிறப்புப்படலம். 750
பாதாளம்புகுந்த மாலியவான் சுமாலியென்னுமிருவரும் யோசித்துச் சுமாலி தன் புத்திரியை யழைத்துக் கொண்டு பூலோகம் வருதலாதிய சவிஸ்தாரங்களை ஸ்ரீராமபிரானுக்கு அகஸ்தியமாமுனிவர் கூறுதல் ,,

படலமும், விஷயமும். பக்கம்.

பூலோகம்வந்த சுமாலியானவன் குபேரனைக்கண்டு பொறாமைகொண்டு கைகசியை விச்சிரவாமுனிவரிடத்திற் புத்திர பாக்கியம்பெற வனுப்புதல் ... 751

விச்சிரவாமுனிவர் தம்மிடம்வந்த கைகசியைநோக்கிமயங்கி அவளுடன்சம்பாஷித்தல் 752

விச்சிரவாவுக்கும் கைகசிக்கும் இராவணன் கும்பகருணன் சூர்ப்பநகை இவர்கள் பிறத்தல் ... ,,

விபீஷணர் பிறத்தல் ... 753

இராவணாதியர் மூவரும் வனஞ்சென்று பிரமனைநோக்கித் தவம்புரிந்துவரம்பெறுதல் 754

இராவணன் மாலியவானாதியர் உபாயத்தினால் குபேரனை இலங்கையினின்று மப்புறப்படுத்தல் ... 757

இராவணன் இலங்காபுரியில் முடிசூடி தன்தங்கைக்குந் தனக்குந் தம்பியரிருவர்க்கும் மணமுடித்துப் புத்திரபாக்கியம் பெற்றிருத்தல் ... 758

இந்திரசித்துப் பிறத்தல் ... 760

வரையெடுத்த படலம். 761

இராவணன் அளகாபுரியடைந்து அங்குள்ள சோலைகளையழித்தல் ... 762

குபேரன் இராவணனுக்குச் சில வார்த்தை சொல்லும்படித் தூதுவனை விடுக்க அவன் இலங்கையையடைந்து இராவணனைக்கண்டு கூறுதல் ... ,,

இராவணன் குபேரனுடைய தூதுவனை வெட்டி மந்திரிகளுடன் யோசித்தல் ... 763

இராவணன் குபேரனுடன் போர்புரிதல் 765

பாடலமும், விஷயமும். பக்கம்.

இராவணன் குபேரனைத் தோற்கடித்துப் புட்பகவிமானமும் செல்வங்களையுங் கைப்பற்றிக்கொண்டு கைலாசமடைதல் ... 770

இராவணன் திருநந்திதேவரால் சாபம் பெறுதல். ... 771

இராவணன் கைலைமலையையெடுத்தல் ... ,,

சிவபெருமான் கயிலைமலையையெடுக்க இராவணன் நசுங்கும்படித் தமது பெருவிரலையூன்ற வழுந்தித் தன் தலையிலொன்றைத் திருகி வீணையாகக் கொண்டு சாமவேதம்பாடப் பரமசிவன் மகிழ்ந்துவரமீதல் ... 773

தேவர்களின் வேண்டுகோளுக்கிரங்கி மகாவிஷ்ணுவானவர் உபாயத்தினால் மூன்றரைக்கோடியாயுளை அரைக்கோடியாக்கல் ... 777

திக்குவிஜயப் படலம். 778

இராவணன் வேதவதியாற் சாபமடைதல் ... 779

இராவணன் மருத்தராஜனுடைய யாகமழித்தல் ... 782

இராவணன் அனரண்யராஜனை வெல்லுதல் ... 785

இராவணன் இயமதருமனை வெல்லுதல் ... 787

இராவணன் ஆதிசேடனை வெல்லுதல் ... 793

இராவணன் நிவாதகவசர்களை வெல்லுதல் ... 795

இராவணன் காலகேயரையும் வருணனையும் வெல்லுதல் 799

இராவணன் அப்சரஸ்திரீகள் முதலானவர்களைச் சிறையெடுத்திலங்காநகரம் புகுதல் ... 800

காலகேயர் போரில் இராவணனால் தன்கணவனுகிய வித்துருசிங்கிறந்ததைச்சூர்ப்ப



படலமும், விஷயமும். பக்கம்.

நகையறிந்து வருந்தி புத்திரவம்வந்து புருஷனைக் கண்டு துயரப்படுதல் ... 805

சூர்ப்பநகை புருஷனைக் கண்டு புலம்பித் தகனஞ்செய்து இலங்கையில் இராவணனிடம் வருதல் ... 806

சூர்ப்பநகை இராவணனோடு முறையிடல் ... 807

இராவணன் சூர்ப்பநகையைத் தேற்றித் தண்டகாரணியமனுப்பித் தன்திக்குவிஜயங்களைத் தாயாராதி மற்றுள்ளவர்கட்குத் தெரிவித்து மகிழ்தல் ... 810

இராவணன் இந்திரசித்து செய்த நிகும்பலையாகத்தைக் கண்டு மகிழ்ந்து மகனையழைத்துக்கொண்டு தன் னிலங்காபுரியடைதல் 812

இராவணன் சிறையெடுத்துவந்த ஸ்திரீகளைப்புணர வழைக்க விபீஷணர் வேண்டாமென்று சிலநீதிவார்த்தைகூறுதல் ... 814

விபீஷணர் மதுவென்னுமசுரன் கும்பீநசியைச்சிறையெடுத்துப்போனதை அறிவிக்க இராவணன் கும்பகர்ணனையும் இந்திரசித்தனையுங் கூட்டிக்கொண்டு அவன் மேற் படையெடுத்தல் 815

கும்பீநசியின் வேண்டுகோளால் இராவணன் மதுவென்பவனுடன் கலந்து தேவலோகவிஜயஞ்செய்யப் போம்போது, அரம்பையின் சாபமேற்றல் ... 817

இராவணன் சுவர்க்கலோகஞ்சென்று இந்திரனுடன் போராடல் ... 820

மேகநாதனிந்திரனைப் பாசத்தாற்கட்டி இராவணனிடங் கொண்டுசெல்ல வவன் மகிழ்ந் தவனுட னிலங்கைக்குப்போய வ்விந்திரனைச்சிறையிடல் ... 826

தேவர்களின் வேண்டுகோளால் பிரமதேவர் இராவணனிடஞ்சென்று பிரியவசனங் கூறி மேகநாதனுக்கு இந்திரசித்துவென்னும் பெயரையும் அவன் கேட்டவரங்களையுந்தந்து இந்திரனைச் சிறைவிடுவித்தல் ... 827

கார்த்தவீரியார்ச்சுனப் படலம். 829

ஸ்ரீராமபிரான் பூலோக வாசர்களா லிராவணன் தோற்றதில்லையோவென்று அகத்தியரைக்கேட்க, அதற்கவர் கார்த்தவீரியார்ச்சுனனாற் கட்டுண்ட சரித்திரங் கூறல் ... ,,

கார்த்தவீரியார்ச்சுனன் இராவணனைக்கட்டித் தன்னகரத்துக்கேகிச் சிறையிடுதல் 832

விபீஷணர் வேண்டுகோளின்படி புலஸ்தியப் பிரமாவினாற் கார்த்தவீரியார்ச்சுனன் இராவணனைச் சிறைவிடுதல். ... 833

வாலிரவலாற் கட்டுண்ட படலம். 834

இராவணன் வாலியைச் செயிக்கக் கிட்கிந்தை வருதல் ... ,,

இராவணன் தாரைவார்த்தையாற்றென்றிசைச் சமுத்திரமடைந்து வாலியைக் கட்டவாரம்பிக்க வவன் தன் வாலினாற்கட்டிக் கிட்கிந்தைநகரமடைதல் ... 835

தாரையின் வேண்டுகோளால் இராவணனை வாற்கட்டினின்று மவிழ்க்க வவன் சிநேகமுறைபாராட்டி இலங்கைக்கேகுதல் ... 837

அநுமப்படலம். 838

ஸ்ரீராமர் ஆஞ்சநேயருடைய வீரப்பிரதாபங்களைப் புகழ்ந்து

| படலமும், விஷயமும். | பக்கம். |
|---|---|
| அவர் சவிஸ்தாரங்களைக் கேட்க அகஸ்தியமகாமுனிவர் ! அவ்வாநரசேநயரின் உற்பத்தியாதி சவிஸ்தாரங்களைக் கூறல் | 838 |
| ஸ்ரீராமபிரான் தன்னைக்காணவந்த சனகமகாராஜனுடனளவளாவி மகிழ்ந்து நளனு சவிஸ்தாரங்களை வசிஷ்டராற் சொல்விக்க, அதைக் கேட்ட வச்சனக மகாராஜன் சீதையைக்கண்டு பிரியவசனங்கூறி மிதிலைபுரியடைதல் | 844 |
| சீதைவனம்புகு படலம். | 846 |
| ஸ்ரீராமமூர்த்தி சீதாசகிதனாக அரசபுரியுங் காலையில் பரதாழ்வார் அரசினது சிறப்புணர்த்தல் ... | ,, |
| ஸ்ரீராமர் இளவேனிலைக்கழிக்க சீதாபிராட்டியாரோடு உத்தியானவனஞ்சென்று களிகூர்ந்திருத்தல் ... | 847 |
| சீதாதேவியாருடைய கர்ப்பக்குறியை ஸ்ரீராமர் பார்த்து உனக்கு யாது விருப்பமென வவர்கூறல் ... | 848 |
| ஸ்ரீராமபிரான் நகரத்து ஜனங்கள் தன்னைப்பற்றிக்கூறும் வாக்கியத்தைக் கேள்விப்பட்டு தம்பிமாருடன் கலத்தல் ... | 849 |
| ஸ்ரீராமபிரானுத்தரவுபடி சீதாபிராட்டியை இரதமேற்றிக் கானகஞ் செல்லுதல் | 850 |
| இலட்சுமணர் சீதாபிராட்டியைக்கங்காநதியின் தென்கரையில்விட்டு இராமபிரான் சொல்லிய வார்த்தையைச் சொல்லி வருந்தல் ... | 851 |
| சீதாதேவி புலம்பல் ... | 852 |
| சீதாபிராட்டியின் கவலையையொழிக்க ஒருவாறு இலட்சுமணர் தேற்றுதல் ... | 854 |
| சீதாபிராட்டியார் ஆரணியத்தில் தனியே புலம்பல் ... | 855 |
| சீதாதேவி வான்மீகமுனிவராச்சிரம மடைந்திருத்தல் | 856 |
| இலட்சுமணர் சுமந்திரரோடு ஸ்ரீராமரிடம் வந்து சேர்தல் | ,, |
| சாந்திப்படலம். | 857 |
| ஸ்ரீராமர் இலட்சுமணருடன் ஆய்வின்மையைப் பற்றிக் கூறிய பார்க்கராஜன்கதை | ,, |
| ஸ்ரீராமர் இலட்சுமணருக்கு சினங்கடியாமையைப் பற்றிக்கூறிய வசிஷ்டமுனி கதை ... | 860 |
| ஸ்ரீராமர் இலட்சுமணருக்கு குரோதம் வகித்தலைப்பற்றிக்கூறிய யதுவென்னுமிராஜகுமாரன் கதை ... | 863 |
| இலவணாசுரன் வதைப்படலம். | 865 |
| ஸ்ரீராமர் கொலுமுகத்தில் யமுனாதீரவாசிகள் இலவணனைப்பற்றிக்கூறிய முறைப்பாடு ... | ,, |
| ஸ்ரீராமபிரான் இலவணாசுரனை வதைக்க சத்துருக்னரை மதுபுரிக்கனுப்பல் ... | 868 |
| சத்துருக்னர் இலவணாசுரனைச் சம்ஹரிக்க ஸ்ரீராமரிடத்தில் விடைபெற்றுச்செல்லவழியிலுள்ள வான்மீகராச்சிரமமடைந்து கல்மாஷபாதமகாராஜன் சரித்திரங் கேட்டிருக்கையில் சீதாபிராட்டி குசலவரைப் பெறக்கேட்டு வருந்தல் ... | 869 |
| சத்துருக்னர் அங்கிருந்து யமுனாதீரத்துள்ள மதுவனமடைந்து சியவன முனிவரால் இலவணாசுரன் விருத்தாந்த மறிதல் ... | 871 |
| சத்துருக்னர் சியவன முனிவரால் இலவணாசுரன் உணவையறிந்து மதுபுரமடைந்து வாயிலில்நின்று அவன் | |





| படலமும், விஷயமும். | பக்கம். |
|---|---|
| வரவுபார்த்திருந்து அவனுடன் போர்புரிதல் ... | 872 |
| சத்துருக்னர் இலவணாசுரனை வதைத்தல் ... | 873 |
| சத்துருக்ன மகாராஜர் மதுபுரியையாண்டு ஸ்ரீராமரைக் காண மீண்டு அயோத்தியடைந்து அவருத்தரவால் மதுபுரஞ்சென்று அரசிருத்தல் ... | 874 |
| சம்புவன் வதைப்படலம். | 876 |
| ஸ்ரீராமர் கொலுமுகத்தில் ஓர் பிராமணனும் பிராமணியும் இறந்துபோன தம்பிள்ளையைவைத்து முறையிடல் | ,, |
| ஸ்ரீராமபிரான் இரிஷிகளை வரவழைத்து நமது நாட்டில் அபமிருத்தியு நேர்ந்தது என்ன காரணமென்று வினவ நாரதர் விடைதரவறிந்து கானகஞ்சென்று தபஞ்செய்த சூத்திரனை வதைத்தகாலையில் இறந்தபிள்ளையுயிர்பெற்றெழுந்திருக்க இராமர் அகஸ்தியராச்சிரமம் வருதல் ... | 879 |
| அகஸ்தியராற்றந்த வாபரணத்தை வாங்கிய ஸ்ரீராமபிரானதன் வரலாறுகேட்க வவருரைத்தல் ... | 880 |
| ஸ்ரீராமர் அவ்வாரணியத்தைக் கண்டதிசயித்து அதன்வரலாறுகேட்க அகஸ்தியர் இது தண்டனுலாளப்பட்டு ஆரணியமானதென்று அதன் வரலாறு கூறக் கேட்டு அயோத்திநகர்சேர்ந்து பிராமணர்களை மகிழ்வித்து உயிர்த்தெழுந்த பிள்ளையுடன் அவர்களை அவரிடத்திற் கனுப்புதல் | 881 |
| அஸ்வமேதயாகப் படலம். | |
| ஸ்ரீராமர் பாதலட்சுமணர்களையழைத்து இராஜசூய யாகம் பண்ண வேணுமென்று யோசனை செய்ததில் அஸ்வமேதயாகம் செய்யத் தேர்தல் ... | 882 |
| ஸ்ரீராமர் அஸ்வமேதக் குதிரையை யலங்கரிப்பித்துவிடுத்து யாகத்திற்கு வரும்படி யாவர்க்குந் தூதுவிடுத்தல் | 886 |
| கோசல தேசத்துச் சனங்கள் நாட்டையும் நகரத்தையும் அலங்கரித்தற் சிறப்பு | 887 |
| ஸ்ரீராமபிரான் இரதாரூடனாகிக் கோமதி நதிக்கரை யடைதல் ... | ,, |
| திருமுகங்கண்ட அவ்வத்தேய மன்னவர்களும் மகாரிஷிகளும் யாகசாலைக்குவருதல் | 889 |
| ஸ்ரீராமபிரான் அரசருக்குச் சன்மானமும், பிராமணர்கட்கும் ஏழைகட்குந் தானமும் வழங்குதல் ... | 890 |
| வான்மீகமுனிவருத்தரவால்குசலவர்கள் யாகசாலையில்வந்து இராமாயணம் பாடுதல் | 891 |
| ஸ்ரீராமபிரான்கேட்டு தமதெதிரிற் பாடவழைக்க அக்குசலவர்கள் இராமாயணத்தை வரன்முறைப்படிபாடுதல் ... | 892 |
| ஸ்ரீராமர் குசலவரைத் தமதுபுத்திரர்களென்றறிந்து வான்மீகரையும் சீதையையும் அழைப்பித்தல் ... | 893 |
| வான்மீகரோடு யாகசாலைவந்த சீதை தனது கற்பைப்பற்றிப் பிரமாணஞ்செய்து பூப்பிரவேசமாய் மறைய அப்பூதேவிமேல் இராமமூர்த்தி கோபித்தல் ... | 895 |
| பூமாதேவிமேற் கோபித்த ஸ்ரீராமரைப் பிரம தேவர்வந்து சாந்தப் படுத்தல் ... | 896 |
| ஸ்ரீராமர் பூதேவியின் மேற்கொண்ட கோபத்தைப் பிரம | |

படலமும், விஷயமும். — பக்கம்.

தேவனால் தீர்ந்து தமது புத்திரரோடு அயோத்தியடைந் தரசாளல் ... 897

கால்காத்த படலம். 898

கோசலைதேவி பரலோகமடைய ஸ்ரீராமர் வருந்தி சரமக்கிரியையாதி நடத்தி, பிறகு பரமபதமடைந்த கைகேசி சுமித்திரை இவர்களுக்குப் பரதலட்சுமணர்களால் சரமக்கிரியை நடத்தி, சத்துருக்னருக்கும் வானரர்க்கும் விபீஷணர்க்கும் விடையீதல் ... ,,

ஸ்ரீபரதருடைய அம்மானாகிய உதாசித்து மகாராஜன்வேண்டுகோளின்படி பரதனையும் அப்பரதர் பிள்ளைகளையும் கேகயதேசத்திற் கனுப்பி கந்திருவர்களைச் செயிப்பித்தல் ... 899

ஸ்ரீபரதமகாராஜன் தமது புத்திரர்க்கு சிந்து நாட்டினில் இரண்டு நகரஞ்செய்வித்து அரசாளவிடுத்து அயோத்தியடைதல் ... 901

ஸ்ரீராமர் இலக்குமணருடைய குமாரிருவர்க்கும் காருபதமென்னுந் தேயத்தைப் பகுந்தளித்தல் ... 902

படலமும், விஷயமும். — பக்கம்.

வைகுந்தப்படலம். 904

ஸ்ரீராமர்பால் காலன்வந்து பிரமன் கருத்தை யறிவித்தல் 905

துருவாசமகாமுனிவர் அரண்மனைவாயிலடைந் தங்குள்ள இலட்சுமணனைச் சினந்துள்ளேசென்று அன்னமருந்தித் தமதாச்சிரம மடைதல் ... 907

இலட்சுமணர் ஸ்ரீராமரைப் பிரிந்து சரயுநதியில் மூழ்கி யோகத்திருந்து வைகுண்டமடைதல் ... ,,

கோசல தேசத்தில் ஸ்ரீராமர் பிள்ளைகட்கும் மதுரையில் சத்துருக்னர் பிள்ளைகட்கும் மகுடாபிஷேகமும், அச்சத்துருக்னரும் சுக்ரீவாதியரும் அயோத்திக்கு வருகையும், அவ்வவர்க்கு ஸ்ரீராமரருளிப்பாடும் ... 910

ஸ்ரீராமர் தமது சகோதரர்முதலிய பரிசனங்களோடு சரயூகட்டஞ்சேர்ந்து சோதியிற் கலந்தருளி இலக்குமி சமேதராய் ஸ்ரீவைகுண்டமடைதல் ... 912

ஸ்ரீமத்ராமாயணம் கேட்போர் அடையும்பயன் ... 915

வாழ்த்து ... ,,

நெ. 75. அயோத்தியாபுரியில்கொலுவீற்றிருக்கும் ஸ்ரீ இராமனை அகஸ்த்தியமுனிவர்கள் காணுதல்.



விசுவகருமன், மாலியவான், சுமாலிமாலி, இவர்களுக்கு இலங்கையை நிருமத்தது.



 இலங்கைநிருமாணப்படலம்.

ஸ்ரீ



ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீசீதாலட்சுமண பாதசத்துருக்ன அநுமத்சமேத

ஸ்ரீராமச்சந்திர பரப்பிரம்மணேநம:.

# ஸ்ரீமத் ராமாயணவசனம்.

ஒட்டக்கூத்தர் செய்தருளிய

ஏழாவது,

## உத்தரகாண்டம்.

தோத்திரக் கவி.

வெள்ளியங்கிரியைமீதே வேரொடுமெடுத்தவீரக்
கள்ளவன்புயகாலேந்துங் கனகமாமவுலிபத்துந்
துள்ளியம்புவிமேல்வீழ வொருகணைதொடுத்துவிட்ட
வள்ளலம்புயமேயன்ன மலரடிவணக்கஞ்செய்வாம்.
ஒன்றாய்ப்பலவா யுளவாயில வாயுரைப்போர்க்
கன்றாகியாமா யருவாயுரு வாகிமெய்ம்மை
குன்றாதஞானக் கொழுந்தாய்க்குண மூன்றிறந்து
நின்றானியாவ னவனீள்கழ னெஞ்சில்வைப்பாம்.

ஸ்ரீராமஜெயம்.

முதலாவது,

## திருவோலக்கப்படலம்.

இப்படலத்தில் ஸ்ரீராமபிரானானவர் அயோத்தியாபுரியில் மகுடாபிஷேகஞ்செய்துகொண்டு தம்பியர் மூவரோடும் சீதாபிராட்டி சமேதராய்த் தமக்கொருவர் நிகரின்றி கொலுவீற்றிருந்து அரசியற்றி வருகிறநாளையில் ஒருநாளவரைக் காணவேண்டி அகஸ்தியாதி மாமுனிவர்கள் அங்குவர, அவர்களைப்பகவான் உபசரித்துப்போற்ற அம்முனிவர்கள் சுவாமியைப் புகழ்தல் சொல்லப் படுகின்றது.

## ஸ்ரீராமபிரான் அயோத்தியாபுரியில் சிங்காதனரூடராகக் கொலுவீற்றிருத்தற் சிறப்பு.

கவி.

கன்னாருலகிற் கருதார்குலக் கட்டைவாங்கித்
தன்னேர்தருமந் தழைக்கத்தனிக் காவல்பூண்டு
மன்னோர்வணங்க மதிவெண்குடை மேனிழற்ற
விண்ணோர்குலம்வாழ விராகவன் வீற்றிருந்தான்.

பூலோகத்திலிடத்திலே சுவர்க்கலோகம்போல விளங்கும் அயோத்தியாநகரத்தில் அளவில்லாத விசித்திரமான தேவேந்திர சபையைப் பார்க்கிலும் அதிகமான சிங்காரங்கள் பொருந்திய கொலுமண்டபத்தினடுவிலே, சுவர்க்கமத்திய பாதாளமென்று சொல்லப்பட்ட மூன்றுலோகங்களுக்கு நடுக்கஞ்செய்யும் கொடிய துஷ்டர்களாகிய இராவண கும்பகர்ணாதியர்களையும் பொல்லாதபாபமே ரூபமாகக்கொண்ட இராக்ஷதகுலத்தையு நாசமாகும்படிச் சம்ஹாரித்துச் செயம்படைத்திருக்கின்ற ஸ்ரீராமரானவர், சோதிமயமாகப் பிரகாசிக்கு மாணிக்க கிரீடமும்—மகரகுண்டலமும்-வாகுவலயமும்—வச்சிரகடகமும்-இரத்தினகங்கணமும்—கொத்துச்சரப்பணியும்—முத்துமாலையும்-மோகனமாலையும்—பொற்பூணநூலும்-பட்டையரைஞாணும்-பவித்திர மோதிரமும்—இராஜமுத்திரைமோதிரமும்-வீரகண்டாமணியுமாகிய சகல திவ்வியாபரணங்களோடு சித்திரப்பூம்பட்டாடையும்-உத்தரீயமும்-பீதாம்பரமுந்தரித்து, தேவகளபசந்தன கஸ்தூரியும்-சுகந்தபரிமள புஷ்பமாலைகளுமணிந் தலங்கரித்துக்கொண்டு, திருத்தம்பிமார்களோடு சர்வாபரண அலங்கார அதிரூபசவுந்தரியவதியாய் விளங்கும் ஸ்ரீமகாலட்சுமியாகிய சீதாதேவி சமேதராய் ஐம்பத்தாறு தேசத்தையாளுகின்ற மகாராஜாக்களெல்லாம் கிரமக்கிரமமாகநின்று குற்றேவல்களைக் கேட்கவும், முப்பத்துமுக்கோடி தேவர்கள் நாற்பத்தெண்ணாயிர முனிவர்களாதியாவர்களும் பூர்வத்தில் அடியேங்களைக்காப்பாற்றவேண்டுமென்று முறையிட யோகநித்திரைநீங்கிப் பாற்சமுத்திரத்தின் மத்தியில் சர்ப்பசயனத்தின்மீது எவ்வளவு இன்பத்தோடு எவ்வண்ணம் வீற்றிருந்தனரோ அவ்வண்ணம் சபாமண்டபத்தின் மத்தியிலிட்ட சிம்மாதனத்தின்மீது எழுந்தருளியிருந்தார்.

## ஸ்ரீராமச்சந்திரதரிசனங்காணவந்த மகாரிஷிகளை சுவாமிக்ஷேமலாபம் விசாரித்தல்.

கவி.

அந்தவேலை யதனுளடங்கிய, குந்தவேலையில் வாட்கைக்கொடியவர்
கந்தவேலை யடங்கவுநக்கினோன், சந்தவேலையைச் சார்சமதக்கினி.

இவ்வண்ணம் ஸ்ரீராமன் கொலுவீற்றிருந்த சமயத்தில் குந்தப்படை-வேற்படை-வாட்படை முதலியவாயுதங்களைக் கையிலேந்திய அசுரர்கூட்டங்களெல்லாம் கெடும்படி சமுத்திரத்தைப்பானம்பண்ணிய அகஸ்தியமாமுனி



வர்—சமதக்கினிமாமுனிவர்—காசியபமாமுனிவர்—பாரத்துவாச மாமுனிவர்—தௌமியமாமுனிவர்—கௌதமமாமுனிவர்-கோசிகமாமுனிவர்—அத்திரிமாமுனிவர்—வசிட்டப்பிரம்மமாமுனிவராதிய அநேகமுனிவர்கள் அயோத்தியாநகரத்திற் பிரவேசித்து, ஆஸ்தானமண்டபத்துக்கு முன்னாகவிளங்கும் கோபுரவாசலில் வந்து, அந்தவாசலைக் காத்திருக்கும் காவலாளரைப் பார்த்து, ஓ சேமத்தலைவரே! நீங்கள் ஸ்ரீராமரிடம்போய் நாங்களும்முடைய பட்டாபிஷேகத் திருக்கோலங்காண அபேட்சித்து வந்திருக்கின்றோமென்று அறியப்படுத்துவீரென்று சொல்லினர். அவர்களும் அப்படியே ஸ்ரீராமருக்கு அறியச்செய்து, அவர்சொல்லியனுப்பிய உபசாரங்களைச் சொல்லி அந்த முனிவர்களை யுள்ளேயழைத்துக்கொண்டு போனார்கள். அப்போதவர்கள் ஆஸ்தான மண்டபத்துக்குள் அடுத்தமாத்திரத்தில் இராமர் அந்தமுனிவர்களைக் கண்டு ஆனுக்குற்றுச் சிங்காதனத்தைவிட்டெழுந்திருந்து சீக்கிரமாகவந்து, அவர்களுடைய பாதங்களிலே தீர்க்கதெண்டனாக நமஸ்காரம் பண்ணி வந்தனஞ்செய்து, அநேகமான உபசாரவார்த்தைகள் சொல்லி அவர்களை முன்னே நடத்தித்தாம் பின்னேநடந்து அழைத்துப்போய் அந்த ஆஸ்தான மண்டபத்தில் நிறைந்திருக்கும் சகலமானரிஷிகளும்—தேவர்களும்-இராஜாக்களும்-மற்றுமுள்ள எல்லோருமெழுந்திருந்து வந்தனங்கள் செய்ய அந்தமுனிவர்களுக்கு ஆசனங்கள் கொடுத்துப் பூசித்து எழுந்தருளியிருக்கச் செய்தார். அவர்களும் ஸ்ரீராமருக்கு ஆசீர்வாதம் செய்தார்கள்.

அதன்பின்பு ஸ்ரீராமர் மகாசந்தோஷமாக எழுந்தருளியிருக்கும் சமதக்கினிபகவான் முதலான மகாரிஷிகளைப்பார்த்து, தேவரீர்களுடைய ஆச்சிரமங்களும்—யாகசாலைகளும்—பசுக்களும்— நன்றாயிருக்கின்றனவோ? வேதங்கள்—ஆகமங்கள்—சாஸ்திரங்கள்—இதிகாசங்கள்—புராணங்கள்-இவைமுதலாயுள்ள சகலவித்தைகளையும், உங்களுடைய புத்திரர்களும் வித்தியார்த்திகளும் நன்றாயோதிவருகிறார்களோ? நித்திய கன்மானுஷ்டான முதலான காரியங்களும்—காலநியமங்களும்—தப்பாமல் நடந்து வருகின்றனவோ? என்று அந்தரங்கவிநய பயபத்தியுடனே மாதுரியவசனமாக க்ஷேமங்களை விசாரித்தார். அப்படி ஸ்ரீராமர் கேட்டருளிய சுகவிருத்தியென்னு மதுரவசனமாகிய அமிர்தத்தைப்பானம் பண்ணினவர்களான அம்முனிவர்கள் மகாசந்தோஷத்தை யடைந்து, அந்த ஸ்ரீராமரைப்பார்த்துச் சொல்லத்தொடங்கினார்கள்.

## மகாரிஷிகள் சுவாமியைப்புகழ்தல்.

கவி.

புலத்தியன் றன்வழிப்போந்து பொல்லாவொழுக்கமில்லாத
குலத்துமுனிவிச்சிரவாவுங் காக்கிவயிற்றினிடைத்தோன்றிக்
கொலைக்கையரக்கர்முதலான கோடாகோடிப்படைகொன்ற
சலத்தின் வலியாய்நீயிருப்ப வுண்டோவெமக்குத்தகவென்றார்.

கேளும் ஸ்ரீராகவா! புலத்தியப்பிரமாவின் சந்ததியாகத் தோன்றிய விச்சிரவா வென்பவனுக்கு இராட்சசியயிற்றினிடத்திற்றோன்றி, சகலலோகங்களு நசிக்கும்படியாய் மிகவும் கொடுமையான வுபத்திரவங்களைச்செய்யும் துஷ்டகண்டகராகிய விராதன் - கவந்தன் - கரன் - தூஷணன் - கும்பன் — நிகும்பன் — அகம்பன் — மகோதரன் - மகாபாரிசவன் - தூம்பிராட்சன் — விரூபாட்சன் - சோணிதாட்சன் - மகராட்சன் — அதிகாயன் - பிரகஸ்தன் — தேவாந்தகன் - நராந்தகன், கும்பகர்னன், இவர்கள் முதலானவர்களோடு அளவில்லாத சேனாபதிகளும் — இராட்சதசேனையும், மூலபலமும், தசக்கிரீவனும், உயுத்தகளத்திலே சின்னாபின்னப்பட்டு மடிந்து பிணக்குவைகள் பருவதங்களைப்போல ராசிராசியாகக் குவியவும், தேர்களும், யானைகளும், குதிரைகளும், குடைகளும், கொடிகளும், சாமரங்களும், மயிற்பிச்சங்களும், ஆலவட்டங்களும், வாள்களும், வேல்களும், வில்லுகளும், பாணங்களும், தண்டங்களும், முசலங்களும், சூலங்களும், எழுக்களு மாகியபலவு மறுபட்டு, முறிபட்டு, தெறிபட்டு, ஒடிபட்டு, சிதைபட்டு, இரத்தப் பிரவாகத்தில் மிதந்தோடவும்; நாய்களும், நரிகளும், காக்கைகளும், கழுகுகளும், பருந்துகளும், குடல்களை—மூளைகளை-கொழுப்புகளை—நிணங்களை - சதைகளை-கொத்தியும், பிடுங்கியும், குடித்தும், தின்றும், கவ்வியும், ஒன்றோடொன்று கலந்து கூட்டமிட்டு நெருங்கி ஊளையிட்டுக் குலைந்துக்கத்திக்கதறி ஆர்ப்பரிக்கவும்; பூதப்பிரேத பிசாசங்களில் ஆணும் பெண்ணும், குட்டிகளும், அங்கங்கே கூட்டங்கூட்டமாகக் கூடிக்கொண்டு நன்றாய்க் கொழுத்த நிணங்களையும், சதைகளையும், கொழுப்புகளையும், வேறுவேறாகவெடுத்து வைத்துக்கொண்டு மண்டைகளாகிய கலங்களிலே பகுந்திட்டுத்தின்று தேக்கெட்டுக் கொக்கரித்துத் தோள்கொட்டிக் கூத்தாடி விளையாடவும்; விஜயலட்சுமி சந்தோஷத்தோடு நடனஞ்செய்யும்படியாக மகா உக்கிராவேசத்துடனே அட்டகாசம்பண்ணி விஜயகோதண்டத்தை வளைத்து நாணேற்றிக் குணத்தொனிமுழக்கி அந்தக்கோதண்டம் சக்கராகார மாகும்படியாக வளையவாங்கி அர்த்தசந்திரபாணம்- வச்சிரசூசிகாபாணம்- அக்கினிபாண முதலான திவ்வியாஸ்திரங்களைப் புங்கானுபுங்கமாக இடைவிடாது தொடுத்துச் சரவருஷமாகப் பொழிந்து கண்டதுண்டங்களாகச் சித்திரவதைசெய்து சங்கரித்துச் சருவலோகங்களு நிர்ப்பயமாக வாழ்ந்திருக்கும்படி வெற்றிபெற்று வாகைமாலைசூடிய விஜயகோதண்டபாணியாகிய தேவரீரோடு, மகாதபோபலமிகுந்த பொருந்திய முனிவர்களாலும், திரிலோகாதிபதிகளாலும், மற்றுமுள்ளவர்களாலும் வெல்லுதற்கரிய சகலமாயா வுபாயங்களிலும் வல்லவனாகி, பலபராக்கிரம சௌரியங்களாலே மதோன்மத்தனாகி, துவாதசாதித்தியர்கள்-ஏகாதசருத்திரர்கள்-அஷ்டவசுக்கள் — மருத்துவரிருவராகிய விந்நால்வகைப்பட்ட முப்பத்துமூவர்க்கும் ஒவ்வொரு வகையினர்க் கொவ்வொரு கோடியாகக்கூடிய முப்பத்துமுக்கோடி தேவகணங்களுக் கதிபதியாகிய இந்திரனை மாயாபாசத்தினாலே கட்டிக் கொடுஞ்சிறையில்வைத்த வந்தக்காரணத்தினாலே இந்திரஜித்தனென்



னும்பெயர்பெற்ற பொல்லாத துஷ்டகண்டகனைச்சங்கரித்து வெற்றிபெற்ற இலட்சுமணருமிருக்க, எங்களுக்கு எக்காலத்தினும் யாதேனுமோர் குறையுண்டாகுமோவென்று கேள்விக்குத்தரமாகப் பிரதிவசனஞ்சொல்லி வாழ்த்தினர்கள்.

திருவோலக்கப்படலம் முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

இரண்டாவது,

# புலத்தியப்படலம்.

இப்படலத்தில் அகஸ்தியமுனிவர் இராமபிரானுக்கு, புலஸ்தியப் பிரமரிஷியினால் விச்சிரவாபிறந்ததும், அவ்விச்சிரவாவாற் குபேரன்பிறந்ததும், அக்குபேரன் பிரமனைநோக்கித் தவஞ்செய்து திக்குப்பாலர்களிலொருவனாய் புட்பகவிமானம் பெற்றதும், தந்தையாகிய விச்சிரவா வா லிலங்கைமா நகரத்திற் குடியேறினதும் சொல்லப்படுகின்றது.

## இராவணாதியர்பிறப்பாதி வரலாறுகளைச் சுவாமிகேட்க அகஸ்தியர் பூர்வசரித்திரஞ்சொல்ல வாரம்பித்தல்.

கவி.

என்றுமுனிவர்தாங்கூற விராமன்கூறுமோரிரண்டு
குன்றமனையதிரள்புயத்துக் கும்பகன்னன்முதலாயோர்
வென்றிகூரிராவணிதன் வீரங்கூறியவாறே
அன்றுசிவன்பாலவன்பெற்ற வரமும்வலியுமவன்பிறப்பும்.

இரக்கமில்லாவன்னெஞ்சத் தெல்லாமாயைகளும்வல்ல
அரக்கர்பிறப்புமவர்பெற்ற வரமும்வலியுமவர்செயலும்
பாக்கவுரைமினெனவமரிற் பண்டிந்திரனுக்குடைந்தசுரர்
காக்குங்கடலேழையும்வாங்கிக் கையாற்குடித்தமுனிகழறும்.

அப்படிக்கனுக்கிரகித்த மகாரிஷியைநோக்கி இராகவர் சொல்லுகிறார். ஓ என்னிருமைக்கும் துணையாயுள்ள தவசிரேஷ்டர்களே! நீலபர்வதங்கள்போலப் பூரித்துயர்ந்த புசபலபராக்கிரமங்கள் பொருந்திய தசக்கிரீவன் - கும்பகர்னன் — இந்திரஜித்து முதலாயினோர்கள் உற்பத்தியேதுக்களும், அவர்கள் பெற்றவரங்களும், கடினமான இரும்புபோலும் சற்றுமிரக்கமில்லாத பாபசித்தகண்டராகிய இராக்ஷதர்களுடைய உற்பத்திகாரணமும், அவர்கள் பெற்ற வரங்களும், பூர்வோத்தரசங்கதியாக நன்றாய்விவரித் துரைத்தருள்வீரென்று கேட்டனர். அப்பொழுது மகாசபையாக நிறைந்திருக்கும் ஆஸ்தான மண்டபத்திலே பிரமசபைபோலவிளங்கு முனிகணங்களுக்குள்ளே

சருவசிரேஷ்டராகி ஓர்கால்தேவேந்திரனுக்குத்தோற்று ஒளித்த அசுரர்களைச் சஞ்சரிக்கும்வண்ணம் ஏழ்சமுத்திரத்தையு முண்டருளிய அகஸ்தியர்சொல்லவாரம்பித்தனர்.

## புலத்தியப்பிரமரிஷி மரபிற்றோன்றிய விச்சிரவாவுக்கு வச்சிரவண்ணன்பிறந்த வரலாறுரைத்தல்.

கவி.

அண்டர்நாயக னலைதிக ழுந்தியாமடுவில்
புண்டரீகநான் முகன்மகன் புலத்தியனென்போன்
மண்டலந்திகழ் திவாகரன் றேரதுவலஞ்சூழ்
விண்டலந்திகழ் மேருவாம் வெற்பினைச்சேர்ந்தான்.

கேளும் தசரதாத்மஜராகிய ஸ்ரீராமா! இதற்குமுன் நடந்தசரித்திரம் சிலவுள்ளன அதைமுன்பு கூறுகிறேன் அவையாதெனில், தேவநாயகனாகிய ஸ்ரீமந்நாராயணமூர்த்தியினது அழகுவிளங்குகின்ற நாபிஸ்தானமாகிய தடாகத்தில் மலர்ந்ததாமரைமலரிலுண்டாகிய பிரமதேவரதுபுத்திரர்களிலொருவராகிய புலத்தியப்பிரமரிஷியானவர், உலகங்களை விளக்குகின்ற சகஸ்திரகிரணங்களையுடையசூரியன் தனதிரதத்தோடு தினப்பிரதக்ஷிணஞ்செய்கின்ற ஆகாயத்தையளாவிய மகமேருகிரியில் சென்று, அருமையாகிய தபசுசெய்துகொண்டிருந்தார். அக்காலத்தில் தேவகன்னியர்களும்—நாககன்னியர்களும்—இரிஷிகன்னியர்களும்—சேர்ந்துகூடி, அந்தவனத்திலே நாடோறும்வந்து அங்கங்கிருக்கும் குளிர்ந்தமலர்கள் நிறைந்த தடாகங்களிலே சலக்கிரீடையாகக் குளித்து விளையாடுவதும், வகைவகையாயுள்ள சுகந்தபரிமள புஷ்பங்களைக்கொய்து சூடுவதும், ஒருவரோடொருவரிசைந்து குயிலிசைபோலக் கானம்பாடுவதுமாகப் பகற்காலமுழுதும் பொழுதுபோக்காக விளையாடிப் போவார்கள்.

அப்படியிருக்குங்காலத்தில் ஒருநாள் அந்தப் புலஸ்திய முனிவர் தபசுபண்ணிக்கொண்டிருக்கு மாச்சிரமத்துக்குச் சமீபத்திலே எந்நாளும்போல வேடிக்கையாக ஆடியும் பாடியும் அநேக விநோதங்கள்செய்து விளையாடிக்கொண்டிருக்கிற த்வனி அந்த முனிவர்காதிற் கேட்கப்பட்டு, அந்த இங்கிதத்தினாலே மனோவிகாரமாய்ச் சஞ்சலப்பட்டுத் தமக்குத் தபசுகூடாமற் போனபடியினாலே அவர் அந்தக் கன்னியர்களைப்பார்த்து மகாவுக்கிரமான கோபங்கொண்டு, இன்றுமுதல் நீங்கள் யாவரேனும் எந்தக்காலத்திலேயாகிலும் இந்தவனத்திலே வந்து தபசுக்கு விகாதமாக நம்முடைய கண்காண இப்படியெதிர்ப்படுவீர்களாகில் உங்களுக்குப் பொல்லாத வுற்பாதமான கர்ப்பமுண்டாகக்கடவதென்று சாபமிட்டனர். அவர்செய்த சாபத்தைக்கேட்டு அந்தக் கன்னியர்களெல்லோரு நடுநடுங்கிப்பயந்து, ஒருவருக்கொருவர் சொல்லாமல் திசைதிசையாக வோடிப்போனார்கள்.

அப்படியிருக்குங்காலத்தில் சகலவேதங்களையு நன்றாக வோதியுணர்ந்து அந்த வேதங்களாலே சத்தியமென்று சொல்லப்பட்ட அழியாத பொருளாகிய பரப்பிரம்ம சொருபத்தை உள்ளங்கை நெல்லிக்கனிபோலக் கண்டு



மகிமைபொருந்தியிருக்கின்ற திரணபிந்துவென்று சொல்லப்பட்ட மகாபுருஷருடைய பெண்ணாகிய அதிரூபசௌந்தரியமும் நல்லயவ்வனமும் பொருந்திய குணவதியென்னும் கன்னிகையானவள், முன்பு தேவகன்னியர்முதலானவர்களைக் குறித்து அந்தப் புலஸ்தியமகாமுனிவரிட்ட சாபகாரணத்தை யறியாதவளாய்த் தானுந் தன்னுடையதோழிமார்களுமாயெந்நாளும்போல அந்த வனத்திலே புகுந்து, எப்பொழுதும் விளையாடுவதுபோல் அங்கங்கேயிருக்கும், புஷ்பதடாகங்களிலே சலக்கிரீடையாகக் குளித்து விளையாடியும், பூக்கள்பறித்துச் சூடியும், அம்மானையாடியும், பந்தடித்தும், இப்படிக்கெல்லாம் பலபலவிதமாக அவரவர் மனதுக்கிஷ்டமானபடியே விளையாடிக்கொண்டிருந்தார்கள்.

அப்படியிருக்கிறவேளையிலே அந்தக் குணவதியானவள் தோழிப்பெண்களை விட்டுநீங்கித் தனிப்பட்டுத் தன்னுடைய உயிர்த்தோழியைத்தேடிக் கூவியழைத்துப் போகும்பொழுதில், அங்கேயோரிடத்திலே யாவருங்கேட்டறியாத ஒருதிவ்யமான வேதகானம் தன்னுடையகாதிற் கேட்கப்பட்டு மனமுருகியானந்தபரவசத்தை யடைந்து, ஆ! ஆ! நாமொருநாளு மிந்தவனத்திலே இப்படி பாடப்பட்ட சங்கீதகானங் கேட்டதில்லையேயென் றதிசயித்து, இந்தக்கானம் பண்ணப்பட்ட மகாபுருஷர் எப்படிப்பட்டவரோ அவரைப் பார்க்கவேணுமென்று அந்தக் கானசுரத்தின் வழியேசென்றுபோய் அவரைக்கண்டாள். கண்டவுடனே அந்தப் புலஸ்தியமகாரிஷியானவர் முன்புதாஞ் சாபமிட்டிருந்த காரணப்படியே கர்ப்பமுண்டாகி, அக்கர்ப்பத்துக்குள்ள அடையாளங் காணப்படவு மவள்பயந்து, இஃதென்ன காரணமோவென்று ஆச்சரியத்தை யடைந்தவளாய்ச் சீக்கிரமாகப்போய்த் தன்னுடைய பிதாவாகிய திரணபிந்து மகாமுனிவரிடத்திலே தான் வனத்துக்குப்போனதும் அங்கேநடந்த விருத்தாந்தமும் தனக்கு அதிசயமான கருப்பமுண்டானதையும் கிரமமாகச்சொல்லி விசனப்பட்டாள்.

அப்பொழுது அந்தத் திரணபிந்துவானவர் திரிகால வர்த்தமானங்களுந் தெரிந்தவராதலால் அந்தப் புலஸ்தியமகாமுனிவரிட்ட சாபகாரணத்தினாலுண்டாகிய காரியமென்றறிந்து, தம்முடைய புத்திரிக்குத் தேறுதல்சொல்லி, அவளை யழைத்துக்கொண்டு புலஸ்தியப் பிரம்மாவினுடைய ஆச்சிரமத்துக்கு வந்தார். அவருமவருக் குபசாரம்பண்ணி இருக்கச்செய்தார். அப்பொழுது திரணபிந்துவானவர் புலஸ்தியமகாமுனிவரைப் பார்த்து, நீர் மகா தபோமகிமையுடையவராதலால் உம்முடைய நேத்திரவீட்சண்யம்பட்டமாத்திரத்திலே இந்தப்பெண் கருப்பவதியாயினாள். அல்லாமலு நானெடுங்காலம் அரிதான தபசுசெய்து இந்தப்பெண்ணைப்பெற்றேன். இவளுக்குப்பெயரோ குணவதியென்னும்பெயராம். உமக்கேற்ற யோக்கியமெல்லா முடையவள். இந்தப்பெண்ணினை நீரே விவாகஞ்செய்து கொள்ளவேண்டு மென்றுபசாரமாகச் சொல்லவும் அவருஞ்சம்மதித்துப் பாணிக்கிரகணம் பண்ணிக்கொண்டார். பின்பு

அந்தப் புலஸ்தியராலே உபசரிக்கப்பட்டவராய் திரணபிந்துவானவர் தம்முடைய வாச்சிரமத்துக்குப் போயினார்.

அதன்பின்பு அந்தக் குணவதியானவள் தன்னுடைய பர்த்தாவாகிய புலத்தியருக்கு மிகவுஞ் சந்தோஷமுண்டாகும்படியாய் அவருடைய ஆச்சிரம தருமங்களிலும், அவரிடத்தில் தானடந்து கொள்ளவேண்டிய உபசாரப் பணிவிடைகளிலும், அவர் மனக்குறிப்பின்படியே பதிவிரதா தருமத்துக்கேற்க ஒரு காரியத்திலுஞ் சற்றுந்தாழ்வுவாராமற் பயபத்தி விசுவாசத்துடனே நடந்துவருகிறாள். அப்படி நடந்துவருகிற யோக்கியதையினாலே அவர்மனமகிழ்ந்து, தம்முடைய பாரியாளாகிய அக்குணவதியைப் பார்த்துச்சொல்லுவார். கேளாய் பெண்ணே! நான் தபசுபண்ணிக் கொண்டிருக்கிற காலத்திலே தேவகன்னியர் முதலானவர்களைக் குறித்து நான்செய்த சாபகாரணந் தெரியாதவளாயுன்னுடைய தோழிப்பெண்களு நீயுமாக இந்தவனத்திலே வந்து சஞ்சரித்து விளையாடிக் கொண்டிருக்கும்பொழுதில், அந்தத் தோழியர்களைவிட்டுப் பிரிந்து நீயோரிடத்திற் றனித்தவளாயுன்னுடைய பிராணசகியாகிய கன்னிகையைத் தேடிக்கூவி யழைத்துக்கொண்டு வந்தாய்.

அப்பொழுது நாம்பாடிய வேதகானத்தை நீ நன்று யுன்னுடைய செவிக்கின்பமாகக் கேட்டுச் சந்தோஷித்து அக்கானத்தின் வழியே தேடிவந்து நம்மைக்காணப்பெற்ற காரணத்தால், அக்காலுன்னுடைய கருப்பத்திலுண்டாகிய சிசுவானதும் அந்தக்கானத்தைச் சிரவமென்று சொல்லப்பட்ட காதினாலே நன்றாய்க் கேட்டபடியினாலே விச்சிரவாவென்னும் பெயருடைய வொருபுத்திரனாகப் பிறக்கக்கடவனென் றனுக்கிரகம் பண்ணினார்.

கவி.

அந்தவாசக மருள்முனிகூறலுமுவந்த
சிந்தையாடிருவயிற்றினிற் றிசைமுகன்றனக்குத்
தந்தைதோன்றியதொன்மைபோற் றவநெறிதழைப்ப
வந்துதோன்றினன் விச்சிரவாமறைவிளங்க.

அவரனுக்கிரகஞ் செய்தபடியே உடனே யக்குணவதி யானவள் கருப்பவேதனைக ளொன்றுமில்லாமற் சுகமாக வொருபுத்திரனைப் பெற்றாள். அந்தப் புத்திரனையத்தாயானவள் நாடோறு மருமையாகப் போற்றிவளர்க்கச் செழுமையாய் வளர்ந்துவரும் காலத்தில், பிதாவானவர் அந்தந்தக் காலங்களிலே வேதமார்க்க விதிப்படியே கிரியைகள் தப்பாமல் சாதகருமம் - நாமகரணம் — அன்னப்பிராசனம் - சவுளம் . வித்தியாரம்பம் — உபநயனம், இவைமுதலாயுள்ள பிராமண கருமங்களெல்லாம் கிரமமாகச்செய்வித்தார். அந்த விச்சிரவாவென்னும் பெயருடைய புத்திரரானவர் பிதாவாகிய குருவனுக்கிரகத்தினாலே சகல வேதசாஸ்திரங்களும் ஓதியுணர்ந்து, பிதாவைப் பார்க்கினுமேலான தபோமகிமைபொருந்தி விளங்கினார். அவ்விச்சிரவாவென்னு

No. 76. விண்டுவினால், மாலியிறக்கக்கண்ட மற்றிருவரும் பாதாளம்போய் மறைதல்.



குபேரன்பிரம்மதேவன்அனுக்கிரம்பெற்றுதன்தந்தைகாட்டிய இலங்கையிலிருந்துஅரசாளுதல்.



உத்தரகாண்டம்.



முனிவருக்குப் பரத்துவாசமாமுனிவர் தன்புத்திரியாகிய தேவவன்னியென்னும் கன்னிகையைப் பாணிக்கிரகணஞ்செய்தார்.

கவி.

தேவவன்னியச்செய்தவ முனிவனுங்குரைத்த
எவல்செய்தவளினிதிருந் தொழுகிடவந்தப்
பாவைதன்வயிற்றோன்றினன் பல்லுலகுள்ளோர்
யாவநும்மனமகிழ்ந்திட வெழின்மணிப்புதல்வன்.

தேவவன்னியென்னும் பெயருடைய புண்ணியவதியானவள் விச்சிரவாவென்னும் தமது பர்த்தாவினது மனக்குறிப்பையறிந்து குற்றேவல்செய்துகொண்டுவருங்காலத்தில் சகலலோகத்தாரு மனமகிழும்படியாக அவள்வயிற்றினிடத்தில் அழகுபெற்ற ஒரு சிறுகுமாரன் தோன்றினன். அதுகேட்டுச் சத்தியலோகத்திலிருக்கும் பிரமனும், அவர்புத்திரர்களாகிய பிரம்மரிஷிகளும், சுவர்க்கலோகத்திலிருக்கிற தேவேந்திரன் முதலான திக்குப்பாலர்களும், மற்றுமுள்ள தேவர்களும், விச்சிரவாமுனிவரது ஆச்சிரமத்தை நாடிவந்து எல்லோரும் அவ்விச்சிரவாவென்பவரைப் பார்த்துச் சொல்லுகிறார்கள்.

ஐயா புலஸ்தியப் பிரம்மாவின் புத்திரரே! நீர்செய்த தபோபலத்தினாலே இந்தச் சற்புத்திரனைப் பெற்றீர். நீரேயாவரினு மேலானமகிமையும், சிலாக்கியமும், யோக்கியமும், பெருமையு முடையவரானீர். என்றுபசரித்து அந்தப்புத்திரனுக்கு வச்சிரவண்ணனென்று நாமதேயந்தரித்து ஆசிர்வாதஞ் செய்துவாழ்த்தி, எல்லோரும் தாங்கள் வாசம்பண்ணுமிடத்தைச் சேர்ந்தார்கள். அதன்பின்பு அந்தப்புத்திரன் இளம்பிறைச் சந்திரன்போல வளர்ந்து, பதினாறு வயதுக்குள்ளாக சகல வேதசாஸ்திரங்களெல்லாம் ஓதியுணர்ந்து, அந்த வேதங்களிலே நித்தியமான வஸ்துவென்று சொல்லப்பட்ட பரப்பிரம்மசொருபத்தை நிச்சயமாகத் தேர்ந்து, சமஸ்தமானவர்களுந் தவஞ்செய்யுந் தபோவனத்திற் சென்றனன்.

## வச்சிரவண்ணனென்னும் குபேரன் பிரமனைநோக்கித்தவஞ்செய்து வரம்பெறுதல்.

கவி.

தோயமேதனக் காகமாகவுந் தூாக்கும்
வாயுவேயுணவாகவு மன்னுபேரறத்தை
நேயமாகியநிராசன னுகியுநியமம்
சாய்விலாதுபல்லாண்டுமின் றருந்தவஞ்சரித்தான்.

இவ்வண்ணந் தபஞ்செய்யும்படி வனஞ்சென்ற வச்சிரவண்ணனென்னும் குபேரன், வாயுவையும் சலத்தையும் ஆகாரமாகப்புசித்துக்கொண்டு, தர்மமாகிய நிராசனத்திலிருந்து, அனேககாலம் பிரம்மதேவரை நோக்கிச் சித்திரப்பிரதிமைபோ லசைவற்று அரிதான தபசுசெய்துகொண்டிருந்தான். அப்படியிருக்குங்காலத்தி லந்தவச்சிரவண்ணனுக்கெதிராகப் பிரம்மதேவர் பிரசன்னராகி, உன்னைப்போல நெடுங்காலம் உறுதியாக விருந்து அரியதபசுசெய்தோ

ரொருவருமில்லை. நீசெய்ததபசுக்கு நாமிகவுஞ் சந்தோஷத்தை யடைந்தோம். ஆதலா லுனக்குவேண்டிய வரங்களைக் கேள் நாம் தருகிறோமென்று சொல்ல அதற்கு அந்தவச்சிரவண்ணன் சொல்லுவான்.

சுவாமி! இந்திரன்-அக்கினி-யமன்-நிருதி-வருணன்-வாயு-ஈசானியன் என்று சொல்லப்பட்ட திக்குப்பாலர்களுடனே நானுமொரு திக்குப்பாலனாகவேண்டும். எடுக்கவெடுக்கக் குறையாத நவநிதிக்கதிபதியாகவேண்டுமென்றுகேட்கப் பிரம்மதேவர் அப்படியே கொடுத்தனர். அல்லாமலும் உலகத்திலுள்ள யாவர்களு மனதில் நினைத்து வாயினாற் சொல்லப்பட்ட பொருள்களெல்லாம் அந்த நிதிகளிலே பெருகக்கடவதென்றும் வரங்கொடுத்துப் பின்னும் மனோவேகத்தைப் பார்க்கிலும் அதிகவேகமாக நினைத்தவிடங்களெங்கும்போய் மீண்டுவருவதாய், அதனை யிழுத்துக்கொண்டு பாய்ந்தோடக் குதிரைகள் பூட்டாததாய், ஏழுலகத்திலுள்ள வெல்லோர்களு மேறினாலுமிடங்கொடுத்துப் பின்னும் விசாலமா யிருக்குமிடத்தை யுடையதாய், இயாவராலும் வெல்லப்படாததாய், நவரத்தினமயமான சிகரங்களால் அலங்காரம் பொருந்தியதாய், மகாமேரு பர்வதம்போலப் பிரகாசிக்கும் புஷ்பகமென்று சொல்லப்பட்ட திவ்விய விமானமுங்கொடுத் தநுக்கிரகித்துத் தம்முடைய சத்தியலோகத்துக்குப் போயினர்.

இப்படியாகப் பிரம்மதேவரிடத்தில் வரம்பெற்ற வச்சிரவண்ணனாகிய குபேரன் அளவில்லாத மகிழ்ச்சியுடனே தன்னுடைய பிதாவான விச்சிரவா விருக்கும் ஆச்சிரமத்துக்கு வந்து, அவரைவணங்கி நமஸ்கரித்து, தான் தவசுபண்ணி வரம்பெற்ற விதங்களெல்லாஞ்சொல்லி, ஐயா பிதாவே! பிரம்மதேவர் வரங்கொடுக்கும் பொழுதில் நானிருந்து வாசம்பண்ணுதற்கு ஒரு ஸ்தானம் அநுக்கிரகஞ் செய்யவில்லை. ஆனதால் எந்தக்காலத்திலும் – சகல வ்யபாயங்களினாலேயும் - சத்துருக்களாலேயும் - செயிக்கக்கூடாததாய், பலமான துர்க்கங்களை யுடைத்தானதா யிருக்கும் ஓரிடத்தை நியமித்து அருள்செய்வீரென்று கேட்டான்.

### குபேரனுக்குத் தன்தந்தையாகிய விச்சிரவாவென்பவர் இலங்காபுரியைக்காட்ட அதிலிருந்தரசுபுரிதல்.

கவி.

இலங்கைமாநகரிராக்கத ரிருப்பிட முன்னாள்
வலக்கொளாழிமா லாயினொடெதிர்மலைந்தமரிற்
கலங்கியோடிய நிருதர்கீ ழுலகிடைக்கரந்தார்
அலங்கன்மொய்ம்பினீ யக்கரிருத்தியென்றான்.

அதற்கவனுடைய பிதாவாகிய அவ்விச்சிரவா வென்பவர் சொல்லுவார். அப்பா மகனே! மூன்றுலோகத்திலுமுள்ள யாவர்களாலும் சாதிக்கப்படாத பலங்களை யுடைத்தானதாய்ச் சமுத்திரத்தி னடுவிலே ஜலதுர்க்கஞ் சூழ்ந்திருக்கிற இலங்காபுரியென்று மொருபெரிய நகரமுண்டு, அதினிடத்திலே



அனேக காலமாக ராஜரீகஞ் செய்துகொண் டிருந்த வெகுகோடி இராட்சதர்கள் ஸ்ரீமகாவிஷ்ணுவினுடனே யெதிர்த்து யுத்தம்பண்ணி, அளவில்லாத ராட்சதசேனைகளை மடியக்கொடுத்து, அவருடைய யுத்தத்துக் காற்றாமல் முதுகிட்டோடிப் பிலத்துவாரத்தின் வழியாகப்போய்ப் பாதாள லோகத்திலே புகுந்து ஒளித்துக் கொண்டார்கள்.

ஆகையா லந்தராட்சதர்களிருந்த பலம்பொருந்திய இலங்காபட்டணத்தில் நீ வாசஞ்செய்துகொண் டிருப்பாயென்று சொன்னார். அவர்சொன்ன பிரகாரமே தன்னுடைய வமிசத்தாரான யட்சகந்தருவ கின்னரர் முதலாயுள்ள பந்து பரிசனங்களுடனே புஷ்பகவிமானத்தின்மே லேறிப்போய் அந்த லங்காபட்டணத்திலே பிரவேசித்து, முன்னமொருகால் மகாவிஷ்ணுவின் சக்கரத்தினாலே யுத்தகளத்தில் மகாபலசாலியாகிய மாலியென்னும் ராட்சசனிறந்தபின்பு அழகும் பெருமையுங் கெட்டுப் பாழ்பட்டுக்கிடந்த அந்த நகரமே சுவர்க்கலோகமாகவும், தானேயொரு தேவேந்திரனாகவும், சகல தேவர்களும் தன்னை வணங்கும்படியாய் அளவில்லாத செல்வச்சிறப்புடனே வாழ்ந்திருந்தனன்.

புலத்தியப்படலம் முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

மூன்றவது,

## அரக்கர்பிறப்புப்படலம்.

இப்படலத்தில் அகஸ்தியர் இராமபிரானைநோக்கி பிரமதேவரால் இராட்சதர்களுண்டானவிதமும், அவ்வமிசத்தில் ஹேதி - பிரஹேதி யென்னுமிருவர்களுண்டாய் ஹேதியென்பவனுடைய சந்ததிவழியாய் சுகேசனுக்கு மாலியவான்-சுமாலி-மாலி இவர்களுற்பத்தியும், அவர்கள் பிரமனை நோக்கித்தவஞ்செய்து வரம்பெற்றதும், விசுவகர்மனை நகரம் ஒன்றேற்படுத்தச் சொல்லியதும், அவன் இலங்கைமாநகரத்தின் பெருமையை யோசித்து அவ்விலங்கையி லவர்களைக் குடியேற்றினதும், அவர்களிலங்கையடைந்துசெய்த கொடுங்கோலும் சொல்லப்படுகின்றது.

### ஸ்ரீராமச்சந்திரர் பூர்வ இராட்சசர்களின் பிறப்பாதி வரலாறுகளைக் கேட்க அகஸ்தியமகாமுனிவர் முறைபடக் கூறுதல்.

கவி.

இந்தமாநிலத் திராவணனாதியா மரக்கர்
முந்தையோரெலாம் புலத்தியன்வழியென மொழிந்தாய்
அந்தவண்ணமே யன்றியேவேறொரு வழியால்
வந்தனோர்களோ மாமுனியுரைத்தருள்கென்றான்.

எயுகின்வலியிராக்கதர் தோற்றமுமிலங்கை
ஆயவாறுந் நகரவர்க்காயகாரணமும்

*மாயனுக்கவரோடிய வண்ணமுமற்றும்*
*தாயமாமுனிகூறென மாமுனிகூறும்.*

இப்படி யென்று குபேரனுடைய சவிஸ்தாரங்களைக் கூறிய அகஸ்திய முனிவரை ஸ்ரீராமச்சந்திரர்பணிந்து; ஐயா முனிபுங்கவரே இவ்வுலகத்தை யதஞ்செய்த இராவணாதி இராட்சதர்களெல்லாம் புலத்தியப் பிரமாவின் சந்ததியென்று மொழிந்தீர். இத்தீவினையாளர் தவிர இன்னு மனேக விராட்சசர்களிருந்தார்களே அவர்களெல்லாம் யார் அவர்களெல்லா மெவ்வழியாய் வந்தவர்கள் அதைவிபரமாய்ச் சொல்லுவீரென்று கேட்டனர். அதைக் கேட்ட காகுஸ்தனை அகஸ்தியமுனிவர் பார்த்து இராட்சதர்களின் பிறப்பும், இலங்காபுரி யுண்டானவிதமும், அவ்விலங்கைக்கு அவர்கள் தலைவரானவிதமும், மகாவிஷ்ணுவுக்கு அவ்விராட்சசர்கள் தோற்றோடியவிதமும், ஆகியவிவற்றை முறைபடவகுத்துச் சொல்லுகிறோம் கேளாய் ஸ்ரீராமாவென்று சொல்லுகின்றார்.

கேளும் ஸ்ரீராமா! பூருவமொருகாலம் சிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்மதேவரானவர், பூலோகம்-புவலோகம்-சுவலோகம்-சனலோகம்-தபோலோகம்-மகாலோகம்-சத்தியலோகமென்று சொல்லப்பட்ட மேலேழு லோகமும், அதலம்-விதலம்-சுதலம்-தராதலம்-இரசாதலம்-மகாதலம் பாதாளமென்றுசொல்லப்பட்டகீழேழுலோகமும் ஆகிய பதினாலுலோகங்களையும் உண்டாக்கி,சரமென்றும் அசரமென்றும் சொல்லப்பட்ட இரண்டு வகையாகிய எண்பத்துநான்கு லட்சம் யோனிபேதமாயுள்ள சீவகோடிகளையும் படைத்து, அந்தச் சீவகோடிகளுக்குள்ளே அறிவோடுகூடிய பிராணிகளைப்பார்த்து நீங்கள் இந்த லோகங்களை இரக்ஷிப்பீரென்று ஒருவாக்கியம் பொதுப்படச் சொன்னார்.

அதுகேட்டு அந்தப் பிராணிகளெல்லாம் நமக்கொரு சுதந்திரமும் செயலுமுண்டோ? நம்மைப்படைத்த கர்த்தாவானவர் யாவரைக்குறித்து என்னகட்டளை யிடுவாரோ? அந்தப்படி நடப்போம். என்றெண்ணிக்கொண்டு எல்லாப்பிராணிகளும் அதற்குப் பிரதிவசன மொன்றும் சொல்லாமலிருக்க சிலபிராணிகள் யக்ஷ, யக்ஷ, என்று சொன்னார்கள். சிலபிராணிகள் ரட்ச, ரட்ச, என்று சொன்னார்கள். அவர்கள் வாயிற்பிறந்தவசனப்படியே பிரம்மதேவர் யக்ஷ, யக்ஷ, என்றவர்கள் யட்சர்களும், ரட்ச, ரட்ச, என்றவர்கள் ராட்சதர்களு மாகக்கடவீரென்று அருளிச்செய்தார். அப்படியுண்டான ராட்சதகுலத்திலே ஏதியென்றும், பிரகேதியென்றும், சொல்லப்பட்ட அண்ணனும் தம்பியுமாகிய இராட்சதரிருவரில், இளையவனாகிய பிரகேதியென்று சொல்லப்பட்டவன் சாந்தகுணமுடையவனாகி, துன்மார்க்கங்களைவிட்டுச் சன்மார்க்கங்களை யநுசரித்து, பெரியோர்களைச் சார்ந்து சற்கதியடையவேண்டுமென்று நினைத்தவனாய் அளவில்லாத தபோதனர்களாகிய மகாரிஷிகள் வாசம் செய்துகொண்டிருக்கும்,தபோவனத்திலே தபசுசெய்யப்போயினான். அதன்பின்பு அவனுக்கு மூத்தவனென்று சொல்லப்பட்ட ஏதியானவன் தயிரிய பல பராக்கிரமங்களிலேதனக்குச் சமானமானவர்க ளொருவரு மில்லையென்னும்படி மேன்பாடுடையவனாகி யிருந்தான்.



அப்படியிருக்குங்காலத்தில் அவன் தனக்குத்தகுமான சரீரதிடமும், நல்லரூபமும், உத்தமகுணமுமுடைய வொருஸ்திரீயை விசாரித்து வருவீர்களென்று தன்னுடைய தூதர்களுக்குச் சொல்லியனுப்பினான். அவர்களும் அப்படியே எங்குந்தேடி அவ்வளவுயோக்கியமுள்ள ஸ்திரீயைக் காணாமல், இயமலோகத்திலே போய்த் தாங்கள் தேடிக்கொண்டு வந்தபடிக்கு எல்லாலக்ஷணங்களும் பொருந்தியிருக்கும் ஒரு பெண்ணைக்கண்டு, தங்களுக்குத் தலைவனாகிய அந்த ராக்ஷசனிடத்துக்குவந்து தாழ்ந்து வணங்கிச்சொல்லுவார்கள். சுவாமி! தேவரீர் சொல்லியனுப்பியபடியே எல்லாக் குணங்களுமுடையவளாய், உம்முடைய யோக்கியத்துக் கேற்றவளாய், இயமனுடைய தங்கையொருத்தி யிருக்கிறாளென்று சொல்லவும், ஏதியானவன் அப்பொழுதே யமபுரிக்குப்போய் உலகத்திலுண்டாகிய வெல்லாவுயிர்களையும் கொலைசெய்யும் கொடிய கூற்றுவனிடத்திற்சென்று, உம்முடைய தங்கையை யெனக்குக் கொடுக்கவேண்டுமென்று கேட்டான். அதற்கவனும் சம்மதித்து, கண்ணினாலே பார்த்தவர்கள் பயந்து நடுங்கும்படியான ரூபத்தையும் பயையென்று சொல்லப்பட்ட பெயரினையுமுடைய தன்தங்கையைக் கலியாணஞ் செய்வித்துக் கொடுத்தான்.

அதன்பின்பு அவளும் - அவனும் - காமசம்போகத்தில் விட்டுப்பிரியாமற் கூடியிருக்கும் காலத்திற் கருப்பந்தரித்து, அந்தப் பயையென்பவள் ஒரு புத்திரனைப் பெற்றாள். அவன் மின்னலைப்போலும் சிகையினை யுடையவனாதலால் அவனுக்கு வித்தியுத்கேசனென்று பெயர். அவன் அழகும் பருவமும் பொருந்திய கந்தருவகுலப் பெண்ணாகிய சந்தியென்னும் பெயருடையவள் பெற்ற சாலகடங்கடையென்று சொல்லப்பட்டவளை விவாகம் செய்துகொண்டு, அவளும் தானுமாக இரதியு மதனும், அன்றிலும் பேடும்போல க்ஷணப்பொழுதும் விட்டு நீங்காமல் மோகசமுத்திரத்தில் அழுந்தினவர்களாகி, திவ்விய பரிமளமான புஷ்பவாசனைகளுடனே இளந்தென்றற்காற்று வீசும் சிங்காரவனங்கள் — குளிர்ந்த அருவிகளிறங்கு மலைச்சாரல்கள் - பூஞ்சோலைகள் — புஷ்பதடாகங்கள் — ஓடைகள் - நதிக்கரைகள் — இவை முதலான இடங்களெங்கும் தங்களுடைய மனசுக்கு இஷ்டமானபிரகாரம் நினைத்தவிடங்களிலே விநோதம் விநோதமாக இருவரு மொருமையாய்க் காமசுகபோகம் அநுபவித்துக்கொண் டிருந்தார்கள்.

அப்படியிருக்குங்காலத்தில் அந்தச் சாலகடங்கடை வயிற்றிலே கருப்பந்தரித்து அவளொரு குழந்தையைப் பெற்றாள். அந்தப்பிள்ளையைப் பிறந்தவிடத்திலே எறிந்துபோட்டு; எள்ளளவு இரக்கமில்லாமற் சற்றேனும் திரும்பியும் பாராமல், அடங்காத காமவிகாரத்தை யடைந்திருக்கிற இராட்சதஸ்

திரியானவளாதலால் மதங்கொண்ட யானைபோலத் திரியும் தன்னுடைய கணவன் எங்கெங்கே செல்லுகின்றானோ அங்கங்கே தானும் அவன்பின்னே தொடர்ந்துபோனாள். அப்படியவள் போனபின்பு எங்கு மேகங்கள் பரந்து இருண்டு காற்று மழையும் இடியு மின்னலுமாய் அந்தகாரப்பட்டிருக்கிற வேளையில் அந்தக் குழந்தையானது தன்கைவிரல்களை மடித்து வாயிலே வைத்துக்கொண்டு, எடுத்தணைத்து ஆதரவுசெய்வா ரொருவருமில்லாமல் தனியே யழுதுகொண்டு கிடந்தது. அப்படி கிடக்கிறதைத் தேவேந்திரன் முதலான சகல தேவர்களுங்கண்டு பரிதாபப்பட்டு, பரமசிவனுடைய திருவுளச்செயல் இப்படியு மிருந்ததோவென்று அதிசயத்தையடைந்து, அந்தப் பரமசிவனை நோக்கி மனதிலே தியானித்துப் புஷ்பவருஷம் பொழிந்து வணங்கிப் போற்றித் துதிசெய்து நின்றார்கள்.

அந்தச்சமயத்தில் பரமசிவன் உலகத்திலுள்ள எல்லாவுயிர்களும் துன்பங்கள்நீங்கி இன்பங்களைப் பெற்றுமகிழ்ந்திருக்கும்படியாக உமையவளுடனே ரிஷபாரூடராய் சிவகணங்கள் சூழச் சகலமானபேர்களுக்கும் காட்சிகொடுத்தருளி எல்லாவுலகங்களிலும் பவனியாக உலாவிவரும் பொழுதில், அவ்விடத்தில் அந்தக்குழந்தை நிராதரவாய்த் தனியே அழுது பரதவித்துக்கொண்டு கிடக்கின்றதை உமையவள்கண்டு திருவுள்ளமிரங்கிப் பரமசிவனை நோக்கிக் கூறுவாள். ஸ்வாமி!, இவ்விடத்தில் இப்படிக்கு ஒரு ஆதரவுமில்லாமல் தனியாய்ப் பரதவித்து அழுதுகொண்டு கிடக்கும் இந்தப் பிள்ளையை, தேவரீர் கிருபைசெய்து ரக்ஷிக்கவேண்டுமென்று இரக்கத்துடனேவேண்டிச்சொல்லினாள். அதுகேட்டபரமசிவன் அப்படியே தமது திருவுள்ளத்திற் கிருபைபொருந்தி, அந்தக் குழந்தையைக் கருணையாகப்பார்த்து, நிறைந்த ஆயுசும் யௌவனமான பருவத்துக்குள்ள அழகும், யாவரையும் வெல்லத்தக்க பலமும் — சுகேசனென்கிற பெயரும் நல்லநகரமும் சேனைகளும் உண்டாகக் கடவதென்று அநுக்கிரகம் செய்தார். அப்படியே பார்வதிதேவியும் அக்குழந்தையைப்பார்த்து, உன்னுடைய வமிசத்திலுண்டாகிய எல்லாருக்கும் கர்ப்பம் தரித்தவுடனே பராக்கிரமசாலிகளாய்ப்பிறக்கவும், அப்படிப் பிறப்பவர்களெல்லாரும் தவஞ்செய்து வரம்பெறுபவர்களாகவுங் கடவதென்று அருளிச்செய்தாள்.

இப்படிக்குப் பரமசிவனும் பார்வதிதேவியுங் கொடுத்த வரத்தினாலே அளவில்லாத செல்வமும்-சிறப்பும்-பலமும்-வெற்றியும் பொருந்தி, சுவர்க்கலோகத்தினும் அதிகமான வளங்கள்பொருந்திவிளங்குவதாய் பரமசிவம்கொடுத்த வொருபெரிய நகரத்தினிடத்திலே தேவேந்திரனைப்போல வீற்றிருந்தான். அப்படிக்குச் சிறப்பாகவிளங்கியிருக்கும் சுகேசனுடைய அளவில்லாதமேன்மைகளெல்லாம் ஒருகந்தருவனானவன் கேள்விப்பட்டு, இந்தச்சுகேசனுக்கே தன்னுடையகன்னிகையைக்கொடுக்கவேண்டுமென்று ஆலோசித்து,தான் பெற்ற புத்திரியாகிய தெய்வவதியை அந்தச்சுகேசனுக்கே விவாகஞ்செய்வித்துக்கொடுத்தான். அதன்பின் அந்தச்சுகேசனும் தெய்வவதியுமாகிய இருவருமிஷ்டமாகக்கூடிக்கலந்து காமசுகமனுபவித்துக்கொண்டு மகிழ்ந்திருந்தனர்.



### மாலியவான் சுமாலி மாலியென்னு மூவிராட்சசர்க ளுற்பத்தி.

கவி.

மாலைதாழும் வரைத்தோட்சுகேசனுக்
கேலவார்குழல் வல்லிவயிற்றிடை
மால்கொள்மாலிய வானுஞ்சுமாலியும்
மாலியும்மெனு மைந்தர்பிறந்தனர்.

அந்தக்காலத்தில் இந்தத் தெய்வவதி வயிற்றிலே கர்ப்பந்தரித்து சுகேசனுக்குப் புத்திரராக மாலியவான் — சுமாலி — மாலி — என்று சொல்லப்பட்ட மூவரும் பிறந்தார்கள். அதன்பின்பு அந்தமூவரும் மருந்தினாலே தீராத பொல்லாத வியாதிகள்போலவும், நெய்யினை வார்க்க வார்க்க மூண்டெழுந்தெரியு நெருப்புப் போலவும், அறிவில்லாத மூடர்களிடத்தில் அவர்களைக் கெடுக்கப் பெருகுஞ் செல்வம்போலவும், நல்லோரைச் சாராத பொல்லாத மூர்க்கரிடத்தில் விளையும் பாவம்போலவும், இரக்கமில்லாத பாவிகளிடத்தி லுண்டாகிய கோபம்போலவும், உயிர்களை யிரையாக வுண்ணும் யமன்போலவும், மணிமந்திர வௌஷதங்களினாலே திரும்பாத கொடிய விஷத்தினைப்போலவும்; உலகத்திலுள்ள எல்லாப்பிராணிகளும் அஞ்சிப்பயந்து நடுங்கும்படிக்கு நாளுக்குநாள் செழிப்பாய் வளர்ந்து, அதிகமான பலபராக்கிரமமு முடையவர்களாகி, தங்கள் பிதாவாகிய சுகேசனென்பவன் முன்னாள் தவஞ்செய்து சிவனிடத்திற்பெற்ற வரத்தைப்பார்க்கிலு மேன்மையான வரங்கள் பெறவேண்டுமென்று மனதிலெண்ணி, மகாமேரு பருவதத்திற்கு வடபாரிசத்திற் பெரியதாய் விளங்கும் தபோவனத்தைச் சார்ந்து, அங்கே தபசுசெய்யும் விதிப்பிரகாரம் பஞ்சேந்திரியங்களை யடக்கி ஒருமைப்பாடாக மனவுறுதிகொண்டு சலனப்படாமல் பிரம்மதேவனை நோக்கி அளவில்லாத காலம் அரிதான தவங்களைச் செய்தார்கள்.

இப்படியவர்கள் தவஞ்செய்து வருகிற செய்தியைத் தேவர்கள் அசுரர்கள் முதலான எல்லோருங்கண்டு, இந்தப் பாவிகள்செய்கிற கொடியதபசுக்கு வரம்பெற்றார்களேயாகில் அதினாலே என்னகாரணமும்—உற்பாதமும்—விளையுமோவென்று மனங்கலங்கி நடுக்கமுற்றார்கள். அப்படியாக விருக்குஞ் சமயத்திலே அந்த மூன்றுபேருக்கு மெதிராக நவரத்தின மயமான விமானத்திலேறிப் பிரம்மதேவர் பிரசன்னராகி, அவர்களைப் பார்த்து நீங்கள் நம்மைக்குறித்துச் செய்த மகாதபசுக்கு நாமிகவும் சந்தோஷத்தை யடைந்தோம். ஆகையால் உங்களுக்கு வேண்டிய வரங்களைக் கேட்பீராகில் நாம்தருகிறோமென்று சொல்லினர்.

### மாலியவான் - சுமாலி - மாலி இவர்கள் மூவரும் பிரமதேவனிடத்தில் வரம் பெறுதல்.

கவி.

பூவயன்புக ழ்ப்புகல்வாரவர், தேவராதி திரிபுவனத்துளோர்
ஏவரோனு மெய்க்கமர்தோற்கவும், தேய்வில்காலங்கள் செல்லவுஞ்செய்குவாய்.

அவ்வண்ணம் பிரமதேவன் பிரத்தியக்ஷமாகிச் சொன்னவுடனே இம்மூவரும் பிரமதேவனுக்குப் பிரதக்ஷண நமஸ்காரஞ்செய்து, அந்த மூன்றுபேரும் பிரம்மதேவனைநோக்கி, ஓ வாணிகேள்வரே! சுவர்க்கலோகம், பாதாளலோகம், என்றுசொல்லப்பட்ட மூன்று லோகங்களிலுள்ள தேவர்களோடு பராக்கிரம மகிமைபொருந்திய சக்கிரவர்த்திகளாகிய மகாராஜாக்கள் முதலான யாவராலும் செயிக்கப்படாத பலமும், பராக்கிரமும், வெற்றியும், குறைவில்லாத ஆயுசும், அஸ்திர சஸ்திரங்களுமெங்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று கேட்டார்கள்.

அதற்கு அந்தப் பிரம்மதேவர் நீங்கள் கேட்டபடியே எல்லாவரமும் கொடுத்தோமென்று அனுக்கிரகஞ்செய்து, உடனே தாமிருக்கும் சத்தியலோகத்துக்குப் போயினர். பிரமதேவர் கொடுத்தவரத்தினால் சகலலோகங்களும் தங்களுக்குக் கீழ்மையாகும்படி தேவேந்திரனாதி தேவர்களையும் யக்ஷகின்னராதி சமஸ்தமான பேர்களையும் தோற்கும்படிச் செய்து பத்துத்திசைகளையும் வென்று திரிந்தார்கள்.

மாலியவானாதிமூவரும் விசுவகர்மனை அழைத்துப்பட்டணமொன்று நிருமித்துத் தரவேண்டுமெனல்.

கவி.

நீடுபுவனமொருமூன்று மயனுஞ்சிவனுநெடுமாலும்
கூடியமரின்முயன்றாலுங் குறுகவரியவாளினராய்
ஆடலமார்பதியினழ கழிக்குநகரியமைக்கவுடன்
காடுகல்லேயெனவுரைப்ப நன்றென்றவன்போய்நாடுவான்.

அப்படியிருக்குஞ்சமயத்தில் அந்த மாலியவான் முதலான மூன்றுபேர்களும் தெய்வதச்சனை அழைப்பித்து, ஓ விசுவகர்மாவே! பிரம்மா - விஷ்ணு-உருத்திரனென்று சொல்லப்பட்ட திரிமூர்த்திகளும், மற்று மூன்றுலோகத்திலுமுள்ள தேவர்கள் முதலான யாவர்களும், ஒருமித்துக்கூடி யுத்தம்பண்ணத்தொடங்கினாலும் அவர்களாலேயும் அடுத்துச்செயிக்கப்படாத பலமான ஸ்தானங்களை யுடைத்தானதாய், தேவேந்திரனுடைய சுவர்க்கலோகத்திலே யிருக்கும் காமதேனு, கற்பகவிருக்ஷம், சங்கநிதி, பதுமநிதி, சிந்தாமணி இவைமுதலான ஐசுவரியங்களுடனே அமராபதிபட்டணத்தையும் தாழ்வுபடுத்தி நிந்தைசெய்யத்தக்க மிகுந்த சிலாக்கியம் பொருந்தியதாய், நீங்களொரு பெரியநகரத்தை நாங்களிருந்து இராஜரீகஞ் செய்யும்படி யுண்டாக்குகிறதற்கு யோக்கியமான ஒரு ஸ்தானத்தைப் பார்த்து நிச்சயித்துச்சொல்லுவாயென்று கூறினார்கள். அதைக்கேட்ட விசுவகர்மாவானவன் தகுந்த இடத்தை யோசிக்கலானான்

விசுவகர்மன் பூர்வமுண்டான இலங்கையின் பெருமையைச்சொல்லி அதுதானுங்களுக்கிடமென்று அதில் மாலியவானாதி மூவர்களையுங் குடியேற்றுதல்:

கவி.

முன்னாள்காற்றும்வாசுகியுந் தந்தம்வலியினிலைமொழிந்து
பொன்னார்வரையைவாசுகிதன் பணத்தாற்பொத்திப்புறங்காப்ப



தன்னார்விசையின்பெருங்காற்றுந் தாக்கச்சற்றுஞ்சலியாது
விண்ணோர்முனிவர்வேண்டியிட வீரன்சற்றேமுடிசாய்த்தான்.

விசுவகர்மனானவன் இவ்விராட்சசர்களுக்கு எவ்விடத்தை நிருமிக்கலாமென்று யோசிக்கும்போது இலங்காபுரியென்னும் பதியொன்றிருக்கின்றதால் அதைத்தான் இவர்களுக்குத் தரவேண்டுமென்று எண்ணங்கொண்டு, அவர்களைநோக்கி இலங்காபுரியென்று ஒருநகரமிருக்கிறது அளவற்ற சிறப்பையுடையது பூர்வத்திலேயே உண்டாயிருக்கிறது அதன் விருத்தாந்தத்தைச் சொல்லுகிறேன் கேளுமென்று சொல்லுகிறான். முன்னமொருகாலம் ஆதிசேஷனும் வாயுபகவானுமாகிய இருவரும் நான்பெரியவன் - நான்பெரியவன், நான்பலவான் - நான்பலவான், நான்பராக்கிரமன் – நான்பராக்கிரமன், நான் மகிமையுடையவன் — நான் மகிமையுடையவன், நானேசிலாக்கியன் – நானே சிலாக்கியன், என்று இந்தப்பிரகாரம் ஒருவருக்கொருவர் வாக்குவாதப்பட்டு, இந்தக்காரியத்தின் முன்னிலையாய் நம்மிருவருடைய பலாபலமும் - செயாபசெயமும் - அறிவோமென்று சமஸ்தமான தேவர்களும் சாக்ஷியாகச் சபதம்பண்ணிக்கொண்டார்கள். அப்பொழுது பொன்மயமான ஆயிரத்தெட்டுச் சிகரங்களுடனே எண்பதினாயிரம் யோசனையுயரமாகவிளங்கு மகாமேரு பர்வதத்தை ஆதிசேஷனானவன் தன்னுடைய விசாலமான ஆயிரம்படங்களையும் விரித்து மேலேமூடியும், உடலினாலே யிறுகச்சுற்றியும், இரவைலேசமும் தெரியாமல் மறைத்துக்கொண்டான். அந்த வேளையிலே வாயுபகவானானவன் யுகாந்தப் பிரளயகாலத்திலே பூலோகத்திலுள்ள சகல பர்வதங்களையும் பஞ்சாகப் பறக்கச்செய்யுந் தன்னுடைய மகாபலத்தினாலே பிரசண்ட வேகங்கொண்டு மோதிமோதியடித்தான். அப்படிக்கு மோதியடித்த அடியினாலே அந்த ஆதிசேஷன் சற்றுகிலுந் தளராதிருந்த பலத்தினைக்கண்ட அந்தவாயுபகவான் தன்னுடைய சொரூபத்தை யொடுக்கிக்கொண்டு வெட்கப்பட்டு, ஒருவருக்குந்தெரியாத ஓரிடத்திலே வெளிப்படாமல் மறைந்திருந்தான்.

அப்பொழுது எங்கும் வாயுசஞ்சார மில்லாதபடியினாலே பூலோகத்திலும் சுவர்க்கலோகத்திலுமுள்ள வெல்லாவுயிர்களும் உலைநெருப்பி லிட்ட அரக்குப்பாவைபோல் உடல்களுருகிப் புழுங்கிக்கரிந்து வாடி, பரிதாபப்பட்டு மயங்கி, பின்பு துன்பம்பொறுக்கமாட்டாமல் தேவர்கள் முனிவர்கள் முதலானோ ரெல்லோருங்கூடி ஆதிசேஷனிடத்திற் சேர்ந்து, ஐயா அனந்தனே! இந்தப் பூலோகத்தைச் சிரசிலேதாங்கியிரக்ஷிக்கிறவர் நீரல்லவோ? உம்மைப்போலப் பெருமைபடைத்தா ரொருவருண்டோ? அறிவுடையவர்களி லுயர்ந்தவரு நீரே: ஆகையாலிப்பொழுது இந்தவுலகத்திலுள்ள சகலபிராணிகளும் மரணவேதனையாகப் படுகின்ற துன்பந்தீரும்படிக்குக் கிருபைசெய்து ரக்ஷிக்கவேண்டுமென்று மிகவும் வணக்கத்துடனே உபசரித்து வேண்டிக்கொண்டார்கள். அது கேட்ட சேடனவர்களுக்குபகாரம் பண்ணும்பொருட்டு ஒரு உபாயந்தேடி, அவர்களைப் பார்க்கிறவன்போலத் தன்னுடைய ஆயிரந்தலைகளி

லே ஒருதலையைச்சற்றேநெகிழ்த்துத்தூக்கிச்சாய்த்துப் பார்த்தான். அப்பொழுது சமயம்பார்த்திருந்த வாயுபகவான் இதுதான் வேளையென்று, மகாவுக்கிர கோபத்துடனே அதிகபலங்கொண்டு பிரசண்டவேகமாக மோதியறைந்தான்.

அப்பொழுது அந்த வாயுபகவான் மோதிய வேகத்தினாலே ஆதிசேஷன் ஆயிரம்படங்களினாலே மறைக்கப்பட்டிருந்த மகாமேரு பர்வதத்தினுடைய ஆயிரத்தெட்டுச் சிகரங்களில், மூன்றுசிகரங்கள் பேர்ந்து தெறிபட்டுத் தெக்ஷிண சமுத்திரத்திலே மகாவுன்னதமாயும், விசாலமாயும், பொன்மயமாயும், விழுந்து மூன்றும்ஒன்றுசேர்ந்துவிளங்கியிருக்கின்றது. அதுதான் நீங்களிராஜ்யஞ் செய்கிறதற்கு யோக்கியமான தானமென்று சொன்னான். அதைகேட்ட மாலியவான் முதலான மூன்றுபேரும் அந்த விசுவகர்மாவைப்பார்த்து, நீ சொல்லிய சமுத்திர பருவதத்தின்மேலே நாங்களிருந்து இராஜாதிகாரஞ்செய்யத்தக்க யோக்கியமான ஒருபெரியபட்டணத்தை நிருமிப்பாயென்று கட்டளையிட்டார்கள்.

அந்தப்படியே விசுவகர்மன் அந்தப் பருவதத்தின்மேலே சந்திர சூரியர்களும் வழிவிலகிச் செல்லும்படியான உயரத்தையுடையதாய் எழுநிலைகளுடனே பூமண்டலத்தைச் சூழ்ந்திருக்கப்பட்ட சக்கரவாளகிரிபோலப் பொன்மயமாக விளங்குங் கோட்டையும், அந்தச் சக்கரவாளகிரியைச் சூழ்ந்த பெரும்புறக்கடல்போல அகழியும், அந்தக் கோட்டைக்குள்ளே அனேகம்பருவதங்களை வரிசை வரிசையாக நிறுத்திவைத்ததுபோல ஆகாசபரியந்தம் அளாவப்பட்டதாய் நவரத்தினமயமான சிகரபந்திகளோடு விளங்கு மளவில்லாத மாளிகைகள் - கூட கோபுரங்கள்-உப்பரிகைகள் மேடைகள்-ஆஸ்தான மண்டபங்கள் - நாடகசாலைகள் - ஆயுதசாலைகள் - மல்லகசாலைகள் - குதிரைச்சாலைகள் - யானைக்கூடங்கள் - இராஜகிரகங்கள் புஷ்பதடாகங்கள் மலரோடைகள் - உத்தியானவனங்கள் - இவை முதலானவைகளெல்லாம் அனேக விநோத விசித்திரமாக நிருமித்து, இலங்காபுரியென்று பெயரிட்டான். அப்படிக்கு நிருமிக்கப்பட்ட திவ்வியமான மகாபட்டணத்தை அம்மூவரும் பார்த்து ஆச்சரியப்பட்டு, அந்தத் தெய்வத்தச்சனாகிய விசுவகர்மாவுக்கு உபசாரஞ்செய்து வேண்டிய வரிசைகளுங்கொடுத்து பகைவர்களுக்கு இடதுபுறந்துடிப்ப சுபமுகூர்த்த காலத்திலே இலங்காபுரியையடைந்து அரசு புரிந்தனர்கள்.

### மாலியவானாதி மூவர்க்கும் விவாகம் நடந்தேறுதல்.

கவி.

யாவராலுங்கண்களினு லெட்டிப்பார்க்கவொண்ணாத
காவலிலங்கைவீற்றிருந்த சாலக்காணக்கந்திருவப்
பாவையானநருமதைதான் பயந்தமூவர்மங்கையரில்
மூவராமவாங்கவர்க்கு மூத்தவடைவின்முறைகொடுத்தாள்.



பதினாலுலகினுள்ளோரும் கண்ணினாலும் பார்ப்பதற்குக் கூடாத காவல்பெற்றுள்ள இலங்காபுரியில்இம்மூவருமிருந்தச்சமயத்து கந்தருவகுலத்திற் பிறந்த நருமதையென்று சொல்லப்பட்டவளுடைய புத்திரிகள்மூவரில் மூத்தவளாகிய சுந்தரியென்னுங் கன்னிகையைமாலியவானும், அவளுக்கிளையவளாகிய கேதுமதியென்னுங் கன்னிகையைச் சுமாலியும், அவளுக்கு மிளையதங்கையாகிய கன்னிகையை மாலியும் விவாகஞ்செய்துகொண்டு, அந்தக் கன்னியர்களுடனே அம்மூன்றுபேர்களும் அளவில்லாத விநோதமான காமசுக போகங்களை யனுபவித்துக்கொண்டு இஷ்ட சல்லாபமாகச் சந்தோஷத்தையடைந்திருந்தார்கள்.

அப்படியிருக்குங்காலத்தில் மாலியவானுக்கும் சுந்தரிக்கும் புத்திரராக வச்சிரமுடியென்றும், விருபாக்ஷனென்றும், துர்முகனென்றும், பாபசித்தனென்றும், நியாயகோபனென்றும், மத்தனென்றும், உன்மத்தனென்றுஞ் சொல்லப்பட்ட ஏழுபேர் பிறந்தார்கள். அவனுக்கிளையவனாகிய சுமாலிக்குங் கேதுமதிக்கும், கைகசியென்றும் கும்பீநசியென்றுஞ் சொல்லப்பட்ட இரண்டு புத்திரிகள் பிறந்தார்கள், அவனுக்கு மிளையவனாகிய மாலிக்கும் கேதுமதிக்கிளைய தங்கைக்கும், குருபுத்தனென்றும் - நீலனென்றும் - நிலயனென்றும் - சம்பாதியென்றுஞ் சொல்லப்பட்ட நாலுபுத்திரர்கள் பிறந்தார்கள் அல்லாமலும் - முன்பு பிரமதேவன்கொடுத்த வரத்தினாலுண்டாகிய இரதகஜதுரகபதாதி சதுரங்கசேனைகளும்- விதம்விதமாயுள்ள அனேகமான அஸ்திரங்களும் - மற்றுமுள்ள ராசாங்க விமரிசைகளெல்லாமும் பெற்றிருக்கிற புஜபலபராக்கிரமத்தினாலே மிகுந்தமதத்தராகி, தங்களுக்கு எதிரானவர்களொருவருமில்லையென்று அகங்காரமேற்கொண்டு, உலகங்களையழித்தனர்.

### மாலியவானாதி மூவரும் தேவலோகங்களிலுள்ளவர்களை வதைத்துத் தீமைசெய்ய வவர்கள் வருந்தல்.

கவி.

மேவினாகர்கருவறுத்து வேலையுலகம்பொடிசெய்து
தேவர்கோமான்றனைத்துரந்து செம்பொனுலகங்கைக்கொண்டு
பாவுநிந்தப்பல்லுலகம் படைத்தாக்காத்துத் துடைக்கிற்போர்
மூவராவாரெமர்களுக்கு மூவரின்றியெனமொழிந்தார்.

நாகலோகமடைந்து அங்குள்ளநாகர்களைக் கருவறுத்து, பூலோகத்தைப் பஸ்மீகரப்படுத்தி தேவலோகம்புகுந்து தேவராஜனாகிய தேவேந்திரனைத்துரத்தி அவ்வுலகத்தைத் தங்கள் சுவாதீனஞ் செய்துகொண்டு பதினாலுலோகங்களையும் முந்தொழிலுஞ்செய்து நிற்கும் திரிமூர்த்திகள் இவர்களை விடவேறில்லையென்று சொல்லும்படி திரிந்தார்கள். பூலோகத்திலுள்ளோர்

இந்திரனாதி தேவர்கள் முனிவர்கள் நாகலோகத்திலுள்ளோர்களான இவர்களுக் குயாதாமொரு பற்றின்றி இவர்கள் செய்யுமுபத்திரவத்தால் ரௌரவமுதலிய நரகத்தில் வீழ்ந்துவருந்தும் பாபாத்துமாக்களைப்போல் விசனப்பட் டிருந் தனர்கள்.

அரக்கர்பிறப்புப்படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

நான்காவது,

# தோத்திரப்படலம்.

இப்படலத்தில் மாலியவானாதி மூவருஞ்செய்த கொடுமையைச்சகியாததே வர்கள் கைலையையடைந்து சிவபெருமானிடத்திற் சொல்லியதும், அச்சிவபெருமான் நாம் கொல்லத்தக்கதன்று மகாவிஷ்ணுவினிடத்திற் சென்று சொல்வீர்களாயி னவர் அவ்விராட்சசர்களைக் கொல்லுவாரெ ன்றதும், தேவர்கள் பாற்கடலடைந்து பகவானைப்போற்ற பகவான் நாமெழுந்தருளி அரக்கர்களை அதம்பண்ணுகிறோமென்றருள் வாக்குக் கூறியதும் அகஸ்தியரால் ஸ்ரீராமபிரானுக்குச் சொல்லப் படுகின்றது.

தேவர்கள் கயிலாசத்தையடைந்து மாலியவானாதி அரக்கர்செய்யும் கொடுமையை, பரமசிவனைப் போற்றிசெய்து முறையிடல்.

கவி.

கோலகாலமாயுலகங் குலையநின்றிக்கொதித்துவரும்
ஆலகாலமமிழ்தாக வடக்கிவைத்தமணிமிடற்றன்
பாலகாலமுன்பவென்னப் பற்றிப்பற்றியிழுத்திமைக்
காலகாலன்வீற்றிருக்குங் கயிலைமலையைக்கண்ணுற்றார்.

கேட்டீரோ தசரதாத்மஜரே! மகாரிஷிகளும் தேவர்களும் ஒன் றுகூடி இனியாம்யாதுசெய்வதென்று பரமசிவனிடத்திற்சென்று முறையிடு விக்குவரத் திருமென்றுயோசித்து, உலகமெல்லாங் குலையும்படி கோலாகல மாகப்பாலசமுத்திரத்திற் கிளைத்தெழுந்தஆலகாலவிடத்தை யடக்கியதிருக் கண்டத்தையுடையவனும், அகாலத்திற் பாலன்பானைப்போல வந்த இயம னுக்கு இயமனுமுள்ள சிவபெருமான் எழுந்தருளியிருக்கின்ற கயிலையங்கிரி யையடைந்து திருநந்திதேவராற்றிருவாயிலைக் கடந்து உட்சென்று சிவபெரு மானைக்கண்டு தோத்திரஞ் செய்கின்றார்கள்.

கவி.

எந்தாய்போற்றி யேறுடையிறைவாபோற்றி யேழுலகுந்
தந்தாய்போற்றி யணிகொன்றைத் தாராய்போற்றி சகமுய்ய
வந்தாய்போற்றி வஞ்சகர்முன் வாராய்போற்றி மலபோனுஞ்
செந்தாமரைக் கட்டிருமாலு மாணுய்போற்றி சிவாபோற்றி.



அந்தத் தேவேந்திரன் முதலானவர்களெல்லோரும் இப்படிதோத்திரஞ் செய்து மூன்றுலோகமும் பாழாகக் கொடுமைசெய்யும் பாவிகளாகிய மாலி யவான் முதலான இராக்ஷதர்களாலே தாங்கள்படுகிற துன்பங்களெல்லாஞ் சொல்லி முறையிட்டார்கள்.

சிவபெருமான் தம்மைவேண்டிய தேவர்களைநோக்கி நாம் இராட்சசர்களைக் கொல்லத்தக்கதன்று ஸ்ரீமகாவிஷ்ணுவினிடத்திற்சென்று சொன்னால் அவர் கொல்லுவாரெனவுரைத்த அவ்வண்ணம் தேவர்கள் பாற்சமுத்திர மடைதல்.

கவி.

மல்லார்புயத்துக்சுகேசன்றன் வழியிலுள்ளவாளரக்கர்
எல்லாப்பிழையுஞ்செய்தாலு மென்னையடைந்தோராதலினால்
சொல்லேனவரைவென்கையாற் கொல்லுமுபாயங்களுமெல்லாம்
வல்லோன்மாயனென்றவர்க்கு மங்கைபாகன்விடைகொடுத்தான்.

அப்பொழுது பரமசிவன் அவர்களைப்பார்த்து, ஓ அன்பினர்களே! புஜபலபராக்கிரம சாலியாய் என்னிடத்தில் மிகவும் பத்திவைத்துள்ள சுகேசன்வழியில் வந்த அரக்கர்கள் எவ்வளவு பிழைகளைச்செய்தாலும், அவர்களும வனைப்போலென்னை யடைந்தோராதலால் அவர்களை நாமேயழிப்பது தருமம ல்ல. ஆகையால் இராக்ஷதர்குலத்துக்குப் பகைவராய் அவர்களைக் கொல்லும் உபாயமும் வெற்றியும் பொருந்திய மகாவிஷ்ணுவினிடத்துக்கு நாமனுப்பு வித்தோமென்று நீங்களெல்லோரும்போயுங்கள்குறையைச்சொன்னால், அவர் உங்களுக்குத் துன்பஞ்செய்யும் அந்த ராக்ஷதர்களைச்சங்கரித்து உங்களை ரக்ஷிப்பாரென்று அனுக்கிரகஞ்செய்து அனுப்புவித்தார்.

அப்படியே அந்தத்தேவேந்திரன் - தேவர்கள் - மகாரிஷிகள் முதலான வெல்லோரும் திருப்பாற்கடலினிடத்திற் சேர்ந்து, அந்தத் திருப்பாற்கடலி னடுவிலே மரகத ரத்தினம்போலப் பச்சையாய் விளங்கும் ஒருபெரிய ஆலி லையின்மேலே சிரசிலே மாணிக்கரத்தினங்கள் வரிசையாய் விளக்குபோலப் பிரகாசிக்கும் ஆயிரம் படங்களையுடைய ஆதிசேஷசயனத்திலே. மாணிக்ககிரீ டம் - மகரகுண்டலம் - ஆரகேயூரம் - கௌஸ்துவம் - பீதாம்பரம் - இவை முத லான திவ்வியாலங்கார பூஷிதராகி சங்கம், சக்கிரம், தண்டம், கோதண்டம், கட்கமென்று சொல்லப்பட்ட பஞ்சாயுதங்களையுந் தரித்தவராகி, ஸ்ரீமகா லட்சுமியும் பூதேவியுமாகிய தேவிமாரிருவரும் உபயபாதங்களை வருடவும், சகலபுவனங்களையும் படைக்குந்தொழிலினையுடையசதுர்முகப் பிரம்மாவான வர் இருக்குவேதம், எசுர்வேதம், சாமவேதம், அதர்வணவேதம், என்று சொல்லப்பட்ட நாலுவேதங்களையும் அவருடைய உந்திக்கமலத்திலிருந்து பாராயணஞ்செய்யவும், தும்புருநாரதரிருவருஞ் செவிகளுக்கின்பமாக ஆனந்

தமயமான விஞ்ஞாபனஞ்செய்யவும், பரமபதவாசிகளான பாகவதர் இருபக்கங்களினும் நெருங்கிக் கைகளைக்கூப்பித் தோத்திரஞ்செய்யவும், கருடபகவான் முதலான பக்தகணங்கள் புடைசூழ்ந்து நிற்கவும், செந்தாமரைபோன்ற தமது வலதுகையைச் சிரசின்கீழ் கொடுத்துக் கருணையே திருமேனியாக அறிதுயிலாகிய யோகநித்திரை செய்தருளு நாராயணமூர்த்தியைக் கண்கள் குளிரக்கண்டு தீர்க்கதண்டனாக நமஸ்கரித்து இவ்வாறு தோத்திரஞ்செய்வார்கள்.

### தேவேந்திராதி தேவர்கள் மகாவிஷ்ணுவைப்போற்றல்.

கவி.

உலகினையெல்லாம் படைத்தளித்தழித்து முண்டுமிழ்ந்தும்மளந்தாண்டும்
நிலையுடைவானாய் வாயுவாய்க்கனலாய் நீருடனிலனுமாயென்னில்
தொலைவிலாவுயிராய்ச் சுடர்களாய்த்தோன்றாச் சுருதியாய்ச்சிவனயனாகி
யலகிலாவிளையாட்டுடையாயகண்ட மாயினையாருனையறிவார்.

சகல புவனகர்த்தாவாகிய ஓ பரந்தாமனே! தாம்சர்வலோகங்களையும் உண்டாக்கி, இரக்ஷித்து, அழித்து, உண்டு, மீட்டும் வெளிகாட்டி அளக்கும்படியான அனந்தகல்யாணகுணமுடையவராய், வானாதி பஞ்சபூதங்களாய், உயிராய், சூரியசந்திரர்களாய், வேதமாய், திரிமூர்த்தியாய் அளவில்லாத லீலைகளைச் செய்யு மகாமாயச்சொரூபியாய் நிற்கும் உமதுமகிமையை யெம்மாற்சொல்லக்கூடுமோ யார்தானறிவார்கள்? உயிருமுடலும்; சொல்லும் பொருளும், எள்ளுக்கு ளெண்ணெயும், மலரும் மலருக்குள்மணமுமாய், சராசரங்களாய் நிறைந்தபலபொருள்களினுள்மேவி காரணகாரியமாய், கண்ணுங்கருத்துமாய் யாவராலுமறியப்படாத பரவெளியாய், பொன்னும், பொன்னாற்செய்த ஆபரணம் பலவாயும், கடலாயும், கடற்றிரையாயும், தரையாயும், தரையிலெழும் அணுவாகியும்; உன்னிடத்திற்றோன்றிய தேவர் மனுஷியாதி சகலவுயிர்களினும் தோன்றியும்தோன்றாமனு மிருப்பவராய் இருக்கின்றவுமது பெருமையை யாரறிவார்களென்று தோத்திரம்செய்தார்கள்.

### மகாவிஷ்ணுவானவர் யோகநித்திரைநீங்கி இந்திராதி தேவர்களைநோக்கி வந்தகாரியம்யாதென அவர்கள் கூறுதல்.

கவி.

என்பனசொல்லியிந்திரனேத்த மேத்தொலியிருசெவியெய்த
இன்பநித்திரையைவிட்டுணர்ந்தருளி யேழுலகுடையவனவரை
அன்புறநோக்கியிவ்வரும்வந்த காரணமென்னெனவதனில்
துன்பமதொழித்தாத்தொழுதகையினராய்ச் சுராதியரிவையிவைமொழிவார்.

இப்படி யென்றுசொல்லி முறையிட்ட தேவேந்திராதி தேவர்கள் முறையிட்டதைக்கேட்டு தனது யோகநித்திரையைவிட்டு அவர்களை அன்புடன் கடாக்ஷித்து, ஓ இந்திராதிதேவர்களே! நீங்கள் வந்தது யாதுகாரணமென்று கேட்க வதற்குத் தேவேந்திராதி தேவர்கள் சொல்ல வாரம்பித்தனர்.



பின்னும் பன்முறை பரந்தாமனைத் அத்தேவேந்திராதியர் தோத்திரஞ்செய்து, சுவாமி! தேவர்களுக்குச்சத்துருக்களாகிய அசுரரைக்கெடுத்து உலகங்களைக்காக்குமிரக்ஷக கர்த்தாவாகியதேவரீருடையபரிபூரணகிருபையிருக்கவும், முன்பு தபஸ்செய்து பிரமதேவனிடத்திற் பெற்றவரத்தினாலே எல்லார்களினும் மேலான பலபராக்கிரமங்களைப்பொருந்திய பொல்லாத துஷ்டகண்டகராகிய மாலியவான் — சுமாலி — மாலியென்று சொல்லப்பட்ட மூவர்கள் தங்களுடைய புத்திரர்களும், மித்திரர்களும், சுத்தவீரராயுள்ள சேனாபதிகள் முதலான அளவில்லாத வெகுகோடி ராக்ஷதசேனைகளுமாய்ப் பிரளயகாலத்திலே உலகத்தைமூடிய பெருவெள்ளம்போல எங்குமிராட்சத மயமாய்ப் பாதாளலோகத்தைப்பாழாக்கி, பூலோகத்தைப் பொடியாக்கி, சுவர்க்கலோகத்தைத் தூளாக்கி, எங்களையும் படாததுன்பங்கள்படுத்தியு கொடுமைகளை யின்னபடியென்று அளவிட்டுச் சொல்லவும்தொலையாதென்று முறையிட்டார்கள்.

### மகாவிஷ்ணுவானவர் தேவர்கள் முறையிட்டுக் கொண்டதற்கு அருள் வாக்குரைத்தல்.

கவி.

ஆங்கவரபயமென்றலுமஞ்ச லஞ்சலீரென்றுகையமைத்துத்
தீங்குடையரக்கர்குலத்தைவேரறுத்துச் சிந்தைநோய்தீர்க்குவென்றிண்ணம்
நீங்கள்போயுங்கணிலைகளினின்மி னெனவடநேமியோன்விடுப்ப
ஓங்கியவமரர்போயினரக்கர்க் குற்றனவொழிவின்றிமொழிவாம்.

இப்படியென்று தேவர்கள் முறையிட்டகாலத்தில் மகாவிஷ்ணுவானவர், ஓ தேவர்களே! நீங்களஞ்சவேண்டா மஞ்சவேண்டாமென்று கையமைத்துப் பொல்லாங்கு மிகுந்த இராட்சசகுலத்தை அடியோடுகளைந்து உங்கள் மனோசஞ்சலத்தை நிவர்த்திக்கிறேன் இது உண்மை! இனிநீங்க ளுங்களுடைய ஸ்தானத்தை யடைந்திருப்பீர்களென்று சொல்லினர். பிறகு தேவர்கள் சென்றபிறகு நடந்த விருத்தாந்தங்களை இனிச்சொல்லுவோம்.

தோத்திரப்படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

ஐந்தாவது,

## இலங்கையழித்தபடலம்.

இப்படலத்தில், தேவர்கள் திருப்பாற்கடலிற் சென்று மகாவிஷ்ணுவினிடத்தில் முறையிட்டதும், விஷ்ணுவானவர் அபயாஸ்தந்தந்து இராட்சசர்களைச் சங்கரிப்போமென்பதறிந்து அவர்களால் மாலியவானாதி மூவருங்கேள்விப்பட்டு தேவலோகத்தின்மேல் படையெடுத்துப் போனதும், அக்கால் விஷ்ணுவுக்கு இந்திரன் தெரிவித்ததும், விஷ்ணுவா

னவர் அவ்விராட்சசர்களின் முன்புகுந்து போர்செய்ததும், அப்போரில் மாலியிறந்ததும், மாலியவானும், சுமாலியும் மிகுந்தசேனைகளோடு பயந்து பாதாளலோகமடைந்ததும் ஸ்ரீராமமூர்த்திக்கு அகஸ்தியராற்சொல்லப்படுகின்றது.

## தேவர்கள் பாலசமுத்திரமடைந்து மகாவிஷ்ணுவினிடத்தில் முறையிட அவரருளிச்செய்ததைத் தூதுவர்களால் மாலியவானுதி மூவருமறிந்து தேவர்கள்மீது படையெடுத்தல்.

கவி.

இமையவரரக்கராலே யுற்றதம்மிடும்பையெல்லாம்
உமையொருபாகத்தானுக் கோதியேயுரைத்தவாறும்
நமையடைந்தவரைநாமே வெல்கைநன்றன்றுநாகத்
தமைத்துயிலரியாற்சென்மி னென்றவனறைந்தவாறும்

அந்தமந்திரத்தைநெஞ்சிற் கொண்டமராமரெல்லாம்
செந்திருமகள்கோனுக்குத் தேவர்கோன்செப்பவுங்கள்
சிந்தைநோய்தீர்ப்பென்றின்ன மென்றருள்செய்தவாறும்
வந்துசாரணர்தாங்கூற மாலியவானுட்கொண்டான்.

ஐயா ஜானகிராமரே! இந்தச்சங்கதி இப்படியிருக்க, தேவர்கள் முதலான எல்லோருங்கூடிக் கைலாசகிரியைச் சேர்ந்து பரமசிவனிடத்திலே தங்கள் குறைகளைச்சொல்லி முறையிட்டதும், அதற்குப் பரமசிவன் திருப்பாற்கடலுக்குப்போய் மகாவிஷ்ணுவினிடத்திலே சொல்லுவீர்களென்று அனுப்புவித்ததும், அப்படியே அவர்களெல்லோரும் திருப்பாற்கடலுக்கு வந்து மகாவிஷ்ணுவைக்கண்டு முறையிட்டதும், அதற்கு மகாவிஷ்ணுவானவர் அவர்களெல்லாரையும் பார்த்து உங்களுக்குத் துன்பங்கள்செய்யு மாலியவான் முதலான துஷ்டர்களையழித்து நீங்களெல்லோரும் ஒருபயமுமில்லாமற் சுகமாக வாழ்ந்திருக்கும்படிச் செய்கிறோமென்று உறுதியாகச் சொல்லியனுப்புவித்ததும், ஆகிய விவைகளையெல்லாம் உலகமெங்கும் சஞ்சரித்தாராய்ந்து இராசகாரிய சமாசாரங்களை விசாரிக்கும் சாரணர்கள் கேள்விப்பட்டு, உடனே சீக்கிரமாக லங்காபட்டணத்துக்குப்போய் அரக்கர்களாகிய தங்களுடைய ராஜாக்களுக்குச் சொன்னார்கள்.

அந்தச் சமாசாரங்கேட்ட அந்த மூவர்களும் துருத்தியினாலேயூத உலைமுகத்திலெரியு நெருப்புப்போல மனங்கொதித்துச் சீறி, மிகவுங்கொடுமையான கோபங்கொண்டு, இந்தக்ஷணமே சுவர்க்கலோகத்தைப் பாழாக்கித் தேவர்களென்று பேர்சொல்ல ஒருவருமில்லாதபடிக்குத் தேவர்களெல்லாரையுங் கொன்று சயங்கொண்டு மீண்டு வருவோமேயல்லாமல் நாங்கள் சும்மா வரமாட்டோமென்று சபதம்பண்ணிக்கொண் டெழுந்திருந்து போர்க்கோலங்கொண்டு, தாங்களும், தங்களுடைய புத்திரர்களும், சுத்தவீரராகிய படைத்தலைவர்களும், தேர்களேறி, இரத கஜ துரக பதாதியாகிய சதுரங்கசேனைகளும் பூமியாகாசமெங்கு மிருள் மூடப்பரந்து நெருங்கிச்சூழ்ந்துவரவும் சத்த



மேகங்களுங்கூடி யிடித்து முழங்குவதுபோலப் பதினெட்டு வாத்தியங்களு முழங்கவும் ஆரவாரித்து, அதிவேகத்துடனே சுவர்க்கலோகத்தை நாடிச்செல்லுவதானார்கள். அப்பொழுதில் பொல்லாத நிமித்தங்களாக மேகங்கள் இரத்தத்தையு மெலும்புகளையு மழையாகச்சொரிவதோடு மலைகளதிர்ந்து நடுங்கவுங் கண்டு, தங்களுக்கு அழிவுகாலஞ் சமீபமாக நேரிட்டிருப்பதால் அந்தத் துன்னிமித்தங்களைச் சற்று மெண்ணாமல் அகங்காரத்தையடைந்து மேற்சென்று நடந்தார்கள்.

அப்படிக்கு மிகவுங் கொடுமையான கோபத்துடனே மாலியவானுதிமூவரும் எட்டுத்திக்குகளுஞ் செவிடுபடச் சேனாசமுத்திரங்களோடு ஆரவாரித்து வருகிற வேகத்தைப்பார்த்த தேவர்களெல்லாருங் கருடனைக்கண்ட சர்ப்பங்கள்போலப் பயந்து, என்ன செய்வோம்? எங்கேபோவோம்? என்று புலம்பிப் பதகித்து ஒருவருக்கொருவர் சம்பந்தமில்லாமல் திக்குத்திக்காக ஒளிப்பிடந்தேடி யோடிப்போவாரும், ஓடமாட்டாமல் மனங்கலங்கிச் சுழன்றலைவாருமாகிப் பின்பவர்களெல்லோரு மொருங்குகூடி யொருதேவதூதனைக்கூவி, அப்பா குணவானே! நீயித் ததியிற் றயைசெய்து ஓரோட்டமாகவோடி இந்தச் செய்தியை நாராயணமூர்த்தியினிடத்திலே சொல்லுவாயென் றனுப்புவித்தார்கள்.

## இராட்சசப்படைகள் தேவலோகத்தில் வரக்கண்ட தேவேந்திரன் ஸ்ரீமகாவிஷ்ணுவுக்குத் தெரிவிக்க ஸ்ரீமகாவிஷ்ணுவானவர் கருடவாகனரூடராய்ப் போர்க்கோலங்கொண்டு யுத்தகளம்வருதல்.

கவி.

அரக்கராரம்பமெல்லா மமரர்கள்விரித்துத்தூதர்
உரைத்தலுமுறக்கநீங்கி யுணர்ந்தெழுந்தவணப்புள்ளின்
வரைத்தடந்தோளிலேறி வானவர்வாழ்த்தவந்தச்
செருக்கினர்படையைச்சென்று தாக்கினான்றிருவின்கேள்வன்.

அப்படியே அந்தத்தூதனுஞ் சுவர்க்கலோகத்தைவிட்டு வாயுவேகமனோவேகத்திலு மதிக வேகமாய்த் திருப்பாற்கடலை நோக்கி, ஓ! ஓ! நாராயணா! நாராயணா! ஓ! ஓ! முகுந்தா! முகுந்தா! ஓ! ஓ! மாதவா! மாதவா! ஓ! ஓ! புருஷோத்தமா! புருஷோத்தமா! ஓ! ஓ! உலோகரட்சகா! உலோகரட்சகா! என்று கூக்குரலாகக் கூப்பிட்டுக்கொண் டோடிச்சென்று முறையிட்டுச் சொன்னான். அப்படிக்கந்தத் தூதன் முறையிட்டசொல் காதிலே கேட்குமுன்னமே ஸ்ரீ நாராயணமூர்த்தியானவர் துணுக்குற்று, ஆதிசேஷசயனத்தைவிட் டெழுந்திருந்து, அதிசீக்கிரமாக மகாமேரு பர்வதத்தின்மேலே சமுத்திரசல பானம்பண்ணிச் சூல்கொண்டு கறுத்தமேகமானது மின்னல்கள் பளபளவென்று விட்டெறிப்ப ஒருபெரிய பச்சைவில்லுடனே பிரகாசித்து விளங்கினாற்போல சங்கம் — சக்கரம் — தண்டம் — கோதண்டம் — கட்கம் — ஆகிய பஞ்சாயுதங்களோடு ஆரம் — கேயூரம் — கிரீடம் — கடகாங்கதம் — குண்டலம் — இவைமுதலான திவ்விய மாணிக்க பூஷணங்களும் பிர

காசிக்கத் தக்கதாக அதிக பல பராக்கிரமம் பொருந்திய பக்ஷிராஜனை கருடபகவான் தோளின்மேலாரோகணித்து, அந்த ராக்ஷஸ சேனாசமுத்திரத்தின்மேலே மகாவேகத்துடனே பாய்ந்தார்.

அப்பொழுது கருடபகவான் மகாவுக்கிரகோபத்துடனே மூலைக்குமூலையெங்கும் பாய்ந்து மோதியடிக்கிறசிறகின்காற்றாகிய பிரசண்டமாருத வேகத்தினாலே, அந்த ராக்ஷஸசேனையிலே மலைகள்போலே நெருங்கியிருக்கிற தேர்களெல்லாந் தெறித்து முறியப்பட்டும், யானைக்கூட்டங்கள் சாய்ந்துவிழுந்துருளப்பட்டும், குதிரைத்திரள்கள் சிதையப்பட்டும், பதாதி வெள்ளமெல்லாம் பஞ்சாய்ப்பறக் தழியப்பட்டும், இப்படிக்குப் பலபலவிதமாகச்சின்னபின்னப்பட்டு அளவில்லாத சேனைகள் மடிந்தன.

அதைக்கண்ட சுமாலியானவன் மிகவுமுக்கிரமான கோபங்கொண்டு சிதைவுபட்டோடுஞ் சேனாசமுத்திரங்களை யொன்றாய்த்திரட்டி முன்னேவிச் செல்ல நெருக்கி நடத்தி, தானுந் தன்னுடைய தேரைக்கடுக முடுக்கிக் கிட்டி நின்றெதிர்த்து அட்டகாசம்பண்ணி, தனது வில்லைவளைத்து நாணேற்றிட்டு அநேகவிதமாயுள்ள பாணங்களைத் தொடுத்து மகாவிஷ்ணுவினுடைய சரீரமுழுது மறையும்படி சரவருஷமாகப் பொழிந்து குரூரமான யுத்தம் பண்ணினான்.

## போருக்கெழுந்த சுமாலி மகாவிஷ்ணுவின்பாணந்தைத்து மூர்ச்சையாய்ச்சாய மாலியென்பவன் யுத்தத்திற்கு வந்திறத்தல்.

கலி.

கோர்ந்தமரோடுதானவர்க ளோடவோட விசைக்கொடித்
தேரழிந்துதமயன்றளர்ந்துவினை செய்வதொன்றுமறியாதிடக்
காரழிந்திடவிடித்தடர்ந்துவரு காலனென்னவிடமென்னவும்
வாரழிந்ததிருமேனியானையுமாலிவந்திடை விலக்கினான்.

இப்படி அகோரமான யுத்தஞ்செய்யுங்காலத்தில் விஷ்ணுவானவர் செய்யுமுயுத்தத்திற்கு இராட்சசர்களாற்றார்களாய் முதுகுகாட்டியோட சுமாலியானவன் தானேறிவந்த இரதமுறிந்து மெய்செயலொன்றுந் தெரியாமல் திப்பிரமை கொண்டுவருந்தி பாணந்தைப்பதினால் மூர்ச்சித்து விழுந்தான். அந்தகாலையில் மேகமுந்தோற்க அதிர்த்துவருகின்ற இயமனென்னும்படி மாலியென்னுமிராட்சசவீரன் இராட்சசர்களோடு மகாவிஷ்ணுவின் முன்னம்வந்து அட்டகாசம்செய்து அநேகவிதமாயுள்ள ஆயுதங்களுடன் பாணங்களைப் பிரயோகித்து குரூரமானயுத்தம் பண்ணினான்.

அப்பொழுது மகாவிஷ்ணுவானவர் சிலசில பாணங்களைப்பிரயோகித்து, அவர்களால் விடப்பட்ட அஸ்திர சஸ்திரங்கள் யாவையுமறுத்துத் தள்ளி, அளவில்லாத சேனைகளையு மடியச்செய்தார். அப்படிச்செய்யும்போது கிரீடங்களுடனே தலைகளும், வாள்களுடனே தோள்களும், கவசங்களுடனே



மார்புகளும், வில்லுகளுடனே கைகளும், வீரகண்டாமணிகளுடனே கால்களும், அம்புகளுடனே விரல்களுமாக; இப்படி வேறுவேறாய்க் கண்டதுண்டப்பட்டு உருண்டு புரண்டு சிதைந்தழிந்து யுத்தகளமெங்கும் குடலுமூளையுமிரத்தமுங்கலந்து செஞ்சேறுபட்டது. அதைக்கண்ட மாலியானவன் மகாவுக்கிரகோபங்கொண்டு, அதிசீக்கிரமாக ஒருபலம்பொருந்திய வச்சிரதண்டத்தைக் கையிலே யெடுத்துக்கொண்டு தேரிலேநின்றும் பூமியிற்குதித்துப் பாய்ந்தோடிச்சென்று, அந்த மகாவிஷ்ணுவைத் தோளிலே தாங்கி யெதிர்த்துநின்ற கருடபகவானுடைய நவரத்தினகிரீடந் தகர்ந்து சிதறிவிழும்படி யோங்கியடித்தான். அப்படிக்கவனடித்தபடியினாலே கருடபகவான் சற்றே மயங்கிச் சோர்ந்தார்.

அதுகண்ட மகாவிஷ்ணுவானவர் அப்படியாவென்று புன்சிரிப்புகொண்டு, இனியிந்தத் துஷ்டனை க்ஷணப்பொழுது முயிருடனே வைக்கப்படாதென்றெண்ணித் தம்முடைய வலதுகையிலிருக்கும் சக்கரத்தைப் பிரயோகம்பண்ணினார். அந்தச் சக்கரமானது அடுத்துநின்ற மாலியினுடைய சிரசினையறுத்துத் தள்ளி, பின்னு மதிவேகத்துடனே யெதிர்ப்பட்ட சேனைகளெல்லாஞ் சாய்ந்துவிழும்படி யரிந்தடித்து, ஆகாசமார்க்கத்திலேசெல்லும்பன்னிரண்டு சூரியருடனே பதின்மூன்றாஞ் சூரியன்போலப் பிரகாசத்துடனே சுழன்றுகொண்டு திரிந்தது. அந்தச் சக்கரத்தினாலே தலையறுபட்டு மாலியாகிய விளையதம்பி இறந்ததையும், அவனிறப்பதற்கு முன்னமே மகாவிஷ்ணுவானவர் பிரயோகித்து விடப்பட்ட அக்கினிமயமான பாணங்களினாலே சரீரமெல்லாம் அலைபட்டு சுமாலியானவனிறந்தவன்போல மூர்ச்சையடைந்து கிடப்பதையும், போர்க்களத்திலே பார்த்தவிட மெங்கெங்கும் தன்னோடு வந்த பலவிதச் சேனைகளெல்லாம் சில குறைந்தலைக் கவந்தங்களாய்நின்று கூத்தாடுவதையும், பல சின்னபின்னப்பட்டுப் பிணக்குவியல்களாய் மடிந்தழிந்து கிடப்பதையும், சிரேஷ்டனை மாலியவான்பார்த்து மிகவும் துக்கப்பட்டு மகாவிஷ்ணுவினுடைய ரவுத்திராகாரத்தைக் கண்டு எதிர்நிற்கமாட்டாமற் பயந்தோடுகிறான். அப்பொழுதில் அவனோடுகிறதைக்கண்ட அவனுடைய சேனைகளும் கலைந்து பின்னேதொடர்ந்தோட, அதைக்கண்ட மகாவிஷ்ணுவானவர் சத்துருசேஷம் வைக்கப்படாதென்றெண்ணிப் புறங்கொடுத்தோடுகிற மாலியவானைக் கொல்ல மகாவுக்கிரத்துடனே நின்றார். அப்படி நிற்கும்பொழுது முன்பு போர்க்களத்திலே, அஸ்திரசஸ்திரங்களினாலே மடிபட்டு மூர்ச்சையடைந்து கிடந்த சுமாலியானவன் அந்த மூர்ச்சைதெளிந் தெழுந்து, தன்னுடைய தம்பியிறந்து கிடப்பதையும் - அளவில்லாத சேனைகளெல்லாம் பாழாய்மடிந்து கிடப்பதையும் - தமையனாகிய மாலியவானு மவன்சேனையும் பயந்தோடுவதையுங் கண்டு, நமக்கிப்படிப்பட்ட கதியும் வருமோவென்று மிகவு மனங்கொதித்துக் கொடுமையான கோபங்கொண்டு, மகாவிஷ்ணுவுக்கெதிரே யதிசீக்கிரமாகவோடி யடுத்துநின்று, இடிபோலமுழங்கி அட்டகாசம்பண்ணி அவரைப்பார்த்து இதனைச்சொல்லுகிறான்.

ஓ விஷ்ணுவே! உலகத்திலே துஷ்டநிக்கிரகம் சிஷ்டபரிபாலனமுதலான காரியங்களிலே மனுநீதிதப்பாமற் செங்கோற்செலுத்தி அரசாளப்பட்டராசாக்கள் யுத்தகளத்திலே போர்செய்யக்குறித்து வாராதவர்களையும், எதிர்த்துப் போர்செய்ய மாட்டாதவர்களையும், போர்செய்யத் திறமில்லாமல் முதுகுகொடுத்தோடுமவர்களையும், யுத்தத்திலே யெதிர்த்தபொழுது பயப்பட்டுக்கைகால் நடுங்கிச்சோர்ந்து விழுமவர்களையும், போர்செய்வதைவிட்டொழிந்து நிற்குமவர்களையும், நிராயுதராய் நிற்பவர்களையும், உனக்கு நானடைக்கலமென்று நயம்பேசி வேண்டிக் கொள்ளுமவர்களையும், சரீரதிட மில்லாதவர்களையும், வியாதியினாலே மெலிந்திருப்பவர்களையும், சுற்றத்தாரையும், பேடியர்களையும், ஸ்திரீசாதிகளையும், கொலைசெய்ய நினைத்து அவர்கள்மே லாயுதமெடுப்பது சத்துவீரனுக்குத் தருமமல்லவென்று அநேக தருமசாஸ்திரங்களிலே சொல்லியிருக்கின்றன. நீயந்த ராசதர்மத்தைச் சற்றுமெண்ணாமல், இளங்கன்று பயமறியா தென்பதுபோலச் சிறுபிள்ளைப்புத்தியா லுபாயந்தெரியாமல் அபாயமாய்ச் சேனைகளையெல்லா மடியக்கொடுத்துத் தானு மிறந்துபோய்விட்ட என்னுடைய தம்பி மாலியென்பவனை வெற்றிகொண்டோமென்றும், நானிருக்கிறது தெரியாமலென்னைத்தேடிக்கொண்டுபோகிற வென்னுடைய தமையன் மாலியவானை யுத்தம்பண்ண மாட்டாமற் பயந்தோடிப் போகிறானென்றுமெண்ணி, அவனைப் பின்றொடர்ந்து கொல்லப் போகிறவன்போல் நீ நிற்கிற கோலத்தைப்பார்த்தா லெனக்கே மிகவும் வெட்கமாயிருக்கின்றது.

ஆகையா லிப்பொழுது எதிர்த்துநிற்கிற வென்னுடனே யுனக்கு யுத்தம்பண்ணத் திறமுண்டானால் யுத்தம்பண்ணுவென்று போருக்கழைத்து மகாவுக்கிரத்துடனே சுப்பிரமண்ணிய சுவாமியினுடைய வேலாயுதத்துக்குச் சமமான பலம்பொருந்திய ஒரு வேலாயுதத்தைக் கையிலேயெடுத்துக் குலுக்கி, வலமாகச் சுழற்றித்திருப்பி, பின்வாங்கி முன்பாய்ந்தோடிநின்று, மகாவிஷ்ணுவினுடைய மார்பு பிளந்துருவியோடும்படியாக வுரங்கொண்டோங்கி யெறிந்தான். அப்படிக் கவனெறிந்த வேலானது மகாவிஷ்ணுவினுடைய மார்பு பிளக்கும்படிப்பாய்ந்தது. அப்பொழுது மகாவிஷ்ணுவானவர் தம்முடைய மார்பிலே பாய்ந்திருக்கிற அந்தவேலைத் தானேபிடுங்கி, அதிக வேகமாக அந்தச் சுமாலியினுடைய மார்பு தட்டுருவி யோடும்படிக்கு விசைகொண்டெறிந்தார். அந்தவேலானது வாழைப்பழத்திலே பாய்ச்சப்பட்ட ஊசியானதெப்படி தடையற்றோடுமோ? அப்படிபோல அந்தச்சுமாலியினுடைய மார்பைப் பிளந்துருவிப் புறப்பட்டுப் பின்னு மனேகமான ராக்ஷதக்கூட்டங்கள் சாய்ந்துவிழும்படி துளைத்துருவி அப்பாலு மோடுகிறது. அப்படியோடுகிற வேகத்தை அந்தச் சுமாலியானவன் கண்டு, முன்பு தனக்குப் பரமசிவன்கொடுத்த வொரு சூலத்தைக் கையிலேயெடுத்து, முன்பந்தவேலையெப்படி யெறிந்தானோ? அப்படியே யெறிந்தான்.



அந்தச் சூலமானது மகாவிஷ்ணுவினுடைய மார்பிலேபட்டு, சுவரிலெறிந்த பந்துபோல உதைந்துதெரித்து விழுந்தது. அதைக்கண்ட சுமாலியானவன் சற்று நிதானித்து, ஓ ஓ!! நம்முடைய தவமும் - பலமும் - நன்றாயிருந்தது: நன்றாயிருந்தது: என்றுநகைத்து ஆச்சரியப்பட்டு மனங்கலங்கி, இப்படிக்கெல்லா நமக்கொன்று முதவாமல் அபசயமாக வருகிறபடியினாலே இந்தப் பொல்லாதகாலத்திலே தாமமானத்தை மேற்கொண்டு கோபத்தினாலேயின்னமும் யுத்தம்பண்ணிப் பிராணனைப் போக்கிக்கொள்ளுகிறது யோக்கியமல்லவென்று வருந்தினான்.

### மாலியவானும் சுமாலியும் மகாவிஷ்ணுவின் போருக்காற்றாது தோற்று பாதாளம் புகுந்தொளித்தல்.

கவி.

பாழிப்புயத்தரக்கன் பழியொடுதம்பியுந்தானும்
அழித்துயினெடுமால்படை யைந்தாலுமக்கருளன்
ஊழிப்பெருங்காற்றாலு மிவ்வுலகிற்பிழைப்பரிதென்
றேழிற்பெரும்பாதாளம தடைந்தாரிகலிடைந்தார்.

அக்காலத்தில் பலம்பெற்ற புயத்தையுடைய மாலியவான், மாலியிறந்த பழியைமேற்கொண்டு, சுமாலியோடுதானும், பாற்சமுத்திரத்திற்றுயிலு மகாவிஷ்ணுவினது பஞ்சாயுதங்களாலுங் கருடபகவான் சிறையினின்றெழு மூழிக்காற்றாலும், இவ்வுலகிற் பிழைப்பதரிதென்று இந்தவேளை யுயிர்பிழைத்துத் தப்பியிருந்தோமாகி லினிமே லெப்போதாகிலும் நல்லகாலம் வந்துநேரிட்டசமயத்தில் அந்தக் காலபலத்தினாலே சத்துருக்களைக் கொன்று பழியும்வாங்கி வெற்றிகொண்டு இராசரீகஞ்செய் திருக்கலாம். என்று ஆலோசனை பண்ணினவனாய் அப்பொழுதே யவ்விடத்தினின்று நீங்கி, யுத்தத்திலேமடிந்த சேனைகள்போகமிகுந்துள்ளசேனைகளோடுதிரும்பிப்பாராமலோட்டமாகவோடிச்சென்று இலங்காபட்டணத்திலே புகுந்து, அவ்விடத்திலிருந்த தங்களுடைய ஸ்திரீஜனங்கள் - புத்திரர் . மித்திரர் - முதலானவர்களையுங் கூடவழைத்துக்கொண்டு, எங்கே போவோமென்றொளிப்பிடந்தேடி யொருவருக்குந் தெரியாமலிருள்பட்டிருக்கும் பாதாளலோகத்திலே மறைந்திருந்தான். இலங்காபுரியில் ஒருராட்சசருமில்லாமல் நிர்ஜீவபட்டணமாய்ப் பொலிவிழந்தது.

இலங்கையழித்தபடலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

ஆறவது,

# இராவணன்பிறப்புப்படலம்.

*இப்படலத்தில் அகஸ்தியர் இராமமூர்த்திக்கு இலங்காபுரிக்கண்ணுள்ளத்தை ராசாட்சியைக் குபேரன் கைக்கொண் டனுபவிக்கும் வைபவத்தைக்கண்டு பொறாமைகொண்ட மாலியவானுடைய சூழ்ச்சியின்படி சுமாலியின் வேண்டுகோளால் அவன் குமாரத்தியாகிய கைகசி விச்சிரவாவைக்கூடி இராவணன் - கும்பகருணன் - சூர்ப்பநகி — விபீஷணன் இவர்களைப் பெறுதலும், இவருளாண்பாலார் மூவரும் பிரமனைநோக்கித் தவஞ்செய்து பலவரம்பெறுதலும், அக்கால் மாலியவானுதியர் சூழ்ச்சியால் இராவணன் இலங்கைக் கரசனாயிருந்த குபேரனையோட்டித் தா னரசேற்றிருத்தலும், பின்பவன் தன் தங்கைக்கும் தனக்கும் தம்பியரிருவருக்கு மணவினை முடித்துப் புத்திரபாக்கியம் பெறுதலும் கும்பகருணன் நித்திரைபெற்றிருத்தலும் சொல்லப்படுகின்றது.*

## பாதாளம்புகுந்த மாலியவான் சுமாலியென்னு மிருவரும் யோசித்துச் சுமாலி தன்புத்திரியை யழைத்துக்கொண்டு பூலோகம் வருதலாதிய சவிஸ்தாரங்களை ஸ்ரீராமபிரானுக்கு அகஸ்தியமாமுனிவர் கூறுதல்.

கவி.

*வேலையுண்டமாமுனிவன் விரித்துவிளம்புக்கதைகேட்டுக்*
*கோலமணிநீண்முடிதுளக்கிக் கொண்டல்வண்ணன்வியப்பெய்தி*
*ஆலமனையவிராவணன்ற னவதாரமுமாக்கவன்செயலும்*
*சாலவிருப்புற்றனன்கேட்கச் சாற்றுகென்னமுனிசாற்றும்.*

சமுத்திர பானம்பண்ணிய அகஸ்தியர் இராட்சசர்களின் பூர்வசரித்திரங்களை விரித்துரைக்கக்கேட்டஇராமபிரான், தனது கிரீடமணிந்த சிரத்தை யசைத்து ஆச்சரியப்பட்டு அப்படியா! நன்றாயிருக்கிறது: நன்றாயிருக்கிறது. இதுநிற்க. இக்காலம் எனதுபாணங்களினுலிறந்தஇராவணுதியர்களின்உற்பத்தியும் அவர்களின் செயலும்கேட்க மிகவும் அவாவுற்றிருக்கிறேன் ஆதலால் அதைச்சொல்லுமென்று கேட்க அகஸ்தியர் சொல்லுகிறார். கேளுமையா இராகவரே! மாலியவாநுதி இராட்சசர்கள் பாதாளம்புகுந்து ஒளித்துக்கொண்ட பிறகு சிலகாலம்கழிந்துதான் முற்கூறிய குபேரனிலங்கையி லரசுபுரிந்ததென்றறிவீர். அப்படி அவனரசு புரியுங்காலையில் ஓர்நாள் பாதாளலோகத்திலே யிருட்சிறைக்கூடத்தி லடைபட் டிருப்பவர்கள்போல அநேககாலந் துன்பப்பட்டுக்கொண் டிருக்கு மாலியவான் - சுமாலி என்னுமிருவருங்கூடி, நாமெத்தனைகால மிப்படி யிந்தத்துன்பத்தி லழுந்திக்கொண்டு கிடப்போ



மென்றாலோசித்தார்கள். அப்பொழுது மாலியவானுனவன் சுமாலியைநோக்கி கேளாய் தம்பி! இப்பொழுதிருக்கிற ஏதுக்களைப் பார்த்தாலிந்தத்துன்பங்களை நீக்கிக் கொள்ளுவதற்கு நம்மாலுமாகாது. நம்முடைய புத்திரர்களும் அதிஷ்டவீனர்கள். அப்படி யிருந்தாலு நீபெற்றகன்னிகைகளிருவரில் மூத்த பெண்ணுனவள் பிரமதேவனுக்குச் சமானமான மகிமைபொருந்திய வொரு மகாபுருஷனுக்கு ஸ்திரீயாவதற்கும், இந்த மூன்றுலோகத்துக்கும் இராசாக்களா யிருக்கத்தக்க புத்திரர்க்குத் தாயாவதற்கும் ஏதுக்களையுள்ள உத்தம லட்சணங்களைப் பொருந்தி யிருக்கிறுள். ஆனதால் அந்தப் பெண்ணினுலே நாமுஞ் சுகப்படலாம். நம்முடைய குலமும் விர்த்தியாகும். இனிநாம் அதற்கான முயற்சியில் முயல்வதே உத்தமமென்று சொன்னுன்.

இப்படி தமையன்சொல்லிய வசனத்தைச் சுமாலி உண்மையாகக்கொண்டு, அந்தயோசனை முடியும்படிக்கேற்ற வுபாயத்தைத் தேடினவனுகித்தனுடைய புத்திரியாகிய கைகசியை யழைத்துக்கொண்டு பாதாளலோகத்தை விட்டுப் பூலோகத்திலே சஞ்சரித்து வருகிறுன். அப்பொழுது லங்காபட்டணத்திலே ராசீகஞ் செய்துகொண்டிருக்குங் குபேரனுனவன் யட்சகந்தர்வ சித்த வித்தியாதரர் முதலான தேவர்களுடனே புஷ்பக விமானத்தின்மேலேறி, அநேக சம்பிரமத்துடனே பரமசிவனைத் தரிசனம்பண்ணக் கயிலாசகிரியை நாடிப் போகிறுன். அப்படிப் போம்பொழுதில் அவனைச் சுமாலியானவன்கண்டு மனங்கொதித்தனன்.

## பூலோகம்வந்த சுமாலியானவன் குபேரனைக்கண்டு பொறாமைகொண்டு கைகசியை விச்சிரவா முனிவரிடத்திற் புத்திரபாக்கியம்பெற வனுப்புதல்.

கவி.,

*வலியோரெல்லாங்கீழ்ப்பட்டு மற்றையவரேமேற்பட்டுப்*
*புலிவாழிடத்தேபசுவுறைந்து போராராழித்தேராராய்*
*அலியாமிவனேயாளுகியஞ்சாதிலங்கையுட்புகுந்து*
*நலிவாரின்றியரசாளக் கண்டோமாயுமனுனிலே.*

மிகுந்த பலமுடையோ ரெல்லாங் கீழ்ப்பட்டு பலவீனர்களெல்லா மகாரதர்களைப்போல மேற்பட்டு புலிவாழ்ந்தவிடத்துக் அப்புலிக்கஞ்சும்படியான பசுவானது அரசபுரிவதுபோல, அலிக்குச் சமானமாகியவிவன் ஆண்டகைமைக் குணமுடையவனுகி நாமரசபுரிந்த இலங்கையுட்புகுந்து தன்னை வருத்துவோரின்றி யாதொன்றுக்கு மஞ்சாது அரசபுரியக்கண்டோமல்லவா? ராரயணுலே: ஆஆ!! நன்றாயிருக்கிறது! நன்றாயிருக்கிறதென்றுபொறாமைகொண்டு, தன்புத்திரியைப் பார்த்து, அம்மா! இந்தக்குபேரனுக்கிப்படியான செல்வமுதலானவைகளெல்லா முண்டாயிருப்பது, இவனைப்பெற்ற பிதாவாகிய விச்சிரவாவென்பவருடைய தபோமகிமையே யல்லாது வேறில்லை. ஆன

தால், நீயுமந்த விச்சிரவாவென்பவ ரிருக்குமிடத்துக்குப் போய் அவருனைக்கூடும்படிக்குபாயஞ்செய்து புத்திரரைப்பெறுவாயாகில் அப்புத்திரராலே நமக்குப் பகைவராயுள்ள இந்தக்குபேரன் முதலான தேவர்களையெல்லாம்வென்று நாமுநம்முடையவம்சத்தாரெல்லோரு மொருகுறைவுமில்லாம லிலங்காபுரியிலே வாழ்ந்திருக்கலா மென்று சொன்னான். அதுகேட்டகைகசி அப்படியே செய்கிறேனென்று அவ்விடத்தினின்று நீங்கி அந்த விச்சிரவாமுனிவனிருக்கும் ஆசிரமத்திற்குட் புகுந்து அவரை மயக்கி நின்றாள்.

## விச்சிரவாமுனிவர் தம்மிடம்வந்த கைகசியைநோக்கி மயங்கி அவளுடன் சம்பாஷித்தல்.

கவி.

அன்னவவளையருமறையோ னருகிறேனக்கியார்மகனீ
என்னகருமப்போந்தாயே னென்னென்றுரைப்பச்சுமாலிதரு
கன்னிபெயர்கைகசிவந்த கருமந்தனக்கொன்னென்ன
மின்னினிடைதன்கருத்தறிந்து வேதமுனிவன்விளம்புவான்.

அவளைக்கண்ட விச்சிரவாவானவர் மிகவுங் காமவிகார மேற்கொண்டவராகி, மனங்கலங்கி மயங்கிச் சகிக்கமாட்டாதவராய் அவளைப்பார்த்து, பெண்ணே ! இந்தவனத்திலே யிப்படித் தனியாகவந்து நிற்கின்ற நீ யாருடையமகள் ? உன்னுடைய பெயரென்ன? இங்கேவந்தகாரண மென்னவென்று கேட்டார். அதற்குக் கைகசியானவ ளவரைப்பார்த்து, சுவாமி ! நான் அசுரேந்திரனாகியமாலியவான் தம்பியாகிய சுமாலியினுடையபுத்திரி. என்பெயர் கைகசி. நானினைத்துவந்த காரியந் தேவரீர் திருவுள்ளத்துக்கே தெரிந்திருக்கு மென்று அமிர்தரச மொழுக கிளங்கிளி பேசினாற்போல் நயமாகச் சொல்லக்கேட்ட விச்சிரவாவானவர் பின்னு மதிக மோகங்கொண்டவராய் மிகவு மாச்சரியப்பட்டு, பெண்ணே ! நீ புத்திரார்த்தமாக நம்மைக்குறித்து வந்தாய் வந்தவேளை யசுரசந்தியான மாலைப்பொழுதாகையால், இப்பொழுது நம்மோடேகூடிப் பெறுகின்ற புத்திரர்கள் மிகவுங் கொடிய துஷ்டர்களாய்ப் பிறப்பார்களென்று சொல்லவும் அதற்குக் கைகசியானவள், சுவாமி! உம்முடைய கிருபையினாலே உம்மைக் கூடிப்பெறுகிற புத்திரர்களும் உம்மைப்போலவேயிருக்கவேண்டுமல்லாமல், பொல்லாத புத்திரராகப் பிறக்கலாமோவென்று மிகவுமுபசரித்துச் சொல்லினாள்; இப்படி கைகசிகூறிய வார்த்தையைக் கேட்டவிச்சிரவாவானவர் சந்தோஷப்பட்டு, எல்லாருக்கு மிளையவனாகப் பிறக்கிறவன் சற்புத்திரனாகப் பிறப்பானென் றநுக்கிரகஞ் செய்து அப்பொழுதே யவளுடன்கூடி யநுபவித்தார்.

## விச்சிரவாவுக்கும் கைகசிக்கும், இராவணன் — கும்பகருணன் - சூர்ப்பநகி இவர்கள் பிறத்தல்.

கவி.

இத்தகுவங்கனுரைத்தமுனி யிலகுடபாற்றிசைவீழும்
அத்தப்பொழுதிலாங்கவளை யன்பாலணைவிக்கப்படியணையப்



பத்துத்தலையும்பத்திரட்டி தோளுமாசப்பாரொடுக்கும்
சத்திக்கிரியின்றசக்கிரீவன் றுஞ்வந்துதித்தான்றரைநடுங்க.

நறையார்குழலாடன்வயிற்றின் ஞாலமடக்கவிழுங்கிடினும்
நிறையாவயிற்றினொடுவரைபோ னீண்டவுருவனிமிர்கையன்
பிறையாரெயிற்றுப்பிலவாயன் பெருத்தவிழியனெருக்காலும்
குறையாதெழுகேம்பசியினொடு கும்பகருணன்பிறந்தனனால்.

பண்ணார்மொழியாளவள்வயிற்றிற் பருத்தவிடையும்பருங்கழுத்தும்
விண்ணார்மேகத்திடியென்ன வெடித்தகுரலுமுடையாளாய்க்
கண்ணார்கனலும்புகையுமெழக் கனன்றுகாலன்கருக்குலையப்
பெண்ணாய்ப்பிறந்தாளொன்றுவந்து பிறந்தாள்பெரியசூர்ப்பநகை.

அப்படிக்கநுபவிக்கிற சமயத்திலே கர்ப்பமுண்டாகி, உடனே பத்துத்தலைகளு மிருபதுகைகளு முடையவனாய் அதிகபல பராக்கிரம உக்கிரத்துடனே உலகநடுங்கும்படித் தசக்கிரீவன் பிறந்தான். பின்னு மப்படியே யநுபவிக்கும்பொழுது, முன்போலவே கர்ப்பமுண்டாகி இருண்ட நீலகிரிபோலச் சரீரமும், உயர்ந்தகையும் கொழுந்துவிட்டெரியு நெருப்புப்போற் சிகையும், அர்த்தசந்திரனைப்போலவிளங்கும் வக்கிரதந்தங்களும், பெரியகண்களுமுடையவனாய் வடவைக்கனல்போல் மாறுதெரியுங் கொடுமையான பசியுடனே கும்பகர்னன் பிறந்தான். அதன்பின்பு பெருத்தமூக்கும், பெருத்த உதடும், பெருத்தகழுத்தும், பெருத்தமுலையும், பெருத்தவிடையும், பெருத்தகாலும், பெருத்தகையும், கடித்தபல்லும், வெடித்தகுரலும், தாறுதலையும், சிறுமுகமு முடையவளாய் கூற்றுவனே பெண்ணுருவங் கொண்டதுபோல மிகவும் பொல்லாத பாவியாகிய சூர்ப்பநகை பிறந்தாள். இப்படிக்கு மூவரும் பிறக்கத்தக்கதாகப் புணர்ந்து கலவியிளைப்பாறி, பின்னு மனமகிழ்ந்து அவ்விருவருங்கூடிப் புணர்ந்தார்கள்.

## விபீஷணர்பிறத்தல்.

கவி.

மன்னுதவத்துப்புலத்தியன்றன் மரபுவிளங்கமறைவிளங்கத்
தன்னேரில்லாத்தந்தைக்குத் தக்கமகவாய்ச்சண்டாளர்
அன்னோர்முன்னோரவதரித்த வந்தவயிறுகந்தமுற
மின்னேரிடையாடன்வயிற்றில் விளங்குபுகழ்வீடணன்பிறந்தான்.

நிலைபெற்ற தவத்தையுடைய புலத்தியப் பிரமரிஷியின் வமிசம்விளங்க நான்குவேதம்விளங்க, தாய்க்குந் தந்தைக்குமேற்ற குமாரராய் சண்டாளர்களாகிய முன்னோர்கள் பிறந்த வயிறுகந்தமுற, மின்னலையொத்த இடையையுடைய கைகசியினுடைய வயிற்றின்கண்; மிகுந்துபிரகாசிக்கின்ற கீர்த்தியையுடைய விபீஷணர் பிறந்தார். பிறகு தசக்கிரீவன்—கும்பகர்னன் - விபீஷணன் — ஆகிய மூவரும் பிதாவினிடத்திலேதானே சகல வேதசாஸ்திரங்களுமோதியுணர்ந்து, தனுர்வேதவித்தையும் அப்பியாசம்பண்ணி, எல்லாவித்தையிலும் வல்லவர்களாய் மேலான பராக்கிரமத்தைப் பொருந்தி யிருந்தார்கள்.

அம்மூவருள் முதலிருவர் மதோன்மத்தராய் அகங்காரங்கொண்டு, அந்தப் பிறதேசத்திலுள்ள கிரிவனங்களிலே ஆச்சிரமவாசிகளான தபோதனர்களெல்லோருக்கு முபத்திரவஞ் செய்துகொண்டு கொடியவிஷம்போல வளராநின்றார்கள்.

அந்தத் துஷ்டர்களுக் கிளையோனாகிய விபீஷணனானவன் தன்னுடைய குருவாகிய பிதாவுக்கு மனமகிழும்படியான ஏவற்பணிவிடை செய்துகொண்டு, அவருடைய வனுக்கிரகத்தினாலே சகல வேதசாஸ்திர சம்பன்னனாகி, இயாவருஞ் சந்தோஷப் படத்தக்க யோக்கியனாக விருந்தனன். பாபியாகிய சூர்ப்பநகை யென்பவளோ ? அடங்காத காமவிகாரத்தை யுடையவளாகி, தான் சஞ்சாரமாகத் திரியுமிடங்க ளெங்கெங்கு மெதிர்ப்பட்ட ரிஷிகள்முதலான யாவரையும் வலிதிற்பற்றி யிழுத்து, அவர்கள் வருந்தி நடுங்கும்படியாகத் துன்பப்படுத்திப் புணர்ந்து இன்பமநுபவித்துக்கொண்டு திரிந்தனள். இப்படியிவள் திரிந்துகொண்டிருக்க, அந்தத் தசக்கிரீவன் முதலான மூவரும் அந்தவனத்திலேதானே சஞ்சரித்துக்கொண் டிருந்தார்கள்.

அப்பொழுது அவர்களைப்பெற்ற தாயாகிய கைகசியானவள்முன்னமே யொருநாள் தன்னுடைய பிதாவாகிய சுமாலியென்பவன் குபேரனைக் கண்டபொழுது மாச்சரியப்பட்டு நீ யிவன்பிதாவாகிய விச்சிரவாவைச் சேர்ந்து புத்திரரைப் பெற்று அந்தப் புத்திரராலே நமக்குத் துன்பத்தைவிளைவிக்கும் பகைவராகிய தேவர்களைக்கெடுத்து இந்தக் குபேரனையுந் துரத்தி நம்முடைய வரசாட்சிக்குக் காணியாகிய இலங்காபட்டணத்திலே நாமெல்லோரும் வாழ்ந்திருக்கும்படிச் செய்வாயென்று போதித்த மனக்குறை திரும்படிக்குக் காலம்பார்த் திருக்குமளவில், அந்தத் தசக்கிரீவன் முதலான மூவருந்தங்களுடைய பிதாவிருக்கு மாச்சிரமத்துக்குவந்து அவரைக்கண்டு வணங்கித் தரிசனஞ் செய்துகொண் டவ்விடத்தே வாசமாக விருந்தார்கள்.

அப்பொழுது கைகசியானவள் தன்னுடைய புத்திரராகிய தசக்கிரீவன் முதலான மூவரையும் பார்த்து, ஓ என்னருமைச் செல்வர்களே ! இலங்காபுரியையாண்ட உங்கள் பாட்டன்மார்கள் மகாவிஷ்ணுவினால் போரில் தோற்று பாதாளம் புகுந்துவருந்த உன்தாயாதியாகிய குபேரன் புட்பகவிமானத்தோடும் இலங்காபுரியை யாள்கின்றான். நீங்கள் வருந்தி வனவாசஞ்செய்யவாயிற்றே என்று வருத்தப்பட்டாள்.

## இராவணாதியர் மூவரும் வனஞ்சென்று பிரமனைநோக்கித் தவம்புரிந்து வரம்பெறுதல்.

கவி.

என்றுதாய்சொன்னவைகூற வெயிற்றினுவெயிதழுதங்கி
ஒன்றுதவத்தாலிவனேடே யொத்தன்மிகுத்துச்செய்வினைக்
கன்றுமனத்தாய்சொன்னத்தேற்றிக் கறுவுமனத்தரினொடுபோய்
குன்றுபுரைதிண்புயத்தரக்கன் கொன்றைவனத்தைக்குறுகினான்.





குபேரன் இராவணன்வசமிலங்கையையொப்பிவித்துதான்புஷ்பகமேறிபோதல்.



உத்தரகாண்டம். இராவணாதியரிலங்கைபுகுபடலம்.

இப்படியென்றுசொல்லி தாயானவள்வருந்த இராவணனாகிய தசக்கிரீவன், உதட்டைக்கடித்து அம்மாதாயே! நீவருந்தாதே என்தாயாதியாகியகுபேரனைப்போல் நாங்களுந்தவஞ்செய்துவேண்டியவரத்தைப்பெற்றுஅவ்விலங்கையை யாள்கின்றோமென்று தாயாரைத்தேற்றித்தம்பிமார்களுடன் கொன்றைவனத்தையடைந்து தவஞ்செய்யத் தொடங்கினார்கள். அவர்களிற் கும்பகர்ணனானவன் பிர்மதேவனைநோக்கி வேனிற்காலத்தில் பஞ்சாக்கினி மத்தியிலே யிருந்தும், வருஷகாலத்தில் மழையிலேநனைந்தும், பனிக்காலத்தில் சலத்தின் மூழ்கிக்கிடந்தும், ஆகாரநித்திரை யில்லாம லிப்படிக் குறுதியாகப் பதினாயிரவருஷம் தபசு செய்தான். அவனுக் கிளையவனாகிய விபீஷணன் ஊசியைநிறுத்தி, அதின்மேலே தன்னுடைய வொருகாற் பெருவிரலையூன்றி மற்றொருகாலை மடித்துக்கொண் டுண்ணாது நின்றபடியா யிரண்டுகைகளையு நீட்டிக் குவித்து, கண்களிமையாற் சூரியனைப் பார்த்துக்கொண் டிப்படி ஐயாயிர வருஷமும்; மடித்தகாலை நீட்டியூன்றி நின்றும், ஊன்றியகாலை மடித்துக்கொண்டும், இப்படி யையாயிர வருஷமுமாக பதினாயிரம் வருஷ மொருவராலுஞ் சாதிக்கப்படாத வரியதவத்தைச் செய்தான்.

இப்பா லவ்விருவருக்கு மூத்தோனாகிய தசக்கிரீவனானவன் விதிப்படி யாகசாலைநிர்மித்து, அதனடுவிலே ஓமகுண்டஞ்செய்து, அந்தக் குண்டத்துக்குள்ளே யாகசமித்துக்களை நிறைத்து அக்கினியைமூட்டி வளர்த்து, அந்த வக்கினியிலே ஆயிரம் வருஷத்துக்கோவ்வொரு சிரசாக வொன்பதினாயிரம் வருஷத்தி லொன்பதுசிரசுகளையரிந் தாகுதிகொடுத்து, பதினாயிரம் வருஷத்தில் மிகுந்து நின்ற பத்தாஞ்சிரசையு மாகுதியாகக் கொடுக்கத்துணிந்து அந்தச் சிரசினை உடைவாளினா லரிகிறான். அப்பொழுதி லவன்செய்யுங் கொடுந்தொழிலுக் காச்சரியப்பட்ட பிரம்மதேவனானவர் அந்தக்ஷணமே அவனுக்குப் பிரத்தியக்ஷமாகி, உனக்குவேண்டிய வரங்களைக் கேள் தருகிறோமென்று சொல்லினர். அதற்குத் தசக்கிரீவன் பிரம்மதேவரைநோக்கி, ஓ பாரதிகொழுநரே! நான்மனுஷரையொருபொருட்டாயெண்ணவில்லைதேவர்களிராக்ஷதர்கள் முதலாயுள்ள யாவருமென்னுடைய வாக்கினைப்பிரகார மேவல்கேட்டு நடக்கும்படிக் கெல்லாவல்லமையு முண்டாக வேண்டுமென்று கேட்டான். அதற்கவ ரப்படியே கொடுத்தோமென் றனுக்கிரகஞ்செய்து, பின்பு விபீஷணனுக்குப் பிரசன்னராகி, இப்படி யுன்னைப்போல மிகவு மருமையான தவத்தினைத் தவறாமற்செய்து முடித்தோ ரொருவருமில்லை. ஆதலால் உனக்குவேண்டிய வரங்களைக் கேட்பாயென்று கூறினர்.

அதற்கு விபீஷணன் பிரம்மதேவரை நோக்கி, சுவாமி! சகல பிராணிகளுந் துன்பமுற்று நடுங்கும்படிக்கு அதருமமார்க்கத்தினாலே செய்யப்பட்ட பாபகிருத்தியங்க ளொன்றுஞ் செய்யப்படாம லிருக்கவும், மேலான சிலாக்கியம்பொருந்திய தேவர்கள்முதலான யாவராலுஞ் செயிக்கப்படாத வெற்றியின் மேன்மைபொருந்தி யிருக்கவும் வேண்டுமென்று கேட்டான். அப்படியே

யுனக்குண்டாகக் கடவதென்று வரங்கொடுத்துப் பின்னுமந்தப் பிர்மதேவரானவர் விபீஷணன் வரங்கேட்ட விவேகத்தைப்பார்த்து, இவன் மிகவுஞ்சற்குணவானாகவும் – தர்மிஷ்டனாகவும் - சத்தியவானாகவு மிருக்கிறான். ஆனதா லிவனித்தப்பூலோகத்திலே நெடுங்காலமிருப்பானாகிற் சகல பிராணிகளுக்கு மிதத்தைத்தேடுவானென்று நினைந்தவரா யந்த விபீஷணனைநோக்கி, அப்பா உத்தமனே! நீயுகாந்தப் பிரளயகாலமளவு மழியாமற் சிரஞ்சீவியா யிருக்கக்கடவதென் றனுக்கிரகஞ்செய்து, அவனிடத்தினின்று நீங்கிக் கும்பகர்னனுக் கனுக்கிரகஞ் செய்தருளவருகிறார்.

அப்பொழுது இந்தக் கொடியபாவியாகிய கும்பகர்னன்செய்து முடித்திருக்கின்ற குரூரமான தபசுக்குப் பிர்மதேவர் வரங்கொடுப்பாரேயாகில் நாமெல்லோரும் பிழைப்பிடமின்றி யிறந்து விடும்படியாய்த் துன்பப்படுத்திக் கெடுப்பானென்று பயந்தேங்கித் தேவர்கள் – அசுரர்கள் - இரிஷிகள் - முதலான யாவருங்கூடி ஆலோசித்து, அந்தப் பிர்மதேவரிடத்துக்கு வந்து வணங்கித் தோத்திரம்பண்ணி; சுவாமி! உமக்கு நாங்கள்செய்த அபராதமென்ன? மற்றுமுள்ள பிராணிகள்செய்த பாவமென்ன? அப்படிக்குத் தேவரீர் திருவுள்ளம் வெறுக்கும்படியான குற்றங்கள் செய்திருப்போமேயானால் ஒருபாவமுஞ் செய்தறியாத விளம்பசுங்கன்றைக் கொடும்புலிக்கிரையாகக்கொடுப்பதுபோல அந்தப்பொல்லாத கண்டகனாகிய கும்பகர்னனுக்கு வரங்கொடுத்து அவனாலே துன்பப்படுத்துவித் தழியச்செய்வதிலும், எங்களைச் சிருஷ்டித்த நீரே தண்டனைபண்ணிக் கொல்வது மிகவுநன்மையென் றிந்தப்பிரகார முறையிட்டு வேண்டினார்கள்.

அதுகேட்ட பிர்மதேவரவர்களைப்பார்த்துத் திருவுள்ளமிரங்கி, அந்தக் கும்பகர்னனால் உங்களுக்கொரு துன்பமுமுண்டாகாதபடிக்குச் செய்கிறோமென் றனுக்கிரகித்து, அதற்கோருபாயந்தேடினவராய்த் தம்முடைய தேவியாராகிய சரசுவதியைப்பார்த்து, நாமந்தக் கும்பகர்னனுக்கு வரங்கொடுக்கும்பொழுது அவனெண்ணம்பலியாதொழிய நீயவனுடைய வாக்கிலிருந்து அவன்கேட்கிறவரம் கெடும்படி மாறுபடுத்திச்சொல்லிப்பாயென்றுகூறி, கும்பகர்னனுக்குப் பிரசன்னராகி உனக்கு வேண்டியவரமென்ன கேள் தருகிறோமென்று சொல்லினர். அதற்குக்கும்பகர்னன் எல்லாவரங்களினும்மேலாகியவர மழியாமலிருப்ப தல்லவோவென் றாலோசித்தவனாய், நித்தியத்துவந் தரவேண்டுமென்று கேட்கிறவசனத்தை யவனாவிலிருந்த சரசுவதியானவள் மாறுபடுத்தி நித்திரைத்துவந் தரவேண்டுமென்று கேட்கச்செய்தாள்.

இப்படியவன் கேட்டமாத்திரத்தில் அப்படியே யுனக்கு வரங்கொடுத்தோமென் றுரைத்துப் பிர்மதேவர் தாமிருக்குஞ் சத்தியலோகத்துக்குப்போயினார். இந்தப்படிவரம்பெற்ற கும்பகர்னனுக்கப்பொழுதே யறிவுமயங்கி அவசமான சோபமித்திரை தோன்றிற்று. அதுகண்டவன் இப்படிமாறுபாடுசெய்தவர்கள் தேவர்களேயல்லது வேறில்லையென் றாலோசித்தனனாய் மிகவும்



வியாகூலப்பட்டு, தமையனாகிய தசக்கிரீவனிடத்திலுந் தம்பியாகிய விபீஷணனிடத்திலும் புலம்பிப் பரிதாபப்பட்டான். அப்படிக்கு விசனத்தை யடைந்திருக்குங்கும்பகர்னனுக்கு அவர்கள்தேறுதலைசொல்லிப், பின்புஅவனுடனே தாங்கள் முன்பு வாசஞ்செய்திருந்த வனத்திற் சேர்ந்திருந்தார்கள்.

## இராவணன் மாலியவானாதியர் உபாயத்தினால் குபேரனை இலங்கையினின்று மப்புறப்படுத்தல்.

கவி.

அன்னவர்களினிதிருந்த வக்காலைத்தசமுகனைச் சுமாலிநோக்கி
முன்னமரிற்றுமெல்லா முகில்வண்ணன்றனக்கஞ்சி முதுகிட்டோடிப்
பன்னகர்நாடதுவாய பாதாளம்புக்கமையும் பண்டுதாமாண்
பொன்னகரத்திடைதனதன் புக்குவீற்றிருந்தமையும் பொருதுசொன்னான்.

இராவணாதியர்க ளவ்வனத் திருந்தபோது முன்பு மகாவிஷ்ணுவுக்குத் தோற்றோடிய சுமாலியானவன் இராவணனை யடைந்து அப்பா! தசக்கிரீவா! நாங்கள்முன்பு இலங்கையை அரசாண்டிருந்தோம் அப்படியிருந்தகாலத்தில் மாயவனால் தோற்று பாதாளம்புகுந்து வருந்துகின்றதையும், அவ்விலங்கையைக் குபேரன் அரசாள்வதையும் மனம்பொறாது சொல்லிப் பின்னும் சொல்லுகிறான். அந்தக் குபேரனையு முன்னையும்பெற்ற பிதா ஒருவராகையாலும், அவனுனக்கு மூத்தவனாகையாலும், தானே யுடையவனென்றெண்ணிக்கொண்டு அந்த லங்காபட்டணத்தை யுனக்குக்கொடுக்கமாட்டான். அப்படிக்கிருந்தாலும் எந்தவிதத்தினாலேயானாலும் நீயந்தலங்காபட்டணத்தை யுன்னுடையதாகச் செய்து கொள்ளாதவரையில், நீ பிரயாசைப்பட்டுத் தவஞ்செய்து பெற்ற வரத்தினாலுண்டாகிய பலபராக்கிரம சவுரியங்களெல்லாம் அப்பிரயோசனமாய்ப் போய்விடும். நமக்குச் சத்துருக்களாயுள்ள தேவர்களு மிகழ்ச்சிசெய்யும்படியான அபகீர்த்தியுண்டாகுமென்று பலவாய் முறையிட்டான். இப்படி முறையிட்டுக்கூறிய அநேகவிதமான துர்ப்போதனைகளைக் கேட்ட அந்தத் தசக்கிரீவனானவன் சுமாலியாகிய பாட்டனைப்பார்த்து, ஐயா என்மூதாதையே! நீதிதப்பித் தமையனைக் கெடுத்து அவனாளுகிற பட்டத்தைத் தம்பிகட்டிக்கொண்டாளுவது தருமமல்லவென்று மறுத்துச் சொல்லினான்.

அதுகேட்டிருந்த பிரகஸ்தனானவன் தசக்ரீவனது மனதைப்பேதப்படுத்த அத்துர்ப்போதனைக்குட்பட்டு நீயே தூதாகப்போ யிந்தப்பிரகாரம் விவரமாகச் சொல்லிவருவாயென்று தன்னுடைய அபிப்பிராயத்தைச் சொல்லியனுப்புவித்தான். உடனேயவனும் அவ்விடத்திலிருந்து நீங்கி லங்காபட்டணத்துக்குப்போய்க் குபேரனிடத்திற் சென்று, அவனைநோக்கி இவ்வாறு சொல்லுகிறான்.

ஐயா அரன்றோழரே! உன்னுடைய தம்பியாகிய தசக்ரீவன் தன்னுடைய பாட்டன்முதலானோர்கள் நெடுங்காலம்பரம்பரையாய்திகாரஞ்செய்து

வந்த இலங்காபட்டணத்துக் குடையவன் நானேயன்றி வேறொருவருண்டோவென்றும், என்னுடைய சிநேகிதமுஞ் சகாயமு முனக்குவேண்டியிருக்குமேயாகில் இப்பொழுதே யிந்தலங்கையைவிட் டப்புறத்தேபோகவேண்டுமென்றும் உம்மோடு சொல்லச்சொன்னானென்று சொன்னான்.

கவி.

அன்னவாசகக்கேட்ட வருநிதிக்கோன்வருங்கரும மனத்தினராய்த்
தென்ரசமென்பதியு மென் றம்பியினதன்றே யெனக்கென் றம்பி
சொன்னபடிசெய்வனெனச் சொல்லிவிடுத்தவன் றனக்குச் சொன்னவெல்லா
தன்னுடையதாதைக்குத் தான்கூறக்கேட்டந்தத் தவத்தோன்சாற்றும்.

அதுகேட்ட குபேரனானவன் அப்பொழுது நேரிட்டிருக்கிற காலதேச வர்த்தமானங்கள் மூன்றையு நன்றாயாலோசித்து, இந்தப்பட்டணமு மிராசரீகமு மெனக்கிளையோனாகிய தசக்கிரீவனுடையதே: அவன்மனதின்படியே நான் செய்கிறேன். என்று சொல்லிப் பிரகஸ்தனையனுப்பிவிட்டுத் தன்னுடைய பிதாவாகிய விச்சிரவாவென்பவரிடத்துக்கு வந்து, தசக்ரீவனாலேயுண்டான சங்கதிகளெல்லாஞ் சொல்லினன். அவருமவனைப்பார்த்துச் சொல்லுகிறார்.

அப்பாமகனே! அந்தத் தசக்ரீவனானவன் என்னுடனே யொவ்வொரு வேளைகளிலே இலங்காபட்டண முன்பு தன்னுடைய பாட்டன்மார் முதலானோர்களாண்டு வந்ததென்று சொல்லியிருப்பான். அல்லாமலு மிப்படிக்கு நீ நியாயவிரோதஞ் செய்வது உனக்கு யோக்கியமல்லவென் றெவ்விதமாகச் சொன்னாலுங் கேளான். ஆதலால் விரோதப்படாமல் அந்தத் துஷ்டனுக்கு இலங்காபட்டணத்தைக் கொடுத்துவிட்டு, அளவில்லாத சிறப்பினையுடைய இமயகிரியினிடத்திற் சேர்ந்து தபசுசெய்திருப்பாயாகில் உனக்கெல்லாரினு மேன்மையான சகல செல்வங்களு முண்டாகுமென் றனுக்கிரகித்துச் சொல்லினார்.

## இராவணன் இலங்காபுரியில்முடிசூடி தன்தங்கைக்குந் தனக்கும் தம்பியரிருவர்க்கு மணமுடித்துப் புத்திரபாக்கியம் பெற்றிருத்தல்.

கவி.

எந்தையுரைத்ததுசெய்வ னெனத்தனதனிருங்கிளையோ டிலங்கைவிட்டுச்
சிந்தையெனுங்கடுந்தெய்வத் தேரேறித்திகழிமயஞ் சென்றுசேரத்
தந்திரமாகடறழுவத் தசக்கிரிவன்றன்னகரி வந்துசார்ந்து
மந்திரிகண்முடிசூட்ட மாமணிமண்டபத்தின்மிசை மகிழ்ந்திருந்தான்.

இதைக்கேட்ட குபேரனானவன் அப்படியே செய்வேனென்று தனது பரிவாரங்களாகிய யக்ஷகூட்டத்தவர்கள் நெருங்கப்புஷ்பகத்தின் மிசையேறி இமயகிரியையடைந்து தவஞ்செய்யச் சென்றனன். அதன்பின்பு தசக்ரீவன் தன்னுடைய பாட்டனாகிய மாலியவான் முதலானவர்களுடனே இலங்காபட்டணத்திலே பிரவேசித்து, மந்திரி புரோகிதர் முதலானவர்களினாலே பட்டாபி



ஷேகஞ் செய்வித்துக்கொண்டு, மகுடாதிபதியாய் நவரத்தின சிங்காசனத்தின்மேவி இராஜாதிகாரஞ் செய்துகொண் டிருந்தனன்.

இப்படி தசக்கிரீவனானவன் பூர்வம் மகாவிஷ்ணுவினாலே யடிபட்டோடிப் பாதாளலோகத்தில் வெகுகாலந் துன்பப்பட்டுக்கொண் டொளித்திருந்த மாலியவான் முதலான வெல்லோரும் ஒருவனுக்குப்போனபொருள் கிடைத்தாற்போல முன்ன மிருக்கையிழந்திருந்த அந்த லங்காபட்டணத்திற் சகலமான செல்வங்களுடனே தன்னைப் புடைசூழ்ந்திருக்கப் பெருமையாக வாழ்ந்திருக்குங் காலத்திலே சூர்ப்பநகையினுடைய வழகைக்கண்டு மோகங்கொண்டு மூர்ச்சித்துப் பரவசப்பட்ட வித்துருசிங்கவனென்னு மிராக்ஷதனுக்கு அந்தச் சூர்ப்பநகையை விவாகஞ் செய்வித்துக் கொடுத்தான்.

அதன்பின் பொருநாளந்தத் தசக்ரீவனானவன் தன்னுடைய பரிவாரசேனைகளுடனே வேட்டையாட வனத்திற்சென்றான். அப்பொழுது மயனானவன் தன்மகளை எல்லாரினு மேன்மையுடைய புருஷனுக்கு விவாகஞ்செய்து கொடுக்கவேணுமென்று நினைந்து, அந்தப்பெண்ணையு மழைத்துக்கொண்டு அவ்வனமார்க்கமாக வருகிறான். அப்பொழுதி லவர்களைக்கண்ட தசக்ரீவன் நீங்கள் யாவரென்றுகேட்க, அந்த மயனானவன் தசக்ரீவனைப்பார்த்து, ஓ இலங்கைவேந்தே! நான் தயித்தியராஜன்மகன். என்னுடையபெயர் மயன். இலக்ஷுமிக்கு நிகரான சௌந்தரியத்தைப் பொருந்திய தரிசனையென்பவளை யெனக்குத் தேவர்கள் விவாகஞ்செய்வித்துக் கொடுத்தார்கள். அவளுநானுமாக ஐந்நூறுவருஷங் காமசுகபோக மனுபவித்திருந்தோம். அப்படியிருக்குங்காலத்தில் மண்டோதரியென்னு மொருபுத்திரியும், மாயா—துந்துபி-என்னுமிரண்டு புத்திரரும் பிறந்தார்கள். அவர்களுக்குள்ளே மிகவுஞ்சௌந்தரிய சற்குணங்களைப் பொருந்திய இந்தப் பெண்ணுக்கேற்ற புருஷனையெங்குந்தேடிக்காணாமல், இவ்விடத்திலென்னுடைய பூர்வதபோபலத்தினாலும் என் மகளுடைய பாக்கியவசத்தினாலும் உம்மைக் காணப்பெற்றேன். என்றுபசாரமாகச் சொல்லிப் பின்னும் சொல்லுகின்றான்.

கவி.

குலம்வேண்டுமென்றிருப்பார் குலத்துள்ளார்கல்வியினற் குறையாஞானப்
பலம்வேண்டுமென்றிருப்பார் தந்தைமார்பரந்தபெருஞ் செல்வமுள்ள
தலம்வேண்டுமென்றிருப்பார் தாய்மார்கள்யவ்வனமு நலமுஞ்சார்ந்த
நலம்வேண்டுமென்றிருப்பார் நாறுகுழன்மங்கைமார் நலத்தின்மிக்கார்.

பண்புடையகுடிப்பிறப்பும் பழிப்பில்லாப்பேரழகும் பரந்தகேள்வி
நுண்பொருளினீரொழியப் பானுகருமன்னம்போ னோக்கித்திரு
மொண்பொருளுமிந்நான்கு முடையாரைக் கிடையாதிவ் வுலகந்தன்னிற்
பெண்பெறுகைதனைப்போலப் பெரியதுயர்தானுண்டோ பேசுங்காலே.

ஓ தசக்ரீவமகாராஜனே! உலகத்திலே யொருபெண்ணுக்கு விவாகஞ்செய்ய வாலோசிக்குமிடத்தில் சுற்றத்தார்கள் நல்லகுலமுடையோனுக்குக் கொடுக்க

வேணுமென்றும்,பிதாவானவன் நல்லவித்தியாஞானமுள்ளவனுக்குக்கொடுத்துக்கீர்த்திபெறவேணுமென்றும்,தாய்மார்கள் பெருஞ்செல்வமுள்ளவனுக்குக்கொடுக்கவேணுமென்றும், அந்தக்கன்னிகையானவள்யவ்வனமுமழகும்பொருந்தியபுருஷனுக்குப்பாரியாக வேணுமென்று மிச்சிப்பார்கள்.நற்குடிப்பிறப்பும்,நல்லழகும்,பாலையுநீரையும் பிரித்துண்ணுமன்னத்தைப்போலக்கல்வியறிவினாலே குறைகுணங்களைப்பகுத்தறியும் விவேகமும், செல்வமுமாகிய விந்நான்குமுடைய உத்தமபுருஷன் கிடைக்கமாட்டான். ஆனதால் பெண்ணைப்பெறுவதைப்போலும் அபவாதம் வேறொன்றுமில்லையென்றுஞ்சொல்லி, உத்தமபுருஷனிடத்தி லிருக்கவேண்டிய யோக்கியங்களெல்லாம் பொருந்தி யிருக்கும் உம்முடைய குலமுதலானவைகளெல்லாஞ் சொல்வீரென்று கேட்டான். அதற்குத் தசக்கிரீவன்மயனைப்பார்த்துச் சொல்லுகிறான்.

ஐயா தைத்தியர்வேந்தே! சகல லோகங்களையுஞ் சிருஷ்டிக்கின்ற பிரம்மதேவருடைய புத்திரர் புலஸ்தியப் பிர்மா. அவருடைய புத்திரர் விச்சிரவாவென்பவர். நானவருடைய புத்திரன். என்னுடைய பெயர் மூன்றுலோகமுமேவல்கேட்டு நடக்கும்படிக்கு இராஜாதிகாரஞ் செலுத்தி யாளுகிற இலங்காதிபதியாகிய தசக்கிரீவன். அளவுபடாம லனேகவிதமாக விரிந்திருக்கிற சகல வேதங்களையும் ஓதி யுணர்ந்திருக்கும் வல்லமையுடையவனென்று தன்னுடைய சகல பெருமைகளையும் புகழ்ந்து சொன்னான். அதுகேட்ட மயனானவன் பெண்ணினா லடையப்பட்ட பிரயோசனத்தை நானே யடைந்தேனென்று மிகவுஞ் சந்தோஷப்பட்டு, இவனுக்கே கொடுக்கவேணுமென்று நிச்சயித்துக் கொண்டு, அந்தவனத்தி லப்பொழுதுதானே அந்தத்தசக்கிரீவனுக்கு மண்டோதரியைக் கல்யாணஞ்செய்து கொடுத்து, நவரத்தின முதலான பூஷணங்களும் சீதனவரிசையாகக் கொடுத்து, பிரம்மதேவன் மேலே பிரயோகஞ்செய்தாலுமவனையுங்கொன்று மீளுவதாகிய ஒருவேலாயுதமுங் கொடுத்துத் தன்னுடைய தானத்துக்குப் போயினான்.

பின்பு தசக்கிரீவன் அந்த மண்டோதரியுடனே இலங்காபட்டணத்திலே பிரவேசித்திருந்தான். அப்படியவ னிருக்கும்பொழுது கும்பகர்னனுக்கு அசுரகுலத்தினிற் பிறந்த வயிரோசனன் மகளாகிய வச்சிரச்சுவாலை யென்பவளையும், விபீஷணனுக்குக் கந்தருவகுலப் பெண்ணாகிய சரமையென்பவளையுமனேக விமரிசைகளுடனே விவாகஞ் செய்வித்து, அவர்களு மகிழ்ந்திருந்தனர்கள்.

## இந்திரசித்துப் பிறத்தல்.

கவி.

இந்திரனுஞ்சசியும்போ லிலங்கிழைமண் டோதரியுந்தானுமேய்ந்து
சிந்தையுவந்தனுபவித்துச் செல்கின்றகாலத்துத் திருவனாள்பால்
வந்துபிறந்திழைமைந்தன் மழையிடித்ததெனவாய்விட் டழுதலாலவ்
வெந்திறன்மைந்தனைமேக நாதனெனப்பேரிட்டா னிலங்கைவேந்தன்.

இராவணன்குபேரனைச்செயித்துஅவன்புஷ்பகவிமானத்தைக்கைக்கொள
No. 78.



இராவணன்கைலாயமலையையெடுத்து சிவானுக்கிரகம்பெருதல்.







இந்திரனு மிந்திராணியும்போலத் தானு மண்டோதரியுங் காமசுகபோக
மனுபவித்துக்கொண் டிருந்தார்கள். அக்காலத்தி லந்த மண்டோதரி கர்ப்ப
வதியாகி'யொரு பிள்ளையைப்பெற்றாள். அந்தப்பிள்ளை பிறந்தவுடனே கார்
காலத்து மேகங்க ளிடித்தாற்போல முழங்கினான். ஆனதா லந்தப்பிள்ளைக்கு
மேகநாதனென்று பெயரிட்டார்கள் அந்த மேகநாதனென்னும் பிள்ளையைச்
செவிலித்தாய் முதலானவர்கள் உலகத்தை யெல்லா மழிக்குந் திறத்தினையு
டைய சிறு நெருப்பை மூட்டிப் பெருநெருப்பாக்குவதுபோல, அறுசுவைச்
சிற்றுண்டி முதலான வுணவுகளூட்டி வளர்த்தார்கள்.

அப்படி வளர்க்க வளர்ந்துவருங்காலத்தில் அவனுக் கிளையதம்பிமாராக
அதிகாயன் — அக்ஷகுமாரன் - என்னு மிரண்டுபுத்திரர் பிறந்தார்கள். அவர்
களு மவனைப்போலவே வளர்ந்துவருமளவில், கும்பகர்னனுக்குக் கூற்றுவனு
மஞ்சத்தக்க கொடுமைபொருந்திய கும்பனென்றும் — நிகும்பனென்றும் . இ
ரண்டுபுத்திரர் பிறந்தார்கள். அந்தப்புத்திரர்க ளெல்லோருஞ் சிங்கக்குட்டிக
ள்போல வளர்ந்து பல பராக்கிரமங்கள் பொருந்தி நாளுக்குநாள் பிரபலமாக
மேன்பட்டு வந்தார்கள். இப்படிச் சுவர்க்கலோகம்போலச் சுவர்ன்னமயமாக
விளங்கும் இலங்காபட்டணத்திலே தசக்கிரீவனுந் தம்பிமார்களும் புத்திரர்
மித்திரர் முதலான சம்பத்தினாலும்—செல்வப் பெருக்கினாலும்-பிரம்மதேவர்
கொடுத்த வரத்தினுடைய மகிமையினாலும் - காட்டுப் பெருநெருப்புக்குக் க
டுங்காற்றுக் கூடினாற்போலச் சுபாவமாயிருக்கிற துர்க்குணத்துடனே கர்வ
மிகுந்து மதோன்மத்தராகி, தங்களுக்கு நிகரானவர்க ளொருவருமில்லையெ
ன் றகங்காரங்கொண்டு, புண்ணியபாபங்களை யெண்ணுமல், சகல பிராணிக
ளும் பயந்து துன்பப்படும்படிக்குக் குரூரதண்டமான அதிகாரஞ்செய்துகொ
ண் டிருக்கின்றார்கள். அக்காலத்தில் கும்பகருணனானவன் தமயனையடைந்து என
க்கு நித்திரைசெய்யும்படி ஓர்மண்டப மமைக்கவேண்டுமென இராவணன் தே
வதச்சனையழைப்பித்து ஒருமரமணிமண்டபம் ஒருயோசனை யகலமும் இரண்
டுயோசனை நிகளமுமாகச்செய்தது. அதிற்கும்பகருணன் புகுந்து நித்திரை
செய்துகொண் டிருக்கின்றான்.

இராவணன்பிறப்புப் படலம்-முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

ஏழாவது,

## வரையெடுத்த படலம்.

இப்படலத்தில் இலங்காபுரியாளு மிராவணன் ஒருநாள் வெளிப்பட்டு அள
காபுரியடைந்து அங்குள்ள சோலைகளை அழிம்பண்ணி இலங்கைக்குப்
போக அதையறிந்த குபேரன் தூதுவனைவிட்டுச் சிலநீதிகூற வதைக்
கேட்ட இராவணன் கோபித்து வந்ததூதுவனைக்கொன்று குபேரனி

டத்திற் போர்புரிந்து மூர்ச்சிக்கச்செய்து புஷ்பகவிமானமுதலிய செல்வங்களைக்கைப்பற்றி வருவழியில் புட்பகவிமானம் கைலையின்மேல் நேரர்க்கச்செல்லாது நின்றுவிட நந்திதேவர்வந்து சிலகூறுவதைக் கேளாது கோபிக்க அவர்தந்த சாபத்தைப்பெற்று கைலையைவேரோடுபேர்க்கச்சிவபெருமான் பெருவிரலாலமுத்த அதனால் வருந்துங்காலையில் தன்சிரசிலொன்றைத்திருகி வீணையாகக்கொண்டு வேதம்பாட, சங்கரன்மகிழ்ந்துவந்துமூன்றரைக்கோடியாயுளும், ஓர்வாளுந்தர வதையேற்று வருங்காலையில் மகாவிஷ்ணுவானவர் தேவர்களின் வேண்டுகோளால் மாறுவேடங்கொண்டு மூன்றரைக்கோடியாயுள் மாறும்படி இன்னுமரைக்கோடி யாயுள் வாங்கிவாவென்றனுப்ப வவ்வண்ணமே சென்று அரைக்கோடியாயுளும் இராவணனென்னும் பேரும் பெற்றதை அகஸ்தியரால் இராமபிரானுக்குச் சொல்லப் படுகின்றது.

## இராவணன் அளகாபுரியடைந்து அங்குள்ள சோலைகளையழித்தல்.

கவி.

பூவயன்றருவரத்தினுற் புயவலிச்செருக்கால்
ஆவதல்லதொன்றறிகிலா வரக்கர்கோனியக்கர்
தேவர்மாதவர்சிதறிடத் துரந்தூஉல்லளகைக்
காவெலாம்பொடிசெய்துவெங் களிறெனத்திரிந்தான்.

கேளுமையா! இரகுகுலோத்தமராகியஇராமபிரானே! இராவணனானவன் பிரமதேவனிடத்திற்பெற்ற வரப்பிரசாதத்தால்புஜபல பராக்கிரமச் செருக்கைக்கொண்டு மேல்விளையுங் காரியமொன்றேனுஞ் சிந்திக்காது மதோன்மத்தனாய் யக்ஷர்-தேவர்-முனிவர்-இவர்களையெல்லா மவரவ ரிடத்தினின்றுந் துரத்தி இலங்காபுரியி லரசுசெய்துகொண்டிருக்குங் காலத்தில் மந்திரி பிரதானியர்களோடு இரதாரூடனாய்ப் புறப்பட்டு அளவற்ற சேனைகளுடன் குபேரனுளும் அளகாபுரியடைந்து அங்குள்ளசோலை நந்தவனம் இவைகளைப் பொடிசெய்து கொடியயானைபோல உலாவி நம்மையெதிர்ப்பவரொருவருமில்லையென்று மகாசந்தோஷப்பட்டு மீண்டு இலங்கைமாநகரம் புகுந்தான்.

## குபேரன் இராவணனுக்குச் சிலவார்த்தைசொல்லும்படித் தூதுவனைவிடுக்க அவன் இலங்கையையடைந்து இராவணனைக் கண்டு கூறுதல்.

கவி.

அன்னதன்மையனதிக்கிர மங்கள்கேட்டளகை
மன்னவனொருதூதனை விடுப்பவமற்றவன்போய்த்
தென்னிலங்கைநாயகன்றனைச் சென்றுகண்டுமையன்
சொன்னவாசகங்கேளெனத் தூதுவன்சொல்லும்.

குபேரனானவன் தன்தோட்டமழிந்த சங்கதியைக் கேள்விப்பட்டு பாரியாலோசனைசெய்து தன்னிடத்திலே யிருக்குமொரு தூதுவனையழைத்து, இராவணனுக்குச் சொல்லவேண்டிய சங்கதிகளைச் சொல்லியனுப்பினான்.



அவனும் அப்படியே இலங்கேசனிடத்திற்சென்று சொல்லுகிறான். ஐயா இராவணேஸ்வரா! நான் உன்தமயனாகிய குபேரனுடைய தூதுவன். அவர் உனக்கு முக்கியமாக வேண்டிய சிலவார்த்தை சொல்லச்சொன்னார் அஃதியாதெனில், உன்னுடைய தமயனாகிய அவ்வைசேசனானவர் இனிமேலாகிலு மிந்தத் துர்ப்புத்தியை நிவர்த்தி செய்து நன்னடக்கையை யனுசரித்து வீணாய் நரகத்துக் காளாகாமல் இதுவரையினுஞ் செய்த தபோபலத்தின் மகிமையாற் கிடைத்த வரங்களைப் பாழாக்காமற் கிரமமா யிருக்கும்படியாயும், எமைகளாகிய தேவர்களை இனி யதஞ்செய்ய வேண்டாமென்றும், நீதிமுறைமை வழுவாமற் செங்கோல் செலுத்தினால் மிகுந்த புகழும் தர்மமும் கிடைக்குமென்றும், இவைகளையெல்லாம் உனக்கெடுத்துச் சொல்லும்பாத்தியதை உன்றமையனாகிய வெனக் குண்டென்றும், உனக்குமூத்தவன் தந்தைக்குச் சமானமானவனென்றும், பெரியோர் சொல்லுவதை இகழ்ந்து தட்டிவிடலாகாதென்றும், இவ்விதமாகவுனக்கு நற்புத்திவரும்படியாயு நல்லதெளிவையடையும்படியாயும் சொல்லச் சொன்னார்.

அன்றியும் - நான்முன்பு இலங்கைநகரத்தை உன்வசஞ் செய்த பிறகு, இமயகிரியினிடத்திலே சிவனைநோக்கித் தபசுசெய்துகொண் டிருக்குங்காலத்திற் பரமசிவ னுமையவளுடனே யெதிர்தோன்றினார். அப்பொழுது உமையவள் விளங்கு மற்புதத்தைக் கண்டயான்ஆச்சரியப்பட்டு, இப்படி விளங்குஞ் சொரூபத்தை யுடையவர்களு முண்டோவென்று மனதிலே நினைத்தேன். அதையறிந்த உமையவ ளுக்கிரமாகக்கோபித்துப் பார்த்தாள். அந்தக் கோபாக்கினியினாலே யென்னுடைய விடதுகண்ணானது நீறாயெரிந்து, சரீர முழுதுங் கருகியுருகிச் சோபித்து விழுந்து பயந்து, அவ்விடத்தினின்று நீங்கி அந்தமலையிலேதானே வேறோரிடத்திலந்தக்குற்றந்தீர முன்புபோல் நியமங்கள் வழுவாமல் பயபத்தியுடனே தவஞ்செய்துகொண் டிருந்தேன். அப்படி யிருக்குங்காலத்தில் ஒருநாளந்தப்பரமசிவன் வெளிப்பட்டென்னைநோக்கி, உன்னைப்போலும் அரியதவஞ்செய்தோ ரொருவருமில்லை யானதால் நீ நமக்குத்தோழனாகக்கடவாய். உமையவள் கோபத்தா லெரிந்துபோனகண்ணும் பொற்கண்ணாக விளங்கியிருக்கக் கடவதென் றனுக்கிரகித்து ரக்ஷித்தார். அறியாமையினாலே செய்த அல்பகாரியத்துக்கு இப்படிப்பட்ட பிழை வருமானால், அறிந்து செய்யும் பொல்லாத காரியங்களுக் கென்னாகிக்குமோ தெரியாது? ஆதலா லிதனையுஞ்சொல்லுகவென் றனுப்பினார்.

## இராவணன் குபேரனுடைய தூதுவனைவெட்டி மந்திரிகளுடன் யோசித்தல்.

கவி.

ஆசில்லாதரனெட்பவ னளகையிலவனும்
ஈசன்றோழனுமையெலா மென்முனஞ்சார்ந்து
பேசுந்தூதரைப்பெறுகென விவைபெருவானாள்
வீசினானவனிருதுணி யாகமண்வீழ.

இவ்வாறு குபேரனிடத்தில் நின்றும் வந்ததூதுவன் வார்த்தைகளைக்கேட்ட இராவணன்மகா கோபத்தையுடையவனாய். ஆ ஆ !! நன்றாயிருக்கிறது: நன்றாயிருக்கிறது: யாரோ அளகாபுரிக்கு நாயகனும், அவன்சிவபெருமானுக்குத் தோழனாய், அவன்றூதென்றை யனுப்புவித்து எனக்குப்புத்தி புகட்டுவதாம்; இது மிகவுமேன்மை: மேன்மையென்று நகைத்து, இதுதானிந்தத்தூதுவன்பெறும் வரிசையென்று முன்பின் யோசியாமல் தன்னுடைய கூரிய வாளாலே அவனைவெட்டிக் கண்டதுண்டமாக்கி, இராக்ஷசகிங்கரரைத் தின்றுவிடுங்களென்றான். அவர்களும் அப்படியே செய்தார்கள். அப்பால் பாவியாகிய தசக்கிரீவன் மந்திரிகளைப்பார்த்து, இந்தக் குபேரன் இப்படி சொல்லியனுப்பவேண்டிய காரணமென்ன ? அதைக்குறித்து நாமென்ன செய்யவேண்டியது ? என்று கேட்கும்போது பிரகஸ்தன் சொல்லுகிறான். ஓ இலங்கேசா ! நான்சொல்வதென்னவிருக்கிறது ? இது கிணறுவெட்டப்போய் பூதம் புறப்பட்ட கதையாய் நேரிட்டது. சேத்திரம் போனபின்பு இரவியை நமஸ்கரிப்பதி லென்னபலனுண்டு ? அவனோ மிகுந்த பலாட்டிகன்; மேலும் சிவபெருமான் தோழன். அவனுக்கவரது திவ்யவரப்பிரசாதவரு லிருப்பதினால் இவ்வளவு தயைதாக்ஷணிய மின்றித் தூதனுப்பினான். அவனென்னமாயிருந்தபோதினும்பெரியோனென்பதைக் கிஞ்சித்தெண்ணி நடக்கவேண்டும், நீயோ அதிக்கிரமித்து அவன்வனத்தை நிர்த்தூளிதஞ் செய்தாய். அந்தக்குற்றமொருபக்கம் உன்பேரிலிருக்க, அதுவும் போதாதென்று உன்னை நாடிவந்த தூதனையும் வெட்டினாய். இது செய்யப்படாது. துணிந்து செய்துவிட்டாய். அந்தக்குபேரனோ முன்னமே நமக்கு ராச்சியத்தைத் தடைசொல்லாமற் கொடுத்திருக்கிறான். அப்படிக்கிருக்க நீ அநியாயமாய் அவன் வனத்தை யழித்துவிட்டாய். ஆகையால் பூதபௌஷிய வர்த்தமானங்களை யறிந்து நடந்துகொள்ள வேண்டியதுதான் விவேகிகளது கடமை. உனக்குத்தெரியாத காரியம் நானென்ன சொல்லப்போகின்றேன் ? எப்போதும் "எதிர்வலியுந் தன்வலியுமாற்றான்வலியுந் துணைவலியுந் தூக்கிச்செயல்" என்பதை அறிந்துநடக்கின்றவனே உத்தமனாவான். அன்றியும் - "அடக்கமமரருளுய்க்கு மடங்காமையாரிருளுய்த்துவிடும்" என்று ஒருநீதிவாக்கிய மிருக்கின்றது. இதையறிந்து ஒருவனெப்போது நீதிமுறைவழுவாம லிராச்சியபாரஞ் செய்யவேண்டும். என்று சொல்லித் தான் மௌனமாய் இனி விளைவதை யறியலாமென்று ஒன்றும் பேசாமல் வாயைமூடிக்கொண்டான். அப்போது அருகிலிருந்த மகோதரனென்பவன் சொல்லுகின்றான்.

ஓ இலங்கேஸ்வரா ! உலகத்தி லிடத்தி லொருவன் ஒருத்தியுடன்கலந்து புணர்ச்சிசெய்ய வெண்ணிக் கட்டிலின்மேலேறிய பின்னும்கூட, அவளது முறையும் அனுமதியுங் கேழ்ப்பானோ ? இந்த வச்சிரவண்ணன் வெகுதிறுக்காய்த் தூதனுப்பி நம்மைவலியச்சண்டைக்கிழுக்கும்போது, இனியவனுக்கும் நமக்கும் என்னவிறவிருக்கிறது ? நீரென்னமோ அவனை வெகுபலவானென்



றெண்ணியிருக்கின்றீர்? அவனைமாத்திரமல்ல: அவனுடன்கலந்தொருவேளை திரிமூர்த்திகளும்வந் தெதிர்த்தாலும், அவர்களை யெல்லாம் ஜெயிக்குந்திறமை உம்மிடத்தி லிருக்கின்றது. அதுவெனக்குத் தெரிந்துதான் தைரியமாகச்சொல்லுகின்றேன். நீரென்னமோ பின்னிடைவதுபோ லிருக்கிறது. அவதைரியத்தை விட்டுவிடும். துணிந்தார்க்குத் துக்கமேது? சண்டிலே போனால் சுத்தவீரர்க் கிரண்டிலொன்று நிச்சயம். என்றைக்கிருந்தாலும் திரேகம் அனித்தியம். பயந்தால் ஜெயங்கிடைப்ப தரிது. நீரொன்றுக்கும் அஞ்சாமல் தாராளத்துடன் உமது சேனைசமுத்திரங்களைக் கூட்டிக்கொண்டு விமானமேறி, கைலைமலைச்சாரியில் மந்தாகினிதீரத்துள்ள அளகாபுரிக்குச்சென்று குபேரன் சேனையைக் கொன்று அவனையும்வென்று, அவ்விதமாகவே உலகமெங்குந் திக்குவிஜயஞ்செய்து கீர்த்தியைப் பெற்றுக்கொண்டால் அப்பால் உமக்குச் சரியானவர்கள் ஆரிருக்கிறார்கள்? ஆகையால்அவ்வடதிசைத்தலைவனிடம் போகும்படி தண்டுதளத்துக்கு உத்திரவுகொடும். இதுதானெனது கருத்து. அப்பாலும்முடைய இஷ்டமென்றான்.

## இராவணன் குபேரனுடன் போர்புரிதல்.

### கவி.

அன்னகோபத்தவரக்கர்கோ னளகையிலவனை
முன்னஞ்சென்றுகான் முட்டியேமனச்சினமுடித்துப்
பின்னைநின்றதுசெய்வனென் பெரும்படையெழுக
என்னலுங்கடல்கிளர்ந்தென வெழுந்ததுசேனை.

மகாகோபத்தையுடைய தசக்கிரீவன், மந்திரிகளுடன்பட்டதற்குச் சந்தோஷித்து அளகாபுரியடைந்து குபேரனைவென்று எனதுகோபத்தைத் தீர்த்துக்கொண்டுதான் வேறுகாரியம் பார்ப்பேன்ஆதலால் நமது சேனையெழுகவென்றுசொல்லிக்கொண்டு ஜெயத்தைத்தரும்பிரயாணபேரிகையறைவித்து தது ராணுவங்களையெல்லாம் விமானத்திலேற்றிக்கொண்டு, பிரகஸ்தன் — விருபாட்சன் — மாரீசன் — மகோதரன் - வச்சிரமுஷ்டி - முதலிய மந்திரிமார்களோடும் இரத கஜ துரக பதாதிகளாகிய சேனைகளோடும் பிரையாணமாகி, அளகாபுரியைநோக்கி ஆகாயமார்க்கமாகச் சென்று அதன் கோட்டைவாசற்கெதிர்நின்று தனக்குமுன்னமே யவ்விடம்வந்திருக்குஞ் சேமத்தேரிலேறிக்கொண்டு, தனதிருகாலையுமடக்கி மண்டியிட்டு இருபதுகைகளிலும் இருபதுவிதமான ஆயுதங்களைத்தாங்கிக் கொடிவீரசிங்கம்போலக் கெர்ச்சித்து, தனது பாரியவில்லை ஆகர்ண பரியந்த மிழுத்து வளைத்துக் குணத்தொனிசெய்து, ஆர்ப்பரித்து, அண்ணா ! வச்சிரவண்ணா ! ஓ குபேரா ! இப்போதென்னுடன் போர்செய்ய உனக்குப்பலமிருந்தால், நீ ஆண்பிள்ளையானால், உன் முகத்தில் மீசையுமிருந்தால், உனது புஜபல பராக்கிரமத்தைக் காட்டியென்னை ஜெயிக்கலாம். நான் தம்பியென்றும் நீ தமையனென்றுஞ் சொல்லு

கிற பக்ஷமும் பட்சமும் வேண்டியதில்லை. இனி படுகளத்திலு மொப்பாரி யுண்டா? நாமிருவருமின்று சண்டைசெய்தாலும் ஜெயமுண்டு. இறந்தாலும் வீரசொர்க்கமுண்டு. ஆதலால் விரைவில் யுத்தசன்னுகங்கொண்டு. வெளியே வாவென்றுகாந்தகாலப் பேரிடிபோல அறைகூவி ஆக்கிரமித்தான். அக்கால் அங்குள்ள தூதர்களு முடனேகாற்றினுங் கடியவேகமாய்ச்சென்று இச்சங்கதிகளையெல்லாம் குபேரனுடனே சொன்னார்கள்.

அதுகேட்ட மாத்திரத்திற் குபேரனானவன் திடுக்குற்று, ஐயோ! இதென்னவனியாயம்? இதென்னகாரணம்? நாமவனுக்கென்ன குற்றஞ் செய்தோம்? முன்னமவன் இலங்கையைக் கேட்காமுன்னமேகொடுத்துவிட்டோம். குருவிக்கூடுபோல் இவ்வளகையைக்கட்டிக் கொண்டிருந்தால் இதிலுள்ளவனத்தையெல்லாமழித்து வெட்டவெளியாக்கினான். அதன்மேல் தூதுவனையனுப்பி இப்படிச் செய்யலாமாவென்றுங் கேட்டால் மறுபடியும் அக்கிரமத்துக்கே காப்புகட்டிக்கொண்டு, என்னை வெட்டமாட்டாத குறையாய் அவனையும் வெட்டினான். அத்துடன் சும்மாயிராமல் நம்முடன் உயுத்தத்திற்கும் வந்துவிட்டான். இவனையாரழைத்தது? நம்மையே கொலைசெய்ய வந்தானாகையால் இவனுக்கென்ன கெட்டகாலமோ தெரியவில்லையென்று மணிமாலன் முதலிய மந்திரிகளோடு யோசனைசெய்து யுத்தத்திற்குப் புறப்பட்டனன்.

இவ்வாறுபுறப்பட்ட குபேரனானவன் வானமளாவிய சகஸ்திர சிங்கங்கள்பூட்டிய ஸ்வர்ணரதத்திலேறி, பார்ப்பவர்கள் கண்களைப்பறிக்காநின்ற பிரகாசந்தங்கிய கிரீடத்தோடும் விளங்கி, பூர்ணசந்திரோதய விலாசம்போன்ற முகங்களிலழகானதொழுகவும், மீசைகள் துடிதுடிக்கவும், கண்களிலனலெழும்பவும் பாரவில்லைவளைத்துப் புவனங்களெல்லாஞ் செவிடுபட நாணோசைசெய்து, தன்னுடைய பிராணமந்திரிகளாகிய மணிமாலன் - சங்கியோதகண்டகன் - விண்டினை - வீரன் இவர் முதலாயினோர் புடைசூழவும், நால்வகைச்சேனைகளு நெருங்கிவரவும், ஜெயபேரிகை முழங்கவும், அநேகங்கோடியக்ஷ கின்னரர்களுடன் ஆக்கிரமித்துவருகிறான். இப்படிவருகிற அளகேசனைத் தசக்கிரீவன்கண்டு, தானும் தயாராய் தேரேறிக்கொண்டு, தனது மந்திரிமார்களுடனும், இரதகஜதுரக பதாதிகளுடனும், அமர்க்களத்திற்கு வந்துசேர்ந்தான். உடனே யிருதிறப்படைகளுங் கைகலந்துகொண்டன. அப்போது தசக்கிரீவன் தனது வில்லைவளைத்து நாணேறிட்டுக் குணத்தொனிசெய்து, அளவிறந்த கொடிய நாராசங்களைப் பிரயோகஞ்செய்தான். இதற்குள்ளாகவே தேர்த்தலைவருடன் தேர்த்தலைவரும், கரித்தலைவருடன் கரித்தலைவரும், பரித்தலைவருடன் பரித்தலைவரும், பதாதிவீரருடன் பதாதிவீரருமெதிர்த்து, ஒருவர்க்கொருவர் வாள் வேல் முதலிய அஸ்திரசஸ்திரப் பிரயோகங்களைச் செய்து எண்ணிறந்த அம்புகளை யெய்தார்கள். மற்றுஞ் சில ராக்ஷசர்கள் தங்கள் தங்களது பராக்கிரமத்தினாற் பர்வதங்களையு மரங்களையும் அடியுடன்பேர்த்து, நாற்றிசை முழுவதுந் திடுக்கிட வெறிந்தார்கள்.



இப்படியிருக்கையில் தசக்ரீவனுடைய மாரீசன் முதலாகிய மந்திரிகளெல்லாம் தங்கள் தங்கள் தேர்களை நடத்தி, மண்டியிட்டுப் பற்கடித்து வில்லைவளைத்து நாணியேறிட்டுக் குணத்தொனிசெய்து, அனேகவிதமாக அனலாஸ்திரம் - அயிந்திராஸ்திரம் - வாயுவாஸ்திரம் - வருணாஸ்திரம் - பிரமாஸ்திர முதலானவைகளையெல்லாந் தொடுத்துவிடுத்தார்கள். அந்த அஸ்திரங்களெல்லாம் வில்லில்நின்றும் விடுபட்டுவந்து குபேரனுடைய மந்திரிகள் முதலானவர்களைச் சின்னாபின்னமாகத் தொளைத்து, முதுகிலும் - மார்பிலும் - தோளிலும் - தொடையிலுமாக உருவிப்போய் விட்டன.

அதுகண்ட குபேரனது முதல்மந்திரியாகிய மணிமாலனானவன் உக்ராவேசங்கொண்டு, பல்லை நெறநெறவென்று கடித்து, மீசைகள் துடிக்கத் தனது பாரமானவில்லையெடுத்தூன்றி ஆகர்ணபரியந்த மிழுத்து, அநேகவிதமாகிய கொடிய நாராசங்களைப் பிரயோகித்து அவர்களையெல்லாம் தலைவிரிகோலங் கொண்டலைந்தோடும்படிச் செய்தான். அதையறிந்த தசக்ரீவனது மந்திரிமார்கள்வந் தவனைவிடாமல் மடக்கி அவனுடன் அகோரமான சண்டைவிளைத்து, அவனது தேர்களையும் - கொடிகளையும் - குடைகளையும் - தேரினது அச்சுகளையும் - ஆணிகளையும் வேறுவேறுபடுத்தி ஒன்றுவிடாமலழித்து, அவனது கரத்திலேந்திவந்த மலையை நிகர்த்த நெடியவில்லையுங் கண்டித்து, அவன் பிரமித்துக் கலங்கிச் சோபமடையச் செய்தார்கள்.

இவர்களெல்லாமிவ்வித ஆடம்பரமாய்முனைந்து யுத்தஞ்செய்யும்போது தசக்கிரீவன் சண்டமாருதம்போற் கூக்குரலிட்டுக்கொண்டு இருபது கண்களிலும் வடவாமுகாக்கினிபோல அக்கினிப்பொறிகள் பறக்கவந்து, இருபது கைகளிலும் பிடித்திராநின்ற வில்லைவளைத்துக் குணத்தொனிசெய்து சிங்கநாத அஷ்டகாசத்தோடும் குபேரனிடஞ்சென்று அவனைப்பார்த்து, அண்ணா குபேரா! இதென்ன சௌரியம்! என்னுடன் சண்டைசெய்து ஜெயமடையும் வல்லமை உனக்கில்லையா? உன்னுடைய வல்லமையைக்கண்டால் பெண்களும் பழியார்களா? உனக்கும் சுத்தவீரனென்கிற பேரோ? உனக்குப் பரமசிவன் ஒத்தாசையாயிருந்தும் பலமென்ன? என்னுடனுயுத்தமிட்டு என்னை வெற்றிகொண்டால் நீ எனது செங்கோலைப் பெற்றுக்கொள்ளுகிறாய். அப்படியில்லாமல் இந்தயுத்தகளத்தில் என்னாலிறந்தால் மகத்தாகிய மோக்ஷமடைவாய். அவ்விதமே இரண்டுவிதத்திலொன்று நானும் பெறுகிறேன். மேலு நீயும் வெகுகாலமாய் நான்முகனைக் குறித்து மாதவமியற்றி வேண்டியவரங்களைப் பெற்றிருக்கின்றாய். நானும் அவ்வாறுதான் அடைந்திருக்கிறேன். ஆதலால் நீபெற்ற வரமெல்லா மெங்கேபோச்சுது? துணிந்தார்க்குத் துக்கமேது? போருக்குவந்தும் புறங்கொடுக்கலாமா? எப்போதுந் தேகமனித்தியமல்லவா? உனது சௌரியத்தை நான் பார்க்கவேண்டும். என்னுடன் போர்செய்ய உனது தனுசையெடு. ஏதோ நாமிருவரு மொருகை

பார்ப்போம்வா. என்று பறைபறைக்கப்பேசுந் தசக்ரீவனைக் குபேரனானவன் கண்டு பிர்மித்து யாதொன்றுந் தோன்றாதவனாகி இதனைச் சொல்லுகிறான்.

ஆ! தெய்வமே! கெட்டபுத்தி யிவனை விட்டுப்போகுமா? அதேது போவது? நாயின்வாலைக் குணப்படுத்த யாவரால்முடியும்? நல்லதென்றுநாம் சும்மாயிருந்தால் இவன் தலைகீழாய்த் துள்ளிவிழுகிறான். ஆலையில்லாவூருக்கு இலுப்பைப்பூச் சர்க்கரைபோல் இவன்மட்டுக்கும் இவனே கெட்டிக்காரனென்று என்னைச் செயஞ்செய்யவந்தான். பிள்ளையில்லாதவீட்டில் கிழவன் துள்ளிவிளையாடுவதுபோல இவன் தலைவிரித்தாடி, பெற்றதாயிடத்திலேயே கற்றவித்தை காட்டுவதுபோல உடலில்நாக்கைவழிக்கவந்தான். ஆயினு மூச்சுவிடாமலடித்தாற் காச்சுமூச்சென் றோடப்பட்ட பூச்சிக்குச் சமதையான பயல்: இவனா நம்மை யதட்டுகிறவன்? இவனிடத்தில் நமது சுருக்கைக்காட்டவேண்டும். படுகளத்திலு மொப்பாரி பார்ப்பவர்களுண்டோ வென்று தன்னுடைய வில்லையெடுத்து நிறுத்தி, வில்லைக் குண்டலாகிருதியாய் வளைத்து, அதிற் சொல்லக்கூடாத வாயுவாஸ்திரம் – அக்கினியாஸ்திரம் – தேவதாஸ்திரம் – சூரியாஸ்திரம் – நாகாஸ்திரம் - இவைமுதலிய அளவிறந்த அஸ்திரங்களையெல்லாம் கைகொண்டமட்டும் யாவருங்கண் டஞ்சும்படிச் சங்கஞ் சங்கமாகப் பிரயோகஞ் செய்தான்.

அதுகண்ட தசக்கிரீவன் தனது வலியவில்லையெடுத்தூன்றி விநோதமாகிய இரண்டு அர்த்த சந்திர பாணங்களைப் பிரயோகித்து, அவன் விடுத்தவைகளையெல்லாம் ஒன்றேனும்விடாமல் வழியில்தானே துண்டித்து, உடனே எண்ணிறந்த மகா கொடிய நாராசபாணங்களைத் தொடுத்துவிட்டு அந்த வச்சிரவண்ணன் ஊர்ந்துவந்ததேரை அச்சுகழன்றுபோகவும் – ஆணியுடைந்துபோகவும் - குடைகிழிந்துபோகவும் – கொடியறுந்து போகவும் – குத்துக்காலடிப்பிடுங்கிக்கொள்ளவும்–கொடுங்கை வெவ்வேறாகவும்–சின்னாபின்னப்படுத்தி கிர்த்தூளிப்படலஞ்செய்து, அவனது கரத்தேந்தி நிற்கும் வில்லையும் கண்டித்து, பாகனையுஞ் சிரமறவடித்துப் பொடியாக்கினான். அப்போது வச்சிரவண்ணனாகிய குபேரனானவன் பிர்மித்து, மறுகாலும் வேறோரிரதத்தி லூர்ந்துகொண்டு மறுவில்லைக் கையிலேந்திவளைத் தெதிர்சென்று, இருவித திவ்யாஸ்திரங்களை யெறிந்து அந்தத் தசக்கிரீவனது தண்டுதளங்களையெல்லாம் சிரம்வேறு - உரம்வேறு – கரம்வேறு – சதைவேறு – நிணம்வேறு - சக்கிலம்வேறு – கால்வேறாகத் துமசப்படுத்தி அதஞ்செய்து உகாந்தகால உருத்திரனைப்போல நின்றான்.

கேளும் ஸ்ரீராமா! அப்போது யமன்போல் வந்தெதிர்த்த அக்குபேரனைக்கண்டு இராக்ஷதர்களெல்லாம் சின்னாபின்னமாய்த் தலைவிரிகோலம்பூண்டு, காற்றிலுங் கடியவேகமாயோடத் தலைப்பட்டார்கள். சிலராக்ஷசர்கள் இதென்ன வேலையில்லாதவேலை? நாம்சும்மா சிவனேயென்றிருந்தா லிந்தத்தசக்கிரீவன் நம்மை வலியவிழுத்துவந்து இங்கு பலிகொடுக்கின்றான். சுமப்பவ



னுக்கல்லவோ தெரியும் சுமக்கச்சொல்பவருக்கென்னதெரியும்? தசக்கிரீவன் வாய்க்கொழுப்புச் சீலையால்வடிந்தகதைபோல் இதைவளர்த்திக்கொண்டான். இவனென்னவிடுவானா? நாமும்பிந்த அளகேசனை என்னபோவென்றுநினைத்தோம். ஏதேது நாம்பிழைப்பது? இவன் உகாந்தகாலருத்திரனைவிட அதிகவுக்ரமாய்க்காய்ந்துகொல்லுகின்றான். இவனையொரு பஞ்சையென்றுநினைத்து வந்துவிட்டோம். இந்தக் குபேரன் ஈஸ்வரானுக்ரகம் பேற்றவனாதலால் இனியென்செய்வானோ? என்றேங்கினவர்களாய் எவரை அடைக்கலம் கேட்கலாமெனப்பயந்து நிற்கின்றார்கள். அக்கால் தசக்கிரீவனவர்களை நெருங்கி அவர்களுக்கெல்லாம் தைரியஞ்சொல்லி, இது குபேரன்செய்த கோலாகலமென்று நினைத்து அவனையடுத்து, அடாகுபேரா! இனிநானுன்னைத் தமையனென்றுங்கூட நினைப்பேனா? நீயெவ்வளவு பஞ்சை? அந்த நஞ்சுண்டகண்டனேயிஞ்சி உனக்குத் துணைவந்தாலும் ஒருகைபார்த்து, நீயேயென்னைக் கெஞ்சும்படியாய் வைப்பேன். இதோபஞ்சாகப் பறக்கடிக்கிறேன்பார். என்று செஞ்சாமாருதம்போல் நின்று நானாவிதமாகத் தூஷித்து, தனதிருபதுகைகளிலும் பிடித்திருந்தவிற்களைத் தேரில்வைத்துவிட்டுக் கீழேகுதித்து, பர்வதம்போன்ற ஓர்கதாயுதத்தைக் கைக்கொண்டு, ஓடோடியும்வந்து கெந்துபாய்ந்து சிலம்ப விளையாட்டெல்லாங் காட்டி; ஆனையடி - சிங்கவடி - புலியடி - யாளியடி - என்னுமிவைமுதலியவுஞ் செய்து சுழன்று: வலமிடமிதித்து ஆகாயத்தெழும்பி, மீட்டும் பூமியிற்குதித்துப் பாய்ந்து எமதண்டம்போன்ற தனதுகதையை யுருமிநோக்கிக் குலாலன் சக்கரமெனச்சுழற்றி மோதினான்.

அதைக்கண்ட குபேரனுங் கலங்காமல், தானுமவ்வாறே வில்லைவிடுத்துக் கதையையெடுத்து, அதிகவுக்கிரத்தோடும் அத்தசக்ரீவனது வல்லமையை மிஞ்சவொட்டாமல் திப்பிரமை கொள்ளும்படியாய்ச் சாடினான். இப்படி நற்குணமும் நற்செய்கையும்வாய்ந்த அளகேசனானவன் தனது புஜபலங்கொண்டு மோதியடித்த விசையால் தசக்ரீவனானவ னுடனே சுருண்டு மூர்ச்சையடைந்தான். இவ்வாறுமூர்ச்சித்துக் கீழ்விழுந்தவன் மறுபடியுமெழுந்து, கோபமதிகரிக்க மகாவுக்ரத்துடன் கணக்கற்ற பர்வதங்களையும் விருட்சங்களையும் வேருடன் பிடுங்கிக்கொண்டு அந்தக்குபேரனைப் பார்த்து, அடாமூடா! நீயென்னை மூர்ச்சையாக்கச்செய்தவனானபடியா லிதற்கு நீ தப்பித்துக்கொள்ளுக பார்ப்போம். என்றுகூறித்தனதிருபது கைகளினாலு மோதியடித்தான். அம்மலைகளுமரங்களு மவன்கையிலிருந்து விடுபட்டுவந்து இவன்மேலும் இவன்படைகளின்மேலும் புடைத்ததனால், அனேகயக்ஷர்கள் மாண்டுபோனதுமன்றித் தானும் பயந்தோடினன். அளகைப்பட்டணமும் அதமாகிவிட்டது.

## இராவணன்குபேரனைத் தோற்கடித்துப் புட்பகவிமானமும் செல்வங்களையுங் கைப்பற்றிக்கொண்டு கைலாசமடைதல்.

கவி.

வண்டுசேர்பொழிற்குபேர மன்னன்வாழுமாநகர்
கண்டகண்டமாடெலாங் கவர்ந்துகொண்டுபண்டைநாள்
புண்டரீகவாசனன் கொடுத்தபுட்பகத்தையும்
கொண்டுவென்றிகொண்டரக்கர் கோனுவந்துபோயினன்.

அக்கால்குபேரனுடைய பட்டணத்திலுள்ள சகலவளப்பங்களையுங் கைக்கொண்டு பிர்மாவினாற்கொடுத்த புட்பகவிமானத்தையும் பற்றிக்கொண்டு ஜெயம்பெற்று மிகாசந்தோஷமாய் அடாகுபேரா! நேரிலெனது வலிமையைக் கண்டும் இனிமேல் வீரங்காட்டுவையோ? பத்திரம்: சாக்கிரதையாயிரு. இதோ உனக்கு வரமளித்த சிவபெருமானிடஞ்சென்று ஒருநகை பார்க்கிறேன். என்று தனது சேனாசமுத்திரத்தை யெல்லாம் அப்புஷ்பக விமானத்தின்மேலேற்றிக்கொண்டு, அண்டகடாகங்களெல்லாந் திடுக்கிட்டலற ஆகாய மார்க்கமாய் வெள்ளிப்பங்கிரிக்கெதிராகச் சென்றமாத்திரத்தில், அப்பாற்செல்லமாட்டாமல் தடைபட்டுநின்று விட்டது. இவ்வாறு யாவராலுந் துதிக்கப்படுகின்ற கைலைமலையினால் தடைபட்டுநிற்கும் புஷ்பகவிமானத்தைத்தசக்கிரீவனானவன் கோபித்துப் பின்னுந் தூத்தியும் அது சிறிதுநகராமலிருப்பதுகண்டு, ஆ! ஆ! இதென்ன ஆச்சரியமென்று மந்திரிகளோடு யோசித்துக்கொண்டிருக்குங்காலத்து எமதையனாகிய திருநந்திதேவரானவர் அங்குவந்து அடா தசக்கிரீவா நீ எவ்வளவுபிராணி? உனக்கிதென்னவேலை? காலத்துக்கேற்ற புத்தி கொடுக்கிறதோ? இவ்வெள்ளியங்கிரிக்குத் தடைபட்ட விமானத்தை ஏன்வீணாய் நோகச்செய்கின்றாய்? இந்தக் கிரியின்காரணந் தெரிந்துகொண்டாயா? நானுகினுஞ் சொல்லுகிறேன் கேள். முத்தொழிற்குங் காரணராய், சத்துச்சித்தானந்த நிட்களப்பொருளானவராய், எப்பொருட்குமிறைவராய், முதற் கடவுளாய், பார்வதிசமேதராய், முப்புரமெரித்த மூர்த்தியாய், மான்மழு சதுர்ப்புய காளகண்ட திரிநேத்ரதாரியாய், இடபவாகனரூடராய், இளம்பிறையைச் சடாபாரத்திற் றரித்த பஞ்சாக்ஷரத் திருமேனியான சிவசாம்பவமூர்த்தியாய், ஸ்ரீ மஹாகணபதியையும் முருகக்கடவுளையும் பெற்ற முதல்வராய், அடியேனை யாதரிக்குந்தெய்வமாயிராநின்ற சிவபெருமானெழுந்தருளி யிருக்கப்பட்ட கைலைமலையென் றறியாயா? இடைவிடாத சிவபூசா துரந்தரனாயிருக்கிற உனக்கேன் தெரியாமற்போச்சுது? உன்புத்தி மாறி நடப்பது சரியல்ல. இனியேனு நானென்னுமகந்தையை விடுத்து, நான்சொல்லும் புத்தியின்படி அந்த ரிஷபவாகனக்கடவுளை வணங்கி அப்பாற்செல்லுக. அடாமூடா! இல்லையே லிவ்வரையைச் சுற்றிக்கொண்டு போய்விடு. சேனைகளு நீயுஞ் சிதறும்படியாய்வந்து நேரிடும். உனது திக்குவிஜயம் இந்தத்



திக்கிற் செல்லாது. திக்குமுக்கலாடித் தியங்காமுன்னமே பக்குவமாய்த் தப்பித்துக் கொள்ளென்று சொல்லினர்.

## இராவணன் திருநந்திதேவரால் சாபம் பெறுதல்.

கவி.

உரங்குடையவெஞ்சரமெனுஞ்சொல்பலவுஞ்சொலி யுயர்ந்தகுணனும்
அரன்றனதுநந்திதன் முகந்தனையிகழ்ந்திட வவன்குபிதனாய்
இரங்கலைகுரங்குமுக மென்றெனையிகழ்ந்தவு னிலங்கைநகரில்
குரங்குகள்புகுந்துநனி கொன்றிடுகநின்குலனை யென்றுரைசெய்தான்.

இவ்வண்ணமாகத் திருநந்திதேவர் தசக்ரீவனுக்கு அறிவுண்டாகும்படியான அநேகசொற்களை யெடுத்துக்கூற வதைக்கேட்ட இராவணன் கண்ணும்மனமுங் கலங்கும்படியாக மார்பைத்துளைக்கவிடுகின்ற, கொடிய பாணவருஷங்களைப்போல பலபலவார்த்தைகளைப் படபடவெனப்பேசி உயர்ந்த குணத்தையுடைய சிவபிரானது நந்திதேவனைநோக்கி அடாகுரங்குமுகமுள்ள மாடே நீயோ எனக்குப் புத்திசொல்பவன் இதோபார் என்பாணத்திற்கிரையாக்குகிறேனென்று சொல்ல வதைக்கேட்ட நந்தியம்பெருமான் என்னையல்லவா குரங்குமுகமென்று சொன்னாய், இன்னுஞ்சிலகாலத்தில் உனதிலங்கைபுரியும் உன்குலமுங் குரங்குகளினாலழியக்கடவது என்று சாபமிட்டனர்.

## இராவணன் கைலைமலையை யெடுத்தல்.

கவி.

சகட்டுருளையிற்றிரி பிறப்பிலிசபிப்பவொரு வுற்றதவசிப்
பகட்டிதுவெனக்கரு திரக்கமிலரக்கனோர் பழிப்பிலவர்மேல்
முகட்டெனதுபுட்பகம் விலக்குமயிலைக்கிரி முரிப்பனெனவோர்
தகட்டுகள்பட்டக்கடி தெடுத்தனன்மிகைத்தவர் துணுக்குறவே.

வண்டியினது சக்கரம்போல் மாறிமாறிப் பிறந்துழலுதலில்லாத நந்திதேவரிட்டசாபத்திற்கு தசக்கிரீவனானவன் யாவருமஞ்சும்படியாக வேய்க்கின்ற தவசிகளுடைய பகட்டுவார்த்தையைக்கொண்டென்னையமாற்றவந்தாயோ நானிதற்கஞ்சுவேனோவென்று இரக்கமில்லாத மனத்தையுடையவனாய் அடா நந்தி எனது புஷ்பகவிமானத்தைத்தடுத்த இவ்வெள்ளியங்கிரி முறிபட்டுத் தூள்தூளாய்ப் போகும்படியாக அப்பரமசிவனுமனங்கலங்கும்படியாய்ப் பேர்த்தெடுக்கிறேன் பாரென்று சொல்லிக்கொண்டே புட்பகவிமானத்தை விடுத்துத் தாழக்குதித்துத் திடுதிடுதிடுவென் றோடிவந்து, அக்கைலைமலையின் சாரலிலே யொருபக்கத்திலேபோய்த் தன்னுடைய கோரப்பற்களாலே உதட்டைக்கடித்துக்கொண்டு, தனதிருபது தோட்களையும் அப்பர்வதத்தினடிச்சந்திலே முட்டக்கொடுத்துத் தாக்கி, இருபதுகரத்தினாலேயும் அந்தக் கைலாசமலையை விடாது தன்னுடைய முழுப்பலத்தோடே பிடித்துக்கொண்டு ஆட்டினான். அப்படி யாட்டினமாத்திரத்திலே அந்தக் கைலாசமலையானது வேரோடே பெயர்ந்து, நடநடநடவெனவும்.

கிடுகிடுகிடுவெனவும்–குலுங்கியது; அப்போது உலகமெல்லாங்கவிழவும் அஷ்டதிக்குப்பாலர் – அஷ்டவயிரவர் – கருடகாந்தருவர் – சித்தவித்தியாதரர் முதல் இயக்கரீறாகச் சொல்லப்பட்டவர்களெல்லாங்கண்டு இடிவிழுந்த நாகம்போலே ஏங்கித் தத்தளித்து, இதென்ன விநாசகாலமோ தெரியவில்லையே: ஐ ஐயோ! நம்மையெல்லா முன்னமிவன் நிர்த்தூளிதஞ் செய்ததும் பெரிதல்ல, நமக்கெல்லாம் அபாயநேரிட்ட சமயத்திலே இந்தக்கைலாசபதியினிடத்திலே முட்டிக்கொள்ளலாமென்று சொல்லும்படியான வொருபலமிருந்தது அதுவுமிப்படிக்காய்விட்டதே; நாம்செய்தசிவார்ச்சனையும், தபமும், பரமேஸ்வரருடைய மலையைப்பெயர்த்தெடுக்கும்படி யாச்சுதே; ஒன்றுகிடசிவமேயிப் பாடுபடுமானால் இனியத் துஷ்டன் யார்க்குப்பயப்படுவான்? சுவாமியுமவனை இலேசாய் விடுவாரென்று நினைக்கிலோம். ஏதோ இவனை விளையாடவிடுத்து வேடிக்கை பார்ப்பது மவருடைய திருவிளையாடலென்று சொல்லப்பட்டது தான்.

மேலுமிவனுடைய மூதாதைகளான சுமாலி – மாலியவான் – மாலி – என்பவர்கள் கெருவித்துத் தேவர்களையெல்லா மதஞ்செய்யும்பொழுது, விஷ்ணுவானவரேற்பட்டு அவர்களையழித்துவிட்டாரல்லவா? அப்பேர்ப்பட்டவர்களே எள்ளைப்போலே நசுங்கிப்போயிருக்க இவனெவ்வளவு பஞ்சையென்றெண்ணியிருந்தது, இப்பொழுதல்லவா இவனுடைய செய்கையாற்றெரியவந்தது. இவனைவிட அவர்கள் கூடினவரையில் நல்லவர்கள்தானென்று நினைக்கவேண்டியதாய் இருக்கின்றது. ஓசங்கரா! ஓகங்காதரா! ஓ மகாதேவசம்போ! ஓ தெய்வமே! இனி யாங்கள் செய்யும்படியான காரியமென்ன விருக்கின்றது? வைத்தியன் கைவிட்டாற் போலாச்சுது. என்று வாய்விட்டுக்கதறிக் கண்ணீராறாய்ப்பெருகியோட வாடினார்கள். இவர்களிப்படிவாட ரிஷிஸ்வரர்களெல்லாரும் திடுக்கிட்டுக் கலங்கினார்கள். நந்திகேசுவரரும் இதென்ன யிவனுக்கு நேர்ந்த கேடுகாலம்? நமது வல்லமையினாலே யிவனை அழுத்திவிடவெண்ணினாலும் அது நடவாத காரியம். முன்பின்தெரியாத மூடனை நாம் சரிசமானமாக்கிக்கொள்ளக் கூடாது. ஆனபோதிலு மிவன்செய்கிறதோ உலகமுழுகிப்போகின்ற காரியமாயிருக்கின்றது. நாமு மவனுடைய இராச்சியத்திலே நானாவிதமான குரங்கினங்களெல்லா நெருங்கி அவர்களை நாசமாக்கிவிட வேண்டியதென்று சாபமிட்டிருக்கிறோம். இவனுஞ் சிலகாலத்திற் கப்பால் இராமபாணத்திற்குஇரையாகவேண்டியவனுவன். இப்பொழுது வந்த வினையானது தீரும்பொருட்டு எந்தையாகிய பரமசிவன் கிருபை யெவ்வணமோ? என்று பலகூறிச் சிந்தை கலங்கினார்.

அந்தவேளையிலே சந்திர சூரியர்களு மிதென்ன விந்தையென்று புத்திமயங்கி, இந்தப்பாவியா இங்கும் வந்தானென்று அந்தரத்திலேதானே தயங்கினார்கள், இப்படி யந்தக் கைலாசமலையை அடிமுடி குலுங்கும்படி தசக்கிரீவனானவன் தன்னுடைய புயாசலங்களாலே தாக்கி மோதி முட்டி யசையத்



தாக்கும் வேகத்தினாலுண்டாகும் சப்தத்தினாலும் – அவனுடைய அட்டகாசங்களினாலும் – அண்டச்சுவரெல்லாம் உடைபடும்படியாயும், தேவலோகமெல்லாஞ் செவிடுபடும்படியாயும், சொர்க்கமத்திய பாதாளலோகங்களெல்லாந் தத்தளிக்கும்படியாயும், ஆதிசேஷனென்று சொல்லப்பட்டவனும் திப்பிரமை கொள்ளும்படியாயும், அட்டகஜங்களும் ஆ! ஆ! எனக்கதறி நாற்றிசைகளிலு மோடும்படியாயும், நக்ஷத்திரங்களெல்லாம் அவல்போலே யுதிரும்படியாயும், எழுசமுத்திரமும் சுவறிப்போய் வெறுந்தரையாகும்படியாயு நேரிட்டன. அதுகாலையிலே சிவசங்கரபகவானுடைய பூதவர்க்கங்களெல்லா மலறிப் பயந்து, இதென்னமோ ஒரு பூச்சிவந்திவ்விதமா யதஞ்செய்கிறதே: ஓ சுவாமி! ஓ சிவசாம்பவா! ஓ திரிபுராந்தகா! ஓ சங்கரா! ஓ சாம்பவிமனோகரா! ஓ பஞ்சாட்சர சொரூபா! ஓ திரிநேத்திரதரா! ஓ காளகண்டா! ஓ திரிசூலா! ஓ சிவனே! ஓ மகாதேவப்பிரபு! இதென்ன அனியாயம்? இதென்ன விளையாட்டு? ஆச்சு: ஆச்சு: இன்னம் கொஞ்ச நேரத்திற்குள்ளே என்னசெய்வானோ தெரியவில்லை. இவ்விதமான துஷ்டனுக்கொரு சிக்ஷை பண்ணலாகாதா? என்று மனோவியாகூலத்தை அடைந்து பலவிதமாய்ப் போற்றிசெய்து நின்றார்கள்.

அப்பொழுது ஈஸ்வரனானவர் இவனை மெள்ள அழுத்திவிடவேண்டுமென்று நினைத்து மௌனமாயிருந்தார். உடனே யவரருகிலேயிருந்த லோகேசுவரியான உமையவளானவள் நடுநடுங்கி. ஐயோ! இந்தப்பாவியரக்கன் செய்யாதகாரியஞ் செய்கின்றானே: ஒய்யாரமும் பண்ணவிடலாகுமா? பொல்லாதவேலை செய்கின்றானிடத்தில் நாம் வல்லாண்மையென்று சொல்லப்பட்டதைக் காட்டாமலிருக்கலாமா? சுவாமி! உமக்குமிதொரு பெரிதானகாரியமா? மலையோ தலைகீழாய்க் கவிழ்கிறதாயிருக்கின்றதே: இன்னமும் பராமுகஞ்செய்யலாமா? நானினி யென்னசெய்வேன்? என்று மலைப்பெண்ணான அப்பார்வதியு மஞ்சிப் பரமசிவனைச் சேர்த்துக்கட்டிக்கொண்டு, சுவாமி! இரக்ஷியும் காப்பாற்றும். ஆதரியும். என்று பலவிதமாய்ச்சொன்னதில் கருணாசமுத்திரமான பரமேசுவரர் இளநகைகொண்டு சொல்லுகின்றார். ஓ என்னுயிர்க்குயிராகிய பெண்ணே! நீ யொன்றுக்கும் பயப்படவேண்டாம்.

## சிவபெருமான் கயிலைமலையையெடுத்த இராவணன் நசுங்கும்படித் தமது பெருவிரலாலூன்றவழுந்தி வருந்தித் தன் தலையிலொன்றைத்திருகி வீணையாகக் கொண்டு சாமவேதம்பாடப் பரமசிவன் மகிழ்ந்துவரமீதல்.

கவி.

மறைத்தவர்மறக்கமு மடக்கொடிநடுக்கமு மனத்திலுணராப்
பிறைச்சடைமுடிக்கடவுள் பொற்றிருவடிப்பெரு விரற்றலையினால்
நெறுக்கெனவழுத்திட வுடற்பொறைபதைப்பதிரு நாக்கிறைவனும்
கறுத்தவுருவத்தனு மறக்கருமனத்தன்வெரு விக்கதறினான்.

இப்படியென்று பார்வதிதேவியாருக்குப் பரமசிவன்சொல்லி, முனிவர்களுடைய பயமும், பார்வதியினுடைய நடுக்கமும், சந்திரசூடாதாரனாகிய சிவ

பெருமான்கண்டு இனி இவனைச்சும்மாவிடப் படாதென்று தமது திருவடிப்
பெருவிரலால் அழுத்தினர். அழுத்தினவுடனே இராட்சசனாகிய இராவணன்
தனதுதேகம் தாளாதவனாய் மனமஞ்சி நடுக்கமுற்று ஓவென்று பெருங்கூ
விட்டழுதனன். கேளும் ஸ்ரீராமா ! இப்படியாகத் தசக்கிரீவனானவன் துன்
பப்பட்டு, அவனுக்கு முன்னம் அன்னைவார்த்த செவ்வெண்ணெயும் வெளிக
ண்டு, தன்னையு மறந்து; பின்னையு மாவியுண்டோவில்லையோ வென்றிருக்கும்
பொழுது பொன்னுலகத்தாரு மற்ற மன்னர்மன்னர்களு முன்னி; ஒருத்தரு
க்கொருத்தர் பன்னிப் பன்னிக் களிப்புற்றிருந்தார்கள். அவ்வேளையிலே மா
ரீசன்முதலானமந்திரிகள் இதைக்கண்டுவிசனமடைந்து, இந்தமகோதரன்பேச்
சைக் கேட்டல்லவா இவனைவிடுத்தோம்? இப்பொழுதிவன் படுங்கஸ்தியை நா
ம் கண்ணுற்பார்த்திருக்கலாமா ? என்றிருதலைக் கொள்ளியி லெறும்புபோல
வாடினவர்களாய் நாமிதற்கொரு உபாயஞ்செய்யாவிடிற் பிழைப்பதரிதென்
றெண்ணி, உடனேயக்கயிலைமலையைச் சுற்றிப்போய் அவனைக்கண்டு, அவனு
டன் தாங்களுமிருந்த வியாகுலமடைந்து, ஐயா இலங்கேசா ! உலகத்திலே
பராக்கிரம சவுரியத்தினாலே மிகுந்த பலமுடையவன் பலமில்லாமல் தனக்கு
க்கீழ்ப்பட்டவனைப் பகைத்துத் துன்பஞ்செய்தால், அந்தத் துன்பமானது அ
வனினுமேலான பலமுடையவனாலே தீர்க்கப்படும். ஆனால் சகலமான தேவ
ர்களினு மேன்மையுடையவராய், தேவதேவனென்றும் — மகாதேவ
னென்றும் - பேர்படைத்து, தனக்குமேலானவரு மொப்பானவரு
மில்லாமல் தானேதனக்கு நிகராய் விளங்கும் பரமசிவனாலே வரப்பட்டது
ன்பம் அந்தச் சிவபிரானாலே தீர்க்கப்படுமேல்லாமல் வேறொருவராலே தீர்க்க
ப்படாது. ஆனதால் - அந்தப் பரமசிவனிடத்திலே யாவனொருவன் அறியா
மையினாலே ஆயிரங்குற்றங்கள் செய்யினும், ஒருகாலத்திலே அறிவுண்டாகி
ப்பின்பு நீயேகதியென்று நம்பித்தோத்திரம்பண்ணுவானாகில், அவர் அரு
ளுடையவராகையாலே அதற்குச்சந்தோஷப்பட்டு அவன் செய்த குற்றங்களை
யெல்லாங் குணமாகக்கொண்டு கிருபைசெய்தாரக்ஷிப்பார். எப்பொழுதுஞ்சர்
வசீவதயாபரனாகிய சாம்பசிவமே யாரினுமேலான தனிப்பொருளல்லது
வேறல்லர். அவர்படைத்தளிக்கும் சீவாத்மாக்களிலே நாமுமொன்றல்லவோ
அவரெங்கணு நிறைந்த தேசோமயப்பொருளாதலாலே அவர்க்கு நம்மிடத்
திலேயுங் கிருபாநோக்கமுண்டாகும். அதிலுமந்தப்பரமேஸ்வரனுக்குச் சாம
வேதத்திலே அதிகவிச்சையுண்டு. நீருமதிற்பழக்கமாதலால் அதற்குகந்து பி
ரசன்னமாவார். அப்பொழுதுமக்கு இந்த வியாகுலமுதலான கஷ்டநிஷ்டூர
ங்களெல்லா நிவர்த்தியாய் விடுகிறதுமல்லாமல், உமது மனோபீஷ்டப்படிக்கு
நினைத்தவரமெல்லாம் பெறலாமென்று ஒருபாயத்தை யுரைத்து அப்பால
கன்றார்கள்.

இப்படி உற்றமந்திரிகளுரைத்த உண்மை வாக்கியமானது நேத்திர
மற்றவனுக்கு ஊன்றுகோல் கிடைத்ததுபோலவும் - வரடும்பயிருக்கு வான
ஞ்சொரிந்தது போலவும் — இருந்தபடியால் தசக்கிரீவனானவன் அதையே



பெரிதாயெண்ணி, வேறுமுகாந்தரமென்ன விருக்கிறதென் றுதெளிந்து, இந்தச்
சமயத்திலே இவ்வளவுதான் நமக்குச்சொல்வா ரரெனவுங்கருதி, கராவினாலே
வத்தையுறுங் கரியழைத்ததுபோலே ஓ் மகாதேவசம்போ ! ஓ சிவசங்கரதே
வா ! ஓ சாம்பவிமனோகரா ! ஓ கைலாசகிரிநாதா ! ஓ கமலபொற்பாதா ! ஓ பா
லலோசனா ! ஓ பரமதயாளா ! ஓ அரகரசிவனே ! ஓ அருள்தருபரனே ! ஓ ரி
ஷபவாகனா ! ஓ நின்மலசொரூபா ! ஓ சந்திரசேகரா ! ஓ சடாதரதற்பரா !
ஓ முப்புரதகனா ! ஓ முனிவர்கள் வந்திதா ! ஓ நான்மறைக்கெட்டா நாதாந்
தசோதி ! ஓ சுத்தநிர்மலனே ! ஓ சுபாஸ்கரவொளியே ! ஓ மேருவில்லுடை
யாய் ! ஓ திரிசூலா ! ஓ மான்மழுவேந்தி ! ஓ வானவர்பூசிதா ! ஓ பா
ர்வதிசமேதா ! ஓ பக்தர்கள்சகாயா ! ஓ விரிஞ்சனுங்காணா வெள்விடைக் க
திபா ! ஓ பஞ்சாட்சரனே ! ஓ பரவெளிசிவனே ! ஓ தந்திமுகத்தனைத் தந்தரு
ள்மூலா ! ஓ சரவணபவனைத் தாங்கியசீலா ! சரணஞ்சரணம் சங்கராசரணம்.
தருண மறிந்தெனைத்தாங்குவாய் சரணம். அத்தாசரணம். அமலாசரணம். நித்
தாசரணம் நிறைசிவசரணம். போற்றி போற்றி புனிதவெள் விடையோய்.
போற்றி போற்றி புண்ணியவிறையோய். போற்றி போற்றி புங்கவர்க்கிறை
யோய். போற்றிபோற்றியென் புன்மதிதவிர்த்தோய். ஓ சுவாமி ! ஏழையான
நான் தெரியாமற்செய்தபிழையை க்ஷமித்துக் காக்கவேண்டும். இத்தருணம்
உம்மையல்லாமல் வேறுதுணையில்லை. என்று வாய்விட்டுக்கூவி, தாயாகிய ப
ரமேசுவரியையும் இவ்விதமே பிரார்த்தனைசெய்துகொண்டு, தன்னுடைய பத்
துத் தலைகளிலே ஒருதலையையும், இருபதுகைகளிலே ஒருகையையு மறுத்து
யாழாகச்செய்துகொண்டு, அந்த மலையின்கீழேதானே தான்படும்படியான
அவத்தையுடனே ஆயிரவருடமட்டும் அருமையோடு சாமவேதகானஞ்
செய்தான்.

அப்படியிவன் செய்துவரும் சாமவேதகானத்தினாலே சர்வசீவராசிகளு
ம் தேர்ச்சியடைந்தது மல்லாமல், இரிஷியீசுவரர் முதலானோரு மகிழ்ச்சி அ
டைந்தார்கள். அதுகாலையிலே வெள்ளியங்கிரியி லிராநின்ற சாம்பசிவ மூர்த்
தியானவர் ஆனந்தமடைந்திருப்பதுகண்டபார்வதாதேவிபரமேசுவரரைப்பா
ர்த்து, சுவாமி ! அடியாள் இப்பேர்ப்பட்ட விநோதமான கானத்தை இதுகா
றுங் கேட்டதில்லை. இதுவோ தேகம் பரவசமுறும்படியானதாயும், அற்புத
ந்தரப்பட்டதாயும் இருக்கின்றது. இப்படி கானஞ்செய்வோ னெவனோ தெ
ரியவில்லை. ஆதலா லிதைநாம் சிரவணித்தும் சும்மாவிருப்பது ஞாயமல்ல: அ
வனிடஞ்சென் றின்னானென்றறிந்து கருதினவற்றைத் தருங்கடமை நம்மத
ல்லவாவென்றாள். இதைக்கேட்ட செகதீசன் உமாதேவியைப்பார்த்து, பெண்
ணே ! உனக்கு நினைவில்லையோ ? ஆயிரவருடத்திற்கு முன்னர் இந்தப் பர்வ
தத்தை அடியோடேயொருத்த னெடுக்கவந்த காலத்திலே, நீ அச்சமுற்று எ
ன்ன செய்வேனென்று தழுவிக்கொண்டாயே: அவனல்லவா இவ்விதக் கான
ஞ்செய்கின்றது? அந்தவுள்ளன் பெனக்குமுண்டு. ஆனாலவன் துன்மார்க்கனா
யிருக்கின்றபடியானும், முன்னமேதானே பிரம்மாவினிடத்திலே தக்கவரங்

களைப்பெற்ற பலத்தினாலே நம்மையே முழும்போடவந்தவனாயிருந்தபடியாலும், இப்பொழுது நாமவனைக் காணும்பட்சத்திலே ஏதாவதொருவரம் தர வேண்டியதாய் நேரிடுமல்லவோ? அவ்வரத்தைக்கொண்டு பின்னுமவன் உலகத்தை நாசம்பண்ணுவானே யென்கிறஎண்ணமேயல்லது, வேறில்லை யென்று சொன்னார். அந்த வசனங்கேட்ட லோகேசுவரியான பார்வதியம்மன் பின்னும் தக்கபடிசொல்லி, அப்பால் நடக்கவேண்டியவைக் கென்னசொல்வீரென்றாள். பரமேசுவரன் அந்தேவியாருடைய கருத்திற் கிசைந்தனர்.

கவி.

அவ்வழியவனும்பாட வரன்மகிழ்ந்தழைத்துக்கொண்டு
மூவகையுலகுமாள மூன்றரைக்கோடியாண்டும்
எவ்வகைப்படையும்வெல்லுஞ் சந்திரவாளுமீந்தான்
பொய்வகைநிருதன்பெற்று விடைகொண்டுபோகலுற்றான்.

கேளும் ஸ்ரீராமபத்திரா! ஆதிசேஷனும் தன்புத்தியினாலெண்ணுதற்கருமையாகிய சாமவேதகானஞ் செய்ததில் மனமிரங்கிய ஈஸ்வரனும் ஈஸ்வரியு மழவிடைமேலெழுந்தருளி தசக்கிரீவன்முன் வந்தவனையழைத்தார்கள். உடனேயவன் மலையழுத்தினபாரம் நீங்கி ஜென்மசாபல்யமானேனென்று அந்த வருத்தத்தில் நின்று நீங்கிவந்து அவர்களது திவ்யசரணாரவிந்தங்களில்" தீர்க்கதெண்டன்செய்து, இருபதுகண்களினும் நீர் தாரையாய்வடிய நிமிர்ந்து, சுவாமி! அடியேனை யாதரியும். இக்குற்றம் பொறுத்தருளும். நாயினுங் கடையனாகிய சிறியேனை உமது கடைக்கண்ணாற் பார்த்துக் கிருபையுடன் கைதூக்கியாட்கொள்ளும். ஓ என்னையாளுங் கடவுளே! எனப் பலவாறாய்ப்போற்றி வருந்தினான். இப்படி வருந்துகின்றவனை சுவாமிபார்த்து, அடா தசக்ரீவா! நீ கருதிய வரங்கேள்" தருகிறேனென்று திருவாய் மலர்ந்தனர். அம்மாத்திரத்தி லத்தசக்ரீவன் இந்தமட்டுக்கும் விட்டால் அதுவே போதுமென்றெண்ணி யிருப்பவனாதலால், யாதுந்தோன்றாதவனாய் அசைவற நின்றான். அவன் குறிப்பையுணர்ந்த பரமசிவன் சற்றாலோசித்து, இம்மலைப்பாரம் நீங்கினதே உயிர்ப்பிச்சைதந்த வரமெனக்கொண்டிருக்கின்றான். இவன் நம்மை வரங்கேளான். எனத்தாமே ஜீவகாருண்யத்தினால் திருவுளமிரங்கி, அப்பா தசக்ரீவா! நீ கேட்காவிடினும் உனது உயர்வாகிய சாமவேத கானத்திற்கு உள்ளமகிழ்ந்தோமாதலால், உனக்கு மூன்றரைக்கோடி ஆயுளுண்டாகுக. என்றுகூறி எதிர்த்த சத்துருக்களெல்லோரையுங் கொல்லத்தக்க ஓர் கூரியவாளும் கொடுத்தார்.

அப்போது தசக்ரீவனுக்கு முன்னிருந்த வருத்தமெல்லாந் தீர்ந்து எதாப்பிரகாரமாய் சந்தோஷமுற்றபோதினும், மிகவு மெலிவுற்றவனாதலால் வாயாற்சொல்லவுந் திடமற்றுத் தாகம்வேண்டிக் கையை எடுத்துக் குறிப்பித்தான். உடனே ரிஷபவாகனரூடராகிய ஈஸ்வரன் நந்திதேவர் முகத்தைப் பார்க்க, அவர் தேவர்களை யெச்சரிக்க, க்ஷணத்துள் அமுதகலசத்தைக் கொண்டு



வந்து எதிர்வைத்தார்கள். உடனேமிகவும் விடாய்ப்பட்டவனாதலால்அவனுடன் அக்கலயத்தை அப்படியே யெடுத்துத்தட்டாது உட்கொண்டான். நேரில் கிருபையாற் பார்த்திருந்த பார்வதிசமேதரவனைநோக்கி, அப்பா தசக்ரீவா! இனி யுனக்கோர் பயமில்லை. எப்போதும்போல உன் புஷ்பகவிமானத்தில் ஏறிக்கொண்டு நினைத்தவிடஞ் செல்லலாம். என்று ஆசிகள்கூறி யெழுந்தருளினார். அப்பால் தசக்ரீவன் மறலிகையிற்சிக்கிய ஆன்மா மீண்டதுபோல முன்னினும் பாங்காய்த் தேர்ச்சியடைந்து, மகாபலத்தைப்பெற்று, தன்னுடைய ராணுவங்களோடும், புஷ்பகவிமானத்தேறி வெகு கீர்த்தியுடன் இமயமலையை நோக்கிவருகின்றான். இந்தச்செய்தி கேட்டரிஷிகளோடு தேவர்களெல்லோருங்கூடி, இந்தத் தசக்ரீவன் முன்பு பிரமதேவனிடத்திற் பெற்ற வரத்தினாலே ஒருகாலத்திலுஞ் சலனமில்லாத கயிலாசகிரியை யடியோடே பேர்த்தான். இப்பொழுது அந்தப் பலத்துடனே பரமசிவன் கொடுத்த வரத்தைக்கொண்டு எந்த வுலகத்தை யெவ்விதஞ் செய்வானோ தெரியவில்லை. இனி நாமெல்லோரு மிவனால் என்னபாடுபடுவோமோ? என்று மனங்கலங்கிப் பயந்து சீக்கிரமாகப்போய் மகாவிஷ்ணுவினிடத்திலே முறையிட்டார்கள்.

## தேவர்களின் வேண்டுகோட்கிரங்கி மகாவிஷ்ணுவானவர் உபாயத்தினால் மூன்றரைக்கோடி யாயுளை அரைக்கோடியாக்கல்.

கவி.

தெண்டொடுகுடையது செக்கையேந்தினன்
குண்டிகைநிறைதரக் குளிர்ச்சாத்தினன்
தெண்டிரைக்கடலினுட் சென்றவாறெலாம்
நின்றெனக்குரையென நிருதன்கூறுவான்.

அதுகேட்ட மகாவிஷ்ணுவானவர் அவர்களை ரக்ஷிக்கும்பொருட்டுத் திருவுளங்கொண்டு, முன்னமொருகால் மகாபலிச் சக்கரவர்த்திக் கெதிராகப் போனதுபோலக் கையிலே குடையுங் கமண்டலமு மேந்தி, அற்புதமான பிரமசந்நியாசி வேஷங்கொண்டு தசக்ரீவனுக்கெதிரே வருகிறார். அப்பொழுதவன் சீக்கிரமாக விமானத்தினின்றுங் கீழேகுதித்து, எதிர்கொண்டுவந்து வணங்கி நமஸ்கரித்துப் பாதபூசைபண்ணி அனேகவுபசாரங்கள் செய்தான். மகாவிஷ்ணுவானவர் அவனைப்பார்த்து, ஓ இலங்காதிபதி! உன்னைப்போலும் பெருமைபடைத்தாரெந்தவுலகத்திலு மில்லை. ஆனாலுமுன்னுடைய விர்த்தாந்தங்களைச் சொல்லுவாயென்று கேட்க அவனவரைப் பார்த்துச் சொல்லுகிறான். ஓ அந்தணர் பெருமானே! என்னிலும் பெருமையுடையவன்போல எனக்கு மாறுபாடுபேசிய குபேரனைச்செயித்து வெற்றிகொண்டேன். சிவபிரானுடைய கயிலாசகிரியை யடியோடும் பெயர்த்தேன். அந்தப்பலத்துக்குச் சந்தோஷப்பட்ட பரமசிவன் எனக்கு மூன்றரைக்கோடி ஆயுளும், அவருடைய சூலத்துக்குச் சமானமான வொருவாளாயுதமுங் கொடுத்தார். இதுதான் என்னுடைய விர்த்தாந்தமென்று சொல்லவும் அதற்கவர் அவனைப்பார்த்து,

ஓ அதிவீரப்பிரதாபம்பெற்றதசக்ரீவமகாராஜனே! நீ யொருவருக்குங் கிடைக்காத வரங்களைப்பெற்றாய். நீ யெத்தனைகால மிருந்தாலும் அத்தனை காலமும் உலகத்துக் குபகாரமேயானதால், குறையாயிருக்கிற அரைக்கோடி வருஷமும் பெற்றாயானால் உனக்கு நிகரானவர்க ளொருவருமில்லை. எல்லா வுலகத்திலு முன்னுடைய வதிகாரஞ் செல்லுமென்று சொல்லிப் போயினர்.

அதுகேட்ட தசக்ரீவனானவன் உடனே யவ்விடத்தினின்றுநீங்கி, அதிசீக்கிரமாகக்கயிலாசகிரிக்குப்போய்ச்சிவபெருமானைநோக்கி யனேகமான தோத்திரங்கள்பண்ணி மிகவும் வணக்கத்துடனே நின்றான். இப்படியவனிற்கும்பொழுது பின்னு நீ யிங்கேவந்தகாரிய மென்னவென்று பரமசிவன்கேட்க, அதற்கவன் குறையில்லாமற்படிக்கு அரைக்கோடி வருஷமெனக்குக் கொடுக்கவேணுமென்று கேட்டான். அப்பொழுது பரமசிவன் நீ கேட்டபடியே யுனக்கு அரைக்கோடிவருஷங் கொடுத்ததன்றிமலையையெடுத்தபோது நாமூன்றியபெருவிரற்பாரத்தாலழுந்தி நீ அழுதபடியால் உனக்கு இன்றுமுதல் இராவணனென்னும் பெயருந்தந்தோமென் றனுக்கிரகஞ்செய்தார். இப்படிக்கு முன்பு பெற்றமூன்றரைக்கோடி வருஷம்போய் அரைக்கோடிவருஷமாக வரம்பெற்றதைத்தேவர்களுமுனிவர்களுங்கேட்டு, இவ்வளவாகிலும்பரமசிவனுமகாவிஷ்ணுவுமுபகாரஞ்செய்தருளினார்களே யானதாற்சிலகாலஞ்சென்றாகிலு நாமெல்லோருஞ் சவுக்கியத்தை யடைந்திருக்கலாமென்று ஆலோசித்திருந்தார்கள்.

வரையெடுத்தபடலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

எட்டாவது,

# திக்குவிஜயப்படலம்.

இப்படலத்தில் சிவபிரானிடத்தில் வரம்பெற்றுவரும் இராவணன் வழியில் வேதவதியென்னும் தவப்பெண்ணைத்தீண்ட வவள் சாபம் பெற்றதும், பின்னர் மருத்துராஜனுடைய யாகத்தை யழித்ததும், அனரண்யராஜனை அங்கநோகச்செய் தவனாற் சாபம்பெற்றதும், அப்பால் எமதருமராஜனையும் - ஆதிசேஷனையும் - நிவாதகவசரையும் - வருணனது புத்திரர்களையும்-காலகேயரையும் போராடி வென்று, பின்னரிலங்கைக்குப் போகவிருந்த தன்னை மகோதரன் கலைத்துநிறுத்த உடனே அவன் யோசனையால் அப்சரஸ்திரீகளாதிபலவகைஸ்திரீகளையும் சிறையெடுத்து, அதுவேபிரயாணமாகத் தன் சேனைகளோடும் புஷ்பக விமானத் தேறிப்போய் இலங்காபுரியை யடைந்ததும், காலகேயர் போரில் கணவனாகிய வித்துருசிங்குவை யிழந்த சூர்ப்பநகை வந்து முறையிட வவளைத் தண்டகாரணியத்திற் கனுப்பியதும், பின்பவன்

No. 79. இராவணன்தவப்பெண்ணாகியவேதவதியாற்சாபமடைதல்.



இராவணன் மருத்துராஜாவின்யாகமழித்தல்.



உத்தரகாண்டம். இராவணன் வேதவதியாற் சாபமடைதல்.

கொலுமுகத்துவந்து தனதுதிக்குவிஜயச்சிறப்பை யாவருக்குங்கூறி நிகும்பலையில் யாகமியற்று மேகநாதனைக்கண்டழைத்துவந்ததும், தான் சிறையெடுத்துவந்த ஸ்திரீசனங்களைச் சாரணராலழைப்பிக்கக்கண்ட விபீஷணன் சில நீதியையும் மதுவென்னு மசுரனால் தன் சிறியதாயாகிய கும்பீநசிக்குநேர்ந்த விபத்தையுங்கூறி அதைமறப்பிக்க உடனே தனது புத்திரமித்திராதியரோடு அவன்மேற் படையெடுத்துப்போய் அச்சிறியதாயார் வேண்டுகோளா லவனைச் சன்மானித்திருந்ததும், அப்பாலவன் தெய்வலோகத்தை நாடிச்சென்று ஓர் பூங்காவி லிறங்கியிருக்கையில் நளகூபரனை நாடிச்செல்லு மரம்பையை வலிதிற்புணர்ந்து அவள் சாபம்பெற்றதும், பின்னரப்பூங்காவைக் கடந்து சென்று இந்திரலோகத்திற் போர்புரிகையில் அவ்விந்திரன் சுமாலிமுதலாயினோரைக் கொன்று பராக்கிரமித்து நிற்றலை மேகநாதனறிந்து ஓர் மாயையா லவனைப் பாசங்கொண்டு கட்டி யாவரோடு மிலங்காபுரிக்கு மீண்டு சிறைக்கூடத்தடைத்ததும், அதுகண்டு கலங்கிய தேவர்கள் வேண்டுகோளால் பிரமதேவ னங்ஙன மெழுந்தருளி மேகநாதனுக்குப் பலவரத்தோடு இந்திரஜித்துவென்னும் பேருங் கொடுத்து அவனை யச்சிறைக்கண்ணின்றும் விடுவித்ததும் சொல்லப்படுகின்றது.

## இராவணன் வேதவதியாற் சாபமடைதல்.

### கவி.

கங்கைசேர்சடைக் கண்ணுதல்காதலி
தங்குபங்கன் றனதருள்பெற்றவத்
துங்கமால்வரைத் தோணிருதன்றிசை
யெங்கும்போர்செய் திமவனமெய்தினன்.

கேளும் ஸ்ரீராமா! கங்காபவானியைத் தரித்த ஜடாபாரத்தையும், நெற்றிக்கண்ணையும், உமையவள்பொருந்திய வாமபாகத்தையுமுடைய சிவபிரானது கிருபையைப்பெற்ற உயர்ந்தபர்வதாகாரத்தையொத்த புயங்களையுடைய இராவணனானவன், எங்கும் போர்புரிந்து ஜெயம்பெற்று இமவனமென்னும் கானகத்தை அடைந்தனன். அங்கே கிள்ளைகள் கொஞ்சும் புஷ்பங்கணிறைந்த ஓர் தண்டலையின்கண், காமமுதலானவையகற்றி அக்கினிவளர்த்தி அதனிடைநின்று மாதவமியற்று மாணிக்கநிகர்த்த ரூபலாவண்யசவுந்தரியமுள்ள ஓர் கன்னிகையைத் தசக்ரீவன்பார்த்தான். அம்மாத்திரத்திலவன் ஸ்தம்பம்போல அங்ஙனேநின்றுபிரமித்து, இத்தகைய சௌந்தர்யவதி யிவ்விடமேதுகாரணமோ தவஞ்செய்யத் துணிந்ததென்றும், உலகமாயையை நிவர்த்திசெய்து அழிவில்லாப் பரம்பொருளை வேண்டி அமர்ந்தனளோவென்றும், வயதுற்ற வாலைப்பருவத்தினும் வதுவையாகாத மடமங்கையாயிருப்பதனை லெவ்வாறுநினைக்கக் கூடுமென்றும், இளமைக்கேற்ற வாகைப்புருஷனை விரும்பி யிவ்வாறியற்றினளோவென்றும், அதுவாயிருக்குமாகில் இவட்கு நம்மினுஞ்சிறந்த தலைவனுங் கிடைப்பானோவென்றும், சதுர்முகனால் நாமும் வேண்டியவுருபம் பெறத்தக்க வரம்பெற்றிருக்கின்றோமல்லவாவென்

றும், அஃதிவளுக் கெவ்வாறு வெளியுறும்? யாம்விளம்பித் தெளிவுறச்செய்வதே சரியென்றும், ஒருவேளை தேவனொருவனால் நமக்கிவ ளிசைந்தாலும் இசையாவிடினும் இவளை வலியக்கைப்பற்றுவதே சரியென்றும் பலவாயோசித்து: காலஹேதுவாய் (ஊழிற்பெருவலி யாவுள மற்றொன்று சூழினுந் தான் முந்துறும்.) என்றபடி தான் நினைத்ததே சரியென்று விமானத்தை விடுத்து, தனியாய் யாதினும் பற்றற்றுத் தன்னைமறந்து கண்மூடியிருக்கும் அவளையடுத்து, ஓ பெண்கள்நாயகமே ! நீயார் ? உனக்கென்ன பெயர் ? நீ தவத்துக்குவந்த காரணமென்ன ? என்றுரத்த சப்தமாக வானமு முடைபடும்படியாய்க் கெர்ஜித்துக் கேட்டான்.

இவ்விதமானகுரலைக் கேட்டவுடன் தவத்திலிருந்தவேதவதியென்பவள் கண்களைவிழித்துப் பார்த்து, ஓ ! ஓ ! என்னகாரியஞ் செய்தோம் ? மகாரணியத்தில் புருஷசஞ்சார மிராதென்றெண்ணி யிருந்தோமே இவன் யாரோ தெரியவில்லையே: ஆயினும் தக்கபடி சொல்லுவோமென்று அக்கன்னிகையானவள் அவனைப்பார்த்து, ஓ இராஜனே ! நீர் கேட்டதற்கு நான்சொல்வதியாதெனில் — அந்தணரில் மிகுந்த குசத்துவ மகாமுனிவருடைய குமாரத்தி நான். என்பெயர் வேதவதி. என்னுடைய பிதா சதாகாலமும் சந்தியாவந்தனாதி நித்திய நைமித்திய கருமங்களிலே எவ்வளவுந் தவறாமல் விதிப்படி வேதபாராயணம் செய்துவருவார். அப்படி செய்துகொண்டு வருகிறநாளையில் அவரோதப்பட்ட வேதசொருபத்திலே நின்று நான்பிறந்தேன். அப்படி வேதத்திற்பிறந்த காரணத்தால் எனக்கு வேதவதியென்று பெயரிட்டார். நானோ கன்னிகாஸ்திரீ. என்னை மணம்புரியவேண்டுமென அமரர்களும் — அரக்கர்களும் — அசுரர்களும் - மற்றியாவரும் வந்து எனதுபிதாவை வினவினார்கள். எனக்கவர்கள்பேரி லிஷ்டமில்லாமையால் நடவாதென்றுரைத்தேன். அதனால் அதிலோர் அரக்கனாகிய சம்புவென்பவன் அதை மனதில் வைத்துக்கொண்டு, என்பிதாவை இரவில்வந்து மரணமாக்கிவிட்டுப் போய்விட்டான். அதுகண்ட என்தாய்மிகவும் வருந்தி என்தந்தையுடன் அக்கினிப்பிரவேசமாயினாள். யான் சிந்தைநொந்து இவ்வேடங்கொண்டு, என்மனதில் நெடுநாளாய்க்கருதியிருக்கும் என்வடிவுக்கேற்ற புருஷனாகிய ஸ்ரீமகாவிஷ்ணுவை நினைத்துத் தவமியற்றுகிறேனென்றாள்.

இதைக்கேட்ட தசக்கிரீவன் — ஓ பெண்ணே ! நானோபுலஸ்தியப்பிரமாவின் சந்ததியில் வந்த பௌத்திரன். எனதுநாமகரணம் தசக்கிரீவனென்று உலகஞ் சொல்லும். விச்சிரவப்பிரமாவே எனக்குப் பிதாவாயிருக்கிறார். நானிவ்வுலகத்துக் காதாரகர்த்தாவாகிய கைலாசபதிக்கு அன்பன். எனதுவல்லமையால் அக்கைலையங்கிரியை பெயர்த்தவீரப்பிரதாபன். மூன்றுலகமும் புகழ்கொண்ட இலங்கைப்பட்டணத்தி லரசாட்சிசெய்யப் பட்டவன். மகத்தாகிய ஈஸ்வரவரமல்லாது பிரமாவினால் சமயத்துக்கேற்ற ரூபமெடுக்கத்தக்க அனுகூலவரமும் பெற்றிருக்கின்றேன். ஆதலால், நீகோரின அந்த விஷ்ணுவான



வன் என்னினுஞ் சிறந்தவனோ ! நீ பெண்புத்தியால் அவனை யிதுவரையிலும் பெரிதாய்க் கருதினாய். இனியந்த நினைப்பைவிட்டு என்னை விவாகஞ் செய்துகொண்டாயானால், அந்தவிஷ்ணு முதலானபேர்களும் உன்னோடு நல்வார்த்தை சொல்லுவார்கள். அரம்பை ஊர்வசிமுதலான தேவஸ்திரீகளும் உன்னேவல்கேட்டு நடப்பார்கள். இந்திராணி முதலானவர்களுக்குங் கிடையாத சகல போகபாக்கியங்களையு மனுபவித்துக்கொண் டிருப்பாய். என்று சொல்லித் தன்னாலியன்றவரையு மிராக்ஷதமாய்கைத் தந்திரமெல்லாஞ்செய்து நின்றான்.

இவையனைத்தையும் தவத்தினிற்கும் கன்னிகையாகியவேதவதியானவள் கேட்டு, சிந்தைபொறுக்காமல்அந்த தசக்கிரீவனைப் பார்த்து, அடா இராக்ஷதப்பதரே! இதற்குள் மறந்துவிட்டாயோ? உன் வல்லமையும் சாமர்த்தியமும் ஒருவாறுநடவாமல் வெள்ளியங்கிரியின்கீழ்அகப்பட்டுப்பிராணாவஸ்தையடைந்து, பின்பு பல்லைக்காட்டிக்கெஞ்சியாவருநங்கஞ் சொல்லும்படியாகச் சகஸ்திரவருடம் சாமகானஞ்செய்து சிவபெருமானருளினால் தேறி தப்பித்துக்கொண்டுவந்த வுனக்கும் ஒருவாயா? அஃதென்ன நானறியாத குலாவலா ? ஓரேவெண்மையா யிருக்கின்ற இரண்டு வஸ்துவாகிய இலவணமும்—கற்பூரமும் — சரியெனக்கொள்வாரு முண்டோ? அடாநிர்மூடா ! நானெனுமகந்தைகொண்டு உன்னாலான பிரட்டெல்லாம் செய்யவந்தாய். நீயா அந்த சாக்ஷாத் ஸ்ரீமகாவிஷ்ணுவுக்குச்சமானமாவாய்? வானத்தைமுட்டிப்பறக்கினும்ஊர்க்குருவிபறவைராசனுக்கு நிகராமா? ஓனாய்க்குணமுடைய துஷ்டா ! இந்தக்ஷணம் அப்பால் அகன்றுவிடு. இவ்விடம்நிற்காதே. என்றியம்பித்தான்மௌனத்திருந்தாள். உடனே தசக்கிரீவன் கோபங் கொண்டு, ஆலகால விஷம்போற் சீறி அதிக்கிரமித்து, இப்பொழுதே உன்னை இலங்கைக்குக்கொண்டுசெல்வேனென்று அந்தக் கற்புடைய வேதவதியின்கையைப்பற்றிவலித்தனன்.

கவி:

வாடாமலரோன் வரச்செருக்கான்மற்றெனைநீ
கூடாதனசொல்லிக் கூசாதுதீண்டினையால்
ஏடாவுனக்கு மிலங்கைக்குமுன் கிளைக்கும்
கேடாகத்தோன் றுவே னென்றாள்சினைத்தாள்.

இவ்விதந்தன துகரத்தைப்பற்றியிழுத்தவனைமகாவுக்கிரகோபத்தோடு பார்த்து, அடா துன்மார்க்கப்பயலாகிய இராட்சசா ! தாமரைமலரில் வாசஞ்செய்கின்ற பிரமனது வரம்பெற்ற கெர்வத்தால், அடாதவார்த்தைகளைச் சொல்லி மனங்கூசாது என்னைத்தீண்டினையல்லவா ? உனக்கும், உன்னிலங்காபுரிக்கும்,உன்பந்துகளாகிய இராட்சசர்களுக்குங்கேடுவரும்படிச்சீதையாகப்பிறந்துவந்து கருவறுக்கிறேன், என்று சாபமிட்டு அவன் கண்ணெதிரிலேயே திடீரென்று மனவுறுதியினால் தீயில்குதித்து, பின்பு மிதுலாபுரியில் யாகசாலைக்குப் பூமியையுழுங்கலப்பைநுனியிற் சீதாதேவி யம்மனாக அவதரித்துத் தேவரீரைத் திருமணம் புரிந்தனன்.

## இராவணன்மருத்த ராஜனுடைய யாகமழித்தல்.

கவி.

வேதவதிதான்சீறி வெக்கியின்மூழ்கியபின்
போதமிலாவரக்கன் புட்பகத்தின்மீதேறி
ஏதமிலாவிந்திரனே யாதியிமையவரும்
மாதவருஞ்சேர்ந்த மருத்தன்மகமடைய,

இவ்வண்ணம் வேதவதியானவள் மிகவுங்கோபித்துச் சாபங்கொடுத்து அக்கினியில் மூழ்கினாள். அவ்வேதவதியினதுசாபத்தைக்கேட்ட இராவணன் அஞ்சாதவனாயினும்,கிஞ்சித்து மனதுநொந்துவருவதெல்லாம் வரட்டும். அநுபவித்துத்தான் தீரவேண்டும். என்ன செய்வதென்று ஒருவாறுதேறி தைரியம்விடாமல் திடகாத்ரவீர பராக்ரமத்துடன் தன் சேனைகளையெல்லாம் புஷ்பக விமானத்திலேற்றிக்கொண்டு, அங்கிருந்து புறப்பட்டு சகலவிடங்களிலுஞ் சுற்றித் திக்குவிஜயஞ் செய்துகொண்டு, பலமன்னர் மன்னர்களையெல்லாம் வெற்றிகொண்டு கப்பணம்பெற்று, அளவிறந்த ஸ்திரீகளையுஞ் சிறையெடுத்து, மகாவுக்ரத்துடன் இமையகிரிக்கருகில் வருகிறான்.

அங்கே பொருளும்-புண்ணியமும்-குணமும் - கொடையும் - செல்வமும் – கல்வியும் – சீரும் – சிறப்பும் – அறமும் – பொறுமையுமுள்ள மருத்தராசனானவன் கற்பகவனத்திற்கு நிகராய் வானத்தை முட்டும் விநோதமான ஒரு பூஞ்சோலையில் யாகசாலைநியமித்து, அதில் சங்கவர்த்தனரென்பவரை ஆசானாக வைத்துக்கொண்டு, யாககுண்டத்தில் அக்கினியைமூட்டி, வசிஷ்டர் - வால்மீகர் - நாரதர் - கௌதமர் – கண்ணுவர் – அகஸ்தியர் – ஜமதக்கி - பௌண்டரிகர் - சதாநந்தர் - பரத்துவாசர் – விஸ்வாமித்திரர் – தூர்வாசர் - பராசரர் முதலியரிஷிக்கூட்டங்களும், இயக்கர் – விஞ்சையர் – கருடர் – காந்தருவர் – கின்னரர் முதலாகியவர்களும், அஷ்டவசுக்கள் – தேவர்கோனாகிய தேவேந்திரன் - இயமன் – அக்கினி – வருணன் – வாயு – குபேரன் இவர்கள் முதலானவர்களும் புடைசூழும்படி அந்த யாகசாலை மண்டபத்தின்கண் ஆசானுரைத்தபடி கங்கைநீராடி நார்மடியுடுத்தி, தனது பத்தினியுடனமர்ந்து வேதவிதிப்படி யாகத்தை நடாத்திவருகிறான். அந்தயாக முடிவுபெற்று ஆகுதிகொடுக்குந் தருணத்தில் தசக்ரீவன் அச்சோலையின்வழியாய் வந்தனன்.

அவ்வழியாகவந்த சர்வசண்டாளனாகிய இராவணனைக்கண்ட தேவேந்திரன்பயந்து, மயிலுருவங்கொண்டான். வருணன்பயந்து அம்ஸவடிவானான். இயமன் காகவடிவமாயினான். குபேரனுமோணானுருவுகொண்டான். மற்றைத்தேவரெல்லாரும் ஒவ்வொரு மாயரூபங்கொண்டு தாங்கள் தாங்கள் பிழைக்கும்படி ஒவ்வொருதிசையிலோடி யொளித்தார்கள். தேவர்களெல்லா மிக்கெதியானபிறகு யாகசாலையில் தனித்துநின்றமருத்துராஜனை இராவணன் பார்த்துச் சொல்லுகிறான்.



அடா மருத்தா ! இந்த மஹேஸ்வரயாகத்தைச் செய்துமுடிக்க உனக்கும் யோக்கியதையுண்டா ? நீ என்னைவிட அவ்வளவு மேன்மையை வகித்தவனா ? நான் திரிபுவனத்துக்குந் தலைவனாகிய இராவணனென்றறிந்தும், எனது திடகாத்ரவீர சௌரியபராக்ரமங்களைக் கண்டும், என்முன்னேதானே உனக்கிவ்வளவு செருவமா ? அளகேசனது நந்தவனத்தைக் கெடுத்துப் புஷ்பக விமானத்தையுங் கைக்கொண்டு, அவனையும் அலங்கோலப்படுத்திய செய்தி யறியாயா ? நான் கைலாயமலையை யெடுத்தசேதி நீ நன்றாய்க் கேள்வியுற்றும், உனக்கேனிந்த மமதைகொண்ட செய்கை? ஊர்க்குருவிக்கேனிராயர் சிம்ஹாசனம் ? கேட்பாரில்லையென்று செருவித் திதைச்செய்ய முயன்றாயோ? நல்லது: என்னுடன் போர்செய்வதொன்று,இல்லாவிட்டால் நீ தோற்றேனென்று சொல்வதொன்று. இவ்விரண்டிலொன்று நடவாவிடில்நீயுமுனது யாகமுமிமைப்பொழுதில் நிர்மூலமாகச்செய்வேனென்று அண்டச்சுவரும் இடிபடகின்றுரைத்தான். அவ்வார்த்தையைக்கேட்ட மருத்துராசனுக்குக் கோபம்பிறந்து, விழிகள் கோவைப்பழம்போலச் சிவந்து, மீசைதுடிக்க புஜங்களைத் தட்டிக்கொண்டு தான்செய்யும் யாகத்தையும்விடுத்து இராவணனை நோக்கி, அடா துன்மார்க்கா ! அடா நிர்மூடா ! அடா துரோகி ! அடா சர்வசண்டாளா ! நானனேககோடி காலமாக முடிக்கநினைத்திருந்ததை இப்போது நான் செய்யப்பார்த்து இதற்கு நீ புண்யங்கட்டிக்கொண்டு; சிவபூசைவேளையிற் சிந்தைகலங்கச் செய்யும் பாவிகளில் நீயுமொருபாவிபோல் உன் துஷ்டத்தனத்தினால் இந்த யாகசாலையை யழிக்கவந்தாய்.

அடா பேதாய் ! உன்னையும், உன்னுடன் வந்தவர்களையும், உன் திக்குவிஜயத்தையும், அரைநொடிக்குள் அழிக்கிறேனென்று சிங்கம்போலக் கெர்ஜித்தெழுந்தான். மிகுந்த பராக்ரமசாலியாகியமருத்துராசனிவ்வாறு கோபங்கொண்டெழுந்ததைக்கண்ட அருகிலிருந்த ஆசானாகிய சங்கவர்த்தனர் அவனைத் தடுத்து, ஓ மகாராசனே ! உமதுகீர்த்தியும் ஜெயப்பிரதாபமும் திரிபுவனங்களுக்குந் தெரிந்திருக்க, இவனென்னமோ பஞ்சை உம்மை லேசாய் மதித்தானென்று இந்தவேளையிலவனை யெதிர்த்து மகத்தாகிய யாகத்துக்குக் குறைவுதேடிக் கொள்ளுவானேன் ? அவனென்ன உமக்கு நிகரானவனா? நமது காட்டினிடத்தில் எத்தனைவித ஜெந்துக்களைக் கண்டிருப்போம். அவைகளில் இவனும் ஒருவிதப்பூச்சியென் றறிந்துகொள்ளும். யாக நிறைவேறிவருகின்ற இந்த நல்லசமையத்தில் அவனுடன் சண்டைக்கு நிற்பதைவிட, நான்தோற்றேன்: நீ செயித்தாய்: என்று வாயினாற்சொல்லி அவனை மகிழச்செய் தனுப்பிவிடுவதே சர்வோத்தமமாயிருக்கின்றதென்று குருவாகிய சங்கவர்த்தனர் திருவாய்மலர்ந் தருளியதை மருத்துமகாராஜனறிந்து, ஆம்:இச்சமயத்தில் இதைவிட வேறியோசனையென்ன விருக்கின்றது? இவ்வாறு சொல்லியனுப்புவதில் நமக்கென்னகுறைவு? எவ்விதத்திலும் காரியமே பெரிது. குருவுரைத்தவாக்கியமேபெரிதென்றதைச் சிரமேற்கொண்டு, இதுவுமொரு தந்திரந்தானென் றிசைந்து அவன்முன் சென்றான்.

இப்படி நற்குணமும் பொறுமையும் — கல்வியும் — செல்வமும் — படைத்து மேலோர்சொல்லுக் கெதிர் விளம்பாத மருத்துராசனெனவன் இராவணனையடுத்து, ஐயா முப்புவனமும் புகழும் பிரதாபலங்கேஸ்வரா! நான் உமக்கோரெதிரா? இன்னவகை போர்செய்வதென் றறியேனே. ஏதோ தெரியாமையால் இந்தயாகத்தை வளர்த்துகின்றேன். சிறியபிள்ளைகள் விளையாடுவதுபோற் செய்யாநின்ற வினையைப் பெரியோர்களாகிய நீங்கள் கண்டுகொள்ளவுந் தருமா? அல்லது போரிடுவதுந்தான் தருமமா? என்றுசொல்லிப் பின்னுநானே யிளைத்தேன். நீரே வெலித்தீர். என்றுஞ் சிறப்பித்துச் சொன்னதில் தசக்ரீவன்-சபாசு! சபாசு! என்று தோள்களைத்தட்டி, மருத்தனெனக்குத்தோற்றானென்று வீராவேசங்கொண்டு தன் சேனைகளுடன் புஷ்பகவிமான மூர்ந்து ஆகாயமார்க்கமாய்ச் செல்லத்தொடங்கினான். அப்போது இதுசங்கதிகளை மாயவுருக்கொண்டு கண்டிருந்த தேவேந்திரன் இனிப்பயமில்லை. நான்பிழைத்தேனென்று சிந்தைமகிழ்ந்து தனது சுயரூபங்கொண்டு அவ்வழியாய் வந்த ஓர்மயிலைக்கண்டு சொல்லுகிறான்.

ஓ மயிலே! அந்தத் துன்மார்க்கனாகிய இராவணன்பொருட்டு நான் உனதுவடிவெடுத்ததனால், இனிமேல் என்னுடைய அடையாளமாக இந்தத்திரிபுவனத்தி லுண்டாக்கப்பட்ட உங்கள் கூட்டங்களுக்கெல்லாம் தோகைகளிடத்தில் என்னைப்போல்சகஸ்த்ர நேத்ரம் பிரகாசிக்கக்கடவது. நான் முகிலூர்தியாகையால் அம்மேகத்தைக்கண்டு தேகம் புளகாங்கிதமாய் மிகுந்த சந்தோஷமுற்று, அற்புதமாகிய உங்களது பசுங்கலாபங்களை விரித்து நர்த்தனஞ் செய்யக்கடவீர்கள். மேலும் நாகங்களினால் உங்கட்கொரு துன்பமில்லாமலும் வரங்கொடுத்தேனென்றான். பிறகு எமதருமராஜன்காகத்தை நோக்கி, நானுமந்தத் துஷ்டனிமித்தம் உனது ரூபமெடுத்தபடியால் இனியுலகத்துள்ள உங்கள் குலத்துக்கெல்லாம் பிதுர்த்திதியில் அன்னம் படைப்பார்களாகில் அப்பிதுர்க்களெல்லா நிரயத்தாழாமல் முத்தியாகிய கரையை அண்டுவார்கள். இதுவுமன்றி எக்காலத்திலும் நீங்கள் நோயென்பதை யணுகாமல், தீர்க்காயுளும் பெற்றிருக்கக் கடவீர்களென்று ஆசீர்வதித்தான். அப்பால் சமுத்திராசனாகிய வருணனெனவன் நான் பிழைத்தோட வெடுத்தது அம்ஸரூபமாதலால், இனி யிவ்வுலகின்கண் அன்னங்களெல்லாம் என்னைப்போல வெண்மைநிறமாகக் கடவனவென்று வரமளித்தான்.

அச்சமையத்தில் வச்சிரவண்ணனாகிய வடதிசைத்தலைவன் ஓணானைப்பார்த்து, ஓணானே! நானிறவாதிருக்க உனதுருவத்தைக் கொடுத்தாயல்லவா? ஆதலால், உனக்குச்செய்யும் பிரதியுபகாரமுமுண்டோ? ஆகிலும் நீயுமுன் குலமும்எவ்வெச்சமயத்தில் என்னென்னவுருவம்வேண்டுகின்றீர்களோ அவ்வவ்வுருவமுங்களுக்குண்டாகுக. இன்னும் உங்களுருவம் செம்பொன்னிறமாயிருக்கவென்று அனுக்கிரகித்தான்.



தேவேந்திரன் முதலாகிய தேவர்களெல்லாம் மருத்துமகாராஜன்செய்யு மகேஸ்வரயாகத்தையடைந்து திருப்திகரமாக அவிர்ப்பாகத்தைப்பெற்றுத் தங்கள்தங்களுலகமடைந்தார்கள். இவ்வித மகேஸ்வரயாகத்தை இதுவரையில் பதினான்குலோகத்தில் ஒருவருஞ் செய்ததில்லை. இராஜாதிராஜ ராஜமார்த்தாண்டனாய் இத்திரேதாயுகத்தில் இதைச்செய்து முடித்தவனிவனொருவன்தான். இந்தயாக மிலேசானதல்ல. அற்பமான புருஷரால் முடியத்தக்கதுமல்ல. ஆதலின் இதன் பெருமையை எம்போன்றவருஞ் சொல்லி முடியாது. பிறகு கொடுமையும் பலமும்பொருந்திய இராவணனாகிய இராட்சசன் அநேகமகுடமன்னர்களையும் அசுரர்களையும் அரக்கர்களையும் செயித்துக்கொண்டு பஞ்சாசத்கோடி பூமண்டலங்களிலுந் தன் கீர்த்தியை நாட்டித் திக்குவிஜயஞ்செய்து வருகின்ற இராவணனெனவன் உமது சூரியவம்சபரம்பரையி லவதரித்தவனாகியும் உம்முடைய மூதாதைகளாகிய பாட்டன்மார்களி லொருவனாயுமிருந்த இராஜாதிராஜ ராஜகெம்பீரவீரப்ரதாபனாகிய அனரண்யமகாராஜன் அரசாட்சிசெய்துவரும் உமது அயோத்தியாபுரி பட்டணத்தினுள் வந்தனன்.

### இராவணன் அனரண்யமகாராஜனை வெல்லுதல்.

கவி.

எம்மாலுமிருக்காலு மொருக்காவுணரிமையோர்
தம்மாலுமொருக்காலு நினைக்குந்தரமல்லா
இம்மாநகரனரண்ணிய னென்போனெழின்மதில்சூழ்
அம்மாநகர்மன்னற்கிவை யுரைத்தானடலரக்கான்.

எங்களைப்போலொத்த ரிஷீஸ்வராலும் இருக்குமுதலிய நான்குவேதங்களாலும், சகலதேவர்களாலு மொருதரமு நினைக்குந் தரமல்லாத ஸ்ரீராமமூர்த்தியே! இவ்வயோத்தியாபுரியில் வந்த அத்துஷ்டனாகிய இராவணன் யுத்தபேரிகையறைவித்து அனரண்யமகாராஜனை யுத்தத்திற்கழைக்க வந்து மகாராஜனைப்பார்த்துச் சொல்லுகிறான்.

அடா அனரண்யா! நீ என்னையும், என் சேனாசமுத்திரத்தையும், எனது ஜெயக்கொடியையும், தேவபுஷ்பக விமானத்தையும் பார்க்கவில்லையா? அரனுறைகைலைமலையையும், அளகேசனையும், மற்ற ராஜர்களையும், யாகஞ்செய்த மருத்துராஜனையும், நான் திடுக்கிட்டலறச்செய்திட்ட சேதியுங்கேட்கவில்லையா! என்னை நீ கண்டவுடனெழுந்துவந்து வணங்காமலும், திறைப்பணத்தை யளக்காமலும், அல்லது உயுத்தத்திற்குவராமலுமிருப்பது? இரவிகுலத்திற்பிறந்தவனுக்குக் குறைவுவருமென்றோ? நீயுமொரு க்ஷத்திரியன் தானா? அடா மதியீனனே! நீ சண்டைக்குவருகிறாயா? அல்லது தோற்றேனென்று சொல்கின்றாயா? இவ்விரண்டில் உனது இஷ்டமென்ன சொல்லென்றுகேட்டான். இதைக்கேட்டு அனரண்யமகாராஜன் அடா ராவணா! யுத்தத்திற்குவருகிறேன், நீ செய்வதைச்செய்யென்று தனது சேனாசமுத்திரங்களைக் கூட்டிக்கொண்டு யுத்தத்திற்காரம்பித்தான். அதுகாலையில் இரண்டுவகைச் சேனைகளும் கோபாவேசங்கொண்டு தங்களைத்தாங்கள் மறந்து, அளவற்ற யுத்தங்களைச் செய்தார்கள்.

அக்கா லிரர்வணனுனவன் ஆரம்பித்து வில்லைவளைத்துப் பல்லைக்கடித்து அந்த அனரண்யராசனை மடக்கிக்கொண்டு, அவன்மீதில் அளவிறந்த அகோரமாகிய நாராசங்களை யெடுத்து ஏகம் - தசம் - சதம் - சகஸ்திரம் - என்று சொல்லும் கணிதப்படிக்குமுறையே பிரயோகஞ்செய்தான். அம்மாத்திரத்தில் தூளிப்படலம் உலகங்களையெல்லா மூடிக்கொண்டதனால் இருளானது பரந்து ஒருவர்முக மொருவருக்குத் தெரியாதபடி மகா பயங்கரத்துடன்வந்து அந்த ராசனுடைய தேகமெல்லாஞ் சல்லடைக்கண்களாகத் துளைத்தன. அதினால் மூர்ச்சையாய்விழுந்த அனரண்யமகாராசன் தன்தேகத்திற்பாய்ந்த அஸ்திரங்களின்வேதனை பொறுக்கமாட்டாமல், தனக்குவந்த அவமரியாதையை எண்ணி எண்ணி நெஞ்சம்புண்ணுகிக்கண்ணைத்திறந்து அந்தத் தசக்ரீவனைப்பார்த்துச் சொல்லுகிறான்.

கவி.

காலத்தினைஞாலத்தவ ரெவரேகடப்பவர்தாம்
ஆலக்கொடுமனத்தோயவ மதித்தாயெனையதனால்
கோலத்தசரதராமனென் குலத்தோன்கொடுக்கணையால்
தாலக்குலைபோனின்றலை தரைவீழ்கெனச்சபித்தான்.

அடா! விஷம்போலுங் கொடியமனதையுடையஇராவணகாதகா! ஏதோ நீதான் பலாஷ்டியனுயிருந்து என்னைப் பூமியிற்கிடத்தினை அவரவர்கட்குவருநற்காலந் துற்காலபலத்தையார்தான் கடப்பார்கள் என்னை மிகவும் அவமதித்தாயாதலால், என்றுரகுவம்சத்தில் என்போன் மார்களிலொருவனுகிய தசரதச்சக்கரவர்த்தி பிறந்து பூலோகமுழுமையும் ஒரு குடைக்கீழாளப் போகிறான். அக்காலத்தில் அந்தசரதச்சக்கரவர்த்திக்கு உன்குலவைரியாகிய அந்த விஷ்ணுவே ஸ்ரீராமராக அவதாரஞ்செய்யப்போகின்றார். அவரது பாணங்களால் உன்தலைபத்தும் பனங்குலைபோலறுந்து பூமியில்விழப்போகிறது. உன் குலமும் நாசமடையப்படும். என்று சாபமீந்து பரமபதநாட்டுக் கெழுந்தருளினான். இராவணனு இச்சாபத்தை ஒருவரவுசிலவுவைப்பவன் அவ்வரசனிறந்தபிறகு அவ்னது சகலவளப்பங்களையு மழித்து, திக்குகள்தோறும் பாணப்பிரயோகஞ் செய்துகொண்டு அப்பால்கடந்தான்.

இவ்வண்ணம் யாவரையும் துவ்சஞ்செய்து வருவ்வழியில், திரிலோகசஞ்சாரியாகியும் மகாரிஷியாகியும் விஞ்ஞானத்தில் வல்லவராயுமுள்ள நாரதமகாமுனிவர் தேவலோகம் போகின்றவராயும் வருகின்றார். இந்தராவணனை அங்குகண்டார். கண்டவராகியநாரதர், "உள்ளமனமெரியஉதடுபேழஞ்சொரிய" என்னும்பழமொழிபோல் இராவணனிடத்தில் விசுவாசமுள்ளவர்போல் காட்டி ஆசீர்வாதஞ்செய்து அப்பா இராவணேஸ்வரா! எங்கிருந்துவருகிறாய்? எங்குசெல்கிறாய்? உனது. புத்திரமித்திரகளத்திராதிகளோடு பந்துக்களெல்லாம் சுகந்தானு சொல்லென்றுகேட்க, இராவணன் நாரதமகாமுனிவருக்கு வந்தனஞ்செய்து சொல்லுகின்றான்.

ஓ முனிவரேறே! எனக்கு மூத்தவனுகிய வச்சிரவண்ணனென்னும் குபேரனை வென்றேன். பிறகு வெள்ளியக்கிரியை உமாபதியுடன் தூக்கித்

№. 80. இராவணன் அனரண்யராஜனைவென்று அவன்சாபம்பெறுதல்



இராவணன்எமதருமராஜனைவெல்லுதல்.



உத்தரகாண்டம்.



களைத்துச்சாமவேதகானஞ்செய்து.அவரதுசொரூபத்தைத்தெரிசித்ததுமல்லா
மல் உயர்ந்த வரங்களையும்பெற்றேன். அதன்மேலும் காட்டில்தவத்தினைச் செ
ய்துகொண்டிருந்த வேதவதியென்னுங் கன்னிகையைச் சிறையெடுக்கத்தினை
த்ததில் அவள்சாபமளித்து இறந்தனள். மருத்துராசனுடனும் போர்செய்து
வெற்றிகொண்டேன். அப்பால் சகல பூவனங்களிலும் திக்குவிஜைபஞ் செய்
து பகுதிப்பணம் வாங்கிக்கொண்டு, அயோத்தியாபுரியில் அரசாட்சிசெய்யும்
அனரண்ய மகாராசனையும் ஜெபித்து, அளவற்ற ஸ்திரிகளையும் சிறையெடுத்
து, இப்பாலெனது இலங்கைக்குப் போகவேண்டி இவ்வழியாய்வந்து இவ்வி
டமிறங்கியிருக்கின்றேன். நானே திக்குவிஜையஞ்செய்து ஜெயத்தைப்பெற்
ற வீராதிவீர ஜெயப்பிரதாபனுதலால், இன்னமும் என்கைக்கு அகப்படாம
லிருக்கப்பட்ட மன்னர்களிருந்தால் அதை யோசித்துச்சொல்லுமென்று கே
ட்டான். அதற்கு நாரதமுனிவரானவர் திரேகங்குலுங்கச் சிரித்து இதனைச்
சொல்லுகின்றார். யுத்தத்தில்வல்லமைபெற்றவில்வீரசிகாமணியாகியஇராவண
மகாராஜனே ! சிங்கமானது ஒருநரியுடனேபோய்ப் போர்புரியுமா? நீவினைவி
னாற்கட்டுண்டு பசிநோய் வயோதிகம் இவற்றால் மிகவுந் தளர்ச்சியடைகின்ற
மனிதர்மேல் பகைகொண்டு கொல்கின்றாயென்று கேள்விப்பட்டோம். நீ
யுத்தத்தில் புறங்காட்டாத புஜபலசாமர்த்தியத்தை யுடையோன். வாள்
முறியும்படிப் பிணத்தைவெட்டிச் செயம்பெறுவதாற் கீர்த்தியுண்டாமோ
உண்டாகமாட்டாது: உனக்குச்சமமான பகைவர்களோடுபோர்புரிந்து செய
ம்பெற்றால் புகழுண்டு.பெற்றதாயானவள்புரண்டலறியழும்படியாகப் பிள்ளை
யினது உயிரையும் சிறுகுழந்தைக ளழுதழியும்படியாக மாதாபிதாக்களுயி
ரையும் கொண்டுபோகின்ற குற்றம்நிறைந்த கொடுமைமிக்க இயமனதுவலை
யிலகப்பட்டுவருந்து மானிடரைக்கொல்லுதல் சரியல்லவே. எல்லாரையுங்
கொல்லும்படியாகிய இயமனை நீவென்றால் உமக்குப்புகழுண்டென்று சொ
ன்னார்.

## இராவணன் இயமதருமனை வெல்லுதல்.

கவி.

என்றுமுனியிவைகூறவிராவணன்கேட்டெம்பெருமானியம்பிற்றன்றே
இன்றுசெயுமிதுவல்லால்யானறிவதொன்றுண்டோவென்றுகூறி
நன்றுபெரிதெனமகிழ்ந்துநாரதமா முனிகூறுநல்லையின்னே
சென்றுநமன்றன்னோடுபொருச்செய்து யவன்றோற்கை திண்ணமென்றான்.

இப்படியென்று நாரதமாமுனிவர் கூறியவார்த்தைகளைக்கேட்ட இராவ
ணன், சுவாமி ! தாம்சொல்லிய இயமனை இப்பொழுதேபோய் வெற்றிகொள்
வேன். இச்சமயம் இக்காரியத்தை நடத்தாது வேறொருகாரியத்தை நான் ந
டத்தத் தொடங்குவதில்லையென்று மிகவுஞ்சந்தோஷித்து, தனது மந்திரிப்பிர
தானியர்களைநோக்கி இப்பொழுதே இயமபுரியடைந்து இம்மகாமுனிவர்சொ
ல்லிய இயமனைவென்று வரவேண்டும். எப்படியும் அவன்தோற்பது நிச்சய
மாகும் ஆதலால் உங்களுடைய திருப்திகரம் என்னவென்று கேட்டனன்.

அவர்களில் மாரீசன்முதலியசிலவிவேகிகள் இந்நாரதர் கலகப்பிரியர் இவருடைய வார்த்தையினால் தீமைவருமன்றி நன்மைவராதென்றும், மகோதரன்முதலிய சில அவிவேகிகள் எவ்வண்ணமாவது நமனைவென்று புகழ்பெறுவதே உசிதம். ஐயா! உம்முடைய புயவலிமையென்ன உமது பிரதாபமென்ன இவர்களுடைய வார்த்தைகளைக் கேளாதேயும். இவர்களெல்லாம் பயமுடையவர்களென்றுசொல்லினர்களே, அவ்வாறே தனக்குள்ளேயும் நிர்மானித்துக்கொண்டு, உடனே யுத்தசன்னத்தனாய் வீரியங்கூறிச் சகல மேளவாத்தியங்களுடனே எமலோகத்திற்குச் சேனைகளைப் பிரயாணப்படுத்தித் தானும் விமானத்திலேறினான்.

இப்படி யிவன் விமானமேறுமுன்னமே நாரதமுனிவரானவர் அவனிடத்தினின்றும் செலவுபெற்றுக்கொண்டு, இவனையறியாமல் இவன் போகாமுன்னமே தாமந்த எமனிடஞ்சென்றனர். அவ்வியமனும் மிகுந்த வணக்கத்துடனே தெண்டனிட்டு கைகூப்பிநின்று ஐயா மகதியாழ்த்தலைவரே! தேவரீரிவண் வந்தகாரியமேதோ? அடியேன்செய்த பூசையினுடைய பலத்தாலே தங்களுடைய திருவடியைத் தரிசிக்கப்பெற்றேன். எனச்சொல்லவு நாரதரிஷியானவர் இளநகையுடனே சிரமசைத்துப்பெருமூச்சுவிட்டு இயமனைப்பார்த்துச் சொல்லுகின்றார்.

அப்பா இயமதருமராஜனே! நான் கைலாசம்—வைகுந்தம் இவ்விடங்களுக்குச்சென்று பூலோகசஞ்சாரஞ்செய்து வரும்வழியி லோரிடத்தில் இலங்காபுரியாளு மிராவணனைக்கண்டு அப்பா இராவணா! என்னகாரணமா யிங்கு வந்திருக்கிறாயென்றேன். அதற்கவன் தன்னுடைய வீரமெல்லாஞ் சொன்னதுமன்றி, எமலோகத்திற்குச் சென்று எமனுடனே யுத்தஞ்செய்து அவனைக்கொல்லப் போகிறேனென்றான். நானுஞ் சிலவார்த்தைகளால் வேண்டியவரையினும் போதித்தேன். அவன் கேட்பவனாயில்லை. ஆதலினெனக்குஅதைக்கேட்டவுடனே மனந்தாளாமல், இதனை நம்முடைய ஆப்தனுக்குச் சொல்லாது அப்பாற்செல்வது தர்மமல்லவென்றெண்ணி நேரா யிங்குவந்தேன். அவனை நீ யற்பமாய் நினைக்கவேண்டாம். இராக்ஷதசித்தன். வெகு பராக்கிரமத்தையுடையவன். உன்னுடைய விஷயத்திற் சிறிதேனும் இலக்ஷியமில்லாதவன். அவன்வந்தெதிர்ப்பானாயின் மறுபடியு மவனை உயிருடனிலங்கைக்குச் செல்லவொட்டாமல் உனது முழுபலத்தையுங் காட்டி, அவனது சேனைமுழுமையையும்வாட்டி, உனது மழுவாயுதத்தைத் தீட்டி, சமூலமுமாட்டி, உனது கீர்த்தியை நிலைநாட்டி வைப்பாயென்று எண்ணுகிறேன். ஆச்சுது: இந்நேரமுன்னுடைய பட்டணத்திற் கருகிலே வந்துகொண்டிருப்பான். நீ சற்றேனும் இளையாதே: என்றுனைத்தட்டிக் கூர்சீவிக் கோபமெழுப்பிவிட்டு, அவனிடஞ் செலவுபெற்றுக்கொண்டு அப்பாற் போயினர். இதற்குள் போர்க்கோலங்கொண்டெழுந்த ராவணனானவன் அண்டம்வெடிக்கக் கர்ச்சனைசெய்துகொண்டு, உகாந்தகால உருத்திரனைப்போல் எமபுரத்தைநோக்கி வருகின்றான்.



ஐயா தசரதநந்தனா! அப்படியவன் வருகின்றபோது அந்தயமபுரத்தில் அவன்கண்ட அதிசயங்கள் சிலவுள. அவை யாவனவென்றால், பூருவசன்மத்திலே பாபத்துக் கேதுவான ஸ்திரீகளுடைய மோகத்தினாலே காமவிகாரத்தி லழுந்தாத நல்லமனசை யுடையவர்களும், சரீரத்தை நிலையென்றெண்ணாம லழியாத புகழாகியசரீரத்தை விரும்பிப் புண்ணியத்தையே செய்தோர்களும், நியமந்தவறாத உத்தமப்பிராமணர்க்கு நல்ல புண்ணியகாலங்களிலே பூதான முதலான புண்ணியதானங்களைச்செய்தோர்களும், அந்தப் புண்ணியதானங்களை யேற்றுக்கொண்ட உத்தமபுருஷர்களும், சந்நியாசிகள் வாசஞ்செய்கிறதற்கு மடங்களும் கிரகஸ்தன் முதலானவர்கட் கிடங்களுமுண்டாக்கிக் கொடுத்தோர்களும், கோடைகாலத்திலே தண்ணீர்ப்பந்தல் வைத்துத் தாகந்தீர்த்தவர்களும், பனிக்காலத்திலே குளிருக்கு வஸ்திரங் கொடுத்தோர்களும், இருக்குமிட மில்லாதவர்களுக்கு வீடுகொடுத் திருக்கச்செய்தோர்களும், வியாதிகளைத்தீர்த்துச் சவுக்கியப் படுத்துவித்தோர்களும், அறியாமையினாலே மூடரானவர்களிகழ்ந்து பேசுங்குற்றங்களைப் பொறுத்துக் கொள்ளும் பொறுமையுடைய பெரியோர்களும், பிராமணரையும் பசுக்களையு மாபத்துக்காலத்திலே இரக்ஷித்தோர்களும், சுவர்க்கலோகவாசிகளாய்ச் சுவர்ணமயமான மண்டபங்களிலே வீற்றிருப்பதைப் பார்த்து ஆச்சரியத்தை யடைந்தப்பாற்போயினான்.

அப்படிப் போம்பொழுதில் உலகத்திலே பொருளுக்காசைப்பட்டு நியாயப்பிழையாக வழக்குத்தீர்த்தவர்களும், பதிவிரதையான தன்னுடைய ஸ்திரீயைவிட்டுப் பரஸ்திரிகளை யாசைப்பட்டவர்களும், உயிர்களைக்கொன்று தின்னுங் கொலையாளரும், கோட்சொல்லிக் குடிகெடுக்கும் வஞ்சகரும், செய்தநன்றி மறக்கும் விசுவாசகாதகரும், கல்விகளைக்கற்று வல்லமைபொருந்திய நல்லறிவுடைய பெரியோர்களை நிந்தைசெய்தமூர்க்கர்களும், பெற்றதாய் பசித்திருக்கவுண்ட பெரும்பாவிகளும், களங்கமில்லாமல் நம்பி யுறவுகொண்டசினேகிதனை வஞ்சித்துநடந்த கபடர்களும், ஆபத்திலுதவுவானென்று நாடோறும் இரக்ஷித்துவைத்திருந்த ராஜாவை யுத்தமுகத்திலே சத்துருக்களிடத்திற் காட்டிக்கொடுத்த இராஜத்துரோகிகளும், கோபத்தினாலே யொருவனிடத்தில் வயிரம்வைத்துக் குடிகேடுசெய்த கண்டகரும், மற்றொருவராலே மனக்கவலையுற்றுவந் தடைந்தோர்களுக் காதரவுசெய்யாமலவர்களைச் சீறியிகழ்ந்த கொடியோர்களும், ஆபத்தான காலத்திலே யடைக்கலமென் றடைந்தோர்களைக் கைவிட்ட குணக்கேடரும், எல்லோர்க்குங் குற்றம்பேசி யிகழ்ச்சிசெய்த ஈனரும், பகுத்தறியு மறிவினையுடைய இவ்வரிய மானிடப்பிறப்பிலே பிறந்து நாவினைப்பெற்றிருந்தும் அரஹோம் நமாவென்றும் — நாராயணாய நமாவென்றும் — துதித்தறியாத பாவிகளும், தெய்வநிந்தைசெய்த தீயோர்களும், பின்னும் பலபலவிதமாயுள்ள பாவங்களைச்செய்த கொடியோர்களும், உதிரமும், தசையும், மூளையும், வழும்பும், இந்திரியமுமாகச்சேறுபட்டுக்குழம்பி நிறைந்

திருக்குங் கோரநரகங்களிலே, நாவினுஞ்சரீரத்திலும் புழுக்கள்சொரிய நெடுங்கால மழுந்தித் துன்பப்பட்டுக் கிடப்பதைப்பார்த்தான்.

இப்படி அநேகம்பெயர்கள், - நரை - மூளை - உதிரம் - குடர் - இவைகளெல்லாம் ஒன்றாய்க்குழம்பி சேறுபட்டிருக்கும்படியான நரகிற்கிடந்து வருந்துகின்றவர்களை இராவணன்கண்டு,நீங்களெல்லாமிவ்வரு நரகினின்றுங்கரையேறுவீர்களென்று யாவரையு மேற்றிவிட ஏறினவர்களெல்லாம்பிழைத்தோம் பிழைத்தோமென்று துன்பத்தினின்று நீங்கி இராவணனைவாழ்த்தினர்கள். அதுகண்ட அந்நரகக் காவலாளர்கள்கோபித்து இராவணனுடன் போர்புரிய மகாவுக்கிரத்தோடு வந்தனர்கள். அவ்வண்ணம் வந்தவர்களாகிய நரகாதிபர்களைக்கண்டு இராவணன் மகாகோபங்கொண்டவனாகி இருபதுகைகளிலும் ஆயுதங்களை வாரிவாரியிறைத்து அவர்களின் சிரம்வேறு கரம்வேறு உடல்வேறு கால்வேறு வேறாகத்துண்டிடும் படியாகக்கொன்றனன். அதிற்றப்பி நின்றசிலர் ஓட்டமாயோடி இயமதருமனைக்கிட்டி வணங்கி, ஐயா! யாரோ இராவணனென்பவனாம் அவன் வைசுவியங்கள்நாடுவந்து நரகத்திற்கிடந்து வருந்திய பாபாத்துமாக்களையெல்லாம் கைதூக்கி மேல்விடுத்தான். அதைக்கண்ட நாங்கள்பொறாது அவனுடன் சண்டைக்குப்போனோம் போனவர்களைகளையுமவன் ஆயுதங்களினால் சம்மரித்துவிட்டான். அதிற்றப்பிவந்தவர்கள் யாங்களென்று கூறினார்கள்.

இதைக்கேட்ட இயமனானவன் முதல் மந்திரியான சித்திரகுப்தனை வரவழைத்து, அப்பா சித்திரகுப்தா! நாம்சத்தியமாய் இவ்விடத்திலே நமதாவையிலு மெத்தனைநாளைக் கழித்திருந்தால், புத்தியில்லாத ராவணனானவன் தன்னுடைய வித்தையையெல்லாங்காட்டி நமதரசை பாழாக்குகின்றான். சத்துருப்போலேவந் தெதிர்ப்போனைச் சித்திரவதை செய்யாமற் சும்மாவிடலாமா? இதற்கு நீ என்னவுத்தரவு சொல்லுகின்றாய்? என்றுவினவவும் மித்திரனான சித்திரகுப்தனுஞ் சற்றுநேரம் யோசித்து, சத்தலோகமுஞ் சஞ்சரியாநின்ற நித்தனான நாரதரிஷிசொன்னதிலே குற்றமில்லை. உத்தமனென்றே எண்ணவேண்டும். இனிநாம் பத்திரமா யாவருஞ்சென்று அவனைச்சுற்றிக்கொண்டு தத்திகெட்டுத் தடுமாறும்படியாய் மொத்தினால், நத்திவந்தடைக்கலம் புகுவான். மற்றதொன்று மெண்ணவேண்டாம். எத்திசையுங் கீர்த்திபெற்ற நம்முடைய சுத்தவீரர்களான படைகளை அத்திமத்தகத்தைக் கிழிக்காநின்றசிங்கம்போலேஇந்தட்சணமே புறப்படுச்சித்தப்படுத்தவேண்டு மென்றான். அதற்குமற்றப் பிரசித்தமான மந்திரிகளுமொத்துக்கொள்ள, அதுகண்ட காலன், ஆம் சரிதான்: இல்லாவிடில் நம்மை மதியான். துன்மார்க்கனுக்கு நன்மார்க்கஞ் சொல்வாரெவர்? என்றெண்ணி அவ்வாறே தனது சேனாசமுத்திரங்களையெல்லாங் கூட்டிக்கொண்டு, வரிசைத்தலைவர் — சேனைத்தலைவர் — வியூகத்தலைவர் — தேர்த்தலைவர் — ஆனைத்தலை



வர் - குதிரைத்தலைவர் - முதலாய்ச் சொல்லப்பட்ட வீராதி வீரர்கள் அணியணியாய்ச்சதுர்ப்பாரிசத்திலும்வரும்படியாகஇயமதருமன்வெளிப்பட்டான். இப்படி யவன் வெளிப்பட்டு வந்ததை இராவணனறிந்து சர்வசாக்ரதையாய் தன்னுடையசேனைகளைமுடுக்கிவிட்டான். அம்மாத்திரத்தில்வஞ்சயானது நெஞ்சிற் குடிகொண்டமிஞ்சிய இருதிறப்படைகளு மதிக கோபங்கொண்டு, தங்கள் தங்களுடைய முழுபலத்தோடு ஒருவரையொருவர் மடக்கி யெதிர்த்து சர்வாயுதங்களையு மெறிந்து யுத்தம் விளைத்தார்கள் அப்போது இயமனுடைய சேனைகள் இராவணனுடைய சேனைகளை அதமாக்கின.

இப்படி எந்தகாரியத்திலும் முன்பின் தெரியாமல் இகலை மூட்டிக்கொள்ளு மிலங்கேசன் படைகளெல்லாம் கலக்கமடைந்து பலங்குறைந்து, மலசலங்களெல்லாம் வறண்டுபோய்ப் புலம்பும்படியான வாயர்களாய் அலங்கோலமடைந்து,நங்குலங்கெடப் பிறந்தசண்டாள ராவணனுலல்லவா நாமனைவரு நலங்கெட்டது மல்லாமல் விலங்கிட்ட பறவைபோற் பறக்கும்படி யாச்சுது? ஐயையோ!! இனி யென்னசெய்யப்போகின்றோம்? என்றிரங்குவதை தசக்ரீவன் பார்த்தான். அப்படி பார்த்தபோதவன் இதென்ன ஒருபோதும் பேதியாத நமது சேனைகள் தத்தளிக்கின்றது? ஆ! ஆ! அந்தக் கலகஞ்செய்த நாரதன்காட்டிய வழியல்லவா வென்று வருந்தி மகாவீராவேசத்தோடு கோபங்கொண்டு நின்றான். அப்போது இயமதருமராஜன், ஈட்டி - வேல் - வச்சிரம் இவைமுதலிய வாயுதங்களை அவ்விராவணன்மேல் தைக்கும்படிப் பிரயோகித்தான். அம்மாத்திரத்தில் இராவணன் மிகவுங் கோபித்து, தனது வில்லைவளைத்து மேகஞ்சொரியு மழைகளைப்போல் பாணங்களைப்பொழிந்து இயமனால் விடப்பட்ட ஆயுதங்கள் தூள்தூளாகும்படி வீழ்த்தி, அவன்மார்பில் அழுந்தத்தைக்கும்படி அக்கினியாஸ்திரத்தைப் பிரயோகித்து அவ்வியமனுக்குத் துன்பத்தை விளைவித்தான். இயமனும் அத்துன்பத்திற்குச் சலியாமல் அநேகமான அஸ்திரசஸ்திரங்களை யேவினான். இப்படி ஏழுநாளிரவும் பகலு மிடைவிடாது ஒருவர்க்கொருவர் அகோரமானயுத்தஞ்செய்தார்கள். ஒருவரையொருவர் வெல்லப்பார்த்தார்கள். அதற்குவேண்டிய உபாயந்தேடுவார்கள். இறந்தசேனைகள் அளவில்லை இவ்வண்ணம்போர்புரியும் போது இராவணன் அதிக்கிரமித்துஇயமனது தேர்ப்பாகன்மேலும், இயமன்மேலும், காலன்மேலும் ஆயிரம்பாணங்களைப் பிரயோகித்தான்.

அச்சமத்தில் காலனென்பவன் மிகவுங்கோபித்து இயமனைநோக்கி, என்னை இவ்விலங்கேசன்மேல் நீயேவும்பக்ஷத்தில் எனது தண்டத்தால் ஓரே அடியாய் அடித்து இறக்கும்படிச் செய்கிறேனென்றான் அதைக்கேட்ட இயமன் அக்கருத்துக்கிசைந்து அப்படியே செய்யென்று சம்மதித்தமாத்திரத்தில் காலனென்பவன் தனது தண்டத்தைக்கொண்டு இராவணனை யடிக்க ஆரம்பித்தான். அப்போது, பிரம்மதேவரானவ ரங்கெழுந்தருளி இயமனைக்கண்டு

அப்பா இயமதருமராஜனே! சண்டையை நிறுத்து நிறுத்து வேண்டாம் உனக்கு அபஜெயம்வரும். இவ்விராவணன் பெற்றிருக்கிறவரத்தினால் தண்டாயுதத்திற் கிருக்கிறபுகழ் இகழாய்விடும். அஃதன்றியிராவணனை யாதொன்றுஞ் செய்யாது நீ அவ்விராவணனைப்பார்த்து நான் தோற்றேனென்று சொல்லென்று சொல்லிப்பிறகு காலனைப்பார்த்து அப்பாகாலனே! பொறு பொறு அவசரப்படாதே என்றுரைத்தார்.

இவ்வார்த்தையைக்கேட்ட காலன் திகைத்து நிற்க உடனே எமனானவனவரைவணங்கி, ஐயா இரணியகருப்பரே! அவனுக்கு நான் இளைப்பதாகச் சொல்லவேண்டிய காரணமெனக்குரைக்கவேண்டுமென்று கேட்டான். அதற்குப் பிரம்மாவானவர் நகைத்து, ஐயா அந்தகரே! உப்புக்கும், முத்துக்கும், சர்க்கரைக்கும், மணலுக்கும், சரிபார்ப்பவர்களுண்டோ? துஷ்டனுக் கிடைந்தானென்றால் அதில்தாழ்வென்ன? தர்மசொரூபியாய் சர்வபுவனமுங் கொண்டாடுமும்மை விவேகபுஞ்சமாகிய கர்மவினனென்னு மிராவணனுக் கிணைசொல்லலாமா? ஆகிலும் திரிமூர்த்திகளில் எங்களிருவர்களாலுமே மாளானெனில் நீரா அவனைஜெயிப்பது? அதைவிட்டுவிடும். ஆனாலிவன் சிலகாலம் பொறுத்தபின்பு ஸ்ரீராமபாணத்துக்கு இரையாய்விடுவான். நீர்வருத்தம்வையாதீர். என்றுவிளம்பவும் எமனானவன் நகைத்து, ஐயா பரமேட்டி? நல்லகாரியஞ்சொன்னீர். என்னைவணங்கு மந்தத்துஷ்டனை நானா வணங்கிநிற்பது? உமக்கும் பரமசிவத்துக்கும் வரமென்பது லேசாயிருக்கின்றதே; அதனாலல்லவா இதுவரையிலும் அவனுடன் போராடும்படியா யிருக்கின்றது. என்றுகூறி அவர்கருத்துக்கு ஒருவாறாய்ச் சம்மதித்து உடனே தசக்கிரீவனைப்பார்த்து, ஆ! ஆ! இராவணா! இன்னமும் உனக்கு என்னுடன் போர்செய்யத்திடமிருக்கிறதாவென்றான். இதற்குள்பிரம்மாவானவர் இராவணனுக்குக் கண்ணினாற் குறிப்புகாட்டினார். அதனால் அவனும் ஏதேதுநான் பயப்படுவது நீயொரு எமன்மாத்திரமல்ல. உன்னைப்போல் இன்னும் கோடானுகோடி எமன்வந்தபோதிலும் நான் பின்னிடையேன். இஃதுன் அனுபோகத்துக்குந் தெரியவராதா? இதையெல்லாம் விடுத்து நீ எனக்குத் தோற்றாயென்று உன்வாயாற் சொல்லவேண்டும். பிறகுநான் செல்லவேண்டுமென்றான்.

இப்படியவ்விராவணன் துணிவுடன் சொல்வதைக்கேட்டு அருகிலிருந்த சித்திரகுப்தனாகிய மந்திரி தன்ராசாவாகிய எமனுக்கு நன்றாய்த்தெளிவுற, இவ்வேழுநாளாக நடந்த யுத்தத்தினது பலாபலத்தின் ஜெயாபஜெயத்தையும் அதன் நயநஷ்டத்தின் குணானுபவத்தையு மெடுத்துரைத்தான். அதன்மேல் மகிஷவாகனனாகிய நமனுஞ்சம்மதித்து, பிள்ளையைப் பள்ளியென்பதனால் உள்ளசெல்வம் போவதில்லையென்றுன்னி; உடனே பாதகாணிக்கைகள் கொண்டுவந்துநின்று, ஓ இராவணேஸ்வரா! இவ்வுலகமெல்லா முமது வீரப்ரதாபங்களைமொழிவதற்கரிதெனில்நானொருவனுரைத்தமுடிவதோ? நீர்செய்த

№ 81. இராவணன் ஆதிசேடனை வெல்லுதல்.



இராவணன் நிவாதகவசர்களை வெல்லுதல்.







த்தில் நான் தோற்றுவிட்டேன்; ஆதலால் சந்திசெய்துகொள்ளுநிமித்தம் உம்மிடத்துக்கு வந்தேனென்றான். அதுகேட்ட ராவணன் மிகவுஞ் சந்தோஷித்தவனாய், அடா யமா! நீ யெனக்குத்தோற்றாயா? ஷபாஷ் நானும் அது தான் கேட்டேன் என்று சொல்லி இருபது புயங்களும்பூரித்துயமனும் ஒரு சத்தவீரனோ? எனக்குத்தோற்றான்; எனக்குத் தோற்றான்; என்றுசொல்லி வெற்றிச் சங்கத்தொனி செய்து, வீழ்ந்த மும்மதவேழத்தைப்போலத் தன் புஷ்பகவிமானத்தின்மீதுதானும்,மாளாமல் நின்ற சேனைகளுமாகப்புறப்பட்டு திக்குவிஜயப்பிரதாபனாய் அந்த எமலோகத்தைவிட் டப்பாற்சென்றான். பிரமதேவரும் இருப்பிடத்துக் கெழுந்தருளினார். சர்வதேவர்களும் சந்தோஷமுற் றிருந்தார்கள். அப்பால் எமதர்மராசன் ஏதோ ஒருவகையாற்தேறினவனாகி, இறந்தசேனைகள்போக மற்றவர்களுடன் தன்பதியின் அருகையிலமர்ந்து சுகமாகவிருந்தான்.

கேளும் தசரதநந்தனா! இவ்விதமாக பெயரைச் சொன்னவுடன் சகல லோகமும் பேரிடியைக் கேட்ட சர்ப்பம்போற் கிலிகொள்ளும் வீரத்தன்மையையுடையவனும்,எமலோகத்துக் கதிபதியுமாகிய தர்மராசனைச்செயித்த பிரதாபத்தினால் இலங்கேசனாகிய இராவணன் தன்னைமறந்து புயாசலங்களைத்தட்டி ஆர்ப்பரித்துயுத்தசன்னத்தனாகி,எவர்களுநடுங்கும்படியாய் மத்தளம்-கர்ணை, பேரி, பூரி, முதலிய சர்வமேளவாத்தியங்களு முழங்கும்படிக்குச் சங்கத்தொனியுடன்பிரயாணபேரிகையறைந்துகொண்டு புறப்பட்டு வருகிறான். இப்படி வருகிறபோது வழியில் தனது மந்திரிகளைப்பார்த்துச் சொல்லுவான். கேளும் அமைச்சர்களே! அந்தமட்டு நாம்செய்த பூசாபலத்தால் நாரதனுடைய வார்த்தையைக்கொண்டு இயமனையும்வென்றோம்இன்னும்யாரிருக்கின்றார்கள். செருக்குற்றவர்கள் இருந்தால்சொல்லுமென்று கேட்டான். அப்பொழுது மகோதரன்; இராவணேஸ்வரா! இப்பூலோகத்தை ஆயிரம்பணமகுடத்தால் தாங்கப்பட்ட ஆதிசேடன் நமக்கு மிஞ்சின பலசாலியெவ்வுலகத்திலுமில்லையென்று கர்வங்கொண்டவனாதலால் அவனது கொட்டத்தையடக்கவேண்டுமென்றான்.

## இராவணன் ஆதிசேடனை வெல்லுதல்.

### கவி.

வெற்றியெனதென்றுரைத்து மிக்கெழுந்தவ்வசையனும் விறலின்மிக்க
மற்றடந்தோண்மாரிசன் மகோதரனேமுதலவரொடு மணித்தேரேறிப்
பற்றலரைநிலைகெடுப்பான் பாதாளத்திடைபுக்குப் பண்பினோடும்
பொற்றடமாளிகைவிளங்கும் போகபுரியெனுநகரி சென்றபுக்கான்.

இப்போது எல்லோரையும் கொல்லும் இயமனுடன் போர்செய்தகாலத்திலும் வெற்றிகொண்டதானே; ஆதிசேடனென்ன வரவாசிலவீரனென்று மகாசந்

தோஷத்தை யுடையவனாய்; புயவலிமைமிக்க மாரீசன் மகோதரன்முதலான மந்திரிகளோடு புஷ்பகவிமானமாகிய தேரின்மீதேறிப் பாதாளலோகம்புகுந்து ஆதிசேடனரசுபுரியும் போகபுரியெனு நகரடைந்து உயுத்தபேரிகையறைந்து அங்நகர்க்கரசனாகிய ஆதிசேடனைச் சண்டைக் கழைத்தனன். அவ்வாதிசேடனும் தனதுபடைகளாகிய அநேகநாகங்களையும் சண்டைக்குப் புறப்படச் சொல்லித் தானும்புறப்பட்டுப்போருக்கெழுந்து இராவணனோடு கைகலந்து ஓயாத யுத்தஞ்செய்யும்போது அநேகசர்ப்பங்கள் தங்கள்பற்களிலுள்ள விஷஞ் சொரியும்படியாக இராட்சசர்களைக் கடித்தமாத்திரத்தில் இவைகளினுடைய பற்களொடிந்ததேயன்றி அவ்விராட்சசர்களுக்கு யாதொரபாயமுமில்லை. ஆதிசேடனே தன்னாற்கூடியவரையிலும்பார்த்து, தனது காலாயிரம்பற்களும் அழுந்திவிஷங்கொட்டும்படியாகக் கடித்தனன். இவன்கடித்தகடியால் இராவணனுக்கு யாதொருபத்திரவ முண்டாகவில்லை. இராட்சசர்கள் செய்தயுத்தத்தால் அநேகநாகங்கள் மாண்டன. ஆதிசேடன் இராவணனுடையபாணங்கள் தைத்ததாலுண்டாகிய வருத்தத்தால் மூர்ச்சையாய்ப் பிறகுதெளிந்து மந்திரிகளால் இராவணனுடைய வரத்தைக் கேள்விப்பட்டனன்.

அதுகேட்ட மட்டில்லாக் கலக்ஞானனாகிப் பட்டம்பூண்டிருக்கு நாகேந்திரன் சற்று நிதானித்து, சரி: சரி: நானும் உங்கள்சொல்லைத் தட்டப்படாதல்லவா? நட்டம் நமக்கேயன்றி யவனுக்கென்ன? என்றுன்னித் தட்டுத்தட்டுகளாக நானாவிதமான மாணிக்கங்களை யெடுப்பித்துக்கொண்டு யாவரும் கும்பலாய் வரப்போய் கப்பமாகவைத்து, ஐயா இராவணேஸ்வரா! நாங்களோ அற்பமாகிய சர்ப்பங்கள். நீங்களோ இராக்ஷதர்கள். அதிலுங் கெடிஸ்தலாதிபதிகள். உங்களைச் செயிக்கவும் எங்களால் முடியுமோ? இந்தமட்டுக்கும்போரை நிறுத்திச் சந்திசெய்துகொள்ள வந்தோம். என்றுவணங்கிக் கூறினன். அதைத் தசக்கிரீவன்கேட்டு, மிகவுமகிழ்ந்து நமக்குமிஞ்சின விஜயப்பிரதாபசாலிகள் எவ்வுலகிலுமில்லையென்று இறுமாப்படைந்து புயங்கள் பூரித்து நம்மைவலியவந்து சந்திசெய்துகொண்டானென்று வெளியிலெவரும் பிரமிக்கும்படி கெக்கலிகொட்டி, ஆதிசேஷன் எனக்கிளைத்தான்: இளைத்தான்: என்றுரைத்து ஆர்ப்பரித்துநின்றான். உடனே மந்திரிகளும் சந்தோஷஆரவாரஞ்செய்து நமக்கு நிகரானபலசாலிகளொருவருமில்லையென்றெண்ணினார்கள். உடனேதசக்கிரீவன் அம்மாணிக்கங்களையெல்லாம் கைக்கொண்டு சம்மதவாரியாகி, மந்திரி பிரதானிகளாதிசேனைகளுடன் புஷ்பகவிமானமேறி அப்பாற்சென்றான். இங்குடனே ஆதிசேஷனானவன் தனது மாண்டுபோன சேனைகளையெல்லாம் மிர்தசஞ்சீவியின் பலத்தா லெழுப்பிக்கொண்டு எதாப்பிரகாரம் தன்னிருப்பிடஞ் சேர்ந்து நாகலோகத்தரசை நடாத்திச் சுகித்திருந்தான்.



## இராவணன் நிவாதகவசர்களை வெல்லுதல்.

கவி.

அங்நகருக்கரசனு மடன்மிகுதோள்வாசுகியோடளவளாவி
மன்னியநல்லுறவாகி மணிமதியாம்வளநகரி வந்துசாரத்
தன்னிகரில்லாதோர்கள் சாதித்தபெருவரமும் வலியுஞ் சார்ந்தோர்
கின்னிலெனப்புறப்பட்டு நிவாதகவசாதியர்கள் சென்றுசேர்ந்தார்.

கேளும் ஸ்ரீராமா! இவ்வாறு போகபுரிக்கரசனாகிய ஆதிசேடனோடு கலந்து உறவாடிவரும்போது தசக்ரீவன் மகோதரனைப்பார்த்து, இனி நடக்கவேண்டிய தென்னென அவனுஞ் சொல்லுவான். ஐயா முப்புவனத்துக்கும் அதிபதியாகிய முதல்வனே! இந்த நாகராசனைச் செயித்தது ஓர் பெரிதான காரியமல்ல. என்னெஞ்சி லொன்று நினைத்திருக்கின்றேன். அதனை வெளியிடும்போது நீரேமனமுவந்து கொண்டாடுவீர். அதுயாதெனில் - தேவலோகத்தில் நிவாதகவசரென்கிற அசுரர்கள் மூன்றுகோடிபேர்கள் ஒரேகெற்பத்திலவதரித்து ஒருதாய்க்குப் பிறந்தவர்கள். அவர்களோ வெகு தந்திரவாதிகள். அவர்களை வெல்லத் திரிமூர்த்திகளாலு மாகாது. பிரமதேவனை அரியதவஞ்செய்துவேண்டிய வரங்களைப்பெற்றவர்கள்; அப்பேர்ப்பட்டவர்களை ஜெயிப்பதல்லவா உமது கீர்த்திக்கழகாகும். அவர்களை வெல்லாமல் நமது திக்குவிஜயத்தையு முடிக்கலாகுமா வென்றான். இப்படி யவன்சொல்வதை இராவணனானவன்கேட்டு ஆனந்தமடைந்து, அவ்வாறுசெய்வதே சரியென்று தோளைத்தட்டி நின்று மந்திரிகளுடன் யோசித்து மணிமதியென்னும் நகரத்தில் இராவணனுமற்றுமுள்ள சேனைகளும் முற்றுகைபோட்டுக்கொண்டு நிவாதகவசர்களைச் சண்டைக்கு வரும்படியாகத் தூதனுப்பினான்.

இராவணனனுப்பிய தூதவார்த்தையைக் கேட்டு முக்கோடி அசுரர்களாகிய அந்நிவாதகவசர்கள் கோபமூண்டு இராவணனுடைய சவிஸ்தாரங்களை அத்தூதுவர்களாலேயே தெரிந்துகொண்டு அப்படியா? நல்லதாகட்டும்: நாங்களும் அப்பேர்ப்பட்டவனைப்பார்க்க ஆவல்கொண்டிருக்கிறோம். உயுத்தத்திற்கும்வரத் தயாராய் காத்துக்கொண்டிருக்கின்றோம். நீ பரிஷ்காரமா யந்தராவணனென்பவனுக்குச் சொல்வாயென்றார்கள். இப்படியவர்கள் சொல்லியதிரத்தையும் அவர்களதுபலாபலத்தையும் நன்று யூகித்துக்கொண்ட அத்தூதுவன் திரும்பிவந்து, தசக்கிரீவனுக்கு இவைகளையெல்லாம் பிரிவுபடுத்திச்சொல்லி வெளியிட்டான். அதனைக்கேட்ட இராவணன் மனங்கலங்கி இலங்காநகரம் போய்விடுவதே நலமென்று சேனைகளைக்கூட்டிக்கொண்டு புஷ்பகவிமானத்தின்மீது போகின்றான். அப்படிப்போகும்போது நிவாதகவசரென்னும் அசுரர்கள் யுத்தசன்னதராய்ப் புறப்பட்டுத் தமது சைனியங்களோடு கோட்டைவாயிலில்வந்து இராவணனென்பவன் எங்கே யெங்கே யென்று தேடுகிறார்கள் அப்போது தூதுவர்கள் ஐயா முக்கோடி யசுரர்களே இந்நேரம் இராவணன் யோசித்து உமது பிர

தாபங்களைக் கேள்விப்பட்டு நாம் இங்கு நிற்கவும் தகாது தகாது என்று தனது சேனைகளைப்புஷ்பகவிமானத்திலேற்றிக்கொண்டு இதோ ககனவழியாகத்தானே பயந்தோடுகின்றான் பாருமென்று காட்டினார்கள். உடனே அம்முக்கோடி அசுரர்களும் பின்தொடர்ந்து, அடா ராவணா! அடா பயங்காளி! போகாதே நில் நில்! என்று அதட்டிக் கூவிக்கொண்டு சென்று தங்கள் தங்கள் வில்களைவளைத்து அவ்விராவணன்மேல் பாணப்பிரயோகஞ்செய்தனர்கள். உடனே இராவணன் ஓ ஓ!! இனி நாம்போவது சரியல்ல நமது புகழுக்கு இகழுண்டாகுமென்று நினைத்துத் தனது விமானத்தைத் திருப்பிச்சேனைகளுக்கும் இடஞ்சொல்லி யுத்தத்திற்கேவி தனதிருபது கரங்களாலும் அஸ்திர சஸ்திரங்களை பிரயோகஞ்செய்து அவர்கள் விட்டபாணங்களையெல்லாம் பொடிசெய்து நின்றனன்.

கேட்டீரோ ஸ்ரீமஹாலக்ஷ்மி மனோகரா! இவ்விருதிறச் சேனைகளுக்குள் தேர்மன்னர்களுடன் தேர்மன்னர்களும், இயானைவீரர்களுடன் இயானைவீரர்களும், குதிரைக் காவலர்களுடன் குதிரைக்காவலர்களும், படைத்தலைவருடனே படைத்தலைவரும், அணித்தலைவருடனே அணித்தலைவரும், சேனாபதிகளுடனே சேனாபதிகளும், வியூகராசர்களுடனே வியூகராசர்களும், இப்படியே பட்டவர்த்தனர் - மகுடவர்த்தனர் - அர்த்தரதக்காரர் - வெங்கலரதக்காரர் இவர்களெல்லாம் தங்கள்தங்களினத்தோடு நெருங்கி யெதிர்த்து, வில் - வேல் - வாள் முதலாகச் சொல்லப்பட்ட எண்ணான் காயுதங்களையுங்கையிலேந்தினவர்களாகி, ஆக்ரஹக்குரோதத்துடனே திரிபுவனங்களும் கலங்கிப் பிரமிக்கும்படியாய் சர்வசங்காரப் பிரளயகால ருத்திரர்களைப் போலே ஒருவரையொருவர் குத்தியும், வெட்டியும், இடித்தும், உதைத்தும், அவரவர்களை உடலம் பதைக்கப் பிடித்தெறிந்தும், கடித்துத் தின்றும், கரங்களால் வாரியெறிந்தும், மரங்களாலே மோதியறைந்தும், இப்படியாய் கோரமான சண்டை விளைத்தார்கள். அக்காலத்திலே நிலைகள் புரண்டதும், தலைகள் உருண்டதும், கைகள் அழிந்ததும், கால்கள் ஒழிந்ததும், தோள்களுடன் தாள்கள் அறந்ததும், குடல்கள் சரிந்ததும், உடல்கள் பிரிந்ததுமாகி; இருவகைச் சேனைக்கூட்டங்களிலுள்ள சனங்களெல்லாம் கழிந்துபோக மற்றவர்களெல்லா மொருவரையொருவ ரெதிர்த்து, ஒவ்வொருவரு மாண்டுபோமளவும் உயுத்தஞ்செய் திறந்தார்கள்.

இவ்வண்ணம் அருமையான உயுத்தஞ் செய்யும்போது இராவணனும் மூன்றுகோடி அசுரர்களும் தங்கள் தங்களுடைய சேனைகளெல்லா மாண்டுபோவதே யாதுசெய்வதென்று கருதி நாமே முனைந்து யுத்தஞ்செய்யவேண்டுமென்று ஒருவர்க்கொருவர் கைகலந்து தங்கள் பூரணவல்லமையோடு யுத்தஞ்செய்தார்கள் அவ்யுத்தப்பிரபாவத்தையாரால்சொல்லமுடியும். அண்டம் பிளந்தன. நக்ஷத்திரங்களுதிர்ந்தன. சூரியசந்திராதிநவக்கிரகங்கள் தங்கள் வேகந்துறந்து வழிமயங்கினார்கள், ஒருவரையொருவரடிப்பார்கள். புடைப்



பார்கள். வெட்டுவார்கள். குத்துவார்கள். மோதுவார்கள். தூக்கியெறிவார்கள். அஷ்டதிக்கிலும் இடசாரிவலசாரியாகஓடுவார்கள். வருவார்கள். வந்துபாணங்களைப்பொழிவார்கள். அவரவர்கள்பெற்றவரங்களினாலுண்டாகிய பூரணவலிமையும் காட்டுவார்கள். ஒருவர்க்கொருவர்கற்றிருக்கும்படியானமாயங்களைச் செய்வார்கள். ஒருவரையொருவர் வெட்டுவார்கள். மறுபடியு முயிர்பெற்றெழுவார்கள் இப்படி மூன்றுகோடி யசுரர்களும் தனியாகவும் கூட்டமாகவும் ஒருவனாய்நின்ற இராவணனோடு போர்புரிய அதனாலிராவணனொருவனாய் நின்றும் இளைத்தவனல்ல. அவர்களும் தோற்றவர்களல்ல. தோற்கச்செய்தவர்களுமல்ல. இப்படி இரவும்பகலும் இடைவிடாது ஒருவருடம் யுத்தம்பண்ணினார்கள். இவர்கள்செய்யும் யுத்தவதிர்ச்சியால் லோகாலோகங்களெல்லாம் பிரமித்துக்கலங்குவதைப் பிரமதேவரறிந்து அம்சவாகனரூடராய் அவ்விருதிறத்தவர் நடுவில்வந்து நின்றுகையமர்த்தி ஓ பலவான்களாகிய நிவாதகவசர்களே! ஓ இலங்கேசா! யுத்தத்தைநிறுத்துவீர்கள். நிறுத்துவீர்களென்று சிலசொல்லவாரம்பித்தனர்.

கேளுங்கள் எனக்குரிய அன்பர்களே! நீங்களிச்சண்டைக்கேற்பட வேண்டியதென்ன? க்ஷாத்திரந்தான் வரவேண்டியதென்ன? அல்லது ஒருவரையொருவராகிலும் ஜெயித்தீர்களா? நீங்கள் விவேகசாலிகளல்ல. விருதாவாய் நமதுபெயருள்ள அஸ்திரத்தையேவி உலகத்தை நாசம்பண்ணுகின்றீர்கள் இதுசரியல்ல. இப்போதும் என்னசொல்லுகின்றீர்களெனக் கேட்டார். அதற்கு நிவாதகவசர்களவரைவணங்கி, சுவாமி வாணிகேள்வரே! நாங்கள் வலியச்சண்டை யெடுக்கவில்லை. அந்த ராவணனேவந்தானென்று சொன்னார்கள். அதைக்கேட்ட பிரமதேவர் சண்டையை நிறுத்தி சமாதானமாய் விடுங்கள். சிலநாளைக்குள் இரகுகுலத்திலவதரிக்கும் ஸ்ரீராமசந்திரப் பிரபுவினால் அவ்விராவணன் மாள்வானேயன்றி உங்களால் மாளமாட்டானென்று சொல்லிவிட்டு, அப்பிரமதேவர் இராவணனையடுத்து, அப்பா இராவணா! இதென்னவேலை? உனக்கிந்த அசுரர்கள் ஒரேதிரா? நீயோ உத்தமபுருஷன். அதிலும் என்வார்த்தையை நீதடுக்கமாட்டாயென்று எனக்குத்தெரியும். உனக்கு நான் அதிகமாய்ச் சொல்லவேண்டியிராது. இதுவே நல்லசமயம். நீயென்னதான் வாள்கொண்டு வெட்டினபோதிலும், அவர்கள் வரப்பிரசாதங்களாலும் – மாயாவித்தைகளாலும் – மறுபடியு முளைப்பார்கள். நீயும் இலேசானவரமும் பலமுமுடையவனல்ல, இருதிறத்தோர்களும் பலவருடம் சண்டைசெய்தாலும், வரத்திலும் பலத்திலும் ஒத்தவர்களாதலால் ஒருவரையொருவர் செயிப்பதருமை ஆகிலும் ஒன்று சொல்லுகிறேன்கேள்:

துவாபரயுகத்தில் விஷ்ணுவானவர் நரநாராயணர்களா யவதரிக்கப்போகின்றார். அப்போதிவர்கள் அவர்களால் மாண்டுபோய்விடுவார்கள். ஆனால் இப்போதல்ல. நீ வீணாய்ச் சண்டையிட்டாலும் ஜெயிக்கமாட்டாய். அவர்களும் வெகுமாயாவாதிகள். அவர்கள்பேரிலிருக்கும் தயவைவிட உன்பேரிலெனக்கு அதிக அன்புண்டான படியினால்தான் சொல்லவந்தேன். நீ வாசித்

905



தறியாத சாஸ்திர மென்னவிருக்கிறதென்றார். அதற்கந்த ராவணன் அவரை வணங்கி, சுவாமி இரணியகருப்பரே! இந்த தந்திரங்களெல்லா நானறிவேன், எனக்கா தெரியாது? இந்த விஷயங்களெல்லா நான் பார்த்திட்ட பிச்சையாச்சுதே: நீரேதோ அவர்கள்மீதுவைத்த அன்பினாலல்லவா என்னை யிவ்வாறு சோதிக்கின்றீர் ? என்பேரில்வைத்த அன்பினால் வந்ததாக நான் நினைக்கவில்லை. போனவனைக் கூப்பிட்டு சண்டைதொடுத்தார்கள் நான் விடவேயில்லை: ஆகிலும் நீரேவந்து சொல்லுவதால் அப்படியானால் எனதிஷ்டப்படிக்கு அவர்களென்னெதிரில் வந்து நாங்களிளைத்தோம்: நீயேஜெயித்தாய்: என்றுசொல்லுவார்களாகில் அப்போது சம்மதியாவேனேயல்லது; இப்போது இந்த வெறுஞ்சொல்லுக் கிணங்கேன். அவர்களோ கிலிபிடித்துப் பிரமித்திருக்கிறார்கள். இப்பேர்ப்பட்ட முரண்டு நீ இன்னமுஞ்செய்வதேனென்று பிரமதேவர்செல்ல, இராவணன்சொல்லுவான் ஐயா! பூலோகம் பதினான்கும்-தேவாதி திரிமூர்த்திகளும் — ஒன்றாய்ப்புரண்டு போரிடவந்தாலும், என்முன்னே நிற்காமல்மிரண்டு அவர்களெளலால் நிலைபெறாது. வாடிவதங்கிப்போவார்கள்: இப்போரில் அவர்களிறப்பதை நீரேபார்க்கப்போகின்றீரென்று திரண்டுபெருத்த இருபது தோள்களையுந்தட்டி, ஆகாயத்திலெழுந்து முட்டி, பூமியிற்கிட்டி ஆர்ப்பரித்து நின்றான்.

அதுகண்ட கமலாசனன் — இதேது நமக்கு இரவும் பகலும் பெரும் போராட்டமாயிருக்கின்றது. இவன் மடையபுத்திக்காரனாகையால் எப்படியாவதிப்போரை யொழித்துவிடவேசரி. என்றுன்னி நிவாதகவசாளையடுத்து அவர்கட்குஞ் சொல்லவேண்டிய நீதிமார்க்கங்களையெல்லா மெடுத்துச் சொல்லி, சதுர்விதவுபாயத்தாலு மவர்களைச்சரிப்படுத்தி, ஒ அன்பர்களே! இவன்மீது உங்களுக்கு க்ஷாத்திரம் வேண்டியதில்லையென்று தெளியவுரைத்துப் பக்குவப்படுத்திக் கப்பணத்துடனே வரச்சொல்லி, இராவணன் முன்னின்று நாங்களே தோற்றோம், நீயேஜெயித்தாய். என்று சொல்லச்சொல்லி இருவர்களையுஞ் சமாதானமாய்க் கலக்கவைத்தார். அதன்மேல் இராவணன் அவர்கள் தோற்றுவிட்டார்களென்கிற சந்தோஷசகிதனாகி, அவர்களுடைய மாயாவித்தைகளைக் கற்றுக்கொடுக்கும்படிச் சம்மதவாரியாய்க் கேட்டுக்கொண்டான். அதற்கவர்கள் சம்மதித்து இரணக்களத்தைவிட்டு நீங்கி, மாண்டசேனைகள்போக மற்றவருடனே இராவணனை யழைத்துக் கொண்டு தங்களுடைய பட்டணத்திற்குள்ளே போனார்கள். பிரமதேவருஞ் சத்தியலோகத்திற் புகுந்தார். இந்த பலத்த யுத்தத்திலே இருதிறத்தார்கட்கு மாண்ட சைனியங்கள் கணக்கிடப்படா. கேளும் இராகவா! ஒருவருஷமாய் அகோரமான யுத்தஞ்செய்த இவர்களிருவரும் பின் பொருவரோடொருவர் கலந்து அதிக வாஞ்சையாய் நீரும் பாலும் போல் மருவியிருந்தபடியாலே, அந்த நிவாதகவசாள் இந்த ராவணனுக்குத் தக்கமரியாதை செய்து, பின்னு மொருவருஷகாலவரையிலும் தேவதாபோச

№ 82. இராவணன் காலகேயரை வெல்லுதல்.



இராவணன் தேவஸ்திரீகளாதிகளைச் சிறையெடுத்துச் செல்லுதலைக் கண்டதேவர்கள் கிலேசத்தைத் திருமால் தேற்றுதல்.







னுத்தோடே வெகுபிரீதியாய் விருந்துகள்செய்து, அவன் கேட்டுக்கொண்ட வித்தைகளில் ஒன்றுமினு மொழியாமற் கற்பித்துக்கொடுத்தார்கள். அவையனைத்தையுங் கற்றுக்கொண்ட இராவணனுமவன் பின்பவர்களிடத்தில் விடைபெற்றுப் புஷ்பகவிமானமேறி, விரைவி லிலங்கைக்குப் போகவேண்டுமென்று கருதிப்புறப்பட்டனன்.

## இராவணன் காலகேயரையும் வருணனையும் வெல்லுதல்.

கவி.

அந்தகரிலிட்டரக்க ரடல்கருணன் றனைவெல்வா னவன்றன்மேவும்
கன்னகிரிதனைமுடிக் காலகேயரையெல்லாங் கணத்திற்கொன்று
தன்னுடையதங்கையாந் தடவரைத்தோட்சூர்ப்பநகை தன்னைக்கொண்ட
மின்னனையகடரிலைவேல் வித்துருசிங்கன் றனைவெங் களத்திறவீழ்த்தான்.

அப்படிப் புறப்பட்டு வரும்போது வருணனைச் செயிக்கவேண்டுமென்று கருதி அவன் வசிக்கும் கன்னகிரி யென்னும்புரியை முற்றுகையிட்டு, அதற்குச் சமீபத்தில் தோயமாபுரியில் காலகேயரென்னு அறுபதினாயிரமசுரரை க்ஷணநேரத்திற் செயித்து காணிக்கைபெற்று, அக்காலகேயவசுரரிலொருவனாகிய தன்தங்கை சூர்ப்பநகையினது மணாளனாகிய வித்துருசிங்கனைப்படுகளத்திலொப்பாரியில்லையென்று யுத்தகளத்தில் மடியச்செய்து அங்குள்ள கன்னியரையும் சிறையெடுத்தனன். பிறகு மந்திரிகளைப் பார்த்து நாமிந்த வருணனுடைய நகரத்தில்வந்திருந்தும்வருணனென்னும் பயல்நம்மைக்கண்டு வணங்கி நான் தோற்றேனென்று சொல்லாமலும் காணிக்கை செலுத்தாமலும் எங்கேயோ போயொளித்துக்கொண்டிருக்கிறானல்லவாவென்றுயோசித்துத்தூதனுப்பஅதைக்கேட்ட வருணனுடைய புத்திரர் ஊழிகாலத்தக்கினியைப் போலக் கோபித்து இரதகஜதுரகபதாதிகளாகிய நால்வகைப்படையுமணிவகுத்து இராவணனிடம்வந்துயுத்தஞ்செய்யுங்காலையில்அவர்களது நால்வகைச் சேனைகளும் அலங்கோலமாம்படி யழியச்செய்து இராவணன் யாவரையும் பூமியில் வீழ்த்தினன்.

இப்படி தன்சேனை வழிந்ததைக் கண்ட வருணகுமாரர்கள் மிகவுங் கோபித்து புட்பக விமானத்தின் மீதிருந்து யுத்தஞ்செய்கின்ற அரக்கன்மேல் சோனமாரியைப்போல் அம்புகளைப் பொழிந்தார்கள். அவைகளை விலக்கிக் கொள்வதே தனக்குப் பொழுதுசரியாக அவர்களுக்குமேல் வேறுபாணங்களை விடுக்கச் சாத்தியமில்லாமல் மனம்வருந்தினான். அப்பொழுது சந்திரனையுங் கொன்றைமாலையுந் தரித்தசடாபாரத்தையுடைய பரமேஸ்வரனுமலையையெடுத்த பராக்கிரமத்தையுடைய இராவணன் தைரியங்கொண்டவனாகி அவர்கள்விட்ட பாணங்களை விலக்கிப் பிரதிபாணங்களைக் கோடிகோடியாகச் சொரிந்தான். இவனது மந்திரியாகிய மகோதரன் அக்கினியும்விடமும்போலக் கொதித்து வருண புத்திரர்களின் சேனைகளைக்கொன்று வருந்தினான். அப்படிதமது சேனைகளைக்கொன்று வருத்தியதைக் கண்ட கோமுகன் — புஷ்கரன் என்னும் வருணபுத்திரர்கள் மனங்கொதித்து, மாயவித்தையில் மகானாகிய மகோதரனது மார்பில் தைக்கும்படி அக்கினியாஸ்திரங்

களை விடுத்து இராக்ஷசசேனைகளைத் தரைப்படுத்தி, இராவணனது தோளிலும் மார்பிலும் இரத்தமொழுகும்படியாக பாணங்களைவிடுத்து அண்டங்குலுங்க ஆர்ப்பரித்தார்கள். இராவணனானவன் மிகவும் கோபித்து அஸ்திரங்களையும் - சூலம் - வேல் - வச்சிரம் - தோமரம் - தண்டம் - உலக்கை இவை முதலிய வாயுதங்களையும் செலுத்த, வருணராஜன் புத்திரர்கள் இதைக்கண்டு பயந்து இராவணனுக்குத் தோற்றோடினார்களென்னும் நிந்தைமொழிகூற தமது நகரத்தில் வந்து சேர்ந்தார்கள். உடனே வருணராஜன்தேவி புத்திரர்களையழைத்து உங்கள் தந்தையும் தேவலோகம் போயிருக்கின்றமையால் இனி நீங்கள் போருக்குப் போகாமல் இராவணனிடத்திற் சென்று சமாதானஞ் செய்துகொள்ளுங்களென்ன வதற்குச் சம்மதித்து, மந்திரிகளைவிடுத்துப் பிரியவசனஞ் சொல்லச்செய்து காணிக்கைகொண்டு செலுத்திச் சமாதானஞ் செய்து நாங்கள் தோற்றோமென்றார்கள்.

## இராவணன் அப்சரஸ்ரீகள் முதலானவர்களைச் சிறையெடுத்திலங்காநகரம் புகுதல்.

கலி.

அந்தவுரைகேட்டுவந்த வடலரக்கன்பகிரண்ட மதிரவார்த்து
வந்தவழிபுறப்பட்டு மதிலிலங்கைநகர்நோக்கி வழிக்கொள்வேலை
அந்தணர்தங்கன்னியரு மசுரர்தங்கன்னியரு மளவிலாத
கந்திருவர்கன்னியரு முதலாயகன்னியரைக் கண்ணிற்கண்டான்.

இந்த வார்த்தையைக்கேட்ட தசக்கிரீவன் பகிரண்டங்களெல்லாம் படபடவெனத் துடிக்க ஆரவாரஞ்செய்து இனி இலங்கைநகர் நோக்கிச் செல்லவேண்டுமென்று சொல்லிப் புறப்பட்டபோது மகோதரன் சொல்லுகிறான். ஐயா இராவணேஸ்வரா! இது சமையம் வருணராஜனில்லாத காலமாயிருக்கிறபடியால், நீர் கருதியபெண்களை யாதொரு தடையுமின்றிச் சிறையெடுக்கலாமென்றான். அதுகேட்ட ராவணனானவன் மீறி, ஈதொருகந்தாயமென்று கூறி, வருணனில்லாத தருணமென்று அவன் பட்டினத்துட் பிரவேசித்து, அன்னங்களின்மே லிராசாளி பாய்ந்ததுபோல அப்சரஸ்திரீகளுடைய அரண்மனைகள்தோறும் பாய்ந்து, அவரவர்களு மலங்கோலப்பட்டுக் கண்ணீரிறைத்துத் தாமரையிலையி னீர்போற் றவிக்கவும் - வாயிலறைந்துகொள்ளவும் - ஒருவரையும் விடாமற்பலாத்காரமாய் அங்குள்ள நூறுகோடி அப்சரஸ்திரீகளையும் பிடித்துப் புஷ்பகவிமானத் தேற்றிக்கொண்டு, தன்சேனையுடனவ்வூரைவிட்டுக் ககனமார்க்கமா யப்பாற் செல்லுகிறான். அக்காலந்த அப்சரஸ்திரீகளெல்லாம் அழுதுப் புலம்ப வதைத் தன்காதுகளாற்கேட்டும், கண்களினாற் பார்த்தும், சற்றுமிரக்கமில்லாதவனாகி, பின்னு மகோதரனைப் பார்த்துச் சொல்லுவான். அப்பா மகோதரா! என்மீது நீவைத்திருக்குமன்பு இப்போதுதான் தெரியவந்தது. அந்தமட்டுமன்றிக் குருத்துவமாய் நம்புவதற்கு நீயும் தக்கபடி உள்ளன்புவைத்து நன்மையானகாரியத்தையேசொல்லுகின்றாய். இதற்கு நானென்ன கைம்மாறுசெய்வேன்? இன்னமிப்பேர்ப்பட்ட



பெண்கள் எந்தவிடத்திலிருந்தாலும் இப்போதே சொல்லிவிடுக. என்றுகேட்கவு மகோதரன் சொல்லுவான்.

கேளும் ஸ்ரீராமா! "பிறன்பொருளாட் பெட்டொழுகும் பேதமைஞாலத் தறம்பொருள் கண்டார்கணில்." என்றும் - பரஸ்திரீகவனம் பரலோகநாசனமென்றும்-பிறன்மனைப்புகாமை அறமெனத் தகுமென்றும் - தருமநீதிசாஸ்திரங்களெல்லாம் சொல்லியிருக்க, இந்தத் துன்மார்க்கனாகிய இராவணன் மேற்கூறிய வருணலோகத்து அப்சரஸ்திரீகளைச் சிறையெடுத்ததே யிவன் தலைக்குத் தாம்பூலமாயிருக்க, பின்னும் பெரும்பாவத்துக்கு நரகத்துக்கு மேதுவாகிய செய்கைகளையே தனது கவனத்திற் கருதி, தலைமாட்டுக் கொள்ளியொத்த நிலைகாட்டு மகோதரனை யடுத்து வினவினபடியால் அவனும் ஆடு நனையுதென்று கோனாய்க் கென்னதுக்க மென்பதுபோலப் பளுவேறுவதெல்லா நமக்குச் சுகசேவையல்லது வேறல்லவென் றெண்ணினவனாகி, ஐயா பிரதாபலங்கேஸ்வரா! தெய்வலோகப் பெண்களெல்லா மகாசௌந்தரியமுள்ளவர்கள். இந்த ஸ்திரீகளைப்பார்க்கிலும் அவர்கள் வெகு மேலானவர்கள். அவர்களும் உமக்குக் கிடைக்கப்பட்டவர்களல்ல, ஆனால் நீர் இத்தக்ஷணம் யமுனாநதிக்குப்போனாற் பார்க்கலாம். அவ்விடத்திலவர்கள் நித்தம் ஸ்நானஞ் செய்யுநிமித்தம் வருவதுண்டு. அவர்களுக்கு இரதிதேவி முதலானவர்களும் தொண்டுசெய்வார்கள். ஆகலால் உமக்கிஷ்டமானாற் போய்வரலா மென்றான்.

அதுகேட்ட தசக்கிரீவன் தன்னுடன்வந்த தளங்களையெல்லா நிறுத்தி அப்சரஸ்திரீகளுக்குக் காவல்வைத்து, அவர்கள் வெளிவருவதானால் உடைவாளாலுடனே வெட்டிவிடும்படி ஆஞ்ஞாபித்து, பாற்பானைக்கு முகப்பமிட்டுச் செல்லும் பூனைபோல் தான் புஷ்பகவிமானத்திற்சென்று, அந்த யமுனாநதிக் கரையில் நின்று அங்கு வந்திருக்கும் தேவதா ஸ்திரீகளைப்பார்த்து, ஆ! ஆ! பெண்கள்சிகாமணிகளே! என்னை யறிவீர்களா? என்புகழை நீங்கள் கேட்டதில்லையா? என்று தனக்குள்ள திராப்புகளையெல்லாம் பிரபலமாக ஒன்றுவிடாமல் அவர்களுக்குச் சொல்லி, பின்னும் தனக்கு இந்தத் திரிபுவனங்களும்- திரிமூர்த்திகளும் - மற்ற யாவத்பேரும் நடுங்குவதாயுஞ் சிரிப்புடன் புகன்றான். அவைகளைக்கேட்டஅவர்கள் பூனைமுன் எலியொத்தவர்களாகிப் பதுங்கிப்போவதற்கும் இடமில்லாமல், அடா பாதகா! அடா துரோகி! அடா சண்டாளா! இந்த முழும்போட வந்தாயாவென்று புலம்பினார்கள். அதனாலிவன் சிலரை வலுவி லிழுத்துக் கட்டிப் புஷ்பகவிமானத் தடைத்தும், சிலரைச் சிறுமாறுபடச்செய்தும், சிலரைக் கூந்தல்களையறுத்தும், சிலரை வாயினாலுஞ் சொல்லக்கூடாத அலங்கோலஞ் செய்தும் ஆக்ரமித்துக் கொக்கரித்தான். அதுகாலையில் ஓடிவிட்டவர்கள் சிலபேர். ஓடும்போது வாளால் வீசியதனால் வெட்டுப்பட் டிறந்தவர்கள் பலபேர். தங்களுக்குத் தாங்களே வாடியிறந்துவிட்டவர்கள் சிலபேர். இந்தச் சங்கதியைத் தேவர்களுக்காவது அறிக்கைசெய்யலாமென்று நாடிச்சென்றவர்கள் பலபேர்.

இப்படி நானாவிதமாகப் போனவர்கள் போக மற்ற என்பதுகோடி ஸ்திரீகளைச் சிறையெடுத்துக்கொண்டு வரும்போது அவரவர்கள் புலம்பியழுகின்ற வோசையானது உலகமெல்லாம் செவிடுபட்டது. அவர்கள் கண்களினின்றும் வடியாகின்ற நீரானது எங்கும் ஆறாய்ப்பெருகி யோடும்படி வானவழியாய்ச் செல்லும் பாவியாகிய ராவணன் தனது மூடத்தன்மையால் மகோதரனைப் பார்த்து, 'அப்பா என்னுயிர்த்துணைவனே! இதென்ன ஆறு? நாமெவ்வளவுதூரம் சென்றாலும் நம்முடனேகூட வருகின்றதே' என்றான். அதற்கவன், ஐயா இராவணேஸ்வரா! நீரிந்த தேவகன்னிகைகளையும், அந்த அப்சரஸ்திரீகளையும் சிறையெடுத்துவருவதைக் கேள்வியுற்ற இவர்களுக்குரியவர்களாகிய இந்திராதிதேவர்களும் வருணராஜனும் சந்தோஷமடைந்தவர்களாகி, கூடினவரையில் தக்கநாயகன் நமது குலப்பெண்களுக்குக் கிடைத்ததே நாம்செய்த பாக்கியமென்று ஆசீர்வதிப்பதையறிவிக்கும்பொருட்டும் - தேவரீர் திக்குவிஜயஞ்செய்து இளைப்புடன் செல்வதால் ஆயாசந்தீரும்பொருட்டும் - உமக்குக் குளிர்ந்த காற்றுண்டாகும்படியாக வருஷம் வருஷிக்கக் கட்டளையிட்டதனால், அந்த மழையானது இவ்வுலகங்களையெல்லாங் குளிரச் செய்ததுமன்றி உமக்கும் விடாய்தீரப் புனலைவாரி இறைக்கிறதென்றான்.

அதுகேட்ட ராவணன் வெகுஆனந்தக்கடலில் மூழ்கினவனாகி, இருபதுபுஜங்களும் இருநூறு புயாசலங்களாய் விம்மப் பரவசமடைந்தான். அக்கால் வானத்தில் அசரீரியானது தோன்றி, அப்பா ராவணா! அதை நம்பாதே: உன்னைத் தொடர்ந்துவருமிவ்வாறானது நீ சிறையிட்ட ஸ்திரீகளின் கண்களிலிருந்து பாய்ந்தோடி வரப்பட்டது. இதைத் தண்ணீரென்றும், குளிர்ச்சியுடையதென்று நினைக்காதே. இஃதுன்குலத்தை யறுக்கவந்த மிகவும் வெப்பமாகிய அக்கினிக்குச் சமதையாகிய கூர்மையுள்ள வடிவாளென்று நினைத்துக்கொள்ளுக. எனச்சொல்ல அதைத் தான்கேட்டும், அவன் தோய்ந்திருக்கும் ஆசையினால் கிஞ்சித்தேனு நினைக்காதவனாய் இவனைக் கவுரவப்படுத்திப் பேசிய மகோதரனுக்குப் பின்னும் உபசாரங்களைச்செய்து வெகு ஆடம்பரமாகக் கலந்து பேசிக்கொண்டு, முன்பின்வருவ தறியாத அற்பச் சந்தோஷியாய் இன்னம் எவர்களிருக்கிறார்கள் நமக்கெதிரியானவர்களென்றும், இப்பேர்ப்பட்ட ஸ்திரீசாதிக் கூட்டங்க ளிருக்கிறவிடங்கள் இன்னமுமுண்டாவென்றும், அப்படியுண்டாயின் அவர்கள் தலைமீதுங் கையை வைக்கலாமா வென்னும் யோசனையோடு செல்லுகின்றான்.

கேளீர் ஸ்ரீதாசரதி! பாவங்களையெல்லா மூட்டையாகக் கட்டிக்கொண்டு செல்லும் இராவணனுக்கு மகோதரன் பின்னுஞ் சொல்லுவான். ஐயா இராவணேஸ்வரா! நீர் சிறையெடுத்துக் கொண்ட ஸ்திரீகள் விஷயத்திற் கவனம் வைத்து நானும் யோசித்துப் பார்த்தேன். உம்மைப் பார்க்கும்போதே எவ்விதப் பெண்டுகளும் ஆவல்



கொண்டு நாடுகிறபடியால் எனக்குஞ் சுலபமாயிருக்கின்றது. உமக்கும் வேலைதீர்ந்தாற்போ லிருக்கின்றது. மாணிக்க மிருக்குமிடத்தைக் குருடனுக்குக் காட்டி யென்னபிரயோசனம்? மலடிக்கு மைந்தன் கதைகளைச்சொல்லி யென்னபயன்? சரச சையோகங்களின் கூறுபாட்டைப் பேடிகளுக்குரைத் தென்னகுணம்? உம்மைப்போற் சகலவிதத்திலும் கைதேர்ந்து, நல்லகுணத்தையும் - திடத்தையும் - திவ்வியாலங்கிருத வழகினையும் பெற்றவர்கள் யாரிருக்கின்றார்கள்? ஐயா தசக்ரீவரே! கண்ணிவைத்துப் பறவை பிடிப்பதுபோல் நாமு மிலக்குவைத்துக்கொண்டு, இதுவரையில் கிடைப்பதற்கு அரிதாகிய அப்சரஸ்திரீகளையும் - பார்ப்பதற்குங் கிட்டாத தேவகன்னிகைகளையும் - சிறையெடுத்தோம். உமது மனதி னிஷ்டப்படிக்கு அவர்களெல்லாஞ் சித்தித்ததும், அவர்களை நீர் சிறையெடுக்கப் பெற்றதும் ஒரு பெரிதல்ல. இன்னமொன் றிருக்கின்றது. அது மிகவுஞ் சந்தாயபலமா யிருக்கும். அதுயாதெனில், பாகீரதி தீர்த்தத்தில் கின்னரஸ்திரீகள் பத்துலக்ஷம்பேர்கள் நீர் விளையாட வருகிறதுண்டு. அதற்கு மிதுதான் சமயம். இத்தக்ஷணமே போவோமேயாகில் அவர்களும் வெகுஸுலபமாய்க் கிடைப்பார்கள். என்று மிகவு முத்தமப்புருஷன்போல் மெத்தவுந் தாபந்தரியத்துடன் சொல்லினான்.

இப்படியம் மகோதரன்சொல்லி முடியுமுன்னமே இராவணனானவன் தாவிக்குதித்து, தோளைத்தட்டிக் குலுங்கச்சிரித்து, உண்டுருசி கண்டவனும் பெண்டிருசி கண்டவனும் ஒருபோதுமிலவ னென்பதுபோல் வில்லினின்று விட்ட கணையினுமதிகமானவேகமாக வெகு ஆவலுடன் அந்தப்பாகீரதி தீர்த்தத்தை யடுத்து, மாரீசன் முதலானவர்கள் தடுக்க-தான்கொண்டதே சரியென்று நடக்க-அங்கிருந்தவர்களெல்லாம் நடுநடுக்க-கின்னரர்களெல்லாம் துன்பத்திற்படுக்க - பின்னுமந்த ஸ்திரீகளெல்லாம் சாபங்கொடுக்க - அவர்களையெல்லாஞ் சிறையெடுத்து, உடனே சகலலோகமுங் கலங்க ஆர்ப்பரித்து வந்து, மகோதரனைக்கண்டு, இன்னம் என்னசேதி ஏதாவதுண்டாவென்றான். அதற்கவன் ஐயா இலங்கேசா! உமக்குத்தானோ பெண்டுக்குக் குறைவு? இன்னுமநேக மிருக்கின்றன. நானுமுமதுபேரில்வைத்த அன்பினால் எனக்குள் நெடுநாளாக வைத்துக்கொண்டிருந்த இடங்களையெல்லாம் உமக்கே தெரிவித்துவிடுகிறேன். எனக்கு உம்மைவிட யாரிருக்கின்றார்கள்? நீருமந்த வேலைக்கென்றே வந்தவர். உமக்கிப்போது நல்லோலைக்கிளாக்காக விருக்கின்றது. உமது செங்கோலுக்குமுன் சங்கேதமுமுண்டா? உமது நல்ல காலபலத்தினால் மண்ணும் தங்கமாகிவிடும். நீர் மாத்திரம் பிரவேசிப்பதானால் நானுமடுக்கடுக்காகச் சொல்லுகிறேன் சற்றே யிளைப்பாறியிருமென்று மகோதரன் பூமேலேற்றி, இன்னும் யக்ஷகன்னிகைகளும் - கந்தருவ கன்னிகைகளும் - இராஜகன்னிகைகளும் - பிராம்மண கன்னிகைகளுமாகிய பலவகைக் கன்னிகைகள் இன்னின்னவிடங்களில் இன்னின்னபடி யிருக்கின்றார்களென்று ஒரேதடவையாய்த் தன்வஞ்சந் தீரும்படிக்குச் சாவதி வைத்ததுபோற் சொல்லி முடித்தான்.

இப்படி மகோதரன் சக்கரைக்கஞ்சி வார்த்துப் பக்குவமாய்ச் சொல்லியவாறே இராவணனைச் சொக்குப்பொடியிலகப்பட்டுச் சக்கரம்போற் சுழன்றுசென்று அக்கன்னிகைகளை யெல்லாம் சிறையெடுத்து, ஆக முன்னூறு கோடி ஸ்திரீகளுடனும் இலங்கைக்குப்போக மிக்கமதத்தையடைந்து உக்ரமாகத்திரும்பி, தனது சதுரங்கசேனைகள் முதலிய சர்வதந்திராளு மருவிவர நடந்துவருகிறான். அக்காலையிற் சிறைபட்ட ஸ்திரீகளெல்லா முறையிட்டழவும், அவர்கள் கண்களிலிருந்து நீரானதுவடிந்து சமுத்திரத்திலும் பெரிதாகி ஓடவும், அவரவர்கள் தலைவிரித்துப் பசுவைப்போற் கதறவும், இப்படியவன் அல்லோலகல்லோலஞ் செய்துகொண்டு ஆடம்பரமாய் வருவது எப்படியிருந்ததென்றால்? வீட்டிற்பிறந்த பெண்ணாகிய சூர்ப்பநகியின் புருஷன் காலஞ்சென்றமையால் அதற்காகக் காலகேயராகிய அசுரப் பெண்களெல்லாம் கூடிக்கொண்டுவந்து விசாரித்துத்துக்கங்கொண்டாடுவதுபோலிருந்தது. மேலுமந்த ஸ்திரீகளெல்லாம் தலைவிரிகோலமாகித் தீராத்துயரையடைந்து, இனியெவ்வாறு பிழைப்போமென்று ஏங்கினவர்களாகி, அடா இராக்ஷதா! அடாபத்துத்தலையா! அடாபாவி! அடாசண்டாளா! அடாதுரோகி! எங்களையுமிப்படி பொசுக்குவாயா? நாங்களென்னசெய்தோம்? மசகம்போலிருக்கிற நாங்களும் உனக்கோரெதிரா? எங்களை யினியாகிலும் விட்டுவிடப்படாதா? பதைபதைக்கப் பச்சைக்கிளிகளைப் பிடித்துக் கூண்டிலடைப்பதுபோல் எங்களைப்பிடித்து நிர்ச்சுவாய் இவ்விமானத்திலடைத்துக்கொண்டு போகின்றாயே, எவ்விடஞ்செல்கின்றாய்? அவ்விலங்கையிலெங்களைக் கொண்டுபோய்வைத்து எங்கள் வாழ்நாளைக் கொள்ளை கொள்ளவா நினைத்திருக்கின்றாய்?

அடா துன்மார்க்கா! நாங்களிப்படி வயிறெரிந்து வாடித்தவிப்பது வீண்போமோ? உனக்கஃதிடிக்காமல் விடுமா? எங்களுடைய தேகத்தை நீ அனுபவிக்கவெண்ணியபடியால் உன்தேகத்தை அக்கினிதகிக்காதா? எங்களை நாடிவந்த உனதுகால்களை எமதூதர்கள் வெட்டியெறியார்களா? பதிவிரதா சிரோமணிகளாகியவெங்களை விருப்பமுடனோக்கிப்பார்த்த உன்கண்களைப் பனநுங்கின் கண்ணைத் தோண்டுவதுபோற் கழுகினங்களெல்லாங்கூடிக்குத்திக்குத்திக் கிளறாதா! வம்புவார்த்தைகளால் வாவென்றழைத்த வாய்களிற் புழுக்கள் சொரியாதா? அடா பெண்களை யலையக்கண்ட பிசாசே! எங்களை வலியவிழுத்துப்பற்றிய உன்கரங்களைப் பனந்தறிபோல் வெட்டித்தறியார்களா? எங்கள் பெண்பாவம்பிடித்து நீ பேய்போலலையாயா? ஒருவன் பெண்சாதி மற்றொருவனுக்குத் தாயென்பதும், பிறனில் விழையாமையே பேரறமென்பதும், அறிந்திலையா? அடாமட்டிக்கிடாவே! உனக்கு நாங்களிடுமிச்சாபங்கள் வீணாய்ப்போகுமா? பெண்களையலையக்கண்டசண்டாளரைத் தண்டமேந்தியகாலனானவன் கண்டகண்டமாக வெட்டித்தெண்டிக்காமல்விடுவானோ? அடா அற்பனே! இந்தக்காலத்திலெங்களை இக்கோலஞ்செய்கிறபடியால் ஒரு ஸ்திரீயினால்தானே



நீ நாசமாகிப்போவாய். எங்கள் தலைவர் கூக்குரலைக் காதுகொடுத்துக் கேட்டுக்கொண்டிருக்கும் பாக்கியவானாகிய ஸ்ரீமஹாவிஷ்ணுவானவர் இன்னமெத்தனை நாள்தான் பொறுத்திருப்பாரோ? அவரும் பாணந்தொடுப்ப தெக்காலம்? உனக்குஞ் சாணந்தெளிப்ப தெக்காலம்? அடா பாதகா! என்றொவ்வொருவரு நானாவிதமாகச் சாபங்கூறினார்கள்.

இப்படி முந்நூறுகோடி ஸ்திரீகளும் ஓவென்றலறிச் சாபமிடுவதைக் கேட்ட இராவணன் மகோதரனைப்பார்த்து, அப்பா புண்ணியவானே! இதென்னகொள்ளை? ஐயோ! இவர்களெல்லா மிப்படி தூஷித்துச் சாபமிடுகிறார்களே: இவைகளையெல்லாம் கேட்டு மனந்தாளவில்லையே: என்காதும் புளித்துப்போகின்றதே: இதற்கொரு வழிசொல்லையாவென்றான். அதற்கவன் சேட்பத்துக்கேற்ற கோட்பாடான வைத்தியனைப்போல் இராவணனைப்பார்த்து, ஐயா இலங்கேஸ்வரா! இவர்களொய்யாரமாகக் கைகளை நீட்டிநீட்டி அப்பா! அப்பா! அம்மா! என்று தவிப்பதெல்லாம், நீர் மெய்யாக விட்டுவிடுவீரென்று பொய்யாகவே புகலுகின்றார்களேயல்லது அவர்களாற் செய்யப்போகிறதொன்றுமில்லை. நீரென்ன அப்படிச் செய்யாதகாரியஞ் செய்துவிட்டீர்? ஈதெல்லாம் வையகத்திலடுத்த காரியந்தானே: நாமிந்த நையப்பாட்டுக்கோ நடுங்குவது? இனியுய்யும்வழியைத்தேடும், என்றவனைப் பையப்பையத் தேற்றினான். அதனால் தசக்கிரீவன் பயித்தியந் தெளிந்தவன்போல் தேறி, அப்பாமகோதரா! இனி நடக்கவேண்டிய தென்னவென்றான். அதற்கவன் நாமினிநேராய் நமதுபட்டணத்துக்கே செல்லவேண்டுமென்றுரைத்தான். அம்மாத்திரத்தில் இராவணனானவன் சர்வதந்திராளுடன் புஷ்பகவிமானத்தைத்திருப்பி, சகலமேளவாத்தியங்களு முழங்கும்படியாய் மகா சந்தோஷானந்த வைபவத்துடன் இலங்காபுரியில் வந்து சேர்ந்தான்.

### காலகேயர்போரில் இராவணனால் தன்கணவனாகிய வித்துருசிங்கிறந்ததைச் சூர்ப்பநகையறிந்து வருந்தி யுத்தகளம்வந்து புருஷனைக்கண்டு துயரப்படுதல்.

கவி.

ஆயவன்றனணிநகர மவனடையவடல்கால
கேயரமர்பொருகளத்துக் கிளரரக்கர்பெருஞ்சேனை
சாயவமர்பொருகளத்துத் தன்கணவன்படக்கேட்ட
தீயகொடுஞ்சூர்ப்பநகை செய்தனயாமுரைசெய்வாம்.

இவ்விதமாக இலங்கைப்பட்டணத்தில் இராவணன்வந்து இறங்கியிருக்க, அவ்விடம்காலகேயரோடு விளைத்தபோரில் இராவணன்தன்புருஷனாகிய வித்துருசிங்கனைச் சம்ஹரித்துவிட்ட செய்தியை தங்கையாகிய, சூர்ப்பநகியானவள் கேட்டு ஓடோடியு மிரணகளத்திற்கு வந்து, தன்புருஷனைக் கண்டெடுத்து வாரி மடியின்மீது வைத்துக்கொண்டு கடகடவெனப்புரண்டு, பூதவேதாளங்களும் பிரமிக்கக்கதறி, அலங்கோலமாகக் கூந்தலைவிரித்து மார்பிற்

915

புடைத்துக்கொண்டு, ஐயோ தெய்வமே! இப்படியுஞ் செய்வாயோ? எனக்குப் பிராணநாயகனாகிய வித்துருசிங்குவையும் கொண்டுபோய்விட்டாயே: என்க்கூவி அப்பால் தன் புருஷன்முகத்தைப் பார்த்துப் புலம்புகிறாள்.

## சூர்ப்பநகை புருஷனைக்கண்டு புலம்பித் தகனஞ்செய்து இலங்கையில் இராவணனிடம் வருதல்.

கவி.

காதலானியென்னைக் கைப்பிடித்தவன்றமுதற்
பேதையேன் சொல்லியசொல் பிழைத்தறியாப் பேரவுண
நாதனேயென்னைநீ கடுக்கங்காணுதாரிற்
போதநீயெழுந்திராய் பொய்யுறக்கமுறங்காதே.

என்னிற்பின் சூர்ப்பநகை யிருக்குமோவிராவணைவென்
றுன்னிச்சோதிப்பானுன் றுயிடக்கிக்கிடந்தாயோ
பின்னிற்கும்பழிபூண்டு பெருந்துயரப்பட்டோ
னுன்னிற்பின்னிருக்கிலே னெழுந்திராயுத்தமனே.

முன்னமேதானென்னை முறைமையாலேகொடுத்துப்
பின்னெனைநாலிழப்பித்த விராவணனுமென்றமையன்
றன்னைமூவுலகாள யான்கண்டுதாரவுணர்
மன்னனையுடல்சுமந்து வாழ்வேனோவாழ்வேனோ.

கைமுறுக்கிவாய்மடித்துக் கிடந்தகருத்தறியேன்
மைமுகத்துக்கருமனத்து வாளரக்கர்கோமானை
மெய்முறிக்கப்பெற்றிலே னெனதினைந்தோமேவாரை
மொய்முறிக்குமாற்றலாய் காரணமென்மொழியாயோ.

என்று புலம்பினவள் பின்னுமடங்காத துயரை யாற்றாளாய் வருந்தி, ஆ! ஆ! என்னருமைக் கணவனே! நானினி யென்செய்வேன்? நீ யிப்படி என்னைவிட்டுப் பிரியவும், நானிவ்விதம் வருந்தி உயிர்வாடவும், பார்ப்பவர்களெல்லாஞ் சந்தைக்கூட்டம்போற் கூடவுஞ் செய்துவிட்டாயே: ஆ! என்னுயிர்க் குயிரான நாயகா! உனக்குமிப்படி வருமென்று நானறியாமற் போனேனே: நீ சுவர்க்கலோக வாழ்வை விரும்பிச்செல்லவும், நானிந்த மண்ணில் இன்னம் அவதிப்படவுமாக வைத்துவிட்டாயல்லவா? ஆ! என்புருஷசிகாமணியே! நீ இப்படி இறந்துவிடுவது தெரிந்தால் நானுன்னை உயுத்தத்திற்கும் அனுப்புவேனா? அறியாமற்போனேனே: நீ யிப்படியும் என்னைவிட்டுப் பிரியலாமா? இதுவுந்தர்மந்தானா? என்றநேகவிதமாகப் புலம்பி, அறுபட்ட முண்டத்தையும் தலையையும் ஒன்றாய்ச்சேர்த்துப் பார்த்து, வருத்தஞ் சகிக்காதவளாய் அதனுடன் சமஸ்நானஞ்செய்து தகனம்பண்ணிக் கர்மத்தைமுடித்துப் பின்னும் சொல்லுகிறாள்.

ஓ பிரியாவே! என்றலையில்தானா இப்படி யிடிக்கவேண்டும்? வலியற்றுமெலிவுற்றிருக்குமிந்த எளியைத்தானா பலியிட நினைத்தாய்? பட்டகாலிற்றானா படவேண்டும்? ஏழைக்குடிக்கவார்க்கும் கூழைத்தானா பிடுங்கிக்கொள்ள வெண்ணினாய். ஆ தெய்வமே! என்று மரணமூர்ச்சையடைந்து பூமியில் விழுந்து,





பின்பெழுந்து முன்சொன்ன அலங்கோலத்தினு மிஞ்சிய வேஷத்துடன் ஆறு தீதுயரங் கொண்டு, இரணபத்திர காளிபோல் அடங்காத கோபவெறியாகி, பார்ப்பவர்களெல்லாம் பயப்படும்படியாகவும் - அதிலும் சிலர் இனி யென்ன விதமாக முடியுமோவென்று நடுங்கும்படியாகவும் - தேவாதி தேவர்களெல்லாம் சரி: சரி: இன்றைக்குத்தா னிராவணன் தலைக்குத் தாம்பூலம் வருகிறதென்று பேசிக்கொள்ளவும் — இரண்டுகண்களும் கோவைப்பழத்தினு மேலாகச் சிவந்து, வழியொன்றுந் தெரியாமலும் — மேபெள்ளமுங் குறியாமலும் — முள்ளுமுரடென் றன்னுமலும் — கல்லுகரடென் றெண்ணுமலும் - எதிரிற் சந்திக்கும் பேய்பிசாசுகளெல்லாம் பயந்தொளித்துக் கொள்ளவும் — சண்டமாருதம்போல் இவளுமொரு பெண்தானுவென்று யாவரும் பேசிக் கொள்ள இலங்கையை நோக்கி நடந்துவந்து, தன் ஸ்மரணை தனக்குத் தெரியாமல் மறந்து, மானமிமான மென்பதையுந் துறந்து, கோவென் றலறிப் போய் இராவணன்சபையிற் குதித்து, கடகடவெனப் புரண்டு தலையை மோதிக்கொண்டு, விரித்தகூந்தல் பூமியிற் புரளவும் - கண்ணீர்பெருகிக் கடல்போலோடவும் —முறையிடுகின்றாள்.

## சூர்ப்பநகை இராவணனோடு முறையிடல்.

### கவி.

சொல்லெடுத்துப்பழிதூற்றித் துன்பங்கொண்டேன்விடு
கல்லெடுக்கநல்லுற்றார் கரைக்கேக்கக்கடைக்காணீ
வில்லெடுக்கையுன்னுடைய வீரத்துக்கழிவன்றோ
வல்லெடுக்குந் தலைமாய்த்த வண்ணவோவண்ணவோ.

மூலைப்பாலேநஞ்சாதி முனைமுகத்திலொருக்காலுங்
கொலைப்பாலனல்லாத்தன் மைத்துனனைக்கொலைசூழ்ந்த
புலைப்பாவியுன்றமையன் பொல்லாவென்றெல்லோரு
மலைப்பாலேயறவிலாந்தே வண்ணவோ வண்ணவோ.

காசுக்கும்பொன்னுக்கு மாழிக்குங்குந்சொல்லின்
வாசிக்குங்காலுண்ண மணவாளப்பிள்ளைகளைப்
பூசிக்கைபொருகளத்துக் கொன்றுபுட்டிகையோ
வாசைக்கும்புறஞ்செலுத்து மண்ணவோவண்ணவோ.

மிகையெல்லாஞ்செய்தாரே யாயிடினும்விளையாட்டான்
வகைவல்லாரொருக்காலு மைத்துனயார்தம்மோடு
பகையில்லையென்னுமந்தப் பழமொழியுங்கேட்டிலையோ
அசைவில்லான்வரையெடுத்த வண்ணவோவண்ணவோ.

என்று முறையிட்டழுதவள் பின்னு மவ்விராவணனைப் பார்த்து அடங்காத துயரத்தோடு அரோதனம் பண்ணுகிறாள், ஓ எனதண்ணாவே! என்னை யிந்தக்கோலமும் பண்ணுயல்லவா? இப்படியும் அனியாயஞ் செய்யலாமா? இதுவும் உனக்குத் தருமந்தானு? என்றுபேசி மனம்நோகி, இயாவர்க்கும் அடங்காப் பிடாரிபோல்வீசி, அடா தோஷி! அடா பாபீ! உனக்குவந்த

பொல்லாதகாலமென்ன? இவ்விதமாகநான் நிலைகுலைந் தழுவதும் உனக்குச் சீரா? இதற்குத்தானா உன்னுடன் நான் பிறந்தது? நீ இக்குலிஜையஞ்செய்து திசைக்குப்போய் திக்கற்றுநின்ற கொள்ளைக்கு, இக்குவலயத்தில் என் பாவத்தைத்தானா அளந்துகொள்ள வேண்டும்? நான் மங்கிலியமிழந்து வாடித் தவிக்க நீ யுன் வாழ்நாள் கழிப்பதுமுண்டோ? சும்மாயிருந்த என்புருஷனைச் சற்றேனு நினையாம லெதிர்த்து, தன்மானம் பிறர்மான மின்றி நிரோதுவாய்க் கொன்றுவிட்டு வெகு கீர்த்தியுடன் வந்து சேர்ந்தாயோ? அடா துன்மார்க்கா! இந்தக் கண்காக்ஷிக்கு என்னையேன் ஒருவனுக்குக் கொடுக்கவேண்டும்? இப்படிப் பென்னை உருவிய கோல்போலாக்க எத்தனைநாள் நினைத்திருந்தாயோ? என்னதான் உயுத்தநடந்தபோதிலும் இப்படி யார்செய்வார்கள்? நீ யென்ன அவ்வளவு பிரதாபத்தை வகித்தவன்? அவரை யெத்தனையோ பராக்கிரமசாலிகளெல்லாம் கெஞ்சித் தஞ்சமென் றிருந்தார்களே, அடா பஞ்சைப்பயலே! நீதான் ஒருவன் பார்க்கும்போதே துள்ளித் தொப்பென்று விழுகின்றாய்.

அடா விவேகசூனியனே! உலகத்திலிடத்தில் என்னதான் பெண்ணுக்குத் தாய்வீட்டுச்செல்வ மமைந்திருந்தாலும், ஆடையாபரண அலங்கிருதங்களும் — பஞ்சகச்சாய உண்டியும் — யோக வைபோக்கியமும் — மற்றுமுண்டான சீருஞ் சிறப்பும் — வெகுவாய்க் கிடைக்கப்பெற்ற போதினும், காமாகரலீலையின் விநோதங் காட்டிப் புணரும் கண்ணிறைந்த கணவன் பாக்கியமே பாக்கியமென்பது உனக்குத் தெரியாதா? உன்கைவில்லின் திறமும், உன் சௌரிய பராக்கிரமமும், எனதேழ்மைப் பிராணநாயகனிடத்தில் தானா காட்டவேண்டும்? அப்போதுதானா உன்னை யிவ்வுலகங்கள் மெச்சிக்கொண்டாடும்? அந்தக் காலகேயர்களுக்கும் உனக்கும் என்னபகையிருந்தது? அல்லது என்புருஷன்தான் என்னகுற்றஞ் செய்தான்? என் பிச்சைச் சோற்றைப் பிடுங்கவெண்ணி வந்ததேயல்லது, நீ யுத்தத்திற்காக வந்தவனல்ல. இதென்ன கன்னத்தி லடித்த காயமிருக்கப் பின்னுஞ் சாக்ஷி தேடுவாருண்டோ? நீ சண்டையில் வாள்யுத்தஞ் செய்தபோது அவனுன் அண்டையிலிருந்தானா? அவனிருந்த விடத்தைக் கண்டுபிடித்து வேணுமென்றே மண்டைபிளக்கவடித்த அடா சண்டாளப்பாவி! நீமாத்திர நால்வர்க்கழகாய் உண்டுடுத்திப் பெண்டு தேடிச் சுகித்திருக்கின்றாயே: தனக்குண் டெதிரிக் கில்லையென்று நினைக்கலாமா?

அடா சாமத்துரோகி! தாலிச்சரட்டை நீளச்செய்ய வொரு சகோதரன் வேண்டுமென்று உலகிற் றேடுவதுண்டு. நீ கூலிக்குப்பாவங் குறுக்க நின்றதுபோலும், வேலிக்கிட்ட முள் காலிற் றைத்ததுபோலும், சாணுமுழவையுந் தட்டாது விழுங்கவந்தாயே: நானெள்ளத்தனைமஞ்சள் பூசிக்கொண்டு உள்ளபடி சிவன்செயலாமென் றிருந்ததில், நீ துள்ளித் தடுமாறிவந்து அதைக் கிள்ளியெறிந்தாயே: அடா பேயா! நீ யினியாகிலுஞ் சுகப்படுவாயா? என்று பலவாறுந் தூஷித்து, சீவரத்தா னிருந்துங் கெடுத்தான் செத்துங்



கெடுத்தானென்பதுபோலநானொருத்தியிப்படியாகத்தாழவும், இந்த லங்கைப் பேண்டுகளெல்லாம்வாழ்வுமாவென்று தன்மனதி லெண்ணிக்கொண்டு; அங்குள்ள யாவத்திராளுங்கண் டேங்கவும், சும்மாநின்று வேடிக்கை பார்ப்பவர்களுக்குந் துக்கந் தொடரவும், முறையே கும்பகர்னன் முதலானவர்களிடத்திலும் போய் நொந்துசொண்டு; அடுக்கடுக்கானவக்கனைகட்டிவாய்திறந்து அநேகமாக அழுதுகொண்டிருந்தாள். கேட்டீரோ ஸ்ரீராமச்சந்திரப்பிரபுவே! இவள்தான் அந்த ராவணனுக்கும், அவன்குடித்தனத்துக்கும், இயமன் போல்சேர்ந்த தலைமாட்டுக் கொள்ளியென் றறிந்துகொள்ளும். ஆனாலிராவணனுக்கநுகால மிஃதெல்லாம் உணர்ந்தறிவதற்கான நியாயந் தெளிவுறக் காட்டுவாருமில்லை. அவனுக்கு மிதன்மூலம் விளங்கவுமில்லை. ஓ இராகவா! இதையவள் மனதில்வைத்துக் கொண்டுகாற்றுள்ளபோதே தூற்றிவிடவேண்டுமென்றெண்ணி அவனுக்குச் சீதாதேவியினுடைய ரூபத்தைவர்ணித்து சிறையெடுக்கச்சொல்லவும், அவனும் விதிவசப்பிரகார மெடுத்து அசோகவனத்திற் கொண்டுபோய் வைக்கவும், தேவரீருமவ்வளவுதூரம் போகவும் உமது திருக்கோதண்டத்தால் அவனுடைய புத்திரமித்திராதியரான சமூலமுமாளவுமாய்விட்டன: இவள்செய்த இந்தத்திம்புக்கும், இராவணனென்னும் பாம்புக்கும், கும்பகர்னனு மகோதரனும் படிக்கும் வீம்புக்கும், உமது கோதண்டக் காம்புக்கும் சரியாய்விட்டது. மேலுமவ்விராவண னழிவதற்கு அநேக முகாந்திரங்க ளிருந்தபோதிலும், அவையெல்லாப்பலித்து முடிவதற்கு இவள்தான் மூலாதாரமாயிருந்து தூண்டிவிட்டாள்.

இப்படியிருக்க தசக்கிரீவனானவன் நான்குபக்கமுங் கவனித்து நோக்கிக் கண்ணியிற்சிக்கிக்கொண்ட வன்னப்பட்சிபோல விழித்து, தன்னுடைய முகத்தில் விரக்தமென்பதில்லாமல் என்னசெய்வேனென் றுன்னிப் பிறகு மகோதரனைப் பார்த்தான். அன்னவனுநானுமதிக்கிலேன் அவளும் பொய்சொல்லானென்பதுபோலும் — பிள்ளையுங்கிள்ளிவிட்டுத் தொட்டிலுமாட்டிவிடுவானென்பதுபோலும் - புண்ணிற் கோலிட்டு வதைத்தாலும் கண்ணுக்கழகாய்ப் பார்ப்பவன்போலும்- அடங்காமனக்களிப் புண்டாகியும் அதைவெளியிற் காட்டாதவன்போலும் - அவளுக்குமுன்பாக அவனுக்கேதோ தான்கனைத்துக் கைசொல்லுவதுபோல எழுந்து, ஐயா இராவணேஸ்வரா! இதென்ன சீமையா மற்றென்னவென்று நினைத்தீர்? இதென்ன அலங்கோலம்? ஒரு பெண்பாவியிப்படி பிரலாபிக்கலாமா? ஐஐயோ!! இதாசும்மா விட்டுப்போவதல்லவே: பெண்பாவங் கொடியதென் றறியீரோ? அவளுக்கேதாவது ஒருவழியாய்த் தணிவுசொல்லி ஆதரிக்காமற் சும்மா கேட்டுக்கொண் டேன்னமிருக்கிறீரே: குலப்பெண்ணுந் தத்தளித்துக் கலக்கமுறலாமா? உமது வம்சிஷத்துக்கு நன்மையல்லவே: ஆனாலும் உமது ஆத்திரத்தை நானென்னென்று சொல்லுவேன்? காலகேயரைத்தான் நாம் கண்டிக்கவேண்டியது கடமை. இவன்கனவனென்செய்தான்? நீர் அநியாயமாக அவனையேன் வெட்டினீர்? இது நீரே தேடிக்கொண்ட வேலையாயிருக்கிறதே: நான் அப்போதே வேண்டாமென்று

"எவ்வளவுதூரந்தடுத்தேன்?" அந்தச்சொல் உமதுசெவிக்கு ஏற்காமற்போச்சுது. மிஞ்சிப்போனதற் கென்னசெய்யலாம். ஏதோகோபஞ் சண்டாளமாக நடந்தேறிவிட்டது. அந்த யுத்தமுனையில் மாத்திரம் யார்க்கும் ஒன்றுந்தோற்றாது. சாந்தகுணத்தர்களும் ஆத்திரப்பட்டு மீறுவர்களல்லவா? உமக்குமக்காலத்தில் இவ்வினினென்றும், பிறகிப்படியெல்லாம் வருமென்றுந் தோன்றாமற்போச்சுது.

ஐயா இலங்கேஸ்வரா! போனதெல்லாம் போகட்டும். ஐயோ! பாவம்: இவளைப் பார்க்கும்போதே என்வயிறும்பற்றியெரிகின்ற தல்லாமல், இவளும் அண்டநிழலில்லாமற் பரதவிக்கின்றாள். இனியார் அவளுக்குத்திக்கு? நாமும் அவள் துக்கத்தைப் பாராட்டவேண்டுமென்று கடமையிருக்கின்ற தாதலால் நீரேயவளுக்கு இனிமையான வாக்கியங்களையு நல்ல நீதிகளையும் போதித்து, அவளுடைய ஆத்திரத்தையும் துக்கத்தையுந் தணித்து, இப்போதே தண்டகாரணியத்திற்கு அனுப்பிவிடும். ஏனெனில் - அங்கிருப்பவர்களோ உம்முடைய தாயாதிகள். அவர்களும் பதினாலாயிரம்பேர்க ளிருக்கிறார்கள். அத்தனை பேர்களுக்கும் தங்கையில்லாமல் வருந்துகின்றார்கள். அதற்கிசைந்தபடி இவளுமிருப்பாள். அவர்களுந் தங்கம்போல் வளர்ப்பார்கள். அவர்களைப்போல் பாதுகாக்க உங்களாலு முடியாது. என்றிங்கிதமாகவே இனிமேல் நடக்கவேண்டிய காரியங்களுக்குச் சோடித்துவிட்டான்.

### இராவணன் சூர்ப்பநகையைத்தேற்றி தண்டகாரணியமனுப்பித் தன் திக்குவிஜயங்களைத் தாயாராதி மற்றுள்ளவர்கட்குத் தெரிவித்து மகிழ்தல்.

கவி.

இன்னபலவும்பன்னுமிவட் கிலங்கைவேந்த னிதுரைக்கும்
உன்னையுடையகணவனைநா னொன்றுமுணரா துயிருண்டேன்
என்னையமரின்மதிமயக்கி யென்னாலேயின் றவனைவி
தன்னையுண்டவிதியாரைத் தடுக்கவல்லார் தாமுண்டோ.

இவ்வண்ணம் பலவுஞ் சொல்லிச் சொல்லி அழுது துயரப்படும் சூர்ப்பநகையைப் பார்த்து மகோதரன் சொல்லியவார்த்தைக் கிசைந்து அம்மா என்னிரு கண்மணியும் அருமைப் பிறப்புமாகிய தங்கையே! இனிநான்தான் என்னசெய்வேன்? இது நான் மனமறிந்துசெய்ததல்ல. கையானது கண்ணிற்பட்டுவிட்டாற்போல் நான் வேண்டுமென்று கொன்றவனுமல்ல. தெய்வச்செயலிப்படியானால் இதற்கு நாமென்னசெய்யலாம்? நீயேதோ பலவாறாய் துக்கித்தழுகிறாய். அந்தத் துக்கம் எனக்கில்லையா? மூவுலகத்துக்கும் அதிபதியின் தங்கை இப்படி மூளியானாளென்றால், அந்தமானம் என்னதல்லவா? அம்மா! கும்பகர்ணன் - விபீஷணன் - இந்திரசித்தன் - மாரீசன் - பிரகஸ்தன் - இவாள் முதலானவர்களும், தண்டகாரணியத்தில் நமது பங்காளிகளும், இன்னமுமநேக பாத்தியஸ்தர்களுமிருக்க; ஏதோ தெய்வச்செயலாய் தப்பிப்போன ஒரு பிராணிக்கு நீயிந்தப்படி. அவதைரியப்படலாமா? நாங்களெல்லாம்



இல்லையா? இன்னமும் அன்பான உன் மதனி மண்டோதரியிருக்க, உன்தாயார் கைகசியம்மாளிருக்க, உனக்கென்ன குறைவு? ஆனால் உன்னை யிந்தக் கோலத்துடன் பார்க்கும்படி விதித்த தொன்றேயல்லது மற்றென்னவிருக்கின்றது?

அம்மா! நீ வீணாய் பிரலாபிப்பதைவிடுத்து மனதைத்தேற்றி உறுதிப்படுத்திக்கொள். இனி நீ யழுவதினால் மாண்டவர்கள் மீண்டுவரப்போகிற தில்லை. ஆண்டவன் கட்டளை இப்படியும் ஆச்சுதல்லவா வென்று திடப்படுத்திக்கொள். உனக்குத் தகுந்தவிடமும் ஆதரவுஞ்சொல்லுகின்றேன் கேள். தண்டகாரணியத்தில் நமக்கான தமையன்மார்கள் பதினாலாயிரம்பேர்க ளிருக்கிறார்களில்லவா? அவர்களிடத்திற் சென்றால் உனக்குச் சகலசவுக்கியமும் கிடைக்கும். பயப்படாதே என்று ஆதரணைசொல்லித் தேற்றினான். அதுகேட்ட சூர்ப்பநகி ஒரு வழியாய்த்தேறி; இதுவும் ஒருவகைதானென்றும், நமக்குத் தீங்கு செய்த இத்துஷ்டனை எந்தமூலத்திலாவது அழித்துவிட வேண்டுமென்றும், அதற்கும் காலநேரிடாமற் போகுமாவென்றும், இனியிந்தச் சண்டாளத்துரோகிமுகத்தில் விழிக்கப்படாதென்று மௌனிக்கொண்டு; உடனே தண்டகாரணியஞ்சென்று கரதூஷணாதிகளிடத்தில் வாசமாயிருந்து கிருஷ்ணசர்ப்பம்போற் பல்லிற் பகைவைத்துக்கொண் டிருந்தாள்.

கேளும் ஸ்ரீரகுநந்தனா! இவ்வாறிவள் தொலைந்தபின்பு தசக்கிரீவன் தனது திவ்யாலங்கிருதஅரண்மனையையடைந்து, அவ்விடமுன்பின் நடந்த சங்கதிகளையெல்லாம் கேட்டு யோகக்ஷேமங்களை யெல்லாம் விசாரித்தும், அன்னையாகிய கைகசியம்மனைத் தீர்க்கதெண்டஞ்செய்தும், தம்பியாகிய கும்பகர்ணனைக் கண்டு தழுவிக் கொண்டாடியும், மண்டோதரியைக்கண்டு வார்த்தை வழங்கியும், பட்டணத்தின் க்ஷேமங்களையெல்லா மற்றமந்திரி பிரதானிகளைக்கொண் டறிந்துகொண்டும், ஒருபக்கமாகவுட்கார்ந்து தான்திக்குவிஜயஞ் செய்துவந்த சவிஸ்தாரங்களெல்லாஞ் சொல்ல ஆரம்பித்து; தன் தமையனாகிய குபேரனைச்செயித்ததும், அவன் நந்தநவனத்தை யழித்ததும், அவனேறிவந்த புஷ்பகவிமானத்தைக் கைக்கொண்டதும், கைலாசத்திற்சென்று நந்திகேஸ்வரருடன் வாய்ப்போராடினதும், அவர்சபித்ததும், அப்பால் வெள்ளியங்கிரியைத் தூக்கினதும், அதற்குலகங்களெல்லாம் பயந்ததும், பரமசிவன்தன்னைப் பெருவிரலா லழுத்திவிட்டதும், பின்பு மந்திரிகளால் உபாயந்தெரிந்துகொண்டு சாமவேதகானஞ் செய்ததும், அதன்மேல் சாம்பசிவமூர்த்திக்குத் தயவுவந்து வரமளித்தவிவரமும், வேதவதியைத் தவத்தினின்றும் தொடப்போனசேதியும், அதற்கவள் ஜானகியம்மனாகப் பிறந்து அழிப்பதாகச் சாபமிட்டுத் தீயிற் குதித்ததும், மருத்துராசன் யாகத்தில் ஒருத்தருமில்லாமற்செய்து தன்பலத்தைக்காட்டிச் செயம்பெற்றதும், அங்கிருந்தவர்களெல்லாம் மாறுரூபங்களெடுத்துப் பயந்தோடினதும், அப்பால் சங்கவர்த்தனரால் மருத்தன் கப்பணங்கட்டினதும், அயோத்தியாபுரியில்அனரண்யனை

மடக்கினதும், அவனும் தசரதசக்கரவர்த்திக்குப்புதல்வனுக ஸ்ரீமகாவிஷ்ணு பிறந்து உன்னை அழிப்பாரென்றுச்சொல்லி உயிர்விட்டதும், சாங்கோபாங்கமாகச் சொல்லிப் பின்னும் சொல்லுகிறன்.

கேளும் ஸ்ரீராமா! இவ்வாறி வீரர்களையெல்லாம் ஜெயித்து அவ்வவர்களிட்ட சாபங்களையுமேற்று மகாபராக்கிரமசாலியாய்த் தான்மீண்டு இலங்கையைநோக்கி வரும்போது தன்னை நாரதர்வந்துகண்டு கொண்டதும், அவர்எமலோகத்தின் சங்கதியெடுத்துரைத்ததும், உடனே தான்சண்டைக்குத் தயார்செய்து நமனிடத்திற் போராடினதும், அவ்வமோகமான யுத்தத்திற் பிரமதேவர் தோன்றிச்சமாதானஞ்செய்ததும், பின்னர் அவனிடத்தில் திறைப்பணம் வாங்கினதும், மகோதரன் சொற்படிக்கு நாகலோகஞ்சென்றதும், அங்குமனேகமாகிய வரிசைகளைப் பெற்றதும், நிவாதகவசர்பேரிற் கோடையிடிபோற் சென்றதும், அவர்களெல்லாந் திப்பிரமைகொண்டு ஆடிமாசக்காற்றிலெழும்புந்தும்புபோற்பறந்ததும், பின்பிரவும்பகலும் மாளாயுத்தஞ்செய்து தேவாதிகளெல்லாம் திடுக்கிட்டலறப் பல அஸ்திரசஸ்திரங்களை அமோகமாகப் பொழிந்ததும், அதனைக்கண்ட பிரமதேவரும் பிரமித்து அங்குவந்து நிவாதகவசர்களைச் சரிப்படுத்தி இருவரையும் சமாதானஞ்செய்ததும், அந்த நிவாதகவசர் தனக்குயிருந்திட்டு மாயாவித்தை கற்றுக்கொடுத்ததும், அதன்மேல் மகோதரன் யோசனையின்படி காலகேயர்மேற் படையெடுத்து செயித்த சங்கதியும், வருணன்மீது படையெடுத்த மாகதிமையும், அங்குசகலரையும் வாட்டியகொள்ளையும், அப்சரஸ்திரீகளையும், தேவஸ்திரீகளையும், கின்னரஸ்திரீகளையும், இன்னு மற்றுமுண்டான பலவகைப்பட்ட ஸ்திரீகளையும் சிறையெடுத்ததும் கூடி; தான்திக்குவிஜயப்பிரதாபனுய் யாவரும் தனக்கு நிகருமெதிருமில்லையென்று வெற்றிக்கொடிதரித்து ஜெயம்பூண்டு வந்தபிரதாபங்களையெல்லாம் விவரம்விவரமாய் ஒன்றொழியாமலெடுத்துரைத்தான். அவர்களு மவையனைத்தையுங்கேட்டு வெகு சந்தோஷப்பட்டு மிகவுங்கொண்டாடினர்கள்; உலகமும் களித்திருந்தது. இலங்கைப்பட்டண முழுமையுமங்களவாத்தியங் கள்முழங்கின; பிரஜைகளும் தங்களரசனையெச்சிக் கொண்டு வாழ்த்தினர்கள். இராவணன் சர்வசேனைகளுக்கும் உத்தரவு கொடுக்க அவ்வவர்களும் தங்கள் தங்கள் விடுதியிற்செல்லவும் தான்மந்திரி சகோதர இஷ்டஜன சகிதருடன் ஸ்நானஞ்செய்து, தாயாருடன் புசித்துத் தாம்பூலமருந்தி, பின்பு மண்டோதரியுடன் அம்சதூளிகா மஞ்சத்திற்சேர்ந்து வெகுவுல்லாசமாக மருவி வார்த்தையாடிக்கொண்டிருந்தான்.

## இராவணன் இந்திரசித்துசெய்த நிகும்பலையாகத்தைக்கண்டு மகிழ்ந்து மகனையழைத்துக்கொண்டு தன்னிலங்காபுரி யடைதல்.

கவி.

நிருதர்கோமானிகும்பலையா கிவனத்திலுட்புக்கு
மருவியங்கன் மகஞ்செய்யு மகனைக்கண்டுமனமகிழ்ந்து



கருதிச்செய்காரியமென் கழறென்றழைப்பக்கவிகுருவாய்ச்
சுருதிவேலைகரைகண்ட சோதாவினைச்சுக்கிரன்சொல்லும்.

இவன்செய லிவ்வாருக இவன் திக்குவிஜயஞ்செய்யப் புறப்பட்டுச் சென்று நடத்திவருங்காலத்தில் இலங்காபட்டணத்தி லிருந்தமேகநாதனென்று சொல்லப்பட்ட இவன்குமாரன் தன்னுடைய தகப்பனைப்பார்க்கிலு மதிகமான பலசவுரியங்களைப் பெறவேண்டுமென்றுலோசித்து, இரகசியமாய் நிகும்பலையென்று சொல்லப்பட்ட மகாவனத்துக்குப்போய்த் தங்கள் குலகுருவாகிய சுக்கிரபகவான் முன்னிலையாய் பரமசிவனைக்குறித்து வேதங்களிலே சொல்லப்பட்ட இருபத்தெட்டு மகாயாகங்களுக்குள்ளே இயாவராலுஞ்செய்து முடிக்கப்படாத கோமேதம், அசுவமேதம், பவுண்டரீகம், இராஜசூயம், இவைமுதலான பலவிதயாகமுஞ்செய்து நிறைவேற்றி, மற்றயாகங்களைத்தொடங்கச் சித்தஞ்செய்துகொண்டிருந்தான். மண்டோதரியுடன்மருவி வெகுவுல்லாசமாய் வார்த்தையாடிக்கொண்டிருக்கின்ற இராவணனுனவன் சிந்தையிற்கருதி, அவ்விரவு நீங்கி மறுநாளுதயத்தில் தனதாண்மனைபுகுந்து நித்தியவிதிகள் முடித்துக்கொலுச்சபைக்குவந்து, என்னுடைய பட்டத்துக்குமாரனுகிய மேகநாதனெங்கேயென்று விசாரித்தான். அதற்கு மந்திரிமுதலானவர்கள் மேகநாதன் நம்முடைய இலங்கைப்பட்டணத்திலே இல்லையென்று சொன்னர்கள். அதுகேட்ட இராவணனுனவன் விரைவில் தூதுவரைவிடுத்து மேகநாதனிருக்குமிடம் விசாரித்துவரச் சொல்லுங்களென் றுத்தரவுசெய்தான். அவர்களு மப்படியே நாலுதிசையிலுந் தூதர்களை அனுப்புவிக்க, அந்தத் தூதரும் தேடிக்கொண்டு இன்னவிடத்தி லிப்படியாக விருக்கிறனென்று சொல்ல, அதுகேட்ட மந்திரிகள் இராவணனுக்கறிவிக்க, உடனேயவன் நிகும்பலைவனத்துக்குப்போய்த் தன்னுடைய புத்திரனுகிய மேகநாதனைக்கண்டு மிகவுஞ் சந்தோஷத்தையடைந்து, நீயிப்படிக்கெல்லாம் பிரயாசப்பட்டு இந்தயாகங்களை என்னகாரியத்தின்நிமித்தம் வேண்டிச் செய்கிறுயென்று கேட்டான். அதற்குச் சுக்கிராசாரியர் அவனைப்பார்த்துச் சொல்லுகிறர்.

கேளும் இராஜனே! நம்முடைய அரக்கர்குலமெல்லாம் விளங்கத்தோன்றிய உம்முடைய புத்திரனுனவன் பஞ்சேந்திரியங்களை நிக்கிரகித்து, இயாதொரு சலனமுமில்லாமல் அதிதிடபத்தியுடனே பரமசிவனைநோக்கி விதிப்படி தப்பாமல் மகாதபசும், இயாகங்களுஞ்செய்துமுடித்தான். அதுகண்ட பரமசிவன் மிகவுங்கிருபையுடனே வெளிப்பட்டு, ஒருகாலத்திலு மழிவில்லாத இரதமும் — வில்லும் — கவசமும் — அக்ஷயதூணியும் — மகாரிஷிகளுடைய கோபாக்கினிபோற் பகைத்தவர்யாவரையு நாசஞ் செய்கின்ற அஸ்திரமுங்கொடுத்து, சகலலோகத்திலுமுள்ள எல்லோரு மனங்கலங்கி மயங்கச்செய்யு மாயாவல்லபமும் — எதிர்த்தவர் யாவரையும் வெல்லத்தக்க பலமும் — உண்டாகக் கடவனென்று அனுக்கிரகஞ்செய்தார். ஆகையாலிப்படிப்பட்ட மேன்மைபொருந்திய புத்திரனைப்பெற்ற வுமக்கு யாதுகுறை? என்று சொல்லக்

கேட்ட இராவணன் மிகவுஞ் சந்தோஷத்தையடைந்து, சுவாமி! எல்லா மேன்மைகளுந் தேவரீருடைய அனுக்கிரக விசேஷத்தினாலே யல்லவோ விளைகின்றனவென்று கூறி, அந்தச் சுக்கிரபகவானுக் குபசார வந்தனஞ்செய்து, பின்பு மேகநாதனைப்பார்த்து, அடா! எனதருமைச் செல்வனே! சகலமான வரங்களைப்பெற்ற நீ இனியென்ன காரியத்தைவேண்டி யாகஞ்செய்கிறாய் நீ தேவர்கட்கவிர்ப்பாகங் கொடுக்கவேண்டாமென்று கூறி, ஐயோ! மெத்தவு மினைத்தனையேயென்றப்பொழுது செயதுகொண்டிருக்கிற யாகத்தை நிறைவேறச்செய்து, ஆசாரியராகிய சுக்கிரபகவானை அவருடைய லோகத்துக்குப்போகும்படியாக உபசரித் தனுப்பிவித்து, தன்னுடைய குமாரனாகிய அம்மேகநாதனை யழைத்துக்கொண்டு இலங்காபட்டணம் வந்து சேர்ந்தான்.

இராவணன் சிறையெடுத்துவந்த ஸ்திரீகளைப்புணரவழைக்க விபீஷணர் வேண்டாமென்று சிலநீதிவார்த்தை கூறல்.

கவி.

பாகுபோலமொழியாரைப் பற்றிக்கொணர்ந்த பாவையரைச்
சோகமேவுசிந்தையரைத் துணைக்கண்ணருவி சோர்வாரைச்
சேருபோதுமனத்தரக்கன் நிரலவழைப்பத் தீவினையைப்
போகமுயன்றவீடணனைப் பொல்லாச்சரிதற் கிவைபுகன்றான்.

அப்படிவந்தவ னவ்விலங்காபட்டணத்திலே வாசஞ்செய்துகொண்டிருக்குமளவில் சிலநாளைக்குப் பின்பு ஒருநாள் மிகவுமடங்காத காமவிகாரமதமேற்பிடித்துச் சகிக்கமாட்டாமல், முன்பு தான் கொண்டுவந்து வைத்திருந்த சர்க்கரைப் பாகைப்போன்ற சொற்களை யுடையவர்களாய், மகாதுக்கம்பொருந்திய சிந்தையும், அருவியாற்றைப்போல் நீர் சொரியப்பட்ட கண்களையுமுடைய அப்சரஸ்திரீமுதலானவர்களைப் புணர்ந்தின்பமனுபவிக்கும்படி வயிரம்பெற்ற மனத்தையுடையஇராவணபாதகன் கூட்டமாகவழைக்க, அக்காலத்தில் சமீபத்திருந்த தீவினையை நீக்கும்படிந் தவமுயன்ற விபீஷணரானவர் அவ்விராவணனைப் பார்த்து சிலநீதிவார்த்தை சொல்லுகின்றார். அண்ணா! என்னகாரியத்தை நினைத்தீர்? இப்படியுமுண்டோ? உலகத்திலே யாவனொருவன் செல்வங்கீர்த்தி மேன்மைமுதலான சிலாக்கியங்களெல்லாங் கெடும்படியாய், மேலே தனக்குவருகின்ற துன்பத்தையு மெண்ணாமல், நல்லோர் சொல்லையுங் கேளாமல் மூர்க்ககுணத்தை மேற்கொண்டு, காமவிகாரத்தினாலேயறிவுகெட்டு, நல்லகுலத்திலே பிறந்த உத்தமஸ்திரீகளை யிச்சிப்பானாகில் அந்தப்பாவத்தினாலே அவனுமழிந்து அவனுடையகுலமு நாசத்தை யடையுமென்று வேதசாஸ்திரங்களிலே சத்தியமாகச் சொல்லியிருக்கின்றதே: இஃதுமக்குத் தெரியாததல்லவே: ஐயோ! உமக்கு மிந்தப்புத்தி வரலாருமோ? என்றுதடுத்துச்சொல்லி மெள்ள சாந்தப்படுத்தி, இன்னமொரு செய்தி சொல்லுகிறேன் கேளுமென்று சொல்லுகின்றான்.



விபீஷணர் மதுவென்னுமசுரன் கும்பீநசியைச் சிறையெடுத்துப்போனதை அறிவிக்க இராவணன் கும்பகர்ணனையும் இந்திரசித்துவையுங் கூட்டிக்கொண்டு அவன்மேற் படையெடுத்தல்.

கவி.

ஏகவீரவிதுகிடப்ப வியம்பக்கேண்மூன் பெய்தியவத
மேகநாதன்வேள்வியுளான் வீரனுய அம்பிதுயிற்
போகமேவியவன்கிடந்தான் புனலின்மூழ்கி யான்கிடந்தேன்
ஆகமதுவாமடலசுர னரணிலங்கை யரண்புகுந்து.

அண்ணா! திரிலோகங்களிலும் சமானமற்ற வீரப்பிரதாப ஜெயசிங்கமே! நீரிந்தப்பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டுக் குபேரன்மேற் படையெடுத்துப்போய் அந்தக்குபேரன் முதலான வனேகம்பேர்களைச் செயித்து வருவதற்குட்பட்டகாலத்திலே, மேகநாதன் வனத்திலே யாகஞ்செய்துகொண்டிருந்தான். கும்பகர்ண னித்திரைசெய்துகொண் டிருந்தான். நான் சலத்திலே முழுகித் தபசுசெய்துகொண் டிருந்தேன். அப்படியிருக்கிற சமயம்பார்த்து மதுவென்று சொல்லப்பட்ட அசுரனானவன் தன்னுடைய சேனைகளுடனேவந்து பட்டணத்திற்புகுந்து, இவ்விடத்திலிருந்த வனேகஞ்சேனைகளையுமழித்து நம்முடைய சிறியதாயாராகிய கும்பீநசியை வலிமையாகப் பற்றிக்கொண்டு தன்னுடைய பட்டணத்துக்குப்போய்ச் சேர்ந்தான். என்றுசொல்லவும் நெய்யைவார்க்கப் பொங்கியெரியு நெருப்பைப்போல இராவணன் மனங்கொதித்துச் சீறி, பூனையின்செவியை யெலிபற்றி யிழுத்தாற்போலவும் - புலியைச் சிறுமான் துரத்தினாற்போலவும் - சற்று மஞ்சாமல் என்னையு மதியாமல், சந்திரசூரியரும் பயப்பட்டு வழிவிலகிச் செல்லுகின்ற இவ்விலங்காபட்டணத்திலும் புகுந்து, என்னுடைய சிறியதாயையும் ஒருவன் கொண்டுபோனானல்லவா? வெகுநேர்த்தி: வெகுநேர்த்தி: தம்பி விபீஷணா! அந்த மதுவென்று சொல்லப்பட்டவனை இப்பொழுதே செயித்துக் கொன்று, அவன் குலத்திலுள்ள ஸ்திரீகளையுங் கற்பழித்துக்கெடுத்து மீண்டுவருவேன். என்று சபதம்பேசித் தன்னுடைய சேனைகளெல்லா முன்னே போகும்படி யுத்தரவுசெய்து, விபீஷணனை லங்காபட்டணத்துக்குக் காவலாகவைத்து, நித்திரைசெய்துகொண்டிருக்கிற கும்பகர்ணனை யெழுப்பி அழைத்துக்கொண்டு வரச்சொன்னான்.

அப்படியே சில தூதர்கள்போய் மேகத்திலிடி முழங்கினாற்போலப் பூமி யதிரும்படிக்கு அனேகமான பேரிகைமுதலான பெரியவாத்தியங்களையடித்து முழக்கினார்கள். அந்த முழக்கத்தினாலே கும்பகர்ண னித்திரைவிட் டெழுந்திருந்தான். அப்பொழுது காலாக்கினிபோலே தகிக்கின்ற கொடுமையான பசிதீரும்படிக்கு ஆயிரம் பண்டிகளிலே சோறும் - புலாலும் - கறிகளும் - ஆயிரஞ்சாடிக ணிறையக்கள்ளும் - கொடுக்க வாங்கித்தின்று குடித்தும் அவனுக்குப் பசியடங்காமல், பின்னு மப்படியே

கொண்டுவந்து கொடுக்கவாங்கிப்புசித்துப்பசிதீர்ந்திளைப்பாறியிருந்தான். அந்
தச்சமயத்தி லிராவணேசுர னழைக்கிறானென்று தூதர் சொல்ல, அதுகேட்ட
கும்பகர்ணன். அந்தக்ஷணமே தமையனிடத்துக்குப்போ யென்னை யழைப்பி
த்தகாரிய மென்னவென்று கேட்க, அதற்கிராவணன் மதுவென்று சொல்லப்
பட்டவன் செய்தகாரிய மிப்படியிருந்ததென்று கூற, அதுகேட்ட கும்பகர்
ணன் மிகவு மாச்சரியப்பட்டுக் கோபத்துடனே துக்கத்தையு மடைந்து நிற்க,
அதுகண்ட தசக்கிரீவன் அவனையு மேகநாதனையும் புறப்பட்டு வரச்சொல்லி
ஆக்கியாபித்தான். அப்படியே யவர்களிருவரும் போர்க்கோலங்கொண்டு, அ
னேகவிதமாயுள்ள அஸ்திர சஸ்திரங்களைத் தரித்துத் தேரின்மேலேறி; தங்க
ளுடைய சேனைகளோடும் வீதியிற் புறப்பட்டார்கள். அம்மாத்திரத்தி லிரா
வணன் இரௌத்திரா காரமாய்க் கோபாக்கினிபொங்க வச்சிரகவசம் – கிரீட
ம் - நெற்றிப்பட்டம் – வீரகண்டாமணி – இவைமுதலான வாபரணங்களு
ம்வஸ்திரங்களுந் தரித்து, வில் – அம்பு – வேல் – வாள் - பரிசை – தண்ட
ம் - சூலம் – இவைமுதலான திவ்விய ஆயுதங்களைக் கைகளிலேதாங்கி, வெண்
ணைக்குடைகள் பிடிப்பாரும் - வெண்சாமரைகள் வீசுவாரும் – வெற்றிக்கொ
டிக ளேந்துவாரும் – விசயப்புகழைப் பேசுவாரும் இன்னுமுள்ள பலபல இ
ராசாங்க வுபசாரங்களினாலே பணிவிடை செய்வாருமாகிய வனேகம் பரிவா
ரங்கள் சூழ்ந்துவரச் சகல வாத்தியங்களு முழங்கத் தேரின்மேலேறிப் புறப்
பட்டான்.

அப்பொழுது முன்னேபோகும்படி யுத்தரவுசெய்த சேனைகள்போகப்
பின்னு மனேகஞ் சதுரங்கசேனைகள்பூமியாகாசமெங்குந் தூளிப்படல மறை
க்கத்தக்கதாக நெருங்கிவர, முன்னணிப் படையிலே பட்டத்துக்குமாரனாகி
ய மேகநாதனும் – பின்னணிப்படையிலே இளவரசுபட்டத்துக்குடைய கும்
பகர்ணனும் படைசெலுத்திவர, அந்தச் சேனாசமுத்திரத்தி னடுவிலே மகா
மேருபர்வதம்போலே விளங்குகின்ற தன்னுடையதேரினை வேகமாகநடத்தி
ச்சென்று மதுவினுடைய பட்டணத்துக்குச் சமீபத்திலேபோ யடுத்தான். அ
ப்பொழுது மதுவென்று சொல்லப்பட்டவ னித்திரை பண்ணிக்கொண் டிரு
ந்தான். இராவணன் வருகிறானென்று சொல்லக்கேட்ட கும்பீநசியானவள் ப
யந்து, சீக்கிரமாக வெதிரேபோய் அவனுடைய காலிலேவிழுந்து புலம்பியழு
தாள். இராவணனுந் தன்னுடைய சிறியதாயாரைத் தாழ்ந்தெடுத் துபசரித்து
அவளைப்பார்த்து, தாயே! நீயொன்றுக்கும் விசனப்படவேண்டாம். என்று
தேறுதலை சொல்லினான். அப்போது பின்னுமவள்புலம்பிப் பரிதாபப்பட்டு
இராவணனைப்பார்த்து, கேளாய் மகனே! நானெனிநாளா யென்னுடைய புத்
திரரையிழந்ததுமுதலான துன்பங்களினாலே விசனத்தை யடைந்திருக்க, இ
ப்பொழுதுன்னுடைய கோபத்தினாலே எனக்குண்டாகப்பட்ட துன்ப மந்த
த் துன்பங்களைப்பார்க்கிலு மிகவுங்கொடியதல்லவோ? ஆகையால் நீ கோப
த்தைவிட்டு எனக்கு மங்கலியப்பிச்சை கொடுக்கவேண்டும், என் றுபசாரஞ்
செய்து வேண்டிக்கொண்டு பின்னுமிராவணனை நோக்கிச் சொல்லுகிறாள்.



№ 84. இராவணன்கும்பீநசிவேண்டுகோளால் மதுவைச்சன்மானித்தல். இராவணன் அரம்பையைவலிதிற்புணர்ந்துசாபமடைதல்.

மகாவிஜயப்படலம்.



கேளாய் ஐயனே! வேதங்களிலே அஷ்டவித மணங்கள் சொல்லியிருக்கின்றன. அவைபிரமம் - பிரசாபத்தியம் - ஆரிடம் - தெய்வம் - காந்தருவம் ஆசுரம் இராக்கதம்-பைசாசம். இவற்றுள்பிரமசாரிக்குக் கன்னியைத் தீமுன்னர் கொடுப்பது பிரம்மமணம். தலைமகனினத்தார்வேண்டத் தலைமகளினத்தார் உட்பட்டு அவளைத் தீமுன்னர்கொடுப்பதுபிரசாபத்தியமணம். ஒன்றிரண்டு பசுவும் - எருதும் வாங்கிக்கொண்டு கன்னியைத் தீமுன்னர்கொடுப்பது ஆரிடமணம். வேள்வியால்வந்த கன்னியைத் தீமுன்னர் கொடுப்பதுதெய்வமணம். கொடுப்பாருங் கேட்பாருமின்றி இருவருந் தனியானவிடத்தில் எதிர்ப்பட்டுத் தாமேகூடுவது காந்தருவமணம். பெண்ணுக்குப் பொன்பூட்டிச் சுற்றத்தார்க்கும் பொன்வேண்டுவன கொடுத்துக் கொள்ளுவது அசுரமணம். பெண்ணும் பெண்ணினத்தாரும் உடன்படாமல் வலிதிற்கொள்ளுவது இராக்கதமணம். துயின்றுளைச்சென்று கூடுவது பைசாசமணம். இந்த எட்டுமணங்களுக்குள்ளே இராக்ஷச மணமென்பது மேற்சொன்னபடி கட்டுங்காவலுந் துர்க்கமுமாயிருக்கின்ற விடத்திலிருக்குங் கன்னிகையை யாவனொருவன் தன்னுடைய சவுரியபலத்தினாலே வலிமைசெய்து கொண்டுபோ யனுபவிக்கின்றதல்லவோ? அந்த நியாயமுனக்குந் தெரிந்திருக்குமே: என்றுமிகவும் வணக்கத்துடனே சொன்னாள்.

அதற்கவனவளைப்பார்த்து, அம்மா! தாயினிடத்திலே யென்னகுற்றமிருந்தாலும் விசாரிக்கவேண்டுவதில்லையென்றும் - பொறுக்கவேண்டுமென்றும் - வேதசாஸ்திரங்களிலே சொல்லியிருப்பதால், உன்னைக்குறித் தெல்லாக்குற்றங்களையும் பொறுத்தேன். உன்னுடைய அபீஷ்டமெனக்குஞ்சம்மதமே இனிபொருவிகற்பமுமில்லை. இப்பொழுது நான் சுவர்க்கலோகத்தைச் செயிக்கப்போகிறேன். ஆகையா லுன்னுடைய புருஷனை யொன்றுக்கும் பயப்படாமல் எனக்குச்சகாயமாய்ச் சேனைகளுடனே வரச்சொல்லுகவென்று கூறிக் கும்பீநசியைப் போகச்சொன்னான். அவளுமப்படியே சீக்கிரமாகப் போய் நித்திரைசெய்துகொண் டிருக்கின்ற தன்னுடைய புருஷனையெழுப்பி, நடந்த விர்த்தாந்தங்க ளெல்லாஞ் சொல்லினாள். அதுகேட்ட மதுவானவன் அப்படியாவென் றுச்சரிப்பட்டு, உள்ளத்திலே பயமும் வெளியேசந்தோஷமுமா யுடனேபுறப்பட் டெதிர்கொண்டுபோய் இராவணனைக்கண்டு, அன்புடனே கலந்து அனேகவுபசாரங்கள்செய்து தன்னுடைய பட்டணத்துக் கழைத்துவந்து, கிரகத்திலே விருந்து முதலான வெல்லாச்சிறப்புகளுஞ் செய்வித்தான். இராவணன் கும்பகர்ணன் மேகநாதனுதியர்களும் அம்மதுவினுடனே விருந்துண்டு, மிகவுஞ் சந்தோஷமா யன்றைநாளவ்விடத்தில் வாசஞ்செய்திருந்தார்கள்.

## கும்பீநசியின் வேண்டுகோளால் இராவணன் மதுவென்பவனுடன் கலந்து தேவலோகவிஜயஞ் செய்யப்போகும்போது, அரம்பையின் சாபமேற்றல்.

கவி.

கொற்றவரக்கன்மதுவந்து கொண்டாடப்போயவனில்லம்
உற்றமதுசெய்பூசனைகொண் டெந்தாங்கொருநாளினிதிருந்து

*பிற்றைவைகற்பெருஞ்சே னைசூழவேகிப்பெருவினைகள்*
*அற்றதவத்தோர்பயிலியத் தளகாபுரியினயலிறுத்தான்.*

இந்தப்பிரகார மிராவணனானவன் மதுவினுடைய பட்டணத்திலே யொருநாளிருந்து, மறுநாளுதயத்திலே அந்தமதுவென்பவன் தன்னுடைய சேனையுடனேகூட வரும்படியாகப் பிரயாணப்பட்டு தேவலோகத்தைநாடிப் போகின்றான். அப்பொழுதில் தவமுடையோர்கள் வாழ்கின்ற இமயமலையின் சமீபத்திலுள்ள அளகாபுரிக்கடுத்த பெரியவனத்தைக் கண்டு, அந்தவனத்திலே சகலசேனைகளோடு மிறங்கியிருந்தான். அப்படி யிருக்குமளவி லந்தவனத்தினுடைய சிங்காரத்தைப் பார்க்கவேண்டித் தானொருவனுந் தனியாகப் புறப்பட்டு, அங்கங்கே சந்தனம் – குங்குமம் – சண்பகம் - பாதிரி - புன்னை – கோங்கு – மகிழ் - மா - பலா - வாழை - இவைமுதலான விருக்ஷங்கள் நல்லவாசனை பொருந்திய புஷ்பங்களையு மதுரரசமொழுகுங் கனிகளையு முதிர்த்துகிற்கும் வளங்களையும், அறிவினாலே விளங்கப்பட்ட நற்குணம்பொருந்திய உத்தமபுருஷனுடைய மனம்போலத் தெளிவும், மயக்கத்தைச்செய்யும் ஸ்திரீகளுடைய மனம்போ லளவிடப்படாதவாழமுமுடைய தண்ணீர்த்தடாகங்களின் மாட்சிமைகளையும், அந்தத்தடாகங்களிலே நிறைய மலர்ந்திருக்குந் தாமரைப்புஷ்பங்களில் அன்னப் பக்ஷிக ளாணும்பெண்ணுமாகக் கூடி விளையாடிக்கொண் டிருக்குஞ் சிங்காரங்களையும், குளிர்ந்த புன்னைநிழலின் கீழே தேவர்களுந் தேவஸ்திரீகளு மிஷ்டசல்லாபமாகக்கூடி யனுபவித்துக்கொண் டிருக்கப்பட்ட பளிங்குப்பாறை மண்டபங்களின் பெருமிதங்களையும், மயில்களாட – வண்டுகள்பாட - குயில்கள்கூவ - கிளிகள்கொஞ்சிப்பேச நயங்களையும் பார்த்துக்கொண் டுலாவிவருகிறான்.

அப்படியவன் வருமளவிற் சாயங்காலவேளையாக, அங்கோரிடத்திலே யழகெல்லாந்திரண் டொருவடிவாக விளங்கும் அதிரூப சவுந்தரியத்தையுடைய அரம்பையென்னுமொரு அப்சரப்பெண்மயில் நவமணியணியணிந்து, நல்வண்ணப்பட்டுடுத்து, நானத்தொடுகளபம்பூசி மந்தாரப்பூமாலைசூடி, அப்பாதையாய் நளகூபர னிடநாடிச் சென்றுகொண்டிருந்தனள். இராவணனவளைக்கண்டு மோகங்கொண்டு, இவளெந்தலோகத்துப் பெண்ணோவென் றாச்சரியப்பட்டுப்பிரமித்து, அடுத்துநின்று அந்தக்கன்னியைப்பார்த்து,பெண்ணே நீ யெங்கே யிருக்கிறவள்? உன்னுடைய பெயரென்ன? எவ்விடத்துக்குப் போகிறாய்? என்று கேட்டான். அதற்கவள் நான் சுவர்க்கலோகத்திலிருக்குந் தேவஸ்திரீகளி லொருபெண். எனக் கரம்பையென்று பெயர். என்னுடைய நாயகன் நளகூபரனென்று சொல்லப்பட்டவன். அவனிடத்துக்குப் போகிறேனென்று சொன்னாள். அதற்கவனவளைப் பார்த்து, அடிபெண்ணே! இவ்வுலகத்திலே இச்சிக்கின்ற யாவருக்கும் போகஸ்திரீகளாக விருக்கும் வேசைகளுக்கு ஒருநாயகனென்றும், அவர்களொருவனுக்குப் பாரியென்று சொல்லு நியமமுண்டோ? என்றுபரிகாசமாகவிகழ்ந்துபேசினான். அதற்கவள்-



ஐயா! அந்தஸ்திரீகள் பலஇச்சையுடையவர்களே யானாலும், தங்களை விசுவாசத்துடனே பாரியாகக்கொண்ட உத்தம புருஷருக்கு வஞ்சனைபண்ணுவது தருமமல்லவேயென்று சொல்லினாள்.

இராவண னந்தவசனத்தைச் சற்றுமெண்ணாமல், மதம்பட்டயானைபோல மேல்விழுந்து புணரும்படியாக நின்றான். அப்படியவ னிற்கின்ற மனக்குறிப்பை அரம்பையறிந்து, மிகவும் பயந்தவளாய் வணங்கித்தொழுது, ஓ இராசனே! புலஸ்தியருடைய புத்திரருக்குப் பேரனாகிய நளகூபரனென்று சொல்லப்பட்டவ ரெனக்கு நாயகனானபடியால், அந்த முறைமையிலே யான் உமக்குமருமகள். உமது தமையனான குபேரன் றனயனான நளகூபரனால் வரிக்கப்பட்டு அவ்விடம் போகாநின்றேன். ஆதலாலிதற்குத் தடைபடாதபடி விடைதரவேண்டு மென்று பின்னும் பலபலவிதமாக வேண்டிச்சொல்லினாள். அப்படிச் சொல்லியும் இராவணன் கேளாமல், வேசைகளுக்கு முறையுண்டோ வென்று மறுத்து, அடங்காத காமவிகாரத்தினாலே மதிகெட்டு மேல்விழுந்து அவளை வலிமைசெய்து புணர்ந்தனுபவித்தான்.

கவி.

*வந்தியாகநீ மாநிலமாதர்தம், சிந்தையாலன்றி யாவரைத்தீண்டினும்*
*சந்தவார்குழ லார்கற்பெரியினால், வெந்துவீழ்தியென் றேகினள்விம்மினள்.*

அப்படிக்கவனாலே துஷ்டப்பட்ட அரம்பையானவள் மேனிகுலைந்து பதைபதைத்து மனங்கொதித்து இராவணனைப்பார்த்து, அடா பொல்லாத துஷ்டப்பாபியே! என்னையிப்படி யநியாயஞ்செய்து துன்பப்படுத்திய நீ, இனிமேலென்னுடைய பதிவிரதாதர்மத்தை யறியப்போகிறாய். எந்தக்காலத்திலேயாகிலு மகாபதிவிரதைகளாயிருக்கின்ற ஸ்திரீகளை இப்படி வலிமைசெய்து தீண்டுவாயானால், அவர்கள்சாபத்தினாலே யென்னுடைய வயிறுபற்றி யெரிகிறதுபோல நீ யெரிந்துபோகக்கடவாயென்று சாபங்கொடுத்தாள்.

இப்படி சாபங்கொடுத்த அரம்பையானவள் உடனே யந்தப்பாதகனைத் தப்பிக்கடந்து, எப்பொழுது வருவாளோவென்று வழிபார்த்திருக்குந் தன்னுடைய நாயகனாகிய நளகூபரனிடத்திற் சென்று, தனக்கிராவணனாலே நேர்ந்த துன்பத்தையெல்லா முண்மையாகச்சொல்லி மிகவும் விசனப்பட்டாள். அதுகேட்ட நளகூபரனானவன் சகலத்தையுந் தருமமாக நன்றாயாலோசித்து, இவளிடத்திலே தோஷமில்லையென்று நிச்சயம் பண்ணிக்கொண்டு, அடிபெண்ணரசி! உனக்கிப்படித் துன்பஞ்செய்தபாபியாகிய இராவணன் பதிவிரதையாயிருக்கின்ற ஒருவனுடையஸ்திரீயை யஞ்சாமல் இனிமே லெக்காலத்திலேயாகிலும் வலிமையாகத் தீண்டுவானாகில், அப்பொழுதே யவனுடைய பத்துத்தலைகளு மேழுபிளப்பாக வெடித்துப்போகக் கடவதென்று சாபஞ்செய்தான். அங்கேயிராவணனானவன் அந்த வனத்திலேதானே அடங்காத காமவிகாரத்தையுடையவனாகி, தன்னைவிட்டு நீங்கிப்போன அரம்பையானவ ளெந்தவழி வருவாளோவென்று நாலுதிக்கிலுந் திரும்பித்திரும்பிப் பார்த்துக்

கொண்டு, மன்மத பாணங்களினாலே சரீரமுழுதும் புண்ணாகத் துளைக்கப்பட்டு, மேலுமேலுஞ் சகிக்கப்படாத காமவிகாரத்துடனே அந்தராத்திரிமுழுதுமொரு க்ஷணகாலம் ஒரு யுகமாகக் கடக்கப்படாத மோகசமுத்திரத்திலே முழுகிக்கிடந்தான்.

## இராவணன் சுவர்க்கலோகஞ்சென்று இந்திரனுடன் போராடல்.

கவி.

துன்னிருளிரிந்துவெய்யோன் றோன்றிடத்துயரநீங்கித்
தன்னெதிரில்லாவெந்திறற் றசமுகன்றானைசூழப்
பொன்னுலகத்தைநோக்கிப் புறப்பட்டபுரைதீர்வானோர்
மன்னுடனதனைக்கேட்டு மாயனையடைந்துசேர்ந்தார்.

இந்தப்பிரகாரம் அந்தவனத்திலே முதனாள் இராத்திரி முழுவதும் அரம்பையினுடைய மோகவிகாரத்தினாலே துன்பப் பட்டுக்கொண்டிருந்த இராவணனானவன் மறுநாளுதயகாலத்திலே சூரியனைக்கண்டு நீங்குமிருளுடனே தன்னுடைய மோகவிருளு நீங்கி மயக்கந்தீர்ந்து சிந்தை தெளிந்து, அவ்விடத்தினின்றும் புறப்பட்டுச் சகல சேனைகளுஞ் சமுத்திரம்போல முழங்கிச் சூழ்ந்துவரச் சுவர்க்கலோகத்தை நாடிப் போகின்றான். அப்படி போகும் பொழுதில், அந்தச் செய்தியைத் தேவேந்திரனறிந்து பயந்து துணுக்குற்றெழுந்திருந்து, சில தேவர்களுந் தானுஞ் சீக்கிரமாக வைகுண்டத்துக்குப் போய் மகாவிஷ்ணுவைக் கண்டு வணங்கித் துதிசெய்து நின்றான். மகாவிஷ்ணுவானவ ரவ்விந்திரனைப் பார்த்து, ஓ சுரேசனே! நீங்கள்யாவரு மிவ்விடத்திற்கு வந்தகாரியமென்ன? இயாது காரணத்தினாலே விசனத்தையடைந்திருக்கின்றீர்கள்? என்றுகேட்க வதற்குத் தேவேந்திரன் மகாவிஷ்ணுவை நோக்கி, சுவாமி! எக்காலமும் மெங்களுக்குத் துன்பத்தையே விளைத்துவருகின்ற பொல்லாத வசுரர்களைத்தகெடுத்துத்தாய்போல வெங்களை ரக்ஷிக்குந் தேவரீரையன்றி வேறுதஞ்சமு முண்டோ? இராவணனானவன் முன்பு மிகவுங் கொடிதான தவங்களைச்செய்துபிரமதேவனிடத்திலும் பரமசிவனிடத்திலும் பெற்ற வரத்தினாலும் பலத்தினாலும் பூலோகத்தைப் பாழாக்கி, இப்பொழுதெங்களைத் துன்பப்படுத்த நினைத்து தேவலோகத்தைநாடி அளவில்லாத தன்னுடைய சேனைகளுடனே வருகிறான். நாங்களென்னசெய்வோம்? என்று வணங்கி முறையிட்டுச்சொல்லிநின்றான்.

அதைக்கேட்ட மகாவிஷ்ணுவானவ ரவனை நோக்கி, ஓ இமையவர்வேந்தே! நீங்களொன்றுக்கும் பயப்படவேண்டாம் நாமே யந்தராவணன் முதலானவர்களைச் சங்கரித்து உங்களை ரக்ஷிக்கிறோம். என்று தைரியங்கொடுத் தனுப்பவும் அந்த வுத்தரவைப் பெற்றுக்கொண்ட தேவேந்திரன் தன்னுடைய பரிவாரங்களோடு அமராவதி பட்டணத்துக்கு வருகிறான். அவன் வருவதற்கு முன்னே இராவணனுடைய சேனாசமுத்திரஞ் சுவர்க்கலோகமெங்கு நிறைந்து காவலிருக்கின்ற முதிர்ந்த அவ்விடத்திலே தலைமையாயிருக்கின்ற சில தே



வர்கள் கேட்டு, இந்த ராக்ஷதர்களுடைய உபத்திரவத்திலே உள்ளாகாளவுந் துன்பப்பட நம்மாலே முடியாது. ஆனாலு மித்துடனே தேவர்கள்வெல்வதொன்று. அரக்கர்கள்வெல்வதொன்று. தேவர்களிறப்பதொன்று அரக்கர்களிறப்பதொன்று. இவ்விரண்டிலொன்றை இன்றைக்கே காணக்கடவோம். என்றெல்லோரு மொருமித்து ஒட்டிட்டுக்கொண்டு தேவசேனைமுழுதுமொன்றாகத்திரண்டு, வடவாக்கினிபோலச் சீறி யாரவாரித்து நெருங்கிக்கலந்து, மிகவுங் கொடுமையான யுத்தம்பண்ண ஆரம்பித்தார்கள். அப்பொழுதிலந்தயுத்தவிநோதம் பார்க்கவேண்டிச் சத்தியலோகத்திலிருக்கும் பிரமதேவர் அவ்விடத்துக்கு வந்தார். அந்தப் பிரமதேவர் சந்தோஷத்தை யடையும்படியாகத் தேவர்களெல்லோரும் பின்னு மட்டகாசப்பண்ணி நெருங்கி, அனேகமான அஸ்திர சஸ்திரங்களைப் பிரயோகித்து யுத்தஞ்செய்தார்கள்.

அந்தயுத்தத்தில் அளவில்லாத ராக்ஷத சேனைகளெல்லாங் கண்டதுண்டங்களாகச் சின்னபின்னப்பட்டு, போர்க்களமெங்கும் பிணக்குவியல்கள் மலைமலையாகக் குவிந்து இரத்தவெள்ளம் பெருகியோடத் தலைப்பட்டது. கவந்தமும் பேயுங்கலந்து கூத்தாடின. இப்படி தேவசேனைகளிராக்கதசேனைகளை யழித்துப் பின்னு மேல்விழுந்து மோதிவருவதை இராவணன்கண்டு, தன்னுடைய பாட்டனாகிய சுமாலியையழைத்து, ஐயா என்மூதாதையே! இத்தேவர்கள் நம்முடைய சேனாசமுத்திரத்திலே அனேகஞ் சேனைகளை மடித்துப் பின்னும் பலங்கொண் டடித்துவருகிறார்களே; நீ யிந்தச்சமயத்தி லிப்படி யிருக்கலாமோ? உம்முடைய பல சவுரியங்களை இந்தத்தேவர்களு மற்றெல்லோர்களு மறியும்படிகாட்டி, இனியேனும் பகையைவென்று வெற்றிகொள்ளவேண்டுமென்று சொன்னான். அவனப்படிச்சொல்லிய கோபக்குறிப்பினைச் சுமாலியறிந்து, அப்பா இராவணா! உன்னிஷ்டப்படியே செய்கிறேன். என்னுடைய சாமர்த்தியத்தை இன்றைக்கு நீயே காணப்போகிறாய். என்றுசொல்லி பானுகோபன் - நியாயகோபன் — துன்முகன் - தூமகேது - தாம்பிராக்ஷன் - விருபாக்ஷன் - மகோதரன் — மாரீசன் - கரன் - திரிசிரன் - நிகுஷணன்—சுன்—கசாரணன் - பாசகரன் - பைசாசன் - விராதன் - கும்பன் - நிகும்பன் - சம்பன் - சம்புமாலி - என்று சொல்லப்பட்ட சேனாதிபதிகளுடனே அச்சுமாலியானவனந்தக்ஷணமே போர்முகத்தில் திரும்பி துரத்திவருகிறதைக்கண்ட தேவசேனைகள்சாய்ந்தோடின. அப்படியோடுஞ் சேனைகளைத் தேவர்களிலொருவனாகிய சாவித்திரனென்று சொல்லப்பட்ட சேனாதிபதியானவன் சாய்ந்தோடுகிற தேவசேனைகளை நிறுத்தி, சுமாலியைத் தடுத்து அவனோடெதிர்த்துக்கொண்டு அவனுமவனும் அனேக விசித்திரமான யுத்தம்பண்ணிக்கொண்டிருந்தார்கள்.

அந்தச்சமயத்தில் சாவித்திரனானவன் லக்ஷியமில்லாதவிவனையோர் பொருளாகப்பாராட்டி, நெடுநேரம் யுத்தம்பண்ணிக்கொண்டிருக்கவேண்டுவதென்னவென்று நினைத்து, மகாகோபத்துடனே யனேக பாணங்களைத் தொடுத்

துப்பிரயோகம்பண்ணி, அந்தச் சுமாலியினுடைய வில் அம்பு குதிரை சாரதி தேர் முதலியயாவையுந் துண்டுதுண்டாகவறுத்துத்தள்ளி, உடனேயொருவராலுந் தடுக்கப்படாத பலமு மகிமையும்பொருந்திய ஒருதண்டாயுதத்தைக்கையிலேயெடுத்துச் சுழற்றிவிட்டான். அந்தத் தண்டாயுதமானது யமதண்டம் போலே அதிக வேகமாகப் பாய்ந்து, மலைமேலேவிழுந்த இடிபோலச் சுமாலியினுடைய தலைதகர்ந்து அவனுடைய சரீரமுழுது முருத்தெரியாமலழிந்து குழம்பிச் சேறாகும்படி யரைத்துக்கொன்றது. அப்படிக்கந்தச் சுமாலி யிறந்தவுடனே சேனைகளெல்லாஞ் சிதைபட்டுத் திசைதிசையாக வோடக்கண்ட மேகநாதனானவன் அந்தச் சேனைகளையெல்லாந் தடுத்துத்திரும்பி, பின்னும் போரிலேமூட்டி யெதிர்த்துங்கொண் டளவில்லாத அஸ்திரசஸ்திரங்களினாலே தேவசேனைகளெல்லா நிலைகுலைந்தோடும்படி தாக்கி யுத்தம்பண்ணிக் கொண்டிருக்கின்றான்.

அப்படி யவனிருக்குமளவில் தேவேந்திரனுடைய குமாரனாகிய சயந்தனானவன் அவனுடனே யெதிர்த்துக்கொண்டான். அப்பொழுது இவனோ மேகநாதன்? இவனோ சயந்தன்? என்று மயங்கத்தக்கதாக அவ்விருவருந் தங்களுடைய தேர்களைச் சக்கராகாரமாக இடசாரி வலசாரியிலே அதிவேகமாக முடுக்கி, பாணங்களைச் சரவருஷமாகப் பொழிந்துகொண்டு, ஒருவருக்கொருவர் மாறிமாறித் தோற்பதும் ஒருவரையொருவர் வெல்வதுமாக விப்படியே நெடும்பொழுது போர்விளைத்து, தங்களுடைய விருவகைச் சேனைகளும் யுத்தம் பண்ணுகிறதைவிட்டு ஆச்சரியப்பட்டுப் பார்க்க ஆக்கிரமித்து நின்றார்கள். அப்படி நிற்குமளவில் மேகநாதன் முனைந்து, கொடிய பாணங்களினாலே சயந்தனுடைய ரதசாரதி நிலைகுலைந்து விழும்படி யறுத்துத் தள்ளினான். அதுகண்ட சயந்தன் மிகவுங்கோபித்து, சில பாணங்களினாலே மேகநாதனுடைய ரதசாரதியுடலைத் துளைத்தறுத்துத் தள்ளினான். இப்படிச்சாரதி யிறந்ததைக்கண்ட மேகநாதன் மிகவுங் கோபங்கொண்டு, சீக்கிரமாக வக்கினிமயமான வனேகபாணங்களினாலே சயந்தனுமார்புமுழுது நிறைத்தான். அதினாலே யந்தச்சயந்தன் மூர்ச்சையடைந்தான். அப்பொழுது தவனுடைய பாட்டனாகிய புலோமனென்று சொல்லப்பட்டவன் மேகநாதனுடனே யெதிர்த்து யுத்தம்பண்ணிக்கொண் டிருந்தான்.

அது பார்த்திருந்த பிரமதேவர் தேவேந்திரனிடஞ்சென்று, ஓ வலாரி! உன்னுடைய குமாரன் மேகநாதனாலே யடிபட்டு மூர்ச்சித்துக் கிடக்கிறான். அல்லாமலு மந்த மேகநாதனுடனே உனக்கு மாமனாகிய புலோமன் யுத்தம்பண்ணிக்கொண் டிருக்கிறானென்று சொன்னார். அதுகேட்டமாத்திரத்திலே இந்திரனானவன் புத்திரனை நினைந்து மிகவும் விசனத்தை யடைந்தவனாய் அதிகமான உக்கிரகோபங் கொண்டு, இரதசாரதியாகிய மாதலியென்று சொல்லப்பட்டவனைச் சீக்கிரமாகத் தேர்கொண்டுவரச் சொல்லி, வச்சிரகவசம் - கிரீடம் - குண்டலம் - இவை முதலானவைகளை யணிந்து போர்க்கோலங் கொ



ண்டு உயுத்தசன்னத்தனாய் சபாமண்டபத்தினின்று நீங்கிப் புறப்பட்டு, பிரகஸ்பதிபகவான் முதலான மகாரிஷிகளாசீர்வாதஞ் செய்யவும் - யக்ஷகந்தர்வர்கள் திவ்வியகானம் பாடவும் - தேவஸ்திரீகள் மங்களம்பாடி வாழ்த்தி நாட்டியஞ்செய்யவும் - முத்துக்குடைகள் பிடிக்கவும் - வெண்சாமரைக ளிரட்டவும் - விசிறிகள் வீசவும் - தேவதுந்துமி முதலான சகல வாத்தியங்களு முழங்கவும் வந்துதேரின்மேலேறி, அஷ்டவசுக்களும்-மருத்துவரிருவரும்-ஏகாதசவுருத்திரர் முதலானவர்களும்-தங்கள் தேர்களிலேறி அளவற்ற சேனைகளுடனே சூழ்ந்துவரும்படியாக வந்து யுத்தகளத்திற் பிரவேசித்தான். அம்மாத்திரத்தி லதைக்கேள்விப்பட்ட இராவணனானவன் தன்னுடைய சேனாபதிகளுந்தானுமாக அவனை யெதிர்த்துவருகிறான்.

அப்படி வரும்பொழுதி லிவ்விராவணனுடைய குமாரனாகிய மேகநாதன் அவ்விடத்துக்கு வந்து, தன்பிதாவாகிய ராவணனைப்பார்த்து, இந்தத் தேவேந்திரனைச் செயிப்பதற்கு நீர் புறப்படவேண்டுமோ? நானொருவன் போதாதோ? என்னைப்புத்திரனாகப் பெற்றதற்கு இந்நாள்வரையிலு மென்னாலொரு பிரயோசனத்தையு மறியீரல்லவோ? ஆகையா லிப்பொழுதும்முடைய மனசு சந்தோஷத்தையடையும்படிக்கு இவனைச்செயித்து, உமக்கு வெற்றியுங்கீர்த்தியு முண்டாகச்செய்கிறேன். எனக்குத்தரவு கொடும். என்றவனை நிறுத்தித்தானே சென்றவ்விந்திரனுடனெதிர்த்துக்கொண்டு, கார்காலத்து மழைபெய்வதுபோல ஆகாசமெங்கும் பாணமயமாக நிறையும்படி சரவருஷமாகப் பொழிந்து மகாகோரமான யுத்தம்பண்ணுகிறான். அப்பொழுதில் தேவர்களுடைய தேர்த்திரள்களுக்கெல்லாம் அச்சுதெறித்தும், ஆணிகள்கழன்றும், உருளைகளுடைந்தும், கொடிகளறுந்தும், கொடுங்கைகள் சரிந்தும், குதிரைகளுஞ் சாரதிகளு மடிந்துபோயின. இயானைக் கூட்டங்கட்கெல்லாம் கால்களறுபட்டும், வால்கள் பறிபட்டும், கன்னங்கள் விடுபட்டும், பின்னங்கள்பலபட்டும், துதிக்கைகள் துணிபட்டும், மதப்பைகளரிபட்டும், கொம்புகளொடிபட்டும், அம்புகளடிபட்டும் போனதல்லாமல், முகங்களு மத்தகங்களும்பிளக்கப்பட்டும் போயின. குதிரைத்திரள்களுக் கெல்லாம் கால்களும், வால்களும், தலைகளும், குளம்புகளும், முதுகுகளும், வேறுவேறாகிக் கண்டதுண்டப்பட்டழிந்தன. பதாதிவெள்ளமெல்லாம் பெருங்காற்றி லகப்பட்ட இலவம்பஞ்சுபோல உருத்தெரியாமல், ஆயுதங்களோடே சின்னபின்னப்பட்டழிந்தன.

கேளும் ஸ்ரீராகவா! அப்போதந்த யுத்தகளமே ஒருபெருந்தாழியாகவும், அதிலேயகப்பட்டதேவர்களே தயிர்க்கட்டியாகவும், மேகநாதனுவலிவுள்ளபுயமே மத்தாகவுமிருந்தன. இப்படித்தேவர்களுடைய இரத்தமாம்சங்கள் சேறுபட்டுக் குழம்பாகும்படிகடைந்து கலக்கியழிப்பவனானமேகநாதனானவன், மேருவில்லையு மிவன் வில்லுக்குநிகர் சொல்லக்கூடாதென்று பிரமதேவர் முதலானவர்களாச்சரியப்படும்படிக்குப் பூமியாகாசந் திக்குகளெங்கும் உள்

ளிலும்புறம்பிலுமுலாவி, தேவர்களுடைய கண்ணிலுமனதிலுந் தானாகவே காணும்படிக்கு அதிவேகமாகப் பாய்ந்து சுழன்று மகா விசித்திரமான யுத்தம் பண்ணிக்கொண்டு நிற்கின்றான். அப்படி யவனிற்குமளவில் கும்பகர்ணனானவன் அதிககோபத்துடனே கண்கள் சிவந்து நெருப்புப் பொறிபறக்கவும் - அண்டம் வெடிபடவும் - பூமிநடுங்கவும் - அட்டகாசம்பண்ணி, ஒருபெரிய நீலமலை நடந்தாற்போல அதிசீக்கிரமாகச் சென்று, தேவர்களெல்லாரு முறிந்தோடும்படி போர்க்களத்திலே புகுந்து, தன்னுடைய தண்டாயுதத்தினாலே யாவரையு மடித்து, தேரோடு தேர்களைத்தாக்கி நொறுக்கியும், யானையோடு யானைகளை மோதிச் சிதைத்தும் - குதிரையோடு குதிரைகளை வீசி யழித்தும் - பதாதியோடு பதாதிகளைச்சாடிக் கொன்றும் - கைகளினாலே யோங்கியறைந்தும் - கால்களினாலே யுதைத்து மிதித்தும் - இப்படிக்குப் பலபலவிதமாக அனேகஞ்சேனைகளை மடித்தான்.

அதுகண்ட உருத்திரர் - வசுக்கள் - அருக்கர் - மருத்துவர் - என்று சொல்லப்பட்ட பலவகைத் தேவர்களெல்லாம் வெகுகோடி சதுரங்கசேனைகளுடனே அதிவேகமாகவந் தெதிர்த்துக்கொண்டு, மேகம்போல முழங்கி அட்டகாசம்பண்ணி, சூலாயுதம் - வேலாயுதம் - வாளாயுதம் - வச்சிராயுதம் - தண்டாயுத முதலானவனேக வாயுதபாணங்களினாலே கும்பகர்ணனுடைய சரீரமுழுது மிரத்தவெள்ள மொழுகியோடும்படி துளைத்துப் பிளந்து, அளவில்லாத ராக்ஷசசேனைகளையுஞ் சின்னாபின்னப்பட் டழியும்படி யடித்தார்கள். அப்பொழுது ராவணன் பிரளயகால ருத்திரன்போல மகா உக்கிரகோபங்கொண்டு இக்க்ஷணமே தேவர்களென்கிற பெயரே இல்லாதபடியழித்து என்னுடைய வெற்றிப்புகழை நிலைநிறுத்துவேனென்று பிரதாபம்பேசி அட்டகாசஞ்செய்து, அதிவேகமாகத் தேரை முடுக்கி எதிர்த்துக்கொண்டு, கையிலேவில்லையெடுத்து நாணேற்றிட்டுக் குணத்தொனிபண்ணி, சத்தமேகங்களுங்கூடி நெருப்புமழை பெய்தாற்போல அக்கினிமயமான வனேககோடி பாணங்களைத் தொடுத்துச் சரவருஷமாக வோயாமற் பொழிகிறான். அப்போதப்பாணங்களினாலே தேவசேனைகளெல்லா நெருப்பிலிடப்பட்ட பஞ்சுபோல் கருகிமடிய, அதைக்கண்ட தேவேந்திரனானவன் இராவணனைப்பார்த்து மதிகோபங்கொண் டெதிர்த்துநின்று, அவ்விராவணனுடைய தலைகளிலும் - தோள்களிலும் - மார்பிலும் - பாணமயமாக நிறையும்படி விஷரூபமான அனேககோடி யக்கினிச்சரங்களைச் சொரிந்தான்.

அதற்கெள்ளளவாகிலும் பலங்குறைந்து சலியாத இராவணனானவன் பின்னுமப்படியவ்விந்திரன்மேலே அனேகபாணங்களைவிட்டான். இந்திரனுமப்படி அனேகபாணங்களை விட்டான். இப்படியே பின்னும் பின்னு மொருவருக்கொருவ ரிளையாமல் அனேக பாணங்களைப் பொழிந்துகொண்டு சமமான கோரயுத்தம்பண்ண, அவ்விருவருடைய சேனாசமுத்திரத்தி லுள்ள படைத்தலைவர்களும் - சுத்தவீரர்களும் - அவர்களைப்போலவே ஒருவரோடொருவ



ரெதிர்த்துக்கொண்டு, உலகமெங்கும் பாணமயமாக நிறைந்து இருக்கும்படி சரவருஷமாகப்பொழிந்து மிகவும் கொடுமையானயுத்தம் பண்ணிக்கொண்டிருந்தார்கள். அவர்களுள் தேவர்சேனையிலுள்ள படைத்தலைவர்களெல்லாரு மொன்றாகத்திரண் டாரவாரித்து அதிககோபத்துடனே மிகவும் பலங்கொண்டு பலபலவிதமாயுள்ள அனேகவஸ்திர சஸ்திரங்களினாலே இராக்ஷசசேனைகளெல்லா மடிந்தழியும்படியாக யுத்தம்பண்ணும்பொழுதில் இராவணனானவன் அதைக்கண்டு, உலைமுகத்து நெருப்புப்போல் மனங்கொதித்து, சிறிதும் சகிக்கமாட்டாதவனாய்த் தன்னுடைய சாரதியைப் பார்த்துச் சொல்லுகிறான்.

அப்பா சூதனே! இயானுன்னுடைய கைத்தொழில் வல்லமையை இன்றைக் கறியவேண்டும். இந்தத்தேரினை யொருநிமிஷத்திலே தேவர்களுடைய சேனைக்கு நடுவேகொண்டுபோய் விட்டாயானால், இப்பொழுதே யென்னுடைய பகைவரைச் செயித்து மூன்றுலோகமும் என்னுடைய வாக்கினைப்பிரகாரம் நடக்கும்படியாக இராசரீகஞ் செய்வேன். ஆகையா லிந்தவுபகார மெனக்கு நீ செய்யவேணும். என்று நயமாகச் சொல்லவும் அதுகேட்ட அந்தச் சாரதியானவன் இரதத்தை அரைநிமிஷத்திலே மனோவேகத்திலும் அதிவேகமாகப்போக்கி, எதிரேநின்ற சேனையைப்பேதித்து உள்ளே செலுத்திக்கொண்டுபோகிறான். அப்படி போம்பொழுதில் அதுகண்ட தேவேந்திரன் தன்னுடைய பக்கத்திலேநின்ற தேவர்களைப் பார்த்து, ஓ நண்பர்களே! என்னை வஞ்சனையாலே அபசயப்படுத்தவருகிற இந்தராவணனை இப்பொழுதே யுங்களுடைய மனோ சந்தோஷத்தை யடையும்படிக்குப் பிடித்து, தோளோடு தோள்சேரக் கட்டுகிறேன் பாருங்களென்று சொன்னான். அப்படி யவன்சொல்வதற்கு முன்னமே தேரோ டிராவணன்வந்து கிட்டினான். அவன்கிட்டவே தேவேந்திரன் பயந்து மறைந்தோடிப் போயினான்.

அப்பொழுது ராவணனானவன் நூறுயோசனைதூர விஸ்தார நிறைந்து நின்ற தேவசேனையினுள்ளே திசைதிசைக்குந் தேரைமுடுக்கித் திருப்பிவளைத்து, தன்னுடைய பாணங்களினாலே சென்ற சென்ற விடமெங்கும் பாழாக வனேகஞ்சேனைகளை மடிக்கத் தலைப்பட்டான். அச்சமயத்தில் ஒரு பெரியபருவதத்தைக் கார்காலத்துமேகங்கள் கவிந்து மூடிக்கொண்டாற்போல, முன்பு மறைந்தோடிப்போன தேவேந்திரன் அளவில்லாத சேனைகளைத் திரட்டிக்கொண்டுவந்து இராவணனைவளைத்து நெருக்கினான். அப்பொழுது ராக்ஷசசேனையெல்லா மின்றோடே இலங்கை மன்னவ னிறந்துபோய் விட்டானென்று பயந்து முறையிட்டலற, அந்தச் சத்தங்கேட்ட இராவணனுடைய குமாரனாகிய மேகநாதனானவன் மிகவுங் கொடிய கோபங்கொண்டு, அதிவேகமாகவந்து, தகப்பனை வளைத்துக்கொண்டிருந்த சேனைகளெல்லாஞ் சின்னாபின்னமாய் முறிபட்டோடத் துரத்தி, தேவேந்திரன்மேலே திருப்பி யெதிர்த்துக்கொண்டு, அவனுடைய தேரும் - குதிரையும் - சாரதியும் - அவ

னும் – உருத்தெரியாதபடிக்கு அனேககோடி பாணங்களை இடைவிடாமல் மேலுமேலுஞ் சொரிந்து நிலைகுலைந்து சாயும்படி யடித்தான்,

அப்பொழுது தேவேந்திரன் நமக்குச் சத்துருக்களாயுள்ள பலசவுரியம்பொருந்திய அனேகமான ராக்ஷசர்களுடனே மகத்தான யுத்தங்கள் செய்திருக்கிறோம். ஆனாலு மிப்பொழு திவனாலேபடப்பட்ட துன்பத்தை யொருகாலத்திலும் பட்டறியோம். என்று பயந்து மனங்கலங்கித் தேரிலிருந்து நிர்வாகிக்கமாட்டாம லந்தத்தேரைவிட்டு, மிகவும் பலமும் வேகமும் பொருந்திய அயிராவதத்தின்மே லேறிக்கொண்டு, மகா வுக்கிர கோபத்துடனே பலபலவிதமாயுள்ள அனேக பாணங்களினாலே தன்னை யெதிர்த்துநின்ற இராக்ஷசசேனைகளெல்லாஞ் சின்னபின்னப்பட்டழிய மடித்து, பின்னுஞ் சிலராக்ஷசர்கள் நாமெல்லோரு மெப்படிக்குத் தப்பிப் பிழைப்போமென்று பயந்து முறிந்தோடத் துரத்தி, மேகநாதனும் பிரமித்துப் பயப்படும்படிக்கு நெருங்கிச் சிறுக்கொடுமையான யுத்தம் பண்ணிக்கொண் டிருந்தான். அப்படியவ் விருக்குமளவில் அந்த மேகநாதனவனை யுத்தம்பண்ணி வெல்லக்கூடாமல் வஞ்சனையினாலே வெல்லவேணுமென் றாலோசித்து, முன்பு தனக்குப் பரமசிவன்கொடுத்த வரத்தினாலே உலகமெங்கும் அந்தகாரப்பட் டிருக்கும்படிக் கொரு மாயைசெய்து மயக்கினான்.

### மேகநாத னிந்திரனைப் பாசத்தாற்கட்டி இராவணனிடங் கொண்டுசெல்ல வவன்மகிழ்ந்தவனுட னிலங்கைக்குப்போ யவ்விந்திரனைச் சிறையிடல்.

கலி.

செய்வதொன் றறி யாதுசிந்தை கலங்கியிந்திர னின்றிடக்
கய்யுமெய்யு மசப்படத்தெறு காலபாச மிதாமெனும்
வெய்யபாச முறப்பிணித்தனன் மேகநாதன் விளங்குசீர்
அய்யவெய்ய வரக்கரானவ ராடினர்சுரர் வாடினர்.

அப்பொழுது தேவசேனையிலுள்ள வெல்லோருமயங்கிச் செயலழிந்து, கைகால் சோர்ந்து கண்ணுந்தெரியாமல் மூர்ச்சையடைந்து கிடந்தார்கள். தேவேந்திரனுஞ் சிந்தைகலங்கி யொருசெயலுந் தோற்றாமல், சித்தப்பிரமை கொண்டவன்போல் மயங்கி நின்றான். அப்படிக்குநின்ற தேவேந்திரனை அந்த மேகநாதன் யமனுடைய பாசத்துக்குச் சமானமான ஒரு பாசத்தினாலே கட்டி, இராக்ஷசசேனைகளெல்லாம் இந்திரனகப்பட்டுக் கட்டுப்பட்டானென் றாரவாரித்துச் சூழ்ந்துவரத் தன்னுடைய தகப்பனாகிய இராவணனுக்கெதிரே கொண்டுபோய் நிறுத்தி, ஓ என்னையாவே! நமக்குப் பகைவனா யிருப்பதல்லாமல், நம்முடைய குலத்திலுள்ள வனேகமான பலம்பொருந்திய இராக்ஷசர்களையழித்த பராக்கிரமனாகிய இவ்விந்திரன் எனக்காற்றமாட்டாமலென்கை யிலகப்பட்டுக் கொண்டான். ஆனபடியினா லினிமே லுமக்கொரு பகையுமில்லை. அன்னத்தைப் பழிக்கு மழகிய நடையினையுடைய ஊர்வசி முதலான தேவஸ்திரீகளு முமதுமனசுக் கேற்றபடி நடப்பார்கள். இந்த மூன்றுலோ

№ 85.



இராவணன் மேகநாதனைச் சிறையிட பிரமன் வேண்டுகோளால் விடுத்தல்.



உத்தரகாண்டம்.

கத்துக்கு நீரே யதிபதியாகி இராஜரீகம்பண்ணி யாளுவீர். என்றிப்படித் தன்னுடைய பிரதாபங்களைச் சொல்லக்கேட்ட இராவணனானவன் புத்திரனாலே பிதா வடையப்பட்ட பிரயோசனத்தை யடைந்தவன் நானேயென்று மிகவு மானந்த சந்தோஷமாக மனம்பொங்கி, இருபது தோள்களும் பூரித்து, மகனை மார்பிறுகத் தழுவிக்கொண்டு, தேவர்களுக்கெல்லா மதிபதியாகிய தேவேந்திரனை நீ செயித்தது இந்த மூன்றுலோகத்தையுஞ் செயித்து வெற்றி கொண்டதல்லவோவென்று மகனை யருமையாகக் கொண்டாடி யுபசரித்து மகிழ்ந்தான்.

அதன்பின் பந்தராவணனானவன் தனக்குச் செயந்தருவித்த மேகநாதனோடு, கட்டுப்பட்ட இந்திரனும் – படைத்தலைவர்களும் – பரிவாரசேனைகளும் கூடவரச் சுவர்க்கலோகத்தினின்று நீங்கி இலங்கையை நோக்கி வருகிறான். அப்படி வரும்பொழுது அவ்விலங்காபட்டணத்திலுள்ள சகல செனங்களு மெதிர்கொண்டுவந்து வணங்கிப்புகழ்ந்து உபசாரஞ்செய்ய, அவர்களுடனே தன்னுடைய லங்காபட்டணத்துக்குள்ளே பிரவேசித்துத் தேவேந்திரனைச் சிறைக்கூடத்திலே வைத்து மிகவுஞ் சந்தோஷத்தை யடைந்திருந்தான். அப்படி யிருக்குங்காலத்திற் சகலமான தேவர்களும் அரசிழந்த குடியாகத் துன்பத்தை யடைந்தவர்களாய் என்னசெய்வோமென் றாலோசித்து, உடனே சத்தியலோகத்துக்குப் போய்ப் பிரமதேவரைக் கண்டு வணங்கி நமஸ்கரித்து, சுவாமீ! இராவணனானவன் யுத்தப்பண்ணிக்கொண் டிருக்கிற சமயத்திலே அவன் குமாரனாகிய மேகநாதனென்பவன் எங்களுடைய ராஜாவை வஞ்சனையினாலே அபசயப்படுத்திப் பிடித்துக்கொண்டுபோய் இலங்காபட்டணத்திலே சிறைவைத்திருக்கிறான், இந்தச் செயல்களெல்லா மும்முடைய மகிமையினாலே யுண்டானதல்லவோ? ஆகையாலிப்பொழுது எங்களிடத்திலே கிருபைவைத் திரக்ஷிக்கவேண்டுமென்று முறையிட்டு வேண்டினார்கள். அதுகேட்ட பிரமதேவர் அவர்களைச் சன்மானித்து, ஓ சுவர்க்கலோகவாசிகளே! இனி நாமே யுங்களுடைய ராஜனைச் சிறையினின்றும் விடுவித்து முன்போல விருக்கச்செய்கிறோம். அஞ்சாதீர்களென்றுசொல்லி அவர்களையுங்கூட வழைத்துக்கொண்டு இலங்காபட்டணத்துக்குவந்து, இராவணனைக்கண்டு ஆசீர்வாதஞ்செய்து சொல்லுகின்றார்.

## தேவர்களின் வேண்டுகோளால் பிரம்மதேவர் இராவணனிடஞ் சென்று பிரிய வசனங்கூறி மேகநாதனுக்கு இந்திரசித்துவென்னும் பெயரையும் அவன்கேட்ட வரங்களையுந்தந்து இந்திரனைச் சிறை விடுவித்தல்.

கவி.

வந்திலங்கேசற்கண்டு மலரயன்புகல்வான் கைவேல்
வெந்திறலுடையவீர வேறனச்செகிராருன்றன்
மைந்தனிந்திரனைவென்று வான்சிறைவைத்தலாலே
இந்திரசித்தென்றெல்லா வுலகமுமியம்பப்பெற்றான்.

கேளும் தசக்கிரீவராஜனே! இந்த மூன்றுலோகங்களிலேயும் பலபராக்கிரமசௌரிய விஷயங்களிலே தமக்குச் சமானமாகச் சிலாக்கியத்தை யடைந்தவர்க ளொருவருமில்லை. இப்படிப்பட்ட மேன்மைபொருந்திய உம்முடைய புத்திரனே? உம்மினு மதிக பலவான், திரிலோகாதிபதியாகிய இந்திரனைச் செயித்துச் சிறையிலேவைத்தான். ஆகையா லிந்தக்காரணத்தினாலே மேகநாதனுக்கு இன்றுமுத லிந்திரசித்தென்று சொல்லப்பட்ட நாமதேயம் விளங்கக்கடவது. என்று சொல்லிப் பின்னும் நயமான வனேக உபசாரவார்த்தைகள்கூறி, ஐயா இலங்காதிபதி! இந்தத் தேவர்களெல்லோரு நம்முன்னிலையாய் உம்முடைய தரிசனத்துக்கு வந்தார்கள். ஆகையா லிவர்களுடைய மனது சந்தோஷமாகும்படிக்கு இந்திரனைச் சிறைவிடுத் தனுப்பும்படி தயை செய்யவேண்டும். என்று சொல்லவும் அதற்கிராவண னவரைப்பார்த்து, ஐயா வாணிகேள்வரே! உம்மைக்குறித் திந்தத் தேவேந்திரனை விடுகிறதினாலே எனக்கென்ன பிரயோசனம்? ஆகையா லிதற்குப் பிரதியுபகாரமாக இந்த லோகமுள்ளளவு மழியாமலிருக்கு நித்தியத்துவத்தை யெனக்குக் கொடுத்தீராகில், நானு நீர் சொல்லியபடியே செய்கிறே னென்றான். இப்படி ராவணன்கேட்டதைப்பிரமதேவர் நன்றாயாலோசித்து, ஓ தசக்கிரீவமகாராஜனே! உலகத்திலே சர்வகாரணனாகிய ஈசுவரனைத்தவிர வேறொருவருக்கு நித்தியத்துவங் கிடையாது. ஆகுங்காரியத்தைக் கேட்டாற்செய்யலாம். ஆகாத காரியத்தை யார்தான் செய்வார்கள்? நம்மாலே கொடுக்கப்படாத பிரயோசனத்தை நீர் கேட்கிறது தருமமல்லவென்று சொன்னார்.

அப்பொழுது பக்கத்திலிருந்த இந்திரஜித்தானவன் பிரமதேவனைப் பார்த்து, சுவாமி! நானினிமேற்செய்யு மியாகத்திலே யுண்டாகிற இரதத்தின்மேலேறிக்கொண்டு யுத்தம் பண்ணுங் காலத்தில் எனக்கந்தியம் வாராம லிருக்கவும், அந்த யாகத்துக்கொரு விகாதமுமில்லாமல் நிறைவேறும்படியாகவும் எனக்கு வரங்கொடுமென்று கேட்டான். அந்தப்பிரகாரமே கொடுத்தோமென் றனுக்கிரகஞ் செய்தார்.

கவி.

சிறையினுடிருந்தவந்தத் தேவர்கோன் றன்னைவிட்டு
மறையவன் றனக்குக்காட்டி மானவேன்மருமத் தூன்ற
உறு துயர்பொறுக்கலாற்று தொருவரையெடுத்துநோக்கான்
சிறைகெழுவேற்கைவாளோர் காவலன் சவிழ்ந்துநின்றான்.

அன்னதன்மையனாய்நின்ற வமரர்கோன் றன்னைநோக்கிக்
கன்னிசர்தோளாய்முன்பு கவுதமனிட்டசாபம்
உன்னைவந்துறுதலாலே யுனக்கிதுவந்ததுன் றன்
பொன்னகர்புகுதியென்று விட்டயன்போயினனால்.

அப்படிக்கு வரம்பெற்ற இந்திரஜித்தானவன் மிகவுஞ் சந்தோஷத்தை யடைந்து, சிறைக்கூடத்திலிருந்த இந்திரனை வரவழைத்துப் பிரமதேவருக்



கெதிராகக் கொண்டுபோய்விட்டான். அப்பொழுது தேவேந்திரனானவன் அற்பபிராணியாகிய ஓ ரெறும்பினாலே பெரிய மதயானையானது துன்பப்பட்டாற்போல இந்த ராவணன் மகன்செய்த மாயத்தினாலே நமக்கிப்படிப்பட்ட துன்பங்களெல்லா நேரிட்டதல்லவாவென்று மிகவுந் துக்கத்தை யடைந்து, சரீரமுழுதுங் குன்றி வெட்கப்பட்டு, ஒருவரையும் பாராமல் தலைகவிழ்ந்து நிலத்தைப் பார்த்தபடியாய் நின்றான். அக்கால் பிரமதேவ ரிந்திரனை நோக்கி, கேளாய் தேவராஜனே! முன்பு கவுதமர் கொடுத்த சாபத்தினாலே உனக்கிப்படிப்பட்ட துன்பங்களெல்லா நேரிட்டன. தவமகிமைபொருந்திய மகாரிஷிகளுடைய சாபத்தை ஒருவரு நீக்கமாட்டார்கள். ஆனபடியினாலே நீ விசனப்படவேண்டாம். என்று தேவேந்திரனுக் குபசாரஞ் சொல்லி இராவணனிடத்தி லுத்தரவு செய்வித்து, தேவர்களுடனே தேவேந்திரன் சுவர்க்கலோகத்திலே போயிருக்கும்படியாக வனுப்பித் தாம் தம்முடைய சத்தியலோகத்துக்குப் போயினார்.

திக்குவிஜயப்படலம் — முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

ஒன்பதாவது,

# கார்த்தவீரியார்ச்சுனப் படலம்.

இப்படலத்தில் ஸ்ரீராமருக்கு இராவணனுடைய சுபஜயங்களைச் சொல்லி முடித்த அகஸ்தியமகாமுனிவர் மீட்டுமவர் வேண்டுகோளின்படி அவனது அபஜயங்களைச் சொல்லப் புகுந்து, கார்த்தவீரியார்ச்சுனன் திக்குவிஜயஞ் செய்துகொண்டு இலங்கையை நோக்கிச் செல்ல இராவணன் நருமதைநதி தீரத்திற்குப் போயிருத்தலைக் கேட்டுச்சென்று அந்நதியிலோர்பால் பல ஸ்திரீகூட்டங்களோடு ஜலக்கிரீடை செய்துநிற்ப, அதனாலவன் சிவபூசைக்கு விக்கினமுண்டான ஓரேதுவினாலே இருவர்க்கும் போர்மூள, அப்போரிற் கார்த்தவீரியார்ச்சுனன் இராவணனைத் தோளோடு தோள்சேர்த்துக்கட்டித் தனது பட்டணத்திற்குக் கொண்டுபோய்ச் சிறைக்கூடத் தடைப்ப, அஃதறிந்து வருந்திய விபீஷணன் வேண்டுகோளாற் புலஸ்தியரானவர் அவனை யச்சிறையினின்றும் விடுவித்தமை சொல்லப்படுகின்றது.

ஸ்ரீராமபிரான் பூலோகவரசர்களா லிராவணன் தோற்றதில்லையோவென்று அகத்தியரைக்கேட்க, அதற்கவர் கார்த்தவீரியார்ச்சுனனாற் கட்டுண்ட சரித்திரங்கூறல்.

கவி.

அரக்கர்கோன்விசயமடங்கலுங்கேட்ட வாழியா னதியப்பெய்தித்
திரைக்கடலுலகம்பெருக்கொளவரக்கன் செருக்குகாட்டேயமன்னவரில்

*ஒருத்தருண்டாகவுமைத்திலையடைந்த தவவலியுடையரானவரை*
*உரைத்திநீயென்னவுயர்பரம்பொருளு முத்தியுங்குறுமுனியுரைக்கும்*

இவ்வண்ணம் இராவணனுடைய திக்குவிஜயப் பிரதாபங்களையெல்லாம் சக்கரதரனாகிய ஸ்ரீராமமூர்த்தியானவர் கேட்டாச்சரியப்பட்டு, ஐயா முனிபுங்கவரே! அலைகளையுடைய சமுத்திரஞ்சூழ்ந்த உலகம் அச்சங்கொள்ளும்படி அவ்விராவணன் யாவரையும் ஜெயங்கொண்ட நாள்களில், பூலோகவாசர்கட்குள் அவனை ஜெயம்பெற்றவர்களொருவரையு நீர்கூறவில்லை; அப்படி ஜெயம்பெற்றவர்களாகிய தவவலியுடையோரிருக்கின் அவர்களைச் சொல்லுமென்றுகேட்க விதற்ககத்தியமாமுனிவர் கூறுகின்றார். கேளும்கௌசலைதனயரே! சத்துருக்களென்று வாயினாலேயாகிலுஞ் சொல்லுகிறதற் கொருவருமில்லாமல் இந்தவுலகமெல்லாந் தன்னுடைய ஆக்ஞைப்பிரகார நடக்கும்படி இராச்சியபரிபாலனஞ் செய்யும் கார்த்தவீரியார்ச்சுனனிடத்திலும், வாலியினிடத்திலும், இராவணனானவன் தனக்கு மேலான பலமுடையதொன்றுமில்லாத சரபத்தினிடத்திலே ஒருசிறுநரி யகப்பட்டதுபோலத் தன்னுடைய பல பராக்கிரமமெல்லா மிழந்து கட்டுப்பட்டான். சக்கரவர்த்திதனாயினும் சத்துருக்களில்லாதவர்கள் யார்? என்று சொல்லவும் அதுகேட்ட ஸ்ரீராமர் பின்னுமதிகமான சந்தோஷத்தையடைந்தவராய் அவ்வகஸ்திய மகாமுனிவரைநோக்கி, ஸ்வாமி! அவ்விருவரிடத்திலு மிராவணன் கட்டுப்பட்ட விதங்களை நன்றாய் விவரித்துச் சொல்லவேணுமென்று கேட்க அகஸ்தியபகவான் சொல்லத் தொடங்கினார்.

கேளும் தசரதநந்தனா! முன்னமொருகாலம் தனக்கு நிகரான பலமுடையவர்களொருவருமில்லாத பராக்கிரமனும், ஆயிரந்தோள்களுடையவனும், கார்த்தவீரியார்ச்சுனனென்று சொல்லப்பட்ட பெயரையுடையவனுமாய் ஒருவனிருந்தான்; அவனளவில்லாத தன்னுடைய பரிவாரசேனைகளுடனே உலகத்திலே சத்துருக்களென்றெதிர்த்தவர்களெல்லாரையுஞ் ஜெயித்து வெற்றிகொண்டு வருமளவில் இலங்காபட்டணத்தைச் சார்ந்து, இராவணனென்று சொல்லப்பட்டவனெவன்? அவனெவ்விடத்தி லிருக்கின்றான் அவனை யுத்தம்பண்ண வெளியிலே புறப்பட்டு வரச்சொல்லுங்கள், என்றறைகூவிநின்றான். அதற்கவ்விடத்திலுள்ள இராவணனுடைய மந்திரிமார்கள் அவனைநோக்கி, ஐயா சகஸ்திரபுஜ சம்பன்னனே! நீர் கேட்ட எங்களிராஜன் அநேகமான ஸ்திரீகளுடனே சலக்கிரீடை விளையாடல்செய்யவிரும்பி இராஜபரிவாரசேனைகளுடனே நருமதைநதி தீரத்துக்குப் போயிருக்கிறானென்று சொல்லினர். அதுகேட்ட மாத்திரத்திலே கார்த்தவீரியார்ச்சுனனானவன் அவ்விடத்தினின்று நீங்கி, யானையைத்தேடிக்கொண்டு சிங்கம்போவதுபோல இராவணனைத் தேடிக்கொண்டு அவன்போனவழியே அதிவேகமாகச் செல்லுகின்றான். அப்படியவன் செல்லும்பொழுதி லவனுக்கெதிராகக் குளிர்ந்த அருவிகளாலும் - இளந்தென்றல் உலாவும் பூஞ்சோலைகளாலும் - அழகுபொருந்தி, பொன்மயமான ஆயிரஞ்சிகரங்களுடனே ஆகாசபரியந்த முயர்ந்து விளங்கும் விந்தபருவதத்தைக்கண் டவ்விடத்தி லிருந்தான்.



அவனுக்கு முன்பாகச்சென்ற இராவணன் நருமதைநதி தீரத்தில் பல ஸ்திரீகளோடு ஜலக்கிரீடைவிளையாடல் முடித்து அந்தப் பருவதத்தினுடைய வழகைப்பார்த்து இப்படியு முண்டோவென் றாச்சரியப்பட்டு, அந்தப்பருவதத்தின் பக்கத்திலே செல்லும் அந்த நருமதைநதியிலே மந்திரி முதலானவர்களுடனே தீர்த்தமாடி, வேதாகமவிதிப்படி மணலாலே இலிங்கம் வகுத்துச் சிவபூசைசெய்துகொண் டிருக்கின்றான். அந்தநதிக்கு மேலாக நெடுந்தூரத்திலே இராவணனைத்தேடிவந்த கார்த்தவீரியார்ச்சுனன் அநேகவிதஸ்திரீகளுடனே சலக்கிரீடைசெய்து விளையாடுதற்காக வெண்ணி, தன்னுடைய வாயிரங்கைகளினாலே அந்த நதியைக்குறுக்கே தடுத்து அந்தக்கைகளையே யணையாகக்கட்டி சலத்தைப் பெருக்கினான். அந்த சலமானது சமுத்திரம்போலத் தேங்கியெதிர்த்து மேற்கொண்டு இரண்டுபக்கத்திலுந் ததும்பிப் புரண்டு கரைகளை யுடைத்துக்கொண்டு பெருகியோடத்தலைப்பட்டது, அப்படியோடுகின்ற வெள்ளமானது இராவணனுடைய பூஜாமுகத்திற் பாய்ந்து, அவனாராதித்துவந்த பிரிதிவிலிங்கத்தைக் கரைத்தழித்துப் போயது. அதுகண்ட ராவணன் திடுக்கிட்டெழுந்து திகைத்து, மகாகோபத்துடனே சுகசாரணரை யழைத்து, அகாரணமாக விப்பொழு திந்தவெள்ளமிப்படி வரவேண்டியதென்ன? இந்தக் காரணத்தை நீங்கள் சீக்கிரமாகப் போயறிந்துவாருங்களென் றனுப்புவித்தான்; அவர்களு மப்படியேபோய்க் கண்டுவந்து இராவணனைநோக்கிச் சொல்லுகிறார்கள்.

ஓமகாப்பிரபு! கார்த்தவீரியார்ச்சுனனென்று சொல்லப்பட்டவன் ஆயிரந் தோள்களுடையவன். அவன்றன்னுடைய வாயிரங்கைகளினாலே ஆற்றைக் குறுக்கேதடுத்துச் சலத்தைப்பெருக்கி, அநேகஸ்திரீகளுடனே சலக்கிரீடை செய்துகொண் டிருக்கிறான். அந்தச் சலம்பெருகித் தேங்கிக் கரைபுரண்டு வெள்ளமாகவோடி வருகிறதென்று சொல்லக்கேட்ட இராவணன் அந்தக்ஷணமே மந்திரிமார்களுடன் கார்த்தவீரியார்ச்சுனனிருக்குமிடத்தே அதிவேகமாகப்போ யவனுடைய மந்திரிமார்களைப்பார்த்து, இராவணன் யுத்தத்துக்கு வந்திருக்கிறானென்று உங்களுடைய ராஜாவுக்குத் தெரிவியுங்களென்று சொல்லினான்; அதற்கவர்கள் எங்களுடையராஜா சில ஸ்திரீகளுடனே விநோதமாகச் சலக்கிரீடைசெய்து கொண்டிருக்கிற சமயமாதலால், இப்போது நாங்களும்முடைய காரியத்தை அறியப்பண்ணவுங்கூடாது. உயுத்தத்துக்கழைப்பதுவு நியாயமல்ல. நாளைக்குவந்தால் நீங்களிருவரும் யுத்தம்பண்ணலாம். என்று சொன்னமாத்திரத்திலே இராவணன் மிகவுங்கோபித்துச்சீறி, அந்த மந்திரிமார்கள்மேலே புலிபோலப் பாய்ந்தான். அவர்களுங் கோபங்கொண் டனேகசேனைகளுடனே யெதிர்த்துக்கொண்டார்கள். அதுகண்டு ராவணனுடைய மந்திரிமார்களு மெதிர்த்தார்கள்.

இப்படியவ் விருவகை மந்திரிமார்களு மொருவருக்கொருவர் அஸ்திர சஸ்திரங்களை மழைபோலப் பொழிந்து போர்க்களமெங்கு மிரத்தவெள்ளம் பெருக மிகவுங்கொடுமையான யுத்தம்பண்ணிக் கொண்டிருக்குமளவில், கார்த்தவீரியன்படை முனைந்து இராவணன் சேனையிலே அநேகஞ்சேனையை மடித்தது. அதுகண்ட மகோதரன் — மாரீசன் — விருபாக்ஷன் — தூம்ராக்ஷன் முதலான சேனாபதிகள் கோபங்கொண்டெதிர்த்து வேல்—சூலம் - தண்டம் - இருப்புலக்கை - இவைமுதலான வாயுதங்களினாலே மோதியடித்தார்கள் அதனாலனேகஞ்சேனைகள் மடிந்து முறிபட்டோடிக் கார்த்தவீரியார்ச்சுனனிடத்தில் சாய்ந்து விழுகிறபொழுதில், அதைக்கண்ட ஸ்திரீகளெல்லாரும் விளையாடுகிறதை மறந்து நடுங்கிப் பயப்பட்டார்கள். அப்பொழுது கார்த்தவீரியனானவன் அந்த ஸ்திரீகளெல்லாரும் பயப்படாமலிருக்கத் திடஞ்சொல்லி நிறுத்தி, சலக்கிரீடை விளையாட்டைவிட்டுக் கரையேறி, மகாவுக்கிர கோபத்துடனே வந்து இராவணன் சேனையெல்லாந் திசைதிசையாய் நிலைகெட்டு முறிந்தோடும்படிக்கு மோதிவதைத்தான். அப்பொழுதவனுடனே பிரகஸ்தனெதிர்த்துக்கொண்டு தன்னுடையபல பராக்கிரமங்களெல்லாங் காட்டி, அநேக வாயுதபாணங்களினாலே அளவில்லாத சேனைகள்மடிய மோதியடித்து மேற்கொண்டு வருகிறான்.

அதைக்கண்ட கார்த்தவீரியன் தன்னுடைய ஒருகையிலேயிருந்த தண்டாயுதத்தினாலே பிரகஸ்தனை யோங்கியடித்துத் தரையிற் சிதறிவிழத்தள்ளி, பின்னு மகாவுக்கிரவேகத்துடனே சேனைகள்மேற் சென்று மோதிவருகிறான் அக்காலொருவரு மவனுக்கெதிர்நிற்க மாட்டாமற் பயந்து நிலைகுலைந்து, மகோதரன் முதலான படைத்தலைவர்களுஞ் சேனைகளு முறிந்தோடுகிறார்கள். அதைக்கண்ட ராவணனானவன் ஊழிகாலத்துப் பெருநெருப்புப்போலக் கோபங்கொண்டு சீறி, தன்னுடைய சேனைகளையெல்லா மோடாதபடி நிறுத்தி, கையிலேயொரு தண்டாயுதத்தை யெடுத்துக்கொண்டு மனோவேகமாகப் பாய்ந்து கார்த்தவீரியனை யடித்தான். அவனு மெதிர்த்தான். அப்பொழுதவர்களிருவரு மலையுமலையும் - தீயுந்தீயும் - சிங்கமுஞ்சிங்கமும் — இயானையுமியானையு மெதிர்த்ததுபோலப் போரின்மூண்டு, இடிபோல முழங்கிக் கதாயுத்தஞ்செய்துகொண்டிருந்தார்கள். அப்படியிருக்குமளவி லிராவணனானவன் தன்னுடைய பலமுழுதுங்கொண்டோங்கிக் கார்த்தவீரியன் மார்பிலேயடித்தான். அவனந்தவடியை வாங்கிக்கொண்டு அதற்கெவ்வளவுஞ் சலியாமற் புன்சிரிப்பாகச் சிரித்து இதனைச்செய்வதாயினான்.

## கார்த்தவீரியார்ச்சுனன் இராவணனைக்கட்டித்தன்னகரத்துக்கேகிச்சிறையிடுதல்.

கவி.

தண்டொண்முசலஞ்சக்கரஞ்சூலந் தடமழுத்தோமரநாஞ்சில்
பிண்டிபாலங்கோன்முதலவாயுதங்கள் பெருங்கையாயிரங்களால்வாங்கி
கொண்டுமேல்வீழுங்கொடுந்திறலரக்கர் குலைந்துகெட்டோடிடத்தூக்கு
திண்டிறனிருபன்றிருநகர்புகுந்து தீயவன்றனைச்சிறைவைத்தான்.

№ 86. இராவணன்கார்த்தவீரியனாற்கட்டுண்டு புலஸ்தியரால்விடுபடல.



இராவணன்வாலிவாலிற்கட்டுண்டு, தாரையால்விடுபடல்.



இராவணன்கார்த்தவீரியனாற்கட்டுண்டபடலம்.

அடா தசக்கிரீவா! உன்னுடையபலமெல்லா மிவ்வளவுதானோ: இனி யிவ்வளவுபலத்துடனே நீ என்னசெய்யமாட்டுவாய் சிங்கத்துக்கு நரியானதெப்படியோ அப்படிப்போல நீ எனக்கு லக்ஷியமல்ல. ஆனாலுமென்னுடைய பலத்தைச் சற்றேபார். என்றந்தக் கார்த்தவீரியனோங்கி யோரடியடித்தான். அந்தவடி பொறுக்கமாட்டாம லிராவண னிலைகுலைந்து, இடிவிழுந்த நாகம்போலச் செயலழிந்து நின்றான். அதுகண்ட கார்த்தவீரிய னவனைத் திருடனைக் கட்டினாற்போலத் தோளோடு தோளிறுக்கச் சேர்த்துக்கட்டி முன்னே நடத்திக்கொண்டு போகிறான். அப்பொழுது நம்முடைய ராஜனை இவனிப்படிக் கட்டிக்கொண்டுபோக நாமெல்லோரும் பார்த்திருக்கலாமோ வென்று மகோதரன் மாரீசன் முதலானவர்கள் பின்றொடர்ந்து, கார்த்தவீரியனை நில்லுநில்லென்று தடுத்தெதிர்த்தார்கள். அப்பொழுது கார்த்தவீரியனு மகாவுக்கிரகோபத்துடனே நரிக்கூட்டத்தின்மேலே சிங்கந் திரும்பினாற்போல அந்தமகோதரன் முதலானவர்கள்மேலே திரும்பி தன்னுடைய வாயிரங்கைகளிலும் பிடித்திருந்த தண்டம்—வாள் - இருப்புலக்கை – சூலம் – மழு - கைவேல் – கலப்பை - பிண்டிபாலம் - கோல் – முதலியவாயுத பாணங்களினாலே மோதியடித்துச் சின்னாபின்னப்படுத்தித் துரத்திவிட்டு, தன்னுடைய பட்டணத்துக்குப்போய் இராவணனைச் சிறைக்கூடத்திலே யடைத்து மிகவுஞ்சந்தோஷத்தை யடைந்திருந்தான்.

### விபீஷணர் வேண்டுகோளின்படி புலஸ்தியப் பிரம்மாவினாற் கார்த்தவீரியார்ச்சுனன் இராவணனைச் சிறைவிடுதல்.

கவி.

கெட்டவாளரக்கர்களர்பெரும்பயத்தாற் கேடில்சீரிராவணனமரில்
பட்டபாடெல்லாம்வீடணற்குரைப்பப் பரிவுறுமனத்தினனவன்போய்ச்
சிட்டனாயுள்ளபிதாமகற்குரைப்பச் சிந்தைநொந்தச்சிறைவிடுப்பான்
வட்டமாமதில்சூழருச்சுனன் வாழும்வளநகர்மாமுனிவந்தான்.

கார்த்தவீரியார்ச்சுன மகாராஜனாலே யடிபட்டோடிய மகோதரன்முதலிய கொடியவரக்கர்களெல்லாங்கூடி இலங்காபட்டணமடைந்து இராவணன் பட்டபாடும் நாங்கள்கெட்டகேடு மிப்படி யிருந்ததென்று விபீஷணனிடத்திலே நடந்த விருத்தாந்த மெல்லாஞ் சொல்லிப் புலம்பிப் பரிதாபப்பட்டார்கள்.

அதுகேட்ட விபீஷணன் மிகவும் விசனத்தையடைந்து, சிறையிலகப்பட்டிருக்குந் தமையனை மீட்பதற் குபாயமென்னவென் றாலோசித்து, தன்னுடைய பாட்டனாராகிய புலஸ்திய ரிடத்துக்குச் சீக்கிரமாகப்போய் தமையன்செய்தி இப்படியென்று சொன்னான். அதுகேட்டவரு முடனே புறப்பட்டுக் கார்த்தவீரியார்ச்சுனன் பட்டணத்துக்கு வந்தார். அவர்வருகிற சமாசாரங்கேட்ட கார்த்தவீரியன் அவரையெதிர்கொண் டுபசரித்தழைத்துப் போய் ஆசனங்கொடுத் திருக்கச்செய்து, என்னிடத்துக்கு வந்தகாரியமென்

ணவென்று கேட்டான். அதற்கவரவனை நோக்கி, இராவணனானவ னெடுங்கால மிகவுங்கொடிதான தபசுகள் பண்ணிப் பிரமதேவரிடத்திலும் பரமசிவனிடத்திலும் வரம்பெற்று, அவ்வரத்தினுடைய பலத்தினாலே திரிலோகாதிபதியாகிய தேவேந்திரன் முதலானவர்களை வெற்றிகொண்டு, அவ்வெற்றியாகிய திரவியத்தை யுமக்குத் திறையாகக் கொடுத்து உம்முடைய சிறையினுமகப்பட்டிருக்கிறான். இப்படி யவனைச்செய்த உமக்கு நிகரானபலவான்களொருவருண்டோ. ஆகையாலிந்த ராவணன்மேலே வைத்த கோபத்தையொழித்து அவனைச் சிறையினின்றும் விடும்படிக்குத் தயைசெய்யவேணுமென்றுசொல்ல அப்படியே கார்த்தவீரியார்ச்சுனன் இராவணனைச் சிறையினின்றும் விடச்செய்து, அந்தப் புலஸ்தியமகாமுனிவருக் குபசாரஞ்செய்தனுப்பினான். அவரும் பிரமலோகத்துக்குப் போயினார். இராவண னிலங்காபட்டணஞ் சேர்ந்திருந்தான்.

கார்த்தவீரியார்ச்சுனப் படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

பத்தாவது,

## வாலிவாலாற் கட்டுண்ட படலம்.

இப்படலத்தில் கார்த்தவீரி யார்ச்சுனனுடைய சிறையினின்றும் விடுபட்ட இராவணனானவன் பின்னும் தன் துர்க்கிருத்தியங்களை விடாது செய்துகொண்டு கிஷ்கிந்தைக்குப்போய் வாலியைத்தேட, அவனுக்கவ் வாலிபத்தினியாகியதாரை அவனிருக்குமிடந் தெரிவிக்க, உடனே தசக்ரீவன் அத்திக்கை நாடிச் சென்று சிவபூசையிலிருக்குமவன்பாற் சேட்டைசெய்ய, அதுகண்ட வாலி யவனைத் தன்வாலாற் கட்டிக்கொண்டு நாற்றிக்கினும்போய் தனக்குரிய நியமாதிகளை முடித்துக்கொண்டு கிஷ்கிந்தைக்குச் செல்ல, அங்கே தாரையானவளதுகண்டிரங்கி விடுவிக்க, பின்னரவன் வாலியாற் சன்மானிக்கப்பட்டிலங்கையை யடைந்திருந்தமை சொல்லப்படுகின்றது.

### இராவணன் வாலியைச் செயிக்க கிட்கிந்தைவருதல்.

கவி.

சீலமாமுனியாற் சிறைபேர்ந்தவன், காலனென்னக் கனலென்னவெய்யதோர்
ஆலமென்ன வவனியழித்துமா, வாலிமன்னும் வளநகரெய்தினான்.

இந்தப்பிரகாரம் அகஸ்தியமகாரிஷியானவர் கார்த்தவீரியார்ச்சுனனிடத்திலே இராவணன் கட்டுப்பட்ட கதையைச் சொல்லக்கேட்ட ஸ்ரீராமர் மிகவுஞ் சந்தோஷத்தை யடைந்தவராய்ப் பின்னும் அகஸ்திய முனிவரை நோக்கி, சுவாமீ! அந்த ராவணன் வாலியினிடத்திலுங் கட்டுப்பட்டானென்று சொன்னீரே; அந்தக் கதையை நன்றாக விவரித்துச் சொல்லவேண்



டுமென்று கேட்டார். அதற்கவ் வகஸ்திய மகாமுனிவரிசைந்து, கேளும் சீதாலக்ஷ்மீநாயகா! ஒழுக்கமிக்க புலஸ்தியப் பிரமரிஷியாகிய தனது பாட்டனாற் கார்த்தவீரியார்ச்சுனனது சிறையினின்று மீண்ட இராவணப்பாதகன், அதனுடன் சும்மாயிராமல், இயமனைப் போலவும், அக்கினியைப் போலவும், விஷத்தைப் போலவும், பூலோகத்தை யழித்து எதிர்ப்பட்டவர்களை யெல்லாங்கொன்று, வாலிமகாராஜ னென்னும் வானராதிபதி யரசுபுரியும் வளமிக்க கிட்கிந்தா நகரத்தை யடைந்தான்.

அப்படி வந்தவனாகிய இராவணன் வாலியினுடைய அரண்மனை புகுந்து வாலியென்பவனெங்கே யெங்கே யென்று தேடினகாலத் தெதிர்ப்பட்ட அவ் வாலியின் பத்தினியாகிய தாரையானவ ளிராவணனைப் பார்த்து, நீயார் பேயைப்போல் இராக்காலத்தில்வந்துதேடுகிறாயே என்தேடுகிறாயென்று கேட்க, நான் இலங்காபுரியாளும் இராவணேஸ்வரன், நான் வாலியோடு யுத்தஞ் செய்து ஜயம்பெறவந்தே னென்றான். அதற்கவள் - கேளாய் இராக்ஷசா! நீ வாலியாகிய யமனுடனே யுத்தம் பண்ணிப் பிராணனுடனே தப்பிப்போகத் திறமுடையவனோ? அல்லாமலும் — முன் புன்னைப்போ லறிவில்லாமல் வந்து வாலியுடனேயுத்தம்பண்ணி, அவனடித்தவடிகட்காற்றாராய் இறந்துபோனதுந்துமிமுதலானவர்களுடைய எலும்புமலையை நீ என்றும் பார்த்ததில்லையோ? ஆயினு நீ போர்செய்ய நினைப்பாயாகில் உன்னுடைய உயிர் யமலோகத்திலும், உன்னுடைய வெலும்புகளிந்த எலும்புமலையிலுஞ் சேருகிறது நிச்சயந்தான். இப்போது என் கணவனாகிய வாலியானவர் தன்னுடைய நித்தியகருமானுஷ்டான முடித்துவரப் போயிருக்கிறார். அவருமிப்பொழு திவ்விடத்துக்கு வருகிற சமயந்தான் இதற்குள் நீயேன் பதறுகின்றாயென்று சொல்லிப் பின்னும் சொல்லுகிறாள்.

### இராவணன் தாரைவார்த்தையாற் றென்றிசைச் சமுத்திரமடைந்து வாலியைக் கட்டவாரம்பிக்க வவன்தன்வாலினாற்கட்டிக் கிட்கிந்தை நகரமடைதல்.

கவி.

தரிக்கிலாயெனிற் றென்றிசைச்சாகரத், தரக்கவேகுதி யாலெனத்தாரையீ
துரைக்கவேகி யுயர்சிவபூசையில், இருக்கும்வாலியை யெய்தினனேசுவான்.

அவ்வரை நீ விரைவிற்காணவேண்டுமானால் இப்பொழுது தெற்குச்சமுத்திரத் தீவுக்குச் சிவபூசைசெய்யப் போயிருக்கிறார். நீயவ்விடத்திற்குப்போனாற் காண்பாயென்று சொல்ல அப்படியே யவ்விராவணன் தன்னுடைய மந்திரிகள் முதலானவர்களுடனே அவ்விடத்து நின்று நீங்கி, உடனே புறப்பட்டுப்போய்த் தெற்குச் சமுத்திரத்தீவு சேர்ந்தான். அப்பொழுதங்கே முன்னமொருகால முப்பத்துமுக்கோடி தேவர்களெல்லோரு மொருபக்கத்திலுந் தானொருபக்கத்திலுமாக நின்று திருப்பாற்கடலைக் கடைந்து தேவர்களுக்கு அமிர்தங்கொடுத்த பலபராக்கிரமமும் பொருந்திய வாலியானவன், மகாமேரு பருவதம்போலச் சரீரமும் - உதயகால சூரியபிம்பம்போல முகமும்-விளங்

கத் தக்கதாகச் சிவபூசாமுகத்திலே கண்களைமூடிக்கொண்டு, சரீரஞ் சற்றுமசையாமற் பதுமாசனமாகவிருந்து சிவத்தியானம் பண்ணிக்கொண் டிருக்கிறான். அந்தவாலியை இராவணன் கண்டு, ஆ! ஆ! நாம்வந்தவேளை நல்லவேளை. இந்தச் சமயத்திலே இவனைப் பிடித்துக் கட்டலாமென்றெண்ணிக்கொண்டு தன்னுடனேவந்த வெல்லோர்களையுந் தூரத்திலே நிறுத்தி, தானொருவனுந் தனியனாய் மெள்ளவந்து பக்கத்திலே யடுத்துச் சத்தப்படாமற் றிரிய, அதை வாலியானவன் கண்டுங்காணாதவன்போலே யிருந்தான்.

கவி.

வெய்யவாளரக்கன்கையிருபதினால் வீக்கவும்விறன்மிகுவாலி
கய்யினாலவனைநெருக்கெனவிறுக்கி வாலினாற்கடிதுறக்கட்டி
மய்யணிகண்டன்பூசனைமுடித்து வாலுடனிராவணன்றூங்கப்
பய்யராவதனைக்கவ்விவிண்பறக்குங் கருடனின்மேற்கடல்பாய்ந்தான்.

அந்தச் சமயத்திலே ராவணன் வாலிக்குப் பின்னாலேவந்து, மெள்ள மெள்ளப் புலிபோலப் பதுங்கி ஒரே பாய்ச்சலாகப்பாய்ந்து, தன்னுடைய விருபதுகைகளினாலு மவனைப்பலமாகச் சேர்த்துக்கட்டிப் பிடித்தான். அப்படிப்பிடித்த ராவணனை வாலியானவ னிருந்தபடியே ஒருகையினாலே யொதுக்கிக் கக்கத்துக்குள்ளே சேர்த்திறுக்கி, ஆலையிலிட்ட கரும்புபோலச் சரீரத்திலுள்ள வெலும்பெல்லா நொறுங்கும்படி நெருக்கி, பின்பு தன்னுடைய வாலினுனியிலே அவனையொரு மணியாகக்கட்டிக்கொண்டு சிவபூசையினைச்செய்து முடித்துக்கொண்டான். அப்பாலந்த வாலியானவ னவ்விடத்தினின்று மேற்கடற்றீவுக்குப் போகவேணுமென்று நினைத்து, சர்ப்பத்தை வாயிற்கவ்வி ஆகாயத்திற் பறக்குங் கருடனைப்போல் தனதுமூச்சினை யடக்கிப் பலமான விசைகொண் டெழுந்து ஆகாசமார்க்கத்தி லதிவேகமாகப் பாய்ந்தான். அப்படிப்பாய்கிற பிரசண்டவேகக் காற்றினாலே முன்னும்பின்னு முள்ள சிறுமலைகள் - பெருமலைகள் - கல்லுகள் - மரங்கள் முதலியவெல்லா மோதப்பட்டு, அவ்வவைகளு நிலைகுலைந்துபேர்ந்து பறிபட்டு, எங்கும் பின்னுமுன்னுமாகப் பறந்துவிழ்ந்தன. அக்கா லிராவணனுடைய சகலபரிவார சேனைகளு மவனைப் பின்றொடர்ந்து மீட்கப்போகிறவர்கள்போல அந்தவேகக்காற்றினாலேயிழுக்கப்பட்டு, ஆகாசத்திலே சுழற்காற்றி லகப்பட்ட சருகுகள்போலப் பறந்து அலைச்சற்பட்டுப் பின்னு நிலத்திலே விழ்ந்தன.

இவ்விதமாகியவேகத்துடன் தென்கடலுக்கடுத்த பாரதவருஷமென்று சொல்லப்பட்ட பூமியின்பரப் பொன்பதினாயிரமியோசனைதூர வகலமும், இதற்கடுத்த இமயமென்று சொல்லப்பட்ட மலைப்பரப்பு இரண்டாயிர மியோசனைதூரவகலமும், அதற்கடுத்த கிம்புருஷவருஷமென்னும் பூமிப்பரப்பொன்பதினாயிரமியோசனைதூர வகலமும், அதற்கடுத்த ஏமகூடமென்னுமலைப்பரப்பு இரண்டாயிர மியோசனைதூர வகலமும், அதற்கடுத்த அரிவருஷமென்னும் பூமிப்பரப் பொன்பதினாயிர மியோசனைதூர வகலமும், அதற்கடுத்த சமுத்திரப்பரப்பு இரண்டாயிரமியோசனைதூர வகலமும், ஆகக்கூடியமுப்பத்து



மூவாயிர மியோசனைதூரமு மொரு பாய்ச்சலாகப்பாய்ந்து மேற்குக்கடற்றீவுக்குப்போய் அவ்விடத்திலுஞ் சிவபூசைசெய்து முடித்துக் கொண்டான். பின்னுமப்படியே மேற்குக்கடல்முதல் வடக்குக்கடல்வரைக்கும் - வடக்குக்கடல்முதற் கிழக்குக்கடல்வரைக்கும் - இவைநடுவிலுள்ள பலபூமிகளையும் பருவதங்களையும் பாய்ந்து கடந்து, அந்தத் தீவுகளிலுஞ் சிவார்ச்சனைசெய்து முடித்துக்கொண்டு பின்னுமொரு பாய்ச்சலாகப் பாய்ந்து கிஷ்கிந்தாபட்டணம் வந்து சேர்ந்தான்.

## தாரையின் வேண்டுகோளால் இராவணனை வாற்கட்டினின்று மவிழ்க்க வவன் சிநேகமுறை பாராட்டி இலங்கைக்கேகல்.

கவி.

ஆங்கவன்வரக்கண்டகமகிழ்தாரை யவனெடுவாலிடைக்கிடந்து
தூங்கியவரக்கன் றன்றுயர்கண்டு தூறுகழல்வாலியைநோக்கி
ஈங்கிவன்யாவனிவனைநீபோக விளிவிடுகெனமனமிரங்கித்
தேங்கமழ்த்தீழலிசெப்பிடவிடுத்துத் தீயவற்கவனிவைசெப்பும்.

அப்படிவந்துசேர்ந்த வாலிக்கவனுடைய பாரியாகிய தாரையானவள் மிகவுமுபசாரஞ்செய்து; ஓ நாயகா! உம்முடைய வாலிலே கட்டுப்பட்டு, சரீரமுழுவது நொறுங்கி நொந்து புண்ணாகி, மிகவுந் துன்பத்துடனே பயந்துகிடக்கு மிவனெவனோவென்று கேட்டாள். அதற்கவ னவளைப்பார்த்து, ஓ நாயகி! இந்தப் பத்துத்தலைப்பூச்சி யகப்பட்டது: இதை நீ பார்க்கவேணுமென்று கொண்டுவந்தேனென்று சொல்லக்கேட்ட அவள் வாலியைநோக்கி, ஐயா! உம்முடைய பெருமைபொருந்திய பலத்துக்கிவனொரு லக்ஷியமோ ஆனதால் நீர் தயவுசெய்து இவனை விட்டுவிடவேண்டுமென்று மிகவும் வேண்டிக்கொண்டாள். அதற்கவனப்படியே செய்கிறேனென்று சம்மதித்துக் கட்டவிழ்த்துவிட்டு, அடா இராவணா! இப்பொழுதிப்படிக் கட்டுப்பட்டோமேயென்றெண்ணவேண்டாம். உலகத்திலே யிவன் பலமுடையவனென்றும், இவன் பலமில்லாதவனென்றும், இவன் வெல்வானென்றும், இவன் றோற்பானென்றும், ஒருவனை யொருவராலேயு நிச்சயிக்கக்கூடாது. ஜயமும் அபஜெயமு மொருவன் பங்கல்ல. காலமு மொருபடித்தாயிராது. ஆனதாலுனக்கு யுத்தப்பண்ணவேணுமென்கிற இச்சையுண்டானா லிப்பொழுதே யுத்தஞ்செய்யலா மென்றான்.

அதற்கந்த ராவணன் சற்றுநிதானித்து அவ்வாலியைப்பார்த்து, ஓ கபிச்சக்கரவர்த்தி! நானும்முடையவாலிலே கட்டுப்பட்டனுபவித்த துன்பத்திலுமிக்கது வேறேயொரு துன்பமுண்டோ? உம்மோடு யுத்தமென்று சொல்லப்பட்டதை நினைக்கவுந் திறமுண்டோ? நானுமுமுடனே யுத்தம்பண்ணத்தக்கவன்? நீரென்னை வேறுபாடாக நினையாமல் தயைவைத்துச் சிநேகிதனாக்கக் கொள்ளவேணுமென்று தாழ்ந்துசொல்லினான். அதற்கவ னப்படியேயென்று சம்மதித்து மிகவுஞ் சந்தோஷத்தை யடைந்து, அப்பொழுதே தன்

னுடைய கிரகத்துக் கழைத்துக்கொண்டுபோய்ப் போஜனமுதலான உபசாரங்கள்செய்வித்து ஒருமாதம் வரைக்கும் வைத்திருந்து, அப்பா தசக்கிரீவா! இன்றுமுதல் நீயெனக்கு முதன்மையான உரிமைத்தோழனானாய். இனியா தொன்றுக்கு மஞ்சற்க. என்றுபசாரஞ்சொல்லி யனுப்புவிக்க இராவணனவ் வாலியினிடத்திலே உத்திரவுபெற்றுக்கொண்டு தன்னுடைய லங்காபட்டணம்வந்து சேர்ந்திருந்தான்.

வாலிவாலாற் கட்டுண்டபடலம் – முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

பதினோராவது,

# அநுமப் படலம்.

இப்படலத்தில் ஸ்ரீராமருக்கு இராவணனுடைய சுபஜயங்களையும் அபஜயங்களையுங்கூறிய அகஸ்தியமுனிவர் மீட்டுமெல்விராமபிரான் வேண்டிக்கோளால் அனுமானுடைய உற்பத்தியாதிக் கிரமங்களைக் கூறத்தொடங்கி வாயுபகவானுக்கும் அஞ்சனாதேவிக்கும் உற்பவித்துப் பிரமனாதிய தேவர்களால் வரம்பெற்றதையும், அவ்வரச்செருக்கால் தபோதன ராச்சிரமம் புகுந்து தகாதனவற்றைச்செய்து அவர்கள் சாபம்பெற்றதையும், பின்பு வாலிக்குப்பயந்து மதங்காசிரமத்தி லொளித்திருந்த சுக்கிரீவராஜனைத் தோழமைகொண்டு சூரியனிடத்தில் ஐந்திரவியாகரணம் பயின்றதையுங்கூறி, அவ்விராமமூர்த்திக்குச் சேவகத்திறங்கொண்டு அடியனுயிருப்பதீறாயுள்ள சவிஸ்தாரங்களைச் சொல்லிமுடித்து,மகாரிஷிகளோடு அகஸ்தியர் தனதாச்சிரமம் செல்ல, அக்காலையில் ஸ்ரீராமரையுஞ் சீதாபிராட்டியாரையும் பார்க்கவந்த மாமனாராகிய சனகமகாராஜனைக் கண்டுமகிழ வச்சனகன் அயோத்திவிட்டு ஆரணியமடைந்து இலங்கைசென்று இராவணசம்மார மீறாயுள்ள சரித்திரங்களைக் கேட்க விரும்பினபோது அச்சவிஸ்தாரங்களை வசிஷ்டமகாமுனிவராலிராமமூர்த்தி சொல்விக்க வதைக்கேட்டு மகிழ்ந்த சனகமகாராஜன் தனது மிதிலா நகரடைந்ததும் சொல்லப்படுகின்றது.

ஸ்ரீராமர் ஆஞ்சனேயருடைய வீரப்பிரதாபங்களைப்புகழ்ந்து அவர் சவிஸ்தாரங்களைக்கேட்க அகஸ்தியமகாமுனிவர் அவ்வாஞ்சனேயரின் உற்பத்தியாதி சவிஸ்தாரங்களைக் கூறல்.

கவி.

புலைவாளரக்கனிருநாலிரட்டி யொருநாலுபெற்றபுயமும்
தலையானபத்துமுறவால்விசித்த சயவாலிகொற்றமுழுதும்
மலயாசலத்துமறையோனுரைப்ப வசெலாமனத்திலுணராச்
சிலையாலரக்கர்திறம்வேரறுத்த திறலானுரைக்குமிவையே.

№ 87. ஆஞ்சனேயர்பிரம்மாதியதேவரால்வரம்பெறுதல்.



சூரியனிடத்திலைந்திரவியாகரணம்பயிற்றல்.



இந்தப்பிரகாரம் பொதியமலையி லெழுந்தருளியிருக்கும் ரிஷிசிரேஷ்ட
ராகிய அகஸ்தியமகாமுனிவர் புலாஸ்நாற்றம் பொருந்தியவாலை யேந்திய இ
ராவணனது இருபதுபுயங்களும் பத்துசிரசும் சிக்கும்படி வாலினாற்சுட்டி வெ
ற்றிபெற்ற வாலியினது வீரப்பிரதாபங்களையும் அவ்விராவணனது உற்பத்
தியாதிக்கிரமங்களையு முறைபடக்கூறியதைக்கேட்ட ஸ்ரீராமரானவர் மிகவுஞ்
சந்தோஷத்தை யடைந்தவராகி, பின்னும் ஸ்ரீராமர் அவ்வகஸ்தியபகவானை
நோக்கிச் சொல்லுகின்றார்.

ஐயா முத்தமிழ்முனியே! முன்புநான் வனவாசஞ் செய்துவருகிறபோ
து சுக்கிரீவனுக்கு மெனக்குஞ் சினேகஞ் செய்வித்தும், ஒருசிறிதானகுளத்
தைத் தாண்டுவதுபோலப் பெரிதான சமுத்திரத்தைப் பாய்ந்து அப்
பொழுதெதிர்ப்பட்ட அங்காரதாரையென்று சொல்லப்பட்டவளுடைய
குடலைப்பிடுங்கி மாலையாகத் தரித்துக்கொண்டு அவளைவதைத்தும், அசோகவ
னத்தைச் சூறையாடிப் பாழாகவழித்தும், சம்புமாலி முதலானவர்களை நில
த்தோடே தேய்த்துவதைத்தும், பின்னுமெதிர்த்துவந்த சேனைகளையெல்லாஞ்
சமுத்திரத்திலே வாரி வீசித்துவைத்தழித்தும், சீதையினுடைய பிராணனை
ரக்ஷித்தும், இப்படிக்கெல்லாம் அவ்விடத்திற் பிரயாசைப்பட்டுஞ் சற்றுமன
ஞ்சலியாமல் முன்பு இந்தக்கரையிலிருந்து தாண்டும்பொழுதுள்ள பலமாகத்
தானே பின்னுமந்த லங்காதீவினின்றும் பாய்ந்திவ்விடத்தக்கு வந்து என்னு
டைய சோகத்தைத் தீர்த்தும், சமுத்திரத்திலே யணைகட்டுவதற் கெவ்வளவு
பிரயத்தினஞ் செய்யவேண்டுமோ அவ்வளவுபிரயத்தினமுஞ் செய்து சுலப
மாகக்கட்டுவித்தும், உயுத்தமுகத்திலே இந்திரஜித்துப் பிரயோகித்த பிரமா
ஸ்திரத்தினாலே கட்டுப்பட்டு அவசமாய் மூர்ச்சையடைந்து கிடக்கும்பொழு
தில் உத்தரதிக்கிலே மகாமேருபருவதத்துக்கு வடக்கே வெகுதூரத்திலிரு
ந்த சஞ்சீவிமலையைப்பேர்த் தொருநாழிகையளவிற் கொண்டுவந்து வானர
சேனைகளையும் இலட்சுமணனையு மூர்ச்சைதெளிவித்து ரக்ஷித்தும், பின்னுமி
ராக்ஷதர்கள் செய்யு மாயையினாலே யுண்டாகப்பட்ட விகாதங்களையெல்லாந்
தீர்த்தும், இப்படிக்கின்னுமனேக விதமாயுள்ள காரியங்களாலே யெனக்
குபகாரஞ்செய்தவனாய்; அணுவைப்போலவும்-மகாமேருவைப்போலவும்-சி
றிதாகவும் பெரிதாகவும, தானினைத்தபடிக்கு ரூபங்கொள்ளத்தக்கசித்தியும்
நிறைந்தவித்தையும், சுந்தரமும், பொறுமையும், நீதியும், சத்தியமும், விசு
வாசமும்பொருந்தி; இன்னுமிவைமுதலாயுள்ள சிலாக்கியகுணங்களெல்லாம்
பெற்று விளங்கிய அவ்வனுமானுடைய உற்பத்தியும், சரித்திரமும், தன்னு
டைய பராக்கிரமந் தனக்குத்தெரியாத காரணமும் விவரமாகச் சொல்லவே
ணுமென்று கேட்டார்.

அதற்கந்த அகஸ்தியபகவானானவர் ஸ்ரீராமனைப்பார்த்து, கேளும் தச
ரதநந்தனா! முன்னமொருகாலம் அஞ்சனாதேவிக்கும் வாயுபகவானுக்கும் ஓர்
காரண மகிமையினாலே புத்திரனாக அனுமான் பிறந்தவுடனே மாதானவப்

பார்த்து வணங்கி, அம்மா! எனக்கு மிகவும் பசியாயிருக்கின்றது. இந்தப்பசி
தீரத்தக்கதாக நான்புசிக்கும் பதார்த்தங்க ளென்னவென்று கேட்டான்.
அதற்கவள் இவனைப்பார்த்து, அடா குழந்தாய்! குளிர்ந்தவனங்களிலுஞ் சோ
லைகளிலு மதுரமாய்ச் சிவந்துபழுத்திருக்குங் கனிகளை உன்பசியைத் தீர்க்க
த்தக்க பதார்த்தங்களென்றுசொல்லித் தன்மகனுடையபசியாற்றவேண்டிக்
கனிகள் கொண்டுவர வனத்துக்குப்போனாள். இவ்வாறுபோனதாய் வருவ
தற்கு முன்னமே இவனுக்கு மிகவுங்கொடுமையான பசியுண்டாகி, அப்பசி
வருத்தம் பொறுக்கமாட்டாமற் பரிதாபப்பட்டுக்கொண் டிருக்கிறசமையத்
திலே உதயகாலத்திற் சூரியனுதித்தான். அந்தச்சூரிய விம்பத்தை இவ்வனு
மான்கண்டு, தாய் தனக்குச்சொல்லிய சிவந்த கனிவகைகளிலே இதுவுமொ
ரு கனிதானென்று நினைந்து சூரியன்மேலே மகாவேகமாகப் பாய்ந்தான்.
அப்பொழுதந்த வேகத்தைப்பார்த்த தேவர்களெல்லாம் பிரமித்து, இவன்
குழந்தையாயிருக்கிற இப்பருவத்திலேயே பிதாவினுடைய பலமும் வேகமும்
பெற்றதல்லாமல் கருடவேகமும்பெற்றுச் சூரியன்மேலே இப்படிப் பாய்ந்
தானல்லவோ? ஆதலாலிவன் சகலபலமும்பொருந்தி நாளுக்குநாட் பிரபலமா
வானானால் நம்முடைய சத்துருக்களாகிய ராட்சதர்களெல்லாரு மென்னதுன்
பத்தை யடைவார்களோவென்று ஆச்சரியத்தை யடைந்தார்கள். அக்கால்
பிதாவாகிய வாயுபகவான் அக்கினிமயமாயெரிக்குஞ் சூரியகிரணங்கள் சீதள
சந்தனம்போலக் குளிர்ந்திருக்கக் கடவதென்று வரங்கொடுத்தான். அல்லா
மலும் சூரியபகவான் தன்மேற்பாய்ந்து கவ்விக்கொண்டிருக்கு மிவ்வனுமா
னை விளையாட்டுக்குழந்தையென் றெண்ணிக் கோபஞ்செய்யாமல், தனதுகிர
ணங்களினாலே தகியாமல், இவன்மேல் தயவாக மகிழ்ச்சிகொண்டிருந்
தான்.

இப்படியிருக்குஞ் சமயத்தில் கிரகணகால நேர்ந்தபடியினாலே சூரியனை
ப்பற்றவந்த இராகுவானவன் அந்தச்சூரியனைக் கவ்விக்கொண்டிருக்கும் இவ்
வனுமானுடைய பராக்கிரமத்தைக்கண்டு பயந்தோடித் தேவேந்திரனிடத்து
க்குப்போய், ஐயா தேவராஜனே! சந்திரசூரியமண்டலங்களைக்கவ்விப்பற்ற எ
னக்குமுன்னமே வரங்கொடுத்திருக்க, அப்பொழுது வேறொருவனுக்கு நி
யாயத்தப்பாய்க்கொடுக்கத்தக்கதாக நாங்கள்செய்த குற்றமென்னமோ? என்
னகாரணத்தினாலிப்படிக் கவமரியாதை செய்வித்தீர்? என்று முறையிட்டுக்
கூறினான். அதுகேட்ட தேவேந்திரன் அப்பொழுதே மிகவுங்கோபத்தோடு
ஐராவதத்தின் மேலேறிக்கொண் டதிவேகமாகப்போ யடுத்துநின்று, நீயிந்
தச்சூரியனைப்பிடியென்று இராகுவையேவினான். அவன் சூரியனையடுத்துவரு
வதைக்கண்ட இவ்வனுமான் சூரியவிம்பத்தைவிட்டு இராகுவின்மேலேபாய
அந்த ராகுவானவன் பயந்து நடுங்கி யுளறிக்கொண் டோட்டமாயோடித்
தேவேந்திரன் பாதத்தில்வீழ்ந்து புலம்பினான். அதுகண்ட தேவேந்திரன்
மிகவுமுக்கிரமான கோபத்துடனே ஐராவதயானையை மகாப்பிரசண்டவேக



மாக நடத்திக்கொண்டு அனுமான்மேலேறி வருவதானான். அப்பொழுதி
லந்த ஐராவதயானையின் முகத்திலே சிவப்பாய்விளங்குஞ் சிந்தூரப்பொட்டு
வட்டத்தை இவ்வனுமான் இதுவுமொரு கனிதானென்றெண்ணி, அவ்வை
ராவத யானையின்மத்தகத்திலே பாய்வதானான். அப்படிப்பாயுமளவிலதைக்
கண்ட தேவேந்திரன் பலம்பொருந்திய தன்னுடைய வச்சிராயுதத்தினாலே
இவனையடித்தான். அந்தவடியினாலே இவ்வனுமான் மூர்ச்சையடைந்து பூமி
யிலே விழுந்தான்.

அந்த வேளையிலே இவ்வனுமானுடைய பிதாவாகிய வாயுபகவானவ
னிந்திரனைக்கோபித்து, இந்த மூன்றுலோகங்களையும் க்ஷணப்பொழுதி லழிப்
பேனென்று சபதம்பண்ணிக்கொண்டு, உலோகத்திலே யெங்கும் வாயுவியக்க
மில்லாதபடிசெய்து, தன்னுடைய புத்திரனைப்பார்த்து மிகவும் விசனத்தைய
டைந்தவனை யெடுத்துக்கொண்டுபோய் இமயகிரியைச் சேர்ந்து, அந்தக்கிரியி
லே யொருபெரிய குகையிற் பிரவேசித்திருந்தான். அப்பொழு துலகமெங்
கும் வாயுவியக்கமில்லாதபடியினாலே, இயானைமுத லெறும்புகடையான எண்
பத்துநான்கு நூறாயிரம் யோனிபேதங்களாயுள்ள சகலபிராணிகளும் வயிறு
விம்மி மரணயாதனையாகத் துன்பப்பட்டன. அச்சமயத்தில் தேவர்களும்
ரிஷிகளும்போய்ப் பிரமதேவரிடத்திற்சொல்ல, அவரந்தத் தேவர்களிரிஷிகளு
டனே வாயுபகவானிருக்குமிடத்தைத் தேடிவந்தார். வாயுபகவான் அந்தப்பி
ரமதேவரைக்கண்டெழுந்துபோய் மிகவும்புத்திரசோகவிசனத்துடனே அவ
ருக்கு நமஸ்கரித்து வணங்கிநிற்க, அப்பொழுது பிரமதேவ ரந்தவாயுபகவா
னுடைய விசனந்தீரும்படி தேறுதலைசொல்லி யுபசரித்து, மூர்ச்சித்துக்கிட
ந்த வனுமானைத் தம்முடைய கையினாலே தடவிமூர்ச்சைதெளிவித்தெழுப்பித்
தம்முடனே வந்ததேவர்களைநோக்கி நீங்களெல்லோரு மிந்தவனுமானுக்கு
வரங்கள் கொடுப்பீரென் றருள்செய்தனர்.

அப்படியேசூரியபகவான் தன்னுடைய கிரணத்தின்காந்தியிலே நூற்றிலொ
ருபங்கு பிரகாசமுண்டாகக்கடவதென்றும், சகலவித்தைகளையுஞ் சுலபமா
கக்கிரகிக்கத்தக்க தீக்ஷணபுத்தியு முண்டாகக்கடவதென்றும் வரங்கொடுத்
தான். வருணபகவான் யுத்தகளத்திலே சத்துருக்களாலே என்னுடையபாச
த்தாற் கட்டுப்பட்டாலு மரணமடையாதிருக்கக் கடவனென்றும், இயமதரு
மராசன் என்னுடைய காலதண்டத்தினாலே மரணமடையாதிருக்கக் கடவ
னென்றும், குபேரன் தன்னுடைய கதாயுதத்தினாலே சாவாமலிருக்கக் கட
வனென்றும், உருத்திரமூர்த்தி தம்முடைய சூலாயுதத்தினாலே யழிவில்லாதி
ருக்கக் கடவனென்றும், விசுவகருமாவானவன் சகல தேவர்களுடைய அஸ்
திரசஸ்திரங்களினாலே அபசயப்படாமலிருக்கக் கடவனென்றும், வரங்கொ
டுத்தார்கள். பின்பு பிரமதேவர் தம்முடையபிரமதண்டத்தினாலே நாசப்படா
மலிருக்கக் கடவனென்று வரங்கொடுத்து, அவ்வனுமானுடைய பிதாவாகிய
வாயுபகவானைநோக்கி, ஓ சமீரணனே! உன்னுடையபுத்திர னினியேயிந்த

லோகங்களைப் பிடித்துக்கொடுமைசெய்யும் இராவணனுடைய லங்காபட்டணத்தை யெரித்தழித்து, இராட்சதர் குலத்தை வேரறுத்து, ஸ்ரீராமன் சந்தோஷத்தையடையும்படிக் குபகரித்து, அவருடைய வனுக்கிரகத்தினாலே பரமபதத்தை யடையக்கடவனென்று மனுக்கிரகித்தார். இவ்விதமாகப் பிரமதேவர் முதலாயுள்ள சகலதேவர்களும் வரங்கொடுத்துத் தங்களுடைய லோகத்தைச் சேர்ந்தார்கள்.

கவி.

என்றமலரோன்முதலாய விமையோர்கொடுத்த வரச்செருக்கால்
நன்றுதீதென்றிங்குணரா நன்மாமுனிவ ருறைவிடத்துச்
சென்றுதயிர்பானெய்குடித்துச் சீரைச்சுருக்குஞ் சருவமெலாம்
ஒன்றவலியோன்கொண்டெழுவு மூழித்தீயி னுடன்றவர்கள்.

இப்படிக்குப் பிரமதேவர் முதலாயுள்ள சமஸ்த தேவர்களிடத்திலும் பெற்ற வரத்தினுடைய மகிமையினாலே இவ்வனுமானானவன் நமக்கு நிகராவர்களொருவருமில்லையென்று அகங்காரகர்வத்தை யடைந்தவனாய் இதாகிதங்களொன்றுந் தெரியாமல் மதோன்மத்தனாகி, தபோதனர்களாகிய மகாரிஷிகள் வாசஞ்செய்துகொண்டிருக்கும் ஆச்சிரமங்களிலும் யாகசாலைகளிலும் புகுந்து, அவ்விடங்களிலுள்ள ஹோமத்திரவியங்களாகிய நெய்-பால்-தயிர்களைக் குடித்தும் — கந்தமூலபலாதிகளைத்தின் றெச்சிலாக்கியும் — சந்தனபுஷ்பங்கள் முதலானவைகளை யெடுத்தெறிந்தும் - கமண்டலமுதலான பாத்திரங்களையெடுத்துருட்டி யுடைத்தும் — இப்படிக்குப் பலபலவிதமான பாலியசேட்டையாய் யாக காரியங்களுக்கு விகாதஞ்செய்துகொண்டு திரிந்தான். அக்காலத்திலொருநாள் முனிவர்களெல்லோரு நாடோறு மிவ்வனுமான்செய்கிற துஷ்டசேஷ்டைகளைப் பார்த்துச் சகிக்கமாட்டாதவர்களாய் மிகவுங்கோபங்கொண்டு, இவன் சகலலோகங்களையு மொருநிமிஷத்திலே யழிக்கத்தக்க மகிமைபொருந்திய பிரமதண்டத்தினாலு மரணமில்லாத வரம்பெற்றவன். மிகவும் பொல்லாதவனாகவு மிருக்கிறான். இவனை யாவராலுமென்ன செய்யலாகும்? ஆனாலுமிவனைத் தண்டித் தடக்குவோமென் றாலோசித்து எல்லோருமொரு வாக்காகத் தன்னுடைய பலபராக்கிரமந் தனக்குத் தெரியாமற் போகக்கடவதென்று சாபஞ்செய்தார்கள்.

அப்படிக்கந்த மகாரிஷிகள்செய்த சாபத்தினாலே விஷப்பல்பிடுங்கப்பட்ட பாம்புபோல இவ்வனுமான் தன்னுடைய வகங்காரகருவமுங் கோபமுமடங்கிச் சாந்தத்தை யடைந்தவனாகி, அந்தத் தபோதனர்களுக்குப்பயந்து ஆ! ஆ! நாமென்னகாரியஞ் செய்தோம்? நம்முடையவறியாமை எப்படியிருந்தது. இந்திரன் முதலான தேவர்களுடையசாபமும் பெரிதல்ல. அந்தத்தேவர் வணங்கத்தக்க பெருமையுடையவர்களாய் சகலலோகங்களையுஞ் சிருஷ்டிஸ்திதி சங்காரஞ்செய்கிற அதிகாரிகளாயுள்ள பிரமதேவர் — விஷ்ணுபகவான் — உருத்திரமூர்த்தி - இத்திரிமூர்த்திகளுடைய சாபமும் பெரிதல்ல. அந்தத் திரிமூர்த்திகளு நடுங்கும்படிச் சாபஞ்செய்கின்ற தபோதனர்களுடைய



சாபத்தைக்கடந்தா ரொருவருமில்லை. அப்படியிருக்க நாமிந்த மகாரிஷிகளுக்கு அபசாரத்தைச் செய்தவனானோம். என்றாலோசித்துத் தன்னைத்தானே பொறுத்துக்கொண்டு வெட்கத்தை யடைந்தவனானான்.

அதன்பின்பு முன்னமொருகாலம் வாலிசுக்கிரீவனாகியவிருவரும் தாரையின்பொருட் டொருவருக்கொருவர் விரோதப்பட்டுச் சகலலோகங்களிலுஞ் சென்று வெகுகாலமா யுத்தம்பண்ணிக்கொண்டுவருகிறநாளில், ஒருநாள் சுக்கிரீவன் அந்த வாலியினாலே யடிபட்டாற்றாம லிளைத்தோடி மதங்கமாமுனிவருடைய ஆசிரமத்தையடைந்து அவர்பாலடைக்கலமாகப்புக, அவரந்தச்சுக்கிரீவனுக்கபயங் கொடுத்திரக்ஷிக்க, அக்கா லச்சுக்கிரீவனை இவ்வனுமான் பிராணசினேகிதனாகத் தோழமைகொண்டு, அந்த மதங்கமகா முனிவரையுங் கண்டுவணங்கிச் சேவித்தனுமதிபெற்று வித்தியார்த்தியாகி வேதவேதாங்க முதலான சகல சாஸ்திரங்களுமோதியுணர்ந்து, பின்பு சூரியபகவானிடத்துக்குப்போ யெனக்கு அயிந்திரவியாகரணம் போதிக்கவேணுமென்று கேட்டான். அதற்கவ னிவனைப்பார்த்து, அப்பா அஞ்சனைச்சிங்கமே! நாமேறியிருக்கு மிவ்விரதமானது ஒரு சுவாசகாலத்துக்கு இருபத்தோராயிரத்தறுநூறு யோசனை தூரம் அதிவேகமாகச் சதாகாலமுஞ் சஞ்சரித்துக்கொண்டிருப்பதால், ஓரிடத்திலிருந்து பாடஞ்சொல்வதற்குச் சாவகாசமில்லை. இப்படியாகவிருக்குமென்னிடத்திலே நீ அவ்வியாகரணம் கற்றுக்கொள்வதற்கு வல்லமையுண்டாகி லோதுவிக்கிறேனென்று சொல்லினான்.

அதற்கிவ்வனுமான் சூரியபகவானைப் பார்த்து, ஓ ஆதித்தமூர்த்தி! தேவரீருடைய வனுக்கிரக விசேஷத்தினாலே உம்மிடத்திலே அந்தவித்தையைக்கற்றுக்கொள்வதற்கு எனக்கு வல்லமையுண்டாயிருக்குமென்றுசொல்லி யுடன்பட்டு, குருவினிடத்தி லெதிரேயிருந்து பாடங்கேட்கிறபடிக்குச் சூரியபகவானுக்கெதிர்முகமாகவே அந்த ரதவேகத்துக்குப் பின்னிடாமலே ஆகாசமார்க்கத்திற் பாய்ந்தபடியாய் ஆறுதினத்திலே அவ்வயிந்திர வியாகரணமுழுதுங் கற்றுக்கொண்டான்.

கவி.

தண்ணளியினன்மித தயாவுடைமையால்வரு தருக்கறுதலா
லெண்ணுகருமங்களிவை யாவுமிடையூற வியற்றுமியல்பால்
நண்ணலரைவிண்ணவர்க ளாயினுநடுக்குற விடுக்குடைமையால்
மண்ணுலகில்விண்ணுலகின் மாருதியையொக்குமவர் யாருமிலையே.

அறந்தலையெடுத்தபுவி வானவர்களானவர்க ளாடினர்கடூ
மறந்தலையிறக்கியது வாலிமுதலானவர்கள் வாமநயனஞ்
சிறந்ததிரடோள்புருவ மார்பிடை துடித்தன சிறந்தபுகழா
னிறைந்தகுணமாருதி நினைத்திருவடித்தொழுது நின்றபொழுதே.

கேளும் ஸ்ரீ சீதாலக்ஷ்மீ மனோகரா! தயாளத்திலும், சாந்தத்திலும், சத்தியத்திலும், ஞானத்திலும், நிகரற்றகுணத்திலும், பிரயத்தினம் பண்ணிய காரியங்களை விகாதப்படாதபடி முடிக்கும் வல்லமையிலும், நம்பினோர்களைப்

பாதுகாக்கு மனோதிடத்திலும், அவனுக்குச் சமானமானவர்க ளொருவருமி ல்லை. அவனாலே தருமங்களெல்லா மபிவிருத்தியாய்த் தேவர்க ளெல்லோருஞ் சவுக்கியத்தை யடைந்தார்கள். மேலும் பட்வங்களைத்தையும் பரிபாலிப்பவ ராகிய இராக்ஷசர்களெல்லாருந் துக்கத்தை யடைந்தழிந்தார்கள். இன்னுமள வில்லா த மேன்மைபெருந்திய அந்தவனுமானனவன் உம்முடைய திருவடிப் பணிவிடையைவிரும்பி உம்மைவிட்டு நீங்காதிருப்பானாகில், உம்முடையகுண த்துக்குங்கீர்த்திக்குஞ்சமானமுண்டோ? என்றிப்படி அனுமானுடைய சரித்தி ரங்களெல்லாம் ஸ்ரீராமனுக்குத் தெரியச்சொன்னார். இப்படிக்கு அகஸ்தியமா முனிவர் ஆஞ்சனேயருடைய சவிஸ்தாரங்களைச் சொல்லிப் புகழ்ந்தகாலையில்; ஸ்ரீராமபிரான் அகஸ்தியமுனிவரை வணங்கி, ஐயாமுனிவரேரே! தபோவல் லமைமிக்க உங்களது அநுக்கிரகத்தினா லல்லவா எங்களுக்கெல்லாம் இராச் சியாதிகாரமும், எத்தனகாரியசித்தியும், கீர்த்தியுமுண்டாவது. உமது கிருபா கடாக்ஷத்தால் இராட்சசர்களுடைய சவிஸ்தாரமும், வானராதிபதியாகிய சுக்ரீவனுக்குத் தோழனும், எனது பக்திவினை என்னிடங் கொண்டுவந்து சேர்க்கும்படி மிகவுஞ்சிரமம் எடுத்துக்கொண்டவனுமாகிய ஆஞ்சனேயனது சவிஸ்தாரங்களையுங் கேட்டேனென்று சந்தோஷித்தனர். மற்றமகாரிஷிக ளெல்லாம் ஸ்ரீராமபிரானைப் பார்த்து, ஓ சீதாமனோகரா! எங்கட்கு விதியாய் விதித்திருக்கப்பட்ட நித்தியநைமித்தியமாதி காரியங்க ளனேகமிருந்தாலும் ஒரு காலத்திலாவ தும்மைவிட்டுப் பிரிந்திருப்பதற்கு மனங்கொள்ள வில்லை யென்று சொன்னார்கள். அதுகேட்ட ஸ்ரீராகவன் அந்த மகாமுனிவர்களை நோக்கி, ஓ தபோதிதிகளே! நீங்க ளெவ்விடத்தி லிருந்தாலுமென்ன? உங்க ளுடைய ஆசீர்வாத அனுக்கிரகமொன்றுமே வேண்டுவது. உங்களுடைய தபோமகிமையினாலேயல்லவோ எங்களுடைய இராஜரீகமும் உலோகபரிபா லனமு முண்டாகத்தக்கது? ஆனதால் நீங்கள் நாடோறும் காலநியமங்கள் தவறாது நித்திய நைமித்தியமான சற்கருமானுஷ் டானங்களை வழுவாம னடத்திவருவதே உங்களுடைய பாரம. இனியுங்களுடைய ஆச்சிரமங்களுக் கெழுந்தருளலா மென்றுபசரித் தடிபணியச் சந்தனுசல்வாசராகிய அகஸ் தியபகவான் முதலான மகாரிஷிகளெல்லாரு மானந்த சந்தோஷத்தை யடைந்தவர்களாய் ஸ்ரீராகவனுங் கனேக வாசீர்வாதஞ்செய்து வாழ்த்தித் தங் களுடைய வாசமாகிய ஆச்சிரமங்களைச் சேர்ந்திருந்தார்கள்.

ஸ்ரீராமபிரான் தன்னைக் காணவந்த சனகமகாராஜனுட னளவளாவி மகிழ்ந்து தனது சவிஸ்தாரங்களை வதிஷ்டராற் சொல்லக்கேட்டவச் சனகமகாராஜன் சீதையைக்கண்டு பிரியவசனங்கூறி மிதுலாபுரியடைதல்.

கவி.

முடிச்சனகர்கோனுலகை மூபெடையொடுவகையோட ணுகிடத்
தடப்புரியபெருவகையோடெசிழ் தாசரதியைத்தழுவிமுன்
படைத்தகனமாபரணமாடைதிசழ் பாவையர்களாதிபலவும்
கொடுத்தபினிராவணகுலத்தினை யறுத்தகதைகூறிவிடலும்.

நூ 88. ஸ்ரீராமர்ஜனகராஜனுக்கு அகஸ்தியமுனிவரால் மதுவனவா சச்சிறப்பையறிவித்தல்.



ஸ்ரீராமர்தமது பரிஜனங்கட்கு வெகுமானம் கொடுத்தனுப்புதல்.



இவ்வண்ணம் அகஸ்தியர் தமது பன்னகசாலையை யடைந்தகாலையில் கிரீடாதிபதியாகிய சனகமகாராஜன், ஸ்ரீராமபிரான் சீதாசமேதனாக அயோத்தியாநகரடைந்ததாகக் கேள்விப்பட்டு மகாசந்தோஷித்தனாய் மருமகனாகிய ஸ்ரீராமனைக் காணவேண்டி இராஜபரிவார சதுரங்கசேனைகளுடனே மிதிலா பட்டணத்தினின்று நீங்கிவந்து அயோத்தியா நகரத்திற் பிரவேசித்துச்சபாமண்டபத்துள்ளேவருமளவில், ஸ்ரீராமனெதிர்கொண்டுபோய் மாமனுருக்கு நமஸ்கார வந்தனஞ்செய்ய அவரும் அப்படி வணங்கிய ஸ்ரீராமனாகிய மருமகனைத் தாழ்ந்தெடுத்துத் தழுவிக்கொண்டுபசரித்துச் சபையிற்போயிருந்து, வசிஷ்டாதி முனிவர்களுக்கு நமஸ்காரஞ்செய்து, மற்றுள்ள பரிசனங்கட்கெல்லாம் பரிவுகூறி, தான் வரிசையாகக் கொண்டுவந்த இராசோபசாரஞ்செய்யுமேவற்பெண்களும் – நிதிக்குவியல்களும் - இரத்தினத் திரள்களும் – வஸ்திரபூஷணங்களும் – மற்றுமுள்ள சுகந்த பரிமளத்திரவிய வஸ்துக்களுங் கொடுத்து மனமகிழ்ந் திருந்தார். சீதாபிராட்டியாரெழுந்து தகப்பனுருக்கு வந்தனஞ்செய்தார்.

அப்படியிருக்குமளவில் அந்தச் சனகமகாராஜன் ஸ்ரீராமனைச் சீதாசமேதனாயிருக்க நோக்கி, என்னிருமைக்கும் பெருமைதரவந்த ஓ மருமானே! நீரிங்கிருந்து எனது புத்திரியோடு வனநோக்கிச் சென்றதுமுதல் தென்கடற்கரை சேர்ந்தவரையில் நடந்த சரித்திரங்களையும் – பின்னாக் கடல்நடுவிலுள்ள இலங்காத்வீபஞ் சென்று இராவணாதிகளைச் சங்கரித்த விதங்களையும் விவரித்துச் சொல்லவேணுமென்று கேட்டார். அதற்கு ஸ்ரீராமர் வசிஷ்டமகாமுனிவரைப் பார்த்து, ஓ முனீந்திரரே! இக்கேள்விக்கு அனுக்கிரகிக்குந்தன்மை தேவரீரதேயென்று வந்தனத்தோடு விண்ணப்பஞ் செய்தார். அதற்கவ்வசிஷ்ட மகாமுனிவ ரிசைந்து, ஸ்ரீராமன் பிதுர்வாக்கிய பரிபாலனஞ்செய்யவேண்டிச் சீதாலக்ஷ்மணருடனே அயோத்தியா பட்டணம்விட்டுப் புறப்பட்டுவனவாசம்போனதும், இராவணன் சீதையை அபகரித்ததும், வானரசேனைகளோடு சென்று இராவண சம்மாரஞ்செய்ததும், மீண்டு அயோத்தியாபுரியடைந்து மகுடாபிஷேகஞ் செய்துகொண்டதுமீறாயுள்ள சவிஸ்தாரங்களாகிய பதினான்கு வருஷத்தில் நடந்த சவிஸ்தாரங்களை யெல்லாஞ்சாங்கோபசாங்கமாகக்கூற; அதனைக்கேட்ட சனகமகாராஜன் வருந்தவேண்டிய விடங்களில் வருந்தியும், களிக்கவேண்டியவிடங்களில் களித்தும், சீதாபிராட்டியைப் பார்த்து அம்மாசீதா! நீயும் இத்துன்பங்களை அனுபவிக்கும்படியாகவும், நானும் இவைகளைக் கேட்கும்படியாகவும் நேரிட்டதே யென்று வருந்தி மீண்டுந் தெளிந்து இந்த ஸ்ரீராமமூர்த்தியின் லீலாவிளையாட்டேயன்றி வேறல்லவென்று சீதையைத்தேற்றி நீ என்றும் ஸ்ரீராமபிரானுடன் கலந்து வாழென்று ஆசீர்வாதஞ்செய்து அவளதுவந்தனத்தை யேற்று ஸ்ரீராமபிரானால் செலுத்திய ஆடையாபரணங்களை யெல்லாம் பெற்றுப் பிரியவசனங்கூறித் தனது மிதிலாநகரத்தையடைந்தனன்.

அனுமப் படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

பன்னிரண்டாவது,

# சீதைவனம்புகுபடலம்.

இப்படலத்தில் ஸ்ரீராம ரிராச்சிய பரிபாலனஞ் செய்திருக்குங்கால், அவர திராச்சியச்சிறப்பிருக்கும்வித மிவ்வகைத்தெனப்பரதர்கூறிமகிழ்விக்க, அக்காலிளவேனில் சம்பவித்தபோது ஸ்ரீராமர் பிராட்டியாரோடு சோலையிற்சென்று ஆனந்தித்திருக்கையில் சீதாபிராட்டிக்குக் கருப்பக்குறி தோற்றக்கண்டு களித்து உனக்கு எதன்மேல் பிரியமென்று கேட்க, முனிவராச்சிரமத்திலொரு நாளிருக்கவேண்டுமென்ன அப்படியே யாகட்டுமென்று சொல்லி, உலகமொழியை யறிந்து சொல்லப்பட்டவர்களால், பிராட்டியைப்பற்றி யுண்டாகும் நிந்தைமொழியை ஸ்ரீராமர் கேட்டு, அந்தக்ஷண மிலக்குமணரால்பிராட்டியை வனத்தில்விடுவிக்க, அப்பாலவ ளருந்துயரோடு செல்லுங்கால் வான்மீகமுனிவர் தமதாச்சிரமத்திற் கழைத்துச்சென்று சன்மானிக்க, இப்பா லிலக்குமணர் சுமந்திரரோடு மீண்டு ஸ்ரீராமர்பால் வந்தடைதல் சொல்லப்படுகின்றது.

### ஸ்ரீராமமூர்த்தி சீதாசகிதராக அரசுபுரியுங்காலையில் பரதாழ்வார் அரசினது சிறப்புரைத்தல்.

கவி.

திங்கறுகுணத்தோரேகச் சேடனின்சிரசின்பாரம்
நீங்கியதெனத்தாங்போற்றி நெடுங்கடலவனிபாரம்
தாங்கியவீரனுச்சிச் சந்தியினியமந்தான்செய்
தாங்குயிர்த்தம்பிமாரோ டரசுசெய்திருந்தகாலை.

இவ்வண்ணம் தம்மைக்காணவந்த அகஸ்தியராதி மகாரிஷிகளும், சனக மகாராஜனும் தங்கள்தங்களிடமடைந்த பிறகு ஆதிசேடனது ஆயிரந்தலைகளாலும் தாங்கப்பட்ட பூபாரத்தை ஒருதோளால் தாங்கி இராமபிரான் நித்தியகியமாதி தவறாது தமதுயிரையொத்த தம்பிமார்களோடு அரசுபுரிகின்றனர். அவ்வண்ணம் அரசுபுரியும்போது உலகமெங்கும் யாதொரு குறைவிலாது சர்வஜீவாத்மாக்களும் சந்தோஷமாயிருக்கிற செய்தியைப் பரதர்கண்டாச்சரிய மடைந்து ஸ்ரீராமபிரானுக்குத் தெண்டனிட்டுச் சொல்லுகின்றார். சுவாமி! எங்களையாளவந்த பெருமானே! தாம்திருமுடிசூடி உலோக பரிபாலனஞ் செய்யச் சிம்மாதனமேறின நாள்முதல் நாள்துவரையிலும் இவ்வுலகிலுள்ள சகல சீவன்களுக்கும் ஆயுதங்களால் மரணமில்லை. சிங்கங்களால் யானைக்குச் சத்துருவென்னும் பயமில்லை. புலியானது பசுவையும் மானையும் சிநேகங்கொள்ளும். அக்கினியில் மாள்வோரில்லை. பிள்ளைகளின் மரணங்களைத் தாய்தந்தையர்கள் கண்டதில்லை. நோயினால் பிடிக்கப்பட்டவர்களில்லை. வயோதிகருக்கு எமபயமுமில்லை. ஸ்திரீகள் புருஷனை யழிப்பதில்லை. காற்றானது அதிகக்குறைவு இல்லாமல் மிதமாகவீச யாவரையும் சந்

№. 89. ஸ்ரீராமர் புஷ்பகவிமானம் விடைபெற்றேகல். ஸ்ரீராமர் சீதைக்குப்பிருந்தாவனச்சிறப்பறிவித்தல்.



உத்தரகாண்டம். சீதைவனம் — புகுபடலம்.

தோஷப்படுத்தும். ஸ்திரீகளெல்லாம் ஆண்பிள்ளையைப் பெறுவார்கள். ஈதன்றி உலகுள்ள அரசர்களும் மற்றவர்களும் ஸ்திரீகளும் இராமப்பிரபுவே எந்நாளும் அரசுபுரிய வேண்டுமென்கிறார்களென்று இவ்விதமாகிய வார்த்தைகளைப் பரதரானவர் சொல்லினார். இதைக் கேட்ட பகவான் சந்தோஷித்திருந்தனர். இப்படி சகல வுயிர்களிடத்திலு முன்னினு மதிகமான காருண்யத்தைச் செலுத்தி அரசாளுங்காலத்தில் பங்குனிமாதம்பிறந்து இளவேனிற் காலந்தோன்றியது.

## ஸ்ரீராமர் இளவேனிலைக்கழிக்க சீதாபிராட்டியாரோடு உத்தியானவனஞ்சென்று களிகூர்ந்திருத்தல்.

கவி.

அண்ணலுமமிழ்திற் பிறந்தவாயிழையு மணிகொள்பூம்பொழிலிடை யடைந்தார்
தண்ணறும்புன்னை சண்பகஞ்செருந்தி சாதிபூஞ்சண்பகந்தாழை
எண்ணருங்குருந்து பாடலம்திகெழின்மர மிடைநெருங்கியதை
விண்ணவர்கோமான் கற்பகச்சோலை மேதினியிழிந்ததொத்துளதை.

ஸ்ரீராமபிரானும் தேவாமிர்தத்திற் பிறந்ததைப்போன்ற சகல நற்குணங்களையுமுடைய சீதாபிராட்டியாரும் இளவேனிற் பருவத்தைக் கழிக்கும் பொருட்டு குளிர்ச்சிபொருந்திய புன்னை — சண்பகம் - செருந்தி - தேக்கு - தெங்கு - குருந்து — பாதிரி இவைமுதலிய மரங்கள்நிறைந்து தேவலோகத்தில் இருக்கும் கற்பகச்சோலைபூலோகத்தில் இறங்கியிருப்பதைப்போலுந் தன்மைவாய்ந்த ஒரு உத்தியானவனத்தை அடைந்து, அங்குள்ளவிநோதங்களையெல்லாம் தமதுபத்தினியாகிய வைதேகிக்குக் காண்பிப்பதாயினார்.

கவி.

மென்னடையன்ன நின்னடைக்கஞ்சி வெளியிடைநின்றிடவெள்கித்
துன்னிடைமலர்பூஞ் சோலையின்மறையத் தோகைநின் சாயலுக்குடைந்து
தன்னடைகெட்டே யினியுயிர்தாங்கோ மெனத்தழன்முழுகுவபோல
மின்னிடைப்பூணாய் விரிமலரசோகின் மேற்சென்றுவீழ்வன காணாய்.

உள்ளபோதினிதுண் டொருதயோதலோ டுறவுவிட்டுறமிடந்தேடு
மொள்ளியரல்லோ ருறவுபோலொடுநா ளுயர்சருமலர்மதுவுண்டு
மெள்ளவம்மரம்பூ மாறிடவிட்டு வேறொருபூமரந்தேடிக்
கள்ளவிழ் கோதைகமழ்குழலாளே களிவண்டுபோவன காணாய்.

ஐங்கணையானைவிட்ட திவிரூப னருநிதியுடையனேவலுக்கு
மங்கைமார்மனம்போல் வாழைதன்மருங்கு வந்துறமரகதமாகிப்
பொங்கியசெருந்திப் பூவுறப்பொன்னாய் நீலமாய்ப்பூவைவீபொருந்தப்
பங்கயமடுப்பச்செம்மணியாகும் பளிக்கறை பைந்தொடியாராய்.

பொருகயனயனப் புரிகுழலாளே பொய்த்தவேடத்தின்மறைந்து
வீரிசடலுலகில் வேண்டியவண்ணம் வெவ்வினைசெய்பவரென்னத்
திரிதரும்பூனைத் தப்பறக்கொத்தித் தின்றிடுமுபாயமீதென்னிக்
கருதியகொக்கு மெய்சலியாது கண்முகிழ்த்திருப்பன காணாய்.

அடிமலர்வாழை குறங்ககலல்கு லரவுமின்னிடையணியமைத்தோ
ளிடைநிரைதரளப் பவளவாய்வேற்க ணெழிலுதல்விரைசுமழோதி
வடிவினிற்செய்ய மங்கையாமன்ன வண்டுகண்மொய்த்தசெங்கமலக்
கடிவினைக்கொல்ல லுலைக்கரிமூட்டு கனலினைநிகர்வ துகானும்.

இப்படி யங்குள்ள ஒவ்வொரு விநோதத்தையும் வைதேகிக்குக் காண்பித்தபிறகு பங்கயத்தடாகஞ் சூழ்ந்தவோர்பளிக்குமண்டபத்தில் மங்கையரெல்லா மேத்தவும் பூர்வம் திருப்பாற்கடல் மத்தியிற் சேஷசயனத்தின்கண் இலக்குமிதேவியோடும் வீற்றிருந்தபடி அவ்வைதேகியோடும் வீற்றிருந்து, தெய்வமங்கையர்களுங் கண்டு நாணும்படியாகச் சேயிழையார்கள் செய்கின்ற பரதநாட்டியத்தையும் பாணர்கள்பாடுஞ் சங்கீதத்தையுங் கண்டுங் கேட்டுங் களித்துக்கொண்டாடி, அவ்வவர்கட்கும் அருமையாயுள்ள நிதிகளையும் ஆடையாபரணங்களையுங் கொடுத்து மகிழ்வித்தனுப்பி, சிலபோது அப்பொழிலின்கணுள்ள பலவகை மலர்களை நன்னுதலாரோடு சென்று கொய்தும் — புனல்விளையாடல் புரிந்தும் — அறுசுவையோடுங்கூடிய திருவமுதுண்டும் — இப்படி நாடோறும் பலசுகபோகங்களை யனுபவித்துக்கொண் டிருக்கின்றார்.

சீதாதேவியாருடைய கர்ப்பக்குறியை ஸ்ரீராமர்பார்த்து உனக்கு யாதுவிருப்பமென வவர்கூறல்.

கவி.

விழிபெரும்பச்சை பூத்தனமேனி வெளுத்ததுமெல்லியன் முன்கை
தழுவியசரிகள் சரிந்தனகர்ப்பந் தரித்ததுசான்றவர்க் கெல்லாம்
மொழிவனபோல முலைகள்பால்பாய வவைமுகங்கறுத்தன வாக
எழுதருஞ்சீதைக் கிவ்வகையாய விலக்கணம்பலவு முண்டாக.

இவ்வண்ணம் அச்சோலையிற் சகல வலங்காரங்களோடு ஆடல்பாடல் முதலிய வேடிக்கைகளாகப் பொழுதுகழித்துக்கொண் டிருக்குநாளில், சீதாபிராட்டியாருக்கு இரண்டுகண்களும் பசலைநிறமடைந்து, திருமேனிவெளுத்து, முன்கையிற்பொருந்திய வளையல்கள்சரிந்து கர்ப்பங்கொண்டதை யாவருக்குமறிவிக்குந்தன்மைபோல் இருதனங்களும் பால்பெருகும்படிமுலைக்காம்புகள் கருநிறமடைய இவ்வகையாகக் கருப்பக்குறிதோன்றிற்று. அதைக்கண்ட ஸ்ரீராமரானவர் அக்கருப்பக்குறியைப்பார்த்து, ஓ சனகன்பெற்ற இரத்தினமே! நீ வயிறுவாய்த்திருப்பது எனக்குச் சாலக் களிப்பைத்தருகின்றது. இப்போது யாதுவிரும்புகின்றனை? என்று வினவுகையில் அந்தச் சானகிப்பிராட்டி சிறிது புன்னகைகொண்டு, சுவாமி! தயாதாக்ஷிண்ய தயிரிய சவுரியாதி சகல கல்யாணகுண பூரணரான பர்த்தாவைப்பெற்றிருக்கிற அடியாளுக்கு விரும்பத்தக்க தேதுமில்லை. ஆயினும் சுவாமியே இங்ஙன நியமிப்பதனால் ஒன்றுவேண்டுகின்றேன். அஃதென்னவெனில், இன்னொருதரம் கங்கைக்கரையிலுள்ள முனிவர்களின் ஆச்சிரமங்களிற் சென்று அவர்கள் திருவடிக்குக்குற்றேவல்செய்து ஒரு நாளவ்விடத்திருக்க வேண்டுவதுதானென்று விண்ணப்பஞ்செய்யவும் அதற்கந்த ராஜசிகாமணியானவர் அப்படியே யாகட்



டுமென்றருளிச் சிலநாள்சென்றபின் பொருநாளிரவில் அயோத்தியா பட்டணத்திலிருக்கும் வண்ணான் தன்னுடைய பெண்டாட்டியைக்கோபிக்கும்பொழு தவளைப்பார்த்து, பகைவனான இராட்சசன் கொண்டுபோய் வைத்திருந்த தன்னுடைய் பெண்டாட்டியைப் பின்னுஞ் சேர்த்துக்கொண்டிருக்கிற இராமனைப்போல் மானமில்லாதவனென் றென்னை நினைத்தாயோவென்று தண்டித்தான். அதைப் புரசோதனைக்குப்போன சாரணர் கேட்டுவந்து சொன்ன மாத்திரத்திலே ஸ்ரீராமஸ்சுவாமியானவர் மனக்கலக்க முண்டாகி, நித்திரையில்லாமல் சூரியோதயத்துக்குமுன் னெழுந்து ஸ்நானமுதலாகிய நித்திய கர்மமானுஷ்டான விதிகளை நிறைவேற்றிக்கொண்டு, மந்திரிகள் — சாமந்தர் — சேனைபதிகள் — பௌரோகிதர் — அன்னியதேச ராஜாக்கள் இவர்கள் முதலானவர்களுடனே வந்து கொலுக்கூடத்தி லெழுந்தருளியிருந்தார். அந்தச்சபையில் அகஸ்யக்காரர்களாகிய விஜயபத்திரன் — தந்தவக்திரன் — சுமாதகன்—சுராஞ்சி — இவர்கள் முதலானோர்கள் வேடிக்கைக் கதைகளும் பரிகாசக்கதைகளுமுரைக்க, அதுகேட்டிருந்த ஸ்ரீராமரவர்களைப்பார்த்து, நல்லது: இதெல்லாமிருக்கட்டும். இப்பட்டணத்திலாவதுநாட்டுப்புறங்களிலாவதுஜனங்கள் என்னைப்பற்றியும், இலட்சுமணன் — பரதன் — சத்துருக்னன் — சீதை—கைகேசி — இவர்களைப்பற்றியும், என்னசொல்லிக் கொள்ளுகிறார்கள்? நூதனமாயோரரசன்வந்தபோது அவனைப்பற்றிச் சனங்களுக்குள் ஒருபேச்சு நிகழ்வதுண்டு, முக்கியமாயதை அரசனறிந்து காரியாகாரியங்களை நிச்சயிக்கவேண்டும். ஆனதுபற்றி நீங்கள் காதிற்கேட்டவைகளைச் சொல்லுங்களென்றார். அவர்களுள் விஜயபத்திரனென்போன் கைகூப்பிக்கொண்டு கூறலாயினான்.

சுவாமி! தேவரீர் துரைத்தனச்சிறையும், சுகுணங்களின் சிறப்பையும், பராக்கிரமப் பெருமையையும்பற்றி இயாவருமொக்கவியந்து புகழ்கின்றனர். இவ்வாறு தேவரீர் சரித்திரத்தை யெல்லா மேலாகப் பேசிவருகையில் அமுதத்தில் ஒருசொட்டு விஷங்கலந்ததுபோல் இடையிலொன்று வழங்குகின்றனர்.

ஸ்ரீராமபிரான் நகரத்துஜனங்கள் தன்னைப்பற்றிக் கூறும்வாக்கியத்தைக் கேள்விப்பட்டு தம்பிமாருடன்கலத்தல்.

கவி.

மன்னவனிராமன் மானபங்கத்தைமனதினில்வைத்திலன் வானோர்க்
கின்னல்செய்தொழுகு மிராவணன்கொடுபோந் திடைவிடாதீரறுதிங்கள்
தன்னெடுநகரி தனிற்சிறைவைத்த தையலைத்தாரமாய்க் கொண்டு
பின்னையும்வாழ்க்கை பேரிழுக்கென்று பேசுவார் பெருநிலத்துள்ளோர்.

சுவாமி! தேவரீர் உண்மைகூறும்படி நியமித்திருப்பதனால் அதையும் விண்ணப்பஞ் செய்கின்றேன் சகல சற்குணங்களுநிறைந்த நம்மிராஜா ஓராண்டளவும் இராக்கதன் வசத்திலிருந்த தம்மில்லாளை எங்ஙனம்வைத்துக்கொண்டு குலாவுகின்றார்? அரசன்செல்வழி குடியுஞ் செல்லுமாதலின் இனிநாமு

நம்மில்லாட்களைப் பிறரிடஞ் சென்றிருந்தாலும் வெறுக்காமல் வைத்துக் கொள்ளவேண்டுமேதெயெனப் பேசிக்கொள்ளுகிறார்களென்றான். இவ்வாறவ ன் சொல்லியதைக் கேட்டமாத்திரத்தில் சுவாமி கிஞ்சித்து விசனமடைந்தவ ர்போலே சபையிலுள்ளோரை நோக்கி, இதைப்பற்றி யென்னசொல்லுகிறீர் களென்றார். அவர்களு முனப்பதைப்புடன் கைகூப்பிவணங்கி; ஆம்: அப்படி த்தான் சொல்லுகிறார்கள். சாதாரண ஜனங்கள் உட்காரியமறியமாட்டார்க ள். ஆதலின் பேதுக்குத்தோன்றியவாறு வழங்குகின்றனரென்றார்கள்.

பின்பு ரகுகுலோத்தமர் யாவர்க்கும் விடைகொடுத்தனுப்பித் தம்பிமா ரை யழைத்துவரக் கட்டளையிட்டார். அப்படியே வாசற்காப்போர் சென்று இக்கட்டளையை அறிவிக்கத் தம்பிமார் மூவரும் தமையனார் சன்னிதிக்குவந் து வணங்கித் தெண்டனிட்டு, அவர் திருமுகமண்டலம் வாட்டமாயிருப்பது கண்டு கலங்கினின்றார்கள். அப்போதவர் அநுசரை நோக்கி, ஓ என்னுயிர்க்கு யிராகிய சகோதரர்களே! இப்போது விகழு நாட்டுச்செய்தியைக் கேட்டீர் களா? நம்மைப் பிரசைகள் பிறவாற்றுற்புகழ்ந்தும் இராவணனிடத்திருந்த சீதையைக் கொண்டுவந்ததைப்பற்றி இகழ்கின்றனராம். எனக்குச் சானகியி ன்கற்புநிலை தெரியாதன்று. அக்கினியின்மூழ்கி அத்தேவனாற் புகழ்ந்து கொ டுக்கப்பட்டாள். என்னிடத்தி லிடையறாதஅன்பும், மற்றும் பெண்மைக்குரி ய நற்குணங்களும் வாய்ந்தவள்தான். ஆகினு மென்னசெய்யலாம்? உலைவா யைமூடலாம் ஊர்வாயை மூடலாமோ? நாம் கீர்த்திக்காளாகவேண்டுமோ? அபகீர்த்திக் காளாகவேண்டுமோ? அபகீர்த்திக்காளாவதினும் இறப்பதோ டு நரகம்புகுவதுமேமேலாம். ஆதலால் - ஓ என்னுயிர்த் தோழரான தம்பிமா ரே! அவளைக்காட்டுக்கனுப்ப விரும்புகிறேன். நீங்கள் நன்றாய்க்கற்றவரும் பு த்திமான்களுமாதலின் யான்புகன்றதின்சார மறிவீர்கள். இப்போ தென்கரு த்தை நீவிர்யாரும் தடுக்கவொண்ணாது. எனக்கோ அந்தப் பெண்கள்நாயகத் தை யிப்படிச்செய்வதினும் வேறுதாக்கவேண்டுமோ என்னசெய்வேன்? ஓ லட்சுமணா! அவள்மறுபடி முனிவராச்சிரமத்தில் வாசஞ்செய்ய என்னைக் கேட்டிருக்கின்றாள். அந்நிமித்தத்தால் நீ நாளையகாலையில் தேர்மேலேற்றிக் கொண்டுபோய் நம்முடையநாட்டின் கடையெல்லையான கங்கையின் அக்கரை யில் வான்மீக ராச்சிரமத்தண்டை விட்டுவர வேண்டுமென்றார்.

## ஸ்ரீராமபிரானுத்தரவுபடி சீதாபிராட்டியை இரதமேற்றிக் கானகஞ்செல்லுதல்.

கவி.

மன்னவன்பெரியோர் மலர்ப்பதந்தன்னை வணங்கிடக்காட்டிடைவுரைத்தான்
வன்னனுமவர்போ யுரைத்தனுமெழுந்த வுவகையாலின்னுயிர் தளிர்த்தே
மின்னெளியார முதலவாபரணம் விளங்குசீர்நவமணி யாடை
இன்னவைபிறவுந் தெரிந்துகொண்டினையோ னியம்பிடவேறினு ளிரதம்.

ஸ்ரீராமபிரான் இவ்வாறுரைத்ததைக் கேட்ட இளையபெருமாள் துக்கத் தின்மூழ்கி, ஒன்றுந்தோன்றாமல் சற்றுநேரம் திகைத்துநின்று, அவராணையை

நெ. 90. ஸ்ரீராமருத்தரவால் இலக்குமணர் சீதையைக் கங்கைக்கரையில்விடுதல்.



சீதாபிராட்டி வாள்மீகிகளால் அவ்வாச்சிரமத்திருத்தல்.

மறுக்க மாட்டாமையால் தலைகுனிந்து தம்மாளிகைக்கேகி, ஐயோ ! இவ்வி
ரவுவிடியர் திருக்குமாரனால் யான்பழிக்காளாகாமல் உய்வேனென்னுஞ் சிந்தை
யாற்றுயி லொழிந்திருந்து,பின்னர்விடிந்ததும்சுமந்திரரை அழைத்துக்கொண்டு
பிராட்டி திருமாளிகைக்குப்போய்தான்வந்தசெய்தியைப்பாங்கிமார்களாற்றெ
ரிவிக்க,பிராட்டியார் உள்ளழைக்கஇலட்சுமணர் அரண்மனையுட்சென்றுஅவள
து திருவடிதொழுது, தாயே ! நீர்மீட்டும் கங்கைக்கரையிலுள்ள முனிவராச்
சிரமங்களைக்கண்டு ஸேவிக்க விருப்பங்கொண்டு சுவாமி சன்னிதியில் விண்
ணப்பஞ் செய்தீராம். அதுநிமித்தம் அவ்விடத்துக்கு அழைத்துக்கொண்டு
போம்படி அடியேனுக்கு நியமனமாயிற்று. இரதமும் வாசலில்வந்திருக்கின்
றது. தேவரீர் எழுந்தருளலாம் என்றார். அதுகேட்ட சீதாதேவி குதூகலி
த்துவேண்டு மாடையாபரணங்களை யெடுத்துக்கொண்டு வந்து திருத்தேர்மே
லேறினள். இப்படியிருவரு மிரதமேறிச்செல்லுகையில் சீதாதேவி வழியிற்
சில அபசகுனங்களைக் கண்டு அச்சங்கொண்டு மைத்துனற்கு அறிவிக்க, அவ
ரதுகேட்டுஇதெல்லாநன்மையே யன்றிதீமையல்லவென்றுமுகத்திற்சந்தோஷ
முள்ளவர்போலக்காட்டிப்பேசிக்கொண்டேகோமதியென்னு நதிக்கரையிலிற
ங்கி இரவைநீத்து, காலையில் மீளவும்புறப்பட்டு, கங்காநதிக்கரைசேர்ந்து பிரா
ட்டியை இறக்கினவுடனே இளையவர்கோவென்று கதறி யழுதார்.

அதுகண்ட அத்தேவியார்கலங்கி, இஃதென்ன அகாரணமா யழுகின்றீ
ர் ? பெருமாளைப் பிரிந்த நிமித்தம் அழுகின்றீரோ ? வேண்டாம்: ஓரிரண்டு
நாளிலேயே நான் திரும்பிவிடுகின்றேன். எனக்கும் அவருடைய திருமுகம
ண்டலத்தையும், திருக்கண் மலர்களையும், திருமார்பையும், திருத்தோள்களை
யும், சேவிப்பதற்கு மனம்பதைக்கின்றது. துரிதமாய்க் கங்கையைத் தாண்
டுவோம் என்றருளிச்செய்தார். சுமித்திராதனயரும் ஒன்றும் பேசாமற் சும
ந்திரரை இங்கேயே யிருமென்று கட்டளையிட்டு, ஓர் படவையமைப்பித்துச்
சானகியுந்தாமு மதிலேறி ஆற்றைக்கடந்துஅக்கரையில் வான்மிகமுனிவ ரா
சசிரமத்திற்கருகி லிறங்கி, கண்ணுங்கண்ணீருமாய்க் கைகூப்பிநின்று பிரா
ட்டியைநோக்கி, அம்மா ! ஒருவார்த்தை சொல்ல என்மனது பதைக்கின்றது.
அடியேன்மேல் அனுக்கிரகம் வைத்து அதைத்திருச்செவி சார்த்தவேண்டு
மென்று சொல்லுவார்.

## இலட்சுமணர் சீதாபிராட்டியைக் கங்காநதியின் றென்கரையில் விட்டு இராமபிரான் சொல்லிய வார்த்தையைச் சொல்லி வருந்தல்.

கவி.

உத்தமகுணத்தோய்கேட்டி யுலகமாதாவேகேட்டி
சுத்தனுஞ்சனகன்வேள்வி தோன்றியதூயோய்கேட்டி
வித்தகனிராமனேவி விட்டகாரியங்களெல்லாம்
தத்துவமானவண்ணஞ் சாற்றுவனென்றுசாற்றும்.

மேன்பாடுபெற்ற சர்வக்ஞனாகிய ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியானவர் நம்
மையிக் கானகத்திற் கனுப்பிய காரியங்களை உண்மையாகச் சொல்லுகின்

றேன் உத்தமகுணத்தை யுடையவளே! லோகமாதாவே! சனகமகாராஜனுடைய யாகத்திற்பிறந்த பரிசுத்தமானவளே கேட்பாயாகவென்று சொல்லவாரம்பித்தனர். அம்மா! அடியேனைத் தம்பிமார்களோ டழைத்து, வாட்டமிக்கமுகத்தையும், கொடியமான்மெனும் வேலூன்றிய மார்பையும், மிக்க பெருமூச்சையும், நினைத்தகாரியத்தைச் சாதித்தலிலேயே நோக்கமிக்கமனத்தையுமுடையவராகி என்னைப் பார்த்து என்னசொன்னாரெனில், ஒவ்வொரு காரியங்களையும் உலகத்தாருக்குப் பயந்தே செய்யவேண்டும், உலகத்தார் உள்ளதென்றால் உண்டு; இல்லையென்றாலில்லை: உலகத்தார் இல்லாத ஓர் பேருரை உள்ளதென் றுரைக்கின் அதை வேறொருவன் உள்ளபடியில்லையென்று சொன்னால் அவன்தான் உலகத்திற்கு விரோதியாவன் அவனுக்கு யாதொரு பயனும் கிடைக்கமாட்டா. ஆதலால், உன்மதனியாகிய சானகியை இராக்ஷதப்பாதகனாகிய இராவணன் கொண்டுபோய் ஒரு வருஷம் சிறைவைத்திருக்க நாம் சென்று இராவண சம்மாரஞ்செய்து சீதையை மீட்டு அக்கினிதேவன் சாக்ஷிசொல்ல நாம் வந்திருக்க, அதை உலகத்தாரறியாது இராவணன் சீதையை ஒருவருஷம் சிறைவைத்திருந்தான். அவள்மேல் வைத்த ஆசையினால் மானமில்லாது மீட்டுக்கொண்டு வந்தானே இதைவிட ராமன் சாகக்கூடாதா? என்று சொல்லுகிறார்கள். அவள் எப்படியாயினும் அசுத்தமுள்ளவளே சுத்தமுள்ளவளல்ல ஆதலால் நாம் அவளை என்மனதினின்றும் நிவர்த்திசெய்துவிட்டேன். நீ இரதத்தின்மேல் சீதையை ஏற்றிக்கொண்டு வனஞ்சென்று நமது தந்தையின் உயிர்த்தோழராகிய வான்மீக முனிவரது ஆசிரமத்தில்விட்டு வந்துவிடென்று சொன்னார். ஆதலால் அவர் வார்த்தையை மறுக்கவஞ்சி கொண்டுவந்து விட்டேனென்று முகத்திலறைந்துகொண்டு கோவென்றழுதார்.

அதைக்கேட்ட வைதேகியானவள் அக்கினியிற் காய்ந்த நாராசத்தைக் காதிற் சொருகியதுபோற் கேட்டு பூமியில் சோர்ந்து, விழுந்து புரண்டு துயரம்பொறாது மூர்ச்சித்தனள். பிறகு உயிர்ப்புவந்தவள்போ லெழுந்திருப்பள். கோவென்றலறுவள். வயிற்றைப் பிசைவள். துக்கசாகரத்தில் மூழ்குவள். கண்ணீர் ஆறாய்ப்பெருகுவள் இவ்விதமாகிய கோலத்தோடு இலக்குமணரை நோக்கித் தழுதழுத்த சொற்களால் புலம்பத்தொடங்கினாள்.

## சீதாதேவி புலம்பல்.

### கலி.

அன்னேயோவையாவோ வாருயிர்த்தோழிமீர்காள்
தன்னேரிலாதவென்றித் தசரதராமன்சொன்ன
வின்னேதவிச்செயலைக் கேட்டபோதென்படுநீ
ரென்னேரிவ்வுலகத்தில் யானேவிங்கிளைபவேன்.

பையார்வெம்பணத்துலகிற் பழியாலேபழிமறைத்து
நெய்யாலேநெருப்பவிக்க நீணிலத்திற் கண்டறியேன்



கையார்வெஞ்சிலைதரித்த காகுத்தனிடைக்கண்டே
னுய்யாரென்மாமிமா ரிவ்வுரைதஞ்செவியுறவே.

கன்னெஞ்சாயென்னைக் காட்டில்விடச் சொன்னவரோ
வன்னெஞ்சாராயதனுக் கிசைந்துவிட வந்தீரோ
நன்னெஞ்சம் விழிக்கணிந்தநங்கைமார் நகைசெய்ய
வின்னஞ்சா காதிருந்த யானோநெஞ் சார்வலியார்.

பண்பிறந்த சொன்மடவார் பழித்தென்னை நகைப்பர்களோ
வெண்பிறந்தவன்னெஞ்ச னிராகவனென் றியம்புவரோ
மண்பிறந்த மறிகடல்சூ ழுலகத்தில் வாழ்பவரிற்
பெண்பிறந்தார் யான்பட்ட பெருந்துயரம் பட்டாரார்.

கனிமனத்துக் காகுத்தன் கடலுலகிற் பழிக்கஞ்சித்
தனியொருத்தி யான்கதறத் தனிக்காட்டில் விடுவித்தான்
பனியகற்றுமாதித்தன் பயந்தெடுத்துப் பழிப்பற்ற
மனுகுலத்திற் பிறந்தார்கட் கிவையோதான் மனுநெறியே.

கைகேசிமனந்திரியக் கற்பித்த கூனியைப்போல்
மையார்கண் மடவாரோ மைந்தரோ மண்ணுலகி
லையாவென் காதலனை யாரோவிக் காரியத்தைச்
செய்வாயென் றிப்பொழுது சிந்தையுறக் கற்பித்தார்.

என்றுபிரலாபித்த சீதாபிராட்டியார் இலக்ஷ்மணரை நோக்கி, ஐயா மைத்துனரே! பகவான் துக்கத்துக்கென்றே என்னைப் படைத்தான். முற்பிறப்பில் யான் யாரைப் பெண்டிரோடு சேரவொட்டாமற் பிரித்தேனோ? என்னபாவஞ் செய்தேனோ? இப்போதிப்படி எனக்குநேர்ந்தது. முன் ஸ்ரீரகுநந்தனர் திருவடியைப் பற்றிக்கொண்டு கானகத்தில் வதிந்தேன். இப்போது என்னசெய்வேன்? இயாருக்கு இதைச்சொல்வேன்? இக்கங்கையில்விழுந்து என்னுயிரைத் துறக்கலாமென்றால் அது என்பர்த்தாவின் குலத்திற்கு இழிவாதலா லங்ஙனஞ்செய்யவுந் துணிகின்றிலேன். ஆகிலும் இனி என்ன சம்பவிக்கவேண்டுவதோ அநுபவிக்கவேண்டும். அவர்நியமனத்தைநீர் எப்போதும் கடக்கவேண்டாம். என்பேச்சாய் அவர்ஸந்நிதியில் அஞ்சலிபந்தத்தோடு விநயமாயொன் றுரைக்கவேண்டும். அதாவது - நெடுநாள் அடியாளோடுபழகி எனதுமனதையும் ஒழுக்கத்தையும் உணர்ந்திருந்தும் அபகீர்த்திக்கஞ்சி அடியாளைக் கானகத்தில்விடுத்ததற்கு மனநோகின்றிலேன். இதுவுந் தேவரீர் குணப்பெருமையென்றே களியாநின்றேன். கற்புள்ள பெண்களுக்குக் கணவர் திருவுள்ளப்படி நடப்பதன்றோ தருமம்? ஆகிலும் அடியாள்மீது பண்டுவைத்திருந்த அன்பையாவது நினைக்கவேண்டும். கருவுற்றிருக்கும் அடியாள் கதி எங்ஙனமாயினுமாகுக. தேவரீர் தருமநெறிதவறாமல் அரசாட்சி செலுத்தி வரவேண்டும். என்றிப்படி அவருக்கு விண்ணப்பஞ்செய்து என் மாமிமாருக்கும் என்வந்தனஞ் சொல்லக்கடவீரென்றாள். இளையபெருமாளும் அப்படி

யே செய்கிறேனென்று அவனை வலம்வந்து தெண்டனிட்டு ஒருவாறு சீதாபிராட்டியின் கவலையை யகற்றுவாராயினர்.

### சீதாபிராட்டியின் கவலையை யொழிக்க ஒருவாறு தேற்றுதல்.

கவி.

உலகுக்குநாயகனா யோராழி தனைநடத்தி
மலைபொக்குமதகளிற்றின் மதிக்குடைக்கீழ்வாழ்ந்தநள
னிலைகெட்டுநேரிழையை நெடுங்கானத் திடைவிட்டு
மலையொத்தவினைப்பயனான் மடையனாய் வருந்தினனே.

தன்னேரிலாதவரிச் சந்திரன்றன் மைந்தனையு
மின்னேரிலாதவிடை மெல்லியலையும்விட்டு
முன்னேசெய்விதியாலே முடைப்பறையற் காளாகி
யென்னேதான் சுடுகாடுகாத்து நிலையிருந்தான்.

அம்மா! இவ்வுலகமெங்கும் ஏகசக்ரேஸ்வரனா யரசாண்ட சந்திரவட்டக் குடையையுடைய நளமகாராஜன் தன்னிலையழிந்து ஆரணியப்பிரவேசமாய் தன்பத்தினியாகிய தமயந்தியை வனத்தில்விட்டு தான் இவ்வயோத்தியாபுரியிலடைந்து மடைத்தொழிலாளனாய் வருந்தியகதை நீ கேட்டறிந்திலீரோ? எமது முன்னோர்களில் திரிசங்குமகாராஜன் புத்திரனாகிய அரிச்சந்திரமகாராஜன் தனதுபுத்திரனாகிய தேவதாசனையும், மனைவியாகிய சந்திரமதியையும் பிராமணனுக் கடிமையாக்கி, தான்பறையனுக் கடிமையாகி மயானத்தைக் காத்து எவ்வளவு வருத்தங்களை அனுபவித்தான் இச்சங்கதியெல்லா நீயறிந்திலீரோ? நீரோ அவர்களெல்லாம் தொழுந்தெய்வமாவீர் நீரேன் விருதாவாய் வருந்தவேண்டும். வரும்வினைகளை அனுபவித்துத்தான் தீரவேண்டும். நீர் செய்த புண்ணிய பலத்தால் காகுத்தனை நாயகனாகவடைந்து, கிஞ்சித் பாவத்தால் பிரிந்தீர் இனியென்னசெய்வது. நீர் தவஞ்செய்ய வேண்டியதன்றிவேறென்று என்னசெய்யப் போகின்றீர். மகாரிஷிகளுடைய திருவடிகளைவணங்கி அவர்கள் சொல்லும் விதிப்படி உபவாசமாயிருந்து உனது பர்த்தாவை எப்போதும் உள்ளத்திருத்தித் தவஞ்செய்யவேண்டுமென்று இலட்சுமணர்சொல்ல வதைக்கேட்ட பிராட்டியார் ஐயா கொழுந்தனாரே! நான் ரிஷீஸ்வரர்களுடைய திருவடிக்குத்தொண்டு செய்யச் செல்வேனேயாகில் அவர்கள் உன்னாயகனைப் பிரிந்த காரணம் யாது சொல்லென்று கேட்கின் யாது பதில் மொழிவேன். சரிசரி: இஃது என்னுடைய பிழையன்றி உலகத்தார்மேற் பிழையின்று. நான் இருதுவடைந்து நான்கு மாதமாயிற்று. நாயகரோ என்னைப்பிரித்தனர் உலகம் ஏதாய் சொல்லுமோ கர்ப்பக்குறிவாய்ந்த எனதுடம்பை நன்றாயுற்றுப்பார்த்துக் கொள்ளுமென்று சொல்லியதைக் கேட்டஇலட்சுமணர், இருகண்களினின்றுந் தாரைதாரையாய்நீர்சொரிய மனமயங்கி வாய்விட்டுக் கதறி மனம்வாட்டமுற்று தவிக்குந்தனி! என் தமையனாராகிய உன்பதிவான் உன்னைக் கைப்பிடித்தநாள்முதல் நாளதுவரை



யிலும் அடியேன் உனதுபாதத்தை நோக்கி வார்த்தை சொன்னதேயன்றி திருமேனியின் சொரூபசுந்தரத்தைக் கண்டறியேனே இப்பொழுதுதான் யான் காணவல்லேனோவென்று அவளது திருவடிகளைவணங்கி நான்போய் வருகிறேனென்று சொல்லிவிட்டு அங்கிருந்து திரும்பி அக்கங்கை நதியைக்கடந்து பிராட்டியைத் திரும்பித் திரும்பிப்பார்த்துச்சென்று சுமந்திரரோடு இரதத்தை நடத்திக்கொண்டு அயோத்திமாநகரை நோக்கிப்போயினர். அங்கு சீதாபிராட்டியார் இலட்சுமணர் போவதைப் பார்த்து ஒருகால் மீண்டுவருவாரோ வென்கேமோவென்று தேர்மறைகிறவரையில் வெகுநேரம் பார்த்திருந்தனள். பிறகுஐஐயோ! தேரோமறைந்துவிட்டது இளையவரோ என்னைக் கைவிட்டுப் போய்விட்டார், நானோ தனியாய் நின்றுவிட்டேன். இனியென்ன செய்வதென்று கதறியழத் தொடங்கினாள்.

### சீதாபிராட்டியார் ஆரணியத்தில் தனியே புலம்பல்.

கவி.

இலங்கையிலே நெடுங்கால மிருஞ்சிறையிலேயிருந்து
புலம்பியழுதியான்பட்ட புல்லனவும் போதாமற்
றலங்குலவப்பழிபூட்டித் தனிக்கானில் விடுவித்து
விலங்கரியதுயர்விளைத்த விதியேயோ விதியேயோ.

ஏதமுறுபழியூட்டி யிப்பிறப்பி லெனையொழிய
மாதரையென் மனத்தாலுந் தொடேனென்று வரந்தந்த
காதலனைமனங்கலக்கிக் காட்டிலெனைவிடுவித்து
வேதனைநோய்செய்வித்த விதியேயோ விதியேயோ.

கண்ணறக்காகுத்தனெனைக் காட்டில்விடக் கண்டிருந்து
மண்ணகத்தார்வான்கொடுமை வாய்திறவா மாண்பிலாப்
பண்ணறைச்சியென்றெனைப் பழிதூற்றப் பண்ணுவித்தாய்
விண்ணவர்க்கும்வெலற்கரிய விதியேயோ விதியேயோ.

தாளார்செந்தாமரைத்தாட் டசரதரா மன்மனத்தைக்
கேளானுநானென்றுங் கேளாதவகை கலக்கிக்
கோனான திடையாக்கர்கொடுவினையே னுக்கொருநாள்
மீளாதவனந்தந்த விதியேயோ விதியேயோ.

தக்கணவன்சீறத் தனைக்கைவிட்டகன்ற
புக்ககத்தார்கைவிடுவர் பிறந்தகத்தார்பெற்றோர்க
ளக்கணமேபழியிடுவ ரன்னியர்க ளருவிலையேன்
யிக்கொடிடங்காண்கிலேன் விதியேயோ விதியேயோ.

இப்படி சீதாபிராட்டியா ரழுதுகொண் டிருப்பதை அங்கு திரிந்துகொண்டிருந்த முனிமக்கள் ஓடி வான்மீகமகாமுனிவர்க்கு அறிவித்தார்கள். அவர் தமதுயோக திருஷ்டியாலே நடந்ததையெல்லா முணர்ந்து, சனகன் பெற்றபொற்கொடி கதறுமிடத்திற்குத் துரிதமாகவந்து, அம்மணி! நீ, ஜனக மகாராஜன்மகள். தசரதமகாராஜன் மருமகள். இராமச்சந்திரன் மனையாட்டி.

பதிவ்ரதாசிரோமணி. உன்வரலாற்றைத் தவத்தாலறிந்தேன். இங்ஙனம் ஆகவேண்டுவதுதா னாயிற்று. நீ புலம்பவேண்டாம். உன்மாமனாருக்கு நான்தோழனாதலின் எனக்கும் நீ மருமகளே யாகின்றாய். ஆனதால் விசனமற்று என்னிடத்திருக்கலாம். தவஞ்செய்யும் பெண்டிர்பலர் என்னாச்சிரமத்தி னருகிலிருக்கின்றனர். அவர்களெல்லாம் உன்னை மகளைப்போ லெண்ணிப் பாதுகாத்து வருவார்கள். உனக்கு யாதும் குறையில்லை. இதோயிவ் வருக்கியசலத்தைக் கைக்கொள்ளக்கடவை. ஓ குழந்தாய்! சிந்தனையைவிட்டு எழுந்திரு. என்னாச்சிரமத்திற்குவா. என்று உபசரித்துச் சமாதானப் படுத்தினார்.

சீதாதேவி வான்மீகமுனிவராச்சிரம மடைந்திருத்தல்.

கவி.

துங்கமாதவனிவ்வாறு சொல்லிடத்தூயளாகி
அங்கவனல்லதீர்க்கு மடியிணைவணங்கிநிற்ப
மங்கையையுடனேகொண்டம் மாதவனேமதாபம்
தங்கியமுகட்டுப்பன்ன சாலையைவந்துசார்ந்தான்.

அப்போது சீதாபிராட்டியும் அவர் திருவடிகளுக்குத் தெண்டனிட்டு அவர்கொடுத்த அர்க்கியத்தைக் கைக்கொண்டு சமாதானமும் பரிசுத்தமுமுள்ளவளாகி, முனிகுமாரர் புடைசூழ வான்மீகமுனிவரோடுகூடத் தவப்பெண்களிருக்குமிடஞ் சென்றாள். அந்தத்தவப் பெண்கள் இவளைக்கண்டு அதிசயித்துக் கண்பரந்தவர்களாய் அம்முனிவர்க்குச் செய்யவேண்டுங் கடமைகளைச்செய்து வணங்கி, சுவாமி! இயாதுநிமித்தம் தேவரீர் இப்பெண்மணியோடிங்கெழுந்தருளியதென்று வினவினர். அதற்கவரவர்களை நோக்கி, ஓ புண்ணியசீலிகளே! இப்பெண் ஜனகன்புதல்வி. தசரதன்மருகி. இராகவன்காதலி. ஒருகாரணத்தாற் காதலனாலிங்கு விடப்பட்டாள். இவளை நீவிர் மென்மையாய்ப் பரிபாலித்து வரவேண்டும். என்று கட்டளையிட அவர்கள் - ஓ முனிவரரே! இப்பெண்மணியை இயற்கையிலேயே உபசரிப்போம். தேவரீர் பணிப்புமுண்டானபோது கேட்பானேன்? என்று அவளைச் சூழ்ந்துகொண்டு தெய்வப் பெண்ணாகவே பாவித்துத் தினமும் விசேஷ வுபசாரத்தோடு பாராட்டி வந்தார்கள். முனிவரும் சீஷரோடு தமதாச்சிரமத்திற்குச் சென்றார். சீதையும் அவர்களோடு கூடி ஒருவாறு விசனமாறித் தவநிட்டைகளைச் செய்துகொண் டங்கே யிருந்தாள்.

இலக்ஷ்மணர் சுமந்திரரோடு ஸ்ரீராமரிடம் வந்துசேர்தல்.

கவி.

மாதவத்தோனங்கிவ்வகையுரைப்ப மங்கையரனைவருமகிழ்ந்து
சீதையைப்போற்றச்சுமந்திரனோடு மிளையவன்றிருநகர்புகுந்து
நாதனைப்பணிந்துசெய்ததையுரைப்ப நாட்டுளோர்சொல்வழிகேட்டு
வேதனையுற்றவன்றினுமிக்க வேதனைப்பட்டனன்வீரன்.



இவ்வண்ணம் தபவலிமைமிக்க வான்மீகமுனிவர் சீதாபிராட்டியின் வைபவங்களைக் கூறினகாலத்து தவப்பெண்களெல்லா மகிழ்ந்து சீதைக் குபசாரம் புரிந்துவருகின்றனர்கள். இஃதிப்படியிருக்க, இலக்ஷ்மணப் பெருமாள் சுமந்திரரோடு அயோத்திபாபுரி யடைந்து ஸ்ரீராமபிரானை வணங்கி தாங்கள் சென்றுவந்த செய்திகளையெல்லாம் சொல்லக்கேட்டு, மனது மிகவும் வருந்தி முன்பு உலகத்தார் சொல்லிய சொல்லைக்கேட்டு, மனது மிகவும்வருந்தியகவலையைப்பார்க்கினும் சீதையைப்பிரிந்தகவலையதிகமாய்த் தளர்ச்சியுற்றனர். இளையபெருமாள் - சுவாமி! முக்காலமும் உலகவியல்பும் அறிந்த தேவரீர் இப்படி துயரக்கடலி லாழலாமோ? தேவரீராலே யன்றோ உலகமெல்லாம் சந்தாப நீங்கும்படி யிருக்கின்றன. "துதிபழியிரண்டுங் கேட்டதுசொல்லு முலகையு மதன்வழியொழுகு மதியையுநோவலடாதுமாசனகன் மகளையுநோவலிங்கடாதா, மதிகுணவதியா மழலினுந்துய்ய வவளையு முன்னையும்பிரித்த, விதியினைநோவ லடுக்குமற்றிதனை வீரநிற்குணர்த்தவும் படுமோ." என்று பலவாயுரைக்கக் கேட்டபின் ஸ்ரீராமர் சிறிது துக்கந்துறந் திருந்தார்.

சீதைவனம்புகுபடலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

பதின்மூன்றாவது,

# சாந்திப்படலம்.

இப்படலத்தில் ஸ்ரீராமர் இலக்குமணரால் ஒருவாறு தேறியபின் இராஜகாரியத்தி லிதயத்தைச் செலுத்தினவராய் அவ்விளையவரை நோக்கி இராஜதரும முரைக்கப்புகுந்து, ஆய்வின்மை - சினம் - குரோதம் - இவைகளைப்பற்றிப் பார்க்கன் - வசிஷ்டன் - யது - இவர்கள் சரித்திர முரைத்தல் சொல்லப்படுகின்றது.

ஸ்ரீராமர் இலக்ஷ்மணருடன் ஆய்வின்மையைப்பற்றிக்கூறிய பார்க்கராஜன்கதை.

கவி.

நிறைகடலவனிபார நீக்கியநெடும்பொற்றிண்டோள்
இறையவனிராமனன்போ டிளவலையெய்தநோக்கி
அறைகழற்றுரோய்நாட்டி லன்புநாடோறுநாடி
முறைசெய்கையிராசதன்ம மதனினுமுபறுமென்றான்.

சமுத்திரஞ்சூழ்ந்த பூமாதேவிக்குப் பாரமாயிருந்த இராட்சசவமிசத்தைத் துவம்சப்படுத்திய நீண்ட அழகுபெற்ற வலிமைவாய்ந்த புயங்களையுடைய இராமச்சந்திர மகாராஜாவானவர் தம்மைத்தேற்றிய தம்பியைநோக்கி, அப்பா இலக்ஷ்மணா! நீயுரைத்ததெல்லா முண்மையே. உன்னாலேயான் கவலை தீர்ந்தேன். இதெல்லா மிருக்கட்டும். நாம்நெடுநாளாய் இராஜகாரிய மொன்

னும் பாராமலிருக்கின்றோம். அது மிகவுந்தவறு. உலகத்திலே அரசனானவன் இராச்சியத்திலே நடக்குங்காரியங்களை நாடோறு நன்றாய்விசாரித்துப் பரிசோதித்து இராஜரீகஞ்செய்வது இராஜதரும முறைமையாதலால், நாமுமப்படியே செய்யவேண்டும். அன்றியும்:—

கவி

சிறியமனத்தனாகிச் சிறந்தசெங்கோலைவிட்டுக்
கூறுவெம்பழியைநாடிக் குழைந்திடக்கொடுங்கோலோச்சி
பாரிலொன்றிறைகொள்கின்ற தல்லவையகற்றிடாதே
யேயிறைகொள்வோனாட்டி லிருப்பவர் மூடரன்றே.

தண்டிக்கப் படுவோர்தம்மைத் தண்டியாதொழிந்துவிட்டுத்
தண்டிக்கப்படாதோர்தம்மைத் தண்டிக்குந் தரணிமன்ன
னெண்டிக்கும்பரந்துமூடு மிரும்பழியெய்தித்தீயோர்த்
தண்டிக்குந்தருமனாலே தண்டிக்கப்படும்பின்னென்றான்.

அடற்பெருங்களிறுதிண்டே ரடுபரிகாலாளென்று
கடற்படை யுடையோன் மிக்க கருணையோன்காதலோடு
மிடர்க்கடல் வறியோரேற விருநிதியீவோனாட்டி
னடப்பறியாதுகெட்ட நரபதியுளன்கொலென்றான்.

கோபமித்தனாகி நீதிமார்க்கத்தை விட்டுப் பழிபாவங்களை மேற்கொண்டு தன்னுடைய நாட்டிலே வாசமாயிருக்குங் குடிகளுக்குண்டாகிற துன்பங்களைப் போக்காமல் அவன்றானே யந்தக்குடிகளுக்குத் துன்பத்தையுண்டாக்கிக் குரூரதண்டஞ்செய்து நடுங்கப்பண்ணி அதிகமாக இறைகொண்டு கொடுங்கோல் செலுத்துவானாகில், அந்தத் துஷ்டனாகிய ராஜாவினுடைய தேசத்திலிருக்குஞ் சன்மார்க்கரானவர்களுந் துன்மார்க்கத்தையுடைய மூர்க்கரேயாவர்கள்.

அல்லாமலும் யாவனொரு ராஜாவானவன் தன்னுடையதேசத்திலிருப்பவர்கள் ஒருதிரவியமூலியத்திலே யொருவருக்கொருவர் விவாதப்பட்டுத் தன்னிடத்திலே வந்து விவகாரத்தைச் சொல்லிக்கொண்டால் அந்த விவகாரத்தை யுள்ளபடிவிசாரித்துத் தருமசாஸ்திரப்பிரகார நடப்பியாமல், நட்பினாலேயாவது ஆசையினாலேயாவது — குரோதத்தினாலேயாவது — பக்ஷபாதமாய், தண்டனை செய்யத்தக்க குற்றமுடையவர்களைத் தண்டனை செய்யாமலுந் தண்டனை செய்யத்தகாத பரிசுத்தரானவர்களைத் தண்டனைசெய்தும் இப்படிக்கு நீதிமார்க்கந்தப்பி நடக்கில், அப்படிப்பட்ட கொடுங்கோன் மன்னவன் பூலோகமுள்ளளவும் கெடாமல் நிலைபெற்று விளங்கும் பாபத்தையும் அபகீர்த்தியையு மடைந்தவனாய்ப் பரலோகத்திலே யமதருமராஜனாலே குரூரதண்டனையாகத் தண்டிக்கப்பட்டு ஒருகாலத்திலுங் கரையேற்றமில்லாத நரகவாசத்துக்கும் யோக்கியனாவன்.

மேலும், இரத-கஜ-துரக-பதாதியென்று சொல்லப்பட்ட சதுரங்க சேனைப் பெருக்கமும், சகல பிராணிகளிடத்திலுந் தன்னுயிர்போல விளங்குந்



தயாளமும், வறுமையாளர்களுடையதரித்திரத்துன்பங் கெடும்படிக்கு அவர்களிச்சித்தபொருளை அன்புடனே சந்தோஷமாகக் கொடுக்குங் கொடையினையு முடையவனாகிய நீதிமன்னவனொருவனுளனாயின்; அவன் தேசத்திலிருக்கும் யாவர்க்கு மேதேனுமொரு குறையுண்டாகுமோ? இந்தப்பிரகாரந் தருமசாத்திரங்களிலே சொல்லப்பட்டிருந்தும், அஃதறிந்து நீதிமார்க்கமாக நடவாத இராஜாக்களுடைய சரித்திரங்கள் பலவுள. அவற்றுள் சில சொல்லுகிறேன்கேள். முன்னமொரு காலத்தில் பார்க்கனென்று சொல்லப்பட்ட ராஜாவானவன் அன்னதானமுதலான சோடசமகாதானங்களும், மற்றுமுள்ள சகலபுண்ணியங்களும் விதிப்படி நாடோறுஞ் செய்துவருவான். அந்த ராஜனப்படி செய்துவருமளவில் அனேககோடி காலமாய்ச் செய்யப்பட்ட புண்ணியங்களெல்லாம் ஒரு நிமிஷத்திலே சித்திப்பதாகிய மகாபுண்ணியகாலம் வந்து நேரிட்டது.

அப்பொழுதளவில்லாத நல்லபசுக்களை வேதோத்தமராகிய பிராமணர்களுக்குத் தானம் பண்ணுகிற சமயத்திலே, அந்த ராஜாவினுடைய புண்ணிய சரித்திரங்களைக் கேள்விப்பட்டு மிகவுந்தரித்திரனாகிய ஒரு பிராமணன் நெடுந்தூரத்திலிருந்துவந்தான். அந்தப்பிராமணனுக்கு மொருபசுவைத் தானமாகக்கொடுத்தான். அவனந்தப் பசுவைக்கொண்டுபோய்த் தன்னுடைய கிருகத்திலே கட்டிவைத்துக்கொண்டிருந்தான். அந்தப்பசு தப்பிப்போய்ப் பின்னுமந்தராஜாவினுடைய பசுக்கூட்டத்திலே சேர்ந்தது. அதை விசாரியாமலப்படியே மற்றுமோர்நாட் கோதானம்பண்ணும்பொழுதில், அந்தப் பசுவையும் வேறொரு பிராமணனுக்குத் தானமாகக் கொடுத்தான். தானம்வாங்கின பிராமணன் அந்தப்பசுவைக்கொண்டுபோய்த்தன்னுடையகிருகத்திலே வைத்துக்கொண்டிருந்தான். அப்படி யிருக்குமளவில் முன்பு தானம்வாங்கின பிராமணன் தப்பிப்போனபசுவை யெங்குங்காணாமல் இரண்டாவது தானம்வாங்கின பிராமணனிடத்திலிருக்கக்கண்டு இந்தப்பசுவானது தன்னுடையதென்று சொல்ல, அதற்கிரண்டாவது தானம்வாங்கின பிராமணனு மென்னுடையதென்று சொல்ல, இப்படியந்தப் பிராமணர்களிருவரு மந்தப்பசுவை யென்னுடைய தென்னுடையதென்று மாறுபாடாக விவாதப்பட்டுத் தங்களுக்குத் தானமாகக்கொடுத்த பார்க்கனென்னு மிராசாவினுடைய ஆஸ்தான வாசலிலேவந்து நெடுநாளாய் முறையிட்டலைந்து திரிந்தார்கள்.

இப்படியலைகின்றவர்களை வந்தகாரியமென்னவென்று கேட்குங்கேள்வியில்லாமற் போனபடியினாலே அவ்விருவரு மிகவு மனஞ்சலித்துக் கோபித்து அந்த ராசாவைப் பார்த்து, நீயோந்திவடிவாய்ப் பாழுங்கிணற்றிலே அளவில்லாத துக்கத்துடனே தலைகீழாகத் தொங்கிக்கொண்டுகிடக்கக்கடவாயென்று சாபஞ்செய்தார்கள். அதுகேட்டவந்த ராசாவானவன் - ஓஒ!! நாமென்னகாரியஞ்செய்தோம்? நம்முடையவறியாமையினாலே நமக்கிப்படிக் கபகீர்த்தியான காரியம் வந்து நேரிட்டதேயென்றுபயப்பட்டு அந்தப் பிராமணர்களிருவரை

யு நான்செய்த வபசாரத்தைப் பொறுத்து ரக்ஷிக்கவேணுமென்று மிகவும்வணங்கி வேண்டிக்கொண்டான். அதற்கவ்விருவரு மிராசாவைப்பார்த்து, நீயிப்படி வெகுகாலமிருந்து மேல்வருந் துவாபரயுகாந்தத்தி லவதாரஞ்செய்யு மகாவிஷ்ணுவாகிய கிருஷ்ணபகவானுடைய கிருபாகடாக்ஷ வீட்சணத்தினாலே உனக்குவந்த சாபநிவர்த்தியாய்ப் பழையரூபத்தை யடைந்து முன்போலவே யிருக்கக்கடவாயென் றநுக்கிரகஞ்செய்து, தங்களிருவருக்கும் விவாதப்பொருளாயிருந்த பசுவை உத்தமனான மற்றொருபிராமணனுக்குத் தானமாகக் கொடுத்துத் தாங்களிருக்குமிடம் போய்ச் சேர்ந்தார்கள். பின்பந்தராசா வவர்களிட்ட சாபப்படியே ஓந்திவடிவாகி, ஒருபாழுங்கிணற்றிலே தலைகீழாகத்தொங்கிக்கொண்டு கிடந்தான். அப்பா இலக்ஷ்மணா! அந்தயோக்கியனான ராசனுக்கும் விசாரியாததினாலே அப்படிப்பட்ட தீங்குவந்து நேரிட்டதல்லவா? என்று ஸ்ரீராமர்சொல்லக்கேட்ட இலக்ஷ்மணர் இப்படியுமுண்டோவென் றாச்சரியப்பட்டுத் தனக்குத்தானே யெண்ணமுற்றுநிற்க, அவருடையகுறிப்பறிந்த ஸ்ரீராமர்பின்னுமிலட்சுமணரைநோக்கி, ஆ தம்பி! நீ யிதைத்தானோ வதிசயமென்றெண்ணினாய்? இதனினுமற்புதமான ஒருகதையுண்டு அதனையுங் கேளென்று சொல்லத்தொடங்கினார்.

## ஸ்ரீராமர் இலக்ஷ்மணருக்கு சினங்கடியாமையைப்பற்றிக் கூறிய வசிஷ்டமுனி கதை.

கலி.

மன்னவனிமியெனும்பாஞ்சீர் மனுகுலம்விளங்கத் தோன்றும்
பன்னெடுங்காலமிந்தப் பாரினையாண்டபொழுதைப்
பின்னவன்றுறந்துசென்று பெருவனங்குறுகிக்காசும்
அன்னவல்வினைகள்பாற வருந்தவஞ் செய்யுநாளில்

முன்னமொருகாலம் நம்முடைய குலத்திலுற்பவித்த நிமிச்சக்கரவர்த்தியென்று சொல்லப்பட்ட மகாராஜாவானவர் அநேககால மனுநீதிதவறாமல் தன்னுயிர்போல் மன்னுயிர்க்கிரங்கிச் செங்கோற்செலுத்தி இராச்சியபரிபாலனஞ் செய்துவருநாளில், இகப்பிரயோசனங்களெல்லா மடைந்தவராய்ப் பரப்பிரயோசனமாகிய மோட்சபதத்தை யபேட்சித்து மகாவனத்தைச்சார்ந்து, சத்திரயாகஞ் செய்யவேண்டி அத்திரி - பிருகு - ஆங்கிரசர் - வசிஷ்டர் — என்று சொல்லப்பட்ட நால்வரையும் வரவழைத்து இந்தயாகத்தைச் செய்விப்பீரென்று சொன்னார். அப்பொழுது தன்னுடைய குலகுருவாகிய வசிஷ்டமகாமுனிவரவரைப்பார்த்து, ஓ சக்கரவர்த்தி! இப்பொழுது தேவேந்திரன் யாகஞ்செய்விப்பதற்காக நம்மை வரித்திருக்கிறான். அந்தயாகத்தை நிறைவேற்றிப் பின்புவந் துன்னுடையயாகத்தை நடப்பிக்கிறோமென்று சொல்லிப்போயினார். அவரப்படிச்சொல்லக்கேட்ட நிமிச்சக்கரவர்த்தியானவர் இந்தவசிஷ்டனைத்தவிர வேறொருரிஷியு மில்லையோ? இவனிப்படி மறுத்துப்போய்விட்டதினாலே என்னுடையயாக நடவாம னின்றுபோய்விடுமோ? என்று



லோசித்தவராய் அந்தவசிஷ்டமகா முனிவருக்குச்சமானமான மகிமையுடைய கௌதமமகாமுனிவரை வரவழைத்து, அவர்முன்னிலையாக அந்தச் சத்திரயாகத்தை நடப்பித்துக்கொண் டிருந்தார்.

அந்தச்சமயத்தில் வசிஷ்டரானவர் சுவர்க்கலோகத்திலே தேவேந்திரனுடைய யாகத்தை நிறைவேறச்செய் திருக்குமளவில் பூலோகத்திலே நிமிச்சக்கரவர்த்தி கௌதமரைக்கொண்டு யாகநடப்பித்துக்கொண் டிருக்கிறதையறிந்து, இந்த நிமியென்று சொல்லப்பட்டவ னம்மையொரு பொருட்டாகவெண்ணாமல் நமக்குப்பிரதியாக வேறொருவரை வைத்துக்கொண்டிப்படி யாகமுஞ் செய்விப்பானோ? அதனையு மறிகிறேன். என் றதிதீவிரமாகச் சுவர்க்கலோகத்தினின்று நீங்கி அந்தயாகசாலைக்கு வந்தார். அந்தச்சமையத்திலே நிமிச்சக்கரவர்த்தியானவர் நித்திரைசெய்துகொண் டிருந்தார். அதினாலே வசிஷ்டரிடத்துக்கு வாராதிருந்தார். அப்பொழுதந்த வசிஷ்டமகாமுனிவர் நம்மைவேறுபடுத்தி யாகஞ்செய்விப்பது மல்லாமல் நாம் வந்தவிடத்து நம்மையொரு லக்ஷியமாயெண்ணாமல் அவமரியாதைசெய்த படியினாலேயும், செத்தபிணம்போலத்தூங்கிக்கிடந்த படியினாலேயும், சரீரத்தைவிட்டுப்பிராணன் நீங்கி மரணத்தையடையக் கடவனென்று சாபஞ்செய்தார். அதைக் கேள்விப்பட்ட நிமிச்சக்கரவர்த்தியானவர் நானித்திரைசெய்துகொண் டிருந்தபோது இவர்வந்த தறியாதிருக்குமென்னை இப்படியனியாயமாகச்சாபஞ்செய்ததால், இந்தச்சாப மிவரைத்தானேயடையக் கடவதென்று தன்னைச்சபித்த அந்த வசிஷ்டருக்குப் பிரதிசாபஞ் செய்தார்.

அந்தச் சக்கரவர்த்தி தபோபலத்தினாலே சிலாக்கியம்பொருந்தி யாவரினு மேன்மையான மகிமையுடையவராதலால் அவருடைய சாபத்தினாலே வசிஷ்டரானவர் மிகவுந் துக்கமும்பயத்தையு மடைந்தவராய்த் தம்முடைபிராணன் விடுபடுமென்றறிந்து, பிரமதேவரிடத்துக்குப் போய்த் தமக்கவமரியாதையாக ராஜாவினுடையசாபம்வந்துநேரிட்டவிருத்தாந்தங்களையெல்லாஞ்சொல்லி, இந்தச் சாபத்தினாலே மேலுமேலுஞ் சனனமரணங்களுக்கிடமான யோனிபேதங்களிலே பிறவாமல் இந்தச் சாபநிவர்த்திக் கேதுவாக வேறொருசனன முண்டாகும்படிக் குபாயஞ்செய்தனுக்கிரகிக்க வேண்டுமென்று பிரார்த்தித்துக் கேட்டார். அதற்குப் பிரமதேவர் வசிஷ்டரைநோக்கி, ஐயா முனிசிரேஷ்டரே! முன்னமொருகால மித்திரனென்று சொல்லப்பட்ட சூரியபகவான் ஊர்வசியைக்கண்டு மோகப்பட்டு உன்னைக்கூடி யனுபவிக்கவேணுமென்று கேட்க, அதற்கவளுடன்பட்டு அப்படியே யும்மைச்சேருகிறே னென்று சொல்லிப்போய் அநேகந் தெய்வப்பெண்களுடனே ஒருசிங்காரமான புஷ்பதடாகத்திலே சலக்கிரீடையாக விளையாடிக்கொண் டிருந்தாள். அச்சமயத்தி லவ்விடத்திலே வருணபகவான் வந்து அந்த ஊர்வசியைக்கண்டு மயங்கிக் காமவிகாரத்தையடைந்து, நீயென்னைக் கூடவேணுமென்று கேட்டான். அதற்கவள் முன்னமேயென்னை யிச்சித்தசூரியபகவானுக்குடம்படிக்கைசெய்

து வந்திருக்கிறேனாதலால், முதலிலென்னை வரித்தவரைவிட்டு முறைமை தப்பாக உம்மைநான் சேரமாட்டேனென்று சொன்னாள்.

அம்மாத்திரத்திலே யந்தவருணபகவான் காமாக்கினியினாலே சரீரமெல்லாமுருகி, மோகவிகாரஞ் சகிக்கமாட்டாமல் இந்திரியத்தை யொழுகவிட்டான். அந்தவிந்திரியத்தை ஒருகும்பத்திலே பிடித்துவைத்திருக்கவும் அதனிடத்திலே அளவில்லாத மகிமையுடனே விளங்கும் அகஸ்தியபகவானுற்பவித்தார். அதன்பின்பு ஊர்வசியானவள் வருணனிடத்திலே மிகவு மாசையுள்ளவளாகிச் சூரியபகவானிடத்துக்குப் போனாள். அப்பொழுதவருஞ் சகிக்கப்படாத காமவிகாரத்தை யடைந்தவராதலால் அவளைக்கண்டவுடனே அவள் வருணனிடத்திலே யாசைகொண்டிருக்கிற குறிப்பறிந்துகொண்டு கோபித்து, நீ பூலோகத்திலே நரஜன்மத்திலேபிறந்து புரூரவாவென்று சொல்லப்பட்ட இராஜனுக்குப் பாரியாகி நெடுங்கால மிருந்துவரக்கடவாயென்று சபித்து அவளைச்சேராமலே தம்முடைய வீரியத்தை வெளியிலேவிட்டார். கேட்டீரோ வசிஷ்டரே! அதனை மகாரேதசென் றெண்ணி வருணரேதசிருந்த கும்பத்திலேபிடித்துப் பூரித்து வைத்தார்களாதலால், நீரிந்தச் சரீரத்தைவிட்டந்தக்கும்பத்திலே பிரவேசித்துத் திவ்வியசரீரத்தையடைந்து வருவீரென் றனுக்கிரகஞ்செய் தனுப்புவிப்ப, அப்படியே யவருமுற்பவித்தார். அப்பா இலக்ஷ்மணா! இப்படியாக வசிஷ்டமகாமுனிவருக்குக் கோபத்தினாலே மகத்தான பங்கநேரிட்டதால் யாவரையுங் கோபங்கெடுக்கும். அந்தக்கோபத்தை யெவனொருவன் கெடுத்தவனோ அவன் சுகத்தையடைவான்.

அப்பாலந்த வசிஷ்டரிட்ட சாபத்தினாலே நிமிச்சக்கரவர்த்தி மரணத்தையடைந்து சூட்சும சரீரத்தைப் பொருந்தியிருப்ப, அவருடைய மந்திரிமுதலான பரிசனங்கள் மரித்துப்போன ராசாவினுடைய சரீரத்தை வஸ்திராபரண கந்தபுஷ்பாதிகளினாலே அலங்கரித்து வைத்துக்கொண்டு, அந்தக்கௌதமமகாமுனிவரைக் கொண்டுதானே அணுமாத்திரமு மந்திரலோபங் கிரியாலோபந் திரவியலோபங்களில்லாமல் அந்தயாக மாரம்பித்தநான்முத லையாயிரம் வருஷமளவாக யாகத்தைச்செய்து முடித்தார்கள். இப்படிமுடிக்கவே அதையறிந்த இந்திரன்முதலான சகல தேவர்களு மாச்சரியத்தை யடைந்து, சூட்சுமதேகியாயிருக்கு நிமிச்சக்கரவர்த்தியை யழைத்து, உம்முடைய யாகத்துக்கு நாங்களெல்லோருஞ் சந்தோஷத்தையடைந்தோம். உமக்கு வேண்டியவரத்தைக் கேட்பீரென்றுசொல்ல வதற்கந்த ராசாவானவர் நானிந்த உலகத்திலுள்ளோர்களுடைய கண்களினுள்நின்று எல்லாவதிசயங்களையுங் கண்டுகொண்டிருக்க வனுக்கிரகஞ்செய்வீர்களென்று கேட்டார். அதற்கவர்களப்படியே யாகக்கடவதென்று வரங்கொடுத்துத் தங்களுடைய லோகத்தைச்சேர்ந்தார்கள். அதன்பின்பு சகல ரிஷிகளுங்கூடித் தாங்கள் நித்தியாக்கினியுண்டாக்கப்பட்ட அரணியாகிய தீக்கடைக்கோலினாலே அந்த நிமிச்சக்கரவர்த்தியினுடைய சரீரத்தைக் கடைந்தார்கள்.



அவ்வாறு கடையும்பொழுதில் அதினின்று மொருபுருஷனுண்டானான். அப்படிக்கந்தப்புருஷன் பிறந்ததால் அவனுக்குச் சனகனென்று நாமதேயமிட்டு, இந்தப்பூமியைப் பரிபாலனஞ்செய்துகொண்டிருப்பாயென் றாசீர்வாதஞ்செய்து மண்டலாதிபனாக வைத்து, அந்த முனிவர்களெல்லோருந் தாங்களிருக்கு மாச்சிரமங்களுக்குப் போயினார்கள். அந்த நிமியென்று சொல்லப்பட்ட ராஜன்தபோமகிமை பொருந்திய உத்தமராகையால் நித்தியத்துவமான வரத்தைப்பெற்றார். களேபரமான வவருடைய சரீரமும் அவ்வளவு சிலாக்கியத்தை யடைந்தது. அல்லாமலும் அந்தச்சரீரத்தினின்று மொருவமிசமு முண்டாயது. ஆனதால் சத்தியமாக நீதிதப்பாமல்நடக்கு மன்னவனுக்கு ஒருகாலத்திலும், யாவராலும், எந்தஜீவியத்திலும், ஒருதுன்பமுங்கேடும் வாரா.

கவி.

ஒள்ளியதவத்தாற் கல்வியாலுணர்வா லுண்மையாலுணர்ந்தவருயர்ந்தோ
ரெள்ளியகுற்ற மில்லவரெய்தும் வெகுளியாலிப்படிப் பட்டார்
தெள்ளியவீரச் சிலையினாற்புறத்துத் திறற்பகை வெல்லலாஞ்சினமா
முள்ளுறுபகையையறிந்தவருலகத் தொருவரும் வென்றவரில்லை.

மூங்கிலிற்பிறந்த முழங்குதீமூங்கின் முதலறமுருக்குமா போலத்
தாங்கருஞ்சினத்தீ தன்னுளேபிறந்து தன்னுறு கிளையெலாஞ்சயிக்கு
மாங்கதன்வெம்மை யறிந்தவர்கமையா லதனையுள்ளடக்கவு மடங்கா
தோங்கியகோபத் தீயினையொக்கு முட்பகையுலகில்வே றுண்டோ.

தம்பி! குலத்தினாலேயாவது, கல்வியினாலேயாவது, தவமகிமையினாலேயாவது, மற்றுமுள்ள வெல்லாமேன்மையினாலேயாவது, தனக்கு நிகரில்லாமலிருப்பவனே யானாலும்; கோபத்தை யடைந்தானேயாகில் இப்பொழுது சொல்லப்பட்ட வசிஷ்டமகாமுனிவருக்கு நேரிட்டாற்போல மகத்தான துன்பத்தை யடைவான். தன்னையுங் குலத்தையுந் தனக்குள்ள வெல்லாச்சிறப்புகளையு முடனேகெடுப்பதற்குத்தன்னிடத்தி லுண்டாகுங்கோபத்தைப்போலும் வேறொருபகையு முண்டோ? என்றுசொல்லி ஸ்ரீராகவர் பின்னுமிலட்சுமணரைப் பார்த்து இன்னமொருகதை சொல்லக்கேளென்று சொல்லத் தொடங்கினார்.

## ஸ்ரீராமர் இலட்சுமணருக்கு குரோதம்வகித்தலைப்பற்றிக்கூறிய யதுவென்னுமிராஜகுமாரன் கதை.

கவி.

மன்னவனகுடனென்பான் வாசவன்மகமுஞ்செய்தோன்
அன்னவன்புதல்வன்றுதை யனையவன்றவத்தின்மிக்கோன்
புன்னெடுங்காலந்தன்னைப் பார்மன்னர்முறைசெவிப்ப
இன்னகர்க்கிறைவனாகியிருந்தவன் யயாதியென்போன்.

ஓ என்னுயிர்க்குயிராகிய அனுசனே! சந்திரகுலத்திற் றோன்றினவன். திரிலோகங்களையும் வென்று சகலகீர்த்திகளையும் பெற்றவன். நூறு அசுவமே

தயாகஞ் செய்தவனாகிய நகுஷனென்னும்பெயரையுடையமகாராஜனது புத்தி
ரனான யயாதியென்பானெல்லாமேன்மையும்பெற்றவன். அவன்விருஷபருவ
னென்றுசொல்லப்பட்ட வசுரேந்திரன் புத்திரியாகியசருமிஷ்டையையும்-சுக்கி
ராசாரியர் புத்திரியாகிய தேவயானையையும்-விவாகஞ் செய்துகொண்டு,அவர்க
ளுடனே சகலபோகபோக்கியங்களை யனுபவித்துக்கொண்டிருந்தான். அப்ப
டியிருக்குநாளில் சருமிஷ்டைக்குப் பூருவென்பவன் பிறந்தான். தேவயானை
க்கு யதுவென்பவன் பிறந்தான். அந்தப் புத்திரர்களுக்கு இராசாங்கத்துக்கு
வேண்டிய சகலவித்தைகளையும்படிப்பித்துவருங்காலையில்,ஒருநாளிராசசபை
யில் இரண்டுபுத்திரரும் பிதாவைக் காணவந்தார்கள். யயாதிமகாராசா சருமி
ஷ்டையிடத்தி லதிமோகமுள்ளவனானபடியினாலே அவள்பிள்ளை பூருவினி
டத்திலே பிரீதிபண்ணி, தேவயானைபிள்ளை யதுவினிடத்தி லுபேட்சைசெய்
திருந்தான். அதுகண்டு யதுவென்பவனுக்குக் கோபமுண்டாய்த் தாயினிட
த்துக்குப்போய்த் தன்பிதாசெய்த பட்சத்தைச் சொல்லித் துக்கப்பட்டான்.
அதுகேட்டவவள் சருமிஷ்டையினிடத்திலிருக்கிற பிரீதியினாலல்லவோ விப்
படிப் பட்சபாதம்பண்ணினானென்று தன்பிதாவாகிய சுக்கிரபகவானை நினைத்
தாள். அஃதறிந் தவர்வந்தார். அவருடனே தேவயானை இராசாபண்ணின
பக்ஷபாதமெல்லாஞ் சொன்னாள். அதுகேட்ட சுக்கிராசாரியர் கோபித்து
யயாதியைப்பார்த்து, நீ யௌவனத்தினாலல்லவோ அவளிடத்திலுனக் கதி
மோகமுண்டா யிவர்களை யுபேக்ஷை பண்ணினாய்? ஆகையாலுன்னுடைய
யௌவனம்போய் மூப்படையக்கடவாயென்று சபித்துப்போய் விட்டார்,

அப்பால் யயாதிராஜன் தன்னுடைய யௌவனம்போய் முதுமையடை
ந்து துக்கப்பட்டுக்கொண் டிருக்குங்காலத்தில் ஸ்திரீகளிடத்திலே மோகந்
தணியாதவனாய்த் தன்னுடைய பிள்ளை யதுவை யழைப்பித்துச் சொல்லுகி
றான்.

கவி.

நைந்தடியற்றவால நடுங்கிவீழ்கின்றதென்று
வந்தவீழுன்றிவீழா வகைநிலைவிளக்குமாபோல்
மைந்தர்களானோர்நல்ல வழிவினுன்மகிழ்ந்துசேர்ந்து
தந்தையைத்தளராவண்ணந் தாங்குவர்தவத்தினன்றே.

புத்திரனாவோனீது பொருந்தித்தன்குலத்திலுள்ளோ
ரத்தனைவரையுந்தீய வருநரகுறுமற்காத்துச்
சுத்தமாக்கதியினுய்ப்பா னென்றுசொல்லுவர்கடேயோ
யித்தைநீயுணர்ந்தென்மூப்பா மிடும்பையைத் தீர்த்திடாயே.

என்றுசொல்லி, அப்பாமைந்தனே! இன்னுஞ்சிலகாலம் ஸ்திரீபோக
முதலானசுகங்களையனுபவிக்க வெனக்கிச்சையிருப்பதாலென்மூப்பை வா
ங்கிக்கொண்டு உன்னுடைய யௌவனத்தைக் கொடுப்பாயென்று கேட்டா
ன். அதுகேட்டவவன் உனக்குரிமையுள்ள புத்திரன் கொடுப்பானேயன்றி
நானேன் கொடுப்பேனென்றுசொல்ல, அப்போதிராஜன் உனக்கு முன்னு

№ 91. ஸ்ரீராமரிடத்தில்யமுனைதீரவாசிகள்முறைபாடு.



ஸ்ரீராமரால்சத்துருக்னர் இலவணராச்சியபட்டாபிஷேகம்.



உத்தரகாண்டம்.



டைய வமிசத்திலே பிறக்கிறவர்களுக்குங் கிரீடாதிபத்திய மில்லாமற்போகக்கடவதென்றும்- இவனுவமிசத்திலே இராட்சதர்கள் பிறக்கக்கடவர்களென்றும்-சாபம்பண்ணி யவனைப்போக்கி, தன்னிடத்தில்விசுவாசமுள்ள பூருவென்பவனையழைப்பித்து யதுவென்பான்மறுத்ததைச் சொல்லி, நீயேனுமறுக்காமலுனதுயௌவனத்தையெனக்குக்கொடுக்கவேணுமென்றுகேட்டான். அந்தப்புத்திரன் வணங்கிப் பிதாவினுடையமூப்பைத் தானேற்றுக்கொண்டு தன்யௌவனத்தைக் கொடுத்தான். அப்படியேயந்த யௌவனத்தினாலே நெடுநாள்போகபோக்கியங்களை யனுபவித்து மறுபடியும் விவேகத்தினாலே வெறுத்து, பூருவென்பவனுக்கு மூப்பைப்போக்கிப்பட்டாபிஷேகம்பண்ணுவித்துத் தான்வனத்துக்குப்போய்த்தபசுபண்ணிமேலானகதியையடைந்தான். அப்பா இலக்ஷுமணா! அற்பமாகிய குரோதத்தினாலே யதுவென்பவன் துக்கத்தையடைந்தானன்றோ? ஆகையாலிராசாக்கள் குரோதத்தைவிட்டுச் சாந்தத்தையடையவேணுமென்று ஸ்ரீராமரிலட்சுமணருக்குச் சொன்னார்.

சாந்திப்படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

பதினான்காவது,

# இலவணாசுரன்வதைப்படலம்.

இப்படலத்தில் ஸ்ரீராமருடைய கொலுமுகத்தில் யமுனாதீரவாசிகளாகிய முனிவர்கள்வந்து இலவணாசுரன் கொடுமையைப்பற்றிக்கூறிய முறைபாடும், உடனேயவர் பரதலக்ஷுமணரோடாய்ந்து சத்துருக்னருக்கவ்வசுரனையழித்து அவனரசியலையுங் கையேற்று நடத்திவரும்படி ஆஞ்யாபிக்க அவர்பிரயாணமாய் வான்மீகராச்சிரமமடைந்ததும், அங்கம்முனிவரால் கன்மாஷபாதன் சரித்திரங்கேட்டுக் களித்திருந்தவர் சீதாபிராட்டியார் மக்கட்பேறடையக்கேட்டு வருந்தியதும். பின்னரங்கிருந்தகரிற்சென்று மதுவனஞ்சேர்ந்து சியவன முனிவரால் இலவணனுடைய கொடுமையையறிந்து அவனைப்போராடி வதைத்ததும், அப்பாலங்கு தேவர்கிருபையால்மதுபுரத்தைத்தாபித்துப்பன்னிரண்டாண்டரசியற்றி மீண்டு வான்மீகராலும் ஸ்ரீராமராலும் ஆசிபெற்று மதுபுரத்திற்சென்றரசாளுதலும் சொல்லப்படுகின்றது.

ஸ்ரீராமர் கொலுமுகத்தில் யமுனாதீரவாசிகள் இலவணனைப்பற்றிக் கூறிய முறைபாடு

கலி.

சந்திகாரியங்களெல்லாஞ் சமைந்தபின் றழைப்பச்சார்ந்த
அந்தணர்க்கம்பொன்பூமி யானிரையாதியாய
இந்திரைகொழுனனீந்தாண் டிருந்தபின் முனிவரெல்லாம்
வந்தனரென்னச்சொல்ல வாயிலோய்கொணர்தியென்றான்.

இப்படி ஸ்ரீராகவசிகாமணியானவர் இலக்ஷ்மணருக்குப் பலதரும நெறிகளைத் திருட்டாந்த சரித்திரங்களோடு மெடுத்துரைத்தபின் அவ்விளைபவராதியரோடெழுந்து அரண்மனையடைந்து ஒருவரையொருவர்பிரியாதுகொலுமுகத்துவந்து, மந்திரிபிரதானிகள் முதலானோரோடு குடிகளின்முறைகளைக் கேட்டுவிசாரித்து நியாயஞ்செலுத்திவந்தார். இவ்வாறே நாடோறுநீதிசெலுத்திவருநாளில்ஒருநாள் ஸ்ரீராமச்சந்திரமகாராஜாவானவர் தினவழக்கம்போல்பிராதக்காலையிலெழுந்து நித்தியகன்மாநுஷ்டான நெறிகளையெல்லாம்வேதோத்தமாகச்செய்து, பிராமணர்களுக்கு ஸ்வர்ணம்-பூமி-பசுஇவையாதியதானங்கள் பலவுஞ்செய்து சபாமண்டபம்வந்து சிம்மாதனமேறி கொலுவீற்றிருக்கையில், யமுனாநதிக் கரையிலே தவமியற்றிக்கொண்டிருக்கு முனிவரிற்பலர் சியவனமுனிவரை முன்னிட்டுக்கொண்டு அரண்மனை வாயிலிலே வந்து நின்றனர். அதை ஸ்ரீராமபிரான் அறிந்துஉள்ளேஅழைப்பித்துத்தெண்டனிட்டுச் சகலவுபசாரங்களாலே பூசித்து, ஓ சுவாமிகாள்! தேவரீர்க ளிங்கெழுந்தருளின காரியம் எது? அதனை யடியேனுக்கு நியமிக்கவேண்டும். இயானதைத் தடையின்றிச் செய்வேனென்று வினவினர். அதுகேட்டு அவர்களவரை நோக்கி; ஓ தசரதநந்தனா! காகுஸ்தசிங்கமாகிய உமக்கே இங்ஙனமுரைக்கத்தகும். நாங்கள் சில அரசரிடஞ் சென்றோம். அவர்கள்யாவரும் இப்படியுறுதிபேச அஞ்சினர்கள். ஆதலின் நீரேராஜகேசரி. எங்களை அசுரபயத்தினின்றும் விடுவிக்கவேண்டுமென்றுகூறித் தாங்கள்வந்த காரியத்தை விண்ணப்பஞ் செய்வதானார்கள்.

கவி.

மன்னவர்மன்னுமுன்னுண் மதுவெனுந்தானவேந்தன்
தன்னெதிரிலாதவீரன் தருமமுந்தயாவுமிக்கோன்
பின்னுகனருளாற்பெற்ற பெருவலித்திரிசூலத்தன்
அன்னதுகையதாக வினிவிலாவாயுப்பெற்றோன்.

ஆயவன்றனக்குக்கும்பீ நசிவயிற்றவதாரஞ்செய்
தீயவன்றேவராதி திரிபுவனத்துள்ளோர்க்கும்
சாய்விலாவென்றிவீரன் றயாவொடுந்தருமத்தோடும்
எய்விலாவஞ்சநெஞ்ச னிலவணனென்னும்பேரோன்.

கேளும் மகாராஜாவே! கிருதயுகத்திலே லோலையென்பவள் சுதனாகிய மதுவென்னும்அவுணனொருவனிருந்தனன். அவன்மகாபலபராக்கிரமமுள்ளவன் பிராமணவிசுவாசி மகாதருமாத்மா தேவரோடும்அவனுக்குநேசமேயிருந்தது. அவன் சிவபிரானைநோக்கி நெடுநாள் தவஞ்செய்ய, அக்கடவுள் அவனுக்குப் பிரசன்னராகித் தமது சூலாயுதத்தினின்று மொருசூலாயுதத்தை யுண்டாக்கி அவனுக்குத் தந்து, அப்பா மதுவே! இது மகாமகிமையுள்ளது. உன்னை மாறுகொள்ளும் பகைஞரைத் தப்பாமல் வென்று உன்கையில் மீட்டுஞ் சேரும். ஆனால் தேவர்மேலும் அந்தணர்மேலும் விடுத்தையாயின் பயன்படாது போவதுமன்றி, உன்னையும்விட்டு நீங்குமென் றருளிச்செய்தார். அதற்



கவன் சம்மதித்து சுவாமியை நோக்கி, ஓ தயாநிதி! தேவரீரளித்த இவ்வாயுதம் என்சந்ததிக்கெல்லா மிருக்கும்படி யனுக்கிரகஞ் செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தான். அதற்கவர் அப்பா! அஃதப்படி யாகமாட்டாது. ஆயினும் உன்வேண்டுகோளும் வீணாகாதபடி ஒரு வரந்தருகின்றேன். அதாவது உன் மகனுக்கு மாத்திரம் இருக்கக்கடவது. என்றுகூறி அந்தரத்தானமாயினர். இப்படி உருத்திரமூர்த்தியருளியதற்குக் களித்து அவருக்குச் சரணஞ்செய்துசென்று, திவ்வியமான மாளிகையொன்று கட்டி வாழ்ந்திருந்தான்.

அவனுக்குக் கும்பீநசியென்னு மனையாட்டிவயிற்றில் இலவணன் என்னுமகன்பிறந்தான். அவன் தந்தையின்குணங்களுக்கு மாறானதன்மையுள்ளவனாய்நல்லோர்களைநலிவித்துக்கொண்டேவந்தான். அதற்குத்தகப்பன்மனவருத்தமுற்றும் ஒன்றுஞ் சொல்லமாட்டாமல் ஆயுதத்தை அவன்கையிற் கொடுத்து, அதன் பிரபாவத்தையும் அவனுக்குத் தெரிவித்துத் தான் வருணலோகம்போய்ச் சேர்ந்தான். பின்னர் அந்தலவணாசுரன் சூலத்தின் மகிமைபற்றியும் இயல்பானதன் கொடுமைபற்றியுஞ் செருக்குமிகுந்து, உலகத்தையெல்லாம் வருத்திவருகின்றனன். எந்நாளு முனிவரையே இம்சிக்கின்றான். ஐயா! இத்தன்மையன் இலவணன். அத்தன்மையது சூலம். உம்மையன்றி எமக்கு வேறுகதியில்லை. இத்துன்பமாற்றமாட்டாமல் யாம் பலவரசரிடஞ் சென்று முறையிட்டோம். எமக்கு அபயமளிப்பாரொருவருமில்லை. இயாவரினுமேலான திறத்தனான இராவணனையே நீர் சங்கரித்ததினால் உம்மைச் சரணமடைந்தோம். இனியெம்மைப் பாதகன்கையிற் சிக்காதிருக்குமாறு காத்தருளவேண்டும். உமது பேராற்றலுக்கு இயையாத தொன்றுமின்று.

என்றிவ்வகை தாபதர் விண்ணப்பஞ்செய்யக் காகுத்ததிலகர் அன்புற்றோரை நோக்கி ஓதவசிகாள்! அஞ்சன்மின்: அக்கொடியோன் விரைவில்மாய்வான். என்றபயமளித்துத்தம்பியைப்பார்த்து, ஓஅனுசர்களே! இப்புண்ணியத்தை யார் ஏற்றுக்கொள்ளுகிறீர்கள் என்றார். அதுகேட்ட இலக்குமணர் அவரைத் தொழுதெழுந்து, சுவாமி! இம்மூவகையுலகிலுள்ள முனிவர்கள் தானவர்களாதிய வெல்லோருங்கூடி அவ்விலவணனுக்குத் துணையாகவந்து என்னோடு பொருதுநின்றாலும், இப்பணியிலென்னைத் தேவரீரேவுவீராகில் அப்பாவகாரியைநான் கொல்லுவது நிச்சயமென்றார். அப்போது பரதாழ்வானானவர் ஸ்ரீரகுநந்தனரைநோக்கி-ஐயனே! அடியேன் விண்ணப்பமொன்றுளது. அதற்குத் தேவரீர்தமது திருச்செவிசார்த்தியருளல்வேண்டும் பதினான்கு வருடகாலமாய்த் தேவரீரோடு கானகமெல்லா நடந்து, காய்கனிமுதலிய பக்ஷணங்களைத் தேவரீரமுதுசெய்வதற் காய்ந்துதேடிக் கொணர்ந்து, கங்குலும்பகலுங் கண்ணுறங்காதபடி காத்து, தன்னைப்பொருத மாயவரக்கரையெல்லா மடியவாற்றி அந்தகபுரத்திலேற்றி, அதிகாயனையும் இந்திரஜித்துவையுங் கொன்று, இராவணனுக்கும் பலவிடர்களைச் செய்து உமதுதம்பி மிகவுநொந்திருக்கின்றான். ஆதலால் தேவரீரிவைகளை யாலோசித்து, இப்பணியை அடியேற்குப் பிரசாதிக்கவேண்டும் என்றார்.

உடனே சத்துருக்கனாழ்வானெழுந்து சக்கரவர்த்தித் திருமகனார்க்குத் தீர்க்கதெண்டன் சமர்ப்பித்து அஞ்சலியஸ்தராய் நின்று, சுவாமி! தேவரீர் வனவாசமெழுந்தருளினபோது பதினான்கு சம்வத்சரம் இக்கப் பரதாழ்வான் மரவுரியுஞ் சடைமுடியுமாய்க் கனிகிழங்குமுண்டு செய்துகொண்டு, தமது கட்டளைப்படி அயோத்தியினின் றரசாளில் அவனியோர் பழிப்பரென்று தேவரீர் பொன்னடிநிலையை நன்முடியாகக்கொண்டு நந்திக்கிராமத்தில் நல்ல நித்திரையுமில்லாமல் இராச்சியபாரசிரமத்தை அநுபவித்தருளினார். அப்படி வருந்தினவரை இன்னமும் வருந்தும்படி நியமிப்பதினும் அந்தக் கயிங்கரியத்தை அடியேனுக்கு நியமித்தால் நியமனப்படி நடக்கச்சித்தமாயிருக்கிறேனென்று விண்ணப்பஞ் செய்தார்.

## ஸ்ரீராமபிரான் இலவணாசுரனை வதைக்க சத்துருக்னரை மதுபுரிக்கனுப்பல்.

கவி.

முனைக்களத்தெதிர்ப்பினிந்த மூவுலகத்திலுள்ளோர்
உனக்கெதிர்நிற்குமாற்ற லுடையரோவுயர்பொற்றோளாய்
சினத்திறலசுரன்றன்னைத் தென்புலத்தேற்றித்தூயோர்
மனத்திடர்தீர்த்தியென்றான் மனுகுலத்துதித்தவள்ளல்.

இப்படியென்று சத்துருக்னர் சொல்லவே அதைக்கேட்ட ஸ்ரீராமப்பிரபுவானவர் அப்பா சத்துருக்னா! நீர், யுத்தகளத்திற் பிரவேசிக்கின் இந்தமூவுலகத்தினரும் ஒருங்கு சேர்ந்தாலும் உன்னெதிர் நிற்பதற்கடுத்த பலத்தையுடையவர்களாவர்களோ? ஆகமாட்டார்கள். நீயோ புஜபலபராக்கிரம சாமர்த்தியமிகுந்தவன். நீயே சென்று இவர்கள் சொல்லும் இலவணாசுரனைவதைத்து அவர்களுள்ளத்தைக் களிக்கச் செய்வாயென்று சொல்லினர். நாம்சொல்லுமின்னொரு வார்த்தையை நீதடைசெய்யாதேற்றுக்கொள்ளவேண்டும். அதாவது, அவனைமடித்து அவன்ராச்சியத்தை நீயே ஆளவேண்டும். இயாதொரு ராச்சியத்தையும் பாழ்ப்படுத்துவது தருமமன்று. ஆதலால் உனக்கிங்கேயே பட்டாபிஷேகஞ் செய்கிறேனென்று அருளிச்செய்தார்.

அக்கால் ஸ்ரீசத்துருக்கனாழ்வான் கிஞ்சித்து நாணமும் விசனமுமுற்று, திருமுகமண்டலம் கீழ்நோக்குள்ளவராய்த் தமயனாரைக் குறித்து, சுவாமி என்னாண்டவனே! மூத்தோரிருக்க இளையோரரசாள்வது நெறியல்லவெனக் கேட்டிருக்கிறேன். ஆயினுமிது அறநெறியெனவும் அன்றெனவுமெடுத்துப் பேச அடியேன் சத்தியுள்ளேனல்லேன். பரதாழ்வான் முயன்றதைத் தடுத்த அபசாரத்திற்குப் பயனாய்க் கயிங்கரியத்தை இழக்க நேரிட்டதே: இனி சுவாமிநியமனத்தை உள்ளங்கனஞ் செய்தால் என்னநேரிடுமோவென நடுங்கி யாதும்புகலத்திறமின்றி வருந்துகின்றேன். ஆதலால் தேவரீரே கருணைகூர்ந்து அடியேன் துயரத்தைத் தீர்க்கவேண்டுமென்று விண்ணப்பஞ் செய்தார். அதுகேட்ட சக்கரவர்த்தித் திருமகனார் மந்தஹாசத்தோடு அவரைநோக்கி,

நெ 92. சத்துருக்னர் வான்மீகராச்சிரமமடைந்திருக்கையில் சீதைகுசல வரைப் பெறுதல்.



சத்துருக்னர் சியவனமுனிவருதவியால் இலவணனைச்சங்கரித்தல்.



உத்தரகாண்டம். இலவணசுரன்வதைப்படலம்.



அப்பா சுமித்திரையின் இளையசிங்கமே! மூத்தோர்மொழியை யேற்றுக் கொள்வதே பெரிய தருமமாதலின் இக்கட்டளையை நீ அங்கீகரித்தல் வேண்டும். நானிட்டபணியை யேற்றுச் சும்மாவிருவென்றுகூறி மந்திரிமாரைக் கொண்டு அபிஷேகத்துக்கு வேண்டுவன சடுதியிற்சேகரிப்பித்து, குலகுருவாகிய வசிஷ்டமாமுனி முதலியோரால் இலவணராச்சியத்திற்கு அரசாக அவ்விலட்சுமணனுஜருக்குப் பட்டங்கட்டி யருளினர். அதைநாட்டார் நகரத்தார்முதலியோரும் தேவரும் ஆமோதித்துக் கொண்டாடினர்கள்.

பின்பு ரகுகுலோத்தமர் அந்தணர்முதலிய நால்வகை வருணத்தினரோடு சதுரங்கசேனைகளும் சத்துருக்கனரோடுகூடப் போகும்படி நியமித்து, அவ்விளையதம்பியையெடுத்து மடிமே லணைத்துக்கொண்டு, அடாகுழந்தாய்! இச்சேனைமுதலிய பரிவாரங்களோடுகங்கைவெள்ளம் பெருகாமுன்னமேஅதைக் கடந்துசெல்லுக. நீயோ வருஷகாலத்திற்சென்று அந்த லவணன் உண்டிக்காகத்திரிந்து, தன்னிடஞ் சேருமுன்னே ஒன்றியாயெதிர்த்து யுத்தஞ்செய்து பகைவனை மடிக்கக்கடவாய். அவனுட்புகுந்து சூலம் கைக்கொள்வானாயின் அவனைவெல்வதெளிதன்று. சிவபிரானுடைய வரத்தை வீணாக்கக்கூடாது. இதோ உனக்கு ஓரம்புதருகிறேன். இதுமதுகயிடவரைச் சங்கரிக்குநிமித்தம் பாற்கடலிற் பள்ளிகொண்ட பரமபுருடன் உண்டாக்கியது. இதற்குத்தப்ப யாராலுமாகாது. இதைநான் இராவணன்மேலும் பிரயோகியாது வைத்திருந்தேன். இது உன்கையதாக உனக்கு வெற்றிவரத் தடையில்லை. நீமாற்றானை மடித்து நீதியோடு நெறியோடும் பிரகிருதிகள் மனமகிழ வரசாளக்கடவையெனநியமித்து வாழ்த்தியருளினர். அந்நியமனத்தைச்சத்துருக்கனர்சிரமேற் கொண்டு, தம்மோடுவந்த சனங்களையும் படைகளையு முந்தியனுப்பித் தக்கவிடத்திலிருக்கும்படி கட்டளையிட்டு,ஒருமாதம் தாம் அங்கேயிருந்து,மழைக்காலங் கிட்டினவுடனே புறப்பட்டு அண்ணன்மார் தாய்மார் குருமார்களைக் கும்பிட்டு வலம்வந்து அவர்களிடத்து வாழ்த்தோடு விடைபெற்று, இரண்டு நாளில் வான்மீகமுனிவ ராச்சிரமஞ்சேர்ந்து அவரைப் பூசனைசெய்து களிப்புற்று வீற்றிருந்தார்.

## சத்துருக்னர் இலவணசுரனைச் சம்ஹரிக்க ஸ்ரீராமரிடத்தில் விடைபெற்றுச் செல்ல வழியிலுள்ள வான்மீகராச்சிரம மடைந்து கல்மாஷபாத மகாராஜன் சரித்திரங்கேட் டிருக்கையில் சீதாபிராட்டி குசலவனைப்பெறக் கேட்டு வருந்தல்.

கவி.

அங்கமுனியடிவணங்கி யவன்செய்தபூசனைகொண் டன்றுதங்கி
மங்கைசனகன்பயந்த மடப்பாவையவ்விரவில் வயிறுவாய்ப்பச்
செங்கமலவிழிசெவ்வாய்ச் சிறுவர்பிறந்தாரிருவ ரென்றுசெப்பப்
பங்கமிலாமுனியெழுந்து பரிவோடுபிள்ளைகளைப் *பற்றிப்பார்த்தான்.

அங்கே பக்கத்தில் பெரியதொரு யாகசாலை யிருக்கக்கண்டு அம்முனிவரைநோக்கி, சுவாமி! இதுயாருடைய யாகசாலையென் வினவினர். அதற்கத்தாபதத்தலைவர் அருளிச்செய்யலாயினர். கேளுமையா காகுத்தமணியே! உமது திருவமிசத்திலே சுதர்சனனென்னு மரசனுக்கு வீரசஹன் என்றொரு குமாரரிருந்தார். அவரறத்திலு மறத்திலும் பேர்பெற்றவர். ஒருகால் அவர் வேட்டைக்குச் சென்றிருக்கையில் புலிவேடம்பூண்டு மிருகங்களைத் தின்றுகொண்டிருந்த இரண்டிராக்கதச் சிறுவரைக்கண்டு, இருவரில் ஒருவனை அம்பினால் வீழ்த்தினார். மற்றொருவன் அரசன்மேற் பகைபாராட்டி, ஆ! நல்லது மன்னவனே! இப்பழியை யெவ்விதத்தேனும் யான் தீர்ப்பேனென்றுகூறி மறைந்துபோயினன். பின்பந்த நரபதி இராச்சியமடைந்து மித்திரசஹன் என்கிற பெயர்கொண்டு அசுவமேதமியற்றி முடித்தவளவில், குருவாகிய வசிஷ்டமாமுனி அங்குவந்து இராசனை நோக்கி, என்றனுக்குப்புலாலோடுகூடிய மதுரமான ஆகாரந்தருகவென்று கூறினார். அதற்கு மித்திரசஹன் நல்லதென்று தன்பாகத்தலைவனுக்குக் கட்டளையிட, அவ்விராக்ஷசன் பாகனாக வந்து நரமாமிசஞ் சமைத்துவைத்துத் தன்னிடஞ் சேர்ந்தான்.

இப்பால் நரேந்திரனானவன் பாகத்தலைவனாகிய ராக்ஷசனுடையமாயையையறியாமல் அவ்வன்னத்தை ஆசிரியற்கு அளிப்பிக்க, அவர் அதனையறிந்துமிகச்சினந்து, அடா அதமா! என்றனுக்கு அசுத்தமான ஆகாரம் இட்டனையாதலின் நீ இவ்வாகாரம் புசிப்பவனே ஆகக்கடவையெனச் சபித்தனர். சோமகனும் தன்னிடத்துக்குற்றமில்லாதிருக்கச் சபித்தமையால் தானும் அக்குருவுக்குச் சாபமிடக்கையில் நீரேந்தினன். அப்போது அவன்மனைவியாகிய மதயந்தியானவள் ஆசிரியருக்குச் சாபமிடுவது தகுதியல்லவென்று மறுத்ததனால், அவ்வேந்தன் அந்நீரைத் தன்தாளின்மீது பெய்தனன். அதனால் பாதம்வெம்பியதுபற்றி அவற்குக் கல்மாஷபாதனென்கிற பெயருண்டாயிற்று. பின்பவ்வரசன் இஃதிராக்கதன்செய்த வஞ்சமென்பதை யறிவித்துக் குருவைப்பணிந்து போற்ற, அவருமிராக்ஷச மாயையென்று அறிந்து இரக்கமுற்றவராகி, மன்னவனே! நான் கோபங்கொண்டு சொல்லியவார்த்தை தவிராது. ஆயினும் ஒரு வரந்தருகிறேன். அதாவது — இச்சாபத்தைப் பன்னிரண்டாண்டு அனுபவித்துப் பின்னர் அரசாளக்கடவை. அன்றியும் சாபந்தீர்ந்தபிறகு முன்னுகர்ந்த துன்பமியாவும் மறக்கக்கடவையென்று அநுக்கிரகித் தருளினர்.

அப்படியே அப்பார்த்திவனுஞ் சாபந்தீர்ந்து பழையபடி இராச்சியபாரநடாத்திவந்தனன். அந்த மகாராஜா அசுவமேதஞ்செய்த சாலை இது. என்று வான்மீகியுரைக்கக்கேட்ட சத்துருக்கனாழ்வான்பெரியோர்பிரபாவத்தைச்சிந்தித்துக்கொண் டிருந்தான். இப்படியிருக்க - அவ்விரவிலேயே சீதாபிராட்டி இரண்டு குமாரரையீன்றாள். அச்செய்தியைச் சில முனிகுமாரரா லறிந்த வான்மீகமாமுனிவர் அங்குசென்று, குழந்தைகளிருக்கும் வடிவழகு வண்ண



முதலியவற்றைக் கண்டுகளித்து, குசைகளின் நுனியாலே மூத்தவனையும் அதன்புறத்தாலே இளையவனையும் காப்புச்செய்வித்து, இக்காரணத்தாலேயே மூத்தோனுக்குக் குசன் என்றும் — இளையோனுக்கு இலவன் என்றும் நாமகரணஞ்செய்ய உத்தேசித்து, தகுந்தகாலத்தில் அப்படியே செய்தார். சத்துருக்கனாழ்வான் அங்கிருப்போரால் அச்சேதிதெரிந்து, தமக்குளொன்றுந்தோன்றாதவராய் இதனைச் சிந்திக்கின்றார். ஐயோ! இப்பிள்ளைகளயோத்தியிலுற்பவிக்கப்பெறாது பறவைகளொலியே யன்றிப் பஞ்சகருவிகளொலி சிறிதுமில்லாத இக்காட்டிற் பிறந்தார்களே யென்று வருந்துகின்றார்.

கவி.

பொய்யாதவேதியர்க்குப் பூதானங்கோதான முதலபண்ணிக்
கய்யாரநிதிவீசிக் காகுத்தன்காளையர்கள் பிறந்தாரென்று
மய்யார்பூம்பொழினகரி மகிழ்வெய்திமணிமுரச மறைந்துநின்று
நெய்யாடலாற்சனங்க ளென்படுமோவின்றென்று நினைந்துநைந்தான்.

இவர்கள் நமதுபொன்னகரிற் பிறந்தார்களாகில் பொய்யாத வேதியர்களுக்கெல்லாம் பூதானங் கோதானமுதலிய பலதானங்களைச் செய்து, கையாரநிதிக்குவியல்களைவீசி, காகுத்தனுக்குக் காளையர்கள் பிறந்தார்களென்று நகரத்தினரெல்லா மகிழ்வெய்தும்படியாக முரசமறைந்து, நெய்யாடல் முதலாகிய சம்பிரமங்களினால் சனங்கள் யாவரும் என்ன சந்தோஷத்தை யடைவார்கள்? ஆ! ஆ! இஃதென்னகுறை? என்று சிந்தித்து தமக்குள்தாமே நைந்தார்.

## சத்துருக்னர் அங்கிருந்து யமுனாதீரத்துள்ள மதுவனமடைந்து சியவன முனிவரால் இலவணாசூரன் விருத்தாந்த மறிதல்.

கவி.

சந்தியவந்தனைசெய்து தபோதனரோ டினிதிருந்தசமயத்தந்த
அந்தணரையடிவணங் கியடலரக்கர் குலத்தினைவேரறுத்துவந்த
சுந்தரவில்லிக்கிளையான் சொல்லுவானிலவணன்கைச் சூலஞ்செய்யும்
வெந்தொழிலுமவன்வலியும் விரித்துரைமினெனவவரும் விளம்பலுற்றார்.

இப்படி ஒருவிதத்தில் இன்பமு மற்றொருவிதத்திற் றுன்பமுங்கொண்ட சத்துருக்கனாழ்வான் காலையிலெழுந்திருந்து பயணமாகி, ஏழுநாள்வழித்தங்கி மதுவனம்போய்ச் சேர்ந்து சியவனமுனிவரை நோக்கி, ஐயா! இந்த மதுமகனுடைய பலபராக்கிரமங்களையும் விசிதமாயறிய விரும்புகிறேன் இவனாற்பட்டவர் யார்யார்? என வினவ அத்தவசிகுலதிலகர் உரைக்கலாயினர். கேளும்காகுத்தசிங்கமே! இவனாற்பட்டார்க்கு அளவில்லை. அவற்றையெல்லாஞ் சொல்லப்பொழுதில்லை. சாரமாயொன்று கேளும். உமது திருவமிசத்தில் யுவனாசுவனென்பவருடைய குமாரர் மாந்தாதா என்பவர்மகாபல பராக்கிரமசாலியாயும், மகாமகிமையுள்ளவராயு மிருந்தாரெனக் கேள்

வியுற் றிருக்கின்றோம். அவரிப்பாதகனாலேதான் இறந்தார். எப்படியென்றால், அந்தமகாபுருஷன் இந்திரனோடு அர்த்தாசனத்திலிருந்து தேவராச்சியத்திற் பாதியாளவேணுமென்று கருத்துக்கொண்டு அதற்கேற்ற தவமுதலான முயற்சிசெய்துவருகையில், தேவர்கோன் பொறாமைகொண்டு வருந்தி அவ்வரசனிடம்வந்து இதனைச் சொல்லுகிறான்.

ஓ ராஜாதிராஜனே! நீர்செய்யுமுயற்சி தெரியும். அது பயன்படாமற் போகாது. அதிருக்க — இந்நரலோகத்திலே உமதுபிரதாபஞ் செல்லாதிருக்கச் சுரலோகத்திலே அதைச்செலுத்த எத்தனிக்கின்றீரே. அதுநேராகத்தோன்றவில்லையென்றியம்பினன். அதுசெவியுற்றமாத்திரையில் மாந்தாதா விம்மிதங்கொண்டு, ஆ! அப்படியா? எங்கேயெனதுபிரதாபஞ் செல்லவில்லை? அதனை நீரெனக் குணர்த்தவேண்டுமென்றுகேட்டலும் அச்சுரபதி அவரைநோக்கி, ஓ நரபதீ! மதுவின்மைந்தன் இலவணன் எனவொருவனுளன். அவன் நற்கிரியைகளையழித்து நற்றவர்களைப்புசித்து நானிலநடுக்கி வருகின்றான். அவனை நீர்வென்றிலீரென்னவும் அவ்வேந்தன்வெட்கித்தலைகுனிந்து, அவ்விந்திரனுக்கு வந்தனமியற்றித்தன்னகர்க்குச்சென்று, நாற்படையுங்கூட்டிக்கொண்டு மதுபுத்திரன் வதியுமிடஞ்சேர்ந்து அவனைப் போர்க்குவிளித்தார். அவ்விராக்கதன் சூலமுங்கையுமாகவந்து நின்றான். அரசன் எத்தனைமுயன்றும் பயன்படாமல் சேனையோடு தான் அச்சூலத்திற்கிரையானரென்று சொல்லிமுடித்தனர். பொழுதுபுலர்ந்தது. இனி அவ்வரக்கன் சூலமில்லாமல் ஊணுக்காகவெளியிற்செல்லுவான். அவன் திரும்பிவருகையில் நீர் அவனையெதிர்த்துச் சங்கரிக்கவேண்டும். ஆதலின் எழுந்து அவன்வதியுமிடத்து வாயிலில் யுத்தசன்னத்தராயிருக்க வேண்டுகிறோமென்றார்.

### சத்துருக்னர் சியவனமுனிவரால் இலவணாசூரன் உளவையறிந்து மதுபுரமடைந்து வாயிலில்நின்று அவன்வரவுபார்த்திருந்து அவனுடன் போர்புரிதல்.

கவி.

என்றுதிருமறைமுனிவ னிலவணன்றன்வலியெல்லா மியம்பக்கேட்டு
வன்றிறற்போர்ச்சத்துருக்கன் மதுபுரமாமாநகர வழிக்கொண்டந்த
குன்றனையோனுயிரலைப்பப் புறப்பட்டானெனச்சாரர் கூறக்கேட்டுச்
சென்றனனங்கரெய்திச் செழுமதில்வாயிலினின்றான் சேனைசூழ.

இப்படியென்று சியவனமுனிவர் இலவணாசூரனுடைய வலிவுகளையெல்லாஞ் சொல்லக்கேட்ட சத்துருக்னமகாராஜர் மதுபுரமடைந்து அவனெங்கேயிருக்கிறானெனக்கேட்க அவன் வெளியிலுள்ள ஜீவசெந்துக்களைக் கொல்லப் போகிறானென்று சாரணர்கள் சொல்லத்தெரிந்து அவனதுவாயிலின்கணிருந்து அவன்வருவழியைப் பார்த்துக்கொண்டு வில்லில் நாணேற்றிக்கொண்டு ஆண்டேகின்றார். அக்காலந்தலவணன் எங்குந்திரிந்து பலஜந்துக்களைக் கொன்றெடுத்துக்கொண்டு வருகையில் வாயிலிலிருப்பவரைக்கண்டு, நீயார்



இங்குநிற்க யாதுகாரணம்? எனவினவவும் சத்துருக்னர் அவனைநோக்கி, அடா ராக்ஷசா! இயான் தசரதகுமாரன். ஸ்ரீராமசந்திரருடைய தம்பி. உன்னோடு தொந்தயுத்தஞ்செய்து உன்னைப்பரலோகமனுப்ப வந்திருக்கிறேனென்றார். அதுகேட்ட விராக்கதன் நகைத்து, ஓ! ஓ! நான்வெகுநாளாய் உங்களைக்காண விரும்பியிருந்தனன். நீ என்குலத்தலைவனாகிய இராவணனைவதைத்தவர்க்கத்திற் சேர்ந்தவனல்லவோ? ஆதலினுன்னை இன்றேமிருத்துவுக்கு அதிதியாக்குகிறேன். சற்றிரு உள்ளேசென்று படைக்கலங்கொண்டு வருகிறேனென்றான். அதுகேட்ட இலட்சுமணானுஜர் — அதுகூடுமா? உன்னையினியொருநிமிஷமாகிலும் புறஞ்செல்லவிடுவேனா? கையிலகப்பட்ட பகைவனைவிடுகிறவன் தான்சாகமருந்துகொள்பவனன்றோ? ஆகவே நீ நின்றநிலையிலேயே போரிடவேண்டுமென்றருளிச்செய்தார்.

இச்சொல் செவிசாரவே அப்பாதகனுக்குக் கோபம்பொங்கிக் கையோடு கைபுடைத்து எயிறுதின்று இதழ்கவ்விக் கொண்டு, அடா மனிதப்பதரே! உன்னண்ணன் தசக்கிரீவன் முதலானோரைக் கொன்றதைக்கேட்டுப் புன்மையான மனிதரோடுபோர்புரிவ திழுக்கென்றிருந்தேன். இலட்டுகம்வாயில் வீழ்வதுபோல இன்றுநீ வலுவில் வந்ததனால் உன் கருவத்தையடக்கவேண்டும். இதோ யுத்தசன்னத்தனாய் நின்றேனென்று ஓர் பெருமரத்தைப்பிடுங்கிச் சத்துருக்னர் மார்பிலெறிந்தான். அவரதனைக் கூரிய பகழிகளாலே பலதுண்டாக்கித் தள்ள, இலவணன் மறுத்தும்பல பாதவங்களைப்பறித்து மோதக்கண்டு கீருத்திகர் ஒவ்வொன்றையு மூன்றுநான்கு அம்புகளைக்கொண்டு சிதைத்துத் தள்ளி, மழைபொழிவதுபோல் அவ்விராக்கதன்மீது அம்புகளைப் பொழிந்தனர். அவனோ அதனாற்சிறிதும் வருந்தாதவனாகி யொருபெரிய விருக்ஷத்தாலவரது சென்னியிற்புடைக்க, அப்புடைத்தலால் அவர்சோர்ந்து மூர்ச்சையடைந்தார். அதுகண்டு தேவருமுனிவரும் ஹாஹா எனக்கதறினார்கள். அந்நிருதன் அவர் தரையிற் சாய்ந்ததுகண்டு இறந்தாரென்றே கருதி, தான் குதூகலத்தோடு கொணர்ந்தபூச்சிகளைப் புசிக்கத் தலைப்பட்டானேயல்லது சூலங்கொண்டுவர நினைத்திலன். அப்பால் சத்துருக்னனும்வானோ முகூர்த்தத்திற்குள் அறிவொன்றி யெழுந்து மிக்கசீற்றமுற்று, ஸ்ரீராமபிரான் தமக்குப் பிரசாதித்திருந்த விஷ்ணுசாயகத்தைக் கோதண்டத்திற் சந்தானம்பண்ணி விடுத்தார். அக்கணையானது சூரியனுதித்தாலென்ன ஜாஜ்வல்யமாய் உலகெல்லாந் தீய்ந்துபோமாறு வானத்திற் செல்லக்கண்டு, அமரரும் அஞ்சியார்ப்பரித்தோடிப்பிரமதேவனைவினவினர். அவர் இதுதிருமாலின்சரம்-அஞ்சன்மின்—அவரது அம்சாவதாரமான சத்துருக்னனும்வான் இலவணன்மேற் பிரயோகித்தனனென்றுரைத்ததனால் மனத்தளர்ச்சியற்றிருந்தார்கள்.

### சத்துருக்னர் இலவணாசூரனை வதைத்தல்.

கவி

பெண்ணுருவிபாகன்பாற் பெருசூலப்பெருவலியாற் பெருகும்பாவம்
உண்ணிருமியாவவுண ஹுரமுருவியுபர்வரைக ளுருவியேகி

மண்ணுருவிமண்ணின்கீழ் மாநாகருலகுருவி மறித்துமீண்டு
திண்ணியதோட்சத்துருக்கன் செங்கையில்வந்திருந்ததந்தத் தெய்வவாளி.

அப்படிபுறப்பட்ட அக்கணையானது உமாதேவியை இடப்பாகத்தில்வைத்த பரமேஸ்வரனிடத்திலிருந்து பெற்ற சூலாயுதத்தின்வல்லமையால் ஒருவரும் நிகரற்ற பராக்கிரமசாலியாகிய இலவணசூரன்செய்த மாபத்தையெண்ணி அவனது மார்பிற்றைத்து அங்குநில்லாதுருவி, மலைகளையுருவி, பூலோகத்தையுருவி, பாதாளவுலகத்தையுருவி எங்குநிற்காது ஸ்ரீசத்துருக்ன மகாராஜனது அம்பறாத்தூணியில்வந்து சேர்ந்தது. அவனோ குறையிற்பட்ட பெருமரம்போல்வீழ்ந்து யமனுக்குவிருந்தாயினான். அவன் வசத்திலிருந்த முத்தலைவேலானது மீண்டும் சூலபாணி சன்னிதானமேசேர்ந்தது: இவ்வாறு லோககண்டகனாயிருந்த லவணன் சங்கரிக்கப்பட்டவுடனே ஓரம்பினால் மூவுலகத்தையுமுய்வித்த இராகவாநுஜனைத் தவசிகளும் வானவரும்புகழ்ந்து, ஜயவிஜயீபவ ! எனவாழ்த்திப் பூமழைபொழிந்தனர்.

பின்பு சுவர்க்கத்தாரெல்லாம் அந்தக்காகுத்த வீரர்க்கு எதிரில்வந்து, ஐயா ! மிகக்கொடியனான லவணனைச் சங்கரித்துப் புவனமெல்லாங் காத்தீர். ஆதலின்யாம் சாலவுவப்புற்றோம்.எம்மிடத்து நீர்வரம்வேண்டுகவெனவும்,அவர் எனக்கு வேறுவரமொன்றும் வேண்டாம். இவ்விடம்வசிப்பதற்கு ஏற்ற நகரமாதல்வேண்டுமென வுரைத்தார். அவர்கள் அங்ஙனமே யாகுகவெனக்கூறித் தம்முலகுக்கேகினர். உடனே அதுஅர்த்தசந்திராகாரமாய் ரமணீயமும் விசாலமுமான மாடமாளிகை கூடகோபுர மண்டப முதலியவற்றாலும், எல்லாப்பண்டங்களுநிறைந்தசெல்வங்களாலும்,தந்தந்நிறை தவறாத நால்வகை வருணத்தாராலும் விளக்கமுற்று; பலசெல்வமு மல்கியதோர் நகரமாயிற்று. மதுவென்பவன் கைக்கொண்டிருந்தது பற்றியும், கண்ணுக்கினிமையானது பற்றியும், அதற்குமதுபுரமெனத் திருநாமஞ் சார்த்தப்பட்டது. அது முன்பன்னிரண்டாண்டாய் அழிந்துகிடந்து பின் வீரசேனதேசத்துத் தலைப்பட்டணமாய் யமுனாநதிக்கரைக்கோரணியா யொளிராநிற்கக்கண்ட சத்துருக்னர் தமதுசேனை சேனாதிபதி மந்திரிமுதலாயினோரை அவ்விடத்துத்தக்கபரிசாயிருத்தி, இலவணன் குடியிருந்தவிடத்தையே அரண்மனையாக்கி யலங்கரித்து எழுந்தருளியிருந்தார்.

## சத்துருக்னமகாராஜர் மதுபுரியையாண்டு ஸ்ரீராமரைக்காண மீண்டு அயோத்தியடைந்து அவருத்தரவால் மதுபுரஞ்சென்று அரசிருத்தல்.

கவி.

தய்யலர்பல்லாண்டிசைப்பச் சாமரைகள்பணிமாற தரளமோங்கும்
தெய்வமாவின்னிசைகள் செவிநுழையமாகதர்க டிரண்டுபோற்ற
மெய்பெலாமாபூரணம் விரிசோதியால்விளங்க விண்ணோர்வாழ்த்தப்
பொய்யிலாவுள்ளத்தான் பொங்கணைமேல்வீற்றிருந்தான் புலவர்போற்ற.



இவ்வாறு சத்துருக்னர் பன்னிரண்டாண்டு அந்நாட்டையாண்டு ஸ்ரீராமபிரானுடைய திருவடிகளைச்சேவிக்கப் பேரவாக்கொண்டு, துரைத்தனத்தை மந்திரிகள் வசமொப்புவித்து, ஒருநூறு இரதமும் சிறிதுபடையுங்கொண்டு பிரயாணப்பட்டு, ஏழெட்டுநாள் வழித்தங்கி, வான்மீகமுனிவராச்சிரமத்திற் கெழுந்தருளி அத்தபோதனரை யிறைஞ்சி அவரளித்த பிரசாதநுகர்ந்து வீற்றிருந்தார். இப்படியிருக்கையில் அந்த முனிவரர் பற்பலகதைகளையியம்பி மதுபுத்திரனை மாள்வித்ததையுகந்து, ஓ இரகுகுலதிலக ! நீர் இலவணனோடு நிகழ்த்தியவமரை யான் இந்திர சபையிலிருந்து நோக்கினன். வெகுசிலாக்கியமா யிருந்தது. என்மனதிலு மிக்க உவப்புண்டாயிருக்கின்றது. ஆதலால் அதன்பயனாக உம்மை யுச்சிமோக்கின்றேன். எனவெழுந்து தழுவி யுச்சிமோந்து சிறப்புச்செய்தனர். இங்ஙனம் அவரால் கொண்டாடப்பட்டு நின்ற சத்துருக்னாழ்வார், குசனுமிலவனும் தூரத்தில் மறைவிருந்து ஸ்ரீராமசரித்திரமாகிய ராமாயணத்தைத் தக்க தாளலயைகளோடு யாழ்விட்டு மதுரமாய்ப் பாடக்கேட்டு, அதெல்லாம் அப்போதுதான் நடந்ததுபோல அநுபவத்தில்வர மனந்தளர்ந்து கண்ணீர்மல்க வொருமுகூர்த்தகாலம்பிரக்ஞையற் றிருந்தார்.

அவரோடுகூட வந்தவர்களும் அப்பாடலைச் செவியுற்றுத் தலையிறங்கி முகம்வாடி, இதென்ன ஆச்சரியம் ? எப்போதுநடந்த சரித்திரமிது ? இயார் பாடுகின்றனர் ? ஈதொருகனவோ ? நனவுதானோ ? என்றயிர்த்துத் தம்மரசனிடஞ்சென்று, இதென்ன வான்மீகமுனிவரை வினவியறிந்து தெரிவிக்கவிரும்புகிறோமென்றனர். அதற்கவர் தம்பரிவாரத்தாரை நோக்கி, மகாரிஷியின் ஆச்சிரமத்தில் எத்தனையோ அதிசயங்களிருக்கும். நாம்வினவ வொண்ணாது. என்றவர்களைப் போகவிடுத்துத் தமக்கென்று சமைத்தவிடஞ்சென்று படுத்து ஸ்ரீராமகதா சங்கீத நினைவுகொண்டு விசனத்தினால் நித்திரையின்றியே இரவைக்கழித்தனர். கதிரவன் கிரணங்களாகியகைகளால் இரவென்னுங்கரிய போர்வையை நீத்து விளங்கியபின் இலட்சுமணசகோதரர் காலைக்கடன்களையனுட்டித்துப் புற்றிற்பிறந்த பெருமுனியிடம் விடைபெற்று, அயோத்தியா நகரத்தை நண்ணிச் சக்கரவர்த்தித் திருமகனாரைத் தெண்டன்சமர்ப்பித்து. நேத்திரத்தி னீர்ததும்பநின்று, சுவாமி ! தேவரீர் நியமித்தபடி இலவணனையொழித்து மதுரையைச் சீராக்கி இராச்சியபரிபாலனஞ் செய்துவந்தேன். பன்னிரண்டுவருடங் கழிந்தன. இனி சுவாமி திருவடிவாரத்தை விட்டுப்பிரிய மனமற்றிருக்கிறேன். தாயில்லாக்குழவிபோ லென்னைத் தனியேவிட்டு அநுதரிப்பது தேவரீருக்குத் தகுமோவென்று விண்ணப்பஞ்செய்தார்.

அப்போது தமையனாரும் தம்பியை யணைத்துக்கொண்டு, அப்பா ! விசனப்படாதே: பிரிவிற்குக்கரைதலும், படைக்குக்கூசுதலும், போர்க்குப்பின்னிடலும், க்ஷத்திரியதருமமன்று கடைசித்தம்பியாகிய உன்னைப்பிரிந்திருப்பதில் எனக்குத் துன்பமில்லையா? ஆயினும் அறத்துக்குயாரு மடங்கவேண்டுவ

காதலின்பொறுத்துக்கொண்டிருக்கின்றேன். நீயுமிவ்வாறேயறத்தைநோக்கிக் கடவுள்கட்டளையாலமைந்த ராச்சியாதிகாரத்தை நிறைவேற்றக்கடவை. வேண்டுமானபோது இங்குவந்து என்னைக் கண்டுபோகலாம். இப்போது எழுநாளிங்கிருந்து மதுரைக்கு ஏகக்கடவையென்று தேற்றியருளினர். இப்படி தேற்றியும் சத்துருக்னந்தேருமல், கட்டளையை மறுக்கக்கூடாதென்று அப்படியேயுடன்பட்டு, இலட்சுமணனையும் - பரதரையும் — தாய்மாரையுங்கண்டு தெண்டனிட்டு, மற்றுமுள்ளோரையும் தக்கபரிசிலுபசரித்து எழுபகல்கழிந்தவுடனே புறப்பட்டு மதுபுரிக்கு எழுந்தருளி மாதர்கள் பல்லாண்டிசைக்க முத்தாலங்கரித்த சாமரைவீச, தெய்வீகமாகிய இசைகளைச் செவியிற்பொருந்த விசைக்க பட்டுவான்கள் புகழ்சொல்ல, தக்கதகாயமாய் ஆபரணங்கள் திருமேனியில் பிரகாசிக்க, தேவர்களெல்லாம் பூமழைபொழிந்து வாழ்த்த வித்துவான்களெல்லாம் புகழ்ந்துபோற்ற பொய்யில்லா மெய்நிறைந்த நெஞ்சத்தையுடைய சத்துருக்னமகாராஜன் சிம்மாதனரூடராய் மதுபுரத்தையரசுபுரிந்தனர்.

இலவணசூரன்வதைப்படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

பதினைந்தாவது,

## சம்புவன்வதைப்படலம்.

இப்படலத்தில் ஸ்ரீராமருடைய கொலுமுகத்தில் ஓர் பிராமணனும் பிராமணியும், இறந்துபோன தங்கள் பிள்ளையைக் கொணர்ந்து வைத்துமுறையிட, ஸ்ரீராமர் நாரதமுனிவரால் அப்பிள்ளையிறந்ததற் கேதுவான சம்புவனைத்தேடி வதைத்து அகஸ்திய ராச்சிரமமடைய, அம்முனிவர் அவருக்கு சுவேதராஜன் கதைகூறி அவனாற் றும்பெற்று வைத்திருந்த ஆபரணத்தையளிக்க, அப்பாலம்முனிவரால் மனுகுலத்தோனாகிய தண்டனாலாளப்பட்ட விராச்சியம் தண்டகாரண்யமானவாறு கேட்டு அயோத்தியை யடைந்தமை சொல்லப்படுகின்றது.

ஸ்ரீராமர் கோலுமுகத்தில் ஓர் பிராமணனும் பிராமணியும் இறந்துபோன தம் பிள்ளையைவைத்து முறையிடல்.

கவி.

இளையவனேகவிராகவனயோத்தி யிருந்தரசாள்கின்றவேல்லை
விளைபெருமூப்புவெண்ணரைத்தலையோர் வேதியன்ருத்திரேனும்
வளர்தருந்துயரான்மரித்ததன்மகனை மடியிலேவைத்துயிர்க்கெல்லாம்
களைகணாயுள்ளகாவலன்கோயில் வாயிலிற்சதறிடுங்காலை.

No. 93. அகஸ்தியர் ஸ்ரீராமருக்கு சுவேதனைற்றும்பெற்றஆபரணமளித்தல்.



ஸ்ரீராமர் உயிர்த்தெழுந்த பிராமணப்பிள்ளையையும் தாய்தந்தையரையுஞ்சந்தோஷிப்பித்தல்.



உத்தரகாண்டம். சம்புவன்வதைப்படலம்.

இவ்வண்ணம் இளையதம்பியாகிய சத்துருக்னமகாராஜனை மதுபுரிக்கனுப்பி இராமச்சந்திரமகாராஜாவானவர் அயோத்தியாபுரியில் சிங்காதனரூடராயரசாக்ஷிசெய்து வருநாளையில், வயோதிக பருவம்வாய்ந்து நரைத்தமயிரையுடைய ஓர் பிராமணன் தன்பத்தினியோடு இறந்துபோன தனது அரிய ஓர் பிள்ளையை அரண்மனைவாயிலிற் கொண்டுவந்து கிடத்தினான் அப்போதப் பிராமணஸ்திரீயானவள் அப்பிள்ளையை மடியின்மீது எடுத்துவைத்துக்கொண்டு அங்கிருப்போரெல்லாங் கலங்கிவருந்தும்படியாகத் தன்பிள்ளையின்மேல் விழுந்து புலம்புகிறாள்.

கவி.

மணியேயென்றன் மாசறுசோதி யழகுக்கோ
ரணியேயென்றன் னாருயிரேயா ரமிழ்தேதேவன்
பணியேதிந்தா னேகவுனக்குப் பணியூரப்
பிணியேதந்தா யீங்கிதுவோநான் பெறும்பேறே.

முன்னைச்சென்மத் திட்டுடையேனா தலின்மோகத்
துன்னைப்பெற்றுப் போற்றிவளர்த்தின் றுனைவிட்டே
னென்னைப்போலப் பாவிகளுண்டோ வினையில்லாப்
பொன்னைப்பெற்றுத் தப்பமுடிந்தேன் பொறியற்றேன்.

பதங்களிலார்க்கும் பன்மணியார்க்கும் படியில்லாச்
சதங்கையுமொண்பொற் றண்டையுமம்பொன் னரைஞாணும்
பதம்பலவாரு மைம்படையும்மெய் யழகெல்லாம்
பொதிந்தகழுத்துங் காறையுமம்பொற் புனைபூணும்.

பட்டமுநெற்றிப் பன்மணிமுத்தின் படர்சோதிச்
சுட்டியுமம்பொற் றோடுமிலங்கொண் றுனையேயோ
வெட்டனையுஞ்சார் பில்லவனாட்டி னிடைவந்தாய்
கட்டியசற்றிக் காப்பிடவாராய் களிறேயோ.

மண்ணறுசீரு மானமுமங்க வசைபூண்டோன்
கண்ணறையன்கா குத்தனொருதிக் கடன்ஞாலம்
புண்ணுறுதீயிற் புத்திரசோபந் தனைமாற்றிப்
பண்ணறைகாய்தாய் செத்திலனென்றே பழிதூற்றும்.

என்னைக்கைவிட் டேகியநீயோ வெழின்மைந்தா
வுன்னைக்கைவிட் டென்னொடுவாரா துழல்வேனோ
தன்னைச்சொல்லிக் கூப்பிடவேதுந் தகவில்லா
மன்னர்க்கல்லா மன்னவனோவுன் வலியாரார்.

ஒன்றுந்துன்பங் கொள்சலமானே னுயிரெல்லாங்
கொன்றுண்பாவிக் கூற்றுவனென்னைக் கொடுபோகான்
வன்றிண்சிந்தை மன்னவனுமென் வினைதேரா
னென்றென்சிந்தை யெய்துறுமோவாள் வினையையே.

இவ்வாறுகூறிப்புலம்பிய பார்ப்பினி புத்திரசோகத்தால் தனதுநிலைகுலைந்து நிற்ப, அந்தப் பிராமணனும் ஆற்றமாட்டாத துக்கத்தினனாய் அழத் தொடங்கினான்.

கவி.

கன்னெஞ்சராயுள்ளோர் காளையரைத்தாமிழந்து கதறுகிற்பர்
மென்னெஞ்சராயுள்ளோர் வெந்துயரம்பொறுக்கலா விடுவராவி
யென்னெஞ்சிலெரிமூட்டி யென்னையறக்கைவிட்ட வுன்னைப்போல
வன்னெஞ்சனேயானு மைந்தனேயுனைத்தொடர்ந்து வருகின்றேனே.

தனக்குநோய்வேண்டாதான் சந்ததிபெற்றிடாதொழிக தளர்வுமிக்கு
மனத்துநோய்தான்பெருக மடவனுக்கின்றியாம்படியிம் மறுக்கமில்லை
யெனக்குநீசெயவிருந்த நீர்க்கடனனின்னிற்பி னிருந்துபிள்ளா
யுனக்குநான்செய்வனோ செய்யென்கா ணுனைத்தொடர்ந்து வருகின்றேனே.

கண்ணிலான்பெற்றிழந்தா னெனவுன்னைப்பெற்றிழந்து காந்திப்பொங்கும்
புண்ணுளேநாராசம் புடைத்தனையபொறுக்கலா தாற்றேமாகி
மண்ணிலாப்பெரும்பாவத் தெங்களுக்குமகனாக வென்னபாவம்
பண்ணினாய்மகனேயென் பழிப்பற்றபோழகா பகர்ந்திடாயே.

தேசற்றதீவினையேன் றிருவுடையோர் பிள்ளைகளைப் பெற்றுவாழ
வாசைப்பட்டாவிதளர்ந் தருந்தவங்கள் செய்தூநா னனேகங்கால
மேசற்றேனேசறவு கெடவந்தாயென்றிருந்தே னெங்கேபோனாய்
மாசற்றமணியேயென் மறுவற்றவடிவுடைய மைந்தரேறே.

தள்ளாடுமேனியனாய்த் தனையனைநானிழந்தாவி தளர்கின்றேனைக்
கொள்ளாதுகூற்றுமென்னைக் கொடுபோகாதினியுனக்குத் தோழராகி
யுள்ளார்களொடுதெருவில் விளையாடியுடம்பலசி யுறக்கினாயோ
பிள்ளாய்நீயெழுந்திரா யிதுவென்ன பெருறக்கம் பேசிடாயே.

கொஞ்சியவுன் சொற்கேட்டுக் குடுமியுஞ்சுட்டியுமழகுங் குறித்துச்சால
நெஞ்சுகளித்தினிதிருந்த நெடுந்தவத்தால் விதிமுறைநின் னரையிற்கட்டு
முஞ்சியுநற்கோவணமு முப்புரிநூலுந்தோளும் விளங்கித்தோன்ற
வஞ்சனேனைந்தாநீமறையோதிவரக்காணப் பெற்றிலேனால்.

தராதலத்திலிதற்குமுதற் றந்தையர்க்குமுனத்தனையர் மரித்தாரில்லைப்
புராதனத்தாலல்லாதிப் புத்திரசோகத்தாலே புலம்புமிந்தப்
பிராமணிக்குப்பிழைப்பரிது பெரும்பீடையால்யானும் பிழைக்கமாட்டே
னிராமனுக்கேபழியாக விறக்கின்றோ மிருவருமேயென்றுங்காலை.

இவ்வாறழுத பிராமணனானவன் இராமபத்திரனை நோக்கி, ஓய்ராஜனே இந்தவனியாயமுண்டோ? நானொருபாபமுஞ் செய்ததில்லை. உன்னாற்செய்யப்பட்ட அதர்மத்தினாலே என்னுடையபிள்ளை யிறந்துபோய்விட்டது. நானுமென்னுடையஸ்திரீயுமுனக்கெதிரே பிராணனை விடுகிறோம். இந்தப் பிரமகத்திபாதகத்தையு மேற்றுக்கொண்டு நீயேசுகமாயிருப்பாய். என்றிப்படி நிந்தித்து முறையிட்டுப் பின்னும்புலம்பித் துக்கப்பட்டான்.



## ஸ்ரீராமபிரான் இரிஷிகளைவரவழைத்து நமதுநாட்டில் அபமிருத்தியு நேர்ந்தது என்னகாரணமென்றுவினவ நாரதர் விடைதரவறிந்து கானகஞ்சென்று தபஞ்செய்த சூத்திரனைவதைத்தகாலையில் இறந்தபிள்ளை யுயிர்பெற்றெழுந்திருக்க இராமர் அகஸ்திய ராச்சிரமம் வருதல்.

கவி.

வந்தவரையடிவணங்கி வரன்முறையாற்பூசித்தங் கிருந்தமன்னன்
சிந்தையில்வெந்துயரறிந்து செழுமறைநாரதமுனிவ னிளையசெப்பும்
இந்தவுன்றனிராச்சியத்தி லிதற்குமுன்னிலாததிதொன் றுண்டாய்த்தெய்வ
அந்தணன்புத்திரன்மாளவதுவந்த காரணத்தை யறிதியென்றான்.

அதுகேட்டஸ்ரீராமர்மிகவும் விசனத்தையடைந்தவராகி, உடனேவசிஷ்டர்-வாமதேவர்- கவுதமர்-நாரதர்-முதலான மகரிஷிகளை வரவழைத்து, இந்நாட்டிலபமிருத்தியுநேர்ந்ததென்னகாரணத்தாலென்று கேட்டார். அப்பொழுதவர்களில் நாரதமகாமுனிவர் ஸ்ரீராமரை நோக்கி, கேளுமகாராஜனே! கிருதயுகத்திலே பாபமேயில்லை. பிராமணனுக்குத் தபசுமகிமையுண்டு. திரேதாயுகத்திலே நாலிலொருபங்கு பாபம். க்ஷத்திரியனுக்குத் தபசுமகிமையுண்டு. துவாபரயுகத்திலே இரண்டுபங்கு பாபம். வைசியனுக்குத் தபசுமகிமையுண்டு. கலியுகத்திலே மூன்றுபங்கு பாபம். சூத்திரனுக்குத் தபசுமகிமையுண்டு. இப்படி யுகதருமமிருக்க, இந்தத்திரேதாயுகத்திலே அதர்மமாகச் சூத்திரன் தபசுபண்ணுகிறபடியினாலே இந்தப்பிள்ளை யிறந்துபோய்விட்டது. நீரிதை விசாரித்துத் தண்டித்தா லிந்தப்பிள்ளை பிழைக்குமென்று சொன்னார்.

அதுகேட்ட ஸ்ரீராமர் சந்தோஷத்தையடைந்து இலட்சுமணனை வரவழைத்து, தம்பி! நீயிந்தப் பிராமணனைச் சமாதானப்படுத்தி இந்தப்பிள்ளையின் சரீரத்தை யெப்படிபாதுகாத்து வைத்திருக்கவேண்டுமோ அப்படிச்செய்து வைத்திரு, நானச்சூத்திரனைக் கண்டுபிடித்துச் சங்கரித்துவருகிறேனென்றுத்திரவுகொடுத்து உடனே புஷ்பகவிமானத்தை நினைத்து வரச்செய்து, அம்பு - வில் - வாள் - இவற்றையெடுத்ததிலேறிக்கொண்டு, கிரமமாக மேற்கு - வடக்கு - கிழக்கு - இம்மூன்றுதிசையிலுந் தேடிப்பார்த்து ஒரு பாபமுமில்லாதிருப்பதை யறிந்துகொண்டு தெற்குத்திசையிற் செல்லுகிறார். அப்பொழுது ஓர் பருவதத்திற்கடுத்த வடபாரிசத்தில் ஒருமடுநடுவிலே தலைகீழாகத் தபசுபண்ணிக்கொண் டிருக்கிறவனைக்கண்டு, நீயார்? என்னநிமித்த மிப்படித் தபசுசெய்கிறாய்? என்றுகேட்க, அதற்கவன் ஐயா! நான்சூத்திரன் என்பெயர் சம்புவனென்பர். இயானிந்தச் சரீரத்துடனே தேவத்தன்மையடைவதற்காகத் தவஞ்செய்கிறேனென்று சொன்னான். அம்மாத்திரத்திலே ஸ்ரீராமர்வாளாலே அச்சம்புவனைத் தலையுருளவெட்டி வதைத்தார். அப்பொழுதிந்திராதி சகலதேவர்களும்வந்து சந்தோஷப்பட்டு ஸ்ரீராமரைக்கொண்டாடி, உமக்குவேண்டியவரத்தைக் கேளுந்தருகிறோமென்று சொன்னார்கள். அதற்கு ஸ்ரீராமர். அந்தப்பிராமணப்பிள்ளை பிழைப்பதேஎனக்குவேண்

டிய வரமென்றுசொன்னார். அந்தப்பிள்ளையிப்பொழுதே பிழைத்தானென்று தேவர்கள் அனுக்கிரகித்துப்பிறகு சொல்லுகின்றார்கள். ஐயா! அகஸ்தியர் பன்னிரண்டுவருடஞ் சலசயனஞ்செய்தநிலை இப்பொழுது முடிக்கிறபடியினாலே நாங்களவரிடத்துக்குப்போகிறோம், நீருமவரைக்காண வருகலாமென்றுசொல்லிப் போயினார்கள். பின்பு ஸ்ரீராமருமவர்களோ டகஸ்தியருடைய வாச்சிரமத்தைச் சேர்ந்தார். இப்படி யகஸ்தியருடைய வாச்சிரமத்திற் சேர்ந்த இந்திராதிய தேவர்களெல்லாம் அவரானுபசரிக்கப்பெற்றுப் போனபின், ஸ்ரீராமரவரைக்கண்டு வணங்க, அவரவரையுமுபசரித்துத் தம்மிடத்திலிருந்த திவ்வியாபரணத்தைக் கொடுத்தார்.

அகஸ்தியராற்றந்த வாபரணத்தைவாங்கிய ஸ்ரீராமபிரான் அதன்வரலாறு கேட்க வவருணர்த்தல்.

கவி.

அந்தவாபரணங் கண்டவாழியான், உந்துதீவினை யோர்முன்புனக்கிது
தந்துளோன்றனை சாற்றெனத்தன்னிடை, வந்தகாரண மாமுனிகூறுவான்.

அதையவர் வாங்கிக்கொண் டிதுவந்தவிதமென்னவென்றுகேட்க, அதற்கவர் ஸ்ரீராமரைப்பார்த்துச் சொல்லுகிறார். கேளும் காகுத்தவம்ச சிரோமணியாகிய இராகவா! முன்பு நான் திரேதாயுகத்திலே நூறுயோசனைவிசாலமாய் ஒரு பிராணிகளுமில்லாத மகாவனத்திலே தபசுசெய்யப் போயிருந்த காலத்தில், அந்தவனத்தினடுவில் ஒருயோசனை விசாலமா யொருதடாகமும் அதற்கடுத்த வொருவருமில்லாத வோராச்சிரமுமிருக்கக்கண் டன்றிராத்திரி யதிலிருந்து, மறுநாளுதயத்தி லந்தத்தடாகத்திற்கிடக்குஞ் சவத்தைக் கண் டாலோசித்து நிற்குமளவில், அனேக விசித்திரத்துடனே மேலுலகத்திலிருந்து ஒரு விமானம் வந்தது. அதிலிருந்து ஒரு புருஷனிறங்கி யந்தச்சவத்தைப்பிடுங்கித்தின்றான். அவனைநீயாவனென்னகாரணத்தாலிப்படிச்செய்கின்றாயென்றுகேட்க, அதற்கவன் நான்விதர்ப்பதேசாதிபதியாகியவசுதேவனென்னுமிராஜனுடைய புத்திரன். என்பெயர் சுவேதன். நானிராச்சியபரிபாலனஞ் செய்துகொண்டிருக்குங் காலத்தில் ஆயுட்பிரமாணந்தெரிந்து என்னுடைய தம்பியாகிய சுரதனென்பவனுக்கு இராச்சியங்கொடுத்துத் தபோவனத்திற் சேர்ந்து, மூவாயிரம்வருஷந் தபசுசெய்து பிரமலோகத்தையடைந் தவ்விடத்திற் சகிக்கப்படாத பசிதாகத்தினாலே மிகவும்வருந்தி, எனக்கிப்படி வரவேண்டுவதென்னவென்று பிரமதேவரைக் கேட்டேன்.

அதற்கவர் பூலோகத்திலே நீ யன்னங்கொடா துன்னுடைய சரீரத்தையே போஷித்தபடியினாலே, உனக்கிப்படிவந்தது. இந்தப்பசிக்கு நரமனிதர் சரீரத்தையேபுசி, அஃதுனக் கமிர்தம்போலிருக்கும். இனிமேலெப்பொழுதகஸ்தியபகவானேரிடுவாரோ? அப்பொழு தவராலிந்தத் தோஷநீங்குமென்று பிரமதேவ ரனுக்கிரகித்தபடிக் கிப்பொழுது தேவரீரைக் காணப்பெற்றேன். ஆகையாலென்னையுபசரித்துக்கொடுக்கப்பட்ட இந்த வாபரணத்தை



யொப்புக்கொண்டு கிருபைசெய்து என்னை யிரக்ஷிக்கவேணுமென்று மிகவும் வணங்கிப் பிரார்த்தித்தான். அப்பொழுததை நானேற்றுக்கொண்ட மாத்திரத்திலே அந்தச்சவங் காணாமற் போய்விட்டது. அவனும் பசிநீங்கி முன்னிருந்த பிரமலோகத்தை யடைந்தான். அந்தச் சுவேதமகாராஜனாலே கொடுக்கப்பட்ட திந்தத் திவ்வியாபரணமென்று சொல்லக்கேட்டனர்.

ஸ்ரீராமர் அவ்வாரணியத்தைக்கண் டதிசயித்து அதன் வரலாறுகேட்க அகஸ்தியர் இது தண்டனாலாளப்பட்டு ஆரணியமானதென்று அதன் வரலாறுகூறக் கேட்டு அயோத்திநகர் சேர்ந்து பிராமணர்களைமகிழ்வித்து உயிர்த்தெழுந்தபிள்ளையுடன் அவர்களை அவரிடத்திற் கனுப்புதல்.

கவி.

இன்னதாமிவ்வாபரண மென்பால்வந்தவழியென்று
பன்னுவேதமாமுனிவன் பகரப்பாமன்வியப்பெய்தி
மன்னுமிருகம்பறவைநரர் வழங்காதொழிதலிவ்வனத்தில்
என்னநிமித்தத்தாலிதுநீ யியம்பென்றியம்பமுனியியம்பும்.

இவ்வாபரண மின்னகாரணத்தகென்றும் வந்தவழியுங் கேட்ட இராமமூர்த்தியானவர் ஆச்சரியமடைந்து, ஐயா முனிசிரேஷ்டரே இன்னுமொரு சந்தேகம், அஃதியாதெனில் தாமிருக்கு மிவ்வாரணியத்தில் ஒருமிருகமாவது பறவையாவது மனிதர்களாவது சஞ்சாரமில்லா திருப்பது யாதுகாரணம் அதைத் தெளிவுற வருள்செய்யவேண்டுமென்று கேட்க, அதற் ககத்திய முனிவர் கூறிவாரம்பித்தனர். கேளும் ரகுநந்தனா! முன்பு கிருதயுகத்திலே மனுவானவர் பூமண்டலமுழுதுஞ் செங்கோல் செலுத்தி இராச்சியபரிபாலனஞ் செய்துகொண்டிருந்தார். அவர்தம்முடைய புத்திரனாகிய இட்சுவாகு மகாராஜனுக்குத் தருமசாஸ்திர முதலான சகல சாஸ்திரங்களையும் போதித்து, இராச்சியபட்டாபிஷேகமும் பண்ணுவித்துச் சுவர்க்கத்தை யடைந்தார். பின்பந்த இட்சுவாகு மகாராஜா அளவில்லாத புண்ணியங்களைச்செய்து நூறு புத்திரரைப் பெற்றார். அவர் திரிகாலவர்த்தமானமுந் தெரிந்தவராகையாற் கடைசி புத்திரன் இனிமேல் தண்டத்தை யடைவானென்பதை யறிந்து அவனுக்குத் தண்டனென்று பெயரிட்டு, விந்தகிரிக்குஞ் சைவலபருவதத்திற்கு நடுவுள்ள நூறுயோசனை தூர பூமியுங்கொடுத்தார். அவனங்கே மதுமந்தமென்று பட்டண முண்டாக்கிச் சுக்கிரபகவானை யாசாரியராக வைத்துக் கொண் டதிகாரஞ்செய்துகொண் டிருந்தான்.

அப்படி யிருக்குங்காலத்தி லொருநாளவன் சுக்கிராசாரியா ரிடத்துக்குப் போம்பொழுது அவரிருக்கு மாச்சிரமத்துச் சமீபத்திலே அவருடைய புத்திரி அரசையென்பவளைக்கண்டு மோகித்துச்சகிக்கப்படாத காமவிகாரத்தை யடைந்தவனாகி, அனேக விதங்களா லுபசரித்துவேண்டியு மவளுடன்படாது மறுக்கவுந் தேளாமலவளை வலிமைசெய்து புணர்ந்தான். அவள் மிகவும் விசனப்பட் டழுதபடியே தன்னுடைய பிதாவிடத்துக்குப் போனாள். அவர் நடந்த செய்கையையறிந்து கோபித்து, என்னையு மதியாமற் குருபுத்திரி

யென்று நினையாமல் இப்படி யவமரியாதையான பாதகம்பண்ணினானாதலால், இந்தத் தண்டனென்பவனுடைய வமிசமும் பட்டணமும் ஏழுநாளையிலே தீப்பட்டுவெந்தழியக் கடவதென்று சாபஞ்செய்தார். அவர் சாபப்படியே அப்பட்டணமுமழிந்து வனமாயது. அந்தக்காரணத்தினாலன்றுமுதலிந்த வனத்துக்குத் தண்டகாரணியமென்று பெயராயது. என்றகஸ்திய மாமுனிவர் சொல்லக்கேட்ட ஸ்ரீராமர் மிகவுஞ்சந்தோஷத்தை யடைந்தவராய் அன்றிராத்திரியங்கிருந்து, மறுநாளுதயத்தி லவருடைய வனுமதிபெற் றவ்விடத்தினின்று நீங்கிப்போய் அயோத்தியாநகரஞ் சேர்ந்தார். அதற்கு முன்னமே இறந்த பிராமணப்பிள்ளை பிழைத்திருந்ததால் அந்தப் பிள்ளையுடனே மாதா பிதாக்களையுஞ் சந்தோஷப்படுத்தி யனுப்பினார்.

சம்புவன்வதைப் படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

பதினாறாவது,

# அஸ்வமேதயாகப் படலம்.

இப்படலத்தில் ஸ்ரீராமர் பரதலக்ஷ்மணர்கள் முன்னிலையில் இராஜசூய யாகத்தைப்பற்றி யோசித்தபோது இலக்ஷ்மணர் அஸ்வமேதயாகமே நலமென்று விருத்திராசுரன் கதையை யுரைக்க, ஸ்ரீராமருமப்பரதலக்ஷ்மணருக்கு இளன்கதைகூறி அவ்வஸ்வமேதம்புரியச் சம்மதிக்க, உடனே யத்தம்பியாரிருவரும் அவருத்தரவால் எங்கும் சேதியனுப்பிக் கோமதிநதிக்கரையில் யாகசாலை நிருமிக்கவும், தாயியாவரோடு மங்கை மூந்தருளி பலதேசராஜாக்கள் - முனிவர்கள் - வானரவீரர்கள் முதலியோர்முன்னிலையில் வேள்விச்சடங்களைத்தையும் விதிப்படி நிறைவேற்ற, அக்கால் வான்மீகராக்ஞையால் குசலவர்கள் யாகசாலையுட் சென்று அவர்கற்பித்த இராமாயணத்தைப்பாடி ஸ்ரீராமரை மகிழ்விக்க, அப்போதவர்களைத் தமது மக்களென்றறிந்த இரகுநந்தனர் வான்மீகரையுஞ் சீதையையு மங்ஙனமழைப்பிக்க, அவ்வாறே யிருவருமெழுந்தருளிவந்து தேவர்கள் முனிவர்கள் முன்னிலையில் சீதாதேவி தனது கற்பினிலைமையைப்பற்றிப் பிரமாணஞ்செய்து பூப்பிரவேசமாக, அது கண்டு, பூதேவிமேற்சினந்த ஸ்ரீராமர் பின்பிரமதேவனாற் றணிந்து குசலவர்களாலே இராமாயணத்தைப் பூர்த்திசெய்து மீண்டு அயோத்தியாபுரியை யடைந்தமை சொல்லப்படுகின்றது.

### ஸ்ரீராமர் பரதலக்ஷ்மணர்களை யழைத்து இராஜசூயயாகம் பண்ணவேணுமென்று யோசனைசெய்ததில் அஸ்வமேதயாகம் செய்யத் தேர்தல்.

கவி.

மாத்திரைக்கடன்மண்ணோரை மனுமுதலாயதன்மம்
சாத்திரப்படிதப்பாமற் சரிப்பித்துச்சகலத்துக்கும்





உத்தராகாண்டம். அஸ்வமேதயாகப்படலம்.

நேத்திரமாகிநின்றோ னெனுநிலைவாயில்காக்கும்
வேத்திரக்கரத்தோன்றன்னை விளித்திவைவிளம்பலுற்றான்.

ஸ்ரீமங்களாகரகுணத்தனாய், சர்வர்ந்தரியாமியாய், சகலகாரியங்கட்கும் காரணமாய், சர்வசகத்தையு நோக்குங் கமலக்கண்ணனா யிருக்கும் ஸ்ரீராமச்சந்திரமகாராஜாவானவர் தமதிளையதம்பியாகிய சத்ருக்ன மகாராஜாவை மதுபுரிக்கு அரசனாக நியமித்து, அலைகளையுடைய கடல்சூழ்ந்த பூலோகத்துள்ள சர்வான்மகோடிகளை மநுநீதி தர்மசாஸ்திரப் பிரகாரம் அயோத்தியாபுரியிலிருந்து அரசாளுங்காலையில், ஓர்நாள் பிரம்பாயுதங் கரத்திற்கொண்டு தமது ஆசாரவாயிலைக் காக்குங்காவலாளியால் தமது தம்பிமார்களை வரவழைத்து இராஜசூய யாகம் பண்ணவேணுமென்று யோசித்தார். அதற்கு இலக்ஷ்மணர், ஸ்ரீராமமூர்த்தியை நோக்கிச் சொல்லுகிறார்.

கவி.

சொற்பொருடெரியாமைந்தன் சொல்லியகுதலைச்சொற்கள்
பெற்றதாய்க்கினியவாகும் பெற்றியோற் பெருஞ்சொனன்னூல்
கற்றறிவொன்றுமில்லேன் கழறியமிக்கப்புன்சொல்
கொற்றவாவின்சொல்லாகக் கொள்ளுதி குறைகடீர்த்தே.

பொன்னையேநோக்கிநிற்பர் பொதுவிலைமகளிர்மாரி
தன்னையேநோக்கிநிற்குந் தரணியிற்பயிர்கள்சூழ்தந்த
வன்னையேநோக்கிநிற்கு மரும்பெறற்குழவியென்ன
நின்னையேநோக்கிநிற்பர் நீணிலத்துள்ளோரெல்லாம்.

ஆதலால், சுவாமி! இராஜசூய யாகத்திலே யனேக ராஜாக்களுக் குபத்திரவமுண்டாகு மானபடியினாலே, கருணையே யுருவமாக வவதரித்திருக்கின்ற தேவரீரால் அந்தயாக மெப்படி செய்யப்படுமென்று சொல்லினார். அதுகேட்ட ஸ்ரீராமர் சந்தோஷத்தை யடைந்து, நீ சொன்னது தகுதியேயென் றொப்புக்கொண்டார். அப்பொழுது இலட்சுமணர் ஸ்ரீராமரைநோக்கி, சுவாமி! இயாகங்களுக்குள்ளே மிகவுநன்மையான யாகம் அஸ்வமேதம். தேவேந்திரனுக் கந்தயாகத்தினாலே பிரமகத்திதீர்ந்ததென்று கேள்விப்பட்டிருக்கிறேன். அஃதெப்படியென்றால், விருத்திராசுர னென்னுமோரசுரன் இராச்சியாதிகாரம்பண்ணிக்கொண்டு மதுராபட்டணத்தி லிருந்தான். அவன் சிலகாலஞ் சென்றபின்பு தன்னுடைய சிரேஷ்டபுத்திரனுக் கரசியல்கொடுத்து கொடுமையான யாகபண்ணிக்கொண் டிருக்குமளவில், அதைத் தேவேந்திரனறிந்து இவனாலென்னதீங்கு விளையுமோவென்று பயந்தவனாய்ச் சகலதேவர்களுடனே விஷ்ணுவினிடத்துக்குச் சென்று, உலகமெல்லாங் கெடும்படி தவஞ்செய்கின்ற விருத்திராசுரனைச் சங்கரித் தெங்களை யிரக்ஷிக்கவேணுமென்று பிரார்த்தித்தான்.

அக்கால் விஷ்ணுவானவரவனைப் பார்த்து, ஓ வலாரி! அந்தவசுர னென்னிடத்தில் விசுவாசமுள்ளவனாகையால் அவனைநான் வதைக்கப்படாது. பின்னையெப்படி யென்னில், என்னுடைய சத்தியை மூன்றாகப் பிரித்து ஒருபங்கு

பூமியினிடத்திலும், ஒருபங்கு வச்சிராயுதத்தினிடத்திலும், ஒருபங் குன்னிடத்திலும் இருக்கச்செய்கிறேன். அதுகொண்டு நீயேயவனைச் செயித்திடுக. என்றநுக்கிரகித் தனுப்புவிக்க அப்படியே இந்திரன் சகலதேவர்களுடனே விருத்திராசுரன் தபசுசெய்துகொண் டிருக்கிற வனத்துக்குவந்து, அவனைக் கண்டு வச்சிராயுதத்தினாலே வதைத்தான். அம்மாத்திரத்திலே தேவேந்திரனைப் பிரமகத்திபற்றித் துன்பப்படுத்தத் தலைப்பட்டது. அதுகண்ட தேவர்கள் பின்னும் விஷ்ணுவினிடத்துக்குப் போய்த் தங்களுடைய ராஜனுக்குவந்த துன்பத்தைச் சொல்லி விசனப்பட்டார்கள், அதுகேட்ட மகாவிஷ்ணு அவர்களைநோக்கி, ஓ தேவர்களே! அசுவமேதயாகம் பண்ணினால் அந்தப் பிரமகத்திதீருமென்று சொல்லினர். அப்படியே தேவர்களந்த யாகத்தைச்செய்வித்து முடிக்குமளவில் அந்தப் பிரமகத்தி வெளிப்பட்டது. அதைதேவர்கள் நாலுபங்காக்கிப் போக்கி, பிரமகத்திநீங்கிய தேவேந்திரனுடனே சகலதேவர்களுஞ் சந்தோஷத்தையடைந்திருந்தார்கள். ஆகையால் - அசுவமேத மப்படிப்பட்ட மகிமையுடைய தல்லவோவென்று இலட்சுமணர் சொன்னார். அக்கால் பரதரும் அதுவேநலமென்று வற்புறுத்திக் கூறினர்.

இப்படி லட்சுமணர்சொன்ன கதையைக்கேட்ட ஸ்ரீராமர் அந்தலக்ஷுமணரையும் பரதரையுநோக்கி, ஓ என் துணைவர்களே! இவ்வசுவமேதத்தைப் பற்றி நானுமோர் கதைசொல்லுகிறேன் கேண்மின்கள். அஃதெதப்படியெனில் — பாகிலிக தேசாதிபதியாகிய கர்த்தமப் பிரசாபதியினுடைய புத்திரன் இளனென்பவன். இவனிராச்சிய பரிபாலனஞ் செய்துகொண் டிருக்குங்காலத் தொருநாள் வனத்திலே வேட்டையாடப் போயினான். அப்பொழுது மகாதேவராகிய பரமசிவன் சகல பிராணிகளையும் ஸ்திரீரூபமாக்கிப் பார்வதிக்குப்பிரதேசஞ் செய்திருக்கு மிடத்துக்கு அவனும் போனமாத்திரத்திலே, இவனு மிவனுடனே போனவர்களும் ஸ்திரீகளானார்கள். அப்படி ஸ்திரீரூபத்தையடைந்த இளனானவன் மிகவும்பயந்து நடுங்கி அந்தப் பரமசிவனைச் சரணமாகவடைந்தான். அதற் குபதேசமுறையிற் கூடியிருக்கும் பரமசிவன் இளனைநோக்கி, நீ புருஷத் தன்மைதவிர மற்றெந்தவரங்கேட்கினுந் தருவோமென்று சொல்லினர். அதற்கவன் மறுமொழி யொன்றுஞ் சொல்லாமல் உமையவளை மிகவும்வணங்கித் தோத்திரம்பண்ணிப் பிரார்த்தித்தான். அதற் குமையவள் நான் கொடுக்கவேண்டிய பாதிப்புருஷத்துவத்தைத் தருகிறேன், உன்மனசின்படி யாகுகவென்று சொல்லினள். அதற்கவன் ஒருமாசம்பெண்ணாகவும் ஒருமாச மாணாகவு மிருக்கவேணுமென்று கேட்டான். அப்படியே யுமையவளனுக்கிரகித்து, பின்னுமவனுக்குப் பெண்ணானகாலத்துப் புருஷனாகவிருந்ததும் புருஷனானகாலத்துப் பெண்ணாகவிருந்ததுந் தெரியாதிருக்க வரங்கொடுத்தாள்.

அந்தவரத்தினாலப்படியே இளன் பெண்ணுருவமாகி, முன்புதன்னோடு ஸ்திரீயானவர்களுடனே அந்தவனத்திலே சஞ்சரித்துக்கொண் டிருந்தான்.



அப்பொழுதி லவ்விடத்தி லொருமலைக்கடுத்த தடாகமத்தியிலே தபசுசெய்துகொண் டிருக்கும் புதனானவன் இளையைக்கண்டு மோகப்பட்டு, மிகவுமாச்சரியத்தையுமடைந்து மனக்கலங்கித் தபசைவிட்டுக் கரையில்வந்து, ஆவர்த்தனியென்னு மந்திரத்தினாலே அவளுடையசெயலை யறிந்துகொண்டு, கூடநின்றவர்களைக் கிம்புருஷரிடத்திற் சேரப்பண்ணி, பின்பு அவளைநோக்கி நான் சந்திரனுடைய புத்திரனாகிய புதன். என்னை நீவிரும்பிச் சேரலாமென்று நயந்து வேண்டவும் அவளுமப்படியே சம்மதித்தாள். அப்பொழு தவ்விருவருங்கூடி இஷ்டமாகக் காமசுகபோக மனுபவித்தார்கள். இப்படி மகிழ்ந்திருக்குங்காலத் தொருமாச மானவுடனே ஓர்நாள் சயனத்தைவிட் டெழுந்திருக்கும் பொழுது, இளையானவிளன் புருஷரூபமாகியெழுந்தான். அந்தவிளமகாராஜன் தபசுபண்ணுகிற புதனைக்கண்டு என்னுடனேவந்த பரிவாரசனங்க ளெங்கேயென்றுகேட்க, அதற்குப்புதன் அவர்கள் கன்மழைபெய் திறந்துபோய்விட்டார்களென்று சொல்ல, அதுகேட்டு எனக்கு மிகவுமுரிமையானவர்க ளிறந்தபின்பு நானுயிர்வைத்திரேனென்று விசனப்பட்டான். அதற்குப் புதன் நீயிவ்விடத்திலொரு வருஷமிருந்தால் உன்னுடைய விசனந்தீரும்படி யுதவிசெய்கிறேனென்று சொல்ல, அதுகேட் டப்படியே யொப்புக்கொண்டு வரத்தின்படியே ஸ்திரீயாகவும் புருஷனாகவு மிருந்தான்.

அக்காலத் தொன்பதாமாசம் புரூரவசுவென்னும் பிள்ளையைப்பெற்றுப் புதனிடத்திற்கொடுக்க, அந்தப்பிள்ளையை யவன்வளர்த்தான். அப்படி யொருவருஷஞ்சென்று புருஷனாகவிருக்கையில் அந்தப் புதனவன் சம்வர்த்தர் குருவாசர் — முதலான மகாரிஷிகளை வரவழைத்து; இந்தவிளனுக்கு நன்மையைச் செய்வீர்களென்று பிரார்த்தித்தான். அஃதறிந்தந்த விளனுடைய பிதாவாகிய கருத்தமப் பிரசாபதியென்பவர் புலஸ்தியர்முதலான மகாமுனிவர்களுடனே அவ்விடம்வந்துசேர்ந்தார்: பின்பு அம்முனிவர்களெல்லோரு மொருவருக்கொருவ ராலோசித்து, இந்தக் கருத்தமப் பிரசாபதியானவர் அசுவமேத யாகத்தைச்செய்து பரமசிவனைப் பிரார்த்தித்தால் அவருடைய வனுக்கிரகத்தினாலே இளனுடைய பெண்டன்மை தீருமேயன்றி, வேறொன்றினாலுந் தீராதென்று சொல்லினர். அப்படியே யெல்லாருஞ் சம்மதித்துப் புதனுடைய வாச்சிரமத்திலே அசுவமேதமாரம்பித்து விதிப்படிசெய்து முடிக்குமளவில் பரமசிவனெதிர்தோன்றினார். அம்மாத்திரத்திலே மகாரிஷிகள் முதலானவெல்லோரு மிவனுக்குப் பெண்டன்மை தீரும்படி யனுக்கிரகிக்க வேண்டுமென்று பிரார்த்திக்க, பரமசிவனுமப்படியே வரங்கொடுத்துப்போயினார். பின்பு அந்தமகாரிஷிகளும் யாகத்தைமுடித்து அவரவரிருக்குமிடம் போய்ச் சேர்ந்தார்கள். அந்தவிளனும் புருஷத்துவத்தை யடைந்து தன்னுடைய பாகிலிகதேசத்தைவிட்டு மத்தியதேசத்தில் பிரதிஷ்டானமென்னும் பட்டணத்திலிருந்தான். அவனுடைய மூத்தபிள்ளையாகிய சசிபிந்து வென்பவன் பாகிலிகதேசத்துக் கதிபதியாயிருந்தான். அந்தவிளமகாராஜனுக்குப் பின் பவனுடையபுத்திரன் புரூரவசு அந்தப்பிரதிஷ்டான பட்டணத்தில் மத்

தியதேசாதிபதியானன். ஆகையா லசுவமேத மப்படிப்பட்ட மகிமையுடையதேயென்று ஸ்ரீராமரானவர் பரதலட்சுமணர் கேட்கச் சொன்னார்.

### ஸ்ரீராமர் அஸ்வமேதக்குதிரையை யலங்கரிப்பித்து விடுத்து யாகத்திற்கு வரும்படியாவர்க்குந் தூதுவிடுத்தல்.

கவி.

சந்திரனையொத்த தனிக்குடை நிழற்றப்பாரான்
இந்திரைகொழுநனெல்லா விலக்கணமுடையமாவை
மந்திரவிதித்தோர்தம்மான் மந்திரிப்பித்தமாவைத்
தந்திரந்தாங்கவேவித் தாணியிற் செல்லவிட்டான்.

இவ்வண்ணம்பேசி அஸ்வமேதயாகஞ் செய்யவேண்டுமென்று யோசனை முடிந்ததில், சந்திரனைப்போலும் வெண்மைமிக்க பூசக்கரக்குடை நிழலைச்செல்ய உலகத்தையாள்கின்ற சீதேவிநாயகனாகிய ஸ்ரீராமன் நல்லநாள்கொண்டு சர்வலக்ஷணங்களுமுடைய குதிரையைத் தம்பிமார்களால் அலங்கரிப்பித்து வேதவிதிப்படி ஓமாதிக்கிரியைகளை மந்திரபூர்வமாகப் பிராமணர்களாலே செய்வித்து அளவற்றசைனியங்களைக்கூட்டிப் பூப்பிரதக்ஷணஞ் செய்ய அனுப்புவித்தனர்

பிறகு அகத்தியாதி மகாரிஷிகளுக்கும், தமது குலகுருவாகிய வசிஷ்டமகாமுனிவர்க்கும், விபீஷணாழ்வாருக்கும், சுக்ரீவன்—அனுமான்—அங்கதன்—சாம்புவந்தன்—குகன் — மற்றுந் தேசதேச மகாராஜாக்கள்—சத்ருக்னர் இவர்கட்கெல்லாம் அஸ்வமேதயாகஞ் செய்யும்படியான நாள்குறித்துத் திருமுகமெழுதி தூதர்வசமனுப்புவித்தனர். திருமுகங்கொண்டு சென்ற தூதர்கள் காற்றினுங் கடுகி அவ்வவ்விடங்களிற் சென்று சந்தோஷசங்கதியைத் தெரிவித்துத் திருமுகத்தைக் காட்டினார்கள். திருமுகங்கண்டயாவரும் மகாசந்தோஷத்துடன் புறப்பட்டு அயோத்திமாநகரஞ் சேர்ந்தார்கள். அப்படிவந்த தமது குலகுருவாகிய வசிஷ்டாதிமுனிவர்களை ஸ்ரீராமன் வணங்கி, ஆசனந்தந்து வீற்றிருக்கும்படி செய்தார். தமது திருவடிவணங்கிய விபீஷணனையும் அநுமானையுந் தழுவினார். சுக்ரீவன்முதலிய வானரவீரர்கட்குப் பிரியவசனஞ்சொல்லினர். குகனைக் கண்டானந்தித்தனர். சத்ருக்னனை மார்புடனிறுகத்தழுவினர். இவ்வண்ணம் யாவருக்கும் ஆசனந்தந்து அதன்மீது உட்காரும்படி அருள்செய்து இலக்ஷ்மணனைநோக்கி, அப்பா இலட்சுமணா! கோமதிநதிதீரத்துள்ள நைமிசாரணியத்தில் முனிவர்களும் யாமுமிருந்து யாகஞ் செய்ய யாகசாலையும், அனுமான்-சுக்ரீவன்—முதலிய வானரவீரர்கட்கும், விபீஷணர்க்கும், இன்னும் மகாராஜர்களுக்கும், மாளிகைகளும் செய்விப்பாயென்று ஸ்ரீராமன் உத்திரவுசெய்ய அவ்வண்ணமே இலட்சுமணர் சென்று நைமிசாரணியத்தில் அனேகஏர்பூட்டி நிலத்தை உழுவித்துச் சமஞ்செய்து யாகசாலையும், அவரவர்கட்குத் தக்கபடி தமயனுத்திரவுப்பிரகாரம் மாடமாளிகை கூடகோபுரங்களுமாகிய இவைகளைச்செய்து, அன்னசாலை — தண்ணீர்ப்பந்தர்—உலாவுமிடம் முதலியதகுந்தவசதிகளை முறைப்படி செய்வித்து, வாழை-கமுகு-கொடி இவைகளை அலங்காரமாகக்



கட்டி இடங்களையெல்லாம் சுத்தப்படுத்தி ஸ்ரீராமபிரானிடத்தில் வந்து, அண்ணா! தாம்கட்டளையிட்ட முறைப்படி யாகசாலையும் — மாடமாளிகைகளும் — தேவலோகமுநாணும்படிச் செய்தேனென்ன பகவான்சந்தோஷித்து, அங்கு நடத்தவேண்டியவைகளுக்கேற்ற, ஆயிரகோடி பொன்னும், அவ்வளவு தொகை பசுக்களும், அவ்வளவுகலவரிசியும்; பயறு எள்ளுகோதுமைமுதலிய நவதானியங்களும்-இன்னும் வேண்டியபதார்த்தவகைகளும், மிளகு நெய் இவைகளும் ஆயிரகோடி பண்டிகளின் மேலேற்றிக்கொண்டு, பரதாழ்வாரையும் இலக்ஷ்மணப்பெருமாளையும், சீதைபிரிந்தபிறகு அச்சானகிக்குப்பிரதியாயேற்படுத்திய சுவர்ணப்பாவையையுமலங்கரித்து எடுப்பித்து முன்னதாய்ப்போய்ச் சேரும்படி விடைகொடுத்து, மந்திரிகளைநோக்கி இன்றுமுதல் எழுநாளிருக்கிறது யாகாரம்பஞ்செய்ய, ஆதலால் நமது நாடுகளையும் நகரத்தையும் அலங்காரஞ்செய்யும்படிப் பறையறைவிப்பீர்களென்ன அதைக்கேட்ட மந்திரிகள் வள்ளுவர்கட்குத்திட்டஞ்செய்ய அவர்கள் யானையின்மீது முரசறைய வதைக்கேட்ட நாடுநகரச்சனங்களெல்லாம் தங்கள் தங்கள் வீதிகளையும் வீடுகளையு மலங்காரஞ்செய்ய வாரம்பித்தார்கள்.

### கோசலதேசத்துச்சனங்கள் நாட்டையும் நகரத்தையும் அலங்கரித்தற்சிறப்பு.

கவி.

குறைவொன்றில்லாக் கோசலநாட்டிற் சனமெல்லாம்
இறைவன்வேள்விகாண விரைந்தோ ரெங்கெங்கும்
நிறைபொற்கும்ப முடனெய்விளக்கு நின்றேந்தி
உறைசீர்மாடத் தொண்ணகரஞ்சென் றுறுவாரும்.

எப்படி யலங்காரஞ்செய்தார்களென்றால், அந்நகரத்துப் பிரசைகளெல்லாம் - எவ்விடங்களிலும் பூரணகும்பமமைத்து, நெய்விளக்கேற்றி, மேல்மாடத்திலும் — வாசலிலும், தெருவிலும் பூப்பந்தரிட்டு, வாழை கமுகு தெங்கு இவைகளைக்கட்டுவாரும், மேற்கட்டிகளை வாயில்கடோறுங்கட்டுவாரும், உதயகாலசூரியனைப்போலப்பிரகாசிக்கின்ற நவமணிகளிழைத்த பூரணகலசங்களை நியமித்து முத்துமாலையணிந்து அலங்காரம் செய்வாரும், இரத்தினத்தூண்களிற்பொதிந்த உறைகளைக்கழற்றுவாரும், அவ்வவ்வீடுகளிலுள்ள ஸ்திரீகளும் புருஷர்களும், உலகமெல்லாம் விலைமதிக்கும் ஆடையாபரணங்களை அணிவாரும், இப்படியாவரும் தங்கள்வீடுகளையும் தங்களையுமலங்காரஞ்செய்து ஆனந்தபரவசத்தர்களாகி தங்கள்தங்கள் வாகனங்களின்மீது யாகசாலைநியமித்துள்ள கோமதிநதியைச் சேரும்படிச் சித்தமாகி ஸ்ரீராமபிரானுடைய பிரயாணத்தை எதிர்பார்த்திருந்தனர்.

### ஸ்ரீராமபிரான் இரதாரூடனாகிக் கோமதிநதிக்கரை யடைதல்.

கவி.

மங்கையர்வாழ்த்தமாகதரேத்த மறையவராசிகள்கூறப்
பொங்கியகடலிற்புடையாரிரைத்துப் பொன்னகர்ச்சனம் புடைசுற்றப்

பங்கயில்வீரன்பங்கயக்கண்ணைற் பார்த்தபார்த்திடமெலாஞ்சனங்கள்
செங்கரங்கூப்பத்தேவர்களுவப்ப வேறினன்செழுமணித்திண்டேர்.

பிறகு எனையாளவந்த ஸ்ரீராமச்சந்திர மகாராஜாவானவர் தமது சைனியங்களையெல்லாம் பிரயாணசித்தமாகும்படிச்செய்து, அரண்மனைக்குட்சென்று கங்கைமுதலியவெலாநதி தீர்த்தங்களால் ஸ்நானஞ்செய்து, பீதாம்பரவஸ்திரந்தரித்துத்திருநெற்றியில் திருநாமமணிந்து அவதாரகோலத்துக்கேற்றபடி தானும் விஷ்ணுவைத் தான்போற்றி ஆகேயூரகடககங்கண சரப்பளி பர்ஜிபந்து வீரக்கழல் இவைமுதலியவாபரணங்களைத் தரித்து, கலவைச்சாந்தணிந்து, மனுமுதலிய மகாராஜாக்கள்காள்தொடங்கித் தொன்றுதொட்டுவந்த மாணிக்கக்கிரீடத்தைச் சிரத்திலணிந்து, பிராமணர்கட்கும் யாசகர்கட்கும் ஏழைகட்கும் அவரவர்கள்வேண்டியபடி தானங்களீந்து சுமங்கலியஸ்திரீகளெல்லாம் பல்லாண்டுபாட, புகழ்வோர்கள்புகழ, வேதப்பிராமணர்களாசீர்வதிக்க, அரண்மனைவாயிலில்வந்து யாகசாலைக்குச் செல்லும்படி எதிர்பார்த்துநின்ற அப்பட்டணத்துச் சனங்கள் எங்குநிறைந்து நாற்புறமும் கடல்போற்சூழ்ந்து யாவருங்கைகூப்பிக்கொண்டு தொடர தேவர்கள் சந்தோஷிக்க நவமணிகளிழைத்த ஸ்வர்ணத்தேரின்மேலாரோகணித்தனன். அக்காலையில் சின்னம் பிடித்தார்கள் அச்சின்னமெப்படிச்சப்தித்ததெனில்.

கவி.

சம்புவைத்தரித்தகையிற் சார்ங்கந்தரித்தான்வந்தா
னம்புயக்கண்ணன்வந்தா னன்பருக்கன்பன்வந்தான்
றம்பியர்க்கினியான்வந்தான் தசரதராமன்வந்தான்
உம்பருக்கமுதமுன்னா ளுதவியவொருவன் வந்தான்.

மனுகுலம்விளங்கத்தோன்றி வரிசிலையிளையோனோடு
முனியொடுபோனான்வந்தான் முப்புரமெரித்தவில்லி
தனுவினையிறுத்துச்சீதை தன்கரம்பிடித்தான்வந்தா
னனையவளுடனேமீண்டு மயோத்தியிலடைந்தான்வந்தான்.

தாயுரைதலைமேற்கொண்டு தையலையுடனேகொண்டு
தீயவெங்கானஞ்சேர்ந்த செருவலி வில்லிவந்தான்
றூயமாமுனிவன்முன்பே தோன்றிய தூயோன்வந்தான்
மாயமாரீசன்மாள வரிசிலைவளைத்தோன் வந்தான்.

அனுமனையடிமைகொண்டாங் காயிரங்கதிரோன் மைந்தற்
கினியனாய்வாலிமாள வெரிசரந்துரந்தான் வந்தான்
நினைவதன்முன்னமாழி நீரெலாநெருப்பதாகக்
குனிசிலைவளைத்தான்வந்தான் கோசலைநாடன்வந்தான்.

குன்றினாலாழிகட்டிக் கொடுந்திறற்சேனையோடு
சென்றிராக்கதரையெல்லாஞ் செருக்களத்தவியநூறித்
தன்றிறலழிந்துநின்ற தசமுகனவிமைகண்டங்
கின்றுபோய்நாளைவாவென் றியம்பியவிறைவன் வந்தான்.



முன்னநாஞ்சொன்னநாளில் முடுகிநாஞ்செல்லோமாகில்
வன்னியிற்பரதன்வீழுமென்றுதன் மனத்திலெண்ணி
அன்னவனெரிவிழாம லனுமனைமுன்னேயேவிப்
பொன்னகரடைந்தான்வந்தான் புவனமூன்றுடையான் வந்தான்.

இவ்வாறுசின்னஞ் சப்தித்ததைக்கேட்ட அந்நகரத்து வீதிகளினிருபுறத்து வீடுகளிலுள்ள ஸ்திரீகள்யாவரும், மேககர்ச்சிதத்தைக் கேட்டு மலைக்குகையிலிருந்த மயில்கள் எப்படி ஆனந்தமாய் வெளிவருமோ அப்படியே வெளிவந்து மனமகிழ்ந்து மேகம்போலும், காயாமலர்போலும், மரகதரத்தினம்போலவும், நீலமலர்போலவும், கடல்போலவு மழகுவிளங்குகின்ற கண்ணனாகிய ஸ்ரீராமச்சந்திரப் பிரபுவின் திருமேனியைக்கண்டு விகாரங்கொண்டு, ஆ! ஆ! சீதைதான் இப்பிரபுவினது திருமேனியினலத்தையனுபவிக்கத்தவஞ்செய்தனளோவெனில், அவளு முழுத்தவஞ்செய்தவளல்லவென்று ஒருவருக்கொருவர் இவ்வண்ணம்பலபல, வார்த்தையாடிக்கொண்டுகைவளையல்களும் இடையிலுடுத்திய சேலையும் சோர்ந்துவிழும்படியாகப் பின்தொடர, மந்திரிகள்-படைத்தலைவர்கள்-அணித்தலைவர்கள்-யூகத்தலைவர்கள்-தண்டத்தலைவர்கள்-பட்டவான்கள்-நாடகஸ்திரீகள்-வீணையைமீட்டிப்பாடும்ஸ்திரீகள்-பிராமணர்கள்-சோதிடர்கள்-கணக்கர்கள்-சூழ்ந்துவர, பேரிகை-மத்தளம்-தவில்-முரசு-டங்கா-மேளம்-நாகசுரம்-புள்ளாங்குழல்முதலிய வாத்தியகோஷங்கள்முழங்க இரத கஜ துரக பதாதிகளாகிய நால்வகைச்சேனைகளும் நான்குபுறமுஞ்சூழ, அயோத்தியாபுரியின் வெளிமதில்வாயிலைக்கடந்து எள்ளிடவுமிடங்கிடையாமல் கோமதிநதிக்கரையிலுள்ள நைமிசாரணியத்தி லலங்காரஞ்செய்திருக்கிற யாகசாலையிற்சென்று, அங்குள்ள தம்பிமாரும்-மந்திரிகளும்-பிரதானிகளும்-மகாமுனிவர்களும் எதிர்கொண்டழைக்க இரதத்தினின்றுமிறங்கி அவ்விடத்தமைத்த ஓர்நவமணிமண்டபத்திற் றம்பிமார் சூழும்படியாக இவ்வுலகங்களை உண்டுமிழ்ந்தருளிய வைகுண்டாதிபதியாகிய ஸ்ரீராமமூர்த்தி வீற்றிருந்தனர்.

## திருமுகங்கண்ட அவ்வத்தேயமன்னவர்களும் மகாரிஷிகளும் யாகசாலைக்கு வருதல்.

கவி.

தேடுதனம்பூணுடைமுத லடங்கக்கொண்டுசேனையொடும்
கூடியடங்கவருதலினா லத்தக்குலமன்னவர்வாழும்
நாடுக்குயர்நலமிக்க நைமிசாரணியமென்னும்
காடுநாடாயினதென்றாற் சனத்தையாரேகணக்கிடுவார்.

இப்படி அம்மண்டபத்தில் இராமபிரான் வீற்றிருந்தபோது, தாமனுப்புவித்த திருமுகத்தைக் கண்டகாலையில், ஸ்ரீராமபிரானைக் காணும்படி திரவியம் - ஆபரணம் - வஸ்திரம் — இவைமுதலிய காணிக்கைகளைக்கொண்டு அங்கம் — கலிங்கம் — காம்போசம் - பாஞ்சாலம் —

விலாடம் - இலாடம் - சூரம் - சீனம் - மகதம் - யாதவம் - சேரம் - சோழம் - பாண்டியம்- சிந்து-இவைமுதலிய தேசமகாராஜாக்களும், முன்னமே அயோத்திமாநகரத்தில் வந்திருக்கின்ற சுக்ரீவன்-சாம்புவந்தன்- நளன்-நீலன்,அனலன்-அங்கதன்-அநுமான்முதலிய வானராதிபதிகளும், விபீஷணரும், முறை முறையேவந்து ஸ்ரீராமபிரானைக் கண்ணாரக்கண்டு தரிசித்துத் தங்கள் தங்களுக்கிட்ட ஆசனத்திலிருந்தனர்கள். ஆங்கிரர் - அத்திரி - காசிபர் - கௌசிகர் - சமதக்னி - பாரத்துவாசர் - கௌதமர்- சாபாலி - அகஸ்தியர்- கண்ணுவர் - புலத்தியர் - பிருகு - இவர்கள்முதலிய மகாமுனிவர்கள் தங்கள்தங்கள் தவகோலங்களோடு பன்னகசாலையைவிட்டு அந்நைமிசாரணியத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீராமச்சந்திரனிடத்தில் வந்தனர்கள். அப்படிவந்த தபோதனர்களை ஸ்ரீராமன் எதிர்கொண்டு பணிந்து உள்ளழைத்துவந்து ஆசனந்தந்து அதிலெழுந்தருளச்செய்து,க்ஷேமலாபங்களை விசாரித்துச் சந்தோஷமாயிருந்தனர். அக்காலையில் இலக்ஷுமணப்பெருமான் இராமபிரானுத்தரவுபடி வந்தவர்களுக்கெல்லாம் அமைத்துவைத்திருக்கும் விடுதியில் அவ்வவர்களை முறைமைப்படி விட்டு தேவபோஜனமாகிய தேவாமிர்தமும் நாணும்படியாக ஷட்ரசான்னமாகிய உணவையூட்டுவித்து மனமகிழ்ந்தனர். யாவரும் இந்யாகத்தைப்போலெவரும் எக்காலத்திலும் செய்தவரில்லையென்றுகொண்டாடினார்கள்.

ஸ்ரீராமபிரான் அரசருக்குச்சன்மானமும், பிராமணர்கட்கும் ஏழைகட்குந் தானமும் வழங்குதல்.

கவி.

வறியவர்வேண்டிற்றெல்லாம் வழங்குவன்வள்ளலென்றுஞ்
செறிபறையறைதலோடு மிரவலாளரெல்லாம்
பறையறையோசைகேட்டுப் பழுமரந்தன்னில்வீழும்
பறவையுமதுவீழ்தேனிற் பலசனம்வந்துமொய்த்தார்.

பிறகு இராமச்சந்திரன் அவ்வத்தேய மகாராஜாக்களுக்கெல்லாம் சன்மானமாக சொர்ணமும் - வஸ்திரமும் - ஆபரணமும் கொடுத்து, சுக்ரீவன்-அநுமான்-விபீஷணர்-அங்கதனாதி வானரத்தலைவர்-குகன் இவர்முதலிய பிரமுகர்களுக்கும், ஆடையாபரணங்களைக்கொடுத்து,பிராமணர்களுக்கும் ஏழைகளுக்கும் வேண்டியது வேண்டியபடி தானங்கொடுக்கப்போகிறோம். ஆதலால் யார்யார் எதெது வேண்டுகிறார்களோ அவர்களெல்லாம் வருகலாமென்று பறையறையச்சொல்ல,அப்படியேபறையறைந்த சத்தத்தைக்கேட்ட யாவரும் பழுத்தமரத்தில் வந்துசேரும் பக்ஷிகளைப்போல்வந்துசேரப் பொன்வேண்டினவர்கட்குப் பொன்னும்,பூமிவேண்டினவர்கட்குப் பூமியும், மாணிக்கம் வேண்டினவர்கட்கு மாணிக்கமும், இன்னும் யார்யார் என்னென்ன வேண்டினார்களோ அவரவர்மனம் களிக்கக்கொடுத்து மகிழ்வித்தனர்.

அச்சமயத்தில்,எப்பொழுதும் ஜலத்தில் முழுகித்தவஞ்செய்வதால்பாசி மூடிய திருமேனியும், ஜீவராசிகள் நகங்கிவருந்தாதவண்ணம் குந்துநடையையுடையவருமாகிய ஓர்மகாமுனிவர் ஐயாமகாராஜனே! எனக்குப்பொன்னும்



பூஷணத்தாலுமடையுஞ் சுகமொன்றுமில்லை. எனக்கு வேண்டுவதுமரவுரியொன்று அதைக்கொடுக்கவேணுமென்றுகேட்க,ஸ்ரீராமன்மனமகிழ்ந்து ஒருபண்டி மரவுரியைக் கொடுத்தனர். பிறகு ஒருகமண்டலம் வேண்டுமென்றுகேட்க ஒருபொன்கமண்டலம்கொடுத்தனர். மற்றொருபிராமணன் எழுந்து,ஐயாமகாராஜாவே கஞ்சிக்குப் பயறுவேண்டுமென்று என்மனைவி கேட்டனள். அதற்காகவந்தேன் ஒருகலப்பயிறு வேண்டும் என்ன, பிரானானவர் இப்பிராமணனது வறுமையை நினைந்து, மலைபோலுங்குவிந்த திரவியமும், பசுக்கூட்டமுங் கொடுக்க, பிராமணன் அதற்குச்சம்மதியாது ஐயா இரகுபுங்கவரே! நான் கேட்டபொருளைக் கொடாது வேறுபலபொருளைக் கொடுத்தாலும் நான்வாங்கமாட்டேன். ஏனெனில், என்மனைவி கலப்பயறுதான் கேட்டனள். அதுதவிர வேறுபொருளை நான்வாங்கிக்கொண்டுபோனால், அவள் என்னைச் சேரமாட்டாள் - மிகவுங் கோபிப்பாள் - சாதம்போடமாட்டாளென்றுசொல்ல, இராகவன்கேட்டு, ஆ! ஆ! இவன் உண்மையுடையோன் தன்மனையவள் சொல்லியவார்த்தையை மறையாது கூறினனென்று மகிழ்ந்து கஞ்சிக்கு வேண்டிய அரிசியைத்தரும் நெல்லு நூறாயிரங்கலமும், நூறாயிரகலப்பயறும் கொடுத்தனுப்பினார்.

இவ்வாறு யார் யார் எது எது விரும்புகின்றார்களோ அவ்வவர்களிஷ்டப்படி கொடுத்துத் திருப்திசெய்வித்துப் பொழுதுபோக்குநாளில், இயாகத்திற்குக் குறித்தநாள்வந்துவிட அன்று ஸ்ரீராமனுத்தரவுபடி வேண்டிய உபகரணங்களை யொன்றுந் தவறாது அவ்வியாகசாலையிற் சேர்த்து, விதிப்படி வேள்வித்தம்பங்கள் நிறுத்தி வசிஷ்டமா முனிவரானவர் யாகம்பண்ணத்தொடங்கினார். ஸ்ரீராமபிரானும் மைதிலியாகிய ஜானகி நீங்கினபிறகு, சொர்ணத்தாற் சீதைபோலுருச்செய்து அழகுவிளங்கக்கண்டுகொண்டிருக்கும் பாவையைச் சமீபத்திற் சேர்த்தி விரதசீலராய் கங்கணந்தரித்து ஆசிரியனுத்திரவுபடி யாககாரியம் பார்க்கின்றார். வேதங்கள் முழங்கின. பூப்பிரதக்ஷணஞ் செய்யச்சென்ற குதிரையும் வந்துவிட அக்குதிரைக்குச் சோடசோபசாரஞ்செய்து அதனது நாலுகால்களுக்கும் பொற்குளம்பு பூட்டி அலங்காரஞ்செய்து வேள்வித்தம்பத்திற்கட்டி வேதவிதிப்படி செய்யவேண்டிய முறைகளைச் செய்து தேவர்களுக் கவிர்ப்பாகங்களைத் தந்து யாகநடந்துகொண்டிருக்கின்றது. இவ்விதமாக நடக்கிற சவிஸ்தாரத்தை வான்மீகமுனிவரறிந்தனர்.

வான்மீகமுனிவருத்தரவால் குசலவர்கள் யாகசாலையில்வந்து இராமாயணம் பாடுதல்.

கவி.

இசைபுனையிராகவ னினியவேள்விகள், நசைபலவேட்டுமந் நாளினண்டிறை
வசையறுமதுரவான் மீகிமன்னிய, குசலவர்வருகெனக் குறித்துக்கூறினன்.

இந்தப் பிரகாரம் ஸ்ரீராமச்சந்திரன் வேள்விசெய்யுங்காலில் வான்மீக முனிவரானவர் குசலவர்களைத் தன்னிட மழைப்பித்து நீங்களிருவரும் நைமி

சாரணியஞ் சென்று அயோத்தியா நகரத்தையாளும் ஸ்ரீராமன் செய்யும்யாக சாலையிற் பிரவேசித்து எம்மாற்கற்பித்திருக்கும் இராமாயணத்தைநீங்கள் பாடுங்களென் றுக்யாபிக்க அவ்வண்ணமே அவ்விரு குமாரர்களும் வான்மீக முனிவரையுந் தாயாகிய சீதையையும்வணங்கி ஆடையாபரணவலங்கிருதர்களாய் வீணையை இடதுதோளிற்சார்த்தி நைமிசாரணியத்திற்சமைத்த யாகசாலையிற் சென்றார்கள். அங்குள்ளவர்களெல்லாம் இக்குமாரர்களைப் பார்த்து ஆஆ!! இதென்ன ஆச்சரியம் ஸ்ரீராமச்சந்திரனை யொத்திருக்கிறார்களே யென்று பேசிக்கொண்டார்கள். இவ்விருகுமாரர்களும் வீணையின் முறுக்காணிகளைத்திருகி தேவரும் கந்திருவரும்வித்தியாதரரும் கேட்டு நாணும்படி சுதி சுரம் தாளப்பிரயாணங்கள் பெழாலொலி கண்டத்தொலி ஒன்றிற்கொன்று மாறுபடாது வாயிலில்நின்று இராமாயணத்தைப்பாடினார்கள்.

## ஸ்ரீராமபிரான் கேட்டு தமதெதிரிற் பாடவழைக்க அக்குசலவர்கள் இராமாயணத்தை வரன்முறைப்படி பாடுதல்.

### கவி.

குரன்முதலெழுவகை நரம்புகூட்டிய, விரல்கவர்ந்தடுத்துள வேதர்சிரியாழ்
காமிசைவாங்கினர் கவின்கொள்காப்பியு, உரைபயிலின்னிசை யுரைப்பதாயினர்.

இவ்வண்ணம்பாடிய இராமாயணத்தை யாகக்காரியத்திலிருந்த ஸ்ரீராமபிரான் கேட்டு இஃதியார்? சுதிமுறை பிறழாது பாடுபவர்களை. அவர்யழையுங்களென்ன, உடனே வாயிற்காப்பாளர் குசலவாளிடஞ் சென்று, ஸ்ரீராமச்சந்திரபகவான் அழையென் றருளிச்செய்தாரென்ன வதைக்கேட்ட குமாரர்களிருவரும்உள்சென்றுபகவானைப்பணிந்துநின்றார்கள். சுவாமி, அவர்களைப்பார்த்து, ஓ வாலிபர்காள்! நீங்கள் அங்குபாடினீர்களே அதை இவ்விடத்திற்பாடும் பார்ப்போமென்ன அப்படியேபாடுகிறோமென்று வீணையைக் கையிலெடுத்து, குரல்முதலிய ஏழு ஓசைகளமைந்த எழுவகை நரம்புகளைத்தமது விரல்களால் தெறித்து, இராமாயணத்தைவான்மீகமுனிவர் தங்களுக்கெப்படிகற்பித்தனரோ அவ்வண்ணமேபகவானது திருவவதாரமுதல்இலங்கையையடைந்துராவணசம்மாரஞ்செய்து பிராட்டியைமீட்டு அயோத்தியாபுரியையடைந்துபட்டாபிஷேகஞ்செய்ததீருகியசரித்திரங்களைசாங்கோபசாங்கமாகச் சொல்லக்கேட்டவப்பிரானனவர்மகிழ்ந்துபுதல்வரை நோக்கி, நீங்கள்யார்? எங்கிருக்கிறது? உமது பெயரென்ன? இக்காவியம் பாடினவர்யாவர்? ஏதுவரைக்கும் பாடியுளது வென்று வினவ, அதற்குக் குசலவர்கள் பகவானைப் பார்த்து, ஓ அரசே! யாங்கள் வால்மீகிமகாமுனிவரது சிஷியர்கள் - அவரது ஆச்சிரமத்திலேயேதா னிருக்கிறது. எமதுபெயர் குசன் என்றும் லவன் என்றும் பெயர். இப்பொழுது தேவரீர் திருச்செவிசார்த்தியருளிய இந்தக் காவியஞ் செய்தருளியவர் வால்மீகர், பிரபந்தம் இருபத்தினாலாயிரம் சுலோகங்களும், நூறு உபாக்கியானங்களு மடங்கியது இதனை ஆதிமுதல் ஐந்நூறு சருக்கங்களாகவும் ஆறுகாண்டங்களாகவும் வகுத்து அவற்றுடனே உத்தரகாண்டமும் சேர்த்துச் செய்தரு

No. 95 குசலவர்கள் இராமாயணம்பாடி ஸ்ரீராமரை மகிழ்வித்தல்.



ஸ்ரீராமர், வால்மீகரையும் சீதையையும் அழைப்பித்தல்.



உத்தரகாண்டம். குசலவர்கள் இராமாயணம்பாடியது.



ளியிருக்கின்றார். என்று குசலவர்கள் கூறக்கேட்டு மகாசந்தோஷமடைந்து; தன்திருமேனிபோலு மழகுவாய்ந்த அப்புத்திரர்கட்குப் பதினெண்ணாயிரம் பொன்கொடுக்கும்படிமந்திரிகட்கு ஆஞ்ஞாபித்தார். அவ்வார்த்தையைக்கேட்டபுதல்வர்கள் ஓமஹாப்பிரபோ. பொருள்எங்கட்கு வேண்டாம் வேண்டாம்: அஃது சகல பாபங்களையு முண்டாக்கும். நாங்களோ முனிவராச்சிரமத்திலிருந்து காய்கனிகிழங்குகளை உண்டு காலங்கழித்து வருகின்றவர்கள். நாங்கள் பொருளினிடத்தில் எட்டிக்காயைப்போல் கைப்புக்கொண்டிருக்கிறோமென்று சொல்ல, பிரான்மகிழ்ந்து ஓ குமாரர்களே இன்னும் நாளையதினம் வந்துபாடுவீர்களாவென்றுவினவ, அவ்வண்ணமே நாளையதின்மும் வந்துபாடுகிறோமென்று விடைகொண்டு வான்மீகபகவானது ஆச்சிரமமடைந்து நடந்தவர்த்தமானங்களைக் கூறி மறுநாள்முதல் சிலநாள்வந்துவந்து பாடிக்கொண்டிருந்தார்கள்.

## ஸ்ரீராமர் குசலவரைத் தமது புத்திரர்களென்றறிந்து வான்மீகரையும் சீதையையும் அழைப்பித்தல்.

கவி.

பன்னியபனுவலின்சொற் குசலவர்பாடுகின்ற
இன்னிசைகேட்டுநாளு மியல்புளியொருநாளந்தப்
பொன்னியற்சனகிபெற்ற புதல்வரென்றறிந்துவாங்கித்
தன்னிகர்புதல்வர்தம்மைத் தழுவினனெழுவுத்தோளான்.

இவ்வண்ணம் குசலவர்பாடுகின்ற *வால்மீகராமாயணத்தை நாள்தோறுங்கேட்டு வருநாளையிலொருநாள் இப்புதல்வர்கள் சானகியினிடம் தமக்குதித்த குமாரர்களென்றறிந்து அவர்களைத்தழுவி உச்சிமுகந்து அளவில்லாத சந்தோஷங்கொண்டு, இலங்கையிலக்கினியில் முழுகுவித்துச் சீதையின் கற்புத்திறத்தைக் காட்டினதைப்போல் இன்னுமொருவிசைஉலகினர்க்குக்காண்பிக்கவேண்டுமென்றுதிருவுளங்கொண்டு புத்திரர்களைநோக்கி,ஓ குமாரர்காள்! நீங்கள் உங்களாச்சிரமஞ்சென்று நாளையதினம் வாருங்களென்று திட்டஞ்செய்து, பிராமணர் அரசர்கள் மந்திரிகள் பிரதானிகள் யாவருக்கும் விடைகொடுத்து தமது அரண்மனையடைந்து தூதர்சிலரை விளித்து, நீவிர் வான்மீகபகவான் சன்னிதிக்குச்சென்று சீதைகல்மிஷமின்றிச் சுத்தமான ஒழுக்கமுள்ளவளாயின் அம்முனிவருடைய கட்டளையினால் இச்சபைநடுவே நம்பிக்கைவரத்தக்க சபதஞ்செய்யக் கடவளென்று விஞ்ஞாபனஞ்செய்யுங்கள். இவ்விஷயத்திலம்மகாரிஷியின் கருத்தும் - சீதையின்கருத்தும் - இத்தன்மையதெனவறிந்து, உடன்பாடாயின் நாளைகாலையிலே இவ்வண்ணஞ் செய்யவரவேண்டுமென்று சொல்லிவருவீர்களென்று ஆக்கியாபித்தருளினர். அவ்வினையுரைப்போர் உடனே அம்முனிபுங்கவர் சன்னிதானஞ்சென்றுவணங்கி இராமவாக்கியத்தை விண்ணப்பஞ்செய்ய, அவர் நல்லதப்படியே சீதை செய்வாளென்று நும்மரசற்குக் கூறுமின்களென்றனர். அத்தூதுவ ரவ்வாக்கியத்தைச் சிரமேற்கொண்டு இரகுநாயகரிடம் விஞ்ஞாபனஞ் செய்தனர்.

அது செவியிற் பட்டவுடனே இராமர்களிப்புற்று, ஆண்டு சூழுகின்ற முனிவர் அரசர்முதலிய யாவரையுநோக்கி, நாளைகாலை சீதை தனது நல்லொழுக்கத்திற்குக் குறியாகப் பிரமாணஞ்செய்யச் சித்தமாயிருக்கின்றாள். இயாரார் காணப்பிரியமுள்ளவரோ அவரெல்லாம் இங்குவந் திருக்கலாமென வுரைத்தனர். அதனை யாவருங்கொண்டாடிப் புகழ்ந்து விடைபெற்றுத் தந்தமிடஞ் சென்றனர்.

இப்பால் மறுநாளுதயத்தில் வசிஷ்டர் - வாமதேவர் - விசுவாமித்திரர் - சதாநந்தர் - பரத்துவாசர் - அகஸ்தியர் - நாரதர்முதலிய இருடிகளும், விபீஷணர்முதலிய அரக்கரும், சுக்கிரீவன்முதலிய கபிகளும், மற்றும் அந்தணர் அரசர் - வைசியர் - சூத்திரர் - ஆகிய நால்வருணத்தினரும் வந்து சபைகூடினார்கள்.

கவி.

ஈனப்பழிக்குத்தானிறைஞ்சி யிளையோன்றன்னைப் பிரிந்ததற்பின்
மானக்கூர்வேனிறத்தூன்ற வைகுறுந்தளர்வானை
கானிற்றெய்வங்கண்டிரங்கக் கண்களாறுய்ச்சொரிவானை
ஞானத்தவத்தோன் பின்கொண்டு நாதன்சவையினுட்புக்கான்.

அச்சமயத்தில் பழிக்குப்பயந்து இளையவர் தம்மை யாரணியத்தில் விடுத்துப் பிரிந்தபின், மானமாகியவேல் தைப்புதினால்வருந்தி, காட்டுதேவதைகளுங்கண்டழக் கண்ணீராறுய்ச்சொரியுஞ் சீதாபிராட்டியை அழைத்துக்கொண்டு மாணாக்கர்தம்மைச் சூழும்படி வான்மீகபகவான் ஸ்ரீராமன் சபையினுள்வந்தனர். பின்புறத்திற் பிராட்டியார் காஷாயவாடையும், குவித்தகையும், குனிந்தசென்னியுமாகி, பிரமனைத்தொடர்ந்து சுருதிவருவதுபோல் வந்துநின்றனள். குசலவர்களும்கூடவந்தனர்கள். இவ்வாறனைவருங்கூடியசபையில் வான்மீகமுனிவரர் இரகுவரரைநோக்கி, ஓ தசரதகுமாரரே! இதோநிற்கின்றசீதை மகாபதிவிரதை. மேன்மையான தருமாசாரமுள்ளவள். காணமூன்றினுங் குற்றமற்றவள். உலகத்தின் அபவாதத்துக்கு அஞ்சின உமக்கு நம்பிக்கைகொடுக்கச் சித்தமாயிருக்கின்றாள். இதோநிற்கிற குமாரரிருவரும் உமதுபுத்திரர். இரட்டைப்பிறப்பினர். நான்சத்தியமே சொல்கிறேன். நான் வருணதேவருடைய பத்தாங்குமாரன். பொய்யை நினைத்துமறியேன். என்னுடையாதுரைத்தவை பொய்யாயின் அனேகவாயிர வருஷங்களாகச்செய்த தவத்தின்பயனை இழக்கக்கடவேன். ஐம்பொறிகளினும் அந்தக்கரணத்தினும் இவள்தூயவளெனத்தெரிந்தே யானிவளை யாதரித்துவந்தேன். உலகநிந்தைக்கு வெருவிக் காட்டிலுய்த்த வுமக்கெதிரி லிவள் சபதஞ்செய்யக் காத்திருக்கிறாள். இவ்விருகுமாரர்களும் உமதுபுத்திரர்கள் என்று உறுதியாக மொழிந்தனர்.

பிறகு காகுத்தசிரோமணி அஞ்சலிபந்தஞ் செய்துகொண்டு, சுவாமீ! தேவரீர் வாக்கியங்களே நம்பிக்கைக்குப் போதுமானவை. முன்பிவள் தேவதைகள் சன்னிதானத்திற் சபதஞ்செய்ததினாலேயே சுத்தமானவளென நிச்சயித்து மனையில் வைத்துக்கொண்டேன். இவளுடைய நல்லொழுக்கந்

№ 96. சீதாபிராட்டிபிரமாணஞ்செய்துபூப்பிரவேசமாதல்.



பூமாதேவிமேற்சினந்த ஸ்ரீராமரைபிரம்மதேவன்தேற்றுதல்.



உத்தரகாண்டம்.



களும் நற்குணங்களு மடியேற்குத் தெரியாதனவல்ல. ஆயினும் லோகாபவாத பயத்தினாற் புறம்விட்டதைத் தேவரீர் க்ஷமித்தருளவேண்டும். இச்சிறுவரும் என்மக்களென்றுந் தெரிந்துகொண்டேன். இவ்வாறு பரிசுத்தமான இம்மைதிலியிடம் எனக்கு அன்புபெருகச் சோதனை தரக்கடவதுதானென்றியம்பி நிற்கையில் வாயுபகவான் யாவரும் ஆனந்திக்குமாறு சுகமானபரிசத்தோடும் சுத்தமான கந்தத்தோடும் வீசினார். இதைக்கண்டு ஆங்குற்றனைய யாவரும் பெருவியப்போடு பெருங்களிப்பு மடைந்தனர். அப்பொழுது பிராட்டியார் இவ்வார்த்தைக ளனைத்துங்கேட்டுச் சொல்லுகிறாள். எனது கற்புத்தன்மை அருந்ததிதேவியும்போற்றத்தக்கதென்று யாவருக்குந் தெரிந்த விஷயமே; அப்படிப்பட்ட என்னு கட்டளையைக் கணவன் பொல்லாங்கென் றுரைக்கின் எனதுநிலைமைஎவ்வாறுபயன்படும். இனிமறுத்துச்சொல்லவேண்டியவிஷயங் களேதுமின்று, வாயிலிட்ட விஷத்தை வயிற்றுக்குள்ளிறக்கினாலொழிய அல்லாவிடில் யாதுசெய்யும். என்மீது கொடியபழியைக் கூறினவர்களின் நெஞ்சு பிளக்கும்படியாக இப்பொழுதே சோதனை காட்டுகிறேன் யாவரும் பாருமென்றுகடுத்துக்கூறினாள். அப்பொழுது வான்மீகமுனிவரானவர் அம்மா ஜானகி! கோபிக்கவேண்டாம் உனது பர்த்தாவினுத்தரவுபடி உலகங்கொண்ட சந்தேகத்தை யொழிப்பாயாகவென்று சொல்லினார். அப்போது சீதையானவள் அம்முனிவருடைய கமண்டலத்திலுள்ள மந்திரநீரைக் கையில் வாங்கி ஆசமனஞ்செய்து பூமியைப் பார்த்து இதனைச்சொல்லுகிறாள்.

## வான்மீகரோடு யாகசாலைவந்தசீதை தனதுகற்பைப்பற்றிப் பிரமாணஞ்செய்து பூப்பிரவேசமாய்மறைய அப்பூதேவிமேல்இராமமூர்த்தி கோபித்தல்.

கவி.

வினைப்பாசத்தையறுத்தமுனி வேள்விகாத்துமிதிலைபுகுந்
தெனக்காவீசன்வில்லிறுத்தன் றெனைக்கைப்பிடித்தவெழிலாரும்
புனைக்காயாம்பூநிறத்தானை யன்றிமற்றோர்பூமனையான்
மனத்தால்வாக்கானினையேனேல் வழிதாவெனக்குமண்மகளே.

வருந்தியேபயந்தநீ மற்றென்கற்புமவ், வருந்ததிகற்புமொன் றெனதென்றிடின்
பெருந்துநிமாநிலம் பிளந்தியென்றனள், இருந்துதியமாரு மேத்துங்கற்பினாள்.
பலதலைமாசுணப் பள்ளிமேவிய, நிலைபெறுகற்பிறை னிதிகொண்மேனியாள்
வலைமுலையாகத்தாண் மாரிக்கூந்தலாள், அலைகடலாடையா ளவனிதோன்றினாள்.
சேணுலாவியதல மடந்தைசீதைதன், பூணுலாவியபுயம் பொருந்தப்புல்லுறீஇ
வாணிலாவியகதிர் வழங்கல்செல்கலாக், கீணிலைப்படலமுங் கிழியப்போயினார்.

இரண்டு கண்களினின்று மருவியாற்றைப்போல நீரைப்பெருக்கிஅம்மா பூமாதேவி! தீவினையாகிய பந்தத்தினின்றும் விடுபட்ட விசுவாமித்திர முனி

வரது யாகத்தை ரக்ஷித்து மிதிலாபுரியடைந்து அடியாளுக்காகச் சிவபிரானது வில்லைமுறித்துஎனதுகையைப்பிடித்த காயாம்பூநிறத்துமேனியானாகிய இவ்விரகுவம்சகுலதிலகனன்றி மற்றொருபுருடனை எனது மனத்தினாலாவது வாக்கினாலாவது நான்நினையாத சத்தியமுடையவளாயின் எனக்கு நீவழிதந்து இடங்கொடுக்கவேண்டும். நீபெற்ற புத்திரியாகிய வெனது கற்பும் அருந்ததிதேவியினது கற்புமொன்றாயிருக்குமென்னின், நீவாசஞ்செய்யும்பூமி வழிவிடவேண்டுமென்று பூதேவியை வேண்டும்பொழுது பூமிபடீரென்றுவெடித்தது. அவ்வெடிப்பின்வழியாக ஆயிரம்பணாமகுடங்களையுடைய ஆதிசேஷனாகிய சயனத்தின்மீது எழுந்தருளும் கற்பிற்சிரேஷ்டமானவளும், இரத்தினப்பிரகாசம்போன்ற திருமேனியுடையவளும், வளர்ந்ததனங்கள் வாய்ந்த பரந்தமார்பையுடையவளும், மேகம்போலும் கூந்தலையுடையவளும், சமுத்திரத்தை யாடையாக இடையிற்கொண்டவளுமாகிய அப்பூமாதேவியானவள் யாவருடைய நேத்திரங்களுக்கும் புலப்படும்படியாக நாகலோகத்தார்கள்சிரத்தின் மேற்றாங்கப்பட்ட ஓர்திவ்வியசிங்காதனத்தின் மேற்றோன்றி அச்சீதையைத் தன்னிரண்டு புஜங்களாலே அணைத்தெடுத்து, அச்சிங்காதனத்தின்மேல்வைத்துக்கொண்டு வந்தவழியாய்ப்பூமிக்குள்ளே புகுந்துவிட்டாள். இவ்வாறு பிராட்டி பூதேவியுடன் பூமிக்குள் பிரவேசித்தவளவில் வானவர் பூமழைபெய்து புகழ, புவியிலிருந்தோரும் ஆச்சரியத்தோடு கூவிப் புகழ்ந்தனர். யாவரும் சிறுபொழுது ஒன்றுந் தோன்றாது பாவைகளை யொத்திருந்தனர்.

அக்கால் தசரதநந்தனரோ? தலைகுனிந்து கண்ணீர்மல்கி மனஞ்சோர நின்று, நெடுநேர மழுதாற்றிச் சோகமுங் குரோதமும் விஞ்சப் பூதேவியை விளித்து இங்ஙனமிசைக்க லாயினர். ஓநிலமகளே! நான் பார்த்துக்கொண்டேயிருக்கையிற் சீதையை நீ மறைத்ததினாலே சோகமானது என்மனதை வருத்துகின்றது. முன்பவள் காணாதிருந்தபோது கடலைக்கடந்து இலங்கையை வென்று கொணர்ந்தேன். இப்போதும் உன்வயிற்றைக்கிழித்துக்கொண்டுவரமாட்டுவேன். அப்படிவேண்டாம். நீயே என்னரியகாதலியைக்கொண்டு வந்துகொடு. இன்றேல் அவள் சென்றவழியாகிலு மெனக்குக்காட்டுக. எதுவுஞ்செய்யாதொழிவையாயின் உன்னை மலை கடல் காடுகளோடு நீறாக்கிவிடுகிறேன். அவளிருக்குமிடத்திலாகிலு மென்னைக்கொண்டுபோய்விடு. இப்போதவளிருக்குமிடம் சொர்க்கமோ? பாதாளமோ? மற்றெதுவோ? அவளோடுகூட நானிருக்க விரும்புகின்றேன். நீ என்றனக்கு மாமியாயிருந்தும் இங்ஙனஞ் செய்வது நலமன்று.

## பூமாதேவிமேற் கோபித்த ஸ்ரீராமரைப் பிரமதேவர்வந்து சாந்தப்படுத்தல்.

கவி.

இன்னனவுரைத்துரைத் திகலிராகவன், துன்னியபுவியினைத் துணிப்பனென்றழிப்
பொன்னிகர்சததளப் பூந்தண்கோயிலின், மன்னியபிதாமகன் வந்துதோன்றியே.



இப்படியென்று இராமசுவாமியானவர் பலபல வார்த்தைகளைக் கடச்சீடவுரைத்துக் கோபித்து இப்பூமியைப் பேர்த்துவிடுகிறேனென்று தமது கோதண்டத்தை யெடுத்தனர். அச்சமயம் பொன்னிறம்பெற்ற இதழ்களையுடைய தாமரை மலராகிய ஆலயத்தில் வீற்றிருக்கும் பிரமதேவர் அங்கு தோன்றி, பொறும் பொறும் காகுத்த வம்சோத்பவரே! பொறும் பொறும் எங்களை ரக்ஷிக்கவந்தவரே யென்று சொல்லி, ஐயா! நீர் பஞ்சபூத சம்பந்தமாகிய உலகத்தை உண்டு ஆலிலையின்மீது கண்வளர்ந்து திரிலோகங்களையும் ரக்ஷிக்கின்றீர். நீரறியாதகாரிய மொன்றுளதோ? இன்று: ஆயினும் சில கூறுகிறேன் அதாவது — சுவாமி! புலத்தியப் பிரமரிஷி வம்சத்தில் தோன்றி எங்களுக்கெல்லாம் இடர்விளைத்த கொடியபாதகனாகிய இராவணனைச் சங்கரித்தற்கன்றோ தாம் வைகுண்ட நகரத்தைவிட்டு இங்குமானிடதேகியாகத் திருவவதாரஞ் செய்தது.

ஐயா ஸ்ரீராமபிரானே! தேவரீர் இவ்வண்ணம் வருந்தலாகுமோ? தேவரீருடைய முந்தியதன்மையாகியவிஷ்ணுபாவத்தையும், சொர்க்கிகளோடுகட்டளையிட்டு நிர்ணயித்ததையு நினைத்துக்கொள்ளுமாறு இங்ஙன நினைப்பிக்கின்றேனே யல்லது வேறில்லை. சீதாதேவியும் தேவரீரோடு பூர்வீக ரூபத்தையே அடையுந்தன்மையள். இப்போது நாகலோகத்தி லெழுந்தருளியிருக்கின்றாள். பரமபதத்தில் உம்மோடு சேர்வாள். இதுநிற்க வான்மீகமுனிவரால் தேவரீருடைய சரித்திரமிழைத்துச் செய்யப்பட்ட இக்காவியமே மேலானகாவியம். இதுவே ஆதிகாவியம். யான் தேவதைகளோடுகூட முன்பே கேட்டிருக்கின்றேன். இதுவெகு அற்புதமானது. இதில் மிகுந்திருக்கிற பாகத்தைத் தேவரீரே செவிசாய்த்தருளவேண்டும். பிறர் கேட்கலாகாது. தேவரீரன்றிக் காவியம் பெறத்தகும் புருடனெங்குமில்லை. என்றிப்படி விண்ணப்பஞ்செய்து தமதுலகத்திற்குச் சென்றார்.

## ஸ்ரீராமர் பூதேவியின்மேற்கொண்டகோபத்தைப் பிரமதேவனால்தீர்ந்து தமது புத்திரரோடு அயோத்தியடைந்தரசாளல்.

கவி.

அங்கணவானகத் தமலனுமெனப், பங்கயாசனப் பாலுரைத்தலும்
துங்கவார்சிலைத் துணைநெடும்புயச், செங்கண்வீரன்வெஞ் சினமொழிந்தனன்.

இவ்வண்ணம் பிரம்மாவானவர் கூறியவார்த்தைகளைக் கேட்டு ஸ்ரீராமன் கோபந்தணிந்து தன் புதல்வரை யழைத்து யாகசாலையுட் சென்று பூரணாகுதி செய்து அன்றுமுதல் வான்மீக மகாமுனிவர் பாடிய பாலகாண்டமுதல் உத்தரகாண்ட மீறாகக் குசலவர்களால் கேட்டு நூறு அஸ்வமேதயாகஞ் செய்து முடித்து யாவரையும் சந்தோஷிப்பித்தனர்.

கவி.

சேடனுயிரஞ் சிரமசைத்திடக், கோடிவாமதிக் குழுவியன்னதோட்
டோடையானையி னும்பரேறியே, யாடன்மாவினோ டயோத்திமேவினன்.

தன்குடைக்கிடைத் தலமொரேழையும், பொன்பெய்மாரியான் பொதுவறப்புரந்
தன்பர்சூழவா ளரசர்போற்றநீ, டின்பமேநுகர்ந் தினிதுவைகினன்.

இப்படி யாகத்தைமுடித்து வேண்டியபடியே தானமீந்து நல்லதினம்பார்த்துத் தமதுசோதரர்கள் புடைசூழ சகலபரிவாரங்களோடும் விபீஷணர் - சுக்ரீவன் — ஆஞ்சநேயர்-வான்மீகர்-வசிஷ்டாதிமுனிவர்களோடும் பட்டத்துயானையின்மீ தாரோகணித்துப் பூமியதிரும்படி அயோத்தியாபுரி யடைந்து முனிவர்களுக்கு விடைதந்து தனதுபூசக்கரக்குடைநிழலில் ஏழுலோகங்களையும் காப்பாற்றி மாதமும்மாரிபெய்ய உலகமெல்லாம் தனதுசெங்கோல்செல்லும்படி, பொன்னிறற்செய்த பாவையாகிய சீதையோடும் குசலவர்களாகிய புத்திரர்களோடும் தம்பிமாரோடும் இன்பங்களை அநுபவித்துச்சுகமாகவாழ்ந்திருந்தனர்.

அஸ்வமேதயாகப்படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

பதினேழாவது,

## கால்காத்தபடலம்.

இப்படலத்தில் ஸ்ரீராமபிரானானவர் பரலோகமடைந்த தமது தாய்மார் மூவருக்கும் சரமகிரியைகளை நடத்தி, சத்துருக்னர்க்கும் வானரவீரர்க்கும் விபீஷணர்க்கும் விடைதந்து இராச்சிய பரிபாலனஞ் செய்திருக்குங்கால் தமது நல்லம்மானாகிய யுதாசித்து மகாராஜன் வேண்டுகோளின்படிப் பரதாழ்வானால் கந்திருவர்களைச் செயிப்பித்து அவ்வம்மானிராச்சியத்தை அப்பரதர் புத்திரரிருவர்க்கும் பகுந்தளித் தரசாளச் செய்ததும், பின்பிலக்குமணர்புத்திர ரிருவர்க்கும் அப்பரதாழ்வானியமனப்படி அவர்களைக் கொண்டே காருகபதமென்னுந்தேயத்தைப் பகுந்தளித் தரசாளச் செய்ததும் சொல்லப்படுகின்றது.

கோசலைதேவிபரலோகமடைய ஸ்ரீராமர்வருந்தி சரமக்கிரியையாதி நடத்தி பிறகு பரமபதமடைந்த கைகேசி சுமித்திரை இவர்களுக்குப்பரதலக்ஷ்மணர்களால் சரமக்கிரியை நடத்தி சத்துருக்னருக்கும் வானரர்க்கும் விபீஷணர்க்கும் விடையீதல்.

கலி.

இன்னதன்மையா லினியவையகம், பன்னியாளுநாட் பலகழிந்தபின்
கன்னன்மென்மொழிக் கவின்கொள்செய்யவாய், அன்னைகோசலைக் கந்தமுற்றதால்.

இப்படியாக ஸ்ரீராமபிரான் அரசாளுநாளில் அநேகநாள் கழிந்தபிறகு சர்க்கரைபோன்ற மொழியும் அழகுநிறைந்த சிவந்தவாயுமுடைய தனது தாயாகிய கௌசல்யா தேவியானவள் பரமபத மடைந்தனள். ஸ்ரீராமன் ஆற்றுதற் கரியதுயரமுறுவ ராயினர்.

№ 97. ஸ்ரீபரதகுமாரர் பட்டாபிஷேகம். ஸ்ரீ இலக்குமணகுமாரர்பட்டாபிஷேகம்.



உத்தரகாண்டம். கால்காத்தப்படலம்.

கவி.

தொன்னேர்வைவேற் கோசலமன்னன் குலமங்காய்
அன்னையன்னை யத்தனுமுன்னே யகல்வுற்றான்
இன்னேநீயு மென்னையுநீத்தா யெனின்யானும்
பின்னேவந்தேன் வந்தனெனென்றே பேதுற்றான்.

கொந்தார்கோலக் கோசலநாடன் குலமங்காய்
சந்தார்மார்பத் தசரதனின்பத் தகைவல்லி
அந்தோவந்தோ வையனைநாடி யடியேனும்
வந்தேன்வந்தே னென்றுதளர்ந்தே மாழ்குற்றான்.

பொன்னேமுத்தே பூதலமேழும் புகழ்மேவும்
தன்னேரில்லாத் தசரதன்மார்பந் தனியாள்வாய்
அன்னேயன்னே யென்றிருகண்ணீ ராறுவார
என்னேயென்னே யென்றிளையோரு மிடருற்றார்.

இப்படிப்பகவானே புலப்பியகாலையில், அநேகமாகியபரிஜனங்களும் தாதிகளும் ஏவலாளிகளும் சமுத்திரகோஷம்போல் அழுதிரங்க, தாயாகியகோசலைதேவிக்குப் பிரேதச்சடங்கியற்றி ஸ்மசானத்திற்சேர்த்திதகனசஞ்சயனஞ்செய்து பிறகுபிண்டோதகதிலதர்ப்பணாதிகளையும், அரசர்களுக்குவிதித்த வேதமுறைப்படி செய்தனர். இன்னுஞ் சிலநாளைக்குள் கைகேசி சுமித்திரையாகிய இரண்டுதாய்மார்களும் பரமபதமடைய அவர்கட்கு மப்படியே தம்பிமார்களைக்கொண்டு விதிப்படி கர்மவேள்வி புரிந்து சத்துருக்கன மகாராஜாவாகிய தம்பியை மதுபுரிக் கரசாளவனுப்பி, சுக்ரீவனுக்கும் அங்கதனுக்கும், ஆஞ்சனேயர்க்கும், மற்றவானரகோடி வீரர்கட்கும், இலங்காபுரியாளும் விபீஷணருக்கும் வேண்டிய வெகுமதிதந்து விடையீந்து, மற்றவரசர்கள் புடைசூழ இரத்தினசிங்காதனத்தி லாரோகணித் தரசுபுரிகின்றனர்.

ஸ்ரீபரதருடைய அம்மானாகிய உதாசித்து மகாராஜன் வேண்டுகோளின்படி
பரதரையும் அப்பரதர் பிள்ளைகளையும் கேகய தேசத்திற்கனுப்பி
கந்திருவர்களைச் செயிப்பித்தல்.

கவி.

மொய்காமவிழியார்த முலைமுகடுபொருதடந்தோட்
கொய்கேயவரிமுராமூர் கொடைப்பரதன்றிருமாமன்
கைகேயன்குலக்குருவாங் கலைமறைதேர்கார்க்கியனும்
பொய்கேதமில்லாத புகழ்முனிவனவைபுகுந்தான்.

இப்படி யரசாளுநாளில், அழகுநிறைந்த கண்களையுடைய மாதர்களினது முலைமுகடுதோயும்படியான தோள்களையுடையபரதமகாராஜனது நல்லம்மானாகியகேகயதேசத்து மகாராஜனது குலகுருவென்னுங்கார்க்கியமகாமுனிவரன் ஒருநாள் அயோத்திபாபுரியடைந்து தமது ஆஸ்தானமண்டபத்தை நோக்கி வருவதறிந்தசக்கரவர்த்தித் திருமகனார் எதிர்கொண்டுபோய் வெகு

வணக்கத்தோடு ஆஸ்தானமண்டபத்தி லழைத்துக்கொண்டுவந்துமகாபயபத்தியோடு பூசித்து அம்மான் முதலானோர்களுடைய யோகக்ஷேமங்களைவிசாரித்து, சுவாமி! இயாதுகாரிய நிமித்தம் தேவரீர் ஈங்கெழுந்தருளியதெனக்கேட்டனர். அதற்கத்தயோதனர் நவிலலுற்றனர்.ஓ காகுத்தகுலகரே! சிந்துமகாநதியின் இருகரையிலுமுள்ள நாடுகளைச் சைலூஷன் என்னுங் கந்தருவனுடைய மக்கள் அநேக வாயிரத்தவர் கைப்பற்றிக்கொண்டு பார்த்திவரைப் பாதித்து வருகின்றனர். அந்நாடுகளெங்கு மிகுவளப்ப முள்ளவையாய் அரசர்க்கு வேண்டும்பொருள்களைத் தருபவை. ஆதலின் - அக்காந்தருவரை வென்று இராஜவம்சத்தார்க்குச் சுகம்வருவிக்கவேண்டும். அது உம்மையன்றிப் பிறராலாகத்தக்க தன்றென்று உம்முடைய நல்லம்மான் சொல்லும்படி. என்னை யனுப்பினரென்றார்.

இச்சொல் செவிபுக்கவுடனே ராகவசிங்கம் கைகுவித்து அத்தவத்தோர்பெருமானைநோக்கி, சுவாமி! அங்ஙனமே யாகுக. நம்பரதன் மக்களாகிய தக்ஷனும் புட்கரனும் பெரும்படைகொண்டுசென்று வெற்றிபெறுக. அவர்க்குத் துணையாய் அப்பரதனே ஏகுக. வெல்லப்படு மவ்விராச்சிய மிருபிரிவாகி இருவர்க்கு முரியனவாகுக. என்றுரைத்து,அப்பொழுதே அக்குமாரருக்குப் பட்டாபிஷேகஞ்செய்வித்தனர். உடனேபெருமானியமனப்படிகைகேயிபுத்திராகியபரதர்நால்வகைத்தானைபெருந்தானைகளைக் கூட்டிக்கொண்டு, குமாரரோடுகார்க்கிய முனிவைமுன்னிட்டுக்கொண்டு பயணமாகிப்பதினைந்துநாட்களிற்கேகயதேசஞ்சேர்ந்தனர். அப்படையின்பெருக் கெவ்வளவினதென்றால்:

குறைமதியிளையவெண் கோட்டுக்கோலமா, நிறைமதிபுரைவன திலகநெற்றிய
சிறைமதுகரங்களுந் தேனிலீட்டமு, மறைதருமும்மதத் தருவிவாரணம்.

நிழலொடுமலைவன நீள்கரத்தன, வழுவறவிழியன வசலம்போல்வன
தழைசெவியுடையன சமரந்தீர்ப்பன, மழையெனவதிர்வன மதுகைவாரணம்.

சூட்டியமணியன துலங்குசெவ்வரக், கூட்டியவுருளைய வொளிகொள்பொன்னிறுற்
கோட்டியகொடிஞ்சிய குதிரைநான்குடன், பூட்டியசெழுமணிப் பொலன்கொடேர்பல.

சிறப்பலமணியெனு நிறங்களெண்ணில, உறப்பெரும்புவிபெறு தென்னவும்பரிற்
பறப்பனபோல்வன பதுமத்தெண்ணன, பிறப்பனபெருங்கடல் பெரியதிக்கன.

நிலத்தடியிடம்பெறு தென்றுநீண்டவா, நலத்திடைமிதிப்பபோற் றுவுங்கோளன
வலத்தினுமிடத்தினும் வாவுங்கொட்பன, குலத்தினுக்கிசைந்தன குரகதங்களே.

ஒத்ததுபிறந்தன யூதத்தாயின, வெத்தகைப்பிறந்தன வெள்ளைவானிறம்
பத்தமுகத்தினும் பயந்தபான்மைய, வத்தியிற்கடியன வாசியீட்டமே.

சூர்முகத்தனுமிழ் தோமரத்தினர், கூர்முகப்பகழியர் கொதித்தநெஞ்சினர்
கார்முகக்கரத்தினர் கழலர்கல்லென்ச, தார்முகத்தெழுவுதோட் டறுகண்வீரரே.

இவ்வகைப்படைத்துணையோடு பரதாழ்வான்சேர்ந்தவுடனே யுதாசித்துமகாராஜனும் தனதுசைனியத்தோடுபரதற்குப்பக்கபலமாகப்புறப்பட்டார்.



இத்தன்மையாகப்பரதாழ்வான்,கந்திருவர்நகரத்தண்டைசென்று சுற்றிக்கொள்ள, அக்கந்திருவரும் போர்க்கு வலிந்துநின்றனர். இருதிறத்தாரும் ஏழுதினமளவும் போர்புரிந்தார்கள். அப்படி செய்யும்படியான யுத்தப்பிரபாவமெத்தன்மைத்தெனில்,

கரியற்றன கொடியற்றன ககனத்துறுகவனப்
பரியற்றன பணையற்றன படையற்றனவிடையே
வரியற்றனசிலையற்றன மரமற்றனவய்வார்
கிரியற்றனவெனவற்றன கிளர்பொற்சொடியணிதேர்.

பாருடின கழுகாடின படர்சோரியின்றிரைப்பே
ராருடின வலகைக்குல மடர்காகமுங்கழுகும்
மாருடினர்வேறுடினர் மகிழ்ந்தாடினர்மறவோர்
சீருடினதிசையெங்கனு மிமிர்ந்தாடினகவந்தம்.

உரமதுடையவுயர் தலைகள்புயமதற வுரியவலியசனு வளையவே
சரமெதிரவர் தலைகடவிடுபடு தொருதியெனமுடிக் கடியவான்
தரமொடிறவுலவை கழலவிகடதட கருணிகதறவெயி றுகயிரும்
புரவிகீழுணிய விரதவருவெதிகொள் பொடிசெய்திடுமிவனெய் சரமரோ.

இருவரொருவழியி னிகலியெதிர்விழிய ரியலவயில்களெதிர் விடுவரா
லொருவீரொருவழியி னுரறுமுருமினென வுரனுரவினர்க ளுலகெலாம்,
பருவமழைமுகில்கள் பொழிவதெனவொடிய பரதன்விடுபகழி மழையினுல்
வருவன்தருவனவன் வருவன்வருவனென வெருவிமலைமுழையி னுழைவரால்.

மதீரகளபத்தை மகளிர்பணிணர்படர் மருவுமுடல்தழுவி விடைவிடார்
உதிரநதியிடையி னெழுகியுயிரொழிவ குரகபணைகெளிய வுடுவும்வெங்
கதிருமதியுமுக லுதிருமதகரட கரியுமிருககன விரதமுங்
குதிரையணியினொடு துணியவொருவனொரு கொடியபகழிவிடு களமெலாம்.

முரிதருஞ்சிலை மூன்றுகோடிகந்
திருவர்பட்டவச் செருகளத்தினிற்
பரிகள்பட்டவும் பகழிபட்டவுங்
கரிகள்பட்டவுங் கணக்கொன்றில்லையால்

ஓரிடங்களு மொழிவுறுதலெவம்
பேரிடங்களின் பிணையல்காதிடைக்
காரிடங்கள்வெங் கழுகுமோரியுஞ்
பாரிடங்களும் பருந்துமானவால்.

இப்படிப்பட்ட தன்மையுடையதாம். அப்படியிருதிறத்தாரும் போர்புரிகையில் பரதாழ்வார் தமதுபுத்திரர்களால் அக்கந்திருவர்களைக் கொல்வித்துநாட்டைத்தம்வயப்படுத்தினர்.

## ஸ்ரீ பரதமகாராஜன் தமதுபுத்திரர்க்கு சிந்துநாட்டினில் இரண்டுநகரஞ்செய்வித்து அரசாள்வித்து அயோத்தியடைதல்.

கலி.

இக்குதிகழ்புகழ்ப்பரதன் றீதிலவாக்கினமென்ப
மிக்கமறைமுறைமையினல் வேதியரோடினிதாய்ந்து

புக்கலிகைப்புட்கரற்குப் புட்கராமாநகர்போர்வில்
தக்கனுக்குத்தக்கசிலை நகரிவர்க்குத்தான்கொடுத்தான்.

அஷ்டதிக்குகள்தோறும் விளங்குகின்ற கீர்த்திமிக்க பரதமகாராஜன், சிந்துதேசத்தில் அளகாபுரிபோல் இரண்டுநகரஞ்செய்வித்து, நகரத்திற்குவேண்டியமுறைமைகளை விருத்து, அந்நகரத்திற்குத் தம்புதல்வர் பெயரால்பெயரிட்டு, பிராமணர்களோடாராய்ந்து நன்னாள்கொண்டு புட்கலனென்னும் தமது மூத்தகுமாரனுக்குப் புட்கலாவதி நகரத்தையும், இளையகுமாரனாகிய தக்ஷனுக்குத் தக்ஷசிலைநகரத்தையு முடிசூட்டி அரசாளவிடுத்து அங்குள்ள தேசமன்னர்களையுந்தனதடிமைப்படுத்தி, ஐயாண்டளவுமங்கிருந்து அவரவர்களரசாட்சியின் திருத்தங்களைக்கண்டு களிப்புற்றுத்திரும்பித் திருவயோத்திக்கெழுந்தருளி, தமையனார் திருவடிகளை யிறைஞ்சி நடந்தவையெல்லாம் விண்ணப்பஞ் செய்தார்.

## ஸ்ரீராமர் இலக்குமணருடைய குமாரரிருவர்க்கும் காருகபதமென்னுந் தேயத்தைப் பகுத்தளித்தல்.

கவி.

தந்தவுரைகேட்டுமகிழ்ந் தடற்பரதன்முகநோக்கித்
தந்திரமுங்கிளியும் தலைப்படவென்றொருகணையால்
இந்திரனையன்றொலைத்தா னிகன்மலைக்கும்பெருந்திறலோன்
மைந்தருக்கும்வளநாடு வகுத்துரைத்தியெனவுரைத்தான்.

இவ்வண்ணம் புத்திரரை அரசாளவிடுத்து அயோத்திமாநகரையடைந்து தமது திருவடியில் வணங்கிப்போய் வெற்றிகொண்டுவந்த சவிஸ்தாரங்களைப் பரதமகாராசன் சொல்லக்கேட்ட ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியானவர் மகிழ்ந்து மிகவும் வலிமைபெற்ற பரதாழ்வாருடைய திருமுகத்தை நோக்கி, அப்பா என்னருமைச் சோதரா! இலங்கைமாநகரடைந்து, தேவேந்திரனுக்குப் பகைவனாகிய இந்திரசித்துவை அவனது சேனைகளோடு தொலைத்து செயங்கொண்ட இலக்ஷ்மணனது புத்திரரிருவர்களு மரசாளும் செய்யும்படியாக யாதொருவளங்களிலும் குறைவில்லாத நாடெதுவோ அதைநீ ஆராய்ந்து சொல்லுகவென வாக்யாபிக்க, அதைக்கேட்ட பரதரானவர் பகவான், திருமுகத்தைநோக்கி, சுவாமி! அதோ காருகபதம் என்கிற தேசமிருக்கிறதே, அதுநல்லவிடம், அதிற் பலதுஷ்டரிருக்கின்றனர். அதனைக் கைவசமாக்கி இவர்களுக்குத்தாபிக்கலாமென்று விண்ணப்பஞ் செய்தார். இதுசரிதானென்று இராகவேந்திரர் அங்கிகரித்து, அங்கதன் சந்திரகேது என்னுஞ் சவுமித்திரிபுதல்வரிருவர்க்கும் பட்டாபிஷேகஞ்செய்து வேண்டும்படை முதலானவைகளோடு அனுப்பியருளினார். அவர்களுள் அங்கதனுக்கு இளையாழ்வாரவர் பக்கத்துணையாகி, இரகுநந்தனரா லரக்கியாபிக்கப்பட்ட படைகளிற்பாதி தம்மைச்சூழ்ந்துவர வெளிப்பட்டார். அக்காலவ் வீராங்குஜரைச் சூழ்ந்து செல்லும் படையின்பெருக் கெவ்வாறென்றால்:—



ஐங்கொலையாமாறனைய வதிமதத்தவனுமிழும்
பைங்கண்ணவேழுறப்பும் படிதோயும்பான்மையன
வெங்கதவெண்டிசைக்கரியோ டமர்விளைப்பதெனப்படுதந்
தங்குமணியோடையன தடக்கைமதத்தகரிக்கள்.

கிழல்செய்தநழைசெவிய நிலந்தோயுநீள்கரத்த
சுழல்விழியருந்பேயுந் தொகைப்பருந்தும்பின்செல்ல
வழல்விழியவழிமதத்த வயின்மருப்பினடல்வீரக்
கழறுமிக்கும்புகர்முகத்த கடகரிகள்பலகோடி.

இயல்வனத்திற்பிறந்தபே ரிளங்கிளியினிறத்தனவு
மயினிறத்தவளைநிறத்த மணிநிறத்தமரைநிறத்த
பயினிறத்தகடலகத்தும் பலதேசத்தும்பிறந்த
குயினிறத்தகொய்யுளைய குரகதங்கள்பலகோடி.

கோகனகமுகையனைய கொழுங்கனகக்கொடிஞ்சியன
பாகனகமகிழவயப் பரிபூணும்பான்மையன
நாகவுலசங்குழைய நடந்தோர்ந்தடங்கால
மாகனக்கெடுந்துவச மணித்தேர்கள்பலகோடி.

உருத்துநெடுங்கதிர்வேல்கொண் டோர்கிழிப்பதல்லாது
மருத்துவரினுங்கூடி வெங்காட்டிமீளாதார்
எதிர்த்துவருங்கழல்வீ ரிரியவிலக்கிரியெறியும்
மருத்துவினைநிகராகும் வயவீரர்கணக்கில்லார்.

இவ்வளவு பெரும்படையோடுசென்ற இலக்குமணர் அக்காருகபததேசத்துள்ளவிடங்களைத்தம்வசப்படுத்தி, அங்கு அங்கதியாஎன்னும்ரமணீயமான நகரியொன்றுண்டாக்கினார். அஃதெப்படியெனில்:—

நெடுந்தெருக்களுநீயமழு நீருறமறுகுந்
தடங்கொள்கூலமுஞ் சந்தியுஞ்சதுக்கமுமணிமி
ளிடுஞ்சுடர்த்தொடு மிஞ்சியுமஞ்சுவந் துறங்குந்
தொடுங்கிடங்குமேற் குளிகைவாயிலின்றொகையும்.

கருதிநீடிய கருமணிக்கூலங்களொருபாற்
பரிகணீடிய பருமணிப்பந்திகளொருபால்
விரிநெடுங்கொடித் தேரணிவீதிகளொருபா
லுருவின்மேகத்தி னுயர்மணித்தோரணமொருபால்.

பனகர்வாழ்திரு நகரமோபருமணியதனுற்
றினகராதிபர்நகரமோ சித்தர்கணகரோ
வனகவிந்திரநகரமோ வளகையோயாதோ
கனகமானகர்க்குவமையோ கணிப்பதற்கரிதால்.

ககனமங்கையர்கழுத்தெனக் கமுகினெருங்கு
வனைநெடும்புனல் வளநகர்வருபவர்க்கெல்லா
நகவருஞ்செழு நவமணியொளியினன் மயங்கிப்
பசுநுமேனையவிரவுமென் றொருபரிசிலதால்.

படைத்தமாமுனி பாரெலாமொருவழிப்படுத்தி
யடைத்ததெர்க்குமிவ் வணிநகரோவியத் தணிந்த
மடைக்கண்மங்கையர் முகமெனமதியின்மேன் மறுவைத்
துடைப்பபோன்றன துகிலணிதேர்மணித் துவசம்.

மதுரமென்மொழி மடந்தையர்வடம்பரிந்திட்ட
கதிர்கொணித்திலப் பன்மணியெங்கணுங்கலந்தி
யுதிர்தலாலும்ப ரிழுக்கிவீழ்ந்தொழிகதிர்சிதறி
மதியுமீன்களுங் கிடந்தவாபோன்றனமறுகே.

இவ்வளவழகோடு நிருமித்த அங்கதியாவென்னு நகரத்தில் இலக்குமணர், மூத்தவனாகிய அங்கதனையிருத்தி அரசியற்றச்செய்து மீண்டுஅயோத்தியை யடைந்து, ஸ்ரீராமபிரானை வணங்கித் தாம்போய் நடத்திவந்தகாரியங்களை விளம்பி மகிழ்வித்தனர்.

இப்பால் பரதாழ்வாரனவர் இலக்குமணருடைய கனிஷ்டகுமாரனுக் குப் பக்கத்துணையாகி முன்புஸ்ரீராமரா லாக்கியாபித்துச் சிரேஷ்டகுமார னோடும்போன படைபோக, மற்றப்பாதிப்படை தம்மைச்சூழ்ந்துவர வெளி ப்பட்டார். அப்படைப் பெருக்கின் காட்சி யெப்படியிருந்த தென்றால்:—

பாழிவெண்கொடிப் பருமணிக்கொடிஞ்சியநெடுந்தே
ராழியாவெரித் ததுவரைக்குலமெலா மடையப்
பூழியாயினபுரவியின் விளாழியிற் புகர்வெஞ்
சூழியானைமும்மதத்தினிற் றுகளடங்கினதால்.

கான்குலாவிய கனவரைநெரிதரக்கழனி
மீன்குலாவியதரைநெடுந் துகளெழவிரைதேர்
வான்குலாநதி சுவறிடவழங்குவெம் படையி
னுண்கினோதையா னலைவாயொலியடங் கினதால்.

இவ்வித பெரும்படையோடுசென்ற பரதர்அந்தக்காருகபதத்து மல்லபூ மியென்னுமிடத்தில் சந்திரகாந்தா என்பதொரு மகாபுரிநிருமித்துச் சந்திர கேதுவை அரசாளவைத்து, ஆட்சிதிருந்தி நிலைபெறப்பார்த்து ஓராண் டுகழிந்தபின் அயோத்திக்கு மீண்டு ஸ்ரீராமபாதாரவிந்தங்களையே சேவித்து க்கொண் டிருந்தனர்.

கால்காத்தபடலம் — முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

பதினெட்டாவது,

## வைகுந்தப்படலம்.

இப்படலத்தில் ஸ்ரீராமர் பரத லக்ஷ்மணர்களுடைய புத்திரர்களுக்குத் தாம் மகுடாபிஷேகஞ்செய்வித் திராச்சியாதிபத்தியமுந் தந்து தாமயோத்தியிலிருந் தரசியற்றுங்கால் ஆதியிற் சங்கற்பித்துக்கொண்ட

No. 98. ஸ்ரீராமர்பால்காலன்வந்து பேசுகையில்லக்குமணரைதுருவாசர்சினந்துபோதல்.



இலக்குமணர்வைகுண்டமடையக்கண்டுவருந்திய ஸ்ரீராமனாதியர்முறைபாடு.







சாரியமுடிவோடு பதினோராயிர மாண்டுகழிந்ததென்றுபிரமதேவனே வலால் காலதேவன்வந் தறிக்கைசெய்திருக்கையில், துருவாச ரிலக்குமணரைச்சினந் துள்ளேசென்று அன்ன பானாதிகளருந்திச் சென்றனராக:—உடனே இலக்குமணர் ஸ்ரீவைகுண்டத்திற் கெழுந்தருளக்கண்டு வருந்திய இரகுநந்தனர்பால் பரதாழ்வாராதியர் முறைபாடும், பின்னரப்பரதாழ்வான் குசலவர்க்குப் பட்டாபிஷேக மியற்றிக் கோசலநாடிரண்டிற்கு மரசாக்கிவைத்துச் சத்துருக்னரிடக்குத் தூதர்களாற் றங்கள் கருத்தினையறிவித்ததும், அதுகேட்ட இலக்ஷுமணானுசர் தமது புத்திரரிருவர்க்கும் தமதிராச்சியத்தைப் பகுந்தளித்து அயோத்திக்கு வந்து ஸ்ரீராமபிரானைச் சரணமடைந்ததும், அக்கால் சுக்கிரீவமகாராஜன் விபீஷணாழ்வான் முதலிய சகலரும் ஸ்ரீராமபிரானாதியர்கொண்டிருக்குங் கருத்தினையுணர்ந்து உடனே அயோத்திக்குவந்து தங்களபிப்பிராயத்தை விண்ணப்பஞ்செய்ததும், அப்பால் ஸ்ரீராமர் மகாபிரஸ்தானத்துக்குரிய சடங்குகளை நிறைவேற்றித் தமது சகோதரர் முதலிய பரிசனங்களோடு வேதமாதிய யாவும் பின்றொடர்ந்துவரச் சரயுகட்டுஞ் சேர்ந்து சோதியிற்கலந்தருளி இலக்குமி சமேதராய் ஸ்ரீவைகுண்டமடைந்ததுஞ் சொல்லப் படுகின்றது.

## ஸ்ரீராமர்பால் காலன்வந்து பிரமன்கருத்தை யறிவித்தல்.

கவி.

தென்றிசைக்கடவுளுந் தேவனேயலால், அன்றுதன்னுருவொழித் தயோத்திமாநகர்க்
குன்றுநின்றனையதோர் கோயில்வாயிலில், ஒன்றியமுனிவர னுருவங்கொண்டுளான்.

இப்படி ரகுநாயகர் தருமந்தழைக்க இராச்சியாதிபத்திய நடாத்திவருகையில் ஒருதினம் தக்ஷணதிசைக் கதிபதியாகிய இயமதருமராஜன், சதுமுகப்பிரமதேவனது கட்டளையால் தனது சுயரூபத்தை மறைத்து ஒரு முனிவடிவங்கொண்டு, அயோத்திமாநகரை யடைந்து மகமேருபர்வதம்போ லுயர்ந்த அரண்மனைவாயிலில்வந்து இலட்சுமணரை விளித்து, யான் அதிபலமகாமுனிவரின் தூதன். ஒருபெரிய காரியநிமித்தம் வந்தேன். விரைவி லென்வரவை ஸ்ரீராமமூர்த்திக்கு அறிவிக்கவேண்டும் என்றான். அதைக்கேட்ட இலட்சுமணர் அங்ஙனமேசென்று விண்ணப்பஞ்செய்ய ஸ்ரீராமமூர்த்தி உள்ளேவர நம்படி யுரைத்ததனால், அத்தலத்தோன் உள்சென்று யாவரினும் விசேஷமான ஆசிகூறினன்.

அப்போது சுவாமி அவர்க்கு முறைப்படிஉபசாரமியற்றித் தேவரீர் யாருடைய தூதராக எழுந்தருளியதோ அவர் பணிப்பை யருளிச்செய்யலாமென மொழிய, அவரும் — ஓ ரகுகுலோத்தமா ! என்னைத் தூதனுப்பிய மாமுனிவரின் வாக்கியங்களைச் செவிகொள்ளத் திருவுள்ளமாயின், நாமிருவரேயன்றி மற்றியாரு மிருத்தல்கூடாது. இயாராயினு நம்முடைய சல்லாபத்தைக்கேட்டாலும் இவ்விடத்துவந்தாலும், அவர் கடுந்தண்டனைக் குள்ளாகும்படி

கட்டளையிடவேண்டுமென்றார். அதுகேட்ட ஸ்ரீராமர் அங்கீகரித்துச் சவுமித்திரியை நோக்கி, அப்பா! இங்கு வேறுவாயிலோன் வேண்டாம். நீயே யிருக்கக்கடவை. யாங்களிருவரும் பேசுமிடத்து எவரும் வரவொண்ணாது. ஒட்டிக்கேட்கவு மொண்ணாது. அவ்வாறுசெய்தால் தண்டனைக்குப் பாத்திரமாவர். ஆதலின் நீநன்றாய் காக்கவேண்டும். என்று ஆணையிட்டு ஏகாந்தத்திற்சென்று, இனிக்கட்டளையிடுகவென முனிவனைத் தூண்டினர். உடனே முனிவேடம்பூண்ட தேவனுஞ் சொல்லத்தொடங்கினன்.

சுவாமி! அடியேன் பிரமதேவராலே தேவரீர் சன்னிதிக்கு ஏவப்பட்டேன். உலகத்துள்ள வுயிர்களைக் காலமறிந்துண்ணுங் காலனும் அடியேன் தேவரீராலே படைக்கப்பட்டவன். என்னைச் சதுமுகபகவான் விண்ணப்பஞ்செய்யச் சொல்லியதாவது. தேவரீர்பூர்வம்உலகங்களையெல்லா முள்ளடக்கிக்கொண்டு, பெருங்கடலிற் பள்ளிகொண்டு, உந்தியிற்பூத்த திவ்யமாகிய தாமரைப்பூவில் அடியேனை யுற்பவித்துப் படைப்புத்தொழிலை நடத்தும்படி கட்டளையிட்டருளினீர். அடியேனுந் தேவரீரிடத்துப் பாரத்தைவைத்து நியமனப்படி பிரசாபத்தியஞ் செலுத்திவருகின்றேன். மதுகைடவரென்கிற தயித்தியரிருவரை வதைத்து, அவர்களுடைய எலும்புகளாலும் - நிணங்களினாலும் - இப்பூமியை மலைகளொருங்கியதாகவும், புல்பூண்டுமுதலியன முளைக்கும்படியானதாகவுஞ் செய்தருளினீர். அதனாலே, பூமிக்கு மேதினியென்கிற பெயருண்டாயிற்று. அடியேனுக்கு உண்டாயிருக்கிற சக்தியெல்லாம் தேவரீர் தந்ததே. இப்படியே யாவருக்கும் சக்திகற்பித்திருக்கிறீர். பின்பு தேவதைகளின் காப்புக்காக அதிதிதேவியினிடம் இந்திரனுக்குத் தம்பியாக உபேந்திரனென்னுந் திருநாமத்தோடவதரித்து, அவர்களுக்கு விபத்துக்கள் நேர்ந்தபோதெல்லாம் சகாயமாகநின்றருளினீர்.

பின்பு இராவணாதியரால் உலகமெல்லா நடுக்கமுற்றிருக்கையில், அவர்களுடைய சங்காரத்திற்காகத் திருவுளம்பொருந்தி இம்மானிடவவதாரஞ் செய்தருளினீர். சங்கற்பித்தகாரிய நிறைவேறியாயிற்று. சங்கேதப்படி பதினோராயிரமாண்டுங்கழிந்தன. ஆதலால் இனித்தன்னடிச்சோதிக்கு எழுந்தருளலாம். சகலபூதங்களையு மிரக்ஷித்தருளவேண்டும். தேவரீர் எழுந்தருள்வதை எதிர்பார்த்துக்கொண்டு அங்கங்கே விண்ணவர் காத்திருக்கின்றனர். அவர்களை அநுக்கிரகிக்கவேண்டும். அடியேன் இங்ஙனஞ்சொல்வது நினைப்பூட்டலேயல்லது வேறன்று. இன்னும் பூலோகத்திலேயே எழுந்தருளியிருக்கத் திருவுள்ளமாயின் அவ்வாறேசெய்யலாமென்று பிரமதேவன்சொல்லியதாகக் காலமூர்த்தி செப்பியதைச் செவிகொண்ட ஸ்ரீபகவான் இந்திரநீலபருவத சிகரத்தில் நிலவுபட்டதென்னச்சிரித்து அருளிச்செய்யலாயினர்.



ஓ தென்றிசைத்தேவனே! நாம் எண்ணிக்கொண் டிருப்பதையே பிதாமகனும் உரைத்தார். நீவருவாயென்று நினைத்தேன் அந்தப்படியே வந்தாய். நமக்கு மிகவுஞ்சந்தோஷமாயிற்று. உனக்குநன்மையுண்டாகக்கடவது. யாம் எமது பரமபதத்தை யடைவதற்குச் சித்தமாயிருக்கிறோமென்றனர்.

### தூர்வாசமகாமுனிவர் அரண்மனைவாயிலடைந் தங்குள்ள விலக்ஷ்மணரைச் சினந்துள்ளேசென்று அன்னமருந்தித் தமதாச்சிரமமடைதல்.

கவி.

இலங்குமணிப்பசுந்தண்டா ரிராகவன்றனெழுபரித்தேர்
உலங்கிளர்செங்கனகமணி மாளிகையின்மதில்வாயில்
அலங்கியசெங்கனல்வேள்வி யத்திரிதன் றிருப்புதல்வன்
துலங்கியதூர்வாச னெனுமுனிவன்றோன்றினன்.

இப்படி இயமதருமராஜனாகிய முனிவரும் ஸ்ரீராமபிரானும் சம்பாஷித்துக்கொண்டிருக்கையில், நித்தியாக்கினிசெய்யு மகாதபசியாகிய அத்திரிமகாமுனிவரின் புத்திரராகிய தூர்வாசமகாமுனிவர், விளங்குகின்ற நவமணியாரங்களும் மலர்மாலையுந்தரித்த மார்பினையுடைய அவ்விராமபிரானது சூரியன்வலமாகப்போகும்படி உயர்ந்த இரத்தினமாளிகையைச் சூழ்ந்த மதிலினது வாயிலின்கண் வந்து, அங்குள்ள இலக்ஷ்மணப்பெருமானை நோக்கி, அப்பா இலக்ஷ்மணா! தாமதமின்றி என்னை ஸ்ரீராமரிடம் அழைத்துக்கொண்டு போகவேண்டுமென்றனர். அதற்கு இளையவர் கைகூப்பிக்கொண்டு, சுவாமி! காரியம்யாது? அடியேனிருக்கின்றேன் அதனைச்சாதிப்பதற்கென்றுகூறினர். அதுசெவிப்பட்டதும் அம்முனிக்குக் கோபாக்கினி பொங்கி, இக்கணத்திலேயே இராமனுக்கு நான்வந்ததைத் தெரிவிக்கவேண்டும். அப்படிச் செய்யாமற்போனால் உடனே இந்நகரத்தோடு நீங்களும், உங்கள் சந்ததியும், அழிந்துபோம்படி சபிப்பேன். நான்கோபத்தை அடக்ககில்லேன் எனவே இலக்குமணர் தமக்குத்தாமே சற்றுயோசித்து, என்னொருவனுக்குக் கேடுவந்தாலும் வரட்டும். என்னிமித்தம் மற்றவர்க்கு வராதிருந்தாற்போதுமென்று நிச்சயித்து, சுவாமிசன்னிதியில் இவர்வரவைத் தெரிவித்தார். அவரும் காலனையனுப்பிவிட்டுக் கோபமுனிவரைக்கண்டு வந்தனஞ்செய்து, சுவாமி! அடியேற்கு யாதுபணிக்கின்றீர் எனவினவினர். அதற்கவ்வத்திரிபுத்திரர் - ஓ தசரதநந்தனா! யான் ஆயிரவருஷமளவுந் தவஞ்செய்து முடித்தேன். இப்போது பெரும்பசியால் வருந்துகின்றேனாதலால் அன்னந் தரவேண்டுமென்றனர். அதற்கு ரகுநாயகர் புன்னகைகொண்டு அவர் விரும்பியபடி போசனமளிக்க, உடனே புசித்துத் திருப்தியடைந்து ஆசிகூறித் தமதாச்சிரமத்திற்குச் சென்றனர்.

### இலக்ஷ்மணர் ஸ்ரீராமரைப்பிரிந்து சரயுநதியில் மூழ்கி யோகத்திருந்து வைகுண்ட மடைதல்.

கவி.

இன்னகரத்துள்ளோ ரினைந்தினைந்தேங்கிமாழ்க
நன்னகர்வாயினீங்கி நவமணிகொழித்துமுத்தும்

பொன்னெடுவொன்றியெங்கும் புனல்பரந்துலகம்போற்றும்
தன்னிகர்நதியொன்றில்லாச் சரயுப்போறுசேர்ந்தான்.

இப்பால் ராகவபிரான் காலதேவன்பேச்சை நினைத்து சற்றுத் துயரமுற்றவராகி, ஏதும்பேச வாயெழாமற் றலைகுனிந்து நின்றார். அதைக்கண்டு இளையபெருமாள் தமையனுரைக்கிட்டி, சுவாமி! சிந்திப்பதேன்? காலகதியைக் கடக்கலாகுமோ? அடியேனைத்துறந்து பிரதிக்கினையைக்காத்தருளுகவெனவிஞ்ஞாபனஞ்செய்ய, சுவாமியானவர்சுமந்திரனாமெந்திரியாரையும்வசிஷ்டரையும்அழைப்பித்துநடந்ததைத்தெரிவித்தார். அதற்குமைத்திராவருணி ஓ ஸ்ரீராமபிரபுவே! இக்காரியமெல்லா முன்பே அறியப்பட்டதுதானே தம்பியைத்துறந்து பிரதிக்கினையை நிறைவேற்றித் தருமத்தைக்காத்தருளவேண்டும், தருமமழியப் பிரபஞ்சமே யழியுமன்றோ என்றுரைத்தனர். அதைத்திருச்செவிசார்த்திய பெருமாள் தம்பியைநோக்கி, அப்பா இலட்சுமணா! தக்கவர்க்குக் கைவிடுவதும் வகிப்பதும், ஒக்குமாதலின், உன்னைக் கைவிட்டேனென்றார். அக்காலவ்விளையவர் கண்கள் நீராற்கலுழ்ந்து தந்திருமாளிகை செல்லாமல் நேராகப் புறப்பட்டார். அப்போது பட்டணத்து ஜனங்களும் ஸ்ரீராமனும் பரதரும், புத்திரர்களு மாதர்களும் மிகத்துயரப்பட்டு வருந்தி வருந்தி ஏங்க, பட்டணத்தினது கோட்டை வாயிலைக் கடந்து, நவமணிகளைக் கொழித்துச் சுவர்ணங்களை வாரிக்கொண்டு உலகமெங்கும் போற்றும்படியாகச் செல்கின்ற சரயுநதிசேர்ந்து அந்நதிநீரில் ஸ்நானஞ்செய்து பிராணாயாமத்தால் சுவாசமடக்கிநின்றார் அச்சமயத்தில்

கவி.

மன்னேதவேலை புடைசூழ்வியனுலகில், வெனோர்புலம்ப விகல்வேலிலக்குவனும்
ஊனோடுவற்றுநிலையாவுடம்பெய்தி,வானோர்புடைசூழ வைகுண்டம்போய்ப்புக்கான்.

உலகிலுள்ள சர்வபிரஜைகளும்வருந்தினர் சகலதேவதைகளும் பரிவாரத்தோடு அங்கேவந்து பூமழைபொழிந்தனர். உடனேயவ்விலக்குமணர் சர்வஞாத் விஷ்ணுவின் அம்சமாகிய ஆதிசேஷராய் விமானத்தி லெழுந்தருளி வைகுண்டஞ் சேர்ந்தார். அப்போது ஸ்ரீராமமூர்த்தியி னிருப்பும், நகரத்தினர் செயலும், எவ்வாறிருந்ததெனில்:—

கவி.

தேன்பிரி யாதகானிற் சிலையொடு காத்தபின்னோ
னூன்பிரிகின்றகாலத் துயிரினையொத்தான் முன்னோன்
கான்பிரிகல்லாவோதிக் கைகயன் மடந்தைகூறத்
தான்பிரிகின்றநாளிற் றந்தைதன் றகையனானான்.

என்றபடி தம்பியைப்பிரிந்து வருந்தினார்.

நம்புநான் மறையோர்க்கெல்லா நல்கியேகடந்தான்கண்டா
லும்பார்சொன்னவார்த்தை பொழியுமோ வுலகத்தென்பார்
கம்பியாகின்றதுள்ளங் கழிந்ததோர் காலமென்பார்
தம்பியாரின்றியாவி தரிக்குமோதமையனென்பார்.



வலத்தியல் மன்னர்க்கெல்லாம் வரங்கொடுத்தாவிநீத்தல்
குலத்தியல்பன்றோ வென்பார் கொள்ளுமோகூற்றமென்பா
ரலக்கணுற்றிடாதுவாழ்வோ டமையுமோ வயோத்தியென்பா
ரிலக்குவனைநீங்கி யிருக்குமோ யாவுமென்பார்.

இவ்வாறு பட்டணத்துப் பிரஜைகளெல்லாம் புலம்பத் தம்பியைத்துறந்த ஸ்ரீரகுநந்தனர் உடனே மனதிற் றுயரந்தாங்கினவராகி, உள்ளம்பதைபதைத்து, மேனியெல்லாம்வேர்த்து மெலிவுற்று, நெடுங்காலமாக என்னிடமிருந்து காத்த நீ இப்போது கைவிட்டாயோ வென்று புலம்புவதாயினர்.

கவி.

விம்பக்கவிகை விறல்மேகநாதனையோ
ரம்பிற்றடிந்தா யருவினையேனுருயிரே
வம்புற்றதாரான் மகனேமதியிலியென்
றம்பித்துணையே தரியேன் றரியேனே.

ஆற்றுவனோவேந்தே யவயம்புகுந்தானைக்
கூற்றுவனைவந்து குறுகாவகைகாத்து
மாற்றவனேர்விட்ட வடிவேல்வரைமார்பி
லேற்றவனேயெம்பி யிலக்குவனேயென்னுயிரே.

(என்றழும்போது)

வண்ணவரையழுத மாநகருமழுத
விண்ணுந்திசையும் வியனுலகுமழுத
வெண்ணிறினைவுற் றினைந்தினைந்திங்ஙனே
யண்ணலழுதா னழாததொன்றில்லையால்.

இப்படி சராசரங்களனைத்து மழும்படியாகப் புலம்பிய ஸ்ரீரகுநந்தனர் உடனே மந்திரிகள் முதலானவர்களை யழைப்பித்து, ஓ மித்திரர்களே! இனிப்பரதனுக்குப் பட்டாபிஷேகஞ்செய்துவிட்டு நான் தம்பி சென்றவழி செல்கின்றேன். சௌமித்திரியைப்பிரிந்திருக்கமாட்டேனென்றனர். அதுகேட்ட கைகேசிசுதரு மற்றுமிருந்தோரும் அப்படியே நிலத்தில்வீழ்ந்துமூர்ச்சித்துக் கிடந்தனர். பின்னர்பரதர் எழுந்திருந்து கண்ணீர்சிந்தநின்று இவ்வாறு சொல்லுகின்றார்.

கவி.

காதலென்னை நளிர்முடிசூடென
வேதமுள்ளறக் கூறியதெம்முனைத்
தாதைதன்னைத் தடக்கைகயன்பெற்ற
கோதைகொண்ட வரத்திற்கொடியதால்.

அண்ணனீபுரந் தாள்கின்றவையக
மெண்ணியென்வயி னீந்ததுதெய்வதம்
நண்ணிநாகஞ் சுமக்குமிந்நாணில
மண்ணில்காகஞ்சுமக்கெனில் மாண்டதால்.

இம்மிசெந்நெ லிறுக்கினையாகுமே
லம்மிமற்றை யருவரையொக்குமேல்
மின்மினிச்சுடர் வெங்கதிரொக்குமே
தும்மிலொத்தல காளுத்துண்மையால்.

என்றுகூறி ஸ்ரீராமபிரானைத் தொழுதெழுந்து, சுவாமி! அரசாட்சியை யான் சிறிதும் ஏற்கமாட்டேன். இது தேவரீர் திருவடியாணை. தேவரீருடனிருத்தலே மேலான சுவர்க்கமாதலின், அங்ஙனமிருக்க அனுக்கிரகிக்கவேண்டும். இந்தத் தக்ஷிணகோசலத்திற்குக் குசனையும், உத்தரகோசலத்திற்கு இலவனையும், அரசாளும்படி பட்டாபிஷேகஞ் செய்தருளுக. சத்துருக்கனனிடத்திற்குத் தூதரையனுப்பி அழைப்பிக்க வேண்டும். என்றிப்படி பரதாழ்வான் சொல்வதைக் கேட்டும் – தரையில் விழுந்துகிடக்கிற பிரஜைகளைப் பார்த்தும் - வசிஷ்டமாமுனிவர் ஸ்ரீராமரைநோக்கி, ஓ இராமபத்திரபகவானே! பிரகிருதிகள் கிடக்குங்கிடையைக்கடாக்ஷித்தும், பரதன்விண்ணப்பத்தை யங்கீகரித்தும் கிருபைகூர்ந்து, அவர்களுடைய மனோரதத்தைப் பூரிப்பதேதகுதி. அவர்கள் மனமுறியச்செய்தல் தகுதியன்று எனவெடுத்துரைத்தனர். அதனாலே சுவாமியிரங்கி யாவரையுமெழுப்பி, ஏன்கிடக்கின்றீர்கள்? இயான் செய்யத்தக்கது யாது? எனத் திருவாய்மலர்ந்தருளவும் அவர்கள் விண்ணப்பஞ்செய்யலாயினர்: ஓ ஆண்டவனே! அடியோங்களிடத்தில் அனுக்கிரகமும் அன்பு முளவாயின் அடியோங்களையுங் கூட அழைத்துக்கொண்டு போகவேண்டும். தேவரீர் கானகத்தேகினும், கடலிற்புகினும், வேறுலகஞ் செல்லினும், அடியேங்களும் அங்குவந்திருக்கும்படி திருவுள்ளம் பற்றவேண்டும். தேவரீரில்லாவிடம் எமக்குநரகமாகும், ஆதலின் எங்கெழுந்தருளினும் யாமியாவரும் குடும்பத்தோடு அங்கு பின்செல்லக் காத்திருக்கின்றோம். இதுதான் எங்களுடைய மனோரதம். என்று அன்போடும் வணக்கத்தோடும் பிரார்த்திக்க, இராமபிரான் அவர்களுடைய அன்பினுறுதிப்பாட்டைக் கண்டு அப்படியே யாகட்டுமென்று சாதித்தருளினர்.

கோசலதேசத்தில்ஸ்ரீராமர்பிள்ளைகட்கும்,மதுரையில் சத்துருக்னர்பிள்ளைகட்கும் மகுடாபிஷேகமும், அச்சத்துருக்னரும் சுக்கிரீவாதியரும் அயோத்திக்கு வருகையும், அவ்வவர்கட்கு ஸ்ரீராமரது அருளிப்பாடும்.

கவி

நாடிமாமறை கூறியநாளினில், ஆடகத்த வரியணைமீதரி
ஓடையானையை யொண்கரஞ்சென்னிமேல், சூடமைந்தரை மாமுடிசூட்டினன்.

இப்படி திருவாக்கருளிய ஸ்ரீராமசுவாமியானவர், வேதமுறைப்படி நன்னாளில் இரத்தினமிழைத்த ஸ்வர்ண சிங்காதனத்திலேற்றி புத்திரஜங்களை

No. 99. ஸ்ரீராமர்பிள்ளைகட்குபரதா மகுடாபிஷேகஞ்செய்தல்.



சத்ருகனர்தமது பிள்ளைகட்கு மகுடாபிஷேகஞ்செய்தல்.



டைய மகாராஜாக்கள் தமனுகரங்களைச்சிரமேற்கூப்ப,முனிவர்களாசீர்வதிக்க, வேதமுழங்க,சுமங்கிலிய ஸ்திரீகள்வாழ்த்தகுசன்-இலவன் என்னும்தமதிரண்டு குமாரர்கட்கும் முடிசூட்டி, கோசலநாடிரண்டிற்கும் அரசராக்கி மடிமேல் வைத்தணைத்துப் போதிக்கவேண்டுவன போதித்து,இரத கஜ துரக பதாதி சேனைகள் பலவும் இரத்தினபரணாதிகளும் பிரசாதித்து, குசாவதியென்னு நகரத்திற்குக் குசனையும்— சராஸ்வதியென்னு நகரத்திற்கு இலவனையும்— அனுப்பிவிட்டுச் சத்துருக்கனாழ்வானிடம் தூதரைவிடுத்தருளினார். அத்தூதரும் வழியிற் றங்காமலேசென்று, இலட்சுமணானுசரைக் கும்பிட்டு,"இலக்குமணர் பிரிந்ததுமுதலாக எல்லாச்செய்தியும் விண்ணப்பஞ்செய்தனர். அவருமிச்செய்தி செவிப்பட்ட மாத்திரத்தில் என்னசெய்தனரெனில்:—

கவி.

தன்னிகர்பிறிதிலாத் தாசிராகவன், பொன்னடிதொழுதுயப் போவனினி
இந்நகராண்டினி திருந்திநீரென, மன்னவன்மைந்தரை மகுடஞ்சூட்டினன்.

அமைச்சர் புரோகிதர் முதலியோரைக் கூட்டி விருத்தாந்தங்களை யறிவித்து, தம்புதல்வரிருவருள் சுபாகு என்போனுக்கு மதுரையின் அரசும், சத்துருகாதி என்போனுக்கு திரிசிராப்பள்ளியென்னு நகரத்தின் அரசுமளித்து, தாம் ஒற்றைத்தேரோடி திருவயோத்தியை நண்ணிப்பெருமானைச் சேவித்துச் செய்யவேண்டுவன செய்துதீர்த்து, தேவரீர் திருவடிநிழலே யொற்றிவாசச்சித்தமாயிருக்கின்றேன்: இதற்கு மறுத்து யாதுநியமிக்க வேண்டாம் என்று வேண்டினர்.

இப்பால் ஸ்ரீரகுநந்தனர் இலக்குமணர் சென்றவழியே தாமுஞ்செல்லச் சித்தமாயிருப்பதையும்— பரதாழ்வான் முதலியோர் அவரைப் பின்றொடர்ந்து செல்ல உத்தேசித்திருப்பதையும்— விபீஷணர்முதலிய இராக்கத வீரர்களும் சுக்கிரீவன்முதலிய கபிவீரர்களும் கேட்டு, தங்கள் தங்கள் பரிசனங்களோடு அயோத்தியாபுரிக்கு வருவதானார்கள்.

கவி.

சந்திரனிகரெனத் தரளவெண்குடை
யந்தரமிசை யழகெரித்திடக்
கந்தகோடவெங் கவளயானைமேல்
வந்தனன்வீடண னென்னும்வாய்மையான்.

பயங்கெழுமிராவணன் பத்துமாமுடி
தயங்கியமணியதித் தெழுந்ததன்மையா
னியங்கியவெழுபரித் தேரிலெண்டிசை
வயக்கியகதிரவன் மகன்வந்தெய்தினன்.

கருத்துவஞ்செழுகதிர்க் கடவுடன்னைபோர்
பருத்தசெங்கனியெனப் பாய்ந்தபான்மையா

ஒருத்துவந்தலகெலா மொருங்குகாத்தமா
மருத்துவின்மைந்தனும் வந்துமேவினன்.

வரைபலவலிமிக வாங்கிவானவர்
சிரமிசைகொண்டனர் செல்லச்செல்லவோர்
கரமிசைகொண்டவர் கவிழ்த்துமோதிடு
நரலையையணைசெய்த நளன்வந்தெய்தினன்.

குரக்கொடுபொரவெளி தென்றுகொண்டுதன்
சரக்கொடுபொரவரு மரக்கர்தானையைக்
கரங்கொடுமலைகொடுங் கதிர்வெண்பற்கொடு
மரங்கொடுஞ்சாடிய மயிந்தன்றோன்றினன்.

கோல்பிடித்தெய்துசெங் குருதியாறென
வேல்பிடித்தெறிதரு மரக்கர்வெள்ளத்தை
வால்பிடித்தெற்றிட வந்தமாமதத்
தோல்பிடித்தெற்றிய துயிந்தன்றோன்றினன்.

இவ்வாறே நீலன் குமுதன் முதலாகிய படைவீரர்களும் திரண்டு இரகுவீரர் சன்னிதியில்வந்து, நாங்களும் சுவாமியைப் பின்றொடர ஆயத்தராய் வந்துவிட்டோம். இவ்வின்பத்தைத் திருவுள்ளம்பற்று மறுக்கின் எம்மைக் காலதண்டத்துக்குக் காட்டிக் கொடுத்ததே யாகும். என்று முறையிட்டுக்கொண்டனர். இக்குறையெல்லாந் திருச்செவிசாத்திய பகவான் மலர்ந்த திருமுகமண்டலத்தோடு அங்ஙனமே யாகுகவெனக் கையமர்த்தியருளி விபீஷணாழ்வானை விளித்து, உமக்கு நாம்கொடுத்த இலங்காராச்சியத்தை நீர் சந்திராதித்தருள்ளளவும் பரிபாலித்து வருவதுமன்றி, நமது குலதெய்வமாகிய ஸ்ரீரங்கநாராயணமூர்த்தியை ஆராதித்துக்கொண் டிருக்கவேண்டும். என்றுகட்டளையிட்டார். அவரும் சுவாமியின் ஆக்கினையைச் சிரத்தாங்கிக்கொண்டார். அக்கால் சுக்கிரீவன் தனக்கும் இவ்வாறு சுவாமி கட்டளையிடுவரெனவஞ்சி, ஓ எனதாண்டவனே! கிஷ்கிந்தைக்கு அங்கதனை மகுடஞ் சூட்டிவைத்து யானிங்குவந்தேன். இனித் தேவரீர் செல்லுநெறியே யானுந்தொடர்வது திண்ணமென்றனன். அதுகேட்ட ஸ்ரீராமர் பின்பு அநுமானைநோக்கி, நீர் முன்குறித்தபடி நமதுகதை யுலகத்திருக்குமளவு மிருக்கவேண்டுமெனவும்; சாம்பவன் - மயிந்தன் - துயிந்தன் - என்போரை நோக்கி, நீவிர் கலிவருமளவும் பூமியிலிருக்கவேண்டுமெனவுங் கட்டளையிட்டனர். அவர்களும் அப்படியேயென அங்கீகரித்தார்கள். இவ்வாறிவர்களை நியமித்து மற்றயாவரையும் தம்மைப்பின்றொடர்ந்து வருமாறு பணித்தருளினர்.

### ஸ்ரீராமர் தமது சகோதரர்முதலிய பரிசனங்களோடு சரயுகட்டஞ்சேர்ந்து சோதியிற் கலந்தருளி இலக்ஷ்மி சமேதராய் ஸ்ரீவைகுண்ட மடைதல்.

கவி.

பின்னியகாதலிற் பிரிகலாற்றலர்
மன்னியதாள்வயின் வதிந்தவேட்கையால்

1155

பரமபதநாதன்.



உத்தரகாண்டம்.

தொன்னகர்பாழ்படத் துனைந்துசூழ்தர
அன்னவர்வாயில்விட் டகன்றுபோயினார்.

மறுநாள் விடிந்தவுடன் ஸ்ரீராமச்சந்திரபகவான் தாமரைமலரையொத்த திருக்கண்களும் - பூரணச்சந்திரனையொத்தமுகமும் - பவளத்துண்டம்போன்ற அதரமும் - வெற்றிமாலை சூடிய திருத்தோள்களும் - வரையெனப் பரந்தெழுந்த மார்புமுடையவராய்ச் சூரியனைப்போல்விளங்கி, புரோகிதரால் மகாபிரஸ்தானத்துக்குரிய சடங்குகள் செய்யப்பெற்று, மெல்லிய பீதாம்பரத்தை இடையில் உடுத்தி, விரலில் தருப்பைப் பவித்திரம் விளங்கப் பிரமமந்திரம் ஆவர்த்திசெய்துகொண்டு, யாவரோடும் ஒன்றும் பேசாமல் பாதரக்ஷையின்றியே அரண்மனைவிட்டுப் புறப்பட்டெழுந்தருளினார். அக்காலையில் அங்குள்ளவர் சுவாமியைப் பிரிவதற்கிஷ்டமில்லாமல் அவரதுதிருவடியின்மேல் வைத்த ஆசையினால் அவ்வயோத்தியாபுரியில் ஒருவருமில்லாது யாவரும் நெருங்கிச் சூழ்ந்து கோட்டைவாயிலைக் கடந்து தொடர்ந்துவர தமது வலப்பக்கத்தில் திருமகளும், இடப்பக்கத்தில் நிலமகளும் வரச் சென்றனர்.

அன்றியும், சங்கற்பம் - பராக்கிரமம் - கார்முகமுதலிய படைகளும் புருஷரூபங்கொண்டு கூடச்சென்றன. மறைகள் - காயத்திரி முதலிய மந்திரங்கள் மறையவர் வடிவத்தோடு அவரைத் தொடர்ந்துபோயின. மகாபிரமரிஷிகளும், வேதியர் வேந்தர் முதலியோர்களு முகமலர்ந்துடனேகினர். அந்தப்புரத்திருந்த மடவார்களும், பாலகரும், ஊழியரும், ஆமாத்தியரும், சேனைத்தலைவராதியரும்; தத்தம் பரிவாரங்களோடு குதூகலித்து அடுத்துப்படர்ந்தனர். பரதசத்துருக்கனர்களும் தந்த மக்கினிஹோத்திரத்தைமுற்கொண்டு தமயனார்பின்போயினர். வானரர்களும் ராட்சசர்களும் சேரக்கூடினர். இவ்வாறு ஸ்ரீராமபிரானடியார்களனைவரும் திறந்திருக்கும் தேவநகர்புக மிகமகிழ்ந்து கலியாணநடையாக நடந்தனர். சுவாமி யெழுந்தருளுவதைப் பார்க்க வந்தவர்களும் அப்படியே பின்றொடர்ந்து சென்றனர். இவ்வாறு போகின்றவர்களுடன் இதைப் பார்த்திருந்த விலங்கு பறவை முதலியனவும் களித்தே கூடவாந்தொடர்ந்தன. இவையெல்லா மோரற்புதமாயிருந்தது.

இப்படிப் பலரும்புடைசூழ நடந்த ஸ்ரீபகவானனவர் சுழல்பெற்றவேகமுள்ளதாய் உச்சாகத்தோடு குடதிசைநோக்கிச் செல்லாநின்ற சரயுநதியைக் கண்ணுற்று, அதன்கரையி னின்றருளினார். அப்போது பிரமதேவர் மற்றைத்தேவர் கூட்டங்களோடும், திவ்விய முனிவர் குழாத்தோடும், அங்குவந்தனர். அவர்களுடையதேஜஸும் விமானங்களினொளியும் கலந்து ஆகாயமெல்லாம் அனேககோடி சூரியருதித்தாற்போற் பிரகாசித்தது. நல்லவாசனையோடு தென்றல் வீசியது. புஷ்பவருஷம் வருஷித்தது. திவ்வியவாத்தியங்கள் முழங்கின. இப்படி மகோத்ஸவமாயிருக்கையில் பிரமதேவர் பகவானைநோக்கி,

ஸ்ரீதிருமாலே! பல்லாண்டு: பல்லாண்டு: ஸ்ரீமாதவனே பல்லாண்டு : பல்லாண்டு : அடியேம் பாக்கியத்தா லிப்படிகிடைத்தது. தம்பிமாரோடுவைகுண்டத்திற்கெழுந்தருளித் தமது திருமேனியிற்புகுக. அல்லதுஎந்தத்திருமேனியிற் றிருவுள்ளமோ அதிற்புகுக. அல்லது அப்பரமபத நாட்டிற்கு நேரேயெழுந்தருளத் திருவுளமிருக்கில் அப்படியே யெழுந்தருளுக. எப்புவனத்திற்கும் புகுமிடமானவரும், புகுவிப்பவரும், தேவரீரேயன்றோ? தேவரீரோடென்றும்பிரியாதுறைகின்ற திருமகளன்றி யற்றையாருந் தேவரீரை யறியமாட்டார்கள். தேவரீரே யாவையும் அநுக்கிரகிக்கவல்லவரும், அழியாதவருமாகிய மகாபுருடனென்றுதுதித்து விண்ணப்பஞ்செய்தார்.

கவி.

துன்னியவானவர் துயரநீக்குவான்
மன்னியவுலகினிற் பிறந்தமாயையைத்
தன்னிகரிலாதவச் சரயுநீத்துறைத்தன்
பின்னவர்தம்முடன் பெயர்த்துமேயினான்.

தேவர்களின் இரக்ஷணார்த்த நிமித்தமாகப் பூமியிற் பிறந்தமாயாவுடலை சரயுநதியிற் கழித்து, ஸ்ரீராமமூர்த்தியானவர் தம்பிமாராகிய பரதசத்துருக்னரோடு தமது சோதியிற்கலந்தருளினர். தேவதைகளும் ரிஷிகளுங்கூடி அன்புபெருக ஆராதித்தனர். அக்கால் சுவாமி பிரமனைநோக்கி, என்னிடத்திடையறாத அன்பினராய்ப் பின்பற்றிய யாவர்க்கும் புகுமுலகந்தருகவெனக் கட்டளையிட, அவர்பகவானுடைய திருவுள்ளத்தைத் தெரிந்துசாந்தானிகமென்னுமிடத்தைப்புகும்படி செய்தனர். உடனேபிரமலோகத்திற்கு மேற்பட்டதாய்ப் பரமபதம்போலவே மீண்டும் வருதலில்லாத மேன்பாடுள்ள சாந்தானிகபதபோகத்தையாவரும்பெற்றுமகிழ்ந்தனர். அப்போது பதுமயோனி, இன்னும் எவராகிலும்ஸ்ரீராமமூர்த்தியின் பாதாரவிந்தத்திலன்புள்ளவராயின் அவரும் இவ்வுலகஞ்சேர்ந்து பரமபத மடைவீர்களென்றுரைத்தருளினர். சுக்கிரீவன் முதலிய வானரவீரர்களு மற்றோரும், தாந்தாந்தோன்றிய தேவர்களிற் கலந்தனர். இங்ஙனமன்பரெல்லாம் கோப்பிரதாரமென்கிற சரயுகட்டத்தில் மூழ்கித் தத்தமுடம்புகளை யொழித்துத் தேவவிமானத்தின்மேலேறி உத்தமபதமடைந்தனர். அக்காலத்தில் சரயுநதி தீர்த்தந்தெளித்த ஸ்தாவரசங்கமமாகிய சராசரங்கள் யாவும் பரமபத மடைந்தன.

கவி.

ஆழியான்மகிழ்ந்தபூவி னயன்மறைகொண்டுவாழ்த்தச்
சூழியானையின்மீதேறி யிந்திரன் றுதிசெய்தேத்தப்
பூழிவாழ்மேனியானும் புகழ்ந்திடக்கணங்கள்போற்ற
வாழிவானவர்கள்கூற மருவிவைகுந்தஞ்சேர்ந்தான்.



இவ்வண்ணம் ஸ்ரீராமமூர்த்தியானவர், பிரமதேவர் நாலுவேதங்களாலும் துதிசெய்ய, தேவேந்திரன் ஏத்திப்போற்ற, சிவபிரானும்புகழ, தேவகணங்கள்போற்றி வாழ்த்துகூற, வைகுந்தமாகிய தமது பரமபதநாட்டையடைந்தனர். சுவாமி ஆதிநாராயணராகியும்- பரதசத்துருக்கனர் சங்குசக்கரங்களாகியும்-நித்தியசூரிகளோடுஇலட்சுமிதேவிசமேதராய் இலக்ஷ்மணராகிய சேஷசயனத்திற் கண்வளர ஸ்ரீவைகுண்டத்திற் கெழுந்தருளினர். இதையெல்லாங்கண்டு பிதாமகன்முதலான வானுலகத்தோர் ஆனந்தக்கண்ணீர் அரும்பப்பெற்று, ஸ்ரீவைகுண்டபதியைப் பணிந்து துதித்துக்கொண்டே தத்தமுலக மூற்றனர். அன்றோடு திருவயோத்திநெடுங்காலம்பாழாகவிருந்து பின்பு இடபனென்னுமரசன்காலந்தொட்டு மறுபடி வளமானநகரமாயிற்று.

## ஸ்ரீமத்ராமாயணங் கேட்போர் அடையும் பயன்.

கவி.

இனையநற்காதைமுற்று மெழுதினோர்வியந்தோர்கற்றோர்
அனையதுதன்னைச்சொல்வோர்க் கரும்பொருள்கொடுத்துக்கேட்போர்
கனைகடற்புடவிமீதே காவலர்க்கரசாய்வாழ்ந்து
வினையமதறுத்துமேலை விண்ணவன்பதத்துச்சேர்வார்.

இவ்வாறு ஸ்ரீமந்நாராயணமூர்த்தி உலோகாநுக்கிரக நிமித்தமாக ஸ்ரீராமாவதாரஞ்செய்து நடத்திய திருவிளையாட்டை யமைத்து புண்ணிய சரிதமாயும், வேதத்தோ டொத்ததாயு மிருக்கின்ற ஸ்ரீமத் ராமாயணவசனகாவியமென்னும் இந்தப் பிரபந்தத்தை மகாபயபத்தியோடு எழுதினவர்கள்-அதிசயித்தவர்கள் அன்புடன்-படித்தவர்கள்-படிப்பவர்க்குப் பொருள்கொடுத்து அதைக்கேட்டவர்கள்-சமுத்திரஞ்சூழ்ந்த உலகத்தில் அரசர்க்கரசராய் வாழ்ந்து பாவங்களெல்லாம் நீங்கி ஸ்ரீபரமபதநாட்டை யடைந்து நித்தியராய் வாழ்வார்கள்.

வாழ்த்து.

கலைமறைமுனிவரோங்க காரிகையார் தங்கற்பு
நிலைபெறமன்னர்செங்கோ னிலந்தன்னில்வாழ்க
அலைகடலிலங்கைமூது ரரக்கர்வேரறுத்தவைவேற்
சிலைதொடுவில்லிகாதைச் செந்தமிழ்சிறக்கவன்றே.

வைகுந்தப்படலம் - முற்றிற்று,

உத்தரகாண்டம் சம்பூரணம்.

ஸ்ரீமத் ராமாயண வசனம்.

முற்றுப்பெற்றது

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

# பிழைதிருத்தம்.

## உயுத்தகாண்டம்.

| பக்கம். | வரி | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 16 | 30 | நவல்வதாயினுன் | நவல்வதாயினேன் |
| 44 | 4 | பராதனர்தாம் | புராதனர்தாம் |
| 53 | 5 | கையிள்ளுள | கையிலுள்ள |
| 64 | 15 | மெல்லென | ஞெல்லென |
| 79 | 9 | பத்சவயவத்தாமரைகளுந் | பத்தவயவங்களுந் |
| 85 | 6 | தார்கெழுதன்மையி | தார்கெழுதானையி |
| 101 | 19 | வற்றுறை | யவற்றுறை |
| 103 | 19 | பருகோந்தார | பிருகாந்தார |
| ,, | 25 | பிருகாந்தா | பிருகாந்தார |
| 104 | 29 | பொருளொன்று | பொருளொன்றும் |
| 109 | 8 | எவையும் யம்மலையிலு | எவையும் அம்மலையிலு |
| 114 | 15 | விராவணுநியமித்த | விராவணன்நியமித்த |
| 116 | 31 | யிறுத்தார் | யிறுத்தான் |
| 129 | 4 | சொல்லுறு | சொல்லுகி |
| 131 | 18 | உக்கிரமமாக | உக்கிரமாக |
| ,, | 20 | சுவேலாசனத் | சுவேலாசலத் |
| 133 | 8 | காயகப்பதத்துக்குச்சமானமாகிய | நாயகமணியைநிவேழுத்திய |
| 137 | 15 | தோரணத்தின்மிசை | தோரணத்தின்மணி |
| 138 | 26 | பூலோக | பூலோகத் |
| 148 | 18 | சோங்தோம் | சேர்ந்தோம் |
| ,, | 22 | விட்டானே | விட்டேனே |
| ,, | 30 | பைம்புண் | பைம்பூண் |
| 150 | 8 | சார்த்தூலமென்று | சார்த்தூலனென்று |
| ,, | 46 | கூறலுற்று | கூறலுற்றான் |
| ,, | 38 | இவை | இவைவ |
| ,, | 40 | தரேர்க்காலிலே | தேர்க்காலிலே |
| 177 | 2 | உயுத்தசங்நாசனுக் | உயுத்தசங்நாகனுக |
| 217 | 2 | சொல்லுகிறதினுல் | சொல்லுகிறதினுலு |
| 210 | 31 | காதனுகிய | நாதனுய் |
| ,, | 32 | தரப்பெற்றவன் | தரப்பெற்றவர் |
| 240 | 12 | கைக்கு | கைக்கு |
| 242 | 2 | யத்தஞ்செய்தல் | யுத்தஞ்செய்தல் |
| 243 | 21 | ஆபதித | ஆபதிப |
| 251 | 36 | நித்திதிரை | நித்திரை |
| 254 | 16 | கெதிர்ப்பட்ட | கெதிர்ப்பட்ட |
| 255 | 8 | வானாயுதத்தினுல் | வாளாயுதத்தினுல் |
| ,, | 34 | மாத்த்தல் | மாய்த்தல் |
| 263 | 24 | பழியா | பகழியா |



| பக்கம். | வரி | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 266 | 35 | தொலைந்து | தொலைத்து |
| ,, | 36 | மொழிக்து | மொழிந்து |
| 272 | 37 | என்பத்துக்களுடனே | உன்பந்துக்களுடனே |
| ,, | 38 | உன்னுடைய | என்னுடைய |
| 275 | 15 | யனையா | யனையான் |
| 283 | 29 | மின்ன | மென்ன |
| 301 | 32 | ஓங்கிவளர் | ஓங்கிவளர் |
| 315 | 12 | மகாசத்திற் | மாகாசத்திற் |
| 320 | 19 | கார்ச்சனை | கர்ச்சனை |
| 820 | 35 | வீரர்க்ள | வீரர்கள் |
| 327 | 14 | னையிம்மிற் | சேனைதம்மிற் |
| ,, | 28 | கனரயில் | சரையில் |
| 330 | 3 | காயா | அதிகாயா |
| 343 | 18 | கிமர | திமிர |
| 346 | 29 | இந்திரசித்திவினுடைய | இந்திரசித்துவினுடைய |
| 357 | 29 | வழியித் | வழியிற்றங்கா |
| ,, | 37 | ழுதலாகி | முதலாகிய |
| 363 | 18 | போல் | போல |
| 378 | 3 | மழையின் | மழையென் |
| 415 | 23 | ஒருவிர் | ஒருவர் |
| 418 | 19 | தமதுத் | தமது |
| 456 | 17 | குணத்தைம் | குணத்தையும் |
| ,, | 30 | வாழவுடைந்தன | வாழ்வடைந்தன, |
| 458 | 31 | தேவுர்கெளல்லாம் | தேவர்களெல்லாம் |
| 460 | 33 | நாமுப்போய் | நாமும்போய் |
| 469 | 13 | முலகினின்றவ | முலகினின்றில |
| 470 | 10 | செய்ய | செய்ய |
| 472 | 37 | நயமாயப் | நயமாய்ப் |
| ,, | 36 | பரவதத்துடனே | பர்வதத்துடனே |
| 483 | 38 | றட்டாரென்று | விட்டாரென்று |
| 497 | 24 | அந்தமரர்க்கத்தில் | அந்தரமார்க்கத்தில் |
| 510 | 4 | சாச்ஜொலியமாப் | சாச்ஜொலியமாய்ப் |
| 560 | 32 | அடைத்துக்கொண்டுவா | அழைத்துக்கொண்டுவா |
| 575 | 37 | துண்டுதுண்டாக்கி | துண்டுதுண்டாகி |
| 584 | 4 | கண்டத்தயுடைய | கண்டத்தையுடைய |
| ,, | 33 | சஞ்சிவிமலையை | சஞ்சீவிமருந்தை |
| 504 | 13 | உட்ல்களில் | உடல்களில் |
| 605 | 3 | இரத்தகங்கணங்களை | இரத்தகங்கணங்களை |
| 611 | 28 | ஓட்டிக்கொண்டு | ஓட்டிக்கொண்டு |
| 612 | 14 | அந்தரத்திற் | அந்தரதத்திற் |
| 617 | 35 | பெற்றோன் | பொற்றோன் |
| 621 | 15 | மிருதியும் | மிகுதியும் |
| 623 | 4 | திரிந்தின | திரிந்தன |
| 632 | 28 | வல்லமையுடையவறு | வல்லமையுடையவறு |
| 650 | 17 | திற்நிவ் | திறந்திங் |
| 650 | 18 | தேய்த்தும, வினமா | தேய்த்து, மலினமா |
| 688 | 10 | கொஸ்ளுகிறேன் | கொள்ளுகிறேன் |

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 693 | 21 | சர்வேஸ்வதமூர்த்தியின் | சர்வேஸ்வரமூர்த்தியின் |
| 694 | 31 | பஞ்சவடியிதிரத்திற் | பஞ்சவடிதிரத்திற் |
| 703 | 6 | மெய்ஞ்ஞாஞைத்ஞைதயுடைய | மெய்ஞ்ஞானத்தையுடைய |
| 719 | 11 | உபகாரஞ் | உபசாரஞ் |
| ,, | 32 | யுடையவர்களாகிய | யுடையவர்களாகி |
| 720 | 32 | பாராபர்மாகி | பராபரமாகி |

## உத்தரகாண்டம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 736 | 14 | சம்ஸ்தமான | சமஸ்தமான |
| 741 | 26 | மகளரிஷிகள் | மகாரிஷிகள் |
| 755 | 6 | தொடங்கினார்கள் | தொடங்கினான் |
| 758 | 9 | சொன்னவெவ்லா | சொன்னவெல்லாம் |
| 781 | 38 | புரிந்தனன் | புரிந்தனள் |
| 785 | 21 | னடலரக்கான் | னடலரக்கன் |
| ,, | 23 | கினைகுந் | கினைக்குந் |
| 790 | 10 | நரகாதியர் | நரகாதிபர் |
| 791 | 32 | அச்சமத்தில் | அக்சமயத்தில் |
| 793 | 2 | தத்தில் | யுத்தத்தில் |
| 798 | 15 | அவர்களெலால் | அவர்களெல்லாம் |
| ,, | 16 | போகின்றீர்ரென்று | போகின்றீரென்று |
| 799 | 36 | வருந்தினான் | வருத்தினான் |
| 830 | 3 | முத்தியுன் | முததியுண் |
| 836 | 35 | வலசமும் | வகலமும் |
| 840 | 29 | அப்பொழுது | இப்பொழுது |
| 861 | 24 | தம்முடை | தம்முடைய |
| 869 | 31 | குசலவனே | குசலவரை |
| 877 | 24 | மிலங்கொன் | மிலங்கென் |
| 886 | 13 | செல்ய [கள | செய்ய [ன |
| 892 | 19 | பாடேவர்களே அவர் யழையுங்களென் | பாடேவர்? அவர்களையழையுங்களென் |
| 901 | 4 | பேரமா | பேரமர் |